Issued—5—7—1974]

B 111

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY 11th MARCH 1974

Volume CXVII—No. 1

B.NO-80

©
GOVERNMENT OF TAMIL NADU
1974

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

11th to 16th March 1974.

Volume CXVII--Nos. 1 to 6.

TABLE OF CONTENTS


| | PAGES. |
|---|---|
| *Monday, 11th March* 1974. | |
| Personnel of the Government of Tamil Nadu .. | i–v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. | ix–xi |
| 1. Questions and Answers .. .. .. .. | 1–19 |
| 2. Statement under Rule 82 of the Council Rules *re*—Talks on River Water Dispute between Kerala and Tamil Nadu .. .. .. .. .. | 20–23 |
| 3. General discussion on the Budget for the year 1974–75 .. .. .. .. .. | 23–60 |
| 4. Papers laid on the table of the House .. .. | 60–61 |
| *Tuesday, 12th March* 1974. | |
| 1. Questions and Answers .. .. .. .. | 63–81 |
| 2. General discussion on the Budget for the year 1974–75—*cont.* .. .. .. .. | 82–131 |
| 3. Papers laid on the table of the House .. .. | 131 |
| *Wednesday, 13th March* 1974. | |
| 1. Questions and Answers .. .. .. .. | 133–148 |
| 2. General discussion on the Budget for the year 1974–75—*cont.* ... ... ... ... | 148–194 |

V8M, 82, N74




| | PAGES. |
|---|---|
| *Thursday, 14th March* 1974. | |
| 1. Questions and Answers .. .. .. .. | 199–208 |
| 2. Calling attention to hardship to staff due to transfer of distribution wing of Civil Supplies Corporation to Co-operation Department .. .. | 208–210 |
| 3. General discussion on the Budget for the year 1974–75—contd ... ... ... ... ... | 210–250 |
| *Friday, 15th March* 1974. | |
| 1. Questions and Answers .. .. .. | 257–267 |
| 2. General discussion on the Budget for the year 1974–75—cont. .. .. .. | 267–336 |
| 3. Papers laid on the table of the House .. .. | 337–339 |
| *Saturday, 16th March* 1974. | |
| 1. Questions and Answers .. .. .. .. | 347–351 |
| 2. Announcements— | |
| (1) Message from the Governor .. .. | 351 |
| (2) Message from the Assembly .. .. | 351 |
| 3. Calling attention to provision of financial assistance, facilities for housing and industries to affected persons in the fire accident at Gudiyatham Town, North Arcot district, on 10th March 1974 .. | 352–356 |
| 4. Government Bill— | |
| The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974 (L.A. Bill No. 9 of 1974) ... ... | 357–377 |
| 5. Papers laid on the table of the House .. .. | 357–380 |
| **Index** .. .. .. .. | 385–411 |


63120

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration. Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Public Relations, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare. Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ்நாடு ஆளுநர் :

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்-குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி விளம்பரம், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேணி, இளைஞர் அணி, பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகித கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு. ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், வீட்டுவசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், குடிசை மாற்று வாரியம்.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

15. யாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

**சட்டமன்ற மேலவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

**சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. எம். இராமநாதன்.

திரு. எல். பலராமன்.

திரு. கே. எஸ். கணபதி.

திரு. எம். எம். பக்கர்.

**சட்டமன்றச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்.**

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 அறிவழகன், கே., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராணி அண்ணாதுரை .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம். |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 16 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 17 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| 18 கணேசன், சா. .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 19 காட்டூர் கோபால் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |
| 22 கோலப்பா, இ. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 23 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 24 சங்கரலிங்கம் பிள்ளை, எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 25 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 26 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 27 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 28 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 29 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 30 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 31 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 34 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 35 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 36 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 39 நாராயணசாமி, பி. (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 40 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |
| 41 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 42 பகவதி, டி. கே. .. .. | நியமனம். |
| 43 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 44 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 45 பலராமன், எஸ். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 46 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 47 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 49 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துசாமி, எஸ். .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 53 ரசல்ராஜ் .. .. .. | நியமனம். |
| 54 வசந்தபாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 55 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 ஜனார்த்தனம், ஏ.பி. .. .. | நியமனம். |
| 60 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 61 ஜெயராம் ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. .. .. | |
| 63 வெற்றிடம் .. .. .. | |

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்.

திங்கட்கிழமை, 1974 மார்ச் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : வினாக்கள் 151, 152 ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Constitution of Education Board for Elementary Schools*

*153 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any Memorandum from the Federation of the Tamil Nadu Elementary School Teachers requesting to constitute an Education Board and bring all the elementary schools under its control; and

(b) if so, the action taken thereon?

### தொடக்கக் கல்விக்கான வாரியம் அமைத்தல்

**திரு. செ. முத்துசாமி** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொடக்கக் கல்விப் பள்ளிகள் அனைத்தையும், கல்வி வாரியம் அமைத்து அதன் கீழ் கொண்டுவர அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியிடமிருந்து கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணிகளிடமிருந்து அவ்வப்போது இத்தகைய கோரிக்கை வந்துள்ளது.

(இ) தொடக்கக் கல்விக்கென வாரியம் அமைப்பது பயன்படாது என்றும் தற்போதுள்ள முறையே பொருத்தமானது என்றும் அரசு கருது கிறது. ஆகையால் இதில் மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, கல்வியிலே பல்வேறு பிரச்சினைகள் வந்திருக்கின்றன. பல்வேறு நிர்வாக அமைப்புகள் ஏற்பட்டு, அதிலே பல்வேறு விதமான தொல்லைகள் இருக்கின்றன. இந்த அரசு பல முனை வரிகளை யெல்லாம் ஒருமுகப்படுத்தி சீர்படுத்தியிருப்பதைப்போல, கல்வித் துறை நிர்வாகத்தை ஒன்றாக்கி, ஒரு வாரியம் அமைப்பதில் சங்கடம் இல்லாமலிருக்கு மென்று ஆசிரியர் கூட்டணி சொல்கிறது. அது குறித்து அரசு பரிசிலனை செய்து, ஒரு வாரியம் அமைக்க யோசிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அரசாங் கத்தினுடைய நேரடிப் பார்வையில் ஒரு வாரியத்திற்கு மாற்றுவதனால், நிர்வா கத்தில் எந்த நிலைமையும் ஏற்படாது. இந்த அவையே கண்டறிந்து, ஆராய்ந்து, பரிசீலித்துச் செய்வதை விட்டுவிட்டு, அதற்கென்று ஒரு வாரியம் அமைத்து, எல்லாப் பொறுப்புக்களையும் அதனிடத்தில் ஒப்படைத்துவிடுவ தால், என்ன பலன் ஏற்பட்டுவிட முடியும்? பெரும்பாலும் லாப நஷ்டக் கணக்கு பார்க்கின்ற வகையிலேதான் வாரியங்கள் அமைக்கப்படுகின்றன. மற்றவைகளை துறைகள்தான் கவனிக்கின்றன. ஆகவே வாரியம் அமைப்பது எந்த வகையிலும் பயன்படாதென்று அரசு கருதுகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்விக்கென்று ஒரு தனி வாரியம் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்தி லாவது அமைக்கப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன். வாரியத் தால் கல்வித் துறையில் முன்னேற்றம் ஏற்படுமென்று நிபுணர்கள் கூறியிருக் கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல்கள் இல்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி இயக்குநர் அலுவலகத்திலே தொடக்கப் பள்ளி நிர்வாகத்தை நடத்துவதற்கு தற்போது ஒரு டெபுடி டைரக்டர் இருக்கின்றார். அதற்குப் பதிலாக, தொடக்கப் பள்ளி நிர்வாகத்தை நல்ல முறையில் மேற்பார்வை செய்வதற்கு ஜாயிண்ட் டைரக்டர்





லெவலில் ஒரு அதிகாரியை நியமித்து, கவனிக்கச் செய்தால் இப்போதிருக் கின்ற குறைகள் சீர்படுத்தப்படுமென்று அரசு கருதுகிறதா? அது குறித்து முயற்சி செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற கருத்தும் ஆராயப்பட்டு வருகிறது. விரைவில் அதுபற்றி ஆராய்ந்து, தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, சமீபத்திலே பீஹாரிலே ஒரு கல்வி வாரியம் அமைத்து, அங்கே இருக்கக்கூடிய கல்வி ஸ்தாபனங்களை யெல்லாம் அதன் கீழ் கொண்டுவந்திருக்கிறார்கள். அதுபோல் இங்கும் செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உறுப் பினரவர்கள் சொன்னதிலிருந்து பெரும்பாலான மாநிலங்களில் அது இல்லை யென்று தெரிய வருகிறது. அவர்கள் அதைப் பரீட்சார்த்தமாக நடத்தி, அதில் எந்த அளவுக்கு வெற்றி காண்கிறார்கள் என்று தொடர்ந்து சில ஆண்டு கள் பார்த்ததற்குப் பிறகு, அதை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்றனவா என்று பார்க்கலாம். கல்வியைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்தைப் பின்பற்றித்தான் மற்ற மாநிலங்கள் எல்லாம் நடந்து வருகின் றனவே தவிர, மற்றவர்களைப் பின்பற்றி நடத்தும் அளவுக்கு நாம் இல்லை. ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## *Salary for the Teachers of Padmanabha Elementary School, Tenkasi Circle, Tirunelveli district*

* 154 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any complaint was made to the Government that the salaries were not disbursed to the teachers of Padmanabha Elementary School, Tenkasi Circle, Tirunelveli district for the last six months;

(*b*) if so, the action taken thereon;

(*c*) whether the Government have ordered the salary to be disbursed directly; and

(*d*) if so, (1) the date of issue of such order and (2) the date on which their salaries were disbursed?

[1974 மார்ச் 11

### நெல்லை மாவட்டம், தென்காசி சரகம், பத்மநாபத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம்

.. திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெல்லை மாவட்டம், தென்காசி சரகம், பத்மநாபத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறு மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

(உ) அரசே நேரடியாகச் சம்பளம் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளதா?

(எ) ஆமெனில், (1) உத்தரவு பிறப்பித்த, (2) சம்பளம் வழங்கிய தேதி கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அரசுக்கு வரவில்லை. ஆனால் மாவட்டக் கல்வி அலுவலருக்குக் கொடுக்கப்பட்டது.

(இ) சம்பளம் வழங்கப்படவில்லையென புகார் செய்யப்பட்ட காலத்துக் குரிய ஊதியம் ஆசிரியர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.

(உ) ஆம்.

(எ) ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்குவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் 8—3—73 அன்று ஆணையிட்டுள்ளார். 21—9—72 முதல் 20—12—72 வரை ஆசிரியர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்ட மான்யம் 16—5—73 அன்று வழங்கப்பட்டுவிட்டது.

### *Students who appeared for S.S.L.C. Examinations in 1972 and 1973*

* 155 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of students who appeared for the S.S.L.C. Examinations held in March 1972 and 1973;

(b) whether there is a reduction in the number in 1973; and

(c) if so, the reasons therefor?



1974 மார்ச் 11]

### 1972, 1973 ஆம் ஆண்டுகளில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய மாணவர்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1972, 1973 ஆம் ஆண்டுகளில் மார்ச் திங்களில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் எத்தனை பேர் தேர்வு எழுதினர்?

(இ) தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை 1973 ஆம் ஆண்டில் குறைந்துள் ளதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

| | 1972 | 1973 |
|---|---|---|
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) பள்ளியிறுதித் தேர்வு எழுதிய மாணவர்கள் எண்ணிக்கை. | 1,82,214 | 1,83,317 |
| பள்ளியிறுதித் தேர்வு எழுதிய தனிநபர்கள் எண்ணிக்கை. | 19,736 | 10,369 |
| மொத்தம் .. | 2,01,950 | 1,93,686 |

(இ) ஆம்.

(உ) பள்ளியிறுதித் தேர்வு எழுதிய தனிநபர்கள் எண்ணிக்கை வெகு வாகக் குறைந்துவிட்ட காரணத்தால், 1973-ல் மொத்த எண்ணிக்கையில் குறைவு காணப்படுகிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர்களே, தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கல்வி இலாகா எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்னவென்று அறிய விரும்புகிறேன். இந்தத் தேர்ச்சி பெறும் மாணவர் களின் எண்ணிக்கைக் குறைவைத் தவிர்ப்பதற்கு கல்வி இலாகா எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்களே, இதற்குத் தனி நடவடிக்கை ஒன்றுமில்லை. 1972-லே பள்ளி இறுதித் தேர்வு எழுதிய தனி நபர்கள் 19,736 பேர்கள். 1973-லே பள்ளி இறுதித் தேர்வு எழுதிய

தனி நபர்கள் 10,369 பேர்கள். இதிலே நாம் நடவடிக்கை எடுக்க இயலாது. பள்ளிகளுடைய எண்ணிக்கை வளர, வகுப்புகள் வளர, அந்த அளவுக்கு மாண வர்கள் எண்ணிக்கை வளர வசதிகள் செய்யப்படும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, பள்ளிகள் மூலமாக அனுப்பப் பட்ட மாணவர்களிலும் வெகுவாகத் தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப் படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிகள் மூலமாக 1972-ஆம் ஆண்டு அனுப்பப்பட்டவர்கள் 1,82,000 பேர்கள். 1973-ஆம் ஆண்டு அனுப்பப்பட்டவர்கள் 1,83,000 பேர்கள். எனவே ஆயிரத்துச் சில்லரை பேர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அது குறைந்த தென்று சொல்வதற்கில்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, தனியாக பள்ளி இறுதித் தேர்வு எழுதுபவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இப்போது தமிழ் நாட்டிலே, ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இடத்திலே பணி யாற்றுகிறவர்கள் 90,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவதற்கு, அரசு ஏதாவது ஒரு திட்டம் வைத்து, ஊக்கம் அளித்திடும் வகையில் தனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றித் தகவல்கள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1972-க்கும், 1973-க்கும், பள்ளி இறுதித் தேர்வு எழுதி, வெற்றி பெற்ற மாண வர்களுடைய விகிதாசாரத்தில் வித்தியாசம் இருக்கிறதா ; அப்படியென்றால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1972-ல் 63.2 சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். 1973-ல் 52 சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, நான் அதைத் தான் குறிப் பிட்டேன். தேர்ச்சி பெற்றவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டதா ; [illegible] ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டதாவென்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சில ஆண்டுகள் தாராளமாக இருந்து விடுகிறார்கள். சில ஆண்டுகள் கொஞ்சம் ஸ்டிரிக்ட்டாக இருக்கிறார்கள். சில ஆண்டுகள் இன்னும் கொஞ்சம் ஸ்டிரிக்ட் டாக இருக்கிறார்கள். கேரளாவில் 35 சதவிகிதத்திற்கு மேல் விடுவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு இழுத்துப் பிடிக்கிறோமோ அந்த அளவுக்கு கீழே இறங்கும் ; எவ்வளவுக்கெவ்வளவு தாராளமாக விடுகிறோமோ அந்த அளவுக்கு எண்ணிக்கை அதிகரிக்கும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, ஆரம்பக் கல்விக்கும், இடைநிலைக் கல்விக்கும்தான் நம்முடைய அரசு அதிகமாகத் தொகை செல வழிக்கிறது. அதிலே சரிபாதி விழுக்காட்டுக்கும் குறைவாகத் தேர்ச்சி நிலைமை இருந்தால், கொஞ்சம் கல்வி இலாகாவை முடுக்கிவிட்டு, இன்ன விழுக் காட்டிற்குக் குறைவாக இருக்கக் கூடாது என்பது போல நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் நாம் நிர்ணயிக்க முடியாது. இவ்வளவு பேர்தான் பாஸ் பண்ண வேண்டுமென்று நாம் வரையறுத்துச் சொல்ல முடியாது. கூடுமானவரையில் இருக்கின்ற சூழ்நிலைகளைக் கண்டுதான், அதற்கென்று வைக்கப்பட்டுள்ள போர்டு முடிவு செய்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அம்மாதிரி அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற வேண்டுமென்ற குறிப்பு அனுப்பினால், தாராளமாக மார்க் போடும்படியான நிலைமையும், முறையில் பயிற்சி கொடுக்காத நிலையும், பரீட்சை வைக்காத நிலையும் ஏற்படாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும். நூற்றுக்கு நூறு சதவிகிதம் வெற்றி பெறு கானும் பள்ளிகளும் இருக்கின்றன. 7, 9, 10, 15 சதவிகிதம் வெற்றி பெறு கின்ற பள்ளிகளும் இருக்கின்றன. ஆனால் கூடுமானவரையில் எந்தெந்தப் பள்ளிகளிலே 50 சதவிகிதத்திற்குக் குறைவாக பள்ளி இறுதித் தேர்விலே வெற்றி காண்பிக்கிறார்களோ, அந்தப் பள்ளிகளுக்கு, அந்தந்த மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி தனிக் கடிதம் எழுதி, அங்கிருக்கிற மாணவ, மாணவி களுடைய தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று ஊக்கு விக்கப்பட்டு வருகிறார்கள்.

[பிற்பகல் 4.10]

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, மாணவர்கள் நல்ல முறை யில் மார்க்குகள் பெற்று, அதிகமாகத் தேர்வு பெறும் பள்ளிகள் அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிகளா அல்லது தனியார் நடத்துகின்ற பள்ளிகளா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனியார் பள்ளிக்கூடங்களிலும் சிறந்த பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும் சிறந்த பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. எந்தெந்த இடங்களில் எப்படிப்பட்டவர்களைக் கொண்டு அவை நடத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்திருக்கிறது. முனிசிபல் உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால், கும்பகோணத்தில் மூன்று ஆண்டு காலமாக 100 சதவிகிதம் தேர்வு எண்ணிக்கை காட்டப்பட்டிருக்கிறது. எங்கெங்கு அதிகம் காட்டுகின்றார்களோ, அங்கெல்லாம் நல்ல தேர்வு எண்ணிக்கை கிடைத்திருக்கிறது. ஆகவே இரண்டுக்கும் உதாரணம் காட்ட முடியும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தேர்வு எண்ணிக்கை கிராமப் பகுதியில் அதிகமா, நகரப் பகுதியில் அதிகமா? புள்ளி விவரம் இருந்தால் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிப் புள்ளி விவரங்கள் இல்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, in the Budget Speech the Hon. the Chief Minister has stated that there is a continued effort on the part of Government to take the horses to the school for the purpose of drinking. Will the Government find out means by which these horses actually drink, study well and pass the examination? I am referring to the Budget Speech, Sir, wherein it has been stated that every effort would be taken to increase the number of persons going to schools. May I know what steps the Government would take to make these pupils study because the complaints from the teachers are that many of the students come to the school and after the first hour, go away?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த வகுப்புகளில் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. அதையும் தடுத்து நிறுத்த முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 1972-ஆம் ஆண்டுக்கும் 1973-ஆம் ஆண்டுக்கும் இடையே தேர்வு சதவிகிதத்தில் 10 சதவிகிதம் குறைவாக இருக்கிறது. இதற்கு மாணவர்களிடையே அமைதியின்மை இருந்தது ஒரு காரணம் என்பதை அரசு அறிகிறதா? அதனால்தான் தேர்வு சதவிகிதம் குறைந்தது என்று பெற்றோர்களும் உணர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகின்ற நிலை ஏற்பட்டு வருகின்றது என்பதை அரசு அறிகிறதா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, சில உயர்நிலைப் பள்ளிகளில், தேர்வுக்கு அனுப்பப்படும் பிள்ளைகளில் ஒரு பர்செண்டு பிள்ளை கூட தேறாமல் இருக்கின்ற பள்ளிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு மான்யம் அளிப்பதுபற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதற்குக் காரணம் என்ன என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கேற்றபடிதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். ஆசிரியர்கள் காரணமா, பெற்றோர்கள் காரணமா, மாணவர்கள் காரணமா, அங்குள்ள அரசியல் சூழ்நிலைகள் காரணமா, அல்லது வெளியார் காரணமா என்று பார்த்து, அதற்கேற்றபடிதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, பள்ளியில் எத்தனை பேர்கள் தேறுகின்றார்கள் என்பதை மட்டும் கணக்கெடுக்காமல், ஒழுங்கான, முறையான கல்வி அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றதா, மாணாக்கர்கள் ஒழுங்காகப் பயிற்றுவிக்கப்படுகின்றார்களா, அதே காலத்தில் பயிலுகிறார்களா என்பதைக் கணித்து, அதை முக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை அரசு கவனிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு 35 மார்க்கு வாங்கினால் பாஸ் என்று சொல்கிறபோது, 65 சதமானம் மாணாக்கர்கள் பாஸ் செய்துவிடுகிறார்கள் என்றால், நமது சதமானத்துக்கு அதிகமாகத் தான் பாஸ் செய்திருக்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, குவாலிடி, நம் மாணவர்களின் அறிவுத் குவாண்டிடி என்பதைப் பொறுத்தவரையில், கல்வி பயிற்றுவிக்கும் முறை சிறப்பாக திறனை, ஆற்றல் திறனை வளர்க்க, இருக்க வேண்டுமென்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே இதை நாம் அதிகமாகக் கவனிக்கின்றபோது, எண்ணிக்கையைக் கவனிக்கக் கூடாது. சிறந்த நிலைமை என்பதை, எண்ணிக்கையைப் பொறுத்துக் கணக்கிடுகின்ற காரணத்தால், ஒரு பள்ளிக்கூடத்திற்கும், மற்றொரு பள்ளிக்கூடத்திற்கும் போட்டி ஏற்பட்டு, பரிசுகள் பெறுகின்ற முறையில் தங்கள் பள்ளிக்குத் தேர்வு அதிகம் வரவேண்டும் என்பதற்காக சில சமயம் முயற்சிகள் நடை

பெறுகின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும். அறிவுத் திறன் வளர்வதற்கான முயற்சிகளில் நாட்டம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் :* மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த 1,000 மதிப்பெண்கள் என்பதை பள்ளிகளில் நடைமுறைப்படுத்துகின்ற திட்டத்தை நமது கல்வியமைச்சர் நாவலர் அறிமுகப்படுத்தினர். அது மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்படவில்லை. ஏன் எப்போது அறிமுகப் படுத்தப்படும் ?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, 600-உடன் 200 எண்கள் சேர்த்து 800 எண்கள் கொண்ட அளவில், இப்போது சென்னையில் 19 உயர்நிலைப் பள்ளிகளிலும், மற்ற மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 உயர்நிலைப் பள்ளிகளிலும் சென்ற ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. அதை ஆண்டுக்காண்டு வேறு பல பள்ளிகளுக்கும் விரிவாக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனல் அதற்கு அடிப்படையாக சிலபல வசதிகள், நூலகங்கள், விளையாடுவதற்கான இடங்கள், மற்ற வசதிகள் பல பள்ளிக்கூடங்களுக்குச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளில் இந்த அடிப்படை வசதிகள் இருக்கின்றனவோ, அங்கு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம். ஓரளவுக்கு அதில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது என்பது தான் ஆங்காங்கு தலைமை ஆசிரியர்களும், மற்றவர்களும் தருகின்ற குறிப்பிலிருந்து நமக்குத் தெரிய வருகின்றது.

*திரு. சி. வி. ராஜகோபால் :* தலைவரவர்களே, மாணவர்கள் மார்க்கு வாங்கி விடுவதாலேயே பெரிய அறிவுத் திறன், ஆற்றல் திறன் அவர்களுக்கு வந்து விடுவதில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே மற்றும் தேவைப்படுகின்ற குவாலிபிகேஷனையும் அணுகி, அதற்கும் சேர்த்து மார்க்குப் போடுகின்ற முறையைப் பயன்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, 200 மார்க்கு அந்த வகையிலேதான் வகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது நூலக படிப்புக்கு 50 எண்களும், விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றிற்கு 50 எண்களும், ஹாண்ட்ரைட்டிங், எக்ஸ்பிரஷன் ஆகியவற்றிற்கு 50 எண்களும், 'காண்டக்ட் அண்டு காரெக்டர்' என்பதற்கு 50 எண்களும் என்றுதான் 200 எண்கள் புதிய முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆக மதிப்பீடு என்ற முறையில், வகுப்பு ஆசிரியர்களும், மற்றவர்களும் அதனைக் கணக்கிட்டு ஓரளவுக்குக் கொண்டு வருகிறார்கள். இந்த முறையில் இரண்டொரு



பள்ளிகளில் கணக்கிட்டுப் பார்த்தபோது, மாணவர்கள் ஏற்கனவே நூலகத் தில் எடுத்துப் படித்த நூல்கள் அளவை விட, மிக அதிகமாக எடுத்துப் படிக்கின்றார்கள் என்று தெரிந்தது. கட்டாயம் இதற்கு 50 மார்க்கு என்று இருப்பதால், அதிகமான நூல்களை எடுத்துப் படிக்கின்றார்கள். உதாரணமாக சைதை மாதிரிப் பள்ளியில் ஏற்கெனவே நானூற்றுச் சில்லரை புத்தகங்கள் தான் எடுக்கப்பட்டன. இப்போது மூவாயிரத்து எழுநூற்றுச் சில்லரை புத்தகங்கள் மாணவர்களால் எடுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துப் படிக்கின்ற புத்தகங்களின் குறிப்புகள் மற்றவற்றை அறிவிக்க வேண்டும் என்றிருப்பதால், கட்டாயம் அவர்கள் கடைசி வரை படித்து குறிப்புகள் தரவேண்டிய அவசியம் இருப்பதால், படிப்பில் ஊக்கம் ஏற்படுகிறது. ஆகவே இத் திட்டம் ஓரளவுக்கு வெற்றி பெற்று வருகிறது. அந்த வகையிலே வேறு பல திறன் களும் அளந்து பார்க்கப்படுகின்றன. ஆகவே அவர்கள் பரீட்சையில் பெறு கின்ற மதிப்பெண்களை மட்டும் நாம் பார்க்கவில்லை. இவற்றையும் சேர்த்துக் கொள்கின்றோம்.

## Temporary Appointments in the Offices of the Education Department

* 156 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state the number of persons who have been appointed under rule 10 (*a*) (i) and continue in service for six months and more in the Offices of the Education Department, Government of Tamil Nadu ?

## கல்வித் துறை அலுவலங்களில் தற்காலிக நியமனம் பெற்றவர்கள்

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழக அரசுக் கல்வித் துறை அலுவலங்களில் 10(ஏ) (1) விதியின் கீழ் நியமிக்கப் பெற்று, ஆறு மாதங்களுக்கு மேலாக ஆண்டுக்கணக்கில் தொடர்ந்து அலுவல் பார்க்கிறவர்கள் எத்தனை பேர்?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* 58 பேர்.

[1974 மார்ச் 11

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, கல்வி இலாக்காவில் பல அதிகாரிகள், தலைமை ஆசிரியர்கள், மாவட்டக் கல்வி அதிகாரிகள் இவர்கள் எல்லாம், அவர்கள் வகிக்கும் பதவியில் கன்பர்ம் (confirm) ஆகாமலே ஓய்வு பெறுகிறார்கள், இதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. பொதுவாக பள்ளிக் கல்வித் துறையில் 29 பேர், தொழில் நுட்பக் கல்வித் துறையில் 4 பேர், அருங்காட்சி அகத்தில் ஒருவர், தொல்பொருள் ஆய்வுத் துறையில் 12 பேர், நூலகத் துறையில் 9 பேர், தமிழ் வளர்ச்சி ஆயத்தில் பணியாற்றுகிறவர்களைப் பொறுத்து ஏற்பட்டிருக்கிறது.. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், பள்ளிக் கல்வித் துறையில் 130 பேர், கல்லூரிக் கல்வித் துறையில் 260 பேர், பட்டக் கல்வித் துறையில் 8 முழு நேர உதவியாளர்கள், 8 பகுதி நேர உதவியாளர் கள், தமிழ் வளர்ச்சித் துறையில் ஒரு தமிழ் ஆசிரியர் இரண்டாம் நிலை என்ற அளவுக்கு இருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்கு, பர்மனென்ட் ஆகின்ற வரையிலும், சில இடங்களில் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுல் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய காலம் வரை, அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட வேண்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட 10 (ஏ) (1)-ல் நியமிக்கப்படவேண்டி யவர்களாக இருக்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'பி' விங்கிலிருந்து, கழக உயர்நிலைப் பள்ளியாக இருந்து அரசுப் பொறுப்புக்கு வந்த பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வருகிற டியூட்டர்கள், புரொபசர்களாக வேலை பார்ப்பவர்கள். 10 (ஏ) (1)-ல் நிரந்தரமில்லாமல் டெம்பரரியாக நியமிக்கப்படுகிறார்கள். பள்ளியில் அவர்கள் நிரந்தரமான பதவியில் இருக்கிறார்கள். ஆனால் கல்லூரிக்கு மாற்றப்படுகிறபோது, தற்காலிகமாக மாற்றப்படுகிறார்கள். அப்போதுதான் அவர்களுடைய பணியின் காலம் இடையூறு படுகிறது. இது அரசிற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இவர் களும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குச் சென்றுதான் நேர்நிரப்பப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இடைப்பட்ட காலம் எப்படிக் கருதப்படுகிறது என்பதை அவர்கள் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டியவர் களாக இருக்கிறார்கள்.



1974 மார்ச் 11]

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இதிலே 'ஏ' விங் பள்ளியி லிருந்து செல்லுகின்றவர்களுக்கு ஒரு முறையும், 'பி' விங்கிலிருந்து செல்கிற வர்களுக்கு ஒரு முறையும், ஆக இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. இனியாகிலும் ஒரே முறையாகக் கையாளப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, 10 (ஏ) (1)ன் கீழ் அபாயிண்ட் மெண்ட் இப்போது சர்வில் கமிஷன் செல்லாதவர்களுக்கும் கல்வித் துறையில் 'ஏ' விங்கிலும், 'பி' விங்கிலும் இருக்கிறது. போடப்பட்டு வருகிறது. அவர்களை 10 (ஏ) (1)-ன் கீழ் செகண்டரி கிரேடிலும் நிறைய இருக்கிறார்கள், என்று சொல்லி நியமிக்கிறார்கள். மீண்டும் ரீ அப்பாயிண்ட்மெண்ட் செய்ய அரசிடத் அப்படியே போடுகிறார்கள். இவர்களை விவரமாக 'கன்பர்ம்' செய்யப்படுவார் தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அவர்கள் 'கன்பர்ம்' களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, செகண்டரி கிரேடைப் பொறுத்தவரையில், அதுபற்றித் திட்டவட்டமாக முடிவெடுக்க வேண்டுமென்று கல்வித் துறையிடம் சொல்லியிருக்கிறேன். விரைவில் முடிவெடுக்கப்படும்.

### *Promotion of Cholamandal as a Tourist Attraction*

*157 Q.—Thiru S. S. THENNARASU (on behalf of Thiru K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there are proposals under consideration to promote Cholamandal, situated on the East Coast Road, a few miles from Thiruvanmiyur, as a Tourist attraction; and

(b) if so, the steps taken thereon?

[1974 மார்ச் 11

சோழமண்டலத்தை சுற்றுலாப் பயணிகள் தலமாக மேம்படுத்தல்

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவான்மியூரிலிருந்து சில மைல்களுக்கப்பால் கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள சோழமண்டலத்தை சுற்றுலாப் பயணிகள் தலமாக மேம்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*Strike by the Administrative Staff of the Government Hospital, Madurai*

* 158 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the administrative staff of the Govermnent Hospital, Madurai struck work on 2nd December 1972; and

(b) if so, the reason therefor?

மதுரை அரசினர் மருத்துவ மனையில் நிர்வாக அலுவலர் வேலை நிறுத்தம்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 2—12—1972 ஆம் நாள் அன்று மதுரை அரசினர் மருத்துவமனையில் நிர்வாக அலுவலர் Administrative staff வேலை நிறுத்தம் செய்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1974 மார்ச் 11]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 159, 160, 161 ஒத்தி வைக்கப்படுகின்றன.

*Special Leave with wages for the Representatives of the Trade Unions who attend Conciliation Proceedings on Industrial Disputes.*

* 162 Q.—THIRU S. S. THENNARASU (on behalf of THIRU KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government propose to do the needful for the managements of factories to pay the wages of such of those workers who are the representatives of the Trade Unions for the days on which they attend Conciliation Proceedings in respect of industrial disputes; and

(b) if so, the action taken thereon?

தொழில் தகராறு குறித்து இணக்கப் பேச்சு வார்த்தைகளுக்கு வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. காட்டூர் கோபால் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிற் தகராறுகளின் மீது சமரச பேச்சு வார்த்தைகளில் தொழிலாளர்களாக இருக்கிற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்கிற நாட்களுக்கு, நிர்வாகத்தினர் ஊதியம் வழங்கிட ஆவன செய்திட அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) தொழிற்சங்க நிர்வாகிகளாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் தொழிலாளர்களாகவும் இருப்பவர்கள் தொழிலாளர் நலத் துறையின் முன் இணக்கப் பேச்சு வார்த்தைகளுக்காக வருகையில், ஒவ்வொரு தகராறு குறித்தும் மூன்று நாட்கள் வரை ஊதியத்துடன் கூடிய சிறப்பு விடுப்பு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், ஒரே ஒரு தொழிற்சங்கம் உள்ள நேர்வில் அத்தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை இரண்டாக மட்டுமே இருக்கலாம் என்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் உள்ள நேர்வில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை சங்கத்திற்கு ஒருவர் என்ற அளவில் நான்கு பேருக்கு மேற்படக்கூடாது என்றும் 1973

[1974 மார்ச் 11

ஜூலையில் நடந்த கூட்டத்தில் மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு எடுத்த முடிவுகளை ஏற்குமாறு மத்திய தொழிலாளர் நல அமைப்புகளுக்கும் தொழிலதிபர்களுக்கும் அரசு பரிவுரை செய்துள்ளது.

*Recognition of the All-India Labour Progressive Federation*

* 163 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of THIRU KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representations for the recognition of the All-India Labour Progressive Federation; and

(*b*) if so, the action taken thereon by the Government?

**அகில இந்திய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை அங்கீகாரம்.**

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. காட்டூர் கோபால் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அகில இந்திய ரீதியிலான தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை அங்கீகாரம் செய்யப்பட வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தொழிலாளர் முன்னேற்ற சட்டமைப்பை தொழிலாளர்களுக்கான அனைத்திந்திய மத்திய அமைப்பாக ஏற்பளிப்பது குறித்தும், இந்திய அரசால் வருங்காலத்தில் கூட்டப்படும் முத்தரப்பு மாநாடுகளில் பங்கு கொள்ள மேற்படி கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவர் அழைக்கப்படலாம் என்றும் கருத்து தெரிவித்து 1972-ல் இந்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது. இது குறித்து முன்னாள் மத்திய தொழிலாளர் நல-புனர்வாழ்வு அமைச்சர் திரு. ஆர். கே. காடில்கர் அவர்களுக்கு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் கடிதம் எழுதினார்கள். இந்திய அரசுக்கு நினைவூட்டுகின்ற கடிதங்கள் அடிக்கடி எழுதப்பட்டு வருகின்றன. 1973 நவம்பர் திங்களில், தொழிலாளர் நல அமைச்சர் மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே. வி. ரெகுநாத ரெட்டி அவர்களுக்கு மீண்டும் கடிதம் எழுதினார். இக்கடிதத்திற்குப் பதில் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.



1974 மார்ச் 11]

*Apprehension of the Trustee of Arulmigu Tiruporoor Murugan Temple in Chingleput district*

* 164 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any trustee of Arulmigu Tiruporoor Murugan Temple in Chingleput district, has been apprehended by the Police during April 1973; and

(*b*) if so, the reasons therefor?

**செங்கற்பட்டு மாவட்டம், அருள்மிகு திருப்போரூர் முருகன் கோயிலின் அறங்காவலர் கைது**

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், அருள்மிகு திருப்போரூர் முருகன் கோயிலின் அறங்காவலர் எவரேனும் 1973 ஏப்ரல் மாதத்தில் காவலரால் கைது செய்யப்பட்டாரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மற்றும் (இ) ஆம். 7–4–1973-ம் நாளன்று இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர், கோயில் உண்டியல் திருட்டு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது குற்ற வழக்கு பதியப்பட்டு காவல் துறையினரின் புலனாய்வில் இருந்து வருகிறது.

*Hindu Temple Protection Conference held at Pattukkottai*

* 165 *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that in the Hindu Temple Protection Conference held at Pattukkottai, Thanjavur district during June 1973, a resolution has been passed regarding the appointment of Trustees and exemption to lands belonging to Temples and Mutts from the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Act, 1973; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

[1974 மார்ச் 11

### பட்டுக்கோட்டையில் நடைபெற்ற இந்துக் கோயில்கள் பாதுகாப்பு மாநாடு

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் 1973 ஜூன் திங்களில் நடைபெற்ற இந்துக் கோயில்கள் பாதுகாப்பு மாநாட்டில் அறங்காவலர்கள் நியமனம், தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் (நில உடைமையாளரது உரிமைகளை வாங்குவதற்கு உரிமை) சட்டத்தினின்றும் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்களுக்கு விலக்களித்தல் ஆகியவை குறித்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

((இ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் சட்ட வரைவு விதித்துறைகளினின்றும், கோவில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கு விலக்களிப்பது சம்பந்தமாக, இந்தச் சட்ட வரைவின் 26 ஆவது பகுதி, சமய நிறுவனம் அற நிறுவனம் அல்லது கல்வி நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமாயுள்ள நிலத்தில் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை விதி விலக்களிக்க வகை செய்கிறது. கோவில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கு முழு விலக்களிக்கவோ அல்லது மேலும் அதிகப் பரப்புள்ள நிலங்களுக்கு விலக்களிக்க வேண்டுமென்று முறையீடுகள் செய்து கொள்ளப்பட்டன. இந்தக் கருத்துக்கள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

தமிழ்நாடு, 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளையொட்டி, நியமனத்திற்குத் தகுதி பெற்றவர்கள் கோவில் அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றனர். பொதுவாக இந்து சமய நம்பிக்கை உடையவர்களும், கோவில் சொத்துக்களைப் பாதுகாப்பதில் அக்கறை உடையவர்களுமே அறங்காவலர்களாக ஏற்கப்படுகின்றனர். இது விஷயத்தில் பாரபட்சம் எதுவும் காட்டுவது கிடையாது. கோவில்களின் நலனைப் பாதுகாக்க வேண்டிய ஒரே நோக்கத்தோடு அன்றி மற்றப்படி வேறு எந்தக் காரணத்திற்காகவும் அறங்காவலர் தெரிந்தெடுக்கப்படுவதில்லை அல்லது நியமிக்கப்படுவதில்லை. கோவில் அறங்காவலர்களை நியமிக்கிற தற்போதைய முறையில் மாறுதல் எதுவும் தேவையில்லை.



1974 மார்ச் 11]

### உடுக்குறியிடாத வினாக்கள்

### *Model School for Girls in Madras*

8 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have opened a Model School for Girls in Madras; and

(b) if so, the details thereof?

விடை (அ) & (இ): ஆம்.

சென்னை திருவல்லிக்கேணியில் சீமாட்டி வெலிங்டன் ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி வளாவிற்குள் மாணவியருக்கான முன்மாதிரி உயர்நிலைப் பள்ளியொன்று 1973 ஜூலைத் திங்கள் முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. 1973-74-ம் ஆண்டில் 6, 9 வகுப்புகள் மட்டும் அப்பள்ளியில் உள்ளன. மேல் வகுப்புகள் அடுத்து வரும் இரண்டாண்டுகளில் திறக்கப்படும். தற்பொழுது மொத்தம் சுமார் 111 மாணவியர் பயில்கின்றனர்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் நெற்பயிர் பாதிப்பு

9. வினா.—திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 1973 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அறுவடையாகும் நெற்பயிர் தண்ணீரில்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு தாலுகா வாரியாக எவ்வளவு?

விடை.—(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### *Quinine Salt*

10. Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(a) whether Quinine Salt is being exported from this State; and

(b) if so, the details thereof?

பதில்.—(அ) ஆம்.

(இ) 1964-65-லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட உப்புகளின் விவரம் தனி விவரப்பட்டியலில்@ கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

@ 61-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2. மேலவை விதி 82-ன் கீழ் விளக்க உரை.

## கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் நதி நீர்ப் பிரச்சினைகள் குறித்து நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் குறித்து

[பிற்பகல் 4.20]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, நமது பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களும், நானும் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும், திருவனந்தபுரத்தில், கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருந்து வந்த நதி நீர்ப் பிரச்சினைகள் குறித்து 8—3—1974 அன்று நடத்திய பேச்சு வார்த்தைகளின் முழு விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன். கேரள மாநிலத்தின் சார்பில், அம்மாநிலத்து முதல்வர் அவர்களும், பொதுப்பணித்துறை, மின் துறை அமைச்சர்களும், தங்கள் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும் கலந்து கொண்டனர்.

(1) பாண்டியார் புன்னப்புழா திட்டம்.—1965-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசிற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மேற்கு முகமாய் ஓடும் பாண்டியாறு புன்னப்புழா ஆறுகளில் அணைகள் அமைத்து 14 ஆயிரம் மில்லியன் கனஅடி தண்ணீரைக் கொண்டு 442 மில்லியன் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்து, தண்ணீரை முறையாக கேரளாவுக்கு விட்டுவிடுவதென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த தண்ணீரைப் பயன்படுத்தி இரு அரசுகளும் இணைந்து சோழாட்டிபுழாவில் மின்சக்தி உற்பத்தி செய்து சமமாக பங்கு கொள்வதற்கும் 1965-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

பாண்டியாறு புன்னப்புழா தண்ணீரை மோயாற்றுக்குள் திருப்பி பவானி வடிகால் பகுதிக்கு வரும்படி செய்தால் கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகளுக்கு பாசன வசதி வழங்கலாமென்று, கோவை மாவட்ட விவசாயிகள் அரசுக்கும் மதிப்பீட்டு குழுவிற்கும் முறையீடு செய்திருந்தனர். மதிப்பீட்டுக் குழு அதன் பேரில் பாண்டியாறு புன்னப்புழா தண்ணீரை கிழ்ப் பக்கமாக திருப்புவது குறித்து அரசு கவனிக்குமாறு பரிந்துரை செய்தது. பரிசிலனை செய்து பார்த்ததில் பாண்டியாறு மோயாறு திட்டம் சாத்தியமானதென்று தெரிந்தது. இத்திட்டத்தால் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட அதே அளவு மின்சக்தி உற்பத்தி செய்வதோடு, ஏறக்குறைய ஒரு லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி பெற வாய்ப்பு உள்ளது என்று தெரியவந்ததால். இத்திட்டத்திற்கு

## கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் நதி நீர்ப் பிரச்சினைகள் குறித்து நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் குறித்து

1974 மார்ச் 11]   [திரு. ஓ. பி. இராமன்]

ஒப்புதல் வழங்குமாறு கேரள அரசு கேட்கப்பட்டது. இரு அரசுக்குமிடையே பலமுறை பேச்சு வார்த்தைகள் இது குறித்து நடைபெற்றன. 1965-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்திலிருந்து எவ்வித மாறுதலும் செய்ய கேரள அரசு விரும்பவில்லை. தமிழ்நாடு நீர்கோள் பகுதியில் 25,000 மில்லியன் கனஅடி தண்ணீர் கிடைப்பதில் 14,000 மில்லியன் கனஅடி தண்ணீரைத்தான் கிழக்குப் புறமாக திருப்ப தமிழ்நாடு கோருகிறது என்று விளக்கப்பட்டது. ஆயினும் தங்களுக்கு தற்போதுள்ள நிலைகளுக்கு முறையாக தண்ணீர் தேவைப்படுகிறதென்று கேரளா கூறியதன் பேரில் 9,000 மில்லியன் கனஅடி தண்ணீரை மாத்திரம் கிழ்ப்பக்கமாக தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட்டு மீதமுள்ள 5,000 மில்லியன் கனஅடி தண்ணீரை கேரளாவுக்கு விட்டு விடுகிறோமென்று தெரிவித்தோம். மேலும் கேரள மாநிலத்திற்கு ஏற்படும் 9,000 மில்லியன் கனஅடி தண்ணீர் இழப்பை ஈடுசெய்ய இதன் தொடர்பாக கேரள மாநிலத்தில் கட்டப்படவேண்டிய மூன்று அணைகளையும் தமிழக அரசு, நம் செலவிலேயே கட்டித் தருகிறோமென்று தெரிவித்தோம். அதற்கும் கேரள அரசு மறுத்துவிட்டது. இதற்கு அவர்கள் சொன்ன காரணம், தங்களுக்கு மின்சக்தி உற்பத்தி குறையும் என்பதாகும். அதற்காக, பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்திற்குகீழ் கட்டப்படவேண்டிய சோழாட்டிபுழா திட்டத்தில் தமிழக அரசிற்கு இருக்கும் 50 சதவிகிதம் மின்சக்தி உரிமையை விட்டுக் கொடுக்கிறோம் என்றும் தெரிவித்தோம். இதற்கும் மேலாக ஒரு படி மேலே சென்று மற்றொரு கருத்தும் தெரிவித்தோம். அதாவது பாண்டியாறு, புன்னம்புழா ஆறுகளிலிருந்து, கோவை மாவட்டத்தின் பாசனத்திற்கு கேரளா நீர் வழங்க ஒப்புக்கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் நெல் கேரளாவுக்கு வழங்குகிறோம் என்றும் தெரிவித்தோம். ஆயினும் நாம் எடுத்துரைத்த எல்லா மாற்று யோசனைகளையும் கேரள அரசு ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, 1965-ம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தியது. இதற்கு மேலும் காலந் தாழ்த்துவதால் பலன் கிடைக்குமென்ற நம்பிக்கை இழந்துவிட்டது மட்டுமல்ல, பாண்டியாறு–புன்னம்புழா வேலைகளுக்கான செலவுத் தொகை மேலும் கூடுதலாகும்.

இதன்றி, கீழ்நீராறு அணை சம்பந்தமாக கேரள மாநிலத்தின் அனுமதியை நாம் பெற வேண்டி இருந்தது. இதற்கிடையில் இந்தியப் பிரதமர் நம் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் பாண்டியாறு-மோயாறு திட்டத்தால் முதுமலை வனவிலங்கு சரணாலயத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படுமென்றும் வனவிலங்குகள் உய்விடத்திற்கு குந்தகம் விளையாது மாற்று ஏற்பாடுகள் செய்யுமாறும் தெரிவித்தார்கள்.

இவைகளின் காரணமாக வேறு வழியின்றி, கேரள அரசின் வற்புறுத்தலான 1965-ம் ஆண்டு ஒப்பந்தப்படியே பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்ற இசைவு மன வருத்தத்தோடு நம் தரப்பில் தரப்பட்டது.

**(2) கீழ்நீராறு அணை.**—1970-ம் ஆண்டு மே திங்கள் 29-ம் நாள் கையெழுத்திட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஒப்பந்தப்படி கீழ்நீராறு நீர்க்கோள் பகுதியில் கட்டவிருக்கும் நீர்த்தேக்க அணைக்கட்டுமிடத்திற்கும், தண்ணீரைக் கொண்டுவர அமைக்கவிருக்கும் சுரங்கப் பாதைக்கான இடத்திற்கும் நாம் கேரள அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும். அணைகட்டுவதற்கு சாத்தியக்கூறாக உள்ள ஒரே ஒரு இடத்திற்கான ஒப்புதலை கேரள அரசிடம் நாம் கேட்டோம். ஆனால் தண்ணீர் வழங்குவதில் கூட்டு மேற்பார்வை உரிமை போன்ற சில பிரச்சினைகளை கேரளா எழுப்பிற்று. திட்டத்தைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படின் அதன் விளைவாக செலவினம் அதிகரிக்குமென்றும், தண்ணீர் தேவைப்படுகிற பின்தங்கிய பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படும் என்றும் கேரள அரசிற்கு விளக்கிச் சொல்லப்பட்டது. பாண்டியாறு புன்னம்புழா ஒப்பந்தத்தை ஒட்டி கேரள அரசு கீழ்நீராறு அணை சுரங்கப் பாதை இவை அமைக்கும் இடங்களுக்கு தற்போது ஒத்துக்கொண்டது. இதனால் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் 2,000 மில்லியன் கனஅடி தண்ணீர் கூடுதலாகப் பெற வாய்ப்பு நமக்கு ஏற்பட்டுள்ளது. இதைக் கொண்டு கூடுதலாக மின்சார உற்பத்தியையும் பாசன வசதியையும் நம்மால் பெருக்கிக் கொள்ள முடியும்.

**(3) ஆனைமலையாறுத் திட்டம்.**—கேரள அரசு நமக்கு ஆய்வின் முழு விவரங்களையும் அறிவிக்க வேண்டும். மேலும் அவர்கள் ஆய்விற்காக உபயோகப்படுத்தும் நம் எல்லையிலுள்ள நிலங்களுக்கு வாடகை தரவேண்டும் என்பன போன்ற நிபந்தனைக்குட்பட்டு, கேரள அரசு ஆனைமலையாறுத் திட்டத்தின் ஆய்விற்கான பணிகளை நம் எல்லையிலும் மேற்கொள்ளலாம் என்று நம் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலமாக நீண்ட நாளாகத் தேங்கிக் கிடந்த திட்டங்களை செயல்படுத்தவும் அதன் பயனாக, நம் மாநிலத்தில் தண்ணீர் வசதியையும் மின்சக்தி உற்பத்தியையும் ஓரளவிற்குப் பெருக்க ஏதுவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாசித்த அறிக்கை மிகவும் முக்கியமானது, அது எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு அறிக்கை. எனவே இந்த அறிக்கையை அச்சடித்து அல்லது 'டைப்' செய்து உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: செய்யலாம்.

THIRU G. VASANTHA PAI: Sir, may I request that copies of the statement may be circulated to the Members in both languages, namely, English and Tamil?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தமிழிலும் வேண்டும் என்று கேட்கின்றீர்களா?

THIRU G. VASANTHA PAI: I am learning Tamil.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[பிற்பகல் 4.30]

## 3. 1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை சட்டப் பேரவையிலும்
சட்ட மேலவையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துப் பேசி
னூர்கள். அதிலுள்ள விஷயங்கள் பற்றியும் அதில் ஆசிரியர் சமுதாயத்திற்கு
வழங்கப்பட்ட வேண்டியவை இருக்கின்றனவா என்பதுபற்றியும் நான் அவர்
களுடைய பிரதிநிதி என்ற முறையில் சிலவற்றை எடுத்துச் சொல்ல வேண்டியது
என்னுடைய கடமையாகும்.

இங்கே நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் பலவற்றைச் சிறப்
பாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். சமுதாயத்தில் பல்வேறு பகுதி
யினருக்கும் பொது மக்களுக்கும் நல்ல பல திட்டங்களை அதிலே எடுத்துச்
சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் ஆசிரியர்கள் சமுதாயத்தைப் பொறுத்த
வரையில், இந்த நிதி நிலை அறிக்கையினைப் பார்க்கும்போது, கடந்த காலத்
திலே செய்ததைத் தொகுத்து வகுத்து முறைப்படுத்தி அதை ஒரு அறிக்கை
யாகக் கொடுக்கப்பட்டிருப்பதைத் தவிர எதிர்காலத்திலே ஆசிரியர் சமுதா
யத்திற்கு இந்த அரசு என்னென்ன செய்ய இருக்கின்றது என்பதுபற்றி

[திரு. செ. முத்துசாமி] [1974 மார்ச் 11

ஒன்றும் சொல்லப்பட வில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளு
கிறேன். இருப்பினும் கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி மானியத்தைச்
சமர்ப்பிக்கும் போது, இப்போது இதில் விடப்பட்டுள்ள விஷயங்கள்
அனைத்தையும் ஒன்றுபடுத்தி நிச்சயமாக அறிவிப்பார்கள் என்று நான் உறுதி
யாக நம்புகிறேன். அதுபற்றி இப்போதிலிருந்தே மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்கள் பரிசீலித்துக்கொண்டிருப்பார்கள் என்று நான் நம்பு
கிறேன். ஆசிரியர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்
கோரிக்கைகள் மீதான நல்ல முடிவுகள் நிச்சயம் கல்வி அமைச்சர் அவர்கள்
சமர்ப்பிக்க இருக்கும் கல்வி மானியக் குறிப்பில் இடம் பெற்றிருக்கும் என்று
ஆசிரியப் பெருமக்கள் மிக நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்
கின்றார்கள் என்று அவர்கள் சார்பிலே கல்வி அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

அடுத்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்கள் அனைவ
ருக்கும் கூடுதலாக ரூ. 10 பஞ்சப்படி என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.
இதிலே உள்ள ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், வழக்கமாகக் காண்பிக்கப்
படும் வித்தியாசங்கள் எதுவும் காண்பிக்கப்படாமல், அனைவருக்கும் ஒரே
மாதிரியாக பத்து ரூபாய் என்ற அளவிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.
இவ்வாறு சோஷலிச அடிப்படையில் கொடுக்கப்பட்டிருப்பது குறித்துப்
பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இதிலே ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சப்படி என்று சொல்லும்போது, பஞ்சமோ
அல்லது விலைவாசி உயர்வோ, எதுவும் மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில
அரசு ஊழியர்களுக்கும் ஒரேமாதிரிதான் வருகின்றது. ஆனால் அகவிலை உயர்
வினைக் கருத்தில் கொண்டு, இதுவரையில் மத்திய அரசினர் தங்கள் ஊழியர்
களுக்கு பஞ்சப்படியினை நான்கு முறை கூட்டிக்கொடுத்துவிட்டார்கள். ஆனால்
நமது மாநில அரசினர் ஒரே ஒருமுறைதான் கூட்டிக்கொடுத்திருக்கின்றார்கள்.
இப்படி ஒரே ஒரு முறை மட்டும் உயர்வு தரப்பட்டிருப்பதற்குக் காரணங்
களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் எடுத்துக்
கூறியிருக்கின்றார்கள். ஆனால் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம்,
இந்த விலைவாசிப் பிரச்சினை பற்றி நமது அரசு கவனம் செலுத்தி இதைத்
தீர்ப்பதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும். விலைவாசி என்பது மத்திய
அரசு ஊழியர்களுக்கும் சரி, மாநில அரசு ஊழியர்களுக்கும் சரி ஒரேவித
மாகத்தான் இருக்கின்றது. எனவே இது விஷயத்தில் மத்திய அரசோடு
போராட வேண்டுமென்றால், சொல்லுங்கள், போராடுகிறோம். மத்திய அரசு
ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் பஞ்சப்படி ஒரே மாதிரியாக
இருக்க வேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமான பஞ்சப்படி
மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.



1974 மார்ச் 11] [திரு. செ. முத்துசாமி]

அடுத்து, கல்வித் துறையில் இப்போது விரும்பத்தக்கதொரு மாற்றம்
ஏற்பட்டிருப்பதை வரவேற்கும் முறையில் அதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் பேசும்போது, ஆசிரியர்கள் மத்திய சர்க்காருக்கு எதிராகப்
போர்க் கொடி தூக்க வேண்டும் என்று அரசே அவர்களுக்குச் சொல்ல
வேண்டும் என்பது போன்ற கருத்துக்களையெல்லாம் சொல்லுகிறார்கள். இந்த
அரசுதான் அதை அவர்களுக்குச் சொல்ல வேண்டுமா? மத்திய சர்க்காருக்கு
எதிர்ப்பு தெரிவிக்க ஆசிரியர்களுக்குக் கட்டளையிட வேண்டுமா? அதற்கு
இந்த அரசுதான் பொறுப்பா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
நான் ஏதோ சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்து இதைக் கேட்கின்றார்கள்
என்றுதான் நினைக்கிறேன். எங்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசிலும்
கல்வித் துறை என்று இருக்கின்றது, மாநில அரசிலும் கல்வித் துறை என்று
இருக்கின்றது. எங்கேயும் கேட்கலாம். இங்கேகூட அறிக்கையில் படிக்கும்
போது, சிறப்புத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய பத்தாயிரம் ஆசிரியர்கள்
நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்தத் திட்டத்தின்கீழ் ஆசிரியர்களுக்குப்
பாதி ஊதியம்தான் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு சொல்லியிருந்தும்,
மிச்சமுள்ள 50 சதவிகித ஊதியத்தை மாநில அரசு ஈடுசெய்ய முன்வந்து
பத்தாயிரம் ஆசிரியர்களுக்கும் முழுச் சம்பள விகிதத்தில் ஊதியம் வழங்கப்
படுகிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே எங்களுக்கு எந்த அரசு
வித்தியாசமான அரசு என்பது பிரச்சினையில்லை. கொடுக்க வேண்டியதைக்
கொடுக்கக்கூடிய சூழ்நிலை மத்திய சர்க்காரிடம்தான் இருக்கின்றது, மத்திய
சர்க்காரிடம்தான் நாட்டின் பொருளாதாரத்திற்கான அனைத்துச் சக்திகளும்
இருக்கின்றன என்று ஆசிரியர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். ஆனால் மாநில
அரசு கொடுக்க முடியாது என்று சொல்லி, பிறகு மாநில அரசில் உள்ளவர்கள்
ஆசிரியர் பெருமக்களைக் கூப்பிட்டு, ''நீங்கள் போராடுங்கள்' என்று சொல்லி,
அதற்குப் பிறகுதான் போராடுவதற்கு ஆசிரியர்கள் இயக்கம் இருக்கின்றது
என்று உறுப்பினர் அவர்கள் தயவு செய்து கருதிவிட வேண்டாம். எனவே
ஒரு அரசினை எதிர்க்கும் வகையில் இன்னொரு அரசின் ஊழியர்களைத் தூண்டி
விடும் குற்றச்சாட்டிற்கு ஆளாகி அதற்கு நான் பதிலளிப்பேன் என்று
அவர்கள் என்னை எதிர்பார்க்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, கல்வித் துறையில் புதிதாக இயக்குநர் ஒருவர் போடப்பட்டிருக்
கின்றார்கள். இதுவரையில் இணை இயக்குநர் பொறுப்பில் இருந்தவர்
இப்போது இந்தப் பதவிக்கு வந்திருக்கின்றார்கள். இவர் இணை இயக்குநராக

இருந்த காலத்தில் ஆசிரியர்கள் சமுதாயத்திற்குப் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள் என்று மன நிறைவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு ஒரு பெரும் முன்னேற்றத்தை உருவாக்கும் என்ற பெரும் நம்பிக்கையில், இந்த மாற்றத்தை ஏற்படுத்தியதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, கல்வித் துறையில் இன்றைக்கு தொடக்கப் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. கடந்த காலத்தில் இருந்ததை விட இப்போது நாட்டிலே தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவில் கூடிவிட்டது. கிட்டத் தட்ட இரண்டு மடங்குக்கு மேலே ஆகிவிட்டது. எண்ணிக்கை குறைந்திருந்த காலத்திலே எலிமெண்டரி எஜுகேஷனுக்காக ஒரு டெபுடி டைரெக்டர் தான் இருந்தார். இப்போது இரண்டு மடங்காகிவிட்டது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை. இந்த நிலையில் எலிமெண்டரி எஜுகேஷனுக்காக இயக்குநர் அந்தஸ்தில் ஒரு இணை இயக்குநரை மிக விரைவாக நியமிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். டைரெக்டர் அலுவலகத்தில் தொடக்கப் பள்ளிகள் தொடர்பாகப் பல்வேறு பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. ஒன்றும் முறையாக, துரிதமாகத் தீர்க்கப்படுவதில்லை. அதிகாரத்தை மேல் மட்டத்திலே டைரெக்டர் அலுவலக மட்டத்திலே குவித்து வைத்திருப்பதன் காரணமாக பல பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. இந்த அதிகாரங்கள் போதிய அளவிற்கு மாவட்ட மட்டத்திலே ஸி.ஈ.ஓ. அளவிலே பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும், அப்படிப்பட்ட நிர்வாகச் சீரமைப்பினை உடனடியாக இது விஷயத்திலே கல்வித் துறையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் துணிச்சலோடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பல்வேறு பிரச்சினைகள் இப்போது கவனிக்கப்படாமல் கிடக்கின்றன. ஒரு பிரச்சினை குறித்து டி.இ.ஓ.விடம் சென்றால், அது அவர்களால் முடியாது, அங்கிருந்து ஸி.ஈ.ஓ. அலுவலகத்திற்குப் போக வேண்டும். பிறகு அங்கிருந்து டைரெக்டர் அலுவலகத்திற்கு வர வேண்டும். பின்னர் டைரெக்டர் அலுவலகத்திலிருந்து கல்வித் துறைக்குச் செல்ல வேண்டும். பிறகு ஆர்.டி.எல்.ஏ. விற்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து மீண்டும் கல்வித் துறைக்குச் செல்ல வேண்டும். இப்படி ஏதாவது ஒரு பிரச்சினையில், இதை ஆசிரியருக்குக் கொடுக்கலாமா கூடாதா என்று அரசே போட்ட ஆணையின் அடிப்படையில் ஒரு சந்தேகம் வந்துவிட்டால், அலுவலகத்தில் சந்தேகம் தீர வேண்டுமென்று பேப்பரை எழுதி அனுப்பினால், ஆண்டுக்



கணக்கில் அதன்மீது முடிவெடுக்கப்படாமல் அந்த ஆசிரியரின் பிரச்சினை தீர்க்கப்படாமல், அவர் அப்படியே ரிடையர் ஆகும் நிலைமைகள் கடந்த காலத்திலே பல இருந்திருக்கின்றன. இப்போதும் அடிப்படைச் சந்தேகங்களைக்கூடத் தீர்க்க முடியாத அளவில் பல ஆசிரியர்கள் இன்னும் பல தொல்லைகளுக்குள்ளாகி வருகின்றார்கள் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே இதை விரைவுபடுத்தி, இப்படித் தேங்கிக் கிடக்கும் பல பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு டைரெக்டர் அலுவலகத்திலே இயக்குநர் அந்தஸ்தில் துணை இயக்குநரை, குறிப்பாக எலிமெண்டரி எஜுகேஷனுக்காக என்று, போட வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை கல்வி அமைச்சர் அவர்கள் விரைவில் செய்வார்கள் என்றும் நம்புகிறேன். காரணம் இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் கேட்ட நேரத்தில், இது பற்றி ஆலோசிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த ஆலோசனையை விரைவுபடுத்தி, அதை அறிவிப்பாக அடுத்து கல்வித் துறைக் கொள்கைக் குறிப்பு வரும்போது அறிவிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் சொன்னதனாலேயே அறிவிக்கப்பட்டு விட்டது என்ற ஒரு பெயருக்காக இதைச் சொல்லவில்லை. சங்கடங்கள் ஏராளமாக இருக்கின்றன. இதை விரைவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 4.40]

அடுத்தபடியாக, இந்த அரசிலிடத்திலே தனியார் பள்ளிகளில் நடக்கக் கூடிய கொடுமைகளைப்பற்றிச் சொல்லப்பட்டு, சென்ற தடவைக்கு முதல் தடவையிலே ஒரு பில்லைக் கொண்டு வந்தார்கள். அந்த பில்லைக் கொண்டு வருவதற்கிடையிலே மதுரையிலே—மதுரை என்றாலேயே தனியார் பள்ளிகளில் வேலை செய்யக் கூடிய ஆசிரியர்கள் சாதாரணமான சண்டாளத் தனங்களுக்கு ஆளாவதில்லை, சண்டாளத்தனங்கள் என்று கூறுகிறேன்—அவ்வளவு பயங்கரமாக ஆசிரியர்களை அங்கே நடத்தினார்கள். 31 ஆசிரியர்களை ஒரே நாளில் அங்கே வெளியேற்றினார்கள். டி.எஸ்.ஆர். சர்டிபிகேட் முதற்கொண்டு மேனேஜரிடத்திலே அடமானம் வைத்து விட்டுத் தான் ஆசிரியர்கள் அங்கே பணியாற்றியாக வேண்டும். ராஜினமா எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் பணியாற்றியாக வேண்டும். என் கழுத்தை வெட்டுவதற்கு, அவர்கள் கத்தி எடுத்து வெட்டுவதற்கு நான் அவர்கள் கத்தி வைத்துக்கொள்ள சம்மதிக்கிறேன் என்று கழுத்தை நீட்டி வைத்துக்கொண்டு பணியாற்றக் கூடிய இழி நிலை அங்கே இருந்து வந்தது. அந்த நேரத்தில் தான் 31 ஆசிரியர்கள் தூக்கியெறியப்பட்டார்கள். நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டம் இன்னும்

ஜனாதிபதியின் ஆய்விலே இருந்துகொண்டிருக்கிறது. நாட்டில் நெருக்கடிகள்
இருக்கின்றன என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த
அரசு ரிமைண்டர் விட்டாவது, இந்தச் சட்ட முன்வடிவிற்கு விரைவாக இசைவு
அளிப்பதற்கான முயற்சியில் கல்வித் துறை ஈடுபட வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் கல்வி
யமைச்சரவர்களேயும், முதலமைச்சரவர்களேயும் சென்ற சட்ட மன்றக் கூட்டத்
தொடரின்போது பார்த்து, இந்த 31 ஆசிரியர்களுக்கும் இதுவரை வேலை
கிடைக்கவில்லை, தூக்கியெறியப்பட்டவர்கள் தூக்கியெறியப்பட்டவர்கள்தான்
என்று தெரிவித்தேன். இந்தத் தவறுக்கு கல்வித் துறையிலே நடவடிக்கை
எடுத்தார்கள். பள்ளியின் ரெகக்னிஷனைக் 'கேன்சல்' செய்தார்கள். பள்ளி
நிர்வாகிகள் ஹைக்கோர்ட்டுக்கு ஓடினர்கள். இந்த நாட்டிலே ஹைக்கோர்ட்
டுக்குச் செல்வதற்கு பணக்காரர்களுக்குத் தான் சக்தி இருக்கிறது. அவர்கள்
போய் உடனே வழக்குத் தொடுத்தார்கள். இப்படிச் செய்வதற்கு சட்டத்தில்
இடமில்லை. ரெகக்னிஷனை 'கேன்சல்' செய்தது தவறு, பின்பற்றப்பட்ட
புரோசிஜர் தவறு என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கல்வி
யமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மதுரை கீரத்துரை
பள்ளியில் டி.இ.ஓ. பின்பற்றிய புரொசிஜர் தவறு என்று சொல்லப்
பட்டது. தவறான புரொசிஜரைப் பின்பற்றிய காரணத்தினல், இந்த 31
ஆசிரியர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். ரெகக்னிஷன் 'கேன்சல்' செய்யப்
பட்டது ஹைக்கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே நிற்கவில்லை என்பதைக் கவனத்
திற்குக் கொண்டுவருகிறேன். ஸ்தல அதிகாரிகள் வேண்டுமென்றே செய்
தார்கள். நான் அடிப்பது போல அடிக்கிறேன், நீ அழுவது போல அழு
என்று சொல்கிறார்கள். மானேஜ்மெண்ட் மீது நடவடிக்கை எடுப்பது போல
எடுத்து சிலவற்றை விட்டு விடுகிறேன், நீ கோர்ட்டில் சென்று பார்த்துக்கொள்
என்று சொல்கிற அளவிற்கு இப்படி தனிப்பட்ட போக்கள் நடக்கின்றன.
இப்படித் தவறு செய்யக் கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட
வேண்டும். டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்
தால் தான் இந்த அதிகாரிகள் சட்டத்தில் இடமிருந்தும் தவருக வழி முறைப்
படுத்திச் செல்ல மாட்டார்கள் என்பதைக் கல்வியமைச்சரவர்கள் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். இந்த 31 ஆசிரியர்கள் இங்கே வந்து அமர்ந்
திருந்த நேரத்தில் கல்வியமைச்சரவர்களிடமும், முதலமைச்சரவர்களிடமும்
விண்ணப்பம் தந்தேன். இடையில் 10, 15 நாட்களில் இந்த 31 ஆசிரியர்
களுக்கு மதுரை மாவட்டத்தில் இருக்கக் கூடிய பஞ்சாயத்து யூனியன் பள்ளி
களில் எந்தப் பள்ளிகளிலாவது உடனடியாக வேலை தந்தாக வேண்டும்; அவர்கள்
குடும்பம் குடும்பமாகத் தெருவில் நிற்கிறார்கள் என்று ரிப்போர்ட் அனுப்புங்கள்
என்று தனி அரசாணை பிறப்பித்திருக்கிறார்கள். கல்வி அமைச்சரவர்களை





அதற்காக நான் பாராட்டுகிறேன். இந்தத் துறையைப் பாராட்டுகிறேன்.
இத்தகைய முறையில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை
எடுப்பதற்கிடையில் 1½ ஆண்டுகள் ஆகியிருக்கின்றன என்பதை இந்த
நேரத்தில் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 1½ ஆண்டுகளுக்குப் பிறகு
அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை சென்னையில் அமைச்
சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகு தான் தீர்க்கப்படும் சூழ்நிலை
இருக்குமானல், இந்த 1½ ஆண்டுக் காலத்தில் அவர்கள் எப்படி தங்கள்
வாழ்க்கையை நடத்தினர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதைத்
தான் சிந்திக்க வேண்டும். இத்தகைய பிரச்சினைகளில் ஆசிரியர்களுக்கு
நடைமுறையில் பாதுகாப்பு இருந்தும், அதிகாரிகளால் வழங்கப்படாமல்
இருக்கிற நிலைமைகள் இனி அனுமதிக்கப்படக் கூடாது. எதிர்காலத்திலாவது
இதை அனுமதிக்கக் கூடாது என்று கல்வியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, 10 ஆண்டு பணியாற்றியவர்களுக்கு செலக்ஷன் கிரேடு வழங்கப்
பட்டது பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அவையிலே கூறியிருக்
கிறார்கள். கல்வி அமைச்சரவர்கள் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கியதைப்
பற்றி அறிக்கை கொடுத்த நேரத்திலே நான் கேட்டேன். அப்போது,
அதாவது சென்ற ஆண்டு மார்ச் மாதத்திலே கல்வியமைச்சரவர்கள் ஒரு
உறுதிமொழியைக் கொடுத்தார்கள். நான், பட்டதாரி ஆசிரியர்களுக்கு
வழங்கப்பட்டது போல இவர்களுடைய நிலைமைகளையும் பரிசீலியுங்கள் என்று
கேட்டேன். பொருளாதாரச் செலவு எவ்வளவு ஆகிறது என்பதைப்பற்றிப்
பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறோம். அது வந்தவுடன் இவர்களுக்கும் வழங்கப்
படும் என்ற பச்சை விளக்கைக் காட்டினர்கள். அதற்குப் பிறகு சென்ற
கூட்டத்திற்கு முதல் கூட்டத்தில் நானும் மதிப்பிற்குரிய உறுப்பினர்
திரு. அறிவழகன் அவர்களும் இந்த அவையில் எடுத்துச் சொன்னோம். பட்ட
தாரி ஆசிரியர்களுக்கு 300 ரூபாய் சம்பளத்தைப் பெறுபவர்களுக்கு வழங்கி
விட்டார்கள். 150 ரூபாய் சம்பளம் பெறக்கூடிய ஹையர் கிரேடு ஆசிரியர்
களுக்கு அதே சலுகை வழங்கப்படவில்லை. 250 ரூபாய் சம்பளம் வாங்கக்
கூடிய செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. அரசு வழங்க
வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினோம். முதலமைச்சரவர்கள் இந்த அவை
யில் பதில் அளிக்கும்போது, இவர்கள் பேசியது நியாயம்தான், இவர்களுக்கும்
10 ஆண்டுப் பணிக் காலத்தில் செலக்ஷன் கிரேடு வழங்குவதுபற்றிப் பரிசீ
லிக்கப்படும் என்று உறுதி அளித்து, இதற்கான முடிவுகளை எடுத்து இதைக்
கொடுப்பதற்கான பொருளில் அன்றைக்குப் பதில் சொன்னர்கள் என்பதை
இந்த நேரத்தில் கல்வியமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1974 மார்ச் 11

10 ஆண்டுப் பணிக் காலத்தில் செலக்ஷன் கிரேடு வழங்கப்படுவது என்பது மேலே இருக்கிறவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இந்த அரசில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் நான் அறிக்கையைப் பார்க்கிறேன். சம்பளத்தில் உயர்ந்திருப்பவர்கள் உயர்த்தப்பட்டவர்கள் அல்லவா, சம்ப ளத்தில் தாழ்ந்திருக்கக் கூடியவர்கள் தாழ்ந்த நிலையில் தங்களுடைய வாழ்க் கையை நடத்துவதற்கான நிலையிலே இல்லையா என்பதைக் கேட்க விரும்பு கிறேன். சமுதாய அந்தஸ்தில் ஜாதியின் பேரால், மதங்களின் பேரால் உயர்த்தப்பட்டிருக்கிறார்கள், ஃபார்வார்டாக இருக்கிறார்கள் என்று பொருளா? அந்தப் பொருளில் இன்றைக்கு 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறக்கூடிய வர்களுக்கு சலுகை வழங்கப்படுகிறது. பட்டதாரி ஆசிரியர்கள் போராடிய நேரத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வழங்கப்பட்டது. மற்ற துறைகளில் உள்ள அத்தனை பேர்களுக்கும் வழங்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் கீழே இருக்கக்கூடிய செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் நிலை இன்றைக்கு பரிசீலிக்கப்படவில்லை என்பதையும் அவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு 10 வருஷப் பணியில் கொடுக்கப்பட்டு நியாயம் வழங்கப்பட வேண்டு மென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 2¼ லட்சம் பேர்கள் வேலை செய் கிறோம். இந்த 10 ஆண்டு செலக்ஷன் கிரேடு இல்லாமல், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு பள்ளிகளில், உயர் தொடக்கப் பள்ளிகளில் ஒரு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 95 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இது அல்லாமல் சிறப்புப் பிரிவில் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் கூட, 2¼ லட்சம் பேர்களுக்கு மேல் எப்படியும் போகவே முடியாது. எந்தப் புள்ளி விவரத்தைப் போட்டாலும், இதற்கு மேல் போகாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, இந்த 2¼ லட்சம் பேர்களில் ஏற்கெனவே 20 ஆயிரம் பேர்களுக்கு—10 சதவீதம் என்று சொல்லும்போது 22,500 பேர்களுக்கு—செலக்ஷன் கிரேடு வழங்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு கணக்குப் பார்க்கும்போது 10 ஆண்டுக்குக் குறைவாக சர்வீஸ் ஆனவர்கள் 50 ஆயிரம் பேர்கள் இருக் கிறார்கள். இந்த இரண்டையும் சேர்த்து சராசரி 75 ஆயிரம் பேர்கள் என்று கணக்குப் போட்டால், 150 ஆயிரம் பேர்கள் மட்டும்தான் இந்த 10 ஆண்டு செலக்ஷன் கிரேடில் பயன் பெறத் தகுந்தவர்களாக இருக்கிறார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு 250 ரூபாய் என்று வகுக்கப்பட் டிருக்கிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு 100 ரூபாய் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் மேலே சம்பளம் பெறக்கூடிய ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். செகண்டரி கிரேடில் 245 ரூபாய் அளவிற்குச் சம்பளம் வந்தவர்களுக்குத்தான் 10 ஆண்டுப் பணிக்



1974 மார்ச் 11] [திரு. செ. முத்துசாமி]

காலத்தில் செலக்ஷன் கிரேடு கிடைக்கும். ஆகவே, பொருளாதாரச் செலவு அதிகமாக இருக்க முடியாது இன்றுள்ள நிலையில் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அப்படிப் பார்க்கும்போது, இந்த 150 ஆயிரம் பேர்களுக்கும் 10 ரூபாய் என்று கிடைக்கும்போது, 1.8 கோடி ரூபாய் ஆகிறது. ஆனால் புள்ளிவிவரத்தை பழைய டைரக்டரிடத்தில் கேட்கும்போது, 6 கோடி 7 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு எங்கிருந்து விவரம் வருகிறது என்று தெரியவில்லை. என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுதான் இன்றைய நிலைமை ஆகும். இதை கல்வியமைச்சரவர்களும், முதலமைச்சரவர் களும், பொறுப்பில் இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் பரிசீலித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேராசிரியர் அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்த காலத்தில் ஆசிரியர் கூட்டணி மாநாட்டில் கலந்துகொண்டு பேசியது இன்றைக்கும் நன்றாக நினைவிற்கு வருகிறது. 1967-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி மாநாட்டில் சொன்னார்கள். வாழ்க்கையில் அடித் தட்டில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளத்தை இந்த சர்க்கார் அளிக்க வில்லை. ஆனால் கல்லூரிகளில் இருப்பவர்களுக்கு மட்டும் அளித்திருக்கிறார்கள். இன்றைக்குக் கூட நான் பார்க்கிறேன். அவர்களுக்கு 400 ரூபாய்க்கு மேற் பட்ட சம்பளத்தை நிர்ணயித்து உயர்த்தியிருக்கிறார்கள். அரசியலை விட்டு அங்கு சென்று விடலாமா என்ற அளவிற்கு அட்ராக்டிவ்வாக சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் நிலைமையைச் சீர்திருத்துவோம் என்று அன்றைக்குச் சொன் னார்கள். அவர் அப்படிச் சொன்ன நேரத்தில், அந்த மாநாட்டில் கேட்டுக் கொண்டிருந்த அவ்வளவு பேர்களும் பெரிய மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதற்குப் பின்னாலே தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஆகியோ ருடைய நிலை பெருமளவிற்குச் சீர்திருத்தம் அடைந்திருக்கிறது என்பதை அங்கத்தினர் ஒப்புக்கொள்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, நான் மறுக்கவில்லை. அவர்கள் அன்றைக்குச் சொன்னபோது கல்லூரி ஆசிரியர்களுக்கு இரண்டு மடங்கு உயர்ந்துவிட்டது. அதே கல்லூரி ஆசிரியர்களுக்கு இந்தச் சம்பள உயர்வில் மீண்டும் உயர்த்தி விட்டார்கள். அதனால் கல்லூரி ஆசிரியர்களுக்கும் தொடக்கப் பள்ளியில் இருக்கக் கூடியவர்களுக்கும் இடையே உள்ள இடை வெளி பெரிதாகப் போய்விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஆசிரியர்களுக்குத் தரவில்லையென்று சொல்லவில்லை. கல்லூரி ஆசிரியர் களுக்குத் தந்த அளவிற்குக் கீழே உள்ளவர்களுக்குத் தரவில்லையென்பது என்னுடைய கோரிக்கையாகும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களின் சம்பளம் பெரும் பகுதி யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் தருகிற உதவித் தொகைகள் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்று அவ்வப்போது வற்புறுத்தப்பட்டு இப்படி நேரிட்டு விடுகிறது. அப்படி வற்புறுத்தப்படுகிற போது, கிடைக்கிற சலுகைகள் அளவிற்கு வழங்கப்படுகிறது. மத்திய சர்க்கார் ஆரம்பக் கல்விக்கும் ஒதுக்குவார்களானால், நாம் அவர்கள் நிலையினையும் தாராளமாக உயர்த்த முடியும்.

[பிற்பகல் 4.50]

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, இந்தச் சங்கடம் இந்திய அரசியல் சட்ட ரீதியாக இருக்கக்கூடிய சங்கடம் என்பதை உணர்ந்ததுதான், இந்திய நாடு பூராவும் இருக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து இந்திய நாட்டிற்கு நேஷனல் பே கமிஷன் ஆஃப் டீச்சர்ஸ் என்று ஒன்று அமைக்க வேண்டுமென்ற பொதுக் கோரிக்கையை வைத்து, மத்திய சர்க்காரிடத்தில் நாங்கள் இப்போது வலியுறுத்தி வருகிறோம் என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் விரைவாக வெற்றி பெறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு இதில் ஐயமில்லை. காலத்தால் தள்ளிப் போனாலும், நிச்சயமாக வெற்றி பெற்றுத் தீருவோம் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்த வெற்றி கிடைக்கின்றவரையில், கொஞ்சம் பொறுமையாக, கொஞ்சம் சமாதானமாக இருக்கும்படி ஆசிரியர்களை, ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுக்கொள்வாரா ?

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்லூரி ஆசிரியர்களைப்பற்றி நான் கேட்டபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள், யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் உதவி இருக்கின்ற காரணத்தால்தான் அதைச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்போது இடையிலே கல்லூரி ஆசிரியர்களை விட்டுவிட்டு, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த மாநில அரசு கொடுத்திருக்கும் சலுகைகளை, நியாயமான சலுகைகளை எங்களுக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்டு வருகிறோம். 'நேஷனல் பே கமிஷன்' வந்த பிறகு, கல்லூரி ஆசிரியர்களுக்கு உயர்த்தப்பட்ட அளவுக்கு எங்களுக்கும் கிடைக்கும்; நாங்களும் பெற்றே தீருவோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாடு அரசோடு இந்த விஷயம்பற்றி முட்ட வேண்டும், மோத வேண்டுமென்று என்றைக்கும் இந்த ஆசிரியர் கூட்டணி நினைக்காதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசின் 'பே கமிஷன்'-லே உயர்வான சம்பளம் உடையவர்களுக்கு மீண்டும் தந்துவிட்டு, எங்களுக்குத் தராமல் இருக்கக்கூடிய நிலையை ஒத்திட்டுத்தான்

1974 மார்ச் 11] [திரு. செ. முத்துசாமி]

கேட்கிறோம். இன்றைக்குக்கூட ஒன்றைச் சொல்லிக்கொள்ள நான் விரும்பு
கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கீழே வேலை செய்யக்
கூடிய சிலருக்குச் சம்பளம் உயர்த்தப்படவில்லை என்று முதலமைச்சரவர்கள்
சொன்னார்கள். அதற்குப் பிறகு கல்வி இலாகாவில் உள்ளவர்களுக்கு அடிப்
படைச் சம்பளம் உயர்த்தப்படவில்லை. அதற்குப் பிறகு மக்கள் நல்வாழ்வுத்
துறையிலே பணியாற்றக்கூடிய சில பேருக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டது.
சட்டத் துறையிலே இருக்கக் கூடியவர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டது.
அற நிலையத் துறையின் கீழ் வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் உயர்த்தப்
பட்டது. இப்படி சில துறைகளில் உயர்த்தப்பட்டிருக்கிறதென்று கல்வி
அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மற்றொன்
றையும் சொல்ல விரும்புகிறேன். செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு
செலக்ஷன் கிரேடு ரூபாய் 250—400 என்று இருந்தது. அது செக்ரடேரியட்
அல்லாத இடங்களில் பணி புரியும் அசிஸ்டெண்டுகளுடைய ஊதிய விகிதமாகும்.
ஒரு நபர் குழுவின் சிபாரிசுப்படி, அவர்களுக்கு 250 ரூபாயில் ஆரம்பித்து,
'இன்கிரிமென்ட் ஸ்லேப்'-ஐ மாத்திரம் மாற்றி 450-ல் கொண்டுபோய் வைத்
தார்கள். ஆனால் கல்வி இலாகாவில் இருக்கக்கூடிய ஹையர் கிரேடு உடற்
பயிற்சி ஆசிரியர் ரூபாய் 250—400 தான் சம்பளம் வாங்குகிறார்; செலக்ஷன்
கிரேடு செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு ரூ. 250-லிருந்து ரூ. 400 வரைதான்
சம்பளம். இதை மட்டும் மாற்றவில்லை. என்ன நியாயம்? ஒரு 'ஸ்கேல்
ஆப் பே' மாற்றப்படுமானால் எல்லோருக்கும் மாற்ற வேண்டும். பட்டதாரி
ஆசிரியர்களுடைய ஊதிய விகிதம் மாற்றப்பட்டபோது, அந்த ஊதிய விகிதத்
திலே இணைந்திருக்கக்கூடிய அத்தனை கேடிகரிகளுக்கும் மாற்றப்பட்டது.
ஆனால் என்.ஜி.ஜி.ஓக்களுக்கு—முதலமைச்சரவர்களின்கீழ் நேரடியாக இருக்கக்
கூடியவர்களுக்கு; மற்ற அமைச்சர்களின் கீழ் இருக்கக்கூடியவர்களுக்கு
மாற்றப்படும்போது, கல்வித் துறை மாத்திரம் விடப்பட்டிருக்கிறது; மறுக்கப்
பட்டிருக்கிறது என்பதைக் கல்வித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். தயவு செய்து இந்த நேரத்திலே விட்டு விடா
தீர்கள். அடுத்த கல்விக் கோரிக்கையிலே அந்த மாதிரி இருக்கக்கூடிய முரண்
பாடுகளை நீக்குங்கள். எந்தெந்த இடங்களில் முரண்பாடுகள் இருக்கின்றன
வென்று சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். அதையாவது முதலில்
நீக்க வேண்டும். எல்லோருக்கும் 'இன்கிரிமென்ட் ஸ்லேப்'-ஐ ஒரே மாதிரி
யாக்க வேண்டும்.

இந்த நேரத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பட்டதாரி
ஆசிரியர்களுக்கு 300 ரூபாய் அடிப்படைச் சம்பளம்; செலக்ஷன் கிரேடு
400 ரூபாயில் ஆரம்பிக்கிறது. அவர்களுக்கு வேறுபாடு ரூபாய் 100. ஹையர்
கிரேடு ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 150 ரூபாய், எழுத்து அறிவித்

தவன். அவன்தான் கஷ்டப்பட்டு நமக்கு ஆரம்பப் பள்ளியில் 'அ' 'ஆ' கற்றுக் கொடுத்தவன்; நமது கையை வளைத்து கஷ்டப்பட்டுச் சொல்லிக் கொடுத்தவன்; நமக்கு ஒழுக்கத்தைக் கற்பித்து முன்னுக்குக் கொண்டு வந்தவன். அவன் தான் 'எழுத்து அறிவித்த இறைவன்' என்று ஒப்புக் கொள்கிறோம். அவன் பட்டதாரி ஆசிரியர்களுடைய சம்பளத்தில் பாதி, 150 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெறுகிறான். எனவே 150 ரூபாயோடு 50 ரூபாயாவது சேர்த்து செலக்ஷன் கிரேடு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இது நியாயமா, இல்லையா என்று கேட்டால், தப்பு என்று சொல்லுங்கள்; நாங்கள் நிச்சயமாக அதை விட்டு விடுகிறோம்; ஆசிரியர் கூட்டணி அந்தக் கோரிக்கைகளை விட்டு விடுகிறதென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 300 ரூபாய் சம்பளக்காரருக்கு செலக்ஷன் கிரேடில் 100 ரூபாய் சம்பள உயர்வு. 150 ரூபாய் சம்பளக்காரருக்கு 50 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்க வேண்டுமல்லவா? அப்படியென்றால் அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு 200 ரூபாயில் தானே 'பிக்ஸ்' செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்குக் கொடுத்திருப்பது என்ன தெரியுமா? . 180 ரூபாய்தான். செலக்ஷன் கிரேடு கிடைத்தவர்களுக்கெல்லாம் ஏற்கெனவே சம்பளம் 195 ரூபாயில் 'பிக்ஸ்' ஆகியிருக்கிறது. 195 ரூபாயில் சம்பளம் 'ரீ-பிக்ஸ்' ஆன ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு, செலக்ஷன் கிரேடாக அரசு 180 ரூபாயை வழங்கியிருக்கிறது. 180 ரூபாய் செலக்ஷன் கிரேடுக்கு வழங்கியிருப்பதால், 5 ரூபாய்கூட வேறுபாடு கிடைக்கவில்லை. 5 ரூபாய்கூடக் கிடைக்கவில்லையென்று கல்வி அமைச்சரவர்களிடம் நான் உருக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். "ஐந்து ரூபாய்க்கூடக் கிடைக்கவில்லை; இதுவும் ஒரு செலக்ஷன் கிரேடா? நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள்?" என்று கேட்கும்போது எனக்கு உணர்ச்சி பொங்காமலிருந்தால், நான் மனிதனாக இருக்க முடியாது. சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் ஏதோ வேண்டுமென்றே சொல்கிறோம்; விரக்தியோடு சொல்கிறோம் அல்லது சங்கடத்தை உண்டாக்க வேண்டுமென்று சொல்கிறோம் என்று கருதாதீர்கள். சங்கடங்களை நியாயபூர்வமாக எடுத்துச் சொல்கிறோம். அதற்காகத்தான் எங்களைப் பிரதிநிதிகளாக அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் மனமுவந்து செய்ய வேண்டுமென்று கேட்கிறோம்.

அடுத்து, செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் 210 ரூபாய். அவர்களுடைய செலக்ஷன் கிரேடு 250 ரூபாயில் ஆரம்பிக்கிறது. 300 ரூபாய்க்காரர்களுக்கு வித்தியாசம் 100 ரூபாய்; 210 ரூபாய் சம்பளக்காரர்களுக்கு 'ஈக்குவேஷன்' போட்டுப் பார்த்தால், புள்ளி விவரம் சரியாக வருகிறது. 100/300-ஐ 210-ஆல் பெருக்கும்போது 70 ரூபாய் வரும். எனவே 210 ரூபாயுடன் 70 ரூபாயைக் கூட்டி, நியாயமாக 280 ரூபாயில் அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு



ஸ்கேல் ஆரம்பிக்க வேண்டும். நான் வேறு எங்கும் போக விரும்பவில்லை. மத்திய அரசு விஷயத்திற்குப் போக விரும்பவில்லை; யூ.ஜி.சி. சமாசாரத்திற்கு போகவில்லை. நீங்களே யோசனை பண்ணிப் பாருங்கள். இதை ஆசிரியர்களுக்குப் போட்டுக் காட்டுகிறார்கள். கணக்கைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கணக்குப் போட்டுக் கேட்கிறார்கள். அப்படிக் கேட்கிறபோது, கூட்டணியில் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். அப்போது, இந்தத் தீர்மானம் தப்பு; அரசாங்கத்தினிடத்தில் போய்க் கேட்க முடியுமா? அவர்கள் நியாயமாகத் தான் செய்திருக்கிறார்கள் என்று எந்த நியாயத்தை அவர்களிடம் சொல்வது? நீங்களே சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, செலக்ஷன் கிரேடு பற்றி ஒரு நிதிக் குழு அல்லது அதைப்பற்றி ஆராய்கிறவர்கள் எப்போது நிர்மாணித்தாலும் மொத்தப் பணி அடிப்படையில், இந்தக் கணக்கு அடிப்படையில், தீர்மானிப்பதில்லை. அவர்கள் எந்த அடிப்படையில் தீர்மானிக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். 10 ஆண்டுக் காலம் அல்லது 12 ஆண்டுக் காலத்தில் அவர்கள் செலக்ஷன் கிரேடுக்கு வருகிறார்களென்று கருதுகிறபோது, அவர்களுக்கு ஆண்டுக்கு இவ்வளவுதான் ஊதியம் உயருகிறதென்று அடிப்படை இருக்கிறது. அதைப் பத்தால் பெருக்கி, அந்த அளவிலே செலக்ஷன் கிரேடு ஆரம்பிக்கிற ஒரு முறையைத்தான் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அங்கத்தினரவர்கள் சொன்ன அந்தக் கணக்கு முறையை அவர்கள் கையாண்டிருந்தால், அவர் சொல்கிறபடி செய்திருப்பார்கள். அவர்கள் கையாண்ட முறை வேறு. 10 ஆண்டுக் காலத்தில் இவ்வளவு ஊதியம் உயரும்; 12 ஆண்டுக் காலத்தில் இவ்வளவு ஊதியம் உயரும்; அவர்களுக்கு 3 ரூபாய் விதம் உயருவதாக இருந்தால், குறைந்துதான் வரும்; 5 ரூபாய் விதம் உயர்வதாக இருந்தால், இன்னொரு அளவில் வரும்; இரண்டு ஆண்டுகளுக்கு 15 ரூபாய் என்றால், அது வேறுவிதமாகத் தான் இருக்கும். ஆகவே அந்த அடிப்படையிலே ஏற்பட்ட வேறுபாடே தவிர, வேண்டுமென்றே தமிழ் நாட்டிலுள்ள, தமிழ் மக்களுக்குப் பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய ஊதியங்களைக் குறைத்து வைப்பதற்காக எந்த முறையும் கையாளப்படவில்லை.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறக்கூடிய காரணம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அதிகாரிகள் போட்ட ஆணை அப்படியில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் கூறுகின்ற முறைப்படி பார்க்கும்போது தெரியும். 1969 'பே கமிஷன்' படி ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு 65 ரூபாய் அடிப்படைச்

சம்பளம். எனவே 65 + 10-ஐ இரண்டால் பெருக்கிப் பார்க்கும்போது 150 வந்தது. இதை இப்போது ஹையர் கிரேடு ஆசிரியர்களின் சம்பளம் என்று சொல்லிவிட்டார்கள். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 90 ரூபாய் சம்பளம் இருந்தது. எனவே 90 + 10-ஐ இரண்டால் பெருக்கி, அந்த 200 ரூபாயை அவர்களுக்குச் சம்பளம் என்று சொன்னார்கள். 2 வருஷப் படிப்புக்கு என்ன என்று கேட்டோம். அதற்காக 10 ரூபாய் சேர்த்து, 210 ரூபாயில் வைத்தார்கள். பி.டி. ஆசிரியர்களுக்கு 140 ரூபாய் சம்பளம் இருந்தது. எனவே 140 + 10-ஐ இரண்டால் பெருக்கி, 300 என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டார்கள். ஊதிய விகிதங்களைப் போடுகிறபோது சரியாகப் போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்து, ஆசிரியர்கள் இதையும் கேட்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இரண்டாவது 'பே கமிஷன்'-ல் ஒரு அநியாயம் நடந்திருக்கிறது. அவர்கள் 97,000 ஹையர் கிரேடு ஆசிரியர்களை அப்படியே மறந்துவிட்டார்கள். அவர்களுக்கு செலக்ஷன் கிரேடே கொடுக்கவில்லை. இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நியாயம் இப்படித்தான் இருக்க முடியுமென்று கூறுகிறார்கள். ஆனால் 'பே கமிஷன்' உடைய அறிக்கை அப்படிக் கூறவில்லை என்பதை வேதனையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதை முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு, கல்வி அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு, கல்விச் செயலாளருடைய கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகு தான் இந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்க ஆணையிட்டார்கள். இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன. அதிகாரிகளுடைய அறிக்கையில், கமிஷனுடைய அறிக்கையில் 97,000 ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு பற்றியே சொல்லாமல் விட்டுவிட்டார்கள். இதையெல்லாம்தான் நீண்ட காலமாக எடுத்துச் சொல்கிறோம். தகுந்த பரிசிலனைகள் இல்லாமல் போய்விட்டது. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 150 ரூபாய் சம்பளத்தில் இருக்கிறார்கள். யோசனை பண்ணிப் பாருங்கள். இன்றைக்கு சோஷலிசம் பேசுகிறோம். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "நாங்கள் சமதர்மத்தை மிக நல்ல முறையில் செயல்படுத்துபவர்களாக இருக்கிறோம்; இது வெறும் பேச்சளவில் இருக்காது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய உண்மையான உணர்வை நான் வரவேற்கிறேன். சாதாரண மக்களுக்குப் பென்ஷன் தருவதற்கான ஒரு உயர்ந்த நோக்கம் இருக்கிறது. அந்தத் திட்டம் சரியாகச் செயல்படுமா, செயல்படாதா என்பது வேறு. ஆனால் கொடுக்க வேண்டுமென்ற நல்ல உணர்வு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களுக்கு இருக்கிறது. சாதாரண மக்களுக்கும், ஏழை மக்களுக்கும், உத்தி



யோகத்தில் இல்லாதவர்களுக்கும் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்ற உணர்வு இருக்கிறதே, அது உயர்ந்தது. அதைத்தான் நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட உயர்ந்த உணர்வுகளைக் கொண்டுள்ள, இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களுக்கு, இந்த ஆசிரியப் பெருமக்கள் மத்தியிலே இப்படிப்பட்ட அநியாயங்கள் நடந்திருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன். இதை நியாயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 'மெடிகல் ரீ இம்பர்ஸ்மெண்ட்' பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்கு எல்லாம் தந்தாகிவிட்டது. ஒன்றே ஒன்றுதான் பாக்கி. இது என்ன திருஷ்டிக் கழிப்பு என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்றே ஒன்றுதான் எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்குச் செய்யவில்லை. பேராசிரியர் அவர்கள் கல்லூரியில் வேலை செய்யும்போது, அவர்களுக்கு மெடிகல் கன்செஷன் கிடையாது; வீட்டு வாடகைப்படி கிடையாது. இன்றைக்கு இருக்கிற கல்லூரி ஆசிரியர்களுக்குத்தான் மெடிகல் கன்செஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969-க்குப் பிறகு தான் தரப்பட்டிருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மெடிகல் ரீ இம்பர்ஸ்மெண்ட் எல்லோருக்கும் உண்டு. ஆனால் எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடையாது. போன மசோதாவிலேயே நான் பேசினேன். எய்டட் பள்ளி பற்றிய மசோதாவில் பேசும்போது பேசினேன். கல்வி அமைச்சரவர்கள் இதைக் கொஞ்சம் கவனமாக எடுத்துக்கொண்டு, எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் கொடுத்தால், எவ்வளவு தொகை ஆகிவிடும்? மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் பக்கத்திலேயே இருக்கிறார்கள். அவர்களும் எய்டட் இன்ஸ்டிடியூஷனில் வேலை செய்தவர்கள்தான். அதைக் கொடுத்துவிடக் கூடாதா? இது பெரிய சமாச்சாரமா? அவர்கள் இரண்டு பேரும் 'கன்சல்ட்' பண்ணிக்கொண்டு, முதலமைச்சரவர்கள் முடிவெடுத்தால், முடிந்து போய்விடும். தயவுசெய்து கல்வி மானியத்திலே, கல்வி அமைச்சரவர்கள் இதுபற்றி அறிவித்தால், ஆசிரியர்கள் சமுதாயமே மகிழ்ச்சியுறும். இந்த ஒரே ஒரு குறைதான் எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்கு நீக்கப்படாமல் இருக்கிறதென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கொண்டு வருவதுடன் காலத்தில் கொண்டு வருவது பயனளிக்கும். கல்வி அமைச்சரவர்கள் முடிவு எடுக்க வாய்ப்பு இருக்கிறது. இன்னும் கல்வி மானியம் வருவதற்கு சில நாட்கள் இருக்கின்றன. அதை இன்னும் இரண்டொரு நாட்கள் தள்ளிப் போட்டு, இதையெல்லாம் பரிசிலனை செய்து, அவர்கள் அறிவித்தால் ஆசிரியர்கள் மிகவும்

மகிழ்வார்கள். இந்த ஆசிரியர் கூட்டணி அரசாங்கத்திற்கு எதிராகச் சண்டை போட வேண்டுமென்பதில்லை. கோரிக்கையை எடுத்துச் சொல்கிறோம். நியாயத்தை வழங்கினால், எங்களைவிட பாராட்டுவதற்கு ஆளேயில்லை. நாங்கள் எவ்வளவோ முறை பாராட்டியிருக்கிறோம். இந்த அவையிலேயே எத்தனையோ முறை பாராட்டியிருக்கிறோம். இதுவரையில் வராததை வரவில்லையென்று சொல்கிறோம். வந்ததைப் பாராட்டுகிறோம். அந்த மனப்பான்மை எங்களிடமிருந்து இதுவரையில் நீங்கவில்லை. ஆனால் சிலபேர் தவறாகச் சொல்லுகின்றார்கள். அவர்கள் சொல்வதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டாம். நியாயத்தைப் பாருங்கள், உணர்ந்து பாருங்கள், விசாரித்துப் பாருங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

[பிற்பகல் 5.00]

அடுத்து, மெடிகல் அலவன்சு. பேராசிரியர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன். அண்ணா அவர்கள் காலத்தில் இந்த அலவன்சு கொடுக்கப்பட வேண்டும் என்று கருதி வந்தார்கள். இன்றைய தினம் ரூரல் ஏரியாவில் இருப்பவர்கள் எவ்வளவு பேர் மெடிகல் ரீ இம்பர்ஸ்மெண்ட் வாங்குகிறார்கள் என்று எடுத்துப் பாருங்கள். எங்களால் வாங்க முடிவதில்லை. ஆறு மாதம் ஒரு வருடம் எங்கள் மெடிகல் பில் வாய்தா போய்விடுகிறது. அண்ணா இந்த சங்கடங்கள் இருக்கின்றன என்று கருதித்தான், மெடிகல் அலவன்சு கொடுத்துவிடுவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். செகரடேரியட்டில் இருப்பவர்கள் உடனுக்குடன் வாங்கிவிடுகிறார்கள். ஆனால் நாங்கள் சலித்துப் போய் பில்லையே அனுப்புவதில்லை. பில்லைப் போட்டுவிட்டு, கரெஸ்பாண்டு செய்துகொண்டு, சேலம் டி.எம்.ஓ. ஆபீசுக்குப் போய்ப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதை நான் இந்த அவைக்கு விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இரக்கத்துடன் இந்தப் பிரச்சினையைக் கவனித்து, 10 ரூபாயோ, அல்லது 15 ரூபாயோ அரசின் நிதிநிலைக்கு ஏற்றாற் போல அலவன்சாகக் கொடுத்தால், நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மெடிகல் ரீயிம்பர்ஸ்மெண்ட் என்பதற்கும் மெடிகல் அலவன்சு என்பதற்கும் கருத்து முரண்பாடு உண்டு. மெடிகல் அலவன்சு என்றால், சம்பளம் மாதிரி ஆகிவிடுகிறது. சம்பளத்திற்கும், மெடிகல் அலவன்சுக்கும் வேற்றுமை கிடையாது. மெடிகல்





ரீயிம்பர்ஸ்மெண்ட் என்றால், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை பெறுவதற்காக, மருந்துகளுக்கு ஆகின்ற செலவை அரசு ஈடு செய்கின்றது. அப்படி ஈடு செய்கின்ற முறை தான் ஜனநாயகத்தில் முக்கியமான ஒன்று. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது என்ற அடிப்படையில் தோன்றியது மெடிகல் ரீயிம்பர்ஸ்மெண்ட். அதில் ஏதேனும் தவக்கங்கள் இருக்குமேயானால், குறைகள் இருக்குமேயானால், அவற்றைப் போக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க நாமும்கூட முயற்சிக்க முடியும். ஆனால் மெடிகல் அலவன்சு என்ற தத்துவம் எதற்காகத் தரப்படுகிறதோ, அந்த நோக்கத்தையே கெடுத்துவிடும் என்பதை அங்கத்தினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, நான் மெடிகல் ரீயிம்பர்ஸ்மெண்ட் எய்டெட் பள்ளி ஆசிரியர்களுக்குக் கேட்டேன். இன்றைக்கு எல்லா ஊழியர்களுக்கும் இருக்கக்கூடிய யூனிபார்மிடி இல்லை என்பதற்காகக் கேட்டேன். எதிர்காலத்தில் தரவேண்டுமென்பதற்காக அலவன்சு கேட்டேன். அலவன்சு கொடுப்பதில் இப்படியொரு சிக்கல் இருப்பதாகக் கருதியிருந்தால், அண்ணா அவர்கள் சொல்லியிருக்க முடியுமா என்பது எனக்கே சந்தேகமாக இருக்கிறது. இதைவிட நியாயமாக, உயர்ந்ததாக இருக்குமேயானால், எந்தத் திட்டத்தையும் ஆசிரியர் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும். ஏற்றுக்கொள்ளாமல் இல்லை. இதைத்தான் கேட்போம் என்ற நிலையில் இல்லை. மதுரையில் 1970-ம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில், "எங்கள் பில்லை சாங்ஷன் செய்வதை அங்கும் இங்குமாகக் கொண்டுபோய்க் கொடுக்காதீர்கள், ஹெட் ஆப் தி இன்ஸ்டிடியூஷன் சாங்ஷன் செய்கின்ற எளிய முறையை ஏற்படுத்துங்கள்" என்று கேட்டோம். உடனே செய்யப்படும் என்று சொன்னார்கள். இது வரைக்கும் செய்யவில்லை. இன்றைக்கு எவ்வளவு காலம் ஆகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு உடனடியாக எய்டெட் பள்ளிகளுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தந்த டாக்டரிடம் சாங்ஷன் வாங்கினால், பில் பணம் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். டி.எம்.ஓ.விடம் போக வேண்டும் என்கிற சிஸ்டம் முடியவில்லை. எந்த சிஸ்டம் ஆனாலும், புரொசிஜரை மினிமைஸ் செய்யாமல், சிம்ப்ளிபை செய்யாமல் இருப்பதால், அதன் பலன் ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே அந்த சிஸ்டமே தவறு என்று முடிவெடுத்து, வேறு சிஸ்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்கின்ற அவசியத்தில் இருக்கின்றோம். எனவே, அட்மினிஸ்டிரேஷனில் இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களை எளிதாக்குகின்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அதைப் பற்றி ஒரு ஆலோசனையை அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன். கொள்கை அடிப்படையில், நியாய அடிப்படையில் மருத்துவச் செலவுக்காக, அந்தக் கட்டணத்தைத் திருப்பி அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதென்பது மிக நியாயமான ஒன்று. அதிலிருக்கின்ற குறைபாட்டைப் போக்கி, விரைவாகக் கிடைக்கச் செய்ய என்ன செய்யலாம் என்பதை அரசு நிச்சயமாக ஆலோசிக்கும். ஆனல் அதன் பெயரால் பல இடங்களில் தவறுகள் ஏற்பட்டு, இன்றைய தினம் பத்திரிகைகளில் எழுதப்படுகிற கடிதங்களில் கூட, இந்த மெடிகல் ரீயிம்பர்ஸ்மெண்ட் என்பது பெரும்பாலும் ஏமாற்றப் பயன்படுகிறது என்று குறிப்பிடுகின்றார்கள். அதுகாரணமாக, அந்தத் தொகைக்கு எல்லை வைத்து, அந்த எல்லைக்கு உட்பட்ட தொகையாக இருந்தால், அது உள்ளபடியே ஏமாற்றத்துக்கு இடம் தராது என்ற முறையைக் கையாளுவதற்கு சிலர் யோசனை வழங்கியிருக்கிறார்கள். அப்படி ஏமாற்றம் இல்லாது, ஆசிரியர்களுக்குப் பயன் கிடைக்கத் தக்க வகையிலே, ஒரு எல்லைக் கோட்டை ஏற்படுத்திக்கொண்டு ரீயிம்பர்ஸ்மெண்ட் தொகை பெறுவதற்கு அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்களா ?

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, நான் இதை ஒப்புக் கொள்கின்றேன். ஏமாற்றத்திற்கு வழியிருக்கக்கூடிய எந்தத் திட்டத்தை வைத்தாலும், நாட்டிலே ஏமாற்றங்கள் நடந்துகொண்டுதான் இருக்கும். அந்த வழியில்லாத திட்டத்தைத்தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்று நான் கருதுகின்றேன். மாதம் 10 ரூபாய், 15 ரூபாய் என்று கொடுத்தால், அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு போய்விடுவார்கள். டி.பி., லெப்ரசி இந்தமாதிரி சீரியஸ்ஸாக இருக்கக்கூடிய வியாதிகளுக்கு, அரசாங்கமே எடுத்துக்கொண்டு உதவி செய்வதில் பெரிய இழப்பு எதுவும் வந்துவிடாது. எல்லோரும் மெடிகல் ரீயிம்பர்ஸ்மெண்ட் வாங்கும்போது, ஆசிரியர்களுக்கு நியாயமான பில் பணம் கூடக் கிடைப்பதில்லை என்றால், எங்களுக்கு மிக வருத்தமாக இருக்கின்றது. தவறுகள் நடக்காமல் இருக்கக்கூடிய திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்கான யோசனையை சங்கங்கள் விரிவாகத் தரத் தயாராக இருக்கின்றன என்று மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன திட்டத்தை, தங்கள் காலத்திலே அமுல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் ஊதிய நிலைமை மாற்றப்பட வேண்டுமென்று பல தடவை சொல்லியாகி விட்டது. செலக்ஷன் கிரேடு நிலைமைபற்றி அறிக்கையில் வந்திருக்கின்ற நியாயமற்ற தன்மையை, இங்கிரிமெண்ட் ஸ்லாபை மாற்றியமைக்க வேண்டும். செலக்ஷன் கிரேடுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டும். செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயத்தில் தனி நபர் குழு அறிக்கை என்ன ஆயிற்று என்று கல்வி அமைச்சர் தெரிவிக்கவில்லை. நான் இரண்டு கூட்டங்களில் கேட்டேன். ஹையர் கிரேடு ஆசிரியர்களைப்பற்றிய விஷயம் மட்டும் கிடைத்தது. ஆனால் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயம்பற்றி அந்தத் தனி நபர் குழுவின் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது தெரிவிக்கப்படவில்லை. அந்தக் குழுவின் (ஒன் மேன் கமிஷன்) சிபார்சுகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்தத் தனி நபர் குழுவின் அறிக்கை முழுமையாக அவை உறுப்பினர்களுக்கு வெளியிடப்பட வேண்டும், அவையின் முன் வைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இரண்டாவது சம்பளக் குழுவின் சிபார்சுகளில்கூட சிலவற்றைத்தான் ஏற்றுக் கொண்டது அரசு, சிலவற்றை ஏற்றுக்கொள்ள வில்லை. ஒரு நபர் குழு என்று போட்டு, இரண்டாவது சம்பளக் குழுவின் அறிக்கையை ரிவைஸ் பண்ணுகின்ற அளவுக்கு அதிகாரத்தைக் கொடுத்து, அந்த பவர் உள்ள கமிஷன் என்ன சிபார்சு செய்தது என்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை, சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் தெரிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இரண்டாவது சம்பளக் குழு தந்த அந்த அறிக்கையிலே பல குறைகள் இருந்தன என்ற காரணத்தால், தனி நபர் குழு (ஒன் மேன் கமிஷன்) போடப்பட்டது. சம்பளக் குழு அறிக்கை எல்லோருக்கும் தெரியும். அதிலேயே குறையிருந்தது என்று சொன்னால், இதில் அதிகக் குறைகள் இருக்குமோ என்ற சந்தேகத்தில் அதை அரசாங்கம் வெளியிடாமல், அரசாங்கத்தின் பரிசீலனைக்குப் பயன்படுத்திக் கொண்டது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அரசாங்கத்தின் பரிசீலனைக்குப் பயன்படுத்திக் கொள்ளட்டும். ஆசிரியர்களுக்கு என்ன சிபாரிசு செய்யப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டாமா? எல்லாவற்றையும் வெளியிடுவதற்கு அஞ்சுதல் இருக்கிறது, பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன, வெளியிட்டால் 10 கோடி ரூபாய் பொருளாதார நெருக்கடி வந்துவிடும், அதற்கான கோரிக்கைகள் வந்துவிடும், போராட்டங்கள் வந்துவிடும், பல சிக்கல்கள்

ஏற்பட்டு அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கும் என்ற நிலைமை இருக்கிறது என்று சொல்லலாம். கேரளாவில் லோயர் டிவிஷன் கிளார்க்குக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியருக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் நமது மாநிலத்திலே, இரண்டாவது சம்பளக் குழுவின் அறிக்கையிலே நியாயத்தை நிரூபித்து கொடுத்திருந்த அந்தச் சம்பளத்தை, தனி நபர் குழு நியாயமில்லை என்று மாற்றியிருக்கிறதென்றால், ஏன் நியாயமில்லை என்று சொல்ல வேண்டும் அல்லவா? பாதிக்கப்பட்ட சமுதாயம் தெரிந்துகொள்ள விரும்புகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, லோயர் டிவிஷன் கிளார்க் போன்றவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியத்தையும், ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியத்தையும், இரண்டாவது ஊதியக் குழு ஒப்பிட்டுக் காட்டி ஆலோசனை வழங்கியிருந்தாலும் கூட, அப்படி ஒப்பிடுவது முறையல்ல என்ற ஒரு கொள்கை தான் நிச்சயமாக எல்லோருக்கும் நன்மை பயக்கத்தக்கது. ஒரு காடிகரியில் உள்ளவர்களுக்கும், வேறொரு காடிகரியில் உள்ளவர்களுக்கும் சமநிலை என்பது இயல்பாகவே இருக்க முடியாது. ஏதாவது சில சிறப்புகள், தனிக்குறிப்பு இருக்கத்தான் செய்யும். 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கும், 'பி' பிரிவு ஆசிரியர்களுக்குமே தனித் தனித் தன்மை இருப்பதற்கு இடம் இருக்கிறது என்று சொன்னால், அரசாங்கத்தில் அலுவல் செய்கின்ற கிளார்க்குகளாக உள்ளவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சமநிலை, இரண்டு பேருக்கும் 'பாரிடி' என்பது முறையற்றது. சம்பளத்தைத் தீர்மானிக்க எழுதப்பட்ட ஆலோசனைகளை, எழுதிய காரணத்தினாலேயே வலியுறுத்தினால், மொத்தப் பிரச்சினையில் எந்தப் பிரச்சினையையும் தனித் தனியாகத் தீர்க்க முடியாமல் போய்விடும். தொடர்ந்து பிரச்சினை எழும். ஆகவே ஊதியக் குழு ஆலோசனையாகத் தெரிவித்த கருத்து என்று கொள்ள வேண்டுமே தவிர, அதுதான் முறை என்று எடுத்துக்கொண்டு, அந்த அடிப்படையில் வாதங்களை வைத்தால், பிரச்சினைகள் வளருமே தவிர, ஒருநாளும் குறையாது.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, ஒன்றுவது சம்பளக்குழு அதைத்தான் எழுதி வைத்திருக்கிறார்கள். ஹையர் கிரேட் ஆசிரியரையும் கான்ஸ்டேபிளையும் ஒன்றுபடுத்தியிருக்கிறார்கள். செகண்டரி கிரேட் ஆசிரியரை ஹெட்கான்ஸ்டேபிளோடு ஒன்றுபடுத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்போது கான்ஸ்டேபிளில் செலக்ஷன் கிரேடு வைத்து, 200 ரூபாய் என்று வைத்து விட்டார்கள். ஆகவேதான் ஹையர் கிரேடுக்கு அந்தச் சம்பளம் இருக்க



வேண்டும். ஆனால் ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு, முதல் கிரேடு 150 ரூபாய் என்று வைத்துவிட்டார்கள். இந்த நிலைமைகளைத்தான் நாங்கள் எடுத்துச் சொல்லுகின்றோம். சம்பளக் கமிஷன் 'கம்பேர்' செய்யக் கூடாது. 'கம்பேர்' செய்துவிட்டதால், அந்தச் சமுதாயம் அதை ஒத்துக்கொண்டு.....

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஆசிரியர்கள் நாட்டுக்கு அறிவு சொல்கிறவர்கள். ஒரு குழு தவறான கருத்தை எழுதி விடுமேயானால், அந்தக் கருத்தைத் தவறு என்று சொல்லவேண்டுமே தவிர, அந்தக் கருத்தை பிடித்துக்கொண்டு வாதம் செய்யக்கூடாது. அந்தக் கருத்தும், கொள்கையும் என்றைக்கும் சமுதாயத்தில் பல்வேறு துறையில் உள்ளவர்களுக்கு ஏற்றதல்ல. நமது குறைகளை நாம் எடுத்துச் சொல்லி, அவற்றைப் போக்க முயற்சிக்க வேண்டுமே தவிர, அதைத் தொடர்சங்கிலியாகக் காட்டுகிறபோது, இன்றைக்கு ஆசிரியர்கள் செய்வதை, வேறு பலர் அதே சங்கிலியைப் பிடித்துக்கொண்டு ஒரேவிதமான கோரிக்கையை எழுப்ப இடம் தருகின்றது. அந்தக் கோரிக்கை முறையை மாற்ற அங்கத்தினர் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, முறையை மாற்ற ஒப்புக்கொள்கிறோம். ஆனால் ஆசிரியர்கள் சாதாரண சம்பளம் வாங்குகிறவர்கள். அவர்களை விட்டு விடக்கூடாது. அவர்களுடைய பொருளாதார நிலை குறைவு. ஆகவே எந்த நியாயத்தைச் சொல்லியாவது, இந்தப் பே கமிஷனைப் பற்றிச் சொல்லியாவது, ஒரு உயர்வு பெற வழி கிடைக்காதா என்பதைத்தான் உணர்கிறோம். எதிர்காலத்திலே இவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைப்பதற்கு கோத்தாரி கமிஷன் அடிப்படையிலே அரசு தயாரானால், மற்றவர்களுடன் 'கம்ப்பேர்' செய்யாத நிலைமை வந்துவிடும். அதற்கு வேண்டிய முறையிலே இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

[பிற்பகல் 5.10]

அடுத்து, வீட்டு வாடகைப்படி. எல்லா இடத்திலேயும் வாடகை கொடுத்தால்தான் வீடு கிடைக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அந்தப் படி ஒன்றுதான் உறுப்பினர் அவர்கள் சொல்லவேண்டியது என்று நினைக்கிறேன்.

*திரு. செ. முத்துசாமி:* வீட்டு வாடகைப் படி மற்றவர்களுக்கெல்லாம் தரப்படுகிறது. ஆனால் ஆசிரியர் பெருமக்களுக்கும் மற்ற அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்படாமல் இருக்கிறது. அது எல்லோருக்கும் விரைவாக வழங்கப்பட வேண்டும். கிராமத்திலே எலக்ட்ரிசிடி போர்டிலே இருக்கின்றவர்களுக்கு வீட்டு வாடகைப் படி தரப்படுகிறது. கிராமங்களிலே ஆசிரியர்களைவிட அதிகச் செல்வாக்கோடு இருப்பவர்கள் எலக்ட்ரிசிடி போர்டிலே இருப்பவர்கள்தான். ஒரு காலத்திலே ஆசிரியர்களுக்குச் செல்வாக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு எலக்ட்ரிசிடிக்கு முக்கியத்துவம் இருக்கிறது.

*திரு. கே. எஸ். கணபதி:* தலைவர் அவர்களே, அவை நடைமுறைக்குத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை அவையிலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:* இருக்கிறார்கள். உங்களை விட்டுவிட்டு எண்ணியிருக்கிறீர்கள்.

*திரு. செ. முத்துசாமி:* மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வீட்டு வாடகைப் படிப் பிரச்சினையைக் கருணையோடு பரிசீலித்து எல்லா ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு தக்க ஏற்பாட்டினை உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மதிய உணவுத் திட்டத்தில் உண்மையான கணக்கை எழுதினால் போதும் என்பதற்கு 22—5—1972-லேயே முதலமைச்சர், கல்வி அமைச்சர், சட்டத்துறை அமைச்சர், இங்கே இருக்கக்கூடிய வீட்டுவசதி வாரிய அமைச்சர், மற்றும் கல்வித் துறைச் செயலாளர் எல்லோரும் உட்கார்ந்து விரைவாக உத்தரவு போட வேண்டும் என்பது முடிவெடுத்த விஷயம். ஆனால் இன்னும் அந்த உத்தரவு வராமலேயே இருக்கிறது. 1957 ஆம் ஆண்டு இன்றைக்கு சென்னைப் பல்கலைக் வைஸ்-சான்ஸலராக இருக்கிற திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள் கல்வித் துறை இயக்குநராக இருந்தபோது, மதிய உணவுத் திட்டம் வந்தது. 1957-க்கும் 1974-க்கும் இடையிலே எத்தனையோ ஆண்டுகள் ஓடிவிட்டன. அன்றைக்கு விலைவாசி என்ன, இன்றைக்கு விலைவாசி என்ன என்பது தெரியும். 1957-லேயே ஆறு பைசா, இன்றைக்கும் ஆறு பைசாவாக இருக்கிறது. பணவீக்கத்தாலே இன்றைக்கு எப்படிப் பார்த்தாலும் 15 பைசா கொடுக்க வேண்டும். அதுதான் நியாயமாக இருக்கும். இன்றைக்கு 'கேர்' நிறுவனத்திலேயிருந்து கோதுமை





கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 'மிட்டே மீல்ஸ்' சென்டர் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் அதை நிறுத்திவிட்டால் என்ன செய்ய முடியும்? இந்த 'மிட்டே மீல்ஸ் சென்டருக்கு'' 'கேர்' நிறுவன உதவி கிடைக்கவில்லை என்றால், அதை நிறுத்தக்கூடிய நிலை இருக்கிறது. அது நியாயமாக இல்லை. எனவே ஆசிரியர்கள் உண்மையான கணக்கை எழுத உத்தரவு போட வேண்டும். கடந்த காலத்திலே எதிர்க்கட்சித் தலைவர்களாக நீங்களெல்லாம் இருந்தபோது, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு நன்கொடை திரட்டுவதற்கு ஆசிரியர்களை அனுப்புவதை, பிச்சை எடுப்பதற்கு ஆசிரியர்கள் அனுப்பப்படுகிறார்கள் என்று சொல்லக்கூடிய நிலையிலே வார்த்தைகளைப் பயன்படுத்தினீர்கள் என்பதை நினைவுறுத்துகிறேன். எனவே அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு வேண்டாம். இன்றைக்கு உண்மையாகச் சொல்கிறேன், மதிய உணவுத் திட்ட நன்கொடையில் பொய்யைத்தான் எழுதிக்கொண்டிருக்கிறோம். இது உங்களுக்கே தெரியும்.

*திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:* தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, முன்பு ஆசிரியர்களை பிச்சை எடுக்கச் சொல்கிறார்கள் என்று எதிர்க்கட்சியிலே இருந்தபோது சொன்னார்கள் என்று சொன்னார். அதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே, மதிய உணவைப் பொறுத்த வரையிலே 10 காசு என்றால்கூட, 6 காசை அரசாங்கம் தருகிறது. இரண்டு காசு ஊராட்சி மன்றம் வசூலித்துத் தரவேண்டும். இரண்டு காசு பொதுமக்கள் தர வேண்டும். ஆனால் 'கேர்' நிறுவனத்திலே ஆண்டு ஒன்றுக்கு ஆறு கோடி ரூபாய்க்கு ஈடான உணவுப் பொருள்கள் தருகிறார்கள். நாம் இரண்டு கோடி செலவழிக்கிறோம். இதையெல்லாம் சேர்த்துத் தருவதாலே ஓரளவுக்குச் சமாளித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கும்போது, நான்கு பைசா, இரண்டு பைசா என்று சொல்ல முடியாது. 'கேர்' நிறுவனத்தினர் ஆறு கோடி ரூபாய் கொடுத்து அதை சப்ளிமெண்ட் செய்வதாலே சமாளிக்க முடிகிறது. ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளை ஓரளவுக்கு வளர்க்க வேண்டும் என்றால், எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். இன்றைக்கு மூன்றில் ஒரு பகுதி மாணவர்கள் இருக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். இதைக் கொஞ்சம் சரிக்கட்ட வேண்டும். ஊராட்சி மன்ற ஒத்துழைப்பு, பொதுமக்கள் ஒத்துழைப்பு கிடைக்காது என்ற நிலை இருந்தால், ஐந்தில் ஒரு பகுதி

மாணவர்கள் என்று இதனுடைய எண்ணிக்கையைக் குறைக்கலாம். இல்லாவிட்டால் இன்றைக்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்குவதைவிட, இன்னும் அதிகம் ஒதுக்க வேண்டிய அவசியம் வரும். இப்படி நிதி நெருக்கடி வருகிறது. எனவே நான்கு பைசா, இரண்டு பைசா என்ற அபிப்பிராயம் வரக்கூடாது. 'கேர்' நிறுவனத்திலேயிருந்து உதவி வருகிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இரண்டு பைசா என்பதை எல்லாப் பஞ்சாயத்துகளும் தருவதில்லை. யாருக்கு எந்த நிதி இருக்கிறதோ, அந்த நிதிக்குக் கணக்கு எழுத உத்தரவு போட்டுவிட வேண்டுமென்று முடிவு எடுத்தும், அது இன்னும் போடப்படாமலே இருக்கிறது. இரண்டு ஆண்டுகளாக யோசனை செய்கிறீர்கள். இந்த உத்தரவு போடுவதற்கு என்ன செலவு ஆகப் போகிறது? எங்கள் கைக்கு நன்கொடையாக வருவதை எழுதி, வராததை எழுதத் தேவையில்லை. இதற்கு உத்தரவு போடுவது என்பது ஏற்கெனவே எல்லோரும் உட்கார்ந்து முடிவு செய்த விஷயம். எனவே அந்த உத்தரவை உடனடியாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.'

அடுத்து, காமன் சர்வீஸ் ரெஜிஸ்டர்பற்றி. ஊட்டியிலே ஒரு கூட்டம் கண்டக்ட் பண்ணினீர்கள் . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தக் கணக்கைத்தான் எழுத வேண்டுமே தவிர, சரிக்கட்டி எழுதவேண்டும் என்ற உத்தரவு இப்போதும் கிடையாது. என்ன கணக்கு உண்மையான கணக்கோ, அதைத்தான் எழுத வேண்டும். அந்தக் கணக்கு உண்மையாக இல்லாத அளவுக்கு ஆங்காங்கு சரிக்கட்டப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சரிக்கட்டுவதற்கு என்று உத்தரவு இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். எந்த இடமாக இருந்தாலும், சரியான கணக்கைத்தான் எழுத வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு நான் வேறுபாடாகச் சொல்வதாக அவர்கள் கருதக் கூடாது. 10 பைசாவுக்குக் கணக்கு எழுதினால்தான், 6 பைசா அரசாங்கத்திடத்திலேயிருந்து கிடைக்கும். இல்லாவிட்டால் கிடைக்காது. மிட்டே மீல்ஸ் சென்டரை மூடிவிடுவோம், 6 பைசா வேண்டும் என்று சொன்னால், 10 பைசாவுக்குக் கணக்கு எழுது என்ற நிலை இருக்கிறது. இதற்குச் சட்டம் இருக்கிறது,



ஆணை இருக்கிறது. இந்த நிலை இருக்கிற வரைக்கும் இந்தத் தொல்லை இருந்துகொண்டுதான் இருக்கும். இது நியாயமல்ல. 'பொய் பேசாதே, உண்மையே எழுது' என்று சொல்லிக்கொடுக்கிற ஆசிரியர்கள், ஒவ்வொரு நாளும் இதைச் செய்தால் எப்படி இருக்கும்? பள்ளியிலே இருக்கிற பையன் என்ன நினைப்பான்? 10 படி அரிசியைக் கணக்கில் எழுதிக்கொண்டு, 6 படி அரிசியை உலையிலே போடு என்று பையனிடம் கொடுக்கிறார்கள். டெபுடி இன்ஸ்பெக்டர் வந்து விசாரிக்கிறார். எத்தனை படி என்று ஆசிரியரைக் கேட்கிறார். ஆசிரியர் 10 படி என்று சொல்கிறார். பையன் பார்க்கிறான். 'என்னடா இது, 6 படியை நம்மிடம் கொடுத்து உலையிலே போடச் சொன்னார். 10 படி என்று சொல்கிறாரே' என்று எண்ணுகிறான். பொய் சொல்லாதே, உண்மையே பேசு என்று சொல்லிக்கொடுக்கிற ஆசிரியரே இப்படி இருக்கிறாரே என்று எண்ணமாட்டானா? ஆகவே, ஒரே ஒரு ஆர்டர் உண்மைக் கணக்கை எழுதினால் போதும் என்று போட்டுவிடுங்கள். இதற்கு டிஸ்கஷனே வேண்டாம். அரசாங்கத்தின் மீது குற்றமும் சாட்டவில்லை. 1957-லேயிருந்து இந்த நிலவரம்தான். வேறுபாடே இல்லை.

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவரவர்களே, கணக்கு என்பது பிணக்கு. ஆசிரியர்களுக்கே தெரியும் கணக்கே ஒரு பிணக்கு என்று. பையன் அரிசி போடுகிறான் என்று சொல்கிறார்களே, எப்படி பையன் அரிசி போட முடியும்? அரிசி போடவேண்டியவர்கள் ஆசிரியர்கள் அல்ல சமையல் கூடத்திலே இருப்பவர்கள். ஆகவே, பையன்களை அரிசி போடச் சொல்வது என்ற முறையையாவது மாற்ற வேண்டும். ஆசிரியர்கள் கணக்கு எழுதும் போது கணக்கைப் பிணக்காக்காமல் ஆசிரியரே வைத்துக்கொண்டு எழுத வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது இருக்கக்கூடிய பொய்யே நடக்கட்டும், ஆனால், அது மாணவர்களுக்குத் தெரியாமல் நடக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அது தேவையில்லை. அது சாத்தியமும் அல்ல என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஆயா இல்லை, கண்டக்டரால் இல்லை, பியூன் இல்லை. எல்லாப் பள்ளிக்கூடங்களின் நிலைமையையும் பார்க்க வேண்டும். இதை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அந்த விஷயங்களை வேறுமாதிரி டிஸ்கஷனுக்கு எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று மாண்புமிகு தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1974 மார்ச் 11

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்காகச் சட்டம் நிறைவேற்றினோம். நியாயமான சட்டம். ஆனால், இந்தச் சட்டத்திற்கே பெரிய சவால்கள் எல்லாம் விடுகிறார்கள். எய்டட் பள்ளி மேனேஜர்கள் எல்லாம் ஜனாதிபதி அவர்களுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். "ஜனாதிபதி அவர்களே, நாங்கள் இந்த நாட்டின் உத்தம புத்திரர்கள். 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாங்களெல்லாம் கல்விக்காக எங்களை தியாகப்படுத்திக் கொண்ட வர்கள். நாங்கள் உத்தமர்கள். ஆதலால் எங்களை மீறி, நாங்கள் அநியாயம் செய்துகொண்டு வரும் இந்த ஏகபோக உரிமையில் கைவைப்பதற்கு முனை றார்கள். இந்தத் தமிழ் நாடு அரசானது அந்தச் சட்டத்தைக் கொண்டு வரு கிறது. அதை அனுமதிக்கக் கூடாது. நீங்கள் கருணை கூர்ந்து இந்தச் சட்டத்தை அனுமதிக்கக் கூடாது. இதை நிறுத்தி விடுங்கள்", என்று தந்தி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பாவம் கொடுக்கட்டும். நியாயத்தை எதிர்க்க வீணான வாதங்கள், சண்டாளத்தனங்களிலே இறங்கினால் அதற்காக அவர்களுக்காகப் பரிதாபப்படுகின்றதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற் கில்லை. பாதிக்கப்படுகின்றவர்கள் 80 ஆயிரம் பேர் என்றால், அது கொஞ்ச நஞ்சமில்லை. அதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் ஒன்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்த ஒரு சாதாரண பாதுகாப்புகூட இல்லாத நிலையில் இருப்பதை அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்களை இஷ்டப்படி ஆட்டி வைக்கின்றார்கள். ஒன்றும் வேண்டாம், ஒரு சர்க்குலரைப் போட்டு ஐந்தாறு சார்ஜுகளைக் கொடுத்து ஆசிரியர்களை ஒரே நாளிலே நீக்கிவிடக் கூடிய நிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். கல்லூரி ஆசிரி யர்கள் மாணவர்களுக்கு மத்தியிலே கௌரவமாகக்கூட நடத்தப்படுவதில்லை. அவர்களுக்கு ....

[பிற்பகல் 5.20]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** (மணியடித்தல்) சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. செ. முத்துசாமி:** குறுக்கீடுகள் நிறைய இருந்துவிட்டன. ஆசிரி யர்கள் சார்பாக முக்கியமான விஷயங்கள் சிலவற்றை எடுத்துச் சொல்லுவதற் காகத்தான் நேரம் தேவைப்படுகின்றது. ஆனால், குறுக்கீடுகள் என்று இருக்கும்போது ....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நீங்கள்தானே அவர்கள் குறுக் கீட்டுப் பதிலளிக்கும்படி பேசுகின்றீர்கள்?

திரு. செ. முத்துசாமி: சீக்கிரத்திலேயே முடித்து விடுகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இன்றைக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையில் அவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். சிலர் இந்த பில்லை எதிர்க்கும் முறையில் தந்தி கொடுத்துப் பார்க்கின்றார்கள். இதோ சட்டத்துறை அமைச்சர் அவர்களே வந்துவிட்டார்கள். அவர்கள்தான் சட்டம் வரும் என்று சொன்னார்கள். இன்னும் சட்டம் வராமலேயே இருக்கின்றது. இரண்டு அவைகளும் அந்த மசோதாவினை நிறைவேற்றியும் அது இன்னும் சட்டமாகாமலேயே இருக்கின்றது. இதற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட பல மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் அவர்களின் இசைவு கிடைத்திருக் கின்றது. ஆனால், இதற்கு இன்னும் கிடைக்கவில்லை. எனவே இதில் அமைச்சர் அவர்களே தலையிட்டு இதை விரைவில் வாங்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விரைவிலேயே இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்கள் சட்டத்தைக் கொண்டுவந்து, அதன் கீழ் போட வேண்டிய ரூல்சை யெல்லாம் போடும் முயற்சியிலே கல்வி அமைச்சர் அவர்களும் சட்டத்துறை அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நான் இதுவரையில் ஆசிரியர்கள் சார்பிலே சொன்னவற்றை யெல்லாம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, செயல் படுத்த வேண்டும். ஆசிரியர் சமுதாயம் இவற்றை நீங்கள் நிச்சயமாகச் செய்வீர்கள் என்று பெரிதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது என்ற நிலையில் அவர்கள் நம்பிக்கை பொய்க்காவண்ணம் வர இருக்கும் கல்வி மானியக் கோரிக்கையில் இவைகளெல்லாம் அறிவிக்கப்படும் என்ற நம்பிக்கை யினைப் பணிவோடு தெரிவித்து, இவற்றை நிச்சயமாகச் செய்து தர வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி, பேச வாய்ப்பினை அளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. டி. வி. நாராயணசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர் களே, 1974-75-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை நம்முடைய மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்துள்ளார்கள். இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பினை அளித்தமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி யிலே கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுக்கு ஆண்டு சமர்ப்பித்து வரும் நிதிநிலை அறிக்கையினைப் போலவே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையும் மக்களுக்கு நல்ல பயன்களை அளிக்கத்தக்க விதத்திலே, இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப, ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டாக அமைந்திருந்தாலும், பல நல்ல அம்சங் களைக் கொண்டதாக விளங்குகிறது என்று சொல்லுவதில் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

[திரு. டி. வி. நாராயணசாமி] [1974 மார்ச் 11

இதிலே வேளாண்மைத் துறை பற்றியும், உணவு உற்பத்திபற்றியும் உணவுத் துறையிலே நாம் சாதித்துள்ள நல்ல பல சாதனைகள்பற்றியும் பல் வேறு மாநிலங்களுக்கு நாம் இன்றைக்கு உணவினை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையிலுள்ளதுபற்றியும், தாழ்த்தப்பட்டோர் நலன் குறித்தும், பிற்பட்டோர் நலன்கள் குறித்தும் மற்றும் குடிநீர் வசதி, சாலை மேம்பாடு, போக்குவரத்து, பால் பெருக்குத் திட்டம், வீட்டு வசதித் திட்டம், குடிசை மாற்றுவாரியத்தின் மூலமாகச் செயலாற்றி வரும் நல்ல பல திட்டங்கள் குறித்தும், அதுபோன்றே தொழில்துறையில் ஏற்படுத்தியுள்ள சிறந்த சாதனைகள், தொழிலாளர்களுக்காக உருவாக்கியுள்ள நல்ல பல சட்டங்கள் இவற்றையெல்லாம்பற்றிக் குறிக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக கைத்தறியாளர்களுக்கு நிவாரண நிதியாகக் கொடுத்த கடன் தொகை ரூ. 100-ஐ ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் ரத்து செய்து இந்த அரசு ஏழை எளியவர்களுடைய நல்ல பாராட்டுதல்களைப் பெற் றிருக்கின்றது. இதைப் போலவே இன்னும் தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காக கோடிக்கணக்கில் பணத்தை ஒதுக்கி, அவர்களுக்கு என வீட்டுவசதிக் கழகத்தினை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதுபற்றியெல்லாம் ஒரு சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நமது அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு எனவும் பிற்பட்டவர்களுக்கு எனவும் ஏராளமான பணத்தை கோடிக் கணக்கில் செலவிட்டு அவர்களுக்கு என பயனுள்ள பல திட்டங்களைத் தீட்டியிருப்பதை இதயம் உள்ளவர்கள் யாரும் மறுக்க முடியாது. ஆனால், நாம் எந்த மக்களுக்கு என இவற்றை யெல்லாம் திட்டமிட்டுச் செய்கிறோமோ அந்த மக்கள் இவற்றையெல்லாம் உணரத்தக்க அளவில் நாம் செயற்படுத்திய திட்டங்கள்பற்றி நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்பு கிறேன். குறிப்பாக கடந்த ஆறேழு ஆண்டுகளில் நாம் பிற்பட்ட மக்களுக் காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்துள்ள இத்தகைய நற்பணிகள் குறித்து நீண்டதொரு பட்டியலை வெளியிட்டு, அதை இந்த மாமன்ற உறுப் பினர்களுக்கெல்லாம் அளித்து, அவர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் இந்தச் சாதனைகளைப்பற்றி எடுத்துச் சொல்லி, கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் இவைபற்றித் தெரிந்து கொள்ளத் தக்க அளவில் பிரச்சாரத்தினைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இதைப் போலவே பிற்பட்டோர் நலத் துறை பற்றியும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே மிகமிகப் பின்தங்கியவர்கள் என்று சொல்லத்தக்க அளவில் பல பிரிவினர் இருக்கின்றனர். ஜாதியிலே என் போன்றவர்களுக்கு நிச்சயமாக நம்பிக்கை இல்லை. மொத்தமாக தமிழர்கள்,



1974 மார்ச் 11] [திரு. டி. வி. நாராயணசாமி]

தமிழர்களுடைய சமுதாயம் என்பதில்தான் நான் பெரு நம்பிக்கை வைத் திருக்கின்றேன். சமுதாயத்திலே ஒரு சில வகுப்பினர் மிக மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். அப்படி தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலை, மேம் பாட்டைய, திட்டம் தீட்டும் முறையில், இன்றைக்கு சமுதாயத்தில் உள்ள படியே எவ்வளவு பிற்பட்ட சமுதாயங்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்துக்கொண்டு, புதியதொரு பட்டியலைத் தயாரித்து அவர்கள் ஆக்கம் பெற, ஏற்றம் பெற ஊக்குவிக்கக்கூடிய வகையில் வழி வகைகளைக் காண வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரண மாக ஏழை எளியவர்களுக்காக இந்த அரசு ஏராளமாகச் செய்திருக்கின்றது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். அதைப் போலவே, நடுத்தர மக்கள் விஷயத்திலும் நாம் அக்கறை காட்டி, அவர்களுக்கென நிறைய திட்டங்களைத் தீட்டி, நடுத்தர வகுப்பினரும் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களின் நிலையினை உயர்த்துவதற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இவர்களுடைய உயர்விற்காக நாம் ஏற்கெனவே பல திட் டங்களைத் தீட்டியிருந்தாலும்கூட, இப்போது கைத்தறியாளர்களுடைய துயர் துடைக்கப்படும் வகையில் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த கடன் தொகை சுமார் ரூ. 1 கோடியைத் தள்ளுபடி செய்துவிட்டது போல், கடன் பளு தாங் காமல் அவதிப்பட்டுக்கொண்டுள்ள விவசாயிகள் விஷயத்திலும், கடன்களை ரத்து செய்தால், உண்மையிலேயே அவர்கள் பெரும் பயனை அடைய முடியும். காரணம், நாட்டின் பல்வேறு பகுதிகளிலே இயற்கை பொய்த்தது காரணமாக, பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக, பயிர் பாதிக்கப்பட்டு, விவசாயத்தை மட்டுமே நம்பிக்கொண்டுள்ள சிறு சிறு விவசாயிகள் பெரும் தொல்லைக்கும் துயருக்கும் ஆளாகியிருக்கின்றார்கள், அவர்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க வழியின்றி அவதிக்குள்ளாகியிருக்கின்றார்கள். எனவே துன்பப்படும் இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக் கையிலுள்ள சிறப்பான அம்சங்கள் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின் றார்கள். குறிப்பாக புதிதாக ஒரு பரிசுத் திட்டத்தினைக் கொண்டுவந்துள் ளார்கள். நாம் அனைவரும் பாராட்டத்தக்க விதத்தில் அதை அறிவித்திருக்கிறார்கள். ரூபாய் 100 என்றும் பத்து என்றும் பரிசுச் சீட்டுக்களை வெளியிட்டு, அவற்றில் ஆறு முறை பரிசு பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி, பின்னர் பரிசு விழுந்தாலும் விழாவிட்டாலும், அந்தச் சீட்டிற்கான பணத்தினை இரண்டாண்டு காலம்

கழித்து வாங்கியவர்களுக்கே திருப்பித் தரும் அளவில் வகை செய்யப்பட்டிருப்பதானது மிகச் சிறந்ததொரு திட்டமாகும். மேலும் சமூக மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில், அரசு ஊழியர்களுக்கும் மற்றும் பலருக்கும் இருப்பதுபோல, எல்லா மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு பாதுகாப்பு அளித்திடும் வகையில் ஒரு ஓய்வு ஊதியம் கொடுக்கும் திட்டத்தினை அறிவித்திருப்பதானது ஏழை எளியவர்களுக்கு ஒரு இனிப்பான செய்தியாக இருக்கின்றது. 30 வயதிற்குமேலே அவர்கள் மாதம் 10 ரூபாய் என்று கட்டிக்கொண்டு வந்தால், ஓய்வு பெறும் வயதினை அடையும்போது, மாதம் ரூ. 100 பெறக்கூடிய திட்டத்தினைக் கண்டு இன்று மக்கள் பெரு மகிழ்ச்சி கொள்ளுகின்றார்கள். இதுபோன்று ஒரு திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு சிறப்பாக அமைந்திருக்கின்றது. மேலும் அந்தப் பணத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும்போது, இடையிலே நடுவிலே காலமாகிவிட்டால், உரியவர்களுக்கு, வாரிசுதாரர்களுக்கு

[பிற்பகல் 5.30]

சேரத் தகுந்த விதத்தில் இந்தத் திட்டத்தில் வகை செய்திருக்கிறார்கள். இந்த நல்ல திட்டங்களையெல்லாம் உருவாக்குகிறோம். மிகப் பெரும் சாதனைகளைச் செய்திருக்கிறோம். இந்தியாவிலே மற்ற எந்த மாநிலங்களைக் காட்டிலும் உணவுத் துறையில் மகத்தான முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு, அங்கே ஜனநாயகம் சீரழிக்கப்பட்டு, வன்முறை ஆட்டங்கள் தலைவிரித்தாடுகிற நேரத்தில், துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு மத்தியில் மக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் மட்டும் அமைதி நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் ஜனநாயகத்தை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் இந்த அரசினுடைய சிறப்பான திட்டங்களும் அந்தத் திட்டங்கள் இடப்பட்ட முறையும்தான். அண்ணாவினுடைய பசுமைப் புரட்சித் திட்டத்தின் விளைவாக இன்றைய தினம் நாம் தன்னிறைவு கொண்டு தலைநிமிர்ந்து நிற்கிறோம். ஆனால் இதனால் பயன் பெறுகிறவர்கள், அனுபவிக்கிற மக்கள் இதை எந்த அளவிற்கு உணர்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், உண்மையிலேயே நமக்கு வேதனை தான் ஏற்படுகிறது. இதற்காகத் தான் நான் குறிப்பிட்டேன். நான் அமைச்சர் பெரு மக்களுக்கு அரசினருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தெந்தத் துறையிலே நாம் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோமோ அத்தனை சாதனைகளையும் ஒரு சேரப் பார்த்துத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு நல்ல ஒரு குறிப்பை,





பட்டியலை, சாதனைப் பட்டியலை உடனடியாக உருவாக்கி, எல்லா மன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நிதி நிலை அறிக்கை விவாதம் நடந்து கொண்டிருக்கும் கால கட்டத்திலேயே, இந்தச் சட்ட மன்றத் தொடர் கூட்டம் முடிவதற்கு முன்னாலேயே அளித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றும் கலைத் துறையைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே பல தடவைகள் கலைத் துறையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். எனது ஆசிரியர் முத்தமிழ் கலா வித்துவ ரத்தின, கலை உலகப் பெருமகனார், மறைந்த இந்த மன்ற உறுப்பினர் திரு. டி. கே. ஷண்முகம் அவர்களும் கலைத்துறையைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கலைத் துறைக்கு ஆற்றவேண்டிய பணிகளைப் பற்றியும், கலைத் துறை சமுதாயத்திலே மிகப் பெரிய அங்கம் என்பது குறித்தும் இதற்கென தனி வாரியம் அமைக்கப் படவேண்டுமென்பது குறித்தும், இதற்கென தனி ஒரு அமைச்சர் ஏற்படுத்த வேண்டுமென்பது குறித்தும் என்னுடைய மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கள் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. நானும் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் கலைத் துறை சமுதாயத்திற்கு எந்த அளவிற்குப் பயன்படுகிறது, அது நம்முடைய பண்பாட்டோடு ஒட்டிப் போகிறதா, நம் பண்பாட்டை விட்டு விலகிச் செல்கிறதா, உண்மையான தமிழ் பண்பாட்டின் அடிப்படையில் இருக்கிறதா, அல்லது மேல்நாட்டு கலாசாரத்திற்கு அடிமைப்பட்டு மிகச் சீரழிந்த நிலையில் எங்கோ திசை தப்பிச் செல்கிறதா என்ற வினாக்களை எழுப்பி, கலைத் துறையை ஒழுங்குபடுத்த ஆய்வுக் குழுவை ஏற்படுத்தி, இந்தக் கலைத் துறையில் என்னென்ன ஏற்றங்களைச் செய்யலாம், எப்படிச் செய்தால் அதை மேம்படுத்தலாம் என்ற அளவிற்குச் செய்வது மிக முக்கியத்துவம் என்று கேட்டு வந்திருக்கிறேன். இது வரைக்கும் குழு ஏற்படவில்லையென்பதை தாழ்மையோடு குறிப்பிட விரும்புகிறேன். மீண்டும், மீண்டும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு ஆலையிலே வேலை செய்கிறவன், தொழிலகங்களிலே வேலை செய்கிறவன், உத்தியோகம் செய்கிறவன், அலுவலகங்களில் வேலை செய்து விட்டு மாலையில் வீடு திரும்புகிறான் என்றால். அவன் மனைவி மக்களோடு பொழுது போக்க வேண்டுமென்றால், குறைந்த பொழுதுபோக்கு சினிமாவாகத்தான் இருக்கிறது, நாடகமாக இருக்கிறது. நாடகம் எங்கோ கொஞ்சம் இருக்கிறது. முழுமையாக பட்டிதொட்டி எல்லாம் எங்கு வேண்டுமானாலும் பார்க்கலாம் என்கிற அளவிற்கு இருக்கிற ஒரே ஒரு துறை திரைப்படத் துறை. அந்தத் திரைப் படத் துறை எப்படியிருக்கிறது என்று இந்த சமுதாயத்தில் நல்லெண்ணம் கொண்டவர்கள், இந்த நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமென்று எண்ணுகிறவர்கள், இந்தச் சமுதாயத்தை மேம்படுத்த வேண்டுமென்று

எண்ணுகிற, சமூகச் சேவையில் நாட்டம் கொண்ட பெரு மக்கள், மன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு இதையெல்லாம் தொகுத்து, இந்தக் கலைத் துறையில் நம்முடைய பண்பாட்டை, தமிழனுடைய பண்பாட்டைக் காத்திடுவதற்குத் தகுந்த வகையில் கலைத் துறையை மாற்றியமைப்பதற்கு வாரியம் காண வேண்டும். இன்றையத் திரைப்படத் துறை எப்படி இருக்கிறது என்று, இப்போதல்ல, ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே, இரண்டாண்டுக்கு முன்னாலேயே சுட்டிக்காட்டியிருக்கிறேன். கலைத் துறை திசை தப்பிச் சென்றுகொண்டிருக்கிறது. காதல் உணர்வுகளோடு உள்ள கதைகளை நாம் திரைப்படத் துறையில் பார்க்க முடியவில்லை. காம சேட்டைகள் மிகுந்த கதைகள்தான் உருவாக்கப்பட்டு, சமுதாயத்தை முழுக்க முழுக்க சீரழிக்கத் தகுந்த விதத்தில், நம் சிந்தனை சக்தியை முறியடிக்கக் கூடிய விதத்தில், பகுத்தறிவைச் சாய்க்கக்கூடிய விதத்தில், மிகக் கேவலமாகத் தாழ்ந்த நிலையில் போய்க்கொண்டிருக்கிறது. இதைப்பற்றி, இந்த அரசைப் பற்றிக் கவலைப்படுகிறவர்கள், அரசியலைப்பற்றிக் கவலைப்படுகிற பெருமக்கள், ஜனநாயகத்தை நிலை நிறுத்த வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அடுத்த தடவை எனக்கு வாய்ப்புக் கிடைக்குமாவென்பது சந்தேகம். இன்றைய தினம் எனக்குப் பின்னாலே யாரும் பேசுவதற்கு ஆட்கள் இல்லையென்று சொன்னார்கள். மதிப்பு மிக்க உறுப்பினர்கள் இல்லையென்று சொன்னார்கள். எனக்கு முன்னாலே பேசிய ஆசிரியர் தொகுதியிலிருந்து வந்த பெருமதிப்பிற்குரிய திரு. முத்துசாமி அவர்கள் இந்த மன்றத்தில் ஆசிரியர்களைப்பற்றிப் பல தடவை முழக்கங்களை எழுப்பியிருக்கிறார்கள். மிக நீண்ட நேரம் பொது மேடையில் பேசக்கூடிய அளவிற்கு ஆசிரியர்களுக்காக ஏராளமான பிரதிநிதிகள் இங்கே இருக்கிறார்கள். பொதுவாக மேல் சபை, ஆசிரியர்கள் சபை என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஆசிரியர் பிரதிநிதித்துவம் முழுமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. கலைத் துறையைப் பொறுத்த மட்டிலும், இரண்டு பேர்கள் இருக்கிறோம். எப்பொழுதோ பேசுகிறோம். ஆகவே அருள் கூர்ந்து தலைவரவர்கள் கொஞ்ச நேரம் அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கலைத் துறையில் பல சீர்திருத்தங்களை நாம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். நான் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். கலைத் துறை வாரியம் ஏற்படுத்துவதன் மூலமாக வரிப் பணத்தைச் செலவழிக்கக்கூடிய அளவிற்கு இல்லாமல், வருவாயைப் பெற்றுத் தரக்கூடிய அளவிற்கு இருக்கிறோம். கலைப் படங்களை வளர்த்து, மேல் நாடுகளுக்குச் சென்று, மேல் நாட்டு உறவோடு படங்களை எடுப்பது, வளர்ப்பதன் மூலமாக கோடிக்கணக்கான பணத்தை இந்தத் துறைக்கு ஈட்டுத் தந்து, இந்தத் துறையில் போடப்படுகிற பணத்தை



அப்படியே பெறுவதோடு அதிலே வருகிற லாபத்தையும் பெற்று நிச்சயமாக இதிலே ஒரு மகத்தான மாறுதலைக் காணலாம். நம்முடைய பண்பு என்ன என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டலாம். இது தமிழர் பண்பாடு, நாகரீகம் மிக்க தலைசிறந்த பண்பாடு. உலகத்திற்கெல்லாம் நாகரீகம் கற்றுக் கொடுத்த மக்கள் நாங்கள் என்பதை இந்த நூற்றாண்டிலும் நிரூபித்துக் காட்டுவதற்கு அருமையான வாய்ப்பு நமக்கு இருக்கிறது. இதை இந்த அரசைத் தவிர வேறு எந்த அரசும் செய்ய முடியாது. கலைத் துறையில் சீர்திருத்தம், கலைத்துறையில் பகுத்தறிவு, நம் பண்பு இவைகளை நிலைநிறுத்துவதற்கு இந்த அரசு ஒன்றினால்தான் முடியும். ஆகவேதான், பன்னிப் பன்னிக் கூறிக்கொள்கிறேன். கலைத்துறை வாரியம் ஏற்படுத்துங்கள், இதற்கென ஒரு அமைச்சரை ஏற்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சாதாரணமான விஷயம் அல்ல. ஆண்டுதோறும் கலைத் துறையின் மூலமாக, கேளிக்கை வரி மூலமாக கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய் வரைக்கும் வருமானம் வருகிறது. அதிலே ஒரு பகுதியை இதற்கென ஒதுக்கி இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தொழில் ரீதியாகப் பயன்படுத்தி வெற்றி காண்பதற்கு நிச்சயமாக வழி வகைகள் இருக்கின்றன. இதைத்தான் ஒரு ஆய்வுக் குழு மூலமாக, கலைத் துறை நிபுணர்களும், அரசுத் துறை நிபுணர்களும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, இப்படியெல்லாம் செய்தால் நன்றாக இருக்கும் என்று கூறி, இதை விரைவிலே செயல்படுத்த வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கலைத் துறையில் ஈடுபட்ட வயதான நடிகர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். மத்திய அரசினுடைய மானிய உதவித் திட்டத்தின் கீழ் நம்முடைய அரசு அவர்களுக்கு உதவி செய்து வருகிறது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 85 பேர்களுக்கு உதவி செய்திருக்கிறது. அந்தக் குழுவிலிருந்து பார்த்தேன். பணம் அதிகமில்லை என்று ஏற்கெனவே 500-க்கு மேற்பட்ட வயோதிக கலைஞர்களுடைய விண்ணப்பங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் கவனிக்கப்பட முடியாமல் இருக்கின்றன. இந்தத் துறை சம்பந்தப்பட்ட கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எந்த திசையிலிருந்தாவது, எந்தப் பணத்திலிருந்தாவது கூடுதலான பணத்தை ஒதுக்கி, வாழ்விலே உயிரோடு போராடிக் கொண்டிருக்கிற, அந்திய கட்டத்தில் இருக்கிற 60 வயதுக்கு மேற்பட்ட, 70 வயதுக்கு மேற்பட்ட, 74 வயதை எட்டிக் கொண்டிருக்கிற வயோதிக கலைஞர்களுக்கு அவர்கள் உயிர் உள்ளவரைக்கும் பாதுகாப்பளிக்க இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, அதிகமான பேர்களுக்கு உதவி அளித்திட வேண்டுமென்று இந்த நிதிநிலை அறிக்கையின்போது நான் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. டி. வி. நாராயணசாமி] [1974 மார்ச் 11

[பிற்பகல் 5.40]

அது மட்டுமல்லாமல், நாடக அரங்குகளை தமிழகமெங்கும் கட்டித் தா
வேண்டுமென்று இந்த அவையிலே நம்முடைய மறைந்த மேதை, கலைஞர்
திரு. டி. கே. எஸ். அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ
கத்தில் நாடகங்களை நடத்த நல்ல தியேட்டர்கள் இல்லை. நாடக தியேட்டர்
கள் என்றால், 20 லட்சம் அல்லது 25 லட்சம் ரூபாய் செலவழித்துக் கட்ட
வேண்டுமென்பதில்லை. குறைந்தபட்ச அளவிலே திட்டமிட்டு எல்லாப் பெரு
நகரங்களிலும், அடுத்துள்ள நகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும்,
நடத்தக்கூடிய அளவுக்கு நல்ல நாடக அரங்குகளை அமைத்து, குறைந்த
வாடகையில் கிடைக்கின்ற அளவுக்குச் செய்ய வேண்டுமென்று இந்த அரசை
நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே விற்பனை வரியைச் சீரமைத்து, அதை ஒரு
முனை வரியாக்கியிருப்பது சிறப்புக்குரியதாகும். 40 ஆயிரத்திற்கும் மேற்
பட்ட வியாபாரிகளுக்குப் பயன் அளிக்கத்தக்க விதத்திலே, 25,000 ரூபாய்
வரை வருமானம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வரிவிலக்கை உயர்த்தி,
50,000 ரூபாய்வரை உள்ளவர்களுக்கு வரிவிலக்கு என்று அறிவித்திருக்கிறார்
கள். படிப்படியாக அவர்களுக்குச் சலுகை அளித்துக்கொண்டு வந்து, அந்த
வளர்ச்சியின் விளைவாக இன்றையதினம் 50,000 ரூபாய்வரை விதி விலக்கு
அளித்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும், பாசனத் துறையிலே நாம் ஆற்றியிருக்கிற பணிகளைப்பற்றியும்
இதிலே கூறப்பட்டிருக்கிறது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில்
பெரியாற்றுக் கால்வாய்களுக்கு மேம்பாடுகள் செய்வதற்காக பணம் ஒதுக்கப்
பட்டிருக்கிறதென்ற விவரத்தையும் நாம் காண்கிறோம். மதுரை, இராமநாத
புரம் என்று எடுத்துக்கொண்டால், இராமநாதபுரம் மாவட்டம் மிகமிக
வறண்ட பகுதி. அந்த மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பல்லாண்டுக்
காலமாக, நீர்வளம் இல்லாமல், இயற்கை மழை பொய்த்துவிட்டதால்,
சாத்தூர், விருதுநகர், கோவில்பட்டி பகுதிகளில் இருக்கிற விவசாயிகள் படும்
துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்குப் பயனளிக்கும் விதத்தில்
வைகை உற்பத்தி ஸ்தானத்திலேயே இன்னொரு அணையைக் கட்டுவதற்கு
திட்டமிடப்பட்டு, பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அது
முழுமையடையாமல் இருக்கிறது. இந்த மன்றத்திலே சிறப்பாகப் பணி
யாற்றி மறைந்த பெரியவர், திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இதை



1974 மார்ச் 11] [திரு. டி. வி. நாராயணசாமி]

வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அந்தப் பக்கத்திலுள்ள எல்லா குளங்
களுக்கும், குறிப்பாக சாத்தூர் வட்டத்திலுள்ள குளங்களுக்குத் தண்ணீர்
வசதி ஏற்பட்டு, கிட்டத்தட்ட 29,000 ஏக்கர்கள் பயன்படும் விதத்திலே அந்தத்
திட்டம் செயல்படுமென்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் புதிதாக பல நிலங்
களையும் பாசனத்திற்குக் கொண்டுவர முடியுமென்றும் அதிலே கூறியிருக்கி
றார்கள். நான் சில மாதங்களுக்கு முன்னாலே தென் மாவட்டங்களில் சுற்றுப்
பிரயாணம் மேற்கொண்டேன். அப்போது திருவில்லிப்புத்தூரில் உள்ள
பெரியவர்கள், நகரப் பிரமுகர்கள், நகர மன்றத் தலைவர்களெல்லாம் வந்து,
“இது வறண்ட பகுதி; பலப்பல காலமாக—வெள்ளையர் காலத்திலிருந்தே
இந்த மக்கள் நீர் வளத்தைக் காணாமல் அல்லலுற்று, வசதியற்றுக் கிடக்கி
றார்கள். அவர்களுக்கு வாழ்வு அளிக்கும் விதத்திலே இந்த அழகர் அணைத்
திட்டத்தைக் கொண்டுவரவேண்டும்” என்று சொன்னார்கள். அதைத்தான்
நானும் சொல்ல விரும்புகிறேன். மேலும் மேற்கு மலைத் தொடரிலே ஏராள
மாகத் தண்ணீர் இருக்கிறது. கேரள அரசோடு நாம் ஒப்பந்தம் செய்து
கொண்டு, மலைப் பகுதியிலே இருக்கிற அந்தத் தண்ணீரை நமக்குக் கொண்டு
வருவதற்கான நோக்கம் அரசுக்கு இருக்கிறது. அது சம்பந்தமாக மாண்பு
மிகு தொழிலமைச்சரவர்களும், மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்களும்
வெகுவாகக் கவனம் செலுத்தி, அவ்வப்போது பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்
டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனினும், மேலும் அதை விரைவு
படுத்தி, ஊக்கப்படுத்தி இன்னும் கேரள அரசோடு நல்ல முறையில் நாம்
கலந்து பேசி, நீங்கள் தண்ணீர் கொடுத்தால், கடலிலே கலக்கின்ற அந்தத்
தண்ணீரை, எங்கள் உபயோகத்திற்கு வேண்டிய அளவுக்குக் கொடுத்தால்,
அதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டால், உணவுத் துறையிலே தன்னிறைவு
இல்லாத உங்கள் மாநிலத்திற்கு இத்தனை ஆயிரம் டன்கள் உணவுப் பொருள்
தருகிறோம் என்று நீண்ட கால ஒப்பந்தம் செய்துகொண்டு. அந்த அடிப்
படையிலே அவர்கள் தண்ணீரை அளிப்பதற்கு அரசியல் சட்ட திட்டங்
களுக்கு உட்பட்டு, எந்த அளவுக்கு வேலை முறைகளைத் துவக்க வேண்டுமோ
அந்த அளவுக்கு அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்
பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், நான் மாண்புமிகு
அமைச்சரவர்களிடத்தில் ஒரு சமயம் முறையிட்டிருக்கிறேன். அசோக் நகர்
பகுதியில் ஒரு மருத்துவ மனை ஏற்படுத்துவதாகத் திட்டமிட்டு, அதற்காக
வீட்டு வசதி வாரியமானது நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறது. எதிர்
காலத்தில் மருத்துவ மனை அமைக்கப்படுமா அமைக்கப்படாதா என்று தெரிய
வில்லை. நான் ஒரு சமயம் அமைச்சரவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்த

[திரு. டி. வி. நாராயணசாமி] [1974 மார்ச் 11

போது, இப்போதுள்ள நிதி நிலைமை அடிப்படையில் மருத்துவ மனையைத்
தொடங்கி நிறைவேற்ற முடியாதென்று சொன்னார்கள். இந்த ஆண்டு இல்லை
யென்றாலும், அடுத்த ஆண்டாவது அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். பெரிய அளவிலான மருத்துவ மனை இல்லையென்றாலும், அந்தப்
பகுதி மக்களுக்குப் பயன்படும் அளவுக்கு, எந்த அளவுக்கு நிதித் துறை
நமக்கு அனுமதி அளிக்கிறதோ அந்த அளவுக்கு, உடனடி நிவாரணம் பெறக்
கூடிய அளவுக்கு ஒரு மருத்துவ மனையை, அசோக் நகரில், கலைஞர் கருணாநிதி
நகரில் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நாம் மின் துறையிலே மகத்தான சாதனைகளைக் கண்டிருக்
கிறோம். 60,000 கிராமங்களுக்கு நாம் மின் ஒளியைத் தந்திருக்கிறோம்.
கிட்டத்தட்ட 23,000 தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு நாம்
மின்சாரம் அளித்திருக்கிறோம். இன்னும் இந்தத் துறையிலே நல்லதொரு
வளர்ச்சியைக் காண்பதற்கு மத்திய அரசு நமக்குப் பேருதவி புரிய வேண்டும்.
மின் துறையிலே நாம் இன்னும் ஏராளமான வளர்ச்சியைப் பெற வேண்டியவர்
களாக இருக்கிறோம். எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலே—மழை
பொய்த்து விட்டதன் விளைவாக ஏற்பட்ட மின்சாரப் பற்றுக்குறையை
எல்லாம் தவிர்த்து, மிகத் திறமையாக நிர்வகித்து, மக்களுக்குப் பயன்படும்
அளவுக்கு மின் துறை நல்ல பயனைத் தந்திருக்கிறார்கள். அதேபோன்று
போக்குவரத்துத் துறையிலே நம்முடைய அரசு பல சாதனைகளைச் செய்திருக்
கிறது. இன்றைய தினம் நாம் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். சிறிய
ஊர்களுக்கும் செல்லலாம் ; பெரிய ஊர்களுக்கும் செல்லலாம். இது, இந்த
ஆட்சி வந்த பிறகு ஏற்பட்ட மகத்தான சாதனையாகும். பிற மாநிலங்களி
லுள்ள சாலைகளைப் பார்த்தால், ஒரு வண்டியும் ஓட முடியாத நிலையில், சீர்
குலைந்த நிலையில் இருக்கின்றன. அண்மையில் ஒரு மாநிலத்திற்கு ஒரு வேலை
விஷயமாகச் சென்றேன். அங்கே சாலைகளே சரியில்லை. இத்தனைக்கும்
நெடுஞ்சாலை என்று பெயர். அந்தச் சாலைகள், நம்முடைய சாதாரண கிராமச்
சாலைகளுக்குக்கூட ஒப்பிட முடியாத அளவுக்கு இருக்கின்றன. அதை
யெல்லாம் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்திலே இருக்கிற சாலைகள்
மிகமிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. சாலைகளை மேலும் கிராமங்களெல்
லாம் நல்ல முறையிலே பயன்படுத்தும் விதத்திலே, புதிய இணைப்புச் சாலைகளை
ஏற்படுத்த குறிப்புகள் காணப்படுகின்றன. நாம் நல்லதொரு சமதர்மத்
திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். பொதுத் துறையிலே கரும்பு உற்பத்தி
யாளர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு. சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவது
என்று அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. ஆகவே இந்த அரசு



1974 மார்ச் 11] (திரு. டி. வி. நாராயணசாமி)

[பிற்பகல் 5.50]

எந்த ஒரு திட்டத்தை எடுத்தாலும், மக்களுக்குப் பயன்படத் தகுந்த அளவில்
சமதர்மத் திட்டம் என்ற அளவில், சமதர்மத்தை நோக்கிப் போகின்ற நல்ல
வழியாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கின்றது. ஆகவே
இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, நான் கேட்டுக்கொண்டதற்கு
இணங்க கலைத் துறையைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கின்றேன். கலைத் துறையை அலட்சியமாக விட்டுவிடக் கூடாது. அது நமது
சமுதாயப் பிரச்சினை. பண்பாட்டின் அடிப்படையில் எழுந்த பிரச்சினை.
ஆகவே கலைத்துறை புறக்கணிக்கப்பட முடியாத ஒன்று என்று கூறிக்
கொண்டு, இறுதியாக பத்திரிகைகள் சம்பந்தமாகக் குறிப்பிட விரும்புகின்
கின்றேன்.

பத்திரிகைகள் நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு சிறந்த தரத்தோடு
இன்றைய தினம் விளங்கவில்லை என்று குறிப்பிட விரும்புகின்றேன். இன்
னின்ன பத்திரிகைகள் என்று குறிப்பிட விரும்பவில்லை என்றாலும், ஒட்டு
மொத்தமாக கலைத்துறை எப்படி நமக்கு பண்பாடற்ற நிலையில் இருக்
கின்றதோ, அதைப் போலத்தான் பத்திரிகைகளும் மிகுந்த அளவுக்கு மன
உணர்வுகளை, பால் உணர்வுகளைத் தூண்டி விடக்கூடிய அளவுக்குச் செய்திகளை
பிரசுரிக்கின்றன, படங்களையும் பிரசுரிக்கின்றன. இவற்றையெல்லாம் கட்டுப்
படுத்தக்கூடிய அளவுக்கு அந்தத் துறையில் நல்ல மாற்றம் காண வேண்டும்.
அதற்கென தனியாக நிறுவனங்களைக் கண்டு, அவற்றின் மூலமாகச் சிறந்த
பத்திரிகைகளைத் தோற்றுவிக்க, சிறந்த பத்திரிகைகளை உருவாக்கி சமுதா
யத்தை செழுமைப்படுத்தத் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென பணி
வோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நான் முதலில் கூறியபடி, இன்னின்ன பத்திரிகைகள் என்று குறிப்பிட
விரும்பவில்லை. பொதுவாக சமுதாயத்தில் இருக்கின்ற பத்திரிகைகளில்,
சமுதாய நலனைக் கருதி நடக்கின்ற பத்திரிகைகளின் எண்ணிக்கையை மிகச்
சுலபமாக விரல்விட்டு எண்ணிவிடலாம். அந்தப் பத்திரிகைகளின் பிரதிகள்
விற்பதோ மிகக் குறைந்தது. ஓராயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம் என்ற
அளவுக்குத் தான் விற்கின்றன. ஆனால் பால் உணர்வை, கீழான உணர்ச்சிகளை
சமுதாயத்தில் பயங்கரமான, பரபரப்பான விஷயங்களை அள்ளி விட்டுக்
கொண்டிருக்கின்ற மாதப் பத்திரிகைகளும், நாள் பத்திரிகைகளும் ஏராளமாக
இந்த நாட்டில் இருக்கின்றன. அவையெல்லாம் சமுதாயத்தைப் பண்படுத்து

இன்ற வகையிலே, நல்ல பாரம்பர்யத்தை உருவாக்குகின்ற வகையிலே, வருங் காலத்திலே இளைஞர்களை நல்ல தேசியச் சிந்தனை உள்ளவர்கள் ஆக்க, தேசத் திற்கும், சமுதாயத்திற்கும் பயன்படக்கூடிய சேவா உணர்வு கொண்டவர் களாக ஆக்க, எப்படி கலைத் துறைக்கு கலைத் துறையில் அக்கறை இல்லையோ, அதே போன்று பத்திரிகைத் துறைக்கு, பத்திரிகைகளை நடத்துபவர்களுக்கு அக்கறையில்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு அமைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும். இந்த நாட்டில் ஜனநாயகம் செழித்து, நிலைக்க வேண்டும், வன்முறை வெறியாட்டங்கள் நிற்க வேண்டும் என்றால், நிச்சயமாக அத்தகைய சூழ்நிலையினை உருவாக்க கட்சி பேதமின்றி அனைத்துக் கட்சிகளிலும் இருக்கின்ற நல்லெண்ணம் கொண்ட பெருமக்கள் ஒன்றுபட்டு ஆங்காங்கு முயற்சித்திடல் வேண்டும்; அம்முயற்சிகளுக்கு அரசு கைகொடுத்து உதவிடல் வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளியவர்களுக்குப் பயனளிக்கக் கூடிய விதத்தில், குறிப்பாகவும் சிறப்பாகவும் பிற்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கும், கைத்தறியாளர்களுக்கும், மற்றும் பல துறைகளில் இருக்கின்ற அரசுத் தரப்பு ஊழியர்களுக்கும் பயனளிக்கத் தகுந்த நல்லதொரு நிதிநிலை அறிக்கை, வரவேற்கத் தகுந்த நிதிநிலை அறிக்கை என்று கூறி, நான் நன்றி யோடு அமர்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த அவை இத்துடன் கலைந்து, நாளை மாலை 4 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 5.55]

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

165. Notification issued with G.O. Ms. No. 2054, Rural Development and Local Administration, dated the 20th September 1973 relating to declaration of Gudiyattam as Local Planning Area under Section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]



166. Notification issued with G.O. Ms. No. 2061, Rural Development and Local Administration, dated the 20th September 1973 relating to declaration of Courtallam as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*B. Reports, Notifications and other papers.*

32. Notification issued with G.O. Ms. No. 1410, Agriculture, dated the 12th June 1973 in regard to amendments to the Madras Collection of Statistics Rules, 1966.

33. Answers to Unstarred Questions Nos. 8 to 10.

## இணைப்பு.

[20 ஆம் பக்கத்தில் 10 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடாத வினாவின் விடையைக் காண்க]

தமிழ்நாடு சின்கோனாத் துறை ஏற்றுமதி செய்த கொய்னா உப்புக்களின் விவரப்பட்டியல்.

| ஆண்டு. | குனைன் சல்பேட் தூள் கி.கி. | குனைன் ஹைட்ரோ குளோரைடு கி.கி. | குனைன் ஈ.ப சல்பேட் கி.கி. | குனைன்டை ஹைட்ரோ குளோரைடு கி.கி. | சின்கோனா பெப்ரிப்யூஜ் கி.கி. | டோடா கொய்னா கி.கி. | குனைடின் சல்பேட் கி.கி. | மொத்த மதிப்பு ரூபாய். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உப்புக்களின் பெயர். | | | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1964–65 | 26,200 | 3,960 | 450 | 200 | 48,720 | 9,120 | .. | 31,64,377.00 |
| 1965–66 | 3,050 | 5,240 | 590 | 90 | 13,000 | .. | .. | 37,10,500.00 |
| 1966–67 | 6,250 | 6,600 | .. | .. | .. | .. | .. | 57,29,438.00 |
| 1967–68 | 8,500 | 2,100 | .. | .. | .. | .. | .. | 26,55,500.00 |
| 1968–69 | 4,150 | 12,950 | .. | .. | .. | .. | .. | 37,94,212.00 |
| 1969–70 | 2,500 | 5,700 | .. | .. | 10,000 | .. | .. | 34,90,100.00 |
| 1970–71 | .. | 3,500 | .. | .. | .. | .. | 10 | 12,89,338.00 |
| 1971–72 | 2,000 | 3,400 | .. | .. | .. | .. | 10 | 20,05,530.00 |
| 1972–73 (9–3–73 வரை) | 4,000 | 2,850 | .. | .. | 50,000 | .. | 50 | 57,28,290.00 |
| | | | | | | | | 3,15,67,285.00 |

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

### செவ்வாய்க்கிழமை, 1974 மார்ச் 12

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 166, 167, 168 ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Office of the Commissioner for Government Examinations*

* 169 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal to decentralise the Office of the Commissioner for Government Examinations with Offices at Tiruchirappalli and at Coimbatore?

### அரசினர் தேர்வுகள் ஆணையாளர் அலுவலகம்

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசினர் தேர்வுகள் ஆணையாளர் அலுவலகத்தை திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் திறந்து பரவலாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இது இப்போது பரிசீலனையில் இல்லை.

## Selection Grade Posts

*170 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru V. Isvarmurti) : Will the Hon. the Minister for Education be pleased to state the basis on which Selection Grade is awarded to B.T. teachers in—

(a) Government High Schools;

(b) Municipal High Schools;

(c) Government (Board) High Schools; and

(d) Private Management High Schools?

### தேர்வு நிலைப் பதவிகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(a) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் (b) நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் (c) அரசு (வாரிய) உயர்நிலைப் பள்ளிகளில் (d) தனியார் நிர்வாக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்களுக்கு எந்த அடிப்படையில் தேர்வுத் தரம் அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 31—3—1973 வரை அனைத்து நிர்வாகங்களின் கீழ் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலைப் பதவிகளை, முதுநிலையையும் தகுதியையும் அடிப்படையாகக் கொண்டு, வருவாய் மாவட்டத்தை ஒரு அங்கமாகக் கொண்டு வழங்கப்பட்டு வந்தது. 1—4—1973 லிருந்து 10 ஆண்டு கால சேவை அடிப்படையிலும் வழங்கப்படுகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இன்றைக்கு வைக்கப்பட்டுள்ள 18 கேள்விகளிலும், கல்வி சம்பந்தப்பட்ட இரண்டு கேள்விகள்,—139, 1000—இரண்டாவது என்று வருகிறது என்றால், இன்னும் பாக்கி அதிகம் இருக்கிறது என்று தெரிகிறது. கல்வி இலாகாவிலேயிருந்து பதில் வர மிகவும் தாமதமாகிறது. இந்தத் தாமதத்தைத் தடுத்து கேள்விகளுக்கு உடனடியாக பதில் அளிக்க இனிமேல் முயற்சிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். கேள்வி எண் 169-ல் 139 இருக்கிறது. இது 1970 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்வி.

"whether there is any proposal to decentralise the Office of the Commissioner for Government Examinations with offices at Tiruchirappalli and at Coimbatore".



என்று இருக்கிறது. இதற்கு பதில் சொல்வதற்கு நான்கு ஆண்டுகள் ஆக வேண்டுமா? இதுபோன்று காலம் தாழ்த்துவதால் பயன் என்ன? அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த விடைகளைப் பார்க்கிறபோது, அந்த எண்ணந்தான் எனக்கும் ஏற்பட்டது, இவ்வளவு காலத் தாழ்வோடு வருகிறதே என்று. பதில் சொல்ல வேண்டிய காலம் ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே இருக்க வேண்டும். இப்படிப்பட்ட காலத்தாழ்வு ஏற்படாமல் தவிர்க்கப்படும் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக் கொள்கிறேன்.

* 171 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether Selection Grade posts have been sanctioned in all places in accordance with the order for sanctioning Selection Grade to teachers from 1st January 1971;

(b) if so, the number of posts sanctioned, grade-wise; and

(c) the additional expenditure incurred on account of sanction of these posts?

திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1971 முதல் ஆசிரியர்களுக்கு செலக்‌ஷன் கிரேடு வழங்கப்படுவதற்கான உத்தரவின்படி எல்லா இடங்களிலும் செலக்‌ஷன் கிரேடு பதவிகள் அமுலாக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அமுலாக்கப்பட்ட பதவிகள் தகுதி வாரியாக எவ்வளவு?

(உ) இப்பதவிகள் அமுலாக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிகச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அமுலாக்கப்பட்டு வருகிறது.

[1974 மார்ச் 12

(இ) & (உ) தேர்வு நிலை வழங்க பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் முழுமையாக அமுலாக்கப்பட்ட பிறகுதான் மேற்படி பதவிகளின் எண்ணிக்கையும், இதனால் ஏற்பட்ட கூடுதல் செலவினமும் தெரியும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த உத்தரவானது 1971 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டும், மாநில அளவில் வழங்கப்பட வேண்டிய தேர்வு நிலைகள், செக்ரடேரியல் அசிஸ்டென்ட்ஸ், கம்மர்ஷியல் இன்ஸ்ட்ரக்டர்ஸ் கிரேடு ஒன்று, பிஸிகல் எஜுகேஷன் டீச்சர்ஸ், இவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. இப்படி காலம் தாழ்த்துவதற்குக் காரணம் என்ன ? இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இவற்றுக்கு நடவடிக்கை எடுப்பதைப்பற்றி விரைவிலே உத்தரவு போடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

* 172 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government are considering a proposal to grant Selection Grade scales of pay to the Secondary Grade teachers, who have completed ten years of service; and

(*b*) if so, the details thereof?

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பத்து ஆண்டுகள் பணியாற்றியுள்ள இடைநிலைத் தர ஆசிரியர்களுக்கு தேர்வுத் தர சம்பள விதங்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, 10 ஆண்டு பணிக்கால அடிப்படையிலே தேர்வு நிலை இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டுமானால், அவர்களது ஊதியம் ரூ. 275 என்ற நிலையில் இருக்கும். ஆனால்



1974 மார்ச் 12]

ஆரம்ப நிலையே தேர்வு நிலைக்கு ரூ. 250 என்று இருக்கிறது. எனவே தேர்வு நிலை ஊதியத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி அரசாங்கத்திற்குக் குறிப்பு இல்லை. பத்து ஆண்டுக் காலம் தேவை என்பது பற்றித்தான் இப்பொழுது இதைப் பரிசீலனை செய்து வருகிறோம். அதைப் பற்றி முடிவு எடுத்த பிறகுதான் தெரியும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மார்ச் திங்கள் மூன்றும் நாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்வதாகக் கூறினார்கள். ஆனால் ஒரு ஆண்டு காலம் ஆகியும் இன்னும் பரிசீலனை என்றால், 1—4—74-க்கு முன்னாவது அதுபற்றி அறிவிப்பு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைக் கொண்டு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு போட்ட நிதிநிலை அறிக்கையே பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது. இதையெல்லாம் நிதித் துறை ஆராய்ந்திருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தபிறகுதான் நான் முடிவு சொல்ல இயலும்.

* 173 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the pay of B.T. teachers promoted to Selection Grade on 1st January 1971, who have completed eleven years of service, has been frozen: and

(*b*) if so, the reasons therefor?

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—1—1971 அன்று தேர்வுத்தர நிலைக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட, 11 ஆண்டுகள் பணியாற்றி முடித்த பி.டி. ஆசிரியர்களின் சம்பளம் ஊதிய உயர்வு எதுமின்றி ஒரே நிலையிலேயே கொடுக்கப்படுகிறதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, முன்னுள் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக, 11 ஆண்டுகள், 12 ஆண்டுகள், 13 ஆண்டுகள் பணிசெய்துள்ளவர்களுக்கு அதுமாதிரி ஊதியத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அதைப் பரிசீலனை செய்து, பத்து ஆண்டுகளுக்கு மேலே பணி புரிந்தவர்களின் ஊதிய உயர்வைத் தொடர்ந்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குனரகத்திலிருந்து அப்படி நிறுத்திவைக்கப்படவில்லை. 11 ஆண்டுக் காலம் முடிந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் நிறுத்திவைக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி குறிப்பிட்டு ஏதாவது இருக்குமானால், அது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*Report on the working of the Civil Hospitals and Dispensaries in the State.*

* 174 *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the year up to which the report on the working of the Civil Hospitals and Dispensaries in the State has been published;

(*b*) whether there is considerable delay in the publication of the above report; and

(*c*) if so, the reason for the long delay and the action proposed to be taken by the Government in the matter?

**மாநிலத்திலுள்ள சிவில் மருத்துவ மனைகள் மருந்தகங்கள் ஆகியவற்றின் பணி குறித்த நிர்வாக அறிக்கை**

**திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள சிவில் மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவை செயல்பட்டமை பற்றிய அறிக்கை எந்த ஆண்டு வரையில் வெளியிடப்பட்டுள்ளது ?

(இ) இந்த அறிக்கையை வெளியிடுவதில் கணிசமான அளவுக்குக் கால தாமதம் ஏற்பட்டுள்ளதா?

(உ) ஆமெனில், நீண்டகால தாமதத்திற்கான காரணம் என்ன? இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இம்மாநிலத்திலுள்ள சிவில் மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் பணி குறித்த நிர்வாக அறிக்கை 1966 வரையில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

(இ) & (உ) மருத்துவப்பணிகள் இயக்குநர் அலுவலகம், சுகாதாரப் பணிகள்-குடும்பநலத்திட்ட இயக்குநர் அலுவலகம் என்றும், மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் என்றும், இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதன் பின், நாட்டு மருத்துவ இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டதன் காரணமாக, மேலும் இது இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இந்த நிர்வாக மாற்றங்களின் காரணமாகவும், பல்வேறு நிறுவன அமைப்புகளிடமிருந்து தகவல்கள் சேகரிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தையொட்டியும், இந்த அறிக்கையை அச்சிட்டு வெளியிடுவதில் தொடர்ந்து சிறிது காலதாமதம் ஏற்பட்டுள்ளது. 1972 வரையிலான ஆண்டு நிர்வாக அறிக்கை அச்சிடும் பணியினைக் கைவிடலாம் என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. அப்போதுதான் அதற்குப் பிற்பட்ட அறிக்கைகளை உரிய காலத்தில் அச்சிட்டு வெளியிட இயலும்.

### *Scheme of Protected Water Supply at Theroor, Kanyakumari District.*

* 175 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any representation has been made by the Theroor Town Panchayat to implement the scheme of Protected Water Supply at Theroor, Kanyakumari District; and

(*b*) if so, the action taken thereon?

### கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் பேரூராட்சி, தேரூரில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் அமைக்க வேண்டுமென்று முன்றயீடு ஏதும் செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அந்த தேரூர் பேரூராட்சியிலே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் அமைப்பதற்கு அந்த ஊராட்சிமன்றம் கட்ட வேண்டிய முன் தொகை கட்டியாகிவிட்டதாகத் தெரிய வருகிறது. எனவே எப்பொழுது ஆய்வு முடிந்து விரைவில் அந்த வேலையை தொடங்குகின்ற நிலை ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, 20—3—1973 அன்று இந்த ஆய்வுத் தொகையை அவர்கள் செலுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தப் பரிசீலனை வேலை முடியவில்லை.

*Appointment of Gazetted Personal Assistants to District Judges.*

* 176 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Second Tamil Nadu Pay Commission 1969-70 have recommended the appointment of Gazetted Personal Assistants to District Judges to lessen their administrative work-load; and

(b) if so, the action taken thereon?

*மாவட்ட நீதிபதிகளுக்கு அரசிதழ்ப் பதிவுபெற்ற நேர்முக உதவியாளர்கள் நியமனம்*

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட நீதிபதிகளின் நிர்வாகப் பணிச் சுமையைக் குறைக்க அவர்களுக்கு அரசிதழ்ப் பதிவு பெற்ற நேர்முக உதவியாளர்களை நியமனம் செய்யலாமென்று 1969-70 ஆம் ஆண்டு தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?



The Hon. Thiru S. MADHAVAN: (a) Yes.

(b) The Government did not accept the recommendation of the Pay Commission and the proposal was negatived.

(பிற்பகல் 4.10)

*Groundnut Oil*

* 177 Q.—Thiru Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of Thiru S. VELLAPPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the total quantity of groundnut oil produced in the State during the calendar years 1971 and 1972; and

(b) the quantity sent to (i) Foreign Countries, and (ii) North India during that period?

*கடலை எண்ணெய்*

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971, 1972 ஆம் காலண்டர் ஆண்டுகளில் இம்மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட கடலை எண்ணெயின் மொத்த அளவு யாது?

(இ) அந்த ஆண்டுகளில் (i) அயல் நாடுகளுக்கும் ( ) வட இந்தியாவிற்கும் அனுப்பப்பட்ட அளவு யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இந்த மாநிலத்தில் கீழ்க்கண்ட பசலி வருடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வேர்க்கடலை எண்ணெயின் அளவு பின்வருமாறு:—

(1) 1970-71—2.10 லட்சம் மெட்ரிக் டன்.

(2) 1971-72—2.22 லட்சம் மெட்ரிக் டன்.

1971, 1972 காலண்டர் வருடங்களுக்கான உற்பத்தி புள்ளி விவரங்கள் இல்லை.

(இ) (1) இந்தக் காலத்தில் அயல் நாடுகளுக்கு வேர்க்கடலை எண்ணெய் தமிழ் நாட்டுத் துறைமுகங்கள் வாயிலாக ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(2) வட இந்திய மாநிலங்களுக்கு 1971-72-ல் அனுப்பப்பட்ட வேர்க் கடலை எண்ணெயின் மொத்த அளவு முறையே 47,610, 47,034 டன்களாகும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, எண்ணெய்ச் சத்து அதிகமாக உள்ள குறுகிய கால குறுவை கடலைப் பயிர் பல இடங்களிலே பரப்பப்பட்டு வருகிறது. ஆனால் திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலே எங்கெல்லாம் புஞ்செய்ப் பயிர் செய்கின்றார்களோ அங்கேயெல்லாம் இந்த வகையான குறுகிய கால கடலை பயிரிடப்படுவதில்லை. இதைப்பற்றி அரசு கவனித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவலைக் கருத்தில் கொண்டு அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் கடலையில் அதிக விளைச்சலைக் கொடுக்கும் குறுகியகால விதைகள்பற்றி ஆராய்வது என்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திருச்சி, தஞ்சை மாவட்டம்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னது ஆராயப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இந்தப் பசலியிலே திருச்சி, சேலம் மற்றும் கோவை மாவட்டங்களிலே இந்தக் குறுகிய கால கடலைப் பயிர் வைத்து அதில் ஏராளமான பூச்சிவிழுந்து, என்ன மருந்துகளை அடித்தும் அவை போகாமலேயே விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளானது சர்க்கார் கவனத்திற்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, நிலக்கடலை பந்தப்பட்டவரையில், பூச்சி வரும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தப் பூச்சிகள் பற்றி ஆராய்ச்சி செய்து, அதற்கு எந்த மருந்தை அடித்தால் அது போகும் என்று சொல்ல வேண்டும். சில இடங்களிலே பி.எச்.சி. 10 அடிக்க வேண்டும், இன்னும் சில இடங்களிலே அதிக வேகமுள்ள எண்ட்ரின் போன்ற பூச்சி மருந்துகளை அடிக்க வேண்டும். அதிகாரிகள் பூச்சிபற்றி ஆராய்ந்த பிறகு, அவர்கள் சொல்லும் மருந்தைத்தான் உபயோகிக்க வேண்டும். அப் போதுதான் நல்ல பலன் கிடைக்கும். அதிகாரிகளுடைய ஆலோசனையை அவர்கள் கேட்டிருக்க வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, தமிழகத்தில் நிலக்கடலை எண்ணெய் இங்குள்ள மக்களுக்குப் பெரிதும் தேவைப்படுகிறது. அது போல நிலக்கடலைப் புண்ணாக்கும் நமது மாடுகளுக்குப் பெரிதும் பயன்படுகிறது. இப்படி நமக்கே தேவை அதிகமாக இருக்கும்போது, எண்ணெயின் விலை





ஏற்றத்தால் நமது மாநிலத்திலேயே மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வட மாநிலங்களுக்கு 47 ஆயிரம் டன் கடலை எண்ணெய் அனுப்பப்பட்டது என்று சொல்லப்பட்டது. இப்படி ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுப்பதற்கு ஏதாவது வழி வகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, நான் சொன்ன புள்ளி விவரம் 1971, மற்றும் 1972 ஆண்டுகளுக்கானவை. விலை ஏற்றம் அப்போது கொஞ்சம் இருந்தாலும்கூட, 1973-ல் மிகவும் அதிகமாகிவிட்டது. ஆனால் வெளி மாநிலங்களுக்குப் போகக்கூடாது என்று சொல்லும் அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, நெல் கோளத்திற்குப் போகக்கூடாது என்று உத்தரவிட்டு தடுத்திருக்கின்றீர்கள். அதேமாதிரி இதைத் தடை செய்வதற்கும் நமக்கு அதிகாரம் இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் இதை அறிந்திருக்க வேண்டும். நெல்லைப் பொறுத்த வரையில், நாட்டிலே ஸோன்கள் என்று பிரித்திருக்கின்றார்கள். அதிலே ஒரு ஸோனிலிருந்து இன்னொரு ஸோனுக்குப் போகத் தடையிருக்கின்றது. ஆனால் வேர்க்கடலைக்கு அப்படி ஸோன் என்று ஒன்றும் கிடையாது. எனவேதான் இது விஷயத்தில் நாம் ஒன்றும் தடை விதிக்க முடியாது. இப்படித் தடையில்லாத காரணத்தினால் தான் வேர்க்கடலை குஜராத்துக்கும் பிற வட மாநிலங்களுக்கும் போவதைத் தடை செய்ய முடியவில்லை.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, முன்பு ஒரு முறை தமிழ் நாட்டிலே வெல்லத்தின் விலை அதிகமாக ஏறிவிட்டது என்ற காரணத்தினால், வெல்லம் வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடாது என்று அரசாங்கத்தில் தடை விதித்தார்கள். அது போலவே மணிலாவிற்கும் இப்போது தடை விதிக்கக்கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, வெல்லம் நமது மாநிலத்தை விட்டு வெளியே போகக்கூடாது என்று தடை விதித்தபோது, மத்திய சர்க்கார் நாம் செய்தது சரியில்லை என்று குறிப்பிட்டார்கள். அதைப் போல மீண்டும் இப்போது செய்ய வேண்டுமா என்று ஆராயலாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதிகாரிகள் குறிப்பிடும் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தினால் வேண்டிய பலன் கிடைக்கும் என்று. ஆனால் அம்மையார் அவர்களுக்கே

தேவையான மருந்துகள் டெப்போக்களில் இருப்பதில்லை என்பது தெரிந்திருக்கும். மேலும் டெப்போவிலுள்ள மருந்துகள் விற்பனை ஆகவேண்டும் என்பதற்காக அங்குள்ள அதிகாரிகள் 'இந்த மருந்தை உபயோகியுங்கள்' என்று விற்பனை ஆகாத மருந்தைக் கொடுத்துவிடுகின்றார்கள். இந்தப் போக்கினைத் தடுக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, டெப்போவிலுள்ள மருந்துகள் விற்பனை ஆக வேண்டும் என்று அந்த மாதிரிச் சொல்ல மாட்டார்கள். இப்போது பொதுவாக விவசாயிகளுக்கே எப்போது எந்த மருந்துகளை உபயோகிக்க வேண்டும் என்று தெரிந்துவருகின்றது. கருந்தலைப்புழு என்று இருக்கின்றது. அதற்கு என்ட்ரின்தான் போட வேண்டும் என்று அவர்களுக்கே தெரிகிறது. பி.எச்.சி. 10 சதவிகிதம் போட்டாலும், பலன் ஏற்படுவதில்லை என்று அவர்களுக்கே தெரியும்போது, அதிகாரிகள் சொல்லுகின்றார்கள் என்று சொல்வது சரியாக இருக்காது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இதேமாதிரி திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களிலே மஞ்சள் பயிரில் கொட்டமுத்து போட்டார்கள். அங்கே மிக அதிகமாகப் பூச்சி விழுந்து மருந்தடித்தார்கள், ஆனால் மருந்து அடித்தும் பலன் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? இப்படிப் பூச்சி விழுந்ததன் காரணமாக லட்சக் கணக்கில் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இது எனக்கு நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கொட்டமுத்து மிக நல்ல உரம். ஆமணக்குப் பிண்ணாக்கில் 8 சதவிகிதம் வரையில் நைட்ரஜன் இருக்கிறது. அது நல்ல உரம். அது பூச்சிக் கொல்லி மருந்து இல்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது மஞ்சள் கொட்டமுத்துப் பயிரில் பூச்சி விழுந்துவிட்டது, அதற்குப் பரிகாரம் கிடைக்கவில்லை என்பது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரம் பற்றிச் சொல்லுகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கொட்டமுத்து என்று குறிப்பிடுவது ஆமணக்கு தானா என்று அறிய விரும்புகிறேன்.



**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஆமணக்கைத்தான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, ஆமணக்குச் செடிக்கும் தக்க மருந்தை அடித்தால், அதில் வரும் பூச்சிகளையும் ஒழித்து அதைப் பாதுகாக்க முடியும்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, எண்ணெய்ப் பற்றாக்குறை என்பதைப் பற்றி இப்போது எங்கே பார்த்தாலும் ஒரே பரப்பரப்பாக இருக்கின்றது. பழைய காலத்திலே இலுப்பக்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுத்து மக்கள் பயன்படுத்தி வந்தார்கள். அதனுடைய புண்ணாக்கை, மருந்தைப்போல, சொறி சிரங்கு வந்தால் தேய்த்து குணம் கண்டிருக்கின்றார்கள். இப்போது இந்த இலுப்பக்கொட்டை மரத்தை ஏராளமாக வைத்து இலுப்ப எண்ணெய், புண்ணாக்கு இவற்றை உற்பத்தி செய்ய அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இலுப்பைப் புண்ணாக்கின் நன்மை பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்படி அவர்களுக்குத் தெரிந்ததோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் எண்ணெயைப் பற்றிச் சொல்லப் போனால், அது எரிபொருளாக இருந்திருக்கிறதே தவிர, 'எடிபிள் ஆயிலாக' சமையலுக்கு உபயோகப்படுத்தும் எண்ணெயாக அது கருதப்படுவதில்லை. இதை ஏன் பெருமளவில் உற்பத்தி செய்யக்கூடாது என்று கேட்டார்கள். இலுப்பை மரத்தை வைத்தால், அதன் பலன் கிடைப்பதற்கு ரொம்ப காலமாகும். ஒரு ஏக்கரில் எதையாவது பயிரிட்டால், எவ்வளவு குறுகிய காலத்தில் எவ்வளவு அதிகமாகப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் என்றுதான் பார்க்க வேண்டியிருக்கின்றது. இப்படி ஏக்கருக்கு இவ்வளவு வருவாய் என்று பார்க்கும்போது, இலுப்பமரம் வைப்பது லாபகரமாக இல்லை என்றுதான் அது ஊக்குவிக்கப்படுவதில்லை.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, நான் 50 வருடத்திற்கு முன் பிறந்துவிட்ட காரணத்தினால், எனக்கு அதுபற்றித் தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியானால், அமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பின்னால் பிறந்தார் என்று சொல்லுகின்றீர்களா?

**திரு. சி. வி. ராஜகோபால் :** எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. என் வீட்டில் அதில் பலகாரம் செய்திருக்கின்றார்கள். ஐம்பது வருஷங்களுக்கு முன்பு பிறந்தவர்களுக்கு இது தெரிந்திருக்கிறது. ஆகவேதான் அதைக் கேட்டேன்.

[1974 மார்ச் 12

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இலுப்பைப் புண்ணாக்கைத் தலையில் தேய்த்துக்கொள்ளுவதால் மனநோய் போய்விடுகின்றது என்று சொன்னார்கள் . . . .

MR. CHAIRMAN: மன நோய் என்று சொல்லவில்லை, சொறி சிரங்கைத்தான் குறிப்பிட்டார்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எனக்குத் தெரிந்தவரையில் இப்படி இலுப்பைப் புண்ணாக்கை மருந்தாக உபயோகிக்கலாம் என்று சொன்னதாகத் தெரியவில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ட்ரின் அடிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எண்ட்ரின் அடிப்பதில் பயோலாஜிகல் இம்பேலன்ஸ் வந்துவிடுகிறது. எனவே மேற்கொண்டு அதிகமாக மருந்துகளை அடிக்க வேண்டிய அவசியம் வருகிறது. எனவே எண்ட்ரின் அடிப்பது தவறு என்று நிபுணர்கள் கூறுகின்றார்கள். இந்த நிலையில் அரசு எண்ட்ரினுக்குப் பதிலாக மாற்று மருந்துகளைப்பற்றிய நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மத்திய அரசு இதன் காரணமாக மேற்கொண்டு எண்ட்ரின் இறக்குமதி செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் சில புழு பூச்சிகள் B.H.C. எவ்வளவு வேகமுடையதாகப் போட்டாலும் மடிவதில்லை. எனவே எண்ட்ரின் தேவைப்படுகிறது. ஆகையால் எண்ட்ரின் இறக்குமதி செய்யப்படவேண்டும் என்றுகூட நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

## *Opening of a Veterinary Hospital at Pennathur, North Arcot District*

* 178 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any recommendation has been sent to the Government for opening a Veterinary Hospital at Pennathur in Kaniyampadi Block, North Arcot District; and

(b) if so, the action taken thereon by the Government?



1974 மார்ச் 12]

## வடாற்காடு மாவட்டம், பென்னாத்தூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வடாற்காடு மாவட்டம், கனியம்பாடி வட்டாரத்தில், பென்னாத்தூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுக்குப் பரிந்துரை ஏதும் அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) வட ஆற்காடு மாவட்டம், கனியம்பாடி வட்டாரத்தில் பென்னாத்தூரில் கால்நடை மருத்துவமனை ஒன்றைத் தொடங்குவதற்கு அரசுக்குப் பரிந்துரை ஏதும் கொடுக்கப்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## *Sandalwood Oil*

* 179 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal with the Government to extract sandalwood oil and other by-products from the sandalwood in North Arcot District; and

(b) if so, the details thereof?

## சந்தனத் தைலம்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வடாற்காடு மாவட்டத்தில், சந்தன மரத்தைக் கொண்டு அதன் தைலம் மற்றைய உப பொருள்கள் தயாரிக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) இல்லை.

## *Setting up of a Power House at Hogenekal across the River Cauveri.*

(பிற்பகல் 4.20)

* 180 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister Electricity be pleased to state—

(*a*) whether discussions were held between the Tamil Nadu Government and the Government of Mysore regarding the setting up of a Power House at Hogenekal across the river Cauveri; and

(*b*) if so, the present stage of the Scheme?

**காவிரி நதியின் குறுக்கே ஓகனேகல் என்னுமிடத்தில் மின் நிலையம் அமைத்தல்**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எல். பலராமன் சார்பில்) :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காவிரி நதியின் குறுக்கே ஓகனேகல் என்னும் இடத்தில் மின் நிலையம் அமைப்பது சம்பந்தமாக மைசூர் மாநிலத்திற்கும் நம் அரசுக்கும் பேச்சுவார்த்தை நடந்ததா ?

(இ) ஆமெனில், தற்போது இதன் நிலை யாது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 12—9—1973 அன்று தமிழ் நாடு, கர்நாடகா ஆகிய மாநிலப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் மத்திய திட்ட அமைச்சரவர்கள் இதைப்பற்றி ஆய்வு நடத்தினார்கள். இரு மாநிலப் பிரதிநிதிகளும் இரு மாநிலங்களைச் சேராத பிரதிநிதிகளும் கலந்து ஒரு மாற்றுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்று அதில் கேட்கப்பட்டது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, ஓகனேக்கல் திட்டம் சுமார் 10 வருஷமாக யோசனையில் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு உருப்படியான உரு கொடுக்கக் கூடிய நிலை எப்போது உருவாகும் என்று அமைச்சரவர்கள் எண்ணுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே. மத்திய அரசிடம் தொடர்புகொண்டு மத்திய அமைச்சரவர்கள் இதைப்பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். நமது அரசின் சார்பாகவும் கர்நாடக மாநிலத்தை அணுகி கூடிய விரைவில் இந்த ஆண்டு பேச்சுத் தொடங்க இருக்கிறோம்.



## *Pattanamkal Scheme.*

@* 159 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total estimated area of wet lands likely to be irrigated by the Pattanamkal Channel in Kanyakumari district; and

(*b*) the total area of wet lands actually irrigated after the channel was dug?

**பட்டணம்கால் திட்டம்.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பட்டணம்கால் வெட்டுவதற்கு முன் அக்கால் வெட்டுவதால் எதிர்பார்க்கப்பட்ட பயிரிடப்படும் நஞ்சை நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) கால் வெட்டி தண்ணீர் எடுத்த பின்னர் பயிரிடப்படும் நஞ்சை நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) பட்டணங்கால் வெட்டுவதற்கு முன்னால், அக்கால் வெட்டுவதன் மூலம், பழைய கால்வாய்களான திருப்பரப்பு வலது, இடதுகரைக் கால்வாய்களின் ஆயக்கட்டு உட்பட 15,000 ஏக்கர் நஞ்செய் நிலம் பாசனமடையுமென எதிர்பார்க்கப்பட்டது.

(இ) பட்டணங்கால் வெட்டி தண்ணீர் அளித்த பின்னர் இதுவரை ஏறத்தாழ 9,150 ஏக்கர் நஞ்செய் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, 15 ஆயிரம் ஏக்கர் சாகுபடியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டு கட்டப்பட்டது. இப்போது 9,150 ஏக்கர் தான் சாகுபடியாக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. ஏன் எதிர்பார்த்த அளவிற்குச் சாகுபடியாகவில்லை என்பதை அரசு பரிசீலனை செய்ததா ? அப்படிச் செய்திருந்தால், அதனுடைய முடிவென்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அங்கே நிலப் பகுதிகள் சிறு சிறு துண்டுகளாகவும், கடினமாகவும் இருப்பதால், புஞ்சைப் பகுதிகளை நஞ்சைப் பகுதிகளாக மாற்றுவதற்கு அதிகச் செலவு ஆவதாலும், அங்கே நிலப் பகுதிகள் அதிகமாகத் தண்ணீரை உறிஞ்சும் பகுதியாக இருப்பதாலும் ஆயக் கட்டை விரிவுபடுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது.

---

@ 11—3—1974 நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, அந்தப் பகுதி நிலங்கள் அதிகமான தண்ணீரை உறிஞ்சுகிற மணற்பாங்கான நிலமாக இருக்கிறதென்று சொல்லப்படுவதால், அதிகமான நிலத்தை மாற்றுவதிலே கால தாமதம் ஏற்படுகிறதென்று சொன்னார்கள். திருச்செந்தூர் பகுதியிலே நமது வேளாண்மைத் துறை அமைச்சரவர்களுடைய முயற்சியிலே மணற்பாங்கான இடத்தில் சிமெண்டைப் போட்டு இப்போது பயிர் செய்யக் கூடிய முறையைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். இது வெற்றி கண்டிருக்குமானால், இங்கும் அமுல் நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சரவர்களைத் தான் கேட்க வேண்டும்.

## *Development of Leepuram Port.*

@* 160 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to develop Leepuram Port in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

## லீபுரம் துறைமுக அபிவிருத்தி.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள லீபுரம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்க் கடற்கரையில் அமைந்திருக்கக் கூடிய லீபுரம் முன்னொரு காலத்தில் துறைமுகமாக இருந்ததாகவும், அங்கே கப்பல்கள் வந்து தங்கியதாகவும் சொல்லப்படுகிறது. இப்போது அங்கு துறைமுகம் அமைப்பதற்கு ஏற்ற

@ 11—3—1974 நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.





நிலை இருப்பதாகச் சொல்லப்பட்டது. எனவே இதை ஆராய்ச்சி செய்வதற்கு நிபுணர் குழு அனுப்பப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நிபுணர் குழு அனுப்பத் தேவையில்லை. அதிகாரிகளை வைத்து ஆராயும்படி அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Assignment of wet lands for Harijans.*

@ * 161 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Harijans in M. Pudur village, Ramanathapuram district, have applied for the assignment of wet lands in S. No. 12/6 for cultivation; and

(*b*) if so, the action taken thereon by the Government?

## அரிசனங்களுக்கு நஞ்சை நில ஒப்படைப்பு.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மு. புதூர் கிராமத்தில் அரிசனங்கள் சர்வே 12/6-ல் நஞ்சை நிலம் சாகுபடி செய்வதற்கு ஒப்படைப்பு கோரி விண்ணப்பம் செய்திருக்கிறார்களா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) மு. புதூர் கிராமம் புல. எண். 12/6-ல், தர்காஸ்து விதிகளின்படி திருப்பத்தூர் ஒப்படைப்பு தனி தாசில்தார் மு. புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வைத்தி என்பவருக்கு 26 செண்ட் நிலத்தை 29—2—72-ல் ஒப்படைப்பு செய்தார். ஆனால் திருமதி குஞ்சரம்மாள் என்பவர் தமிழ்நாடு எஸ்டேட் ஒழிப்பு சட்டத்திற்கு புறம்பாக பட்டா வழங்கும்படி மனு செய்ததில், தேவகோட்டை கோட்டாட்சியர் 16—7—1972 அன்று திருமதி குஞ்சரம்மாளுக்கு புல. எண். 12/1 எண்ணில் 4.85 ஏக்கருக்கு பட்டா வழங்கியுள்ளார். இது சரியா என்பது அரசு பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

@ 11—3—1974 நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

## 2. 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்ட 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை விவாதத்திலே நானும் கலந்துகொண்டு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே, சகஜமாக எந்த வகுப்பினருக்கும், முக்கியமாகச் சொல்லப்போனால் ஏழை, நடுத்தர வகுப்பினர்களுக்குப் பாதகமே தவிர, எந்த விதமான சாதகமும் அமையவில்லை. அதிகமாகச் சொல்லப்போனால், எப்பொழுதும் சொல்வது போல, மத்திய சர்க்காரைக் குறை கூறி, மத்திய சர்க்கார் மீது இங்கே இருக்கிற மக்களுக்கு ஒரு கசப்புணர்ச்சியை ஊட்டி, பிரிவினை மனப்பான்மையைத் தூண்டக்கூடிய வகையில் இந்த அறிக்கை அச்சடிக்கப்பட்டிருக்கிறது. எந்த ஐட்டத்தைப் பார்த்தாலும், மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்று தான் சொல்லப்படுகிறது. இதைச் சொல்லும்போது இங்கே இருக்கிற மக்களுக்கு . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மத்திய சர்க்காரைப் பற்றிய நிலைமையை விளக்கிச் சொல்வது நாட்டின் ஒற்றுமையைக் காட்டுகிறது. மத்திய சர்க்காரைப்பற்றிச் சொல்லவில்லையென்றால், தனி நாடு என்றாகிவிடும். தயவு செய்து தீக்ஷிதர் அவர்கள் அப்படிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, தனிப்பட்ட முறையில் சொல்வதற்குப் பதிலாக இப்படிப் புகுத்தி விடுகிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து, ஊழியர்களுக்கு ரூ. 10 அக விலைப்படியில் உயர்த்தியிருக்கிறார்கள். சந்தோஷப்பட வேண்டியதுதான். ஆனால் தமிழ் நாட்டிலே கிராம அதிகாரிகள் 60 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தான் அரசாங்கத்திற்கு அஸ்திவாரம் மாதிரி, தூண் மாதிரி, எத்தனை மந்திரிகள், எத்தனை இலாக்காக்கள் இருக்கின்றனவோ அத்தனை இலாக்காக்களையும் அவர்கள்தான் கிராமத்திலிருந்து கவனித்துக்கொள்கிறார்கள். அவர்கள் பார்க்காதது ஒன்றுகூட பாக்கியிருக்காது. அவர்களுக்கு ஓய்வு கிடையாது. அப்படி கிராமத்திலே எல்லாத் துறைகளையும் கண்காணித்து, கிராமத்திற்கும். மக்களுக்கும், சர்க்காருக்கும் நல்ல பெயரைத் தேடித் தந்து கொண்டிருக்கிற இந்த கிராம ஊழியர்களுக்கு, கிராம சிப்பந்திகளுக்கு, கிராம அதிகாரிகளுக்கு நிவாரணமில்லை. ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுக்கிற சம்பளமானது ஓரளவிலே உபகாரச் சம்பளம் மாதிரி கொடுக்கப்பட்டு



வருகிறது. அதே மாதிரி விலை உயர்வுப் படி கொஞ்சம் தான். அவர்களுக்கு அதிகமாகத் தருவதில்லை. மற்றப்படி சலுகைகள் இருக்கின்றன என்பது உண்மை தான். இருந்தாலும், விலைவாசி மற்றவர்களுக்கு ஏறுகிற மாதிரி அவர்களுக்கும் ஏறுகிறது. அந்தக் காலத்திலே கிராம அதிகாரிகள் வேலை பார்த்தால், அவர்களுக்குச் சௌகரியம் இருந்தது. அவர்கள் பெரிய மனிதர்களாகவோ, பெரிய நிலச்சுவாந்தார்களாகவோ, மொத்தத்தில் பணம் படைத்தவர்களாகவோ இருந்தார்கள். அவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களாக இருந்தார்கள். அவர்கள் கீழே கணக்குப் பிள்ளை, தண்டல்காரன் போன்றவர்கள் இருந்தார்கள். இப்போது அவர்களுக்கு என்ன வேலை என்பதைப் பற்றி இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். கிராம அதிகாரிகளுக்கு என்ன வேலை என்றால், மணியக்காரர் நில வரி வசூல் பண்ணவேண்டும், சட்ட, ஒழுங்கைப் பாதுகாத்து வரவேண்டும். குற்றத் தடுப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும். குற்றம் சம்பந்தமான தகவல்களை மேஜிஸ்ட்ரேட், போலீஸ்காரர்களுக்குக் கொடுக்க வேண்டும். பிறப்பு, இறப்பு இவைகளை இவர்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும். இதைத் தவிர்த்து, இருப்புப் பாதையைப் பாதுகாத்தல், அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களைப் பாதுகாத்துக் கண்காணித்தல், நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் இப்படிப்பட்ட பணிகள் தவிர்த்து, அவசர காலப் பணிகளில் ஈடுபட்டு, நம் சர்க்காருக்கு மட்டுமல்லாமல், மத்திய சர்க்காருக்கும் எல்லாப் பணிகளையும் செய்து வருகிறார்கள். கிராமத்தினுடைய சகல கணக்குகளும் அவர்கள் கையில் இருக்கின்றன. அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் இருக்கிறது. இவர்களுக்கு, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஓய்வே இல்லை. காலையில் எழுந்ததிலிருந்து இரவு வரை சர்க்காருக்கு அவர்கள் வேலை தேவையாக இருக்கிறது. ஏதாவது விவரம் சர்க்காருக்கு அவசரமாக இரவு தேவைப்படுகிறதென்றால், அவர்களிடம் தான் கேட்கவேண்டியிருக்கிறது. அப்படி கிராமத்தைப் பாதுகாத்து, சர்க்காருக்குத் தூண் மாதிரி இருக்கிற உத்தியோகஸ்தர்களுக்கு இதிலே எந்தவிதமான உயர்வும் காணோம். ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, தமாஷா வரி பல கட்டமாக இருந்ததை, ஒருமைப்படுத்த வேண்டுமென்று செய்திருக்கிறார்கள். நாம் சந்தோஷப்படலாம். ஆனால் நகராட்சி, ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளுக்கு இதனால் பாதகம் விளையுமா என்று தெரியவில்லை. இப்போதிருக்கிற வருமானத்திற்கு எந்த விதமான குறைவும் ஏற்படாமல் இருந்தால் நல்லது. அது [illegible] மாதிரி இருக்கும். இந்த வரி வந்ததற்கப்புறம் நகராட்சிகளுக்கு, [illegible] ஸ்தாபனங்களுக்கு வேறு வருவாய் வருகிறதோ இல்லையோ

[1974 மார்ச் 12

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நகராட்சியில் முன்னாள் தலைவராக இருந்து பழக்கப்பட்டவன் என்ற முறையில் ஒரு விவரத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்பாயின்ட்மென்ட் கமிட்டி வைத்து, வேலைக்கு நியமிப்பது என்பது ஒன்று. என்ன நடந்தது என்று தெரியாது. யூகித்துக் கேட்கிறேன். அப்பாயின்ட்மென்ட் கமிட்டி வைக்காமல், எமர்ஜன்சி அப்பாயின்ட்மென்டாக இருக்குமானால், ஆணையாளரே நியமித்து, நகராட்சியினுடைய ஒப்புதலுக்கு வைக்கலாமென்று சட்டத்தில் பிரிவுகள் இருக்கின்றன. அதை திரு. தீக்ஷிதர் அவர்கள் பார்த்திருப்பாரென்று எண்ணுகிறேன். அப்படி வைக்கப்பட்டதாவென்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அமைச்சரவர்கள் திருவண்ணாமலையில் பல வருஷங்கள் நகராட்சித் தலைவராகப் பணியாற்றியிருக்கிறார்கள். நானும் நகராட்சித் தலைவராக 10 வருஷமாகப் பணியாற்றியிருக்கிறேன். 24 வருஷங்கள் மெம்பராக இருந்திருக்கிறேன். தலைவராக இருந்ததைவிட மெம்பராக இருந்து அதிக அனுபவம் பெற்றிருக்கிறேன். இந்தக் குற்றச்சாட்டைக் கொண்டுவரும்போது, ஜாக்கிரதையாகத்தான் கொண்டுவருவேன். விதிகளை பை-பாஸ் பண்ணிவிட்டார் கமிஷனர். அப்பாயின்ட்மென்ட் கமிட்டிக்குப் போகிற வாய்ப்புள்ள வேலை அது. அந்த வேலையைத்தான் . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்பாயின்ட்மென்ட் கமிட்டியைக் கூட்டிப் போட வேண்டுமென்றாலும், எமர்ஜன்சியாக இருந்தால் நகராட்சி ஆணையாளரே நியமித்துவிட்டு, நகரசபை ஒப்புதலுக்கு வைக்கலாம். நகரசபை ஒப்புதல் கொடுக்கும் வரையில் அவர் டெம்பரரியாகக் கருதப்படுவார். ஒப்புதல் கொடுக்காவிட்டால், வேறுவிதமாக இருக்கும். ஆணையாளர் 30 நாட்களுக்குள் அதை நகரசபையின் ஒப்புதலுக்கு வைக்க வேண்டும். அப்படி வைத்திருக்கிறாரா, இல்லையா என்று முழு விவரம் தெரியாமல் சொன்னால், எப்படி நடந்ததென்று போடி சுருளிமணியைத்தான் கேட்க வேண்டும். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இங்கில்லை. அவர் வந்தால் என்ன சொல்வாரோ தெரியவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அமைச்சரவர்கள் வந்தாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். அவர்களிடத்தில் சொல்ல வேண்டுமென்றுதான் வந்தேன். அந்த போடிநாயக்கனூர் அக்கிரமம் ஜனநாயகத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. சேர்மனுக்குப் பவர் கிடையாது. 'பனிஷ்மென்ட், டிரான்ஸ்பர், பிராசிக்யூஷன்'—இந்த மூன்றும் அவர்கள் கையில் இருக்கிறது. கொடுத்த 'பவர்'-ஐ உபயோகிக்கலாம். அப்பாயின்ட்மென்டுக்கு உட்பட்ட



1974 மார்ச் 12] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

வேலை எமர்ஜன்சியாக இருந்தால், அப்பாயின்ட் செய்யலாம் என்றால், யுத்தமா வந்துவிட்டது நாட்டிலே இப்போது. இது ஹைக்கோர்ட்டுக்குப் போன விஷயம். மூடி வைக்கிற விஷயமல்ல. இதிலே ஒளிவு மறைவு இல்லை. உயர் நீதி மன்றத்திலே ரிட் போட்டுவிட்டார். அதை எடுத்து வந்து பார்த்தேன். கமிஷனர் எந்தவிதமான பைலையும் சேர்மனிடம் காண்பிப்பதில்லை. அதைப் பல முறை சொல்லியிருக்கிறார்கள். ஸ்தல ஸதாபன மந்திரி, அந்தத் துறைச் செயலாளர், இயக்குநர் எல்லோரிடமும் சொல்லியிருக்கிறார்கள். எந்தவித மான பரிகாரமும் இல்லை. இதுவரை பரிகாரம் கிடைக்கவில்லை என்று கடைசியாக உயர்நீதி மன்றத்தில் நியாயம் கிடைக்குமென்ற அபிப்பிராயத்தில் ரிட் போட்டிருக்கிறார். இன்றைக்கு நமது மாநிலத்தில் நகராட்சிகள் நிறைய இருக்கின்றன. அவற்றிலே கோடிக்கணக்கான ஜனங்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமென்றால், ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற உறுப்பினர்களுக்கு நல்ல வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இரண்டு சம்பவங்களை நான் சொல்லியிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட் உரையிலே ஒரு கோடி சொச்சம் அளவுக்கு நகராட்சி ரோடுகளுக்கு நிதி ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறேன். நான் பல வருஷங்களாக நகராட்சித் தலைவராக இருக்கிறேன். இதே பணம்தான் எப்போதும் ஒதுக்கப்படுகிறது. இப்போது 10 கோடி ரூபாய் ஒதுக்கினாலும் போதாது. பல வருஷங்களாக ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்குகிறார்கள். இப்போது சர்க்கார் பஸ்கள் ஏக்கச்சக்கமாக ஓடுகின்றன. டவுன் பஸ்களானாலும் சரி, ரூரல் பஸ்களானாலும் சரி, சர்க்கார் பஸ்கள் நிறைய ஓடுகின்றன. அந்த பஸ்கள் முனிசிபாலிடி ரோடுகளைத் தேய்ப்பதைப் பார்த்தால், ஜனங்களின் பணத்தைத் தேய்ப்பதைப் போலிருக்கிறது. ரோடு போடுவதற்கு பண வசதி போதாது. இந்தக் காலத்தில் ஜல்லி விற்கிற விலையில்—வீடு கட்ட ஜல்லி, மற்றவைகளுக்கு ஜல்லி என்று அது உபயோகப்படுகிற நிலையில், இருக்கின்ற பணத்தைக் கொண்டு ஒரு மைலுக்கு ஒரு ரோடு போட்டால், சரியாகிவிடுகிறது. நான் எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், பஸ்கள் நிறையப் போனாலும், நகராட்சிக்கு வருமானம் கிடையாது. போக்குவரத்துத் துறை மூலமாக சர்க்காருக்கு நிறையப் பணம் கிடைக்கிறது. ஆனால் நகராட்சி ரோடுகளுக்கு ஒரு கோடியே சொச்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். யானைக்குச் சோளப்பொரி போட்டால் எப்படி இருக்கும்? அதுவும் நகராட்சிகளுக்குக் கடன். பூராவும் கடன். இப்படியிருந்தால் எந்த ரோட்டில் எந்த பஸ் போவதற்கு சாத்தியப்படும்? 10 நாளைக்கு ஒரு டயர் போடவேண்டியிருக்கும். பஸ்கள் ஓட்டையாகப் போய்க்கொண்டிருக்கும். இந்த நிலையில்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 மார்ச் 12

(பிற்பகல் 4.40)

நாம் பஸ் போக்குவரத்தைத் தேசீயமயமாக்கிவிட்டோம். ஆகவே, நாம்தான் செலவு செய்ய வேண்டும். பலவிதமான உறுப்புகள் கடகடத்துப் போனால், அரசாங்கத்திற்குத்தான் செலவு அதிகம். இம்மாதிரி நகாசபைகளில் தொல்லை அதிகமாக இருப்பதால், நகரசபை நிர்வாகத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி, போதுமான திருத்தங்களைக் கொண்டுவந்து ஜனநாயகம் வெற்றிகரமாக நடைபெறும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வரிகளை எடுத்துக்கொண்டால், பருப்புக்கு 3½ சதவிகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. பக்கத்து மாநிலங்களில் வரி கிடையாது. இப்போதிருக்கின்ற விலைவாசியைப் பார்த்தால், எதில் போய் நிற்கும் என்று சொல்ல முடியாது. பருப்புப் போட்டு சாம்பார் வைத்துச் சாப்பிட முடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, திரு. தீக்ஷிதர் அவர்கள் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார்கள். ஆந்திராவில் நெல்லுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வருமானம் தான் பெரிய வருமானம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அடுத்தபடியாக, அடுப்புக் கரிக்கு 5 சதவிகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. அடுப்புக் கரியை யார் உபயோகப் படுத்துகிறார்கள்? இன்றைக்கு சென்னை மாநகரில் ஒரு வீட்டை வாடகைக்குக் கேட்டோம் என்றால், வீட்டுக்குச் சொந்தக்காரர், விறகு வைத்து அடுப்பு எரிக்கக் கூடாது, விராட்டி வைத்து எரியவிடக்கூடாது என்று கண்டிஷன் எல்லாம் போடுகிறார்கள். அடுப்புக் கரி உபயோகிப்பவர்கள் சாமான்ய ஜனங்கள். பாடுபடுகிற மக்கள், மாலை 5 மணிக்கு மேல் வீட்டுக்குத் திரும்பி குச்சிகளை வைத்து அடுப்பு எரிக்கிறார்கள். பட்டணத்தில், நகரத்தில் இருக்கின்ற மக்கள்தான் அடுப்புக் கரியை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். மற்றும் கொல்லுப் பட்டரை, தங்கம் காய்ச்சுகின்ற ஆச்சாரிகள் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். சலவைத் தொழிலாளர்கள் கரியை நம்பித்தான் இஸ்திரி போடுகிறார்கள். கரண்ட் விலையைப் பார்த்தால், கிட்டே போக மாட்டேன் என்கிறார்கள். கரண்டுக்குப் போட்டிருக்கின்ற வரியைப் பார்த்தால், அதன் அருகேகூட போகாமல், அடுப்புக் கரியையே அதிகமாக நம்பி, இஸ்திரி போடுகிறார்கள். சலவைச் சட்டை போடுகிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால், அடுப்புக் கரிக்கு வரி போட்டதன் மூலம் யாருக்கு வரி போட்டோம் என்றால், சலவைத் தொழிலாளர்களுக்குத்தான் போட்டிருக்கிறோம். ஏன் இந்த வரியைத் தள்ளக்கூடாது?

[1974 மார்ச் 12 [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

இதனால் பல லட்ச ரூபாய் வருமானம் வரப்போகிறதா? சாமான்ய மக்கள் அடுப்பில் உட்கார்ந்து வெந்நீர் போடுகின்ற கரிக்கு எதற்காக வரி போட வேண்டும்?

அடுத்தபடியாக, அரிஷ்டத்திற்கு வரி போட்டிருக்கிறார்கள். அரிஷ்டத்தைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ, இல்லையோ. நான் ஆயுர்வேத ஆஸ்ரமத்திற்குப் போன் செய்து எவ்வளவு அரிஷ்டம் இருக்கிறது என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அரிஷ்டத்துக்கு வரி போட்டதன் நோக்கம் வருவாய்க்காக அல்ல. அதை தமிழ் நாட்டில் கள்ளச் சாராயமாக, போதைக்காகச் சாப்பிடுகிறார்கள் என்பதை பலர் சொல்லக் கேட்டதால் தெரியும். ஆகவே அப்படி போதைக்காக உபயோகிப்பதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் செய்யப்பட்டது. அரிஷ்டத்தையே தடுத்துவிடக் கூடாதா என்று கேட்கலாம். அந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கின்றது, நம்மிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு. தீக்ஷிதருக்குப் பரந்த மனப்பான்மை....

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. மருந்து வகைகளில் எல்லாவற்றிலும் 5 சதவிகிதம் ஸ்பிரிட் கலந்திருக்கிறது. ஓராக குடிக்கின்ற டானிக்குகளில் ஸ்பிரிட் கலந்திருக்கிறது. ஸ்பிரிட் கலக்காமல் மருந்து இருந்தால் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் திரு. தீக்ஷிதர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன், அரிஷ்டத்துக்கு வரி போட்டதை எதிர்க்கின்றாரா? நேரடியான கேள்வி கேட்கின்றேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்.** தலைவர் அவர்களே, அரிஷ்டம் இல்லாவிட்டால் ஆயுர்வேத மருந்து இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் பேசும்போது சொன்னேன். அரிஷ்டத்தைக் குடித்து பழக்கமோ, புரிந்து கொள்ளவோ வாய்ப்பு எனக்கு இல்லை. பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அரிஷ்டம் தவறாக உபயோகப்படுத்தப்படுகின்றது, போதைப் பொருளாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் திரு. தீக்ஷிதர் அவர்கள் அரிஷ்டத்தை மருந்து என்கிறாரா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, நான் விளக்கம் சொல்லுகிறேன். பிறகு மற்றவர்கள் கருத்துச் சொல்லலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1974 மார்ச் 12

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திரு. தீக்ஷிதர் அரிஷ்டத்தில் அனுபவ மிக்கவர் என்பது எனக்குத் தெரியாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, போதைப் பொருள் தான் அமைச்சருக்குத் தெரிந்திருக்கிறது. அரிஷ்டம் என்பது மருந்து வகைகளில் இருக்கிறது. அந்த மருந்து வகைகளுக்கு வரி போடக்கூடாது என்று சொல்லுகிறேன். போதைப் பொருளுக்குத் தான் போட்டிருக்கிறோம் என்றால், ஒத்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அரிஷ்டம் என்றால் போதை இல்லையா? அதில் போதை இருக்கின்றதா, இல்லையா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அரிஷ்டத்துக்கு வரி போட்டிருப்பது நல்ல நோக்கத்தோடு அல்ல. ஆயுர்வேதத்தை ஒழித்துவிட வேண்டும் என்று அமைச்சர் கருதுகிறார் போலும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தீக்ஷிதர் அவர்களுக்கு இருக்கும் பரந்த மனத்தைப் புரிந்துகொண்டேன். ஆயுர்வேதம் வேண்டாம் என்று முடிவு செய்து, வரி போட்டிருப்பதாக உள்நோக்கம் கற்பித்துக்கொண்டு போவது சரியில்லை. பேரவையில் இதைப்பற்றிச் சொல்லப்பட்டது. 10 சதவிகிதத்துக்குக் குறைவாக இருப்பதற்கு வரி இருக்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் தெரிவித்தார்கள். வேறு ஏதோ குறுகிய மனப்பான்மையோடு செய்துவிட்டோம் என்று கற்பனை செய்துகொள்ள வேண்டாம். ஆயுர்வேதத்தின் மேல் எங்களுக்கு வெறுப்பு இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஆயுர்வேதத்தில் நம்பிக்கை உண்டு. நாங்கள் ஆயுர்வேதத்தை வெறுக்கிறோம் என்று தவறாகக் கருத வேண்டாம். போதைப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று முயற்சிக்கிறோம். மேற்கொண்டு விவாம் வேண்டுமென்றால், அதுபற்றிச் சட்ட முன்வடிவு வரும்போது விவாதிக்கலாம்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆயுர்வேத மருந்தில் திராட்சாரிஷ்டம், தசமூலாரிஷ்டம் என்ற மருந்துப் பொருட்கள் விற்கிறார்கள். அந்த அரிஷ்டங்களையும் கட்டுப்படுத்துமா என்பதைத் தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1974 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதுபற்றி 'பில்' தயாரித்து வரும் போது யோசிக்கலாம், பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. தீக்ஷிதர் இந்த வரி போட்டதற்கு உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. போதைப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று நாங்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சியை திரு. தீக்ஷிதர் ஆதரிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அதற்கு வேறுவிதமான உள்நோக்கம் கூறுகிறார்; வேறுவிதமான விளக்கம் கொடுக்கிறார். அதைப்பற்றி 'பில்' வரும் போது பரிசீலிக்கலாம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. சொல்லமாட்டேன். அரிஷ்டம் என்பது வேறு. மது என்பது வேறு. அரிஷ்டம் என்ற வடமொழிச் சொல்லின் அர்த்தத்தை அனர்த்தமாக ஆக்கக்கூடாது.

(பிற்பகல் 4.50)

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அந்த அரிஷ்டத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் பயன்படுத்துகிறபோது, 10 சதவிகிதம் அல்லது 9 சதவிகிதம் என்று ஒரு கணக்கு வைத்து அதற்குமேல் போதைப் பொருள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆங்கில முறை மருத்துவத்திலே மார்க்கெட்டில் 5 சதவிகிதம், 6 சதவிகிதம், 7 சதவிகிதம் என்று விளக்கம் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு நாட்டிலே அதிகமாக நடமாடுகிற அரிஷ்டம் இந்த வகையான அரிஷ்டம் அல்ல. அதிலே 30 சதவிகிதம், 40 சதவிகிதம் வரையில் மயக்கம் தரக்கூடிய போதைப் பொருள் என்று கூறுகிறார்கள். அதை போதைக்காகவே பயன்படுத்துகிற காரணத்தால் வரி போடுவதைத் தவிர அந்த போதை தெளிய வேறு வழியில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** இதற்கு மறுபடியும் விளக்கம் சொல்லிக் கொண்டே போனால் தலைவர் அவர்கள் உனக்கு நேரம் ஆகிவிட்டது என்பார்கள். இந்த பட்ஜெட்டிலே எவ்வளவோ எதிர்பார்த்தோம். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏதாவது கொள்கையை வெளியிடும் என்று நினைத்தோம். ஆனால் எந்த அறிவிப்பும் இல்லை. ஏழை மக்களுக்குச் சாதகமாக, மத்தியதர வகுப்பினருக்குச் சாதகமாக எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. நமது முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிவந்தார்கள். சினிமா உற்பத்தி செய்யும் இடம், விநியோகம் செய்யும் ஸ்தாபனம், தியேட்டர்கள் ஆகியவற்றையெல்லாம் கையகப்படுத்தப் போகிறோம், நாட்டுடைமை ஆக்கப் போகிறோம் என்றெல்லாம் சொல்லிவந்தார்களே, அவற்றையெல்லாம் இந்த பட்ஜெட்டிலே செய்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இல்லை. பற்றாக்குறை

பட்ஜெட்டாக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் வரியைப் போடுகிறோம் என்ற அளவிலேதான் இந்த பட்ஜெட் இருக்கிறது. இப்பொழுது மாட்டுத் தீவனத்திற்கு வரி இல்லை என்று சொல்லியிருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால் பிண்ணாக்குக்கு 3½ சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். பிண்ணாக்கு மாட்டுக்குத் தீவனமாகப் பயன்படுகிறது. கடலைப் பிண்ணாக்கு முக்கியமான உணவுப் பொருள் மாட்டுக்கு. அதனுடைய விலை முன்பு 35 ரூபாயாக இருந்தது, 135 ரூபாய் வரை ஏறி, இன்றைக்கு கட்டுப்பாடுகள் ஏற்படுத்திய தால், 95 ரூபாய் என்ற அளவுக்கு இறங்கியிருக்கிறது. பிண்ணாக்கு வகைகள் யாவும் எருமை மாடுகள், பசு மாடுகள் ஆகியவற்றுக்கு உணவாகப் பயன்படுகின்றன. பிண்ணாக்கு பாரம் ஒன்று 500 ரூபாய் விற்கக்கூடிய இந்தக் காலத்தில் எந்த விவசாயி பிண்ணாக்கு உரம்போட்டு சாகுபடி செய்ய முடியும்? எனவே எல்லாப் பிண்ணாக்கையும் மாட்டுத் தீவனமாகத்தான் உபயோகிக்க முடியும். பிண்ணாக்கிலே பல வகைகள் இருக்கின்றன, கொட்டை முத்து பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு, கடலைப் பிண்ணாக்கு என்று. தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டால், இலுப்பைப் பிண்ணாக்கு போட்டுத் தேய்த்தால் போய்விடும். (குறுக்கீடு) ஆகவே பிண்ணாக்குக்கு வரி போடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயக முறையில் எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. திரு. கணபதி அவர்கள் ஒரு கேள்வி போட்டு இரண்டு வருஷங்கள் ஆகியும் பதில் வரவில்லை என்று சொன்னார்கள். நான் ஆர்டிஃபிஷியல் கிட்னியைப்பற்றிக் கேள்வி போட்டு இரண்டரை வருஷங்கள் ஆகி, இன்றைக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு பதில் சொல்வதற்கு என்ன வெகுதூரம் செல்ல வேண்டுமா? ஏன் இவ்வளவு காலதாமதம்? ஜெனரல் ஆஸ்பத்திரி இந்த இடத்திலிருந்து மிக அருகாமையில், இரண்டு பர்லாங் தூரத்தில் இருக்கிறது. அங்கிருந்து பதில் வர இவ்வளவு நாட்களா? நேராகப் பார்க்கலாமே.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எந்த ஒரு கேள்வியும் இந்த அவையிலே வருவது என்றால், அது முறைப்படி பல்வேறு இலாகா தலைவர்கள் மூலமாகத்தான் வருகிறது. அப்படி வருகிறபோது அலுவலகத்திலே இருக்கிற குறிப்புகளைப் பார்த்துத்தான் பதில் எழுத வேண்டியிருக்கிறது. ஆகவே குறிப்புகள் எழுதி திருப்பி வருகிறபோது மறுபடியும் மூன்று நான்கு துறைகளுக்குப் போய்விட்டு வருகிறது. நேராகப் போய்ப் பார்க்கலாம் என்றால், சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் போயிருக்கலாம், அமைச்சரும் போயிருக்கலாம். அவர்களும் போகக்கூடிய இடம், நானும் போகக்கூடிய இடந்தான்





**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அப்படியென்றால் இரண்டு மூன்று மாதத்தில் பதில் சொல்லியிருக்கலாமே. எங்களுக்கு பதவிக் காலம் 6 வருஷம் இருக்கிறது என்றால், பதில் வர இரண்டு வருஷம் ஆகிறது என்றால், கேள்வி போடுவதை நாங்கள் இரண்டு வருஷங்களுக்கு முன்பே நிறுத்திவிட வேண்டியதுதான்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அங்கத்தினர் அவர்களுடைய பதவிக் காலம் முடிந்தாலும், இந்த அவை இருக்கும். வருகிறவர்களுக்கு மிச்ச கேள்வி இருக்கலாம். இடையிலே நிறுத்திக்கொள்வது இந்த அவையின் தொடர்தலுக்கு இடையூறாகும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்த அவைக் கூட்டத் தொடர் முடிந்தாலும், ஜனவரியிலே மறுபடியும் கேள்விகளுக்கு உயிர் வந்துவிடுகிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** இப்படி பிண்ணாக்கு இல்லாமல் மாடுகள் எல்லாம் வருத்தப்பட்டனவோ என்னவோ, தமிழ் நாட்டை விட்டே இப்பொழுது மாடுகள் கேரளாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தமிழ் நாட்டிலே உள்ள மாடுகளையெல்லாம் இப்படி வெளியே கொண்டுபோய் விட்டால், என்ன ஆவது? தமிழ் நாட்டிலே மாடுகள் விலை மிக உயர்ந்து விட்டது. முன்பு 200 ரூபாய்க்கு விற்ற மாடுகள், இப்பொழுது 2,000 ரூபாய்க்கு விற்கின்றன. முன்பு 400 ரூபாய்க்கு விற்றவை, இப்பொழுது 4,000 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. இப்பொழுது நில உச்சவரம்புச் சட்டத்தினால் 15 ஏக்கராவுக்கு மேல் ஒரு விவசாயி நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது. அந்த நிலத்தை டிராக்டர் வைத்து உழ முடியுமா? குறைந்த பட்சம் ஒருவனுக்கு 25 ஏக்கரா இருந்தால்தான், டிராக்டர் வைத்து உழ முடியும். இப்பொழுது டீசல் விலையும் ஏறிவிட்டது. ஸ்பேர் பார்ட்டுகள் விலை மிக அதிகம். ஆகவே மாடுகளை வைத்துத்தான் உழ வேண்டும். ஆனால் மாடு விலை ஒன்றுக்கு நான்கு மடங்காக ஏறிவிட்டது. காரணம் மாடுகள் எல்லாம் கேரளாவுக்குப் போகின்றன. இப்படிப் போவதைத் தடுக்க முடியுமோ, முடியாதோ, தெரியவில்லை. ஆனால் இப்படியே போய்க்கொண்டிருந்தால், இன்னும் பல வருஷத்திலே நம்முடைய பால் உற்பத்தி பாதிக்கப்படும். நாம் பால் உற்பத்தி செய்வதிலே சாதனை சாதனை என்று சொல்வதெல்லாம், வேதனையாகத்தான் முடியும். கிராமத்திலே இருக்கிற கால்நடைகளையெல்லாம் இப்படி வாங்கிக் கொண்டு போய்விட்டால், கால்நடைகளே இருக்காது. இதனால் பால் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும். விவசாயமும் கண்டிப்பாக பாதிக்கப்படும். ஆகவே இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 மார்ச் 12

அடுத்தபடியாக ஸ்டேட் பஸ் ஸ்டாண்டில் நடக்கும் திருட்டுக்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாகர்கோயிலிலிருந்து சென்னைக்கு வருவதென்றால், திருச்சி, விழுப்புரம் போன்ற இடங்களில் இறங்கி வரும்போது, பயணிகள் கொண்டுவரும் சாமான்களை வண்டியில் வைத்துவிட்டுத்தான் இறங்கவேண்டியிருக்கிறது. அப்பொழுது அந்தச் சாமான்கள் திருடுபோய்விடுகின்றன. சமீபத்திலே திருச்சி ஸ்டேட் பஸ் ஸ்டாண்டிலே ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த ரிப்போர்ட் என்னிடம் இருக்கிறது. 4—3—1974-லே 546 எண் பஸ் இரவு அங்கு வந்தபோது, அதில் இருந்த பயணி ஒருவருடைய பொருள் திருட்டுப் போய் விட்டது. இனிமேல் பஸ்ஸிலே பிரயாணம் செய்ய வேண்டுமென்றால், 10 இடங்களிலே பணத்தை வைத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும் போல் இருக்கிறது. எனவே இந்த மாதிரி பஸ் நிலயங்களில் ஒரு காவலரை, ஒரு அட்டென்டர் மாதிரி, போட்டால், இதுமாதிரி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம். பயணம் செய்பவர்களுக்கு அப்பொழுதுதான் பாதுகாப்பு இருக்கும். இல்லாவிட்டால் எந்தவிதப் பாதுகாப்பும் இருக்காது.

(பிற்பகல் 5.00)

அடுத்தபடியாக, கூட்டுறவைப்பற்றி, திரு. பலராமன் அவர்கள் சொல்லும் போது எங்கள் ஊர் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பலவிதமாகக் குறிப்பிட்டார்கள். கோயம்புத்தூரில் இருக்கும் சிந்தாமணி கூட்டுறவு ஸ்தாபனத்தைத் தவிர மற்ற எல்லாக் கூட்டுறவு ஸ்தாபனங்களும் நஷ்டத்தில் தான் இயங்குகின்றன என்றார். அந்தக் காலத்திலே நீங்கள் எல்லாம் கூடத்தான் தலைவர்களாக இருந்தீர்கள் என்றார். அவர்கள் தலைவர்களாக வந்ததற்கும், இப்பொழுது வருவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஜனநாயக முறையிலே அவர்கள் வந்தார்கள். நெடும்பலம் சாமியப்ப முதலியார், பூண்டி வாண்டையார், திருச்சி பரமசிவம் பிள்ளை, முத்துக்குமாரசாமிப் பிள்ளை போன்றவர்கள் தலைவர்களாக வந்தார்கள் என்றால், அந்தக் காலத்திலே அவர்கள் வந்ததற்கும், இந்தக் காலத்திலே வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அந்தக் காலத்திலே தலைவர்களாக வந்தார்கள் என்றால், தங்களுடைய சொந்தப் பணத்தை டெப்பாசிட்டாகப் போட்டு அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களை உருவாக்கினார்கள். அப்போது தலைவராக வந்தவர்கள் எல்லாம் தங்கள் சொந்த முயற்சியில், தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்கள் சொந்தப் பணத்தைப் போட்டு அவற்றை முன்னுக்குக் கொண்டு வந்தார்கள். இப்போதுள்ள தலைவர்கள் எல்லாம் அப்படி வருவது இல்லை. 'நாமினேஷன்' முறையில் புகுத்தப்பட்டு வந்தவர்கள். கட்சிக்கு வேண்டியவர்களாக இருந்தால், நாலு பேர் ஐந்து பேர் என்று புகுத்தப்பட்டு விடுகின்றார்கள். இப்படிப் புகுத்தப்



1974 மார்ச் 12] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

படும் முறையினால் நல்லது நடப்பதில்லை. நல்லது நடந்தால் பரவாயில்லை. பல இடங்களிலே பொதுமக்களுடைய பணம் 10 லட்சம் 15 லட்சம் என்று நஷ்டப்படுகிறதாகத் தான் கேள்விப்படுகிறோம். ஏனென்று பார்த்தால், அவரவர்களுக்கு ஜீப், கார்கள், உல்லாச அறைகள், ஏர்கண்டிஷன் அறைகள் என்று இப்படிப் பொதுப்பணம் விரயமாக்கப்படுகிறது. இந்த ஏர்கண்டிஷன் அறைகளும் உல்லாச பங்களாக்களும் சமீபத்தில்தான் ஏற்பட்டன. இதற்கு முன்பு சாமியப்பா அவர்கள் காலத்திலேயோ பூண்டி வாண்டையார் காலத்திலேயோ திருச்சி முத்துசாமி அவர்கள் காலத்திலேயோ . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சராக இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சில கருத்துக்களுக்கு ஒரு சிறு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். பூண்டி வாண்டையார் அவர்கள் தஞ்சை செண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கின் தலைவராக இருந்தார்கள். சாமியப்பா அவர்கள் கும்பகோணம் கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கியின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் தலைவராக இருந்த காலத்திலே அந்த வங்கிகளில் எவ்வளவு லாபம் கிடைத்ததோ அதைவிட இப்போது இரண்டு மடங்கு லாபம் கிடைத்திருக்கிறது. இப்போது நாமினேஷனில் சிலரை நியமிக்கின்றார்கள் என்றால், புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ள சட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் அங்கே டைரெக்டராக இருக்க வேண்டும். பெண் டைரெக்டர் இருக்க வேண்டும் என்று பல பிரிவிலிருந்தும் பரவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே நாமினேட் பண்ணுகின்றார்கள். அந்தக் காலத்திலே ரூ. 15 லட்சத்திற்கு மேலே போகவில்லை. அதிக பட்ச லாபம். நீங்கள் இப்போது சொல்லுகின்றீர்களே, எப்படியோ நடந்து விட்டது, எப்படியோ கீழ்த்தரமானவர்கள் நுழைந்துவிட்டதாக நீங்கள் கருதிக்கொண்டு சொல்லுகின்றீர்களே, கீழ்த்தரமானவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் வரவேண்டும், அவர்கள் கட்டாயமாக டைரெக்டர்களாக இருக்க வேண்டும் என்று சட்டமே கொண்டு வந்திருக்கிறோம். இப்படி வந்தபிறகு இப்போது கிடைத்த லாபம் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சம். முன்பு சாமியப்பா அவர்கள் காலத்தில் அதிகமாகக் கிடைத்த லாபம் ரூபாய் 15 லட்சம்தான். இப்போது நீங்கள் புரிந்துகொள்ளுவீர்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டுறவு பாங்கிகளைப்பற்றிச் சொல்லுகின்றார்கள். ஆனால் நான் சொல்லுவது கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில், அதாவது பல இடங்களிலுள்ள 'சூப்பர் மார்க்கெட்டுகளில்' . . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். ஆனால் அவர், திரு. தீக்ஷிதர் அவர்களுக்குள்ள வருத்தம் என்ன என்று புரிந்துகொள்ளாமல் அதைச் சொன்னார் என்று நான் நினைக்கிறேன். திரு. தீக்ஷிதருக்குள்ள வருத்தம் எல்லாம் பஞ்சை பாரி அன்னக் காவடிகள் எல்லாம் பெரும் பணக்காரர்களுக்கே உரிய இடங்களிலே அமருவதா ? 'பணக்காரர்களே வருகின்றதை நீங்கள் ஏன் தடுக்க வேண்டும்' என்பதுதான் அவருடைய கொள்கை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, ஏழை பணக்காரன் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம் அந்தக் காலத்திலே இருந்த முறை மாறி, இப்போது எல்லாவற்றுக்கும் நாமினேஷன் என்று வந்து இதிலே கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்கின்றார்கள் என்பதைத்தான் சொல்லுகிறேன் . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தரக்கூடாது. அவருடைய ஆட்சேபணையெல்லாம் பணக்காரர்களே இது வரையில் இருந்து வந்த இடத்தில் இந்தப் பஞ்சைகள் எப்படிப் போகலாம் என்பதுதான். ஜனநாயக முறை உள்ள இந்த நாட்டிலே நிச்சயமாக அவர்களை மேலுக்குக் கொண்டுவருவதுதான் இந்த அரசின் நோக்கம். அப்படிப்பட்ட பஞ்சைகளுக்காகத்தான் இந்த அரசு இருக்கின்றது என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொன்னதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சிறப்பு சூப்பர் மார்க்கெட்டுகளிலே, கோயம்புத்தூரிலுள்ள ஒன்றைத் தவிர வேறு எல்லா சூப்பர் மார்க்கெட்டுகளிலும் பெருத்த நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சர் அவர்களே குறிப்பிட்டார்கள், திரு. எல். பலராமன் அவர்கள் பேசியதற்கு பதிலாக, அந்தக் கருத்தைத்தான் நான் சொல்லி இப்படி நஷ்டம் ஏற்படாமல் பார்க்க வேண்டாமா . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரு. பலராமன் பேசியிருந்தால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அவர் எதைக்கொண்டு அப்படிப் பேசினார்களோ தெரியவில்லை. பொதுவாக என் மாவட்டம்பற்றி எனக்கு நன்கு தெரியும். எங்கள் மாவட்டம்பற்றி திரு. தீக்ஷிதர் அவர்கள் பேச வேண்டாம். . . . பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. தவறான தகவல்களைக் கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணியை அடித்தார்)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அடுத்து, எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு முக்கியமான விஷயம்பற்றிச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அரை மணி நேரம் என்று சொன்னீர்கள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாகப் பேசுகின்றீர்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : விவசாயிகளைப்பற்றி முக்கியமாக ஒன்றைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : (மணியை அடித்து) திரு. சி. வி. இராஜ கோபால்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : ஒரே ஒரு நிமிஷம். நீங்கள் இதைத் தயவு செய்து கொடுக்க வேண்டும். குடிமராமத்து வாய்க்கால்களைப்பற்றி மட்டும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இதுவரையில் குடிமராமத்து வாய்க்கால்களில் கிராமங்களிலே எப்படி அவர்களுக்கு வருமானம் வந்தது என்று சொன்னால். வரப்புகளில் உள்ள பில்லை எடுத்து சீரிய முறையில் அவற்றைச் செப்பனிட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது தஞ்சை மாவட்டத்தில் இது சரியாக நடைபெறவில்லை என்று அதை பி.டபிள்யூ.டி. வேலையாக எடுத்துக் கொண்டார்கள். அந்த வாய்க்கால்களிலே பாசிக்குத்தி ஏலத்திற்கு விட்டு அதில் எங்களுக்கு அதாவது ஊராட்சி மன்றங்களுக்கு நாலு பங்கும் விவசாயிகளுக்கு மூன்று பங்கும் என்று . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மறுபடியும் திரு. தீக்ஷிதர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலாகவே கொடுக்கின்றார்கள். தவறுதலாகப் பேசுவது என்ற முடிவிற்கே வந்துகொண்டிருக்கின்றார் என்று நினைக்கிறேன். முன்பு குடிமராமத்துக்கு என்ன ரேஷியோ இருந்தது, இப்போது மாற்றப்பட்ட பிறகு என்ன ரேஷியோ இருக்கின்றது என்பதை அவர் தெரிந்துகொண்டிருந்தால், இதைக் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். தஞ்சாவூரில் அப்படி இருக்கலாம் . . . .

திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : கிராமங்களில் பாசிக்குத்தி மீன் குத்தகை என்று இருப்பதாவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? காரணம் நான் சொல்வதெல்லாம்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் கிராமங்களில் இருந்ததில்லை. அவர் பழக்கப்பட்டவர். அவருக்கு இப்போதுள்ள ரேஷியோ என்ன என்று தெரியுமா என்றுதான் கேட்கிறேன். பழைய ரேஷியோ 1 : 2 என்று இருந்தது இப்போது 4 : 3. விவசாயத்தைப்பற்றித் தெரியாமல் பேசக் கூடாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** நான் வெகு நாட்களாக மணியக்காரர் வேலை பார்த்திருக்கிறேன். 22 வருஷமாக கிராமங்களிலுள்ள நடைமுறைகளைப் பார்த்திருக்கிறேன். அது என்ன என்று எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விஷயத்தை விட்டுவிடுகின்றீர்கள். எதையோ பேசுகின்றீர்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** விவசாயிகளுக்கு தீர்வை சற்று ஏறக் குறைய நாலு மடங்குக்கு ஏறிவிட்டது. அறிக்கையிலேயே இருக்கின்றது. அதையும் கொண்டுவந்திருக்கிறேன். பத்து ரூபாய் தீர்வை என்று இருந்தது இப்போது ரூ. 49 என்று ஏறியிருக்கிறது. விவசாயிகள் எப்படிப் பிழைக்க முடியும் இப்படி ஏறிக்கொண்டே போனால்? இதை விட்டுவிட வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, திரு. தீக்ஷிதர் அவர்கள் கொஞ்சம் ஒரு நிமிஷம் உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் பேசும்போது, திரு. தீக்ஷிதர் அவர்களைப் பார்த்து * என்று சொன்னேன். அந்த வார்த்தைகளைத் தயவுசெய்து இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விட வேண்டும் என்று தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படித் தவறான வார்த்தைகளைச் சொன்னதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, முன்பு குடிமராமத்து 1:2 என்று இருந்தது. இதனால் ஏற்பட்ட பளுவினை, விவசாயிகள் மீதுள்ள பளுவினைக் குறைப்பதற்காக அதை 4 : 3 என்று மாற்ற அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதை முதலில் தஞ்சையில் பரீட்சார்த்தமாகப் பார்த்து, அதை விவசாயிகள் வரவேற்கின்றனர் என்று அறிந்து, இப்போது அதை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தலாம் என்று அரசு முயற்சி எடுத்தது.

**திரு. கே. ராஜாராம் :** இதில் விவசாயிகளுடைய பங்கு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசாங்கத்திற்கு நான்கு, விவசாயிகளுக்கு மூன்று.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியினை சபையின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்க உத்தரவிடுகின்றேன்.





(மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். கணபதி தலைமை)

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட நிதி நிலை அறிக்கை மிக நெருக்கடியான காலத்தில், பொருளாதாரம் ஸ்திரமற்ற தன்மையில் உள்ள நேரத்தில், நோட்டுகள் ஏராளமாக அலைந்துகொண்டிருக்கிற நிலைமையில், பொருளாதார நிலைமை கட்டுக்கடங்காத நிலையில் போய்க்கொண்டிருக்கிற நேரத்தில் மிக ஆழ்ந்து சிந்தித்து, நாட்டு மக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று சிந்தித்து, அடித்தளத்தில் இருக்கிற மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்குப் பக்குவமான நிலைமையை உண்டாக்கும் வகையில் அமைந்திருக்கிறது என்பது படித்துப் பார்க்கிற ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரியும். முன்னாலே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் கூறினார்கள். அவர் தம் சொந்தக் கருத்தை மிக வேடிக்கையாகவே கூறினார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களிலே சில முரண்பட்ட கருத்துக்கள் இருந்தாலும் அவர் பெரியவர், அனுபவம் உள்ளவர் என்ற காரணத்தினால், அதை மறுத்துப் பேசுவதாக இல்லை. ஆனால் ஒன்றை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நிதி நிலை அறிக்கையிலே பேசுவதற்கு ஒரு பாங்கு இருக்கிறது, பண்பு இருக்கிறது. நாத்திகப் பிரமுகர்கள், கடவுள் இல்லையென்று நிரூபித்திருக்கிறவர்கள் கூட, இதில் நீதி இருக்கிறது, நியாயம் இருக்கிறது, நேர்மை இருக்கிறது என்று சொல்வார்கள்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, நண்பர் திரு. ராஜகோபால் அவர்கள் நாத்திக நண்பர்கள் நிரூபித்து விட்டார்கள் என்று கூறுகிறார்கள். யார் அப்படி நிரூபித்திருக்கிறார்கள் என்று விவரம் சொல்ல முடியுமா வென்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** நிபுணர்கள் வாதத்தின் அடிப்படையில் கடவுள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கூட இது நீதி என்று ஒத்துக்கொண்டிருப்பார்கள்.

---

* * * Expunged as ordered by the Chair.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, விஞ்ஞான ரீதியாக கடவுள் இருப்பது நிரூபிக்கப்படவில்லை. கடவுள் இருக்கிறார் என்று விஞ்ஞான ரீதியாக, பரிசோதனை ரீதியாகக் காட்டப்படவில்லை. யாராலும் நிரூபிக்கப்படவில்லை அது தான் உலகத்திலே உண்மையான ஒன்று. அங்கத்தினர் அவர்கள் கடவுள் இல்லை என்று நிரூபித்திருக்கிறார்கள் என்று சொன்னது உண்மை தான் என் பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, யாருக்கும் சரியாகத் தெரியாத ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச அவையினுடைய நேரத்தை அதிக மாக எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது.

திரு. சி. வி. ராஜகோபால்: என்னுடைய கருத்து, கடவுள் இல்லையென்று சொல்பவர்கள் கூட நிதி நிலை அறிக்கையில் நீதி இருக்கிறது என்று ஒத்துக் கொள்வார்கள். ஏழை எளியவர்களுக்கு உபயோகமாக இருக்கிறது என்று அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். கடவுள் இருக்கிறாரோ இல்லையோ, நான் அதில் கவனம் செலுத்தப்போவதில்லை. இதை விட வேறு வேலை இருக்கிறது. ஆகவே அந்த விவாதத்திற்கு வரவில்லை.

வேளாண்மைத் துறையில் இந்த ஆட்சி ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்றுக்கொண்டதால் தான், குஜராத்தில் பஞ்சமிருந்தாலும், பஞ்சாபில் பஞ்சமிருந்தாலும், உணவுப் பற்றாக்குறை இருந்தாலும், இங்கே உணவு உற் பத்தி ஏராளமாக இருக்கிறது என்பதை அவையில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அறிவார்கள். இதனையே திரும்பத் திரும்ப நீ ஏன் கூறிட வேண்டுமென்று சொல்வார்களானால், இது நான் பெற்ற குழந்தை. என் னுடைய குழந்தை அழகான குழந்தை. இப்படிப்பட்ட குழந்தை பெற்றிருக் கிறேன். இந்த நாட்டிற்கு எதிர்காலத்தில் எப்படியெல்லாம் இந்தக் குழந்தை செய்யவிருக்கிறது, எப்படி பல பேர்களுக்குப் பயன்படும் என்று சொல்வது என்னுடைய பொறுப்பாகும். ஆகவே தான் இதை அதிகமாகவே நான் பாராட்டிப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லோரும் அடிக்கடி பாராட்டிப் பேசுகிறார்களே என்று சொன்னால், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்கள் செய்யாத ஒரு புதுமையான, புரட்சிகரமான திட்டத்தை இந்த மாநிலம் செய்தது. அதுதான் பசுமைப் புரட்சித் திட்டமாகும். பசுமைப் புரட்சி இல்லையென்றால், 1 படி அரிசி 5 ரூபாய், 7 ரூபாய் என்ற நிலைக்குப் போயி ருக்கும். ஒரு படி அரிசி 2 ரூபாய் அளவிற்கு எவ்வளவோ கிடைக்கிறது. அவ்வளவு உற்பத்தியை உண்டாக்கியிருக்கிறோம். வேளாண்மைத் துறையில் அவ்வளவு நன்மைகளை விவசாயிகளுக்குச் செய்திருக்கிறோம். இதற்கு முன்பு



D N74 Y211,32 N74.11732



விவசாயி அல்லல் பட்டுக் கொண்டிருந்தான். அவன் வீட்டை அடமானம் வைத்தான். பொருள்களையெல்லாம் அடமானம் வைத்தான். அவன் பணத்தை பணக்காரர்களிடத்தில் கடன் வாங்கினான். தீக்ஷிதர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது அவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இப்பொழுது நாட்டில் தடுக்கி விழுந்தால், வட்டிக்கடை மேல் தான் விழவேண்டும். கிராமங்களிலும் வட்டிக் கடை நிறைய ஏற்பட்டிருக்கிறது என்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: விவசாயிகளுக்கு லேண்ட் டெவலப்மெண்ட் பாங்க் என்று வைத்து, அதன் மூலமாக அவர்களுக்கு டிராக்டர், கிணறு வெட்டுவதற்குப் பணம், அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் வாங்க பணம் கொடுக்கப்படுகிறது. பயிர்களுக்கு பூச்சி கொல்லி மருந்து, உரம், ஐ.எம்.எல். லோன் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. இப்படி தாராளமாகச் செய்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் ஈவு இரக்கம் உள்ளவர்கள், தயாள குணம் உள்ளவர்கள் பாராட்டித்தான் தீர வேண்டும். பாராட்டுவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள் என்றால், மனித சுபாவத்திற்கு அப்பாற்பட்டு விட்டவர்களோ என்று நான் நினைக்கிறேன். தீக்ஷிதர் அவர்கள் நான் இப்படிச் சொன்னதற்கு வருத்தப்படமாட்டார்கள் என்று கருதுகிறேன். மனித சுபாவம் உள்ளவர் கள் இதைப் பாராட்டியாக வேண்டும். நல்லது அல்லாதது இருந்தால், பாராட்டாமல் தூற்றிக்கொண்டிருக்கலாம். இப்படித் தூற்றித் தூற்றித் தான் தமிழ் நாடு வாழ வேண்டிய அளவிற்கு வளராமல் டார்கெட்டை எட்டா மல் இருக்கிறது. தமிழ் நாடு டார்கெட்டை எட்டாமல் இருப்பதற்குக் காரணம் திரு. தீக்ஷிதர் போன்றவர்கள் தான் என்பதைச் சொல்லிக்கொள்கி றேன். இது மன்னிக்கக் கூடிய குற்றம் தான். மன்னிக்க முடியாத குற்ற மல்ல. அடிக்கடி எதையாவது செய்து, விதண்டாவாதமாகப் பேசிப் பழக்கப் பட்டவர்கள் இருக்கிறதனால் தமிழ் நாடு, சுறுசுறுப்பும், வளமும் இருந்தும், மிக வேகமாக வளரவில்லை.

கல்விக்காக இந்த அரசு 470 கோடி ரூபாயில் 110 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். கல்வி தெருவெல்லாம் முழங்க வேண்டும், வீடெல்லாம் முழங்க வேண்டும், மக்கள் அறியாமை போக வேண்டுமென்ற ... எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் இப்போது அவையில் இல்லை. கல்வித் துறைக்கு 110 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். இதற்கு ஒரு பாராட்டுதல் கூட வேண் டாம். ஆசிரியர்கள்பால் அவர்களுக்கு இருக்கிற ... அக்கறையைவிட ... அமைச்



63120

சர்களுக்கு அவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாக இருந்த காரணத்தினால், இருக்கிறது. இப்படி நல்ல காரியங்களைச் செய்து வரும் நேரத்தில் ஆசிரியர்களுக்கு அது இல்லை, இது இல்லை என்று குழப்புகிறார்கள். அன்று 90 ரூபாய் வாங்கிய ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர் இன்றையதினம் 210 ரூபாய் வாங்குகிறார் என்றால், இது பாராட்டுக்குரியதல்லவா? அல்லது வேறு வகையில் சொல்ல முடியுமா என்பதை உணர வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு கே. எஸ். கணபதி):** உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 90 பிளஸ் 98, 188 ரூபாய் வாங்கியவர்கள் 210 ரூபாய் வாங்குகிறார்கள். அவைக்குத் தவறான தகவல் கொடுக்க வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தகவல் தவறுதலாக இருந்தாலும், மொத்தத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியம் உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. 10, 15 ரூபாய் ஏறியிருக்கிறது. என்னால் புள்ளி விவரம் தர முடியவில்லை என்றாலும், மொத்தத்தில் ஆசிரியப் பெரு மக்களுக்கு நல்ல உயர்வான சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தனியார் பள்ளியில் இருக்கிற ஆசிரியர்களுக்கு, அவர்களை நிர்வாகிகள் கொடுமைப் படுத்தினாலும், நம்முடைய அரசு பென்ஷன் வழங்கியிருக்கிறது. இதுவரை பென்ஷன் வாங்காதவர்கள் இப்போது பென்ஷன் பெற்றிருக்கிறார்கள். ஆசிரியப் பெருமக்கள் இவ்வளவு பேசுகிறார்களே, பத்தாயிரக்கணக்கிலே புதிதாக வேலை கொடுத்திருக்கிறோமே, இதைப் பாராட்ட வேண்டாமா? ஆசிரியச் சமுதாயம் வாழ வேண்டுமென்பதற்காக நூற்றுக்கணக்கான பள்ளிக் கூடங்களைக் கட்டியிருக்கிறோமே, இவைகளை மறந்து விடலாமா? எத்தனை காரியங்களை ஆசிரியர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாகச் செய்திருக்கிறது. சில நேரங்களில் அரசுமீது எனக்கு வருத்தமும், கோபமும் வருவது வழக்கம். காரணம் இவ்வளவு செய்தும் ஆசிரியர்கள் பேசுகிறார்கள். இப்படிச் செய்கிறபோது, மத்தியில் இருக்கிற அரசு இப்போது ஒரு அப்கிரேடிங் நமக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதனால் மற்ற மாநிலங்கள் தாழ்ந்து கிடக்கின்றன. அவைகளுக்குத்தான் உதவி அதிகம், உங்களுடைய தமிழ் நாட்டு மாநிலத்திற்குக் குறைவு. காரணம் தமிழ் மாநிலம் மிக உயர்ந்திருக்கிறது என்கிறார்கள். இந்தக் காரணத்தினால் பினான்ஸ் கமிஷன் நிதி ஆசிரியர்களுக்கு இல்லை, மருத்துவத்திற்கு இல்லை என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். ஒதுக்கப்பட்ட பணத்தில் கல்விக்குத் தரவேண்டிய பணத்தை நிறுத்திக் கொண்டிருக்கிறார்களே, இதைக் கேட்பதற்கு ஆசிரியர்கள் வக்காலத்து



வாங்கிப் பேசவேண்டாமா? நாதியற்று என்று சொல்லவில்லை; கடினமான வார்த்தையைப் போட வில்லை. வழக்கமாகக் கொடுத்துக்கொண்டிருந்த பினான்ஸ் கமிஷன் தமிழ் நாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் கல்வியறிவு

(பிற்பகல் 5.20)

பெற்று விட்டார்கள், இனி கல்விக்குப் பணம் இல்லையென்று நிறுத்தியிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்காக வாதாடுகிற உண்மையான பிரதிநிதிகளாக இருப்பார்களேயானால், அந்தப் பிரதிநிதிகள் நமக்குத் தரவேண்டிய, பைனான்ஸ் கமிஷனால் நிறுத்தப்பட்ட பணத்திற்குப் போராட்டம் நடத்தியிருக்க வேண்டுமல்லவா? ஆனால் கல்வி அமைச்சரவர்கள் வீட்டுக்கு ஆசிரியர்கள் கொடி தூக்கிக்கொண்டு செல்கிறார்கள். அகப்பட்டுக்கொண்டவர் அவர்தானா? வேறு யாரும் இல்லையா? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி. அவரிடத்தில் உங்களுக்குக் கோபம் இருந்தாலும், டெரிலின் ஷர்ட், டெரிலின் பேண்ட் போட்டுக்கொண்டு, கொடி பிடித்துக்கொண்டு போவது அவ்வளவு நியாயமல்ல. ஏனென்றால் எவ்வளவோ செய்திருக்கிறோம். தரவேண்டிய பணத்தைத் தராமல் மத்திய அரசு இருக்கும்போது, அங்கே கொடி எடுத்துக் கொண்டு சென்றிருந்தால், அதை உயர்ந்த அளவுக்குப் பாராட்டியிருப்பேன். ஆசிரியர்களை உளமாறப் பாராட்டியிருப்பேன். அப்படிப்பட்ட காரியங்களில் ஆசிரியப் பெருமக்கள் தயவுகூர்ந்து இறங்க வேண்டும். எவ்வளவு பெரிய காரியங்களை நாம் செய்திருக்கின்றோம். தமிழர்களுடைய பண்பு, வரலாறு ஆகியவற்றை தமிழர்கள் எதிர்காலத்தில் மறந்துவிடக் கூடாது என்பதற்காக அழிந்துபோன காவிரிப்பூம்பட்டினத்தின் நிலைமைகள், சமுத்திரத்தில் மூழ்கி அழிந்த இலக்கியம், வரலாறுகள் அத்தனையையும் பூம்புகாரில் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். உலகத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு இப்படிப் பட்ட ஒரு அழகான கலை இருந்திருக்கிறது; கூடங்கள் இருந்திருக்கின்றன என்பதையெல்லாம் விளக்குவதற்காக அங்கே மண்டபம் கட்டுவதாக இருந்தால், கேலி செய்கிறார்கள். தமிழர்களுக்கு உணர்வு, நல்ல பண்பு, மரபு, இலக்கியம் எல்லாம் உண்டு. அது எங்கோ இடையில் தொலைந்து போய் விட்டது. அதை மறுபடியும் கொண்டுவருவதற்காகத்தான் இந்தப் பூம்புகார் மண்டபம். கட்டபொம்மன் ஒரு வீரன். அவன் வெள்ளைக்காரர்களை எதிர்த்தான். கட்டபொம்மனைக் கொள்ளைக்காரன் என்று சிலர் சொல்கிறார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. அந்நியனை எதிர்த்து, இங்கே வானம் இருக்கிறது, மழை பொழிகிறது, பூமி விளைகிறது, இவன் யார் வரி கேட்க என்று அன்று கேட்டவன் கட்டபொம்மன். வெள்ளைக்காரன் இப்போது வந்தால், இதோ பார், நீ அடிமைப்படுத்த முடியாத வீரன் இவன்தான் என்று காட்ட முடியும். அந்தப் பாரம்பரியம் தமிழர்களுக்கு உண்டு. நல்ல கலைகள் நம் நாட்டில் இருந்திருக்கின்றன.

[திரு. சி. வி. ராஜகோபால்] [1974 மார்ச் 12

வேலையில்லாத் திண்டாட்டம் நம் நாட்டில் இருக்கிறதென்று திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போக்குவதற்காகத்தான் நாம் மத்திய அரசினிடத்தில் போகிறோம். நம்மிடத்தில் என்ன இருக்கிறது? எதற் கெடுத்தாலும் நாம் அங்கே போக வேண்டும். இந்த அரசு மட்டும் கேட்ப தில்லை. எல்லோரும் கேட்கிறார்கள். ஆகவே அங்கே போகாதே, போகாதே என்றால் எப்படி? போகாதே, போகாதே என்று சொல்லி, எத்தனை நாளைக்கு இங்கே இருப்பது? அங்கே போய்த்தான், பெற வேண்டியதைப் பெற வேண்டும். எதை எடுத்துக்கொண்டாலும், இங்கே இருக்கும் வரி அங்கே போய்க்கொண்டிருக்கிறது. கடலை எண்ணெயை நாம் ஆட்டினாலும்கூட, அதற்கு வரி அங்கேதான். இங்கே புகையிலை வளர்த்தாலும், அங்கேதான் வரி. திரு. தீக்ஷிதர் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ 10 லட்சம் ரூபாய் சம்பாதித்துவிட்டால், அதில் பாதியை வரியாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைப்பற்றிக் கவலைப்படாமல், ஏழை எளியவர்களுக்கு உபயோ கப்படும் பொருள்களுக்கு வரி போடாமல் அப்படியே வைத்திருக்கிறது இந்த அரசு. 59 சாமான்களுக்கு வரி போடவில்லை. கட்டை, வளையல், இவற்றுக் கெல்லாம் குறைத்திருக்கிறார்கள். கரிக்கு வரி போட்டுவிட்டார்கள் என்று . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பலமுனை வரியை ஒரு முனை வரியாக்கி இருக்கிறோம்.

**திரு. சி .வி. ராஜகோபால் :** திரு. தீக்ஷிதர் அவர்கள் இதையெல்லாம் பார்த்து காருண்யம் காட்டியிருந்தால், பெருந்தன்மையாக இருந்திருக்கும். சலவைத் தொழிலாளர்களுக்கு இவர் ஒருவர்தான் ஈவு இரக்கம் காட்டுகிறவரா? பார்த்தாயா, பார்த்தாயா, கரண்ட் விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். கரன்ட்தானே அது, அடித்துக்கொண்டுதான் இருக்கும். அது மட்டுமல்லாமல் ரோடுகளுக்கு ஒரு கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பெரிய நகரங்களின் நிர்வாகத்தை முனிசிபாலிடிகளிடம் ஒப்படைத் திருக்கிறோம். அவர்கள் வரி விதிக்கக்கூடிய நிலையில் இருக்க முடியும். பஸ் ரோடில் ஓடுகிறது, ஓடுவதால் ரோடு தேயும் என்கிறார்கள். புதிதாக இருப்ப தற்காகவா பஸ் இருக்கிறது. ஓடினால் தேயத்தான் தேயும். நான் பையை வைத்து விட்டேன், காணவே காணோம் என்று சொன்னார்கள். அதில் 50 பேர் வருகிறார்கள். டிரைவர் இருக்கிறார், கண்டக்டர் இருக்கிறார். எல்லோரும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்கூட நல்லவராக இருக்க மாட்டாரா?

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கை பற்றிச் சொல்கிறாரா அல்லது தீக்ஷிதர் பற்றிச் சொல்கிறாரா?



1974 மார்ச் 12]

**திரு. சி. வி. ராஜகோபால் :** அதிகமான குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார் கள். வேண்டுமென்றால், திருத்தங்கள். தேசிய மயமான பிறகு பஸ்கள் மூலமாக ஏராளமாக லாபம் வருகிறது. இதற்கு முன்னால் முதலாளிகள் ஏராளமாக சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பணம் நாட்டு மக்க ளுக்குப் போக வேண்டுமென்றுதான் தேசிய மயமாக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவோ நல்ல காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே இருக்கிற எல்லா மக்களுக்கும் ஓய்வு ஊதியம் கொடுக்கும் திட்டத் தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒன்றன்பின் ஒன்றாகச் சொன்னால், ஆயிரம் இருக்கிறது. கண் திறந்து பார்த்தால்தான் தெரியும். நானே சில சமயங்களில் கண் திறந்து பார்ப்பது கிடையாது. கல்விக்காக இவ்வளவு செய்தும்கூட, என்னு டைய தாழ்மையான அபிப்பிராயம் சில கருத்துக்களை அரசுக்கு இடித்துத் தான் கூறவேண்டும் என்பதாகும். அப்படித்தான் வள்ளுவர் கூறியிருக் கிறார். இடித்தால்தான் மன்னன், இல்லையென்றால் மன்னன் தூங்குவான் என்று சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் திரு. தீக்ஷிதர் அவர்களும் இடித்து இடித்துக் கூறினார்கள். கல்விக்கு 110 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அந்தக் கல்வியின் திட்டம் எப்படி இருக்கிறதென்றால், மாண வர்கள் எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. அல்லது பி.ஏ. படித்து விடுகிறார்கள், அந்தப் படிப்புக்குப் பின் ஒரு கார்டோ அல்லது கவரோதான் எழுதத் தெரிகிறது. அதுதான் அவர்கள் தெரிந்து கொள்கிற படிப்பாக இருக்கிறது. மொத்த மாணவர்களில் 25 சதவிகிதம் அல்லது 30 சதவிகிதம் மாணவர்களுக்குத்தான் இதுபோன்ற நேரடியான படிப்பு முறை இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு தொழிற் படிப்பு முறை இருக்க வேண்டும். ஆறாவது அல்லது ஏழாவது வகுப்புவரை நேரடியான கல்வி முறை இருக்க வேண்டும். அதற்குப் பிறகு தொழில் முறைக் கல்வி இருக்க வேண்டும். கார்பென்ட்ரி, ஒயின்டிங், பிட்டிங் —இப்படி தொழில்கள் ஏராளமாக இருக்கிற காரணத்தால், நூற்றுக்கணக்கான வாலியர்களை, 14, 15 அல்லது 16 வயதான வாலிபர்களை அந்தத் தொழிலில் ஈடு படுத்தினால், அவர்களுடைய கான்சன்டிரேஷன் அதில் இருக்கும். இவ்வளவு பேசுகிற ஆசிரியப் பெருமக்கள் 4½ மணி ஆகிவிட்டால், பள்ளிக்கூடத்தை விட்டுச் சென்றுவிடுகிறார்கள். எனவே, எல்லா பள்ளி மற்றும் கல்லூரி யர்கள், மாணவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். 5 மணிக்குப் பள்ளிக் கூடம் அல்லது கல்லூரி முடிந்துவிட்டால், அதற்குப் பிறகு அவர்களோடு சேர்ந்து விளையாட வேண்டும். 7 அல்லது 8 மணி வரையில் விளையாட்டில் அவர்களை ஈடுபடுத்துங்கள். எத்தனையோ விளையாட்டுகள்—பிங்காங்க் போன்ற அழகான விளையாட்டுகள் இருக்கின்றன. ஆசிரியர்கள் மாணவர் களை அந்த வழியில் கொண்டு வந்தால், மாணவர்கள் வேறு பக்கம் திரும்ப

மாட்டார்கள். சினிமாவுக்குப் போதல், பிச்சிற்குப் போதல், பஸ் மீது கல் எறிதல் போன்ற வேலைகளில் ஈடுபடமாட்டார்கள். அந்த Mentality, that should be avoided ; that can be avoided through teachers. ஆகவே, மரியாதைக்குரிய ஆசிரியர் பெருமக்கள், இனி வருங்காலத்தில் குழந்தைகளுக்குப் பலவிதமான நல்ல அனுபவங்களைத் தெரிவிக்க வேண்டும். ஆசிரியர்கள் சினிமா பார்க்காமல், சிகரெட் பிடிக்காமல். மாணவர்களோடு ஒத்துப்போனால், எதிர்காலம் மிக நன்றாக இருக்குமென்று எதிர்பார்க்கிறேன். இந்தமாதிரியான நல்ல குணங்களும், பண்புகளும் சேரச் சேர, அது எதிர் காலத்தில் இந்த நாட்டுக்கும் உடன்பாடு உடையதாகும். நாட்டைவிட்டு மாணவர்கள் வெளியே அகலாத வண்ணம் உடன்பாடு உடையதாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எவ்வளவோ காரியங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லலாம். மத்திய அரசாங்கம் ஏறக்குறைய 53 ஆயிரம் கோடி ரூபாய் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். ஆனால் நமக்கு நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கி

(பிற்பகல் 5.30)

யிருப்பது 129 கோடி ரூபாய்தான். ஒரு ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்ததை விட, அடுத்த ஆண்டுக்கு இன்னும் 15 கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டுமல்லவா? காலம் வளர வளர தொகையும் வளர வேண்டும் அல்லவா? நேற்று 15 ரூபாய் கொடுத்துவிட்டு, இன்றைய தினம் 6 ரூபாய் என்றால், ஏதாவது காரியம் செய் என்றால், முடியாத காரியம். நடப்பு ஆண்டுக்கு 129 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி விட்டு இப்போது 108 கோடி ரூபாய்தான் தருவேன் என்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு திண்டாட வேண்டியிருக்கிறது. திட்டங்கள் போட்டு என்ன செய்வது என்று மயங்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி மத்திய சர்க்காரைக் கேட்காமல் இங்கே இருக்கின்ற திரு. தீக்ஷிதர் அவர்களைக் கேட்டால் பலன் தராது. மத்திய அரசாங்கம் தரவேண்டிய அளவுக்குத் தந்தாக வேண்டும். இப்படிக் கேட்பதால், இவர்கள் பிரிவினை வாதிகள் என்கிறார்கள். நாம் எங்கேயாவது பிரிவினை வாதம் பேசியிருக்கிறோமா ? கோவையிலிருந்து கன்னியாகுமரி வரை இந்தியாவோடு இருக்க மாட்டோம், தூக்கிக்கொண்டு சிங்களத்துக்கோ, சிங்கப்பூருக்கோ ஓடிவிடுகின்றோம் என்று சொல்லுகின்றோம்? சொல்லவில்லையே. மத்திய அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கின்ற பணத்தை, அதிகாரத்தை கொஞ்சம் எங்களுக்குப் பகிர்ந்து கொடு என்றால், பிரிவினை வாதி என்று விரல் காட்டுவதானது காட்டிக் கொடுக்கின்ற மாதிரி ஆகின்றது.





பிரதமர் இந்திரா காந்தியின் காங்கிரசைச் சேர்ந்தவர்களானாலும், காமராசர் காங்கிரசில் இருக்கின்ற நண்பர்களானாலும் எங்களைப் பிரிவினை வாதி என்று சொல்லி, எங்களுக்குச் சந்தேகம் வந்துவிடுகின்ற நிலைக்கு, நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கி விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் கூறுவார்களேயானால், பிரதமர் அவர்கள் தயவுகூர்ந்து அவர்களையாவது கண்டிக்க வேண்டும், அல்லது அப்படி ஏதாவது உண்டா என்று எங்களையாவது கண்டிக்க வேண்டும். முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து "முன்னேற்றக் கழகமே, முதலமைச்சர் அவர்களே, பிரிவினை உணர்ச்சி உங்களுக்கு வந்திருப்பதாக எங்கள் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள், நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?" என்று கேட்க வேண்டும். எங்களுக்குப் பிரிவினை மனப்பான்மை இருப்பதாக நினைத்துவிடாதீர்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் ஒத்துத்தான் வாழ முயற்சிப்பார்கள். ஆனால் இவன் தலையில் அவன் கைவைத்து, அவன் தலையில் இவன் கை வைத்தால், நீ ஓடலாமா, நான் ஓடலாமா என்ற நிலைதான் வரும். ஆகையால் தலையில் கைவைக்காமல், உலை அடித்து உலையில் போடாமல், தமிழ்நாட்டான் அகப்பட்டான் என்று வரியைப் போட்டு, கொண்டுபோய்விடாமல், அவனுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறபோது தான், பிரிவினை எண்ணம் வராது. எதிர் காலத்திலாவது மதிப்பிற்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருக்கின்ற நண்பர்களானாலும், அல்லது காமராசர் கட்சி நண்பர்களானாலும், தயவுகூர்ந்து எங்களைப் பிரிவினை வாதிகளாக 'பர் போர்ஸ்' தள்ளிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பினை அளித்ததற்கு நன்றிகூறி முடிக்கின்றேன்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்துள்ள 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழகத்தின் நல்வளர்ச்சிக்காக, முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை அதில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

வேளாண்மையைப் பொறுத்த வரையில், அதற்கு இந்த ஆண்டு 68 கோடி ரூபாய்க்கு அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்ற போது, சென்ற ஆண்டுகளில் தமிழகத்தில் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட உற்சாகத்தைத் தொடர்ந்து, மேலும் நல்ல முறையில் விவசாயிகள் முன்னேற இந்த அரசு நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும் என்று கருதி இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் நல்ல முறையில் முன்னேற்றகரமான விவசாயத்தைத் தெரிந்துகொள்ள, உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குக் குறைவாகப் படித்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு, அவர்கள் முற்போக்கான விவ-

சாயத்தைப் பழகி, செயல்படுத்த, ஒவ்வொரு விவசாயக் கல்லூரியிலும் குறுகிய கால விவசாயப் படிப்பு அளிக்கும் திட்டத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற வரவு செலவுத் திட்டத்தின் போதே நான் கேட்டுக் கொண்டேன். பெரியாறு பாசனக் கால்வாய்களில் தண்ணீர் வீணாகப் போகிறது. பூமியிலும், வெளியிலும் தண்ணீர் அதிகமாகச் சேதாரம் ஆவதைத் தடுக்க வேண்டும். அதற்குப் பெரியாறு வாய்க்காலைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று நான் சென்ற ஆண்டே சொன்னதை, இந்த ஆண்டு செயல் படுத்துவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கின்றேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்கு பல வகைகளில் இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலை அமைப்பு வகைக்காக சென்ற ஆண்டு ரூ. 1,19,00,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 2 கோடியே 19 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கின்றேன். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு விலைவாசிகள், கூலி உயர்வுகள் அதிகமாகியிருக்கின்றன. ஆகவே ரோடு போடுவதோ, அல்லது மற்ற எந்த வேலையாக இருந்தாலும், விலைவாசி உயர்வு காரணமாகவும், கூலி உயர்ந்திருப்பது காரணமாகவும், அதிகமாகச் செலவாகின்றது. ஆகவே இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து குறிப்பிட்ட கால அளவுக்குள், சென்ற 1971, 1972 ஆம் ஆண்டுகளில் எப்படி தமிழ் நாட்டில் மின்சாரம் எல்லா கிராமங்களுக்கும் வழங்க வேண்டும் என்று அறிவித்து ஓரளவுக்கு தமிழகத்தில் உள்ள பெருவாரியான, 90 சதவிகித கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதோ, அதே முறையில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், இணைப்புச் சாலைகளையும் குறிப்பிட்ட காலத்துக்குள் பூர்த்தி செய்ய திட்டம் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரையிலும், சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு அதிகமாகியிருக்கிறது. அதையும் வரவேற்பதுடன், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தமிழ் நாட்டிலுள்ள எல்லா மக்களும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெற வேண்டும் என்பதில் அரசு ஆர்வமாக இருப்பதை செயல்முறையில் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கல்வியைப் பொறுத்த வரையில், நமது மாண்புமிகு உறுப்பினர் திரு சி.வி.ஆர். அவர்கள் பல நல்ல அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். அவருடைய கருத்துக்களை நான் ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், அதைத் தொடர்ந்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். 1956-57-லே



(பிற்பகல் 5.40)

இந்த மாநிலத்தின் கல்வி பட்ஜெட் 10 கோடியே 59 லட்சம் ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு 110 கோடியே 15 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. கல்வியில் இந்த அரசு வெகு ஆர்வமாக இருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன். ஒரு ஆண்டுக்கு 110 கோடி ரூபாயை நாம் கல்விக்காகச் செலவு செய்கின்றோம். நம்முடைய வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியை கல்விக்காகச் செலவு செய்கின்றோம். இந்த நாட்டின் அறியாமையைப் போக்குவதற்காக, எல்லோரும் உயர் கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக அப்படிச் செலவு செய்வதில் என்னைப் பொறுத்த வரையில், எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லை. ஆனால் இந்தக் கல்வி பயின்று வந்தவர்களுடைய எதிர்காலம் எந்த அளவிலே இருக்கிறது என்பதையும், தொடர்ந்து 25 ஆண்டுகள் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் கல்வியின் வளர்ச்சியில் நாம் இவ்வளவு முன்னேற்றத்தைச் செய்தும், மாணவர்களுடைய பிரச்சினையை, அவர்கள் படித்து வந்தவுடன் அவர்களுக்கு இருக்கிற எண்ணங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோமா என்பதையும் நாம் பரிசீலனை செய்ய வேண்டும். பட்டமளிப்பு விழாவில் நாம் பார்க்கிறோம். எங்களுக்குப் பட்டம் வேண்டாம், வேலை கொடுங்கள் என்று பட்டத்தையே கிழித்து எறிந்ததையும் நாம் பார்க்கிறோம். ஒரு உயர் கல்வி பட்டப்படிப்பு படித்த மாணவனே அந்தப் பட்டமளிப்பு விழாவிலேயே அந்தப் பட்டம் தேவையில்லை என்று சொல்கிற அளவுக்கு இந்தக் கல்வி இருக்குமேயானால், அந்தக் கல்வியை நாம் இன்னும் மேலும் மேலும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமா என்பதை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தக் கல்வி முறையின் அமைப்பானது நாம் அடிமையாக இருந்த சமயத்தில் ஐரோப்பிய கல்வி முறையை ஒட்டி கையாளப்பட்டது. அந்தக் கல்வி முறையிலே படிக்கின்ற மாணவர்கள் கடைப்பிடிக்கின்ற வழிமுறைகள், நாகரீகம் முதலியவற்றைப் பார்க்கிறபோது, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் தமிழ் நாகரீகம், தமிழ் இலக்கியம் என்றெல்லாம் சொல்லியதுபோல், அவற்றுக்கு மாறாக, ஐரோப்பிய நாகரீகம் வளர்ந்துகொண்டு வருவதைக் காண்கிறோம். இந்த முறைக் கல்வியிலேயே நாம் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு செய்துகொண்டிருப்போமானால், இந்த முறையிலே கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள், அவர்களுக்கும் அந்தக் கல்வி பயன்படாமல், அவர்களுடைய குடும்பத்திற்கும் பயனில்லாமல், நாட்டுக்கும் பயன் இல்லாமல், ஒரு பெரும் பகுதிப் பணத்தைச் செலவு செய்து கொண்டிருப்பவர்கள் ஆவோம் என்பதை மறக்க முடியாது. நான் ஒரு பத்திரிகையிலே 'ஒரு கதை படித்தேன். ஒரு பி.ஏ. படித்த எழுத்தராக வேலை செய்யக்கூடிய ஒருவனுக்கு பெண் பார்த்து நிச்சயம் செய்து, திருமணத் தேதியும் குறித்தாகிவிடுகிறது.

[திரு. அ. அய்யணன் அம்பலம்] [1974 மார்ச் 12

ஆனால் அந்தக் கல்யாணத்தை ரத்து செய்துவிட்டதாகத் தந்தி வருகிறது. அந்தப் பெண்ணின் தகப்பனார், தன்னுடைய பெண்ணுக்கு எல்.ஐ.சி.யிலே பியூன் வேலை பார்க்கிற ஒருவன் கிடைத்துவிட்டதால் இந்தக் கல்யாணத்தை ரத்து செய்துவிட்டதாகச் சொன்னாராம். இதைப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறது? படித்துப் பட்டம் பெற்று எழுத்தர் வேலை பார்க்கிற ஒரு பையனை விட, பட்டம் பெறாத, சாதாரண படிப்பு மட்டுமே படித்துவிட்டு எல்.ஐ.சி.-லே பணி புரிகிற ஒருவருடைய தரம் உயர்ந்தது என்று அறிவுறுத்துகிற கதையாக அது இருக்கிறது. இன்னும் ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன். நாம் ஐரோப்பிய நாகரீகத்தைப் பின்பற்றுகிறோம். மாணவர்களும் பின்பற்றுகிறார்கள். அவர்கள் தங்களுடைய முடியை நீளமாக வளர்த்துக் கொள்வது போன்ற நாகரிகத்தைப் பார்க்கிறோம். மேல்நாட்டிலே இருந்து ஹிப்பி முறையும் இங்கே வளர்ந்து வருகிறது. இதெல்லாம் உயர்கல்வி படித்தவர்கள் மத்தியிலேதான் அதிகமாக இருக்கிறது. அமெரிக்கப் பல்கலைக் கழக மாணவர்கள் 1,500 பேர், ஆணும் பெண்ணும், ரோடிலே அறுவறுப்பாக ஓடினார்கள் என்று பத்திரிகையிலே பார்க்கிறோம். அந்த நிலைகூட நம்முடைய நாட்டிலே இப்பொழுது இருக்கக்கூடிய கல்வி முறையினால் இங்கு வந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் நம்முடைய தமிழ் கலாசாரம், தமிழ்ப் பண்பு ஆகியவற்றையெல்லாம்பற்றி வெகு அழகாகச் சொன்னார்கள். 25 ஆண்டுகள் கழித்து, ஒரு தலைமுறையை நாம் உற்பத்தி செய்த பிறகும், அவர்கள் கல்வி பயின்ற பிறகு அவர்களுக்கு ஒரு உத்தரவாதமான வாழ்க்கை இல்லாமல் இருப்பதைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பரிசீலனை செய்ய வேண்டும். அது இல்லாவிட்டால், பி.ஏ., எம்.ஏ. என்று பட்டம் பெற்றவர்கள் பட்டம் பெற்ற அளவோடுதான் இருக்கவேண்டிய நிலை ஏற்படும். இப்பொழுது மருத்துவக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்குக்கூட வேலை இல்லாமல் இருக்கிறது. ஒரு மாணவனுக்கு மருத்துவக் கல்லூரியில் படிப்பை முடித்துவிட்டு வருவதற்கு ரூ. 50,000 முதல் ரூ. 70,000 வரை செலவாகிறது என்று அரசாங்கப் புள்ளி விவரம் கூறுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குக் கூட இந்தியா முழுதும் வேலை இல்லை என்று வேலை நிறுத்தம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. மதுரையிலேகூட அதைப் பார்த்தோம். எனவே இப்பொழுது கொடுக்கக்கூடிய கல்வியில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். இதைப் பெரிய கல்வி அறிஞர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் பேசியதைப் பத்திரிகையிலே பார்த்தேன். இப்பொழுது இருக்கக்கூடிய கல்வித் திட்டம் செலவு செய்யக்



1974 மார்ச் 12] [திரு. அ. அய்யணன் அம்பலம்]

கூடிய அவ்வளவு பணமும் பாழாகக்கூடிய திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த மாதிரிக் கல்வித் திட்டத்திற்காக மேலும் மேலும் கோடிக் கணக்கான ரூபாயைச் செலவு செய்வதில் பயனில்லை. ஆகவே ஒரு அறிஞர் குழுவை நியமித்து, இந்த நாட்டிற்கு எப்படிப்பட்ட கல்வி தேவையோ, அப்படிப்பட்ட கல்வியை எல்லாப் பகுதி மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே, உங்கள் மூலமாக, சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டதற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டு நிதி நிலை அறிக்கையின்போதும் அரசாங்க அலுவலர்களுக்குச் சம்பள உயர்வு, பஞ்சப்படி, வேலை வாய்ப்பு போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதை ஓரளவு நான் வரவேற்கிறேன். என்றாலும், நாம் செய்யக்கூடிய அந்த உதவி அரசாங்கத்தில் இருக்கக்கூடிய எந்தப் பகுதி அலுவலர்களையும் திறைவு படுத்தியதாகத் தெரியவில்லை. எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அதிலே பணி புரிகிறவர், தனக்கு நியாயமான பதவி உயர்வு கிடைக்கவில்லை, தனக்கு மேலும் பல குறைகள் இருக்கின்றன என்று உறுப்பினர்கள் சட்ட மன்ற விடுதியில் இருக்கும்போதுகூட வந்து, ஒவ்வொரு ஸ்தாபனத்தின் பேரில் கோரிக்கை வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்குக் கொடுப்பதற்காக 10 கோடி ரூபாயை நாம் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். இதையெல்லாம் பார்க்கும் போது, கிராமப் பகுதி மக்களுடைய நிலைமையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நேரம் அலுவல், ஒரு குறிப்பிட்ட அளவு வேலை. இப்படிப்பட்டவர்களுக்கே இவ்வளவு குறைகள் இருக்கும்போது, ஒன்றுமே இல்லாத கிராமப் பகுதி மக்களுடைய வாழ்க்கை எந்த அளவிலே இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சோஷலிசத்தை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சோஷலிசத்தைக் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படி ஏற்றுக்கொண்டிருக்கும் போது ஒரு பக்கத்திலே மக்களுடைய வாழ்க்கை வசதி தேய்ந்துகொண்டும் இன்னொரு பக்கத்திலே அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றமே இல்லாது இருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. கிராமப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், நாம் அவற்றையெல்லாம் நிவர்த்திக்க முன்னேற்றம் அடைய வேண்டுமானால், நாம் கிராமங்களிலுள்ள விவசாயிகள் குறைகள் என்னென்ன என்று அறிந்து, அவற்றையெல்லாம் நிவர்த்திக்க முயற்சிக்க வேண்டும். நாம் போடும் திட்டங்களின் பலன்கள் எல்லாம்

[திரு. அ. அய்யணன் அம்பலம்] [1974 மார்ச் 13

(பிற்பகல் 5.50)

நகரத்தில் உள்ளவர்களுடைய அளவில் நின்று விடுகின்றனவே தவிர, கிராமப்புறங்களிலே வாழும் மக்களுக்குச் சென்றதாகத் தெரியவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

நமது இந்த நிதி நிலை அறிக்கையில் பென்ஷன் திட்டமொன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை ஓரளவிற்கு வரவேற்பது மட்டுமின்றி, இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் கட்டாயம் எல்லோரும் இதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லுவேன். காரணம் பல பெரிய குடும்பங்களில் வந்தவர்கள் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிதைவிலே ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அவர்களுக்கு ஏதாவது உதவி கிடைக்கக்கூடிய வகையில் கட்டாயமாக இந்த ஓய்வு ஊதியத் திட்டத்தை எல்லோருக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, திரு. தீக்ஷிதர் அவர்கள் நமது ஜனநாயகத்தில் எவ்வளவு உரிமைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இப்போது மத்திய அரசு பல பெரிய பெரிய திட்டங்களைப் போட்டு நாட்டிலே சோஷலிஸத்தைக் கொண்டு வரவேண்டுமென்று பாடுபட்டு வருகின்றார்கள். அதை வரவேற்கிறோம். நமது மாநில அரசும் பல முற்போக்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டுமென்று முயற்சிக்கிறது. கடந்த 20, 25 ஆண்டுக் காலமாக இப்படி மாநில அரசுகளும் மத்திய அரசும் பல திட்டங்களைத் தீட்டி நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்று பாடுபட்டுவந்திருக்கின்றன. ஆனாலும் இந்தத் திட்டங்கள் எல்லாம் கடந்த 25 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வந்தும், நாம் அடைய வேண்டிய வளர்ச்சியை அடைந்திருக்கிறோமா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் இன்னும் பல ஆண்டுகள் கழித்தும், 100 ஆண்டுகள் ஆனாலும்கூட நம்முடைய எண்ணங்கள், அமைப்புகள், செயல்முறைகள் இவைகளெல்லாம் வளருமா என்று பார்த்தால், இன்றுள்ள ஜனநாயக அமைப்பில், இன்றுள்ள அரசியல் அமைப்பில் இது நடக்கும் என்று நம்ப இடமில்லை என்று உங்கள் மத்தியில் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஒரு கால் நூற்றாண்டு காலமாக ஒரு சமுதாய அமைப்பினை, அரசியல் அமைப்பினை நாம் செயல்படுத்தியிருக்கிறோம். ஆனால் இதில் நாம் எவ்வளவு பொருளாதார முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்று நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

அடுத்து, நமது திரு. சி. வி. ஆர். அவர்கள் பஸ்களை தேசியமயமாக்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். வரவேற்கிறோம். ஆனால் இந்த தேசிய உடைமையாக்கப்பட்ட சொத்துக்கள் முறையாகப் பாதுகாக்கப்படுகின்றனவா என்றால்,



1974 மார்ச் 12] [திரு. அ. அய்யணன் அம்பலம்]

இல்லை என்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு தேசியமயமாக்கப்பட்ட நிறுவனமும் தொழிற்சாலையும் தனியார் தொழிற்சாலைகளைக் காட்டிலும் லாபகரமாக நடக்கிறதா என்றால், இல்லை. மாறாக பெரும் நஷ்டத்தில் நடக்கிறது. இதற்கு நிர்வாக அமைப்பு ஓரளவிற்குக் காரணமாக இருந்தாலும்கூட, தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பும் போதுமானதாக இல்லை. இதையும் யாரும் மறுக்க மாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். தொழிற் சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து, அதற்காகப் போராடுகின்றார்களே தவிர, அவர்களுடைய கடமைகளை அவர்களுக்கு வலியுறுத்திக்கூற முன்வருவதில்லை. வலியுறுத்துவதற்கு இன்றுள்ள அமைப்பில் அவர்களுக்குத் தைரியம் இல்லை என்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. சி. வி. ஆர். அவர்கள் ஆசிரியர்கள்பற்றிக் குறிப்பிட்டு அவர்களுடைய சம்பளம் எல்லாம் உயர்ந்துள்ளதைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் . . . .

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கடமைகளை நினைவூட்டுவதற்கு தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தைரியமில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படி தொழிற் சங்கத் தலைவர்கள் என்று பொதுப்படையாகச் சொல்லாமல், யார் அப்படி நினைவூட்டத் தைரியமற்றவராக இருந்தார் என்று விளக்கமாகச் சொன்னால், நன்றாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. காட்டூர் கோபால் என்று சொல்லியிருக்கிறாரா?

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, நான் யாரையும் குறிப்பாகச் சொல்லவில்லை. இப்போது நானே ஒரு தொழிற் சங்கத்தின் தலைவராக இருந்தாலும், தொழிலாளர்களைப் பார்த்து, 'கடமையை மறக்காதீர்கள்' என்று சொன்னால், உடனே தலைமைப் பதவி பறிபோய்விடும். நானே தலைவராக இருந்தாலும், அந்த நிலைதான் இருக்கும்.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, எங்களைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட கடமைகளை நினைவூட்டத் தவறுவதில்லை. எப்போதும் அதை அறிவுறுத்துகிறோம்.

திரு. அ. அய்யணன் அம்பலம்: அதை வரவேற்கிறேன். நான் எந்த ஒரு குறிப்பிட்ட தொழிற் சங்கம் பற்றியும் சொல்லவில்லை. எந்த ஒரு அமைப்பிலும் இப்போது கடமைகளை உணர்வது என்பது குறைவாகத்தான் இருக்கின்றது. உரிமைகளைத்தான் வலியுறுத்துகின்றார்கள். கடமைகளை குறைவாகத்

தான் எண்ணிப்பார்க்கின்றார்கள். யாரைப் பார்த்தாலும், ஏதாவது குறை சொல்வது என்றுதான் ஆகிவிட்டது. இதெல்லாம் மாறறப்பட வேண்டும். 25 ஆண்டுக் காலமாக நாம் ஜனநாயக அமைப்பில் இருந்துவருகிறோம். எப்படி இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வந்தது என்று தெரியாமலேயே ஒரு தலைமுறை வளர்ந்துவிட்டதே அந்தத் தலைமுறையிடம் இன்று ஜனநாயகத்தின் பொறுப்பினைக் கொடுத்திருக்கிறோம். இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தத் தலைமுறையினரிடம் இந்த ஜனநாயகத்தை நாம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி வலியுறுத்தவில்லை. இன்று ஜனநாயக அமைப்பிலுள்ள குறைகளையெல்லாம், சமுதாயத்திலுள்ள தவறுகளையெல்லாம் தட்டிக் கேட்பதற்கு, எடுத்துச் சொல்வதற்கு என்போன்றவர்களுக்கேகூட தைரியம் இல்லை என்று சொல்லத்தான் வேண்டும். என்றைக்கோ அரசியல் சாசனச் சட்டத்தை எழுதி, இந்த முறையைக் கொண்டுவந்துவிட்டோம். இப்போது அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் நாம். உதாரணமாக முதலில் மதுவிலக்கை வைத்திருந்தோம். இந்த அரசில் சிறிதுகாலம் அதைத் தள்ளிவைத்திருந்தார்கள். மீண்டும் இப்போது அதைக் கொண்டு வரவேண்டிய நிலையை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். ஒரு திட்டம் சரியில்லை என்றால், அதை மறுபடியும் பரிசீலனை செய்து பார்ப்பதில் தவறு ஏதுமில்லை. அரசியல் சட்டத்தில் எல்லோருக்கும் ஓட்டுரிமை என்று வலியுறுத்திச் சொல்லியிருந்தாலும்கூட, மற்ற வளர்ந்த நாடுகளில்கூட ஓட்டுரிமை என்பதை இப்போது மறுபரிசீலனை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்த முறையிலும் இந்திய நாட்டிலும் இப்போதுள்ள ஜனநாயக முறையை எப்படித் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதை இந்த அவையின் மூலம் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, இந்த நிதி நிலை அறிக்கையில் பொதுவாக நல்ல அம்சங்கள் பல இருக்கின்றன—அவற்றை வரவேற்று எனக்கு இவ்வளவு நேரம் பேசச் சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஏ. பி. ஜனார்த்தனம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையிலே பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துவதும் திருவள்ளுவர் நினைவாலயம் கட்டுவதும் என்னுடைய நெஞ்சைத் தொட்டன. இதற்காக கலைஞர் அவர்களை மனதார வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டு விட்டு நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் ஓட்டு முறையில் கோளாறு இருக்கிறது, அதை மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டுக்கொண்டார்கள். நாடு போகிற போக்கு



சமுதாயம் போகிற போக்கு, பிள்ளைகள் போகிற போக்கு, தொழிலாளர்கள் போகிற போக்கு இவை அத்தனையையும் கண்டு, முதிர்ந்தவர்களுக்கு, பண்புள்ளவர்களுக்கு, நாட்டிலே குழப்பமில்லாமல் ஒழுங்கு வேண்டுமென்று எண்ணுகிறவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்று விளக்கப்பட்டது. ஆனால் உலக வரலாற்றை நீங்கள் எடுத்துக்கொண்டால், இந்தத் தலை கீழ் நிலைமைகள், ஏமாற்றங்கள் சாக்ரடீஸ் காலத்திலிருந்து இன்று வரையில் இருந்து வருகின்றன. அந்தக் கால வரலாற்று ஆசிரியர்கள், நிபுணர்கள் மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அண்மையில் ஒரு நூலைப் படித்தேன். ரோமானியர் காலத்தில் அப்படியெல்லாம் அவர்கள் வேதனைப் பட்டார்கள். முடிந்து விட்டது நம்முடைய கதை என்று சொன்னார்கள் அப்படி ஓலமிடுபவர்களை வரலாற்றிலே ஜெர்னியாஸ் என்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தீக்ஷிதர் அவர்களைப்பற்றிச் சொன்ன வார்த்தைகளை வாபஸ் பெற்றுக்கொண்டதால், அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விடும்படி சொன்னேன். பத்திரிகைகளிலும் வரக் கூடாது என்று பத்திரிகை நிருபர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3.00)

**திரு. ஏ. பி. ஜனார்த்தனம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஜெர்னியாஸ், மாரடிக்கும் கூட்டம் வரலாற்றில் நெடுக வந்திருக்கிறது. நம்முடைய திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் உறுதி உடையவர்கள், திராணி உடையவர்கள். ஒழுக்கக் கட்டுப்பாடுகளிலே மனதுடையவர்கள் தைரியமாக இருக்க வேண்டும். போராட வேண்டும். தீய சக்திகளை எதிர்த்து நிச்சயமாகப் புறப்பட்டாக வேண்டும். ஒழுக்கத்திற்கு என்றைக்குமே தாழ்வு கிடையாது. அரசியலில் நல்ல பண்புகள் வளர வேண்டுமென்பதில் நாம் ஒரு நாளும் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. இன்று நமக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. போன மாதம் நான் சண்டிகர் போயிருந்தேன். டில்லி போயிருந்தேன். பம்பாய் போயிருந்தேன். பூனா போயிருந்தேன். அத்தனை மாநிலங்களிலும் இருக்கிற முக்கியஸ்தர்கள் மனதார நம் மாநிலத்தைப் பாராட்டினார்கள். அங்கே அமைதியிருக்கிறதே, தானியங்களை வேண்டிய அளவு தருகிறீர்களே, அரசியல் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதே, அமைச்சர்கள் இளமையோடு, துடிப்போடு இருக்கிறார்களே, எதிர்க் கட்சிகள் கூட, குஜராத் போல அமளி துமளியில் ஈடுபடாமல் ஒழுங்காக இருக்கின்றனவே என்று அவர்கள் நம்மைப் பார்த்துச் சொல்லச் சொல்ல என் நெஞ்சு நிமிர்ந்தது. என்னுடைய எண்ணமே

[திரு. ஏ. பி. ஜனார்த்தனம்] [1974 மார்ச் 12

மாறியது. நம் மாநிலத்தைப்பற்றி மிகப் பெருமைப்பட்டேன். அதே மாதிரி கேரளாவிற்குச் சென்றிருந்தேன். அங்கேயிருப்பவர்கள் கூட, தங்கள் மாநிலத்தில் வறுமை இருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது, படித்தவர்களிடையில் வேலையில்லை என்று சொன்னார்கள். நாம் நம்பிக்கை இழக்கக் கூடாது. இந்த நேரத்தில் துணிந்து வேலை செய்ய வேண்டும். நம்முடைய பண்பை வளர்த்துக் கொண்டால், ஒழுக்கம், தரத்தைக் காப்பாற்றிக்கொண்டால் நிச்சயமாக நம்மைப் பார்த்து மற்றவர்கள் வருவார்கள். இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு யாரையும் விட அரசியல் வாதிகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. வெளிநாடுகளில் இந்த அரசியல் அல்லோலகல்லோலங்கள் இருக்காது. அங்கே பல துறைகளுக்கும் சம இடம் இருக்கும். இங்கே அரசியல் வாதிகளுக்கு அளவு கடந்த விளம்பரம் கொடுக்கப்படுகிறது. இதனால் நம்முடைய பொறுப்பு, இரண்டு மடங்காகிறது, மூன்று மடங்காகிறது. ஆளும் கட்சிகளும், எதிர்க் கட்சிகளும் ஒழுங்காக நடந்தால், இந்த ஓட்டுரிமையைப் போல சிறந்தது உலகத்தில் வேறு எங்கும் கிடையாது. உலகத்திலே பெரிய அரசியல் வல்லுநர்கள் அந்தக் கால மாக்கியவில்லியிலிருந்து இந்தக் கால ஹெரால்டு லாஸ்கி வரை இதுபற்றி மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஹிட்லர் சொன்னான். " It is easier to find a needle in hay stack than to find a right man in a democracy. " ஜனநாயகத்தில் ஒரு நல்லவனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால், வைக்கோல் போரில் ஒரு ஊசியைத் தேர்ந்தெடுப்பது போல என்று சொல்லியிருக்கிறான். இந்த ஹிட்லர் போன்றவர்கள் அத்தனை பேர்களும் என்ன ஆனார்கள் என்பது நமக்குத் தெரிகிறது. முதலில் பளபளப்பாக இருக்கும். இடையில், கடைசியில் மக்கள் ஒரு நிலைக்கு வந்து தீருவார்கள். பாடம் புகட்டித் தீருவார்கள். நம்முடைய ஓட்டர்கள் அவ்வளவு தூரம் தாழ்ந்தவர்கள் அல்ல என்று கருதுகிறேன். " They have an ultimate common rugged sense." ஒவ்வொருவருக்கும் ஒரு நேரம் வாய்ப்பு தரவேண்டுமென்பதில் நம்முடைய மக்களுக்கு அசாதாரண பாலன்ஸ் ஆஃப் மைண்ட் இருக்கிறது. அதை நம்முடைய தேர்தல்களில் கண்டிருக்கிறோம். ஒரு நேரத்திலே நம்முடைய காமராஜருக்கு மெஜாரிட்டி தரவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அடுத்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மெஜாரிட்டி தந்தார்கள். அடுத்த நேரத்தில் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு மெஜாரிட்டி தந்தார்கள். அடுத்த நேரத்தில் எங்களுடைய தரம் உயர்ந்தால், எங்களைத் திருப்பியனுப்புவார்கள். நாங்கள் தவறினால் வேறு யாரையாவது அனுப்பிக் கொள்வார்கள். அதற்குத் தலை வணங்க வேண்டும். 1967-ல் பெருந்தலைவர் காமராஜர்



1974 மார்ச் 12] [திரு. ஏ. பி. ஜனார்த்தனம்]

தோற்கடிக்கப்பட்ட நேரத்தில் நாங்களெல்லாம் உள்ளபடி அதிர்ந்து விட்டோம். எப்படி எதிர்காலம் இருக்கப்போகிறது, பாராளுமன்ற முறையெல்லாம் எப்படியிருக்கப் போகிறது என்று எண்ணினோம். காமராஜரிடம் போன காங்கிரஸ் தொண்டர்களிடத்தில் அவர், "ஜனநாயகத்தில் இது இயற்கை. மக்கள் இப்படிச் செய்து விட்டார்களே என்று கவலை வேண்டாம், பொறுமையாக இருப்போம், மீண்டும் மக்களிடம் போவோம்" என்று தைரியமாக நிமிர்ந்து நின்றார். இன்றைக்கு அவர் தன்னால் இயன்ற செல்வாக்கைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். புல்லெட்டை விட பேலட்டை நிச்சயமாக வைத்துக் கொள்வோம். இங்கே எதிர்க் கட்சிகள் எதிர்ப்பதையே தொழிலாகக் கொள்ளவில்லை. அதே மாதிரி ஆளும் கட்சித் தோழர்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதைப் புறக்கணிப்பதில்லையே. எதிர்க் கட்சிக்காரர்களுக்கு மதிப்பளித்திருக்கிறோம் என்பதை அவர்கள் மனம் விட்டுச் சொல்லியிருக்கிறார்கள். திட்டங்களையெல்லாம் வரவேற்றிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் பசுமைப் புரட்சித் திட்டம் ஒரு சாதனை அல்லவா? அருமையான ஒரு பாரம்பரியத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் நாங்கள் அடுத்தடுத்துத் தோற்கடிக்கப்படுகிறோம். அதற்குரிய காரணங்களை அலசிக் கொண்டிருக்கிறோம். ஏதோ மக்கள் தோற்கடித்து விட்டார்கள் என்ற முடிவிற்கு வரவில்லை. என்ன செய்வது என்று பரிசோதனை செய்து திரும்பி வரவேண்டுமென்ற துடிப்பில் இருக்கிறோம். எனவே நாம் கொஞ்சங்கூட நம்பிக்கை இழக்கக் கூடாது. இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழி காட்டிகள் இங்கே இருக்கிறார்கள். அருமையான பாரம்பரியம் உள்ளவர்கள் இங்கேயிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளிலுமே இருக்கிறார்கள். நாம் மக்களுக்கு வேண்டியதை நிச்சயமாகச் செய்ய வேண்டும். கடந்த ஆறு ஆண்டுக் காலமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் என்னால் இயன்ற அளவு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். மாற்றுக் கட்சி நண்பர்கள் உள்ளபடியே அருமையான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய ரிகார்டுகளைப் புரட்டிப் பார்த்தால், சிறந்த ஜனநாயக பாரம்பரியத்தை இந்த அவை கொண்டிருக்கிறது. மனம் தளராமல் நம்முடைய அத்தனை மாண்புமிகு நண்பர்களும் உழைக்க வேண்டும். மக்களுடைய நல்லெண்ணத்திலே நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இப்படியே போனால், நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று சொல்லி, மீண்டும் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

***தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையின் முன்னே வைத்த 1974-75-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் தொடர்பாக சில கருத்துக்களை

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1974 மார்ச் 12

அறிவிக்க வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி கூறி ஆரம்பிக்கிறேன்.
பொதுவாக, நம்முடைய நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கடந்துகொண்டி
ருக்கிறது என்பதை நாம் அன்றாடச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.
அருமை நண்பர் திரு. ஜனார்த்தனம் மிக அருமையான ஜனநாயக மரபுகளை
நினைவூட்டினார்கள். யார் சொல்கிறார்கள் என்பதைவிட சொல்லப்படுகிற
செய்தி என்னவென்று அறிந்து பார்த்து, ஆராய்ந்து நடைமுறைப்படுத்து
வதிலே தான் உயர்ந்த ஜனநாயக மரபுகளைக் கடைப்பிடிக்க முடியும்.
அருமை நண்பர் திரு. அய்யணன் அம்பலம் கூறியது போல. நம் கிராமப்
புறங்களில் உள்ள மூன்றும் நிலைச் சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயப்
பெருங்குடி மக்களின் அன்றாட வாழ்க்கை முறையிலே ஏற்பட்டுக்
கொண்டிருக்கிற அதிர்ச்சிகளை எப்படிச் சமாளிப்பது என்பதை இந்த நிதி
நிலைத் திட்டம் கண்காணித்திருக்கிறது. தகுந்த ஆலோசனைகளைச் சொல்லி
யிருக்கிறது. அலுவலகங்களில் வேலை பார்க்கிறவர்கள் ஆண்டுதோறும்
ஊதிய உயர்வு பெறுகிறார்கள். ஒரு வாயிலாக ஊதிய உயர்வு கொடுக்கப்
படுகிறது, இன்னொரு வாயிலாக விலைவாசி ஏற்றம் என்ற பெயரில் திரும்ப
வந்துவிடுகிறது. இந்த நிலைமைகளுக்குப் பதிலாக, சென்ற ஆளுநர் உரை
விவாதத்தின் போது நான் குறிப்பிட்டது போல ஊதிய உயர்வு கேட்டுக்
கேட்டுக் கொடுப்பது என்பதற்குப் பதிலாக, நியாய விலையில் மக்களுக்குத்
தேவையான பொருள்களை வழங்குகின்ற பொறுப்பினை அரசு ஏற்றுக்
கொண்டால் நன்றாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால், யாருக்கு எது
தேவையோ அது தரப்படும் என்று சொல்லப்படும் சோஷலிசத்தை நாம்
அடைய முடியும். நாம் 3 பேர் உள்ள குடும்பத்திற்கும் ஊதிய உயர்வு
கொடுத்திருக்கிறோம். அதே உயர்வை 8 பேர் உள்ள குடும்பத்திற்கும்
கொடுத்திருக்கிறோம். இதை விட நியாய விலையில் பொருள்கள் குடும்பத்
திற்குத் தக்கபடி பகிர்ந்து கொடுக்கப்படுமானால், உரிய பயன் விளையும்.
இதில் ஏராளமான சிக்கல்கள் இருக்கலாம், பொறுப்பு இருக்கலாம். இவை
களையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல், இந்த ஆலோசனையைச்
சொல்லவில்லை. அண்ணா அவர்கள் தேர்தல் நேரத்தின்போது அரிசியை,
நியாய விலையில் மக்களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யு
மென்று சொன்னார்கள். விலைவாசி ஏற்றத்தினால் அல்லல் மிகுந்த சூழல்
கிராமப்புறங்களில் உருவாகி வருகிறது. அரசு அன்பு கூர்ந்து பரிசீலிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு நாட்டினுடைய இன வரலாற்றைப் பொறுத்த வரையில்,
சென்ற கால வரலாற்றை நினைவுபடுத்துவதனாலே பெரிய பயனில்லையென்று
சொன்னாலும் சென்ற காலத் தமிழின் வரலாற்றை நினைவு கூரும் போது



1974 மார்ச் 12] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

நினைவுகூரும் நிகழ் காலத்தில் தமிழகம் எப்படித் தாழ்ந்து கிடக்கிறது என்பதை நினைவூட்டிக் கொண்டு, எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று நாம் எண்ண முடியும். அந்த வகையில் பழைய வரலாற்றுச் சின்னங்கள், செய்திகள், அமைப்புகள் நமக்கு உதவி செய்யும். எனவே, தமிழக அரசு பூம்புகார் நகரத்தை மிகப் பெரிய கலைக் கூடமாகப் பல்வேறு துறைகளில் வளர்ப்பதற்கு—பூம்பூகார்க்கப்பல் போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்திப் பழைய தமிழகத்தை நம் நினைவிற்குக் கொண்டுவருவதற்கு நன்றி, கடப்பாடு. ராஜராஜ சோழப் பேரரசினுடைய கப்பல்கள் கிழக்காசிய நாடுகளுக்கு மட்டுமின்றி, பல்வேறு ஆசியக் கடல்களில் உலாப்போந்தன என்பதை அரசியல் வரலாறுகள் சொல்கின்றன. அந்த மரபையொட்டி போலும், இந்திய நாடு முழுவதும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட நேரத்தில், கப்பல் கலம் ஓட்டவேண்டுமென்று வ.வு.சி அவர்களுக்கு நினைவு வந்தது போல வேறு யாருக்கும் வரவில்லை. இது வழி வழியாக வந்த பண்பாடு என்று கூறி இதை வரவேற்கிறேன்.

(பிற்பகல் 6.10)

அடுத்து, மிக இன்றியமையாத ஒரு செய்தி. தமிழகத்திற்குத் தனி மறையாக, உலகத்திற்குப் பொதுமறையாகத் திருவள்ளுவர் தந்த பெருமை மிக்க திருக்குறள் உண்டு. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இந்த நூலை உலகம் முழுமையாக அறிந்து பாராட்டுகிறது. எனினும் வள்ளுவத்தின் நெறியை அரசியல் வாழ்க்கையிலும் சரி, சமுதாய வாழ்க்கையிலும் சரி ஏற்றுச் செயல்படுத்துகிற மரபுகள் இன்னும் தோன்றவில்லை. அதற்குத் தூண்டுகோலாக இருக்கும்படியாக திருவள்ளுவர் நினைவாலயத்தைத் தோற்றுவிக்கத் தமிழக அரசு முன்வந்திருக்கிறது. திருவள்ளுவர் ஒரு இலக்கியத்தைச் செய்தவர் மட்டுமல்ல; ஒரு காவியத்தைச் செய்தவர் மட்டுமல்ல. தனி மனிதன் வாழ்க்கையிலிருந்து; சமுதாய வாழ்க்கை வரை முழுதும் தழுவியதாக எல்லா இனத்தவருக்கும் ஏற்ற முறையில் திருக்குறளைச் செய்த பெருமை அவருக்குண்டு. திருவள்ளுவர் அளித்த நூலைப் பெரும்பாலும் புலவர்கள் மட்டுமே பாராட்டுகிறார்கள். இப்போது மயிலையில் உள்ள திருவள்ளுவர் ஆலயம் இந்து அறநிலைய ஆட்சித் துறையின் ஒரு பகுதியாக இருக்கிறது. திருவள்ளுவர் தம்மை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரென்று சொல்லிக்கொள்ள முடியாத வண்ணம், தன்னை ஒரு பொது மனிதராக ஆக்கிக்கொண்டு, ஓர் அருமையான நூலை ஆக்கித் தந்தார்கள். அந்தத் திருவள்ளுவர் கோவிலை இந்து அறநிலைய ஆட்சித் துறையிலிருந்து பிரித்து, ஓர் உயர்மட்ட, நிர்வாகப் பொறுப்புள்ள தனி நிர்வாகமாக்கி,

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1974 மார்ச் 12

எதிர்காலம் உணர, தமிழகம் தழைக்க, பாரத நாடு வளர, உலகம் முழுவதும் செய்திகள் சென்று சேர, உரிய பணிகளைச் செய்ய வேண்டும். அந்தக் காரியம் இந்த அரசினுடைய பெரிய காரியமாக இருக்க வேண்டும். இந்தப் பொறுப்பை மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல உலகத் தமிழ் மாநாட்டின்போது அறிஞர் அண்ணா அவர்கள், வசூலித்த தொகையில் இருந்த மீதப் பணத்தைத் திருக்குறள் ஆராய்ச்சிக்காக ஒதுக்கீடு செய்தார்கள். நல்லகாலம், நம்முடைய பல்கலைக் கழகங்கள் சில நூல்களை வெளியிட்டிருக்கின்றன. அத்துடன் திருக்குறள் ஆராய்ச்சி முடிந்துவிட்டதாக சில பல்கலைக் கழகங்கள் தாங்களே முடிவு செய்துகொண்டு, 10-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய இலக்கியங்களை ஆராய்ச்சி செய்ய முடிவு செய்துள்ளன. திருக்குறள்பற்றி எதிர்காலத்தில் வர வேண்டிய நூல்கள் இருக்கின்றன. மனை இயல் நூல்கள், பொருளியல் நூல்கள், அரசியல் சம்பந்தப்பட்ட நூல்கள் எல்லாம் வர வேண்டும். எனவே அரசு, அந்தப் பல்கலைக் கழகங்களை, இந்த வகையில் நூல்கள் வர வேண்டுமென்று வழி நடத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான செய்தி தமிழின வரலாறு. தமிழ் ஒரு மொழி என்பது மட்டுமல்ல, நமது மொழி காலத்தால் மூத்தது; கருத்தால் உயர்ந்தது; சிறந்த இலக்கிய வளங்களைப் பெற்றது; சொல் வளங்களைப் பெற்றது. ஆனால் தனித் தமிழ் சொல்லகராதி இன்னும் தோன்றவில்லை. இதுவரையில் வந்துள்ள சொல்லகராதிகள், பல தமிழ்ச் சொற்களை வட சொல் என்றும், பல வட சொற்களை தமிழ்ச் சொல் என்றும் கூறும் நிலையில் இருக்கின்றன. நல்லதொரு தனித் தமிழ் சொல்லகராதியைத் தோற்றுவிக்கும முயற்சியில் திரு. ஞா. தேவனேயப் பாவாணர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் சிறந்த மொழி நூற்புலமை உடையவர். அவருடைய மொழி நூற்புலமையைப் பயன்படுத்தி, சிறந்ததொரு தமிழ் அகராதி கிடைக்கும்படியாக, உடனடியாகக் காலத்தால் செய்ய வேண்டும். காரணம் காலம் என்பது விரைந்து ஓடுகின்றது. அவருடைய மூப்பும் நம்மை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. எனவே அந்த முறையில் உரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்ட மன்ற உறுப்பினர்களில் பலரும், கல்வி இலாகாவைப் பற்றியும், மாணவர்கள் உலகத்தைப் பற்றியும் சொன்னார்கள். மாணவர்கள் உலகைப் பொறுத்தவரையில், ஒருவிதமான அமைதியின்மை இருக்கிறதென்



974 மார்ச் 12] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் வந்திருக்கிறார்கள். அரசியலுக்கு மாணவர்களை இழுக்கக்கூடாது என்று அரசியல் கட்சிகள் அறிவிக்கின்றன, சொல்லுகின்றன. ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ மாணவர்களை வலை வீசிப் பிடிக்க எல்லாக் கட்சிகளும் தொடர்ந்து பாடுபடுகின்றன. வருங்காலத்துத் தலைமுறையை உருவாக்குகிற பொறுப்பு இந்தத் தலைமுறைக்கு இருக்கிறதென்று எல்லா அரசியல் கட்சிகளும் உணர்ந்து, கல்லூரி மாணவர்கள் வட்டத்தில் அரசியல் கட்சிகளைப் புகுத்துவதில்லை என்று ஒருமனதாக உடன்பாடு கொண்டு, ஒரு முறையை அமைத்துக்கொண்டாலொழிய, அமைதிக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. நமது சட்டமன்ற மேலவை, பேரவையில் இருக்கக்கூடிய எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் நல்லதொரு இணக்கமான முறையைக் கண்டுபிடித்து, எந்தக் கல்லூரி அல்லது உயர்நிலைப் பள்ளி வட்டத்திலும் மாணவர்கள் மத்தியில் கட்சி அரசியலை ஒழிக்க ஒரு நெறியை எடுத்துக்கொண்டால், மாணவர்களை அவர்களது 22 வயதுவரை மிகவும் கவனமாகக் கல்வித் துறையில் பயிற்றுவிக்க முடியும். இப்படிப்பட்டதொரு நிலையை உருவாக்கினால்தான், அடுத்த தலைமுறையினர் சிறப்பாக இருப்பவர்களென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை அரசியல் கட்சித் தலைவர்களும், பெருமனம் கொண்டவர்களும் ஆதரிப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த நாட்டினுடைய வரலாற்றில் தமிழகம்தான் இந்த அளவுக்கு அமைதியாக இருக்கிறது. வட புலத்துச் செய்திகளைப் பார்க்கும்போது, அங்கே பரபரப்பு நிறைந்த நிலைமைதான் பொதுமக்கள் மத்தியில் இருக்கிறது. எனவே உடனடியாக நமது அரசியல் கட்சித் தலைவர்கள் இணக்கமானதொரு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்டதொரு கல்விச் சூழலிலே நாம் 110 கோடி ரூபாயைச் செலவழிக்கிறோம் என்று பெருமைப் பட்டாலும்கூட, வளர்ந்திருக்கிற கல்விக் கூடங்களின் எண்ணிக்கையை நோக்குகிறபோது, இந்தத் தொகை பற்றாக்குறையானது என்பது நமக்குத் தெரியும். பல பள்ளிக்கூடங்களில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இல்லை; சிறந்த நூலகங்கள் இல்லை; பல வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இவைகளை நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, வேறு ஏதாவது சிறப்பு நிதி திரட்டுகிற முறைகளைக் கையாண்டு, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சுவையோடு கல்வியை மாணவர்களுக்குப் புகட்டும்படி செய்ய வேண்டும். அதுவரை இதுபோன்ற கல்விச் சூழல்கள் தவிர்க்க முடியாதவையாகும். இப்போது பெரும்பாலான மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டாமல், குறிப்புப் புத்தகங்களைப் படித்துவிட்டுத் தேர்வு எழுதுகிற நிலைமை

இருக்கிறது. இந்த அரசு ஒரு முற்போக்கான அரசாக இருக்கின்றதால், அதை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். முதலில் குறிப்புப் புத்தகங்களைத் தடை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நல்ல சிந்தனையாளர்கள் தோன்ற முடியும். இப்போது வினா-விடைகளாகத் தயார் செய்து, அதை மாணவர்கள் மனப்பாடம் செய்தால், நிச்சயமாகத் தேர்விலே வெற்றி பெறச் செய்து விடலாம் என்று நினைப்பதன் காரணமாகத்தான் சில தவறுகள் தோன்று கின்றன. அதைப்பற்றியெல்லாம் நன்கு ஆலோசனை செய்ய வேண்டுமென்று— மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களும், நானும் ஒரு ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்டபோது—நான் சொன்னேன்; அப்போது, நாவலர் அவர்கள் அதைச் செய்யலாம்; ஆனால் சட்டத் துறை ஆராய வேண்டுமென்று சொன்னார்கள். எனவே அதைப் பற்றி ஆய்வு செய்து, மாணவர்கள் அடக்க மாக இருந்து, ஆசிரியர்களிடத்தில் கல்வி பெறுகின்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தி, வேறு துறைகளில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தும் சூழ்நிலைகளை மாற்ற வேண்டும். அப்போதுதான் அமைதி உண்டாக்க முடியும்.

கல்வித் துறையிலுள்ள ஒரு முக்கியமான செய்தியை மாண்புமிகு உறுப் பினரவர்கள் நினைவுபடுத்தினார்கள். பொதுவாக மொழி அறிவுதான் கற்றுக் கொடுக்கப்படுகிறது; பொருள் அறிவு மிகக் குறைவாகக் கற்றுக் கொடுக்கப் படுகிறது. பல பேர் சிறந்த பொருள் அறிவுத் திறன் இல்லாமல் போய் விடுகிறார்கள். இவைகளையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ஒரு விரிவு அலுவலரை அமைத்து, பொருளறிவில் மாணவர்கள் திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். கல்வி என்பது, தோண்டத் தோண்ட ஊறும் கிணற்றுத் தண்ணீர் போல ஊறுவது. எனவே இந்தத் துறையில் நம்முடைய அரசு கவனம் எடுத்துக்கொண்டு, பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும் தகுந்த அலுவலர்களை துறை தோறும் நியமித்து, 24 மணி நேரமும், புதிய செய்திகளை மாணவர்களுக்குச் சென்று சேர்ப்பிப்பதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களிடையே அருமையான கருத்துக்களை உருவாக்க முடியுமென்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

நம்முடைய மேலவை உறுப்பினர் திரு. கே. எஸ். கணபதி அவர்கள் கூறியதுபோல, கல்வி உலகத்திலே, மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டதால், குறைகள் அதிகமாக வந்துள்ளன. எனவே மாணவர்கள் பரபரப்பான செய்திகளுக்கு இரையாகாமல் இருப்பதற்காக மாநில அளவில் உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்து, ஏதாவது ஒரு குறை தோன்றியவுடன்



அதற்குத் தீர்வு காண்பதுபற்றி அந்தக் குழு ஆராய வேண்டும். தரமான கல்வி பள்ளிகளில் கிடைக்க வேண்டுமென்று சொன்னால்—இப்போது இலங்கை யில் திறந்துள்ள விஞ்ஞானக் கூடங்களில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு, எவ்வளவு தனிக் கட்டணம் விதிக்கிறார்களோ, அதற்கு ஈடாக அரசு அந்த விஞ்ஞானக் கல்விக்கு மானியம் கொடுப்பது என்பது அங்கே நடைமுறையில் இருக்கிறது. நாம் சில ஆண்டுகளுக்கு முன்பு மாணவர்களிடமிருந்து இலக் கியத்திற்காகவும், அறிவியலுக்காகவும் தனிக் கட்டணம் வசூலித்தோம். ஆனால் மற்றவர்கள் போட்ட கூச்சலைக் கேட்டு, அதிலிருந்து பள்ளிக்கூட வசதிக் கட் டணமாக ஐந்து ரூபாய் எடுத்துக்கொள்ளலாமென்று உத்தரவு போட்டிருக்கி றோம். ஒரு பள்ளியில் 4 இலக்கிய மன்றக் கூட்டங்கள் நடத்த முடியவில்லை. 4 மாதிரி செய்முறைப் பாடம் நடத்த முடியவில்லை. பொருள்களின் விலை ஏராளமாக ஆகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில், அங்கே வசூலிக்கப்படுகிற

(பிற்பகல் 6.20)

தனிக் கட்டணங்களை, அறிவியல் சம்பந்தப்பட்ட செயல்களுக்கும், இலக்கியம் சம்பந்தப்பட்டவைகளுக்கும் மட்டும் கொடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டு மென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஒருகால் அரசு அது புதிய செலவு என்று கருதினால், பள்ளிக்கூடத்தின் வசதிக்காக தனிக் கட்டணத் திலிருந்து ஐந்து ரூபாய் எடுத்துக்கொள்ளலாம் என்று போட்ட உத்தரவைத் திரும்பப் பெற்று, மாணவர்கள் சிறந்த கல்வி ஆர்வத்தோடு, பல்வேறு சிந்தனை களைப் பெறுதற்குரிய வாய்ப்பினை வழங்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அருமை நண்பர் திரு. சங்கரலிங்கனார் அவர்கள் மிக அருமையாகச் சில செய்திகளைச் சொன்னார்கள். நமது நாட்டில் 3 ஆண்டுகளாக அடிக்கடி அரசு அப்படிக் கருதுகிறது என்று செய்தித்தாளில் அறிக்கை வந்துகொண் டிருந்தது. நடைமுறையில் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதனை அரசிற்கு இப்போது நினைவூட்டிக் கொள்கின்றேன். எல்லோரும் கிட்டத்தட்ட இப்போது உயர்நிலைக் கல்விக்குப் போய்வருகிறார்கள். கல்லூரிக்கு வருகிற வர்கள் அவ்வளவு பேருக்கும் அரசு வேலை தேடித் தரும் இயந்திரமாக இருப்பது என்பது சாத்தியமல்ல. எனவே பகுதி நேரத் தொழில் படிப்பை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயப்படுத்தி, மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியே வருகின்றபோது, இரண்டு சான்றிதழ்களோடு வரும்படியாக, ஒன்று பள்ளி இறுதித் தேர்வு சான்றிதழும், மற்றொன்று வேறு ஏதாவது ஒரு தொழில் நுட்பத் தேர்வு சான்றிதழும் பெற்று வரவேண்டும் என்ற முறையில் செய்ய

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1974 மார்ச் 12

முடியாதா? அப்படிச் செய்வதன் மூலம் பள்ளியை விட்டு வந்ததும், அந்த மாணவர் ஏதாவது அலுவலில் புக எளிய அமைப்பை உருவாக்க முடியாதா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும்.

அதேபோல் ஒன்பதாவது வகுப்பிலிருந்து நாம் சான்றிதழ்ப் புத்தகம் திறந்து விடுகிறோம். அதிலே நமது மாணவர்களுடைய ஆர்வம் பற்றிக் குறித்துக்கொண்டு வரவேண்டும். ஒரு மாணவனுக்கு சொற்பயிற்சி நிறைய இருக்கிறது என்றால், அவனுக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம், ஒரு மாணவனுக்கு அறிவியலில் ஆர்வம் இருக்கிறது என்றால், அந்தத் துறையில் அவனுக்கு இடம் என்ற முறையில், ஒவ்வொரு மாணவனுடைய சான்றிதழ்ப் புத்தகமும் அவரவர்க்கு எந்தத் துறையில் இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றிக் காட்ட வேண்டும். இப்போது அது ஏதோ இசை நாற்காலிப் போட்டி போல, மாணவனுக்கு விருப்பம் இல்லாத துறைக்குக் கூடத் தள்ளப்படுகின்றான். அவன் அங்கே உட்கார்ந்த பிறகு, அந்தத் துறையில் ஈடுபாடு காரணமாக, மனப்பாடம் செய்து வெற்றி பெற்று வருகிறான். இந்த முறைகளை மாற்ற வேண்டுமென்றால், 9, 10, 11-வது வகுப்புகளில் இருக்கிற பாடங்களில், ஒவ்வொரு மாணவனும் எந்தெந்தத் துறையில் ஆர்வம் காட்டுகிறான், சிறப்பான முயற்சிகள் செய்கிறான், ஈடுபாடு கொள்கிறான் என்பதைச் சான்றிதழ் புத்தகத்தில் குறித்துக்கொண்டு வந்தால், அவர்கள் மேல் கல்விக்கு வருகிறபோது, அதற்குத் தகுந்தாற்போல் அவரவர்களை மாற்றிவிட முடியும். அப்போது பெரிய சிக்கல் தோன்றாது. தரமான அறிவும் கிடைக்க முடியும். அந்த முயற்சியையும் நமது அரசு மேற்கொள்ள வேண்டும்.

நமது அரசு 800 மதிப்பெண் என்ற புதிய திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. இது ஒரு சிறந்த முயற்சி. பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக வராத மாணவர்கள் பள்ளித் தேர்வில் வெற்றி பெற்றிடும் காரணத்தால், ஆசிரியர்களிடத்தில் மரியாதை குறைந்து போகிறது. இந்த 800 மதிப்பெண் என்ற திட்டத்தில் மாணவர்கள் பள்ளிக்கு ஒழுங்காக வருதல், நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்துப் படித்தல், அன்றாட வீட்டு வேலையை ஒழுங்காகச் செய்தல் ஆகியவைகளை ஆசிரியர்கள் மதிப்பிட வேண்டும் என்று நமது அரசு அறிவித்திருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், மாநிலத்தில் சில பள்ளிகளில் மட்டுமே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருப்பதாக அறிவித்தார்கள். மாநிலம் முழுவதும் 800 மதிப்பெண்கள் திட்டத்தை அறிமுகப்படுத்தினால்,

1974 மார்ச் 12] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

மாணவர் உலகத்தில் சிறந்த கட்டுப்பாடும் நல்ல பழக்க வழக்கங்களும் தானாக உருவாகும். வசதியில்லாத பள்ளிக்கூடங்களுக்கு, நூலகம் இல்லாத பள்ளிகளுக்கு வேண்டுமானால், அதற்கென 100 எண்ணை விலக்கிக்கொள்ளலாம். இருந்தாலும் இந்த நல்ல முறையை நாடு முழுவதும் அறிமுகப்படுத்த வேண்டும். அது கல்வி உலகத்தில் பெரிய மாறுதலை உருவாக்க முடியும் என்று கூடக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பிழை இல்லாமல் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டால்தான், கல்வியின் பலன் கிடைக்கும். தம்மைப் பொறுத்தவரையில், ஆங்கிலமானாலும் சரி, தமிழானாலும் சரி, பிழை இல்லாமல் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வதற்குக் களமாக அமைந்துள்ள ஆரம்பப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகளில் முதிய ஆசிரியர்களை நியமிக்க அஞ்சுவதால், பிழையில்லாமல் படிக்கிற பயிற்சி குறைந்து போகிறது. இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்று ஏற்கெனவே கொள்கை அளவில் நமது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் பிறந்த தமிழ்க் குழந்தை எட்டாவது வகுப்பு தேறிய பிறகும் பிழை இல்லாமல் தமிழில் எழுத முடியாத நிலையில் இருந்தால், அது தமிழ் வரலாற்றுக்கே, தமிழ்க் குழந்தைக்கே இழுக்காகும். இடைநிலைப் பள்ளியில் தமிழாசிரியர்கள் நியமிப்பதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் செயல்படுத்துவதில் தயக்கம் இருப்பது போலத் தெரிய வருகிறது. தமிழ் நாட்டுக் குழந்தைகள் எட்டாவது வகுப்பு வரையில் நல்ல மொழி அறிவைப் பெற்று, தெளிவாகச் சொன்னால் 11-வது வகுப்புக்குள் தமிழ்நாட்டுக் குழந்தைகள் மொழி அறிவுப் படிப்பை முடித்துக்கொண்டு, அதற்கு மேல் கல்லூரிக்கு வருகின்றபோது, பொருள் அறிவைப் பெறப் படிப்பது என்ற முயற்சியை எடுத்துக்கொண்டால், தரமான பொருளறிவு நாட்டில் வளர முடியும். ஆதலால் இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியரை நியமிப்பது, உடற்பயிற்சி ஆசிரியரை நியமிப்பது பற்றி ஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ப் புலவர்களில் பலர் தேர்ச்சி பெற்றும் ஆசிரியர் பயிற்சி பெறாமல் இருக்கிறார்கள். அதில் ஒரு விநோதமான சூழ்நிலை என்னவென்றால், அவர்கள் ஆசிரியர் பயிற்சிக்குச் சென்றால், பணியில் அனுபவம் இருக்க வேண்டும் என்கிறார்கள். பணியில் நியமிக்க வேண்டுமென்றால், பயிற்சி பெறாமல் நியமிக்கக் கூடாது என்கிறார்கள். பயிற்சிக்குச் செல்லுகிறபோது பணியில் அனுபவம் வேண்டும் என்கிறார்கள். பணிக்காகக் கோரிக்கை விட்டு, விண்ணப்பம் போட்டால், பயிற்சி பெறாதவர்களை நியமிக்காதீர்கள் என்கிறார்கள். இந்த இக்கட்டான நிலைமையை மாற்றி எல்லாப் புலவர்களுக்கும் [illegible]

முறை வைத்து பயிற்சி பெறுவதற்கு உரிய வாய்ப்பைத் தரவேண்டும். அதில் ஒரு நடைமுறை என்னவென்றால் புலவர் தேர்வில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என்று தேர்ச்சி பெறுகிறார்கள். மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற புலவர்களுக்கு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் இடம் இல்லை என்று கட்டாயமாக அறிவித்து விடுகிறார்கள். ஓரளவுக்கு மொழித் தரத்தைப் பொறுத்தவரையில், எனக்குக் கொள்கையளவில் உடன்பாடுதான். மூன்றாம் வகுப்பு என்றால் தேர்ச்சி கொடுக்காமல், இருப்பதே இரண்டு வகுப்புத்தான் என்று அறிவித்து விட்டால், புலவர் வகுப்பு மாணவர்கள் அதிகமான மதிப்பெண்கள் பெற்றுத் தேற முயற்சி செய்வார்கள். அவர்களுக்கு மூன்றாம் வகுப்புத் தேர்ச்சியும் உண்டு என்று அனுமதித்துவிட்டு அவர்கள் மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின் பயிற்சி பெற முடியாமல் இருக்கிறபோது, அல்லல்படுகிறார்கள். தரம் உயர வேண்டுமென்று அரசு கருதினால், அது நல்ல முயற்சி, நல்ல எண்ணம். புலவர் மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும் பயிற்சிக்கு இடம் கிடைக்காமல் அல்லல்படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகள், வசதி வாய்ப்பு இல்லாதவர்கள்தான். அவர்கள் அந்தப் பயிற்சி பெற்று வேலை கிடைக்காது போனால், அவர்களுடைய வாழ்க்கை மிகுந்த அல்லலுக்கு உள்ளாகிறது. அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு ஒன்றுமே விளையாமல் சாவியாகப் போயிருக்கிறது. பல கிராமங்களில் நிலவள வங்கி மூலமாகவும், வேறு அரசுத் திட்டங்கள் மூலமாகவும் கொடுக்கப்பட்ட கடனை வஜா செய்ய நமது அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. அதைப்போல நிலவள வங்கி, கூட்டுறவு வங்கிக் கடன்களை ஓராண்டுக்குத் தள்ளி வைத்து விவசாயிகளுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சொன்ன செய்தியை நானும் என்னுடைய உரையில் குறிப்பிட வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதிகமாகக் கால்நடைகள் கேரளாவுக்குக் கடத்தப்படுவதாகச் செய்திகள் வந்ததாகக் குறிப்பிட்டார். நாமும் சாலைகளில் வரும்போது சாரி சாரியாக மாடுகள் போவதைப் பார்க்கிறோம். எங்கே போகிறது என்றால், கேரளாவுக்குக் கடத்தப்பட்டு, அங்கே போய் அடிக்கப்படுகிறது என்கிறார்கள். நமது வற்றா கால்நடைச் செல்வத்தை வேறு மாநிலத்திற்குக் கடத்திக் கொண்டு போகிறார்கள். நான்கூட கால்நடை இயக்குநரிடம் கேட்டேன்;



தரம் இல்லாத மாடுகளைக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னார். இருந்தாலும் கூட, அரசு பரவலாக இந்தக் கடத்தல் நடைபெறுவதைக் கவனத்தில் கொண்டு ஆராய வேண்டுமென்று நினைவூட்டிக்கொள்கிறேன்.

சாதாரணமாக நமது கதர் கிராமத் தொழில் கழகத்தைப் பொறுத்த வரையில், எனக்கும் அதில் தொடர்பு உண்டு என்பதால், சில செய்திகளை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பெரிய தொழிற்சாலையை வைத்து, வேலை கொடுக்க வேண்டுமென்றால், மூலதனம் அதிகம் தேவை. ஆனால் கிராமப் புறங்களில் கதர் கிராமத் தொழில் மூலம் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்றால், அதற்கு மூலதனம் குறைவாக இருந்தால் போதுமானது. ஆதலால் தான் காந்தியடிகள் காதி கிராமத் தொழிலை அறிமுகப்படுத்தினார்கள். அரசு 35 லட்ச ரூபாய் அதற்குக் கொடுப்பதாக இருந்தாலும், கிட்டத்தட்ட 19 லட்ச ரூபாய் வேறுவிதமாக, ஆடிட் போன்றவற்றிற்குப் போய்விடுகின்றது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேருக்கு மேலாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். வேறு பெரிய தொழிலில் இந்த மூலதன அளவிற்கு இவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியாது. ஆதலால் இந்தத் தொழிற் கழகத்தை மேலும் ஊக்குவித்து, கிராமப் புறங்களில் இருக்கிற வேலையில்லாது அவதிப்படுகின்ற மக்களுக்கும், வருமான உயர்வு இல்லாமல் அல்லல்படும் விவசாய மக்களுக்கும் சிறந்த வேலை வாய்ப்பைத் தர, கதர் கிராமத் தொழில்களை மேலும் கிராமப் புறங்களுக்கு விஸ்தரிக்கும் வகையில், அதிகமாக மான்யம் கொடுத்து உதவி செய்வது உடனடியான தேவை.

பல கிராமங்களில் இன்றைக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுக்கின்றபோது, ஒரு விவசாயிக்கு 3 ஏக்கர் என்று கொடுக்கிறோம். அவனுக்குக் கட்டுப்படியாகக் கூடிய நிலையில் இருக்கிறதா என்றால், இல்லை. அவனது எளிய நிலையில் அதிக ஊதியம் பெற வேண்டுமென்றால், கிராமத் தொழில் மூலம்தான் முடியும். காதி கிராமத் தொழிலைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே லாபமாகவும், அதிக இழப்பு இல்லாமலும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கிராமப் புறங்களில் வேறு வகையான தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்கு மூலதனம் தேவைப்படும். காதி கிராமத் தொழிலுக்கு அவ்வளவு தேவைப்படாது. ஆதலால், காதி கிராமத் தொழிலை மேலும் விஸ்தரிக்க வேண்டும். அதை நமது அரசு ஏற்கெனவே பரவலாகச் செய்துகொண்டிருக்கிறது. மேலும் அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1974 மார்ச் 12

நமது அறநிலையத்தைப் பொறுத்த வரையில், என்னுடைய சொந்த அனுபவங்கள் சிலவற்றை நினைவிற்கொண்டு, ஏற்கெனவே சென்ற தடவை பெரியார் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தின் பேரில் பேசும்போது சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நமது சமயத்தையும், சமூகத்தையும் சீர்திருத்த வேண்டுமென்று பேசிக்கொண்டு வருகிறோம். கருத்துக்கள் மோதிக் கொண்டிருக்கின்றன. சிந்தனைச் செல்வம் வளர்ந்திருக்கின்றது. இவற்றை ஒருமுகப்படுத்தி வடிவம் கொடுக்க யாரும் முயற்சி செய்யவில்லை. வள்ளலார் பாடியது தனியாக இருக்கிறது. அப்பர் பாடியது தனியாக இருக்கிறது. இவற்றை ஒருமுனைப்படுத்தி எவற்றைச் செயல்படுத்த முடியும், எவற்றைச் செயல்படுத்த முடியாது என்று தீர்வு காண்கின்ற முயற்சியை யாரும் மேற்கொள்ளாது இருப்பதால், ஒரு சீர்திருத்தக் கமிஷன் போட்டு ஆராய்ந்து ஒருமுனைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6.30)

நம்முடைய முதல்வர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு அறிவித்திருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், இந்த ஆண்டு இப்போது நம்முடைய முதலமைச்சர் பதிலில் அப்படி ஒரு ஆணைக் குழுவை அவர் அறிவிப்பாரானால், நம்முடைய அர்ச்சகர் பயிற்சி போன்ற பல சிக்கல்களுக்குக்கூட விடைகாண முடியும். நடுவண் அரசு சட்டத்தைத் திருத்த நாம் வலியுறுத்துவதற்கு முன்னால்கூட நாட்டு மக்களுடைய கருத்தை அதற்குச் சாதகமாக உருவாக்குவது என்பது உடனடியாக அவசியமான பணி. நாட்டிலேகூட பழக்க வழக்கத்தின் காரணமாக பல மாறுதல்களை ஏற்றுக்கொள்ளக் கூச்சப்படுவார்கள். அவர்களைக்கூட பக்குவப்படுத்தி அவர்களுடைய கருத்தை உருவாக்குவது சிறந்த பணி. அந்தப் பணியில் நம்முடைய அரசு மிகுந்த கவனத்தை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுவாக, திருப்பணிக்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட தமிழகத் திருக்கோயில்களைப் பொறுத்த வரையில், பல கிராமங்களிலே திருக்கோயில்கள் திருத்தப்படவேண்டியிருக்கின்றன. குறிப்பாக ராஜேந்திரன் எழுப்பிய கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயில், அப்பர் அடிகளை தமிழகத்திற்குத் தந்த திருவதிகைத் திருக்கோயில்; திருவாசகம் பிறந்த நிலைக்களமாயிருந்த திருப்பெருந்துறைத் திருக்கோயில் போன்ற சிவத்தலங்கள் கூடத் திருப்பணிகள் தொடங்கப்பட்டும், நிதி முட்டுப்பாட்டின் காரணமாக நிறைவேறாமல் இருக்கின்றன. நான் குறிப்பிட்ட தலங்கள் தமிழ் நாட்டின் வரலாற்றுச் சிறப்



1974 மார்ச் 12] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

புடைய திருத்தலங்கள். ராஜராஜனுடைய மகன் ராஜேந்திரன் வட்புலம்
வரையில் சென்று, கங்கை வரையில் சென்று, வெற்றி பெற்று, பெற்றுவந்த
வெற்றியின் சின்னமாகக் கங்கைகொண்ட சோழபுரத் திருக்கோயிலை
எடுத்தான். அது இன்றைக்கு இடிந்துகொண்டிருக்கிறது. அதற்கு நமது
மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு உதவி செய்திருக்
கிறார்கள். மிகச் சிறந்த சிவத்தலமான அத் திருக்கோயிலை, நிச்சயமாக
நடுவண் அரசின் பாதுகாப்புப் பொருள் என்ற அடிப்படையில் தடை செய்ய
லாம். அதிலேயிருந்து விதிவிலக்கு கேட்டு நமது அமைச்சர் அவர்கள்
அவிநாசிக்கு உரிமை பெற்று திருப்பணி செய்துகொண்டிருப்பது போல
கங்கைகொண்டசோழபுரம் திருக்கோயிலுக்கும் விதிவிலக்குப் பெற்றுத்
திருப்பணி செய்ய வேண்டும்.

அதேபோல ஏழாம் நூற்றுண்டில் சமணர்களின் கருத்துக்களை எதிர்த்து
நின்ற நமது அப்பர் அடிகள் நமது சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டார்கள்.
உலகத் தமிழ் மாநாட்டின்போது பல புலவர்களின் சிலைகள் வைப்பதுபோல்
அப்பர் அடிகளின் சிலையையும் வைக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்
களைக் கண்டு பேச வந்திருந்தேன். அப்பொழுது நமது முதல்வர் அவர்
களும் இருந்தார்கள். நான் அப்பர் அடிகள் பெயரைச் சொன்ன உடனேயே
“நாம் யார்க்கும் குடியல்லோம் என்ற பாடலைப் பாடியவர்தானே, அவருக்கு
சிலை வைப்பது மிகவும் வரவேற்கத் தக்கது, பாராட்டத் தக்கது” என்று
சொல்லிவிட்டு அப்பாடிகள் சிலையை வைக்காமல் இருப்பதற்கு வேறொரு நளின
மான சமாதானத்தைச் சொல்லி அனுப்பிவிட்டார்கள். அவர் சொல்லிய
சமாதானம் ஏற்புடையதாக இருந்தது. பலர் அப்பர் அடிகளை வழிபாட்டுத்
தெய்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே தெருவில் சிலை வைத்
தால் மற்றவர்களுடைய மனம் புண்படும். ஆதலாலே அந்த முயற்சியை
நிறுத்திவிட்டு அப்படி அடிகள் பெயராலே ஒரு மண்டபம் வைப்போம்,
அங்கே பளிங்கினாலே உயர்ந்த சிலை வைப்போம், நிச்சயமாக சிலை வைப்போம்
என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பதிலைக் கொடுத்தார்கள். ஆக
அவர்கள்கூட போற்றுகின்ற, அருமையான பகுத்தறிவு சீர்திருத்தக்
கருத்துக்களை ஏழாம் நூற்றுண்டிலேயே சொன்னவர். இன்றைக்கு ஜாதி
முறைகளை எதிர்த்துப் பேசுவதுபோல, அன்றைக்கே “சாத்திரம் பல பேசும்
சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்” என்று முழங்
கினர், தமிழகத்திற்கு இந்தச் செய்தியைக் கொடுத்த, இந்தக் குரலைக்
கொடுத்த அப்பரடிகள் போற்றிய திருத்தலம் இருக்கிறதே, அதை நாம்
நிச்சயமாகத் திருப்பணி செய்து, ஒரு பெரிய சுற்றுலா தலமாகக் கூட ஆக்க
வேண்டும். அந்த இடத்தில் திலகவதியார் தவம் செய்த அந்த மனையும்

பாழாகியிருக்கிறது. அந்த மனையையும் சிறந்த முறையிலே திருப்பணி செய்ய வேண்டும். அந்த மடங்கள் செய்யவேண்டும் என்று மடங்கள்மீது அந்தப் பொறுப்பை அரசு மாற்றியது. அறநிலைய அமைச்சர் அவர்கள் அதற்குள்ளே இருக்கிற சிக்கல்களைப் புரிந்துகொண்டிருக்கிற காரணத்தால், அரசு அதிலே அக்கறை காட்டி இந்த மனையை சமயச் சின்னமாக, நமது அறநிலையத்தின் சின்னமாக ஆக்கி, அதற்கு ஒரு புதிய பொலிவையும், அழகையும் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக அறங்காவலர்கள் நியமனம் பற்றி அடிக்கடி சொல்லப்படுகிறது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்று பேசப்பட்டது. ஆனால் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை நியமிப்பதாலேயே அதிகப் பயன் கிடைத்துவிடாது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களிலே கூட திருக்கோயில் வழிபாடு, திருவுரு வழிவாடு ஆகியவற்றிலே நம்பிக்கை வைக்காதவர்கள் இருக்கின்றார்கள். திருக்கோயில் வழிபாட்டிலே நம்பிக்கை உள்ளவர்கள்கூட, சாமி கும்பிட்டுவிட்டு, அர்ச்சனை செய்த தேங்காயை பிரகாரத்திலே வைத்துத் தின்றுவிட்டு அங்கேயே கொட்டாங்கச்சியையும் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு திருக்கோயிலைப் பேணுகிற ஆர்வம் இருக்காது. ஆகவே திருக்கோயிலைப் பேணுகிற உணர்ச்சி உடையவர்களை நியமிக்க வேண்டும். இன்றைக்குப் பழனியை எடுத்துக்கொண்டால், மிகச் சிறப்பாக அந்தத் திருக்கோயில் நடைபெறுகிறது. அதனுடைய தத்துவத்திற்கு ஏற்றமாகிரி வளர்ந்துகொண்டிருக்கிறது. யாரும் குறை சொல்ல முடியாது. அதேபோல கருமாரி அம்மன் கோயில், சிறந்த வளர்ச்சி பெற்று இருக்கிறது. திருத்தணிக் கோயிலில் நல்ல அளவில் சிறந்த முறையில் பணிகள் நடக்கின்றன. இன்னும் அந்தத் துறையிலே அதிக கவனம் நமது அரசு செலுத்த வேண்டும். இந்தத் திருக்கோயில்கள் சமுதாயத்தின் பணிமனைகளாக, ஒரு காலத்தில் இருந்தன. ஓய்வுக்கும், மகிழ்வுக்கும், மன அமைதிக்குங்கூட இந்தத் திருக்கோயில்கள்தான் ஒரு காலத்திலே மனித சமுதாயத்திற்குத் துணையாக இருந்தன. அண்மைக் காலத்தில், திருக்கோயில் ஒருபுறம், சமுதாயம் ஒரு புறம், திருமடம் ஒருபுறம் என்று இப்படி இந்து சமுதாயம் சிதறியிருக்கின்ற கொடுமையைப் பார்க்கின்றோம். இவற்றை ஒருங்கிணைக்கிற முயற்சியை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். ஒரு இந்து என்று சொன்னால், அவனுக்கு உத்தரவாதம் கொடுக்கின்ற ஒரு பெரிய அமைப்பு, ஒரு பெரிய சபை இருக்கவேண்டும். இன்றைக்குப் பல சிக்கல்களுக்கு இடையே அவன் சிக்கித் தவிக்கின்றபோது, அவனைப் பாதுகாக்கின்ற பொறுப்பை—பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையிலும் நம்முடைய நல்ல உள்ளம் படைத்த அறநிலைய அமைச்சரவர்கள் எண்ணிப் பார்த்து, திருக்





கோயில்களுக்கு மட்டும் பாதுகாப்பாக இல்லாமல், இந்து சமுதாயத்திற்குக் கூட, ஓர் இந்துவினுடைய பாரம்பர்யமான நம்பிக்கைக்கும், கலையார்வத் திற்கும், அவனுடைய எதிர்காலத்திற்குங்கூட, சிறந்த அரணும் பாதுகாப்பும் தர வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை நான்கு மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

### 3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

167. Notification issued with G.O. Ms. No. 3532, Revenue, dated the 30th December 1972, in regard to amendments to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

168. Balance Sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warshousing Corporation, Madras for the year 1971-72. [Laid on the table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962).]

### B. *Reports, Notifications and Other Papers.*

34. Notification issued with G.O. Ms. No. 7214, Revenue, dated the 3rd Decembe r1973; in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed to be executed by the Alathambadi Village Industries Co-operative Society, Alathambadi in favour of the Chief Executive Officer, Tamil Nadu Khadi and Village Industries Board, Madras.

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

## புதன்கிழமை, 1974 மார்ச் 13.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Erection of a statue of King Bhaskara Sethupathi at Vivekananda Rock*

* @ 151 *Q.*—THIRU S. S. RAMASAMY PADAYACHI (on behalf of THIRU R. SAKTHI MOHAN) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to erect at Vivekananda Rock, Kanyakumari, a statue of King Bhaskara Sethupathi in pursuance of the assurance of the chief Minister given at the time of the inauguration of this Rock and in response to the unanimous representation of the people of Tamil Nadu; and

(*b*) if so, the present stage of the proposal?

### விவேகானந்தர் பாறையில் சேது மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் உருவச் சிலையை நிறுவுதல்

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி (திரு. ஆர். சக்தி மோகன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையில் சேது மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் உருவச் சிலையை நிறுவ ஏற்பாடு செய்வதாக முதல்வரவர்கள் அம்மன்றத் திறப்பு விழா சமயம் கூறியிருப்பதற்கொப்பவும்

---

@ 11—3—1974 நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

விவேகானந்தர் பாறையில் பாஸ்கர சேதுபதி அவர்களின் உருவச் சிலை நிறுவப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் ஒருமித்த விருப்பத்திற் கொப்பவும் பாஸ்கர சேதுபதி அவர்களின் உருவச் சிலையை விவேகானந்தர் பாறையில் நிறுவ தமிழக அரசிடம் செயற் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், அது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) இராமநாதபுரம் ராஜா திரு. பாஸ்கர சேதுபதி அவர்களின் உருவச் சிலையை கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையில் நிறுவும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

## *Statues of G. U. Pope and Caldwell installed on the Beach Road, Madras*

* @ 152 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU D. SATTOSHAM): Will the Hon. the Chief Minister be pleased state—

(a) whether the statues of G.U. Pope and Caldwell installed on the Beach Road, Madras, during the World Tamil Conference have been removed;

(b) whether representations have been received to reinstall them without delay; and

(c) if so, the action taken thereon?

## சென்னை கடற்கரைச் சாலையில் வைக்கப்பட்ட ஜி. யு. போப், கால்டுவெல் ஆகியோரின் சிலைகள்

**திரு. எல். பலராமன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு முதல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உலகத் தமிழ் மாநாட்டின் போது சென்னை கடற்கரைச் சாலையில் வைக்கப்பட்ட ஜி. யு. போப், கால்டுவெல் ஆகியோரின் சிலைகள் அகற்றப் பட்டுள்ளனவா?

(இ) காலதாமதம் இல்லாமல் மீண்டும் அச்சிலைகளை நிறுவும்படி முறை யீடு வந்துள்ளதா?

@ 11—3—1974 நாள் வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.





(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம். அவற்றிற்குப் பதிலாக வெண்கலச் சிலைகள் வைக்கப்படுவதற்காக அவை அகற்றப்பட்டன.

(இ) ஆம். தமிழ்நாடு கிறித்துவ ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளரிடமிருந்து முறையீடு வந்துள்ளது.

(உ) ஜி. யு. போப், கால்டுவெல் சிலைகள் முதற்கண் சென்னை பிஷப்பால் நன்கொடையாக வழங்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக வெண்கலச் சிலைகள் வைக்கப்பட வேண்டியிருப்பதால், இது குறித்து விரைவான நடவடிக்கை எடுக்க அவருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இச்சிலைகளை முதற்கண் நன்கொடையாக அளித்தவருடன் தொடர்பு கொள்ளுமாறு கிறித்துவ ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளரும் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

கால்டுவெல் அவர்களுடைய சிலை இம்மாத இறுதியில் நிறுவப்படுவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இது போன்றே வெண்கலமல்லாத மற்ற சிலைகளையும் வெண்கலத்தில் அமைக்க அரசு உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்போதுள்ள எல்லாச் சிலைகளுமே வெண்கலத்தாலான சிலைகளாகத்தான் இருக்கின்றன. ஜி. யு. போப், கால்டுவெல் சிலைகள் மாத்திரம்தான் மாவினால் ஆன சிலைகளாக இருந்தன. அவற்றை அகற்றிவிட்டு, பதிலாக வெண்கலத்தினால் ஆன சிலைகளை வைப்பதற்கு சிற்பியிடம் பிஷப் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். சிற்பி யுடைய காலதாமதம் காரணமாக சிலைகள் வராமல் இருந்தன. பின்னர் அரசும் பிஷப் அவர்களும் இணைந்து எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக இப்போதுதான், கடந்த நான்காண்டுகளுக்குப் பிறகு ஒரு சிலை சிற்பியால் தரப்பட்டுள்ளது. இப்போது அந்தச் சிலை வைக்கப்பட இருக்கின்றது. இன்னொரு சிலையும் தயாராகிக்கொண்டிருக்கின்றது.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, திருவள்ளுவர் சிலை கற்சிலை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம். கற்சிலைதான்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government consider putting all these statues together, either near the Rajaji Hall or in the Museum, instead of putting them so far away making it difficult for people to know about these personalities at one stretch?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கண்காட்சியில் வைக்கப்பட வேண்டிய சிலைகள் என்ற அளவிற்கு இந்தச் சிலைகளெல்லாம் தகுதியினை இழந்து விடவில்லை. உலகில் பல்வேறு இடங்களிலே, 'சிலை நகரங்கள்' என்று அழைக்கப்படும் அளவிற்கு பல நகரங்கள் இருக்கின்றன. அது போன்றே புகழ் படைத்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், பெரும் அரசியல் தலைவர்கள், விடுதலை வீரர்கள் இவர்களுடைய சிலைகளை நகரின் பொது இடங்களிலே வைப்பது, அவர்களுக்கு நாம் மரியாதை தெரிவிப்பதற்காக மட்டுமல்லை, அப்படிப்பட்டவர்களுடைய சிலைகளைக் காணும் நோக்கிலே நாமும் அவர்கள் பெற்றிருந்த உணர்வுகளைப் பெறுவோம், அவர்களுடைய மொழிப் பற்றினை, தேசப் பற்றினைப் பெறுவோம் என்ற முறையில்தானே தவிர வேறு இல்லை. ஒரே கூட்டமாக அவற்றை நவக்கிரகங்களைப்போல ஒரு இடத்தில் வைப்பது இயலாத காரியம், நல்லதும் இல்லை.

*Professors of former Rajah Serfoji College, Thanjavur*

* 181 Q.—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, under G.O. Ms. No. 375, Education, dated 10th March 1971 relaxation of period of probation had been granted in the case of Professors of former Rajah Serfoji College, Thanjavur;

(b) whether any representation has been made by Assistant Professors, Tutors, Demonstrators and the non-teaching staff of the above College requesting similar concessions; and

(c) if so, the action taken thereon?



**தஞ்சை முன்னாள் சரபோஜி மன்னர் கல்லூரிப் பேராசிரியர்கள்**

**திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை முன்னாள் சரபோஜி மன்னர் கல்லூரிப் பேராசிரியர்களின் நேர்வில், கல்வித்துறையின் 10—3—1971 நாளிட்ட 375 ஆம் எண் அரசு ஆணையின்கீழ் தகுதிகாண் கால அளவு தளர்த்தப்பட்டுள்ளதென்பது உண்மையா?

(இ) இதையொத்த சலுகைகள் கோரி, மேற்கூறப்பட்ட கல்லூரியில் பணியாற்றும் உதவிப்பேராசிரியர்கள், சிற்றாசிரியர்கள், விளக்குநர்கள், மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடு ஏதேனும் வரப்பெற்றுள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Non-availability of seats in the Teachers' Training College*

182 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government are aware of the fact that Branch XII-B Tamil B.A. graduates are suffering a lot due to non-availability of seats in the Teachers' Training College; and

(b) if so, the action taken thereon by the Government?

**ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் இடநெருக்கடி**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 12-B தமிழ் பி.ஏ. பட்ட வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைக்காமல் அல்லற்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசிடம் தகவல் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Graduate Secretary Grade Teachers*

* 183 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Graduate Secondary Grade teachers, who are 50 years of age and above, are permitted to draw B.T. scale of pay without B.T. training; and

(b) if so, whether the Government will consider granting the same benefits to all the Graduate Secondary Grade teachers irrespective of their age?

பட்டதாரி இடைநிலைத்தர ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐம்பது வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ள பட்டதாரி இடைநிலைத்தர ஆசிரியர்கள் பி.டி. பயிற்சி இன்றியே பி.டி. ஆசிரியர் சம்பள விகிதத்தைப்பெற அனுமதிக்கப்படுகின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், பட்டதாரி இடைநிலைத்தர ஆசிரியர்கள் அனைவருக்கும், அவர்களின் வயது என்னவாயிருப்பினும், இதே பயனை அளிப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தமிழ் ஆசிரியர்கள், இப்போது வித்துவான் பட்டம் பெற்றவுடன் பயிற்சி இல்லாமலேயே செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உள்ளவர்களே முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களாக நியமிக்கப் படும் தகுதி பெறுகின்றார்கள். அதைப் போலவே இப்போது செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பின்னர் பட்டம் பெறுகின்றவர்களும் பி.டி. பட்டம் பெறாமலேயே அப்படிப்பட்ட தகுதியினைப் பெறுமளவிற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட உத்தேசம் எதுவுமில்லை. அது முறையுமாகாது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, அப்படி இல்லாவிட்டாலும் 'பிரைவேட்டாக' அவர்கள் பி.டி. தேர்வு எழுதுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய அரசு அதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பி.ஏ. படித்து பிறகு பி.டி. படித்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கே இப்போது அந்தச் சம்பளம் வேண்டும் என்று கேட்கும்போது, இதிலே அவர்களுக்கு வேலைக்கு வேண்டுமானுல், முன்னுரிமைக்கு வேண்டுமானுல், அவர்கள் வின் ணப்பம் போடலாம். அந்தத் தகுதியினைப் பெற்றுவிட்ட காரணத்தினுலேயே, அந்தச் சம்பளத்தைத் தந்துவிடுவதற்கு இல்லை. ஏற்கெனவே வேறு ஒரு பயிற்சி பெற்றிருப்பதால், 'ஷார்ட்டெண்டு கோர்ஸ்' என்ற அளவிற்கு, முழுப் பயிற்சி பெற வேண்டிய அவசியமில்லை என்று, மூன்று மாதம் பயிற்சி அளிக்கப் படுகிறது.

*Expensive Locality Allowance*

* 184 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the rates of expensive locality allowance that teachers serving in (i) the Panchayat Union Schools and (ii) Government High Schools are getting in the Rameswaram Island;

(b) whether there are disparities in the rates; and

(c) if so, the reasons therefor?

செலவு மிகுந்த பகுதிக்கான படி வீதங்கள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமேஸ்வரம் தீவில் (1) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் (2) அரசினர் உயர்நிலைப்பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் பெறும் செலவு மிகுந்த பகுதிக்கான படி வீதங்கள் யாவை?

(இ) அந்த வீதங்களில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றனவா?

(உ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இராமேஸ்வரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாதி மாதமும் ரூ. 9 தனிப்படியாக வழங்கப்படுகிறது. அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதுபோல் கீழே குறிப்பிட்ட விதத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது.

| சம்பள விகிதம். | தல அகவிலைப்படி. (Expensive locating allowance). ரூ. |
|---|---|
| ரூ. 65 மற்றும் அதற்குக் குறைவு | 2.50 |
| ரூ. 66-ல் இருந்து ரூ. 75 வரை | 4.50 |
| ரூ. 76-ல் இருந்து ரூ. 125 வரை | 9.00 |
| ரூ. 126-ல் இருந்து ரூ. 180 வரை | 13.50 |

(இ) ஆம்.

(உ) வெவ்வேறு அரசு ஆணைகளின்படி ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கும் தல அகவிலைப்படி (Expensive locality allowance) அளிக்கப்பட்டு வருவதால் இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. மண்டபம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் எல்லா ஆசிரியர்களுக்கும் கூடுதல் தல அகவிலைப்படி அளிக்கப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் மூலமாக பிரேரணை அனுப்பியுள்ளார். இப்பிரேரணை இராமநாதபுரம் ஆட்சியாளரிடம் இருந்து அரசுக்கு வரப்பெற்றதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த 'எக்ஸ்பென்சிவ் லொகாலிடி அலவன்ஸ்', அதாவது மிகுதிச் செலவினப் படி, மற்றும் விண்டர் அலவன்ஸ், மலைவாழ்ப் படி இவைகளெல்லாம் உள்ளாட்சித் துறை ஊழியர் களுக்கும் அரசுத் துறை ஊழியர்களுக்கும் வேறுபாடுள்ளதாக இருந்துவரு கின்றன. இவற்றை நீக்கி அனைவருக்கும் ஒரே மாதிரியாக, அரசு ஊழியர் களானாலும் உள்ளாட்சித்துறை ஊழியர்களானாலும் வேறுபாடில்லாமல் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இருவேறு நிலைகளிலே இரண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக இந்த வித் தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து இதுபற்றிய குறிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடன் இதுபற்றிக் கவனிக்கலாம்.



**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அரசு ஊழியர்களுக்கு என்னென்ன படிகள் கொடுக்கப்படுகின்றனவோ அதைப் போலவே அந்த இடத்தில் உள் ளாட்சித் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் தரப்பட வேண்டும் என்ற பொதுவான உத்தரவினை, இராமநாதபுரம் மாவட்டம் மட்டு மில்லாமல், எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்ப வேண்டும் என்பதுதான். எல்லா இடங்களிலும் அத்தகைய வேறுபாடுகள் இப்போது இருந்து வரு கின்றன. இவற்றை நீக்கி அரசுத் துறையில் உள்ளவர்களுக்கு என்னென்ன படிகள் வழங்கப்படுகின்றனவோ அவை அப்படியே உள்ளாட்சித் துறை அலு வலர்களுக்கும் பொருந்தும் என்று ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது தனியாக ஆராயப்படும். என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றன என்று கண்டு, ஏற்ற முறையில் ஆராயப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Gramasevaks*

*185 Q—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the demands given to the Government in respect of the Gramasevaks in the meeting of the Federation of the Tamil Nadu Government Rural Development Workers held on 17th December 1972; and

(*b*) the action taken thereon by the Government?

### ஊர் நல உதவியாளர்கள்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 17—12—1972-ல் தமிழக அரசு ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு மாநாட்டில், ஊர் நல உதவியாளர்கள் தொடர்பாக அரசுக்குக் கொடுத்த கோரிக்கைகள் என்னென்ன ?

(இ) அவற்றின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1974 மார்ச் 13

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16, 17 ஆம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித் துறைப்பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் நடத்திய முதல் மாநில மாநாட்டில் ஊர் நல உதவியாளர்கள் தொடர்பாக விடுத்துள்ள கோரிக்கைகளின் பட்டியலும் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும் தனியே பட்டியலிட்டு @ சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** தலைவரவர்களே, ஒரே அளவு தகுதி பெற்றவர்கள் ஊதிய வித்தியாசத்தில் இருப்பதால், அதனை அரசு மாற்றியமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, பல்வேறான மாற்றங்களைப்பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

### *Representation by Thanjavur District Chemists and Druggists Association*

*186 Q.—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any representation was received by the Government during the 3rd week of December 1972 from Thanjavur District Chemists and Druggists Association regarding their inability to open their establishments on all days of the week consequent on G.O. Ms. No. 2528, June dated 1st June 1951; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

---

@ 63-65 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 13]

### தஞ்சாவூர் மாவட்ட இரசாயன வல்லுநர்கள், மருந்து விற்போர் சங்கத்திலிருந்து முறையீடு

**திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசின் 1—6—1951 நாளிட்ட 2528-ஆம் எண் ஆணைக்கிணங்க வாரத்தில் எல்லா நாட்களிலும் தங்களின் கடைகளைத் திறக்க இயலாத நிலைமை குறித்து தஞ்சாவூர் மாவட்ட இரசாயன வல்லுநர்கள், மருந்து விற்போர் சங்கத்திலிருந்து 1972 டிசம்பர் திங்கள் மூன்றுவது வாரத்தில் அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் பிரிவு 11(1) படி மருந்து சரக்குகளுடன், குழந்தை உணவுகளையும் விற்பதற்கு அரசாணை எண் 849, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 27—12—1973-ல் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

### *Single Trade Union for One Industry*

*187 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THIRU KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Labour be pleased to state the action proposed to be taken by the Government to implement the suggestion of Honourable Chief Minister for organising a Single Trade Union for One Industry and for the promotion of leadership in Trade Unions from among labourers?

### ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம்

**புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. காட்டூர் கோபால் சார்பில்):** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் அமைத்திடவும், தொழிற் சங்கங்களுக்கு தொழிலாளர்களே தலைமை ஏற்றிடவுமான மாண்புமிகு முதல் அமைச்சரின் யோசனையை செயல்படுத்துகிற வகையில் அரசு மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் எவை?

[1974 மார்ச் 13

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தொழிற் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு அளிக்கவும், நியாயமற்ற தொழிலாளர் நடவடிக்கைகளைத் தடுக்கவும் சட்டம் இயற்றலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கிடையில், தொழிற் சங்கத் தலைமைக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசிய முள்ளதால், அரசு சென்னையில் தொழிலாளர் நல ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளது. மேலும், தொழிற் சங்கச் சட்டத்தைத் திருத்தி அதன் மூலம் வெளியார்கள் தொழிற் சங்கங்களில் பதவி வகிக்கும் எண்ணிக்கையை மூன்று என வரையறுத்து உச்சவரம்பு விதிக்கலாம் என்று இவ்வரசு இந்திய அரசுக்குக் கருத்து தெரிவித்துள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, may I know whether what the Hon. Minister says is that this Government have sent a proposal that there should be election of office-bearers only from among the labourers, by which the office-bearers will be elected only from among the labourers who have formed themselves into Unions?

THE HON. THIRU K. RAJARAM : Tes, Sir.

THIRU S. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, are the Government awaiting any Central legislation on this subject of One Union for One Industry, or would the State Government take the initiative straight away on this subject?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய எண்ணங்கள் இருக்கிறதே தவிர, சீரான சட்ட வரையறை ஏதும் அதற்காகச் செய்யப்படவில்லை.

**திரு. சி. ஆர். கோலப்பா:** தலைவர் அவர்களே, ஒரு தொழிலுக்கு இரண்டு தொழிற் சங்கங்கள் இருந்தால் நல்லது என்று தமிழ் நாட்டில் உள்ள ஒரு தலைவர் கூறியிருக்கிறார். அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்ற கருத்தும், அதே போல் ஒரு தொழிலுக்கு பல தொழிற் சங்கங்களும் இருக்கலாம் என்ற கருத்தும் இருந்துகொண்டே இருக்கின்றன. அதற்கு முடிவான கருத்தை யாரும் இது வரையில் கண்டு பிடிக்கவுமில்லை, ஒத்துக்கொள்ளவுமில்லை.



1974 மார்ச் 13]

THIRU A. R. DAMODARAN : Sir, is this idea of a Single Trade Union for One Industry, meant for the benefit of the labourers working in the industry or is it meant for the benefit of the consumers at large?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்த நன்மை தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல. வாங்குகின்றவர்களுக்கும் கூட சேர்த்துக் கிடைக்கும். இதனால் தொழிலுக்கும் நன்மை ஏற்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, in other words, if we have a giant Trade Union, one Trade Union can stop all activities in the nation, as in the case of the mine-workers of U.K. Is the Hon. Minister aware also of the implications of such a step of permitting One Union for One Industry, perhaps, one Union for all industries put together also?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஒரே தொழிற் சங்கம் இருந்தாலும், வேலை நிறுத்தம் நடத்த முடிகிறது, நடக்கிறது. பல தொழிற் சங்கங்கள் ஒரே தொழிலில் இருந்தாலும், அவைகள் ஒன்றுசேர்ந்து வேலை நிறுத்தம் செய்கின்றன. இப்பொழுது பி அண்டு சி மில்லில் ஐந்து தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. அந்த ஐந்து சங்கங்களும் சேர்ந்துதான் வேலை நிறுத்தம் செய்தன. வேலை நிறுத்தத்திற்கு இலக்கணம் வேறு. ஆனால் ஒரு தொழில் சங்கம் இருந்தால், பேச்சு வார்த்தை நடத்த சுலபமாக இருக்கும். தொழில் அமைதி நிலவுவதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆசிரியர் தொழிலுக்கு ஒரு சங்கம் இருந்துகொண்டிருக்கும்போது, மீண்டும் இன்னொரு சங்கத்தின் மூலமாகப் பேச்சு வார்த்தை நடத்தாமல், ஏற்கெனவே இருக்கின்ற சங்கத்தை உறுதிப்படுத்தி, அது செயல்பட உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் பிரச்சினையில் ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அது சாத்தியமாக இல்லை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

**திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, தொழிலாளர்களே தொழிற் சங்கத்தின் நிர்வாகிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்து இருந்து வருகிறதே. அதுபற்றி அரசாங்கத்தின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 13

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அந்தக் கருத்தை அரசு வரவேற்கிறது.

**திரு. எல். பலராமன்:** தலைவர் அவர்களே, தொழிற் சங்கங்கள் என்று கூறும்போது, அரசியல் கட்சிகள்தான் அதிகம் பங்கு பெறுகின்றன. எல்லா அரசியல் கட்சிகளும் கூடி ஒரு முடிவெடுத்து பங்கு கொள்ளக்கூடாது என்று தீர்மானிப்பதை அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அந்தக் கருத்தினை எல்லா அரசியல் கட்சிகளும் இப்படிப்பட்ட மன்றங்களில் ஒத்துக்கொள்கின்றன. ஆனால் மைதானங்களில் பேசும்போதும், மேடைகளில் பிரசங்கம் செய்கின்றபோதும், வேறு விதத்தில் போகின்றன.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, தொழிற் சங்கத்தில் தொழிலாளர்களே தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்பதற்கு சட்டம் கொண்டு வர இருப்பதாக அரசு அறிவித்திருந்தது. அது எந்த அளவுக்கு இருக்கிறது, எப்பொழுது வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது சிறந்த யோசனை. ஆனால் அதைச் சட்ட வரைவில் கொண்டுவருவது என்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன. சூழ்நிலைகளும் அதற்கேற்ற வகையில் இப்பொழுது அமையவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Special Police Squad for bundobust duty during festivals in Hindu Temples*

* 188 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government to form a Special Police Squad for bundobust duty during festivals in Hindu Temples of Tamil Tadu; and

(*b*) if so, the action taken thereon by the Government?

**திருக்கோயில்களில் திருவிழாப் பாதுகாப்புப் பணிக்கென தனிக் காவல் பிரிவு**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் உள்ள இந்து திருக்கோயில்களில் திருவிழாப் பாதுகாப்புப் பணிக்கென தனிக் காவல் பிரிவு ஒன்று அமைக்கும்படி அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?



1974 மார்ச் 13]

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அனுப்பி வைத்துள்ளார்கள்.

(இ) இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

*Books about Temples*

*189 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Hindu Religious and Charitable Endowments (Administration) Department has brought out any books about the temples in various districts; and

(*b*) if so, the details thereof?

**கோவில்களைப் பற்றிய நூல்கள்**

**திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்வேறு மாவட்டங்களிலுள்ள கோவில்களைப்பற்றி இந்து சமய அறநிலையத் (நிர்வாக) துறை நூல்கள் எவையேனும் வெளியிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) சென்னை மற்றும் நெல்லை மாவட்ட கோயில்களைப் பற்றிய வரலாறு மட்டுமே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினால் வெளியிடப் பட்டுள்ளது. மற்ற மாவட்ட கோயில்களைப் பற்றிய வரலாற்றை வெளியிடும் வேலை தமிழ்நாடு தெய்வீகப் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*Jewels given for gold bonds on behalf of Thirunagari Temple, Sirkali taluk.*

*190 Q.—THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there was any irregularity in the transaction of the jewels given for gold bonds on behalf of Thirunagari Temple, Sirkali taluk;

(b) if so, the details thereof; and

(c) the action proposed to be taken by the Government in this regard?

### சீர்காழி தாலுகா, திருநகரி கோயில் சார்பில் தங்கப் பத்திரத்திற்காகக் கொடுக்கப்பட்ட நகைகள்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சீர்காழி தாலுகா, திருநகரி கோயில் சார்பில் தங்கப் பத்திரத்திற்காகக் கொடுக்கப்பட்ட நகைகளில் முறைகேடு நடந்திருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

(உ) அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ), (இ) மற்றும் (உ): தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டம், திருநகரி கிராமத்திலுள்ள அருள்திரு கல்யாண ரெங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 94 கிராம் எடையுள்ள 8 தங்க நகைகள் "தேசிய பாதுகாப்பு தங்கப் பத்திரம், 1980" எனும் கடனில் முதலீடு செய்வதற்காக 18—2—1966-ல் சீர்காழி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுக்கப்பட்டன. ஆனால் இத்தங்கத்தைத் திரும்பத் தரும்போது உருக்கப்பட்ட 57.700 கிராம் எடையுள்ள தங்கம் மட்டுமே திருப்பித் தரப் பட்டது. இக்குறைபாட்டிற்கு பொறுப்பானவர்கள் யார் என்பது பற்றியும் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பது பற்றியுமான விசாரணை நிலுவையில் உள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றி நான் சில கருத்துக்களை இந்தச் சபையில் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்த நிதி நிலை



அறிக்கையைப் படிக்கும்போது, பல ஏமாற்றங்கள் வரக்கூடிய நிலை தான் பெருமளவுக்குக் காணப்படுகிறது. மத்திய அரசாங்கத்தைப் பற்றிக் குறை கூற வேண்டிய நிலைமைகள் இருந்தாலும் கூட, அதிகமாக வலியுறுத்திக் கூறக் கூடிய நிலைமையில் இந்த நிதி நிலை அறிக்கை இருக்கிறது. இதனால் வேண்டாத ஒரு வெறுப்புக்கு மத்திய அரசாங்கத்திடம் இந்த அரசாங்கம் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைமையில் எதற்கு எடுத்தாலும் குறை கூறக்கூடிய நிலையை இந்த அரசாங்கம் மேற்கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 4.20)

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி நாம் திட்டமிடக் கூடிய நேரங்களில் நம்முடைய ராஜ்யத்தைப்பற்றி ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு உயர்நிலை அமைப்பு ஏற்படுத்தப்பட்டதே, அந்த அமைப்பு என்ன வேலை செய்திருக்கிறது என்பதைப்பற்றி ஒரு விவரமான அறிக்கை இந்தச் சபையில் வைக்கப்படவில்லை. திட்டங்கள் தயாரிப்பது மாநில அளவில் மட்டும் இருந்தால் போதாது. திட்டங்கள் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் தயாரிக்கப்பட்டால்தான், ஒரு நாட்டினுடைய வளர்ச்சி சீரான முறையில் அமையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கான வகைகளை அரசு செய்ய வேண்டும். பொதுவாக இப்போது மாவட்ட அளவிலே எந்தவிதமான திட்டங்களும் சரியான முறையிலே திட்டமிட்டு உருவாக்கப்படுவதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக மாவட்ட மன்றங்கள், கலெக்டர் அவர்களால் கூட்டப்படக்கூடிய மன்றங்கள், இப்போது எல்லா மாவட்டங்களிலும் கோரம் இல்லாமல் கலையக் கூடிய நிலையைக் காண்கிறோம். இந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் கூட வளர்ச்சி பெறாத ஒரு நிலை இப்போது காணப்படுகிறது. இதேபோலத்தான் வட்டார வளர்ச்சி அளவிலேயும் எந்த விதமான வளர்ச்சியும் காண முடியவில்லை. இதற்கெல்லாம் மூல காரணமாக இருக்கக் கூடியது கீழ் மட்டத்தில் திட்டவட்டமாக இந்த அரசு ஆலோசனை செய்யாமல் இருப்பது தான். இந்த அரசாங்கம் மட்டும் இந்திய நிலையிலே உள்ள ஒரு அரசு கீழ் மட்டத்திலே உள்ள நம் மாநிலத்திற்கு திட்டத்திற்கு வேண்டிய உதவி அளிக்கவில்லையென்று குறை கூறும்போது, இந்த அரசானது தன்னுடைய நிர்வாகத்தில் கீழ் நிலையில் உள்ள மாவட்டங்களைப் பொறுத்தும், வட்டாரங்களைப் பொறுத்தும் சரியான மார்க்கங்களைக் காண முடியாதபடி நிலைமைகள் இருக்கின்றன. இதைப் போக்க வேண்டும். நாம் ஒரு திட்டக் கமிஷன் ஏற்படுத்தியிருக்கும்போது, அது என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை. மாவட்டத்தில் வந்து மாவட்டத்திற்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்திருக்கிறதாவென்று பார்த்தால், அதற்

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1974 மார்ச் 13

கான ஏற்பாடுகளைக் காண முடியவில்லை. பெயரளவிலேதான் திட்டக் குழு
இருக்கிறதே தவிர, செயலளவிலே காண முடியவில்லை. தமிழகம் முன்னேற்ற
மடைந்த மாநிலம் என்று கூறி, மத்திய சர்க்கார் நிதி நிலை அறிக்கையில்
நமக்கு வேண்டிய நிதி ஒதுக்கவில்லையென்று இந்த அரசாங்கம் வருத்தப்பட்
டிருப்பது நியாயமான ஒரு நிலை தான். மத்திய அரசாங்கம் நம் அரசாங்
கத்திற்கு வேண்டிய நிதி நிலைகளை அளிப்பதில் எந்தவிதமான தயக்கமோ
அல்லது மாறுபட்ட கருத்தோ இருக்குமானல், அதை நாமெல்லோரும் ஏகோ
பித்துக் கண்டிக்க வேண்டியது அவசியமான ஒரு நிலை என்பதை நான் ஒப்புக்
கொள்கிறேன். இதற்கான காரணங்களை இந்த அரசாங்கம் கூறும்போது
தமிழகம் முன்னேற்றமடைந்த மாநிலம் என்ற நிலையைச் சுட்டிக்காட்டி பல
விதமான மானியங்கள் மறுக்கப்படுகின்றன என்று கூறியிருக்கிறார்கள்.
நம்முடைய மாநிலத்திலே பல மாவட்டங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன
என்று கூறி, தொழில் துறையிலும், பிற துறைகளிலும் வேண்டிய சலுகைகளை
அளிக்காமல், பிற மாவட்டங்கள் பின்தங்கியிருக்கின்றன என்ற காரணத்திற்
காக கோடிக்கணக்கான ரூபாய்களை வாரி வழங்கக் கூடிய ஒரு நிலையை இந்த
அரசாங்கம் கைக்கொண்டிருக்கும்போது, இந்திய அரசாங்கம் இந்த மாநிலம்
முன்னேற்றம் அடைந்த நிலையில் இருக்குமானல், முன்னேற்றம் அடையாத
மாநிலங்களுக்கு உதவுகிறேன் . என்று சொல்வதில் என்ன தவறு இருக்கும்
என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, பொதுவாக நாம் நிதி நிலையைக்
கையாளும்போது, எது எங்கு வேண்டுமென்று ஓரளவிற்குப் பரிசீலனை
செய்யக் கூடிய காலங்களில், வேண்டிய இடங்கள், வேண்டாத இடங்கள் என்று
பாராமல் ஒரு சரியான அமைப்பை உருவாக்குவோமானல், பொருத்தமாக
இருக்க முடியும். அப்படி ஒரு சீரான அமைப்பு தமிழ் நாட்டில் இல்லாத
நிலைமையில் நாம் மட்டும் மத்திய அரசைக் குறை கூறுவது அவ்வளவு
பொருத்தமான விஷயமல்ல. இருந்த போதிலும் கூட சரியான முறையில்
நம்முடைய நிதி நிலைகளை மேற்கொள்வது குறித்து, நானும் இந்த மன்றத்தில்
ஒருவன் என்ற முறையில், மத்திய அரசாங்கம் போதுமான அளவு சலுகைகளை
அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில், அதிகமான செலவைச்
செய்கிறார்கள். பொதுவாக 27 கோடியே 43 இலட்சம் செலவு செய்யப்படு
கிறது. இந்த வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால் இந்த நாட்டில்
உருவாக்கப்படக் கூடிய தொழில்கள், உற்பத்தி செய்யக்கூடிய நிலைகள் இவை
களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய நிலையில் பல காரியங்களைச் செய்வதாக கூறக்
கூடிய இந்த அரசாங்கம் வேளாண்மைத் துறைக்கு அதிகமான மானியம்
வழங்கக் கூடிய வகையில் ஏதேனும் செய்திருக்கிறதா, வேளாண்மைத்



1974 மார்ச் 13] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

துறையை ஊக்குவிக்கக்கூடிய முறையில் தகுந்த திட்டங்களைத் தயார் செய்
திருக்கிறதாவென்று பார்த்தால், அதற்காக நிதி நிலை வகை செய்யப்படவில்லை.
ஆனல் வேளாண்மைக்காக பல விதமான பயிற்சித் திட்டங்கள், பல விதமான
ஆராய்ச்சித் திட்டங்கள், ஆகியவற்றுக்காக அதிகாரிகளை வைத்துக்கொண்டு
கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறோம். இப்படி வியர்த்த
மாகக் கூடிய செலவுகள் பல இனங்களில் இருக்கின்றன. இன்றையதினம்
உரம் கிடைப்பதில்லை. பூச்சிக்கொல்லி மருந்து கிடைப்பதில்லை. உரிய
விலைக்குக் கிடைப்பதில்லை என்பது மட்டுமல்ல. அதிகமான விலை கொடுத்தால்,
கள்ளச் சந்தையிலே தாராளமாகக் கிடைக்கின்றது. இந்த நிலை இருக்கும்
போது இங்கு உரம் இல்லை. பூச்சிக்கொல்லி மருந்து இல்லையென்று சொன்னல்,
எப்படிப் பொருத்தமாக இருக்க முடியும்? எவ்வளவு வேண்டுமானலும் உரம்
இருக்கிறது, பூச்சிக்கொல்லி மருந்து இருக்கிறது, கள்ளச் சந்தையில் வேண்டிய
அளவிற்குக் கிடைக்கிறதென்றால், நிர்வாகக் கேடு இருக்கிறது என்பதைத்
தவிர, வேறு என்ன கூற முடியும்? இப்படிப்பட்ட நிலைமைகள் வேளாண்மைத்
துறையில் இருக்கின்றன. இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும். பூச்சிக்
கொல்லி மருந்தைப் பார்த்தால், மட்டரகமாக இருக்கிறது. அதிலே கலப்
படங்கள் செய்யப்படுகின்றன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, முதலிலே
நம்முடைய உறுப்பினர் அவர்கள் பட்ஜெட் அறிக்கையைப் படிக்கும்போது,
மத்திய சர்க்காரைப்பற்றி அதிகமாகக் குறை கூறுகிறது என்று சொல்லி, அது
கூடாது என்று சொன்னர்கள். இப்போது உரத்தைப்பற்றிச் சொல்கிறார்கள்.
இப்போது இருக்கிற முறையைப்பற்றிச் சொல்கிறேன். கிட்டத்தட்ட 60 சத
விதம் தான் நம் தேவைக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் வெளிச் சந்தையில்
விற்பதற்கு 40 சதவிதம் கொடுக்கிறார்கள். அவைகளை அவர்கள் வெளிச்
சந்தையில் விற்கிறார்கள். இதைத் தவிர இதிலே கோளாறு நிச்சயமாக
இருக்க முடியாது. எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத் தான் விற்கப்
படுகிறது. வெளி மார்க்கெட்டில் வாங்குவதை வியாபாரிகள் தான் வெளி
மார்க்கெட்டில் விற்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: அமைச்சரவர்கள் 60 சதவிதம் அரசாங்கம்
கொள்முதல் செய்து விற்பதாகவும், 40 சதவிதம் வெளி மார்க்கெட்டுக்குக்
கொடுக்கப்படுவதாகவும் சொன்னர்கள்.

[1974 மார்ச் 13

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவரம் சரியில்லை. திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். 34 சதவிதம் அரசாங் கத்திற்கு, மிச்சமுள்ள சதவிதம் தனியார் விற்க அனுமதிக்கப்படுகிறது.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 34 சத விதம் அரசாங்கத்திற்கும், எஞ்சிய சதவிதம் தனியாருக்கும் அளிக்கப்படுவ தாகக் கூறினார்கள். இந்த எஞ்சிய சதவிதம் தனியாருக்கு அளிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன். இந்த நிலையில் பெரிய தவறுகள் இருக்கின்றன. இதை அரசாங்கம் உணர வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதைத்தான நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். நீங்கள் கேட்ட இதே கேள்வியைத்தான் நாங்கள் கேட்கிறோம். நீங்கள் எங்களைப் பார்த்துக் கேட்கிறீர்கள். நாங்கள் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்கிறோம். நீங்கள் எங்களைப் பார்த்துக் கேட்கும்போது நாங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது என்று கருதுகிறீர்கள். நாங்கள் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்கும்போது உங்களுக்குக் கோபம் வருகிறது. தனியாருக்குத் தரவேண்டிய அவசியமென்ன? அழகான கேள்வி. அழுத்தந்திருத்தமான கேள்வி, இந்தக் கேள்வியைத்தான் நாம் அனைவரும் சேர்ந்து மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** இந்த அவையில் பேசும்போது மத்திய அரசாங்கத்தை ஏதேனும் தாக்கிப் பேசவோ, அல்லது மத்திய அரசாங்கத் திடம் என்னுடைய கொள்கையை வலியுறுத்தவோ தகுதியில்லாதவன் என்ற காரணத்தினால், என்னுடைய கருத்துக்களை இந்த அரசாங்கத்திற்குத் தான் தெரிவிக்க முடியும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்குத் தகுதியில்லாவிட்டாலும், அவருடைய தலைவர் அவர்கள் மத்திய சர்க்காரை எதிர்த்துப் பேசலாம்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** ஒரு மாநிலம் செய்யக் கூடிய காரியங்களில் மத்திய அரசாங்கம் தலையிட்டு, இடையூறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னால், எந்த மாநில அரசாங்கமாக இருந்தாலும், அதைப் போராடி சரிக்கட்டிச் செய்ய வேண்டிய கடமை மாநில அரசாங்கத்திற்கு உள்ளதே யொழிய எங்களுக்கு இல்லை. உறுதுணையாக எங்களைப் போன்ற உறுப்பினர்கள் இருக்கலாம். மத்திய அரசாங்கம் 66 சதவிதம் உரத்தைத் தனியார்களுக்குக்



1974 மார்ச் 13] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

கொடுப்பதைப்பற்றி என்னைக் கேட்டால், அது சரியானதல்ல என்று என்னால் கூற முடியுமே தவிர, என்னுடைய கொள்கையைக் கூற முடியுமே தவிர, இந்த நிலையை நம் மாநிலத்தில் அகற்றவேண்டிய பொறுப்பு, பெரும் பொறுப்பு மாநில சர்க்காரைச் சார்ந்தது. தனியார் துறையில் 66 சதவிதம் உரத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இதற்கான பர்மிட்டை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இதற்கான பர்மிட்டை வைத்துக்கொண்டு இன்னும் பல சதவிதங்களை கள்ள மார்க்கெட்டில் விற்றுக் கொண்டு வருகிறார்கள். பிடி பட்டால், செக் போஸ்டில் அகப்பட்டுக்கொண் டால், பர்மிட்டில் எண்ட்ரி போடுகிறார்களே தவிர, போடும் வரை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை தான், பெரிய கள்ளச் சந்தைகள் இந்த உர வியாபாரத்திலும் பூச்சிகொல்லி மருந்து வியாபாரத்திம்லும் ஏற்படக் காரணமாக இருக்கின்றது. அரசாங்கம் இதைக் கண்காணிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயப் பண்ணைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பண்ணைகள் உண்மையில் நஷ்டத்தில் நடக்க வேண்டுமாவென்று பரிசீலனை செய்தால், பண்ணைகள் அநேகமாக நஷ்டத்தில் நடக்கக் காரணங்கள் கிடையாது. இருந்தாலும் கூட, இருக்கக்கூடிய நிர்வாக ஊழல்களின் காரண மாக, பல பண்ணைகள் நஷ்டத்தில் நடக்கின்றன. இப்படிப்பட்ட நஷ்டங்களை யெல்லாம் ஒருமிக்க சேர்த்து, ஏதோ விவசாயிகளுக்கு நாம் 27 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்றால், இந்த மாதிரியான நஷ்டங்களை அடைத்துக் கொண்டு செயல்படுவோமானால், நல்ல விதமான நன்மைகளைச் செய்ய முடியும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையினாலே விவசாயப் பண்ணை களைப் பொறுத்த வரையிலும், போதிய பண்ணைகளை வைத்துக்கொண்டு, அந்தப் பண்ணைகள் நஷ்டத்தில் நடக்காமலிருக்க நிர்வாகத்தைச் சீரமைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் நெல் விதைகள் வாங்க 20 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப் படுகிறது. பயிர் நெல் விதைகள் வாங்குகையில் பல விதமான மலிந்த நிலைகள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் நான் கண்ணுற்றிருக்கிறேன். கிராமங்களில் நெல் விதைகள் 40 ரூபாய்க்கு ஒரு மூட்டை விற்கிறதென்றால், நெல் விதையை வாங்கக்கூடியவர்கள் 12 சதவிதம் அதிகமாகக் கொடுக் கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது 45, 46 ரூபாய்க்குக் கொள்முதல் செய் கிறார்கள். இப்படிக் கொள்முதல் செய்யப்பட்ட இந்த நெல் விதையானது பொறுக்கு விதையாக இருக்கிறதாவென்று பார்த்தால், இல்லை. பொறுக்கு விதை என்று விளம்பரம் செய்கிறோம். பெருமளவிற்கு பொறுக்கு விதை வேண்டுமென்று விளம்பரம் செய்கிறோம். அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தி யாகக் கூடிய நெல் விதை கூட சரியாக முளைப்பதில்லை. விவசாயிகளிடம்

வாங்கக்கூடிய நெல் விதை கூட சரியாக முளைப்பதில்லை. இப்படி முளைக்காத விதைக்காக செலவு செய்யக் கூடிய தொகையானது 20 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இதை மாற்றி வேறு ஒரு திட்டம் அமைக்க வேண்டும். கூடுமான வரை தங்களுடைய நேரடி நிர்வாகத்தில் இருக்க வேண்டுமென்று ஆசை கொள்ளாமல் பல திட்டங்களைப் பகிர்ந்து கொடுக்கக் கூடிய மனப்பான்மை வர வேண்டும். பஞ்சாயத்து கூட்டு மன்றத்தை வைத்துக்கொண்டு, அதிலே விவசாய செக்‌ஷனைப் பிரித்து வைத்துக்கொண்டு, கீழ் மட்டத்தில் உள்ள விவசாய அலுவலர்கள் அனைவரும் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் வேலை செய்கிறார்கள். அவர்கள் மூலமாகத் தான் இந்த அரசாங்கம் நல்ல விதைகளைக் கொள்முதல் செய்கிறது. இந்தப் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களுக்கு, சிலவற்றிற்கு பொது நிதி இருக்கின்றது, மற்றவைகளுக்கு வேண்டுமானால்

(பிற்பகல் 4.30)

பொது நிதி இல்லாமல் இருக்கலாம். அவர்களே கொள்முதல் செய்து வைத்துக் கொண்டு விதைகளை வியாபாரம் செய்தால், 20 கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லாத நிலைமை இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு வேண்டுமானால் விதைகளைக் கொள்முதல் செய்து, விற்பதற்கு ஓரளவுக்கு மானியம் அளிக்கலாம். அது சில கோடி ரூபாயில் முடிந்துவிடும். தென்னை, மணிலாப்பயிறு நல மேம்பாடு செய்யும் திட்டம் இன்னும் விரைவாக வேண்டும். பல இடங்களில் தென்னையும், மணிலாவும் பணப் பயிர்களாக இருக்கின்றன. ஆனால் அதில் நேரடிக் கவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னைக்கு 29 லட்சம் ரூபாயை ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலமாகச் செலவு செய்கிறோம். வேர்க்கடலைக்கு 16 லட்சம் ரூபாயைச் செலவு செய்கிறோம். இன்னும் இதற்கு அதிகமாக ஒதுக்கி, மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையில் ஒரு நிலவள வங்கி இருக்கிறது. அந்த நிலவள வங்கி, விவசாயிகள் தங்களுடைய நிலங்களை மேம்பாடு செய்வதற்காகக் கடன் கேட்டால், கொடுப்பதில்லை. ஏனென்றால் அங்கு 'அன்டர் கிரவுண்ட் வாட்டர்' கிடையாதென்று சொல்கிறார்கள். நான் இந்த அவையிலே ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் இரண்டு, மூன்று போரிங்குகள் போட்டிருக்கிறேன். அதிலே நல்ல விதமாக ஊற்று வருகிறது. 'அன்டர் கிரவுண்ட் வாட்டர்' நல்ல முறையில் கிடைக்கிறது. இன்ஜினீயர்கள் போட்ட போரிங் பைப்பிலே, 6 அங்குல பைப்பிலே நன்றாகத் தண்ணீர் வருகிறது. அங்கே நல்ல தண்ணீர் ஊற்று இருந்தாலும், அரசாங்க அறிக்கையிலே இல்லை என்று கூறியிருக்கிறார்கள். இதனால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. அங்கே நில வள வங்கியில் கடன் கிடையாதென்று சொல்கிறார்கள். பம்ப்செட் வைத்துக்கொண்டால், மின்சாரம் கிடையாதென்று சொல்கிறார்கள். ஏனென்று





கேட்டால், அது மேம்பாடு இல்லாத பகுதி; 'அன்டர் கிரவுண்ட் வாட்டர்' இல்லாத பகுதி. இந்த நிலைமைகள் இல்லாதிருந்தால், நில வள வங்கி கடன் கொடுக்கும். மின்சார இலாக்காவிற்குக் கடன் கொடுக்கிறார்கள். ஒரு பம்ப்செட்டுக்கு ரூ. 3,000 கிடைக்கிறது. தனியார் போட்டால் கடன் கொடுப் பதில்லை. ஆதலால் மின்சார இணைப்பும் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். விவசாயிகளுக்காக பெருமளவு பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் அரசானது, ஒருசில இடங்களில் பரீட்சை பண்ணும்போது, ஊற்றுகள் இல்லையென்ற தவறான செய்தியாலே, ஒரு தாலுகாவிலே விவசாயத்திற்கு, பம்ப்செட்டுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாதென்று சொன்னால், அது கேலிக் கூத்தாகத் தான் இருக்கிறதென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நில வள வங்கி யானது கடன் கொடுத்திருந்தால், அந்த பம்ப்செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்தால், மின் வாரியத்திற்கு நில வள வங்கி கடன் கொடுக் கிறது. அது இல்லாததால், தனியார்களுக்கு மின்சாரம் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். எனவே இதை மின்சார அமைச்சரவர்கள் பார்த்து, நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்கள், கால்நடைகள் இன்சூரன்ஸ் திட்டம் வேண்டுமென்று இந்தச் சபையிலே நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல சீர்திருத் தங்களைச் செய்யக்கூடிய முறையில், நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆனால் பயிர் இன்சூரன்ஸ் ஏற்படவில்லை; கால்நடை இன்சூரன்ஸ் ஏற்பட வில்லை. இது ஒரு அத்தியாவசியத் திட்டமாகும். இது மத்திய அரசுத் திட்டமானாலும், இதை வலியுறுத்தி, விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை வளர்ப்பைப் பொறுத்த வரையில், நாம் 45 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். 45 கோடி ரூபாய் செலவு செய்யும் போது, கோழி வளர்ப்பில் நஷ்டம்; பெரிய பெரிய கால்நடைப் பண்ணைகள் வைத்திருப்பதில் நஷ்டம். நிச்சயமாகக் கூறுகிறேன். பெரிய பண்ணை களிலே பால் தவறான முறையில் சோரம் போகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சோரம் என்பது வேறு. திருடு என்பது வேறு. எனவே சோரம் போகிறதா அல்லது திருடு போகிறதா?

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே, திருடு போகிறது. இந்த நிலைமையைப் போக்க வேண்டும். பால் பண்ணைகளைப் பொறுத்த வரையில், பெரிய பண்ணைகளை வைப்பதைக் காட்டிலும், சிறிய பண்ணைகளை வைப்பது நல்லது. இன்று பால் வளம் எங்கிருக்கிறதென்றால், பெரிய நகரங்களில்தான் இருக்கிறது. சிறிய ஊர்களில், சிறிய நகரங்களில் பால் வளம் இல்லை. கடையில் உள்ள பால் கலப்படம் செய்யப்பட்ட பால். இதைச் சாப்பிட்டால், நோய்தான் வருகிறது. அங்கெல்லாம் தரமான பால் கிடைக்கவில்லை. இந்த

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1974 மார்ச் 13

நாட்டிலே அதிகமான மக்கள் தொகை ஏற்பட்டுவிட்டது. எனவே கிராமங்
களிலும், நகரப் பகுதிகளிலும் பால் போதிய அளவுக்குக் கிடைக்கின்ற
நிலையைப் பெருக்க வேண்டும். அதை எப்படிப் பெருக்குவதென்று சிந்திக்
கின்றபோது, ஒவ்வொரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றமும் பால் பண்ணைகளை
நடத்தலாமென்று கூறலாம். சில கூட்டு மன்றங்கள் ஏற்று நடத்துமளவுக்கு
இல்லாமல் இருக்கலாம்; சில கூட்டு மன்றங்கள் ஏற்று நடத்துமளவுக்கு
இருக்கலாம். எனவே அதற்கென்று சிறு மானியத்தைக் கொடுத்துவிட்டால்
போதும். பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களில் கால்நடை அலுவலர்கள் இருக்
கிறார்கள்; விவசாய அதிகாரி இருக்கிறார். எனவே சிறிய பண்ணைகளை அங்கே
வைத்தால், அந்தந்த வட்டாரத்திற்குப் போதுமான பாலை அங்கே உற்பத்தி
செய்ய முடியுமென்று கருதுகிறேன். மேலும் கிராமத்தில் கால்நடை
வளத்தைப் பெருக்க வேண்டும். நகர்ப்புறத்தில் பெரிய பெரிய ஆஸ்பத்திரிகளை
வைத்திருக்கிறோம். அப்படி கிராமப்புறங்களில் நாம் ஏற்படுத்திக் கொடுக்க
வில்லை. அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு
வட்டாரத்திற்கு 3 கால்நடை ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டும். இப்போது
ஒன்று இருக்கிறது. இன்னொன்று கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்
கிறார்கள். ஒரு வட்டாரத்திற்கு 3 கால்நடை ஆஸ்பத்திரிகள் இருந்தால்தான்,
நிவர்த்தி செய்ய முடியுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மீன் பிடிக்கும் படகுகள் ஒரு தவறான நிலையில் பயன்படுத்தப்
பட்டு வருகின்றன. இதை மீன் பிடிப்பவர்கள்தான் உபயோகப்படுத்து
கிறார்களா என்றால், இல்லை. எவ்வளவு சலுகைகளை நாங்கள் கொடுத்திருக்
கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்தச் சலுகைகள்
கிடைக்கவில்லை. பெரும் பணம் வைத்திருப்பவர்கள், இதை லாபகரமான
தொழிலாக வைத்துக்கொண்டு, சலுகை யார் யாருக்கு உண்டு என்று சொல்
பவர்களிடத்திலெல்லாம் கையெழுத்து வாங்கிக்கொண்டு, பெரிய லாபம்
அடைந்திருக்கிறார்கள். ஒரு படகு 400 ரூபாய் ஆதாயம் தருவதாக இருக்
கிறது. கூட்டுப் பொறுப்பில் மீனவர்களுக்குப் படகு கொடுத்தால் பெரிய
நலமாக இருக்கும். இந்தப் படகுகளை உண்மையில் யார் யார் வைத்திருக்
கிறார்கள் என்பதை அரசு பார்க்க வேண்டும். மீன் பிடி தொழிலாளர்களுக்குத்
தான் கொடுத்திருக்கிறோம்; பர்மா அகதிகளுக்குத்தான் கொடுத்திருக்கிறோம்.
இந்த நாட்டிலுள்ள பெரும் பணக்காரர்கள் லாபம் அடிக்க நாம் கொடுக்க
வில்லை. அதற்காக 75 லட்சம் ரூபாய் செலவு செய்கிறோம். அந்தச் செலவினம்
சம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கிறதாவென்று பார்க்க வேண்டும். கிட்டத்
தட்ட 75 சதவிகிதம் மீன் பிடி தொழிலாளர்களிடம் இல்லாமல், பிற தொழில்
களில் உள்ளவர்கள்தான் வைத்திருக்கிறார்கள் என்பது புரியும். அந்த நிலை
மையைப் போக்க வேண்டும். அதற்காக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டு



1974 மார்ச் 13] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

மென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல மீன் பிடிக்க வசதிகள் நமது கடற்
கரையில் இருக்கின்றன. இன்றையதினம், வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகும்
அளவுக்கு இருக்கிறது. சாதாரணமாக ஒரு எரால் மீன் 8 அணா விற்கிறது.
பெரிய எரால் மீனாக இருந்தால் 1 ரூபாய் கிடைக்கிறது. நாம் என்னவோ
மீன்தானே என்று எண்ணுகிறோம். இந்தத் தொழில் ஒரு லாபகரமான
தொழிலாக இருக்கிறது. ஐயர்கள் கூட இந்தத் தொழிலைச் செய்வதற்கு முன்
வருகிறார்கள். இந்த எரால் மீன்களை முன்பு முஸ்லீம்கள் வாங்கினார்கள்;
மீன் பிடிப்பவர்கள் வாங்கி, விற்றார்கள். இன்றையதினம் பார்த்தால், வெளி
நாட்டுக்கு அதை ஏற்றுபவர்கள் மீன் பிடி தொழிலாளர்கள் பேரில் லைசென்ஸ்
எடுத்துக்கொண்டு, பிராமணர்கள் இதை ஏற்றுகிறார்கள் என்றால், மிகையா
காது. ஏன் இந்த அளவுக்கு இருக்கிறதென்றால், இன்றையதினம் எரால்
அதிகமாகக் கிடைக்கிறது. தமிழ் நாட்டில் இந்த மீன் அதிகமாக இருக்கிறது.
அதை அரசாங்கமே பிடித்தால்கூட நல்லது. நாம் பைப் கம்பெனியை எடுத்
திருக்கிறோம்; ஆரூரான் சர்க்கரை ஆலையை எடுத்திருக்கிறோம். எனவே
மீன்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதையும் நாம் ஏற்று நடத்தினால்
நல்லவிதமாக இருக்கும். மேலும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்
களுக்கு அதிகமான மீன்களைப் பிடிக்க வசதிகளையும், வாய்ப்புகளையும்
ஏற்படுத்த வேண்டும். குளிர் பதன வசதிகள் சரியாகச் செய்யப்படவில்லை.
நான் இருக்கக்கூடிய பட்டுக்கோட்டைப் பகுதியில், அதிராமபட்டினத்தில்
மீன் பிடிப்பது முக்கியமான தொழிலாக இருக்கிறது. அந்த மீன்கள்
அங்கிருந்து திருச்சி, தஞ்சை நகர்களுக்குப் போகிறது. அங்கு குளிர் பதன
வசதிகள் கிடைக்கவில்லை. ஐஸ் வைத்து, நாட்டுப்புற மார்க்கமாகச் செய்து
கொண்டிருக்கிறார்கள். அங்கு பெரிய வசதிகள் இல்லை. எனவே அந்த
வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4.40)

அடுத்தபடியாக, நேற்றைய தினம் இந்த அவையிலே திரு. தீக்ஷிதர்
அவர்கள் குடிமராமத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி அவர் கூறும்
போது மராமத்து இலாக்கா அமைச்சருக்கும், அவருக்கும் கடுமையான வாதம்
ஏற்பட்டது. அதனால் அவர்கள் கோபமாகப் பேசிவிட்டார்கள். இருந்தாலும்
ஒரு உண்மையைக் கூறிக்கொள்வேன். இருவரும் செய்துகொண்ட வாதம்
சரியானதல்ல. குடிமராமத்துத் திட்டம் என்றால், தஞ்சை டெல்டா பிரதே
சத்தில் தான் இருந்து வருகிறது. பழைய டெல்டா பிரதேசத்தில் வெள்ளையன்
ஆண்டபோது முக்கியமான பெரிய ஆறுகளை வெட்டிக் கொடுத்தார்கள்.
அதிலிருந்து வரும் கிளை வாய்க்கால்களை வெட்டுவதில்லை. இதை மிராசுதாரர்
களே வெட்டிக்கொண்டிருந்தார்கள். குடிகளே வாய்க்காலை வெட்ட வேண்டு
மென்று தஞ்சை டெல்டா பிரதேசத்தில் தான் இந்த குடிமராமத்துத் திட்டம்

இருந்தது. அதைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருந்தார்கள். அவர்
களும் அதனை அன்றைய தினம் செய்து கொடுத்தார்கள். ஆனால், இன்றைய
நிலையில், குடிகள் யாரும் வாய்க்காலை வெட்டிக் கொடுக்க ஒப்புக்கொள்ள
மாட்டார்கள். அதற்கு சாத்தியக்கூறு இல்லாமல் போய்விட்டது. இதை
உணர்ந்த முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் 1 : 2 என்ற விகிதத்தில் குடிமரா
மத்துத் திட்டத்தை பஞ்சாயத்து கூட்டு மன்றம் நிறைவேற்ற வேண்டுமென்று
கூறினார்கள். அதைச் செயல்படுத்தும்போது சரியான முறையில் செயல்
படுத்தப்படவில்லை என்று இந்த அறிக்கையில் இருக்கிறது. அது உண்மை
யான விஷயம்தான். சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்ற
காரணத்தால், அரசாங்கம் அதை இப்போது ஏற்றிருக்கிறது. அதை நான்
வரவேற்கிறேன். ஆனால், 4:3 என்ற விகிதத்தில் நிறைவேற்றப்படும் என்று
சொல்லியிருக்கிறார்கள். அது சரியல்ல என்பது என்னுடைய தாழ்மையான
அபிப்பிராயம். நாம் எவ்வளவோ முன்னேற்றகரமான காரியங்களைச்
செய்யும்போது, பெரிய பெரிய வாய்க்கால்களை வெட்டும்போது, பல ஆயிரக்
கணக்கான ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, விவசாயி
களுக்கு மேலும் வரி போடும் விதத்தில்—மறைமுக வரி எவ்வளவோ வாங்கு
கின்றோம், அப்படிப்பட்ட முறையில்—இதையும் வாங்குவது சரியல்ல. 4 : 3
என்ற விகிதத்தில் வரி வாங்காமல், அரசாங்கமே போட்டுச் செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், காவேரி ஆற்றுப் பிரச்சினை மிக
முக்கியமான பிரச்சினை. காவேரி ஆற்றுப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்பட
வில்லை. இந்த வருடத்தோடு அந்த ஒப்பந்தம் முடிகிறது என்று குறிப்பிட்
டிருக்கிறார்கள். 1924 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு வரைக்கும்
காவேரி ஒப்பந்தம் நமக்கு இருக்கின்றது. இந்த வருடத்தோடு முடிந்து
விடுகிறது. இந்த ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்படவில்லை. இந்த நிலையில்
அநேக அணைகளை அங்கே கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அணைகளைக் கட்டிய
பிறகு, அணையில் தண்ணீர் தேக்க வேண்டாம் என்று மத்திய சர்க்கார் தடை
உத்தரவு போட்டிருக்கின்றார்கள். மத்திய சர்க்காரை இந்த விஷயத்தில்
கண்டிக்கிறேன். இந்த சர்க்கார் சரியான நிலையை எடுத்துக்கொள்ளத் தவறி
விட்டது என்று நான் குறைகூறவில்லை. ஆனால், சுப்ரீம் கோர்ட்டில் போட்ட
தாவாவை இந்த அரசாங்கம் வாபஸ் வாங்கியது பெரிய தவறு என்று கூறிக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதை அரசாங்கம்
தனிப்பட்ட முறையிலே வாபஸ் வாங்கிவிடவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள்
அனைவரையும் அழைத்து, அனைவரின் யோசனையின் பேரில்தான் வாபஸ் பெறப்



பட்டது. காரணம், இந்த விஷயத்தில் மத்திய அரசின் அமைச்சர்கள் அனை
வரும் தலையிட்டு, குறிப்பாக பிரதமர் அவர்களும் கூட அது சம்பந்தமாகப்
பேசி, அதற்குப் பிறகு இந்த முடிவிற்கு நாம் வந்திருக்கின்றோம். அந்த
அணையில் தண்ணீர் தேக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருப்பது நமக்குச்
சாதகமே தவிர, பாதகமானதல்ல. இந்த விவகாரம் முடிகின்ற வரையில்
கட்டப்படும் ஹேமாவதி அணையில் தண்ணீர் தேக்குவது போன்ற காரியங்களைச்
செய்யக்கூடாது என்று மைசூர் அரசிற்கு உத்தரவு போட்டிருக்கிறது. அவர்
களும் அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அது நமக்குச் சாதகமே தவிர
பாதகம் அல்ல. ஏதோ 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்துவிட்டதும்,
மறுநாளே காவேரி தஞ்சை மாவட்டத்தில் வற்றிவிடும் என்று கருதுவதும்
முறையல்ல. அப்படிப்பட்ட பீதிகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்த
ரேசத் தேவர் போன்ற அனுபவம் உள்ள உறுப்பினர்கள் மக்களிடத்தில்
பரப்புவது நல்லதல்ல. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம், அந்தக் காலம் முடிந்து
விட்டாலும், மீண்டும் புதுப்பிக்கப்படுகின்ற வரையில் அமுலில்தான் இருக்கும்
என்பதை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பத்திரிகைகளிலே
தவறான செய்தி போடக்கூடாது என்பதற்காக ஒரு சிறிய விளக்கம் அளிக்க
விரும்புகிறேன். நமது ஸ்டாண்டு என்ன என்பதைத் தெளிவாக எடுத்துச்
சொல்வதற்காக, இதனைச் சொல்கின்றேன். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம்
முடிந்துவிட்டது, மறுபடியும் புதுப்பிக்க வேண்டும் என்பதல்ல கருத்து. அந்த
ஒப்பந்தம் முடிந்ததும் மறுபடியும் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறதே
தவிர, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்துவிட்டது, மறு ஒப்பந்தம் செய்ய
வேண்டும் என்று தமிழ் நாடு ஒத்துக்கொள்ளவே இல்லை. தமிழக அரசின்
கொள்கை, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்த பிறகும் தண்ணீர் கொடுக்க
வேண்டும். இந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு பரிசீலனை செய்ய வேண்டும்
என்றுதான் இருக்கிறது. பரிசீலனைக்குத் தான் நாம் இருக்கின்றோம். தயவு
செய்து அவர்களைக் கேட்டுக்கொள்வேன், ஏதோ ஒப்பந்தம் முடிந்துவிட்டது
என்று தமிழக அரசே ஒத்துக்கொண்டது போல பத்திரிகைகளில் செய்தி
போடக்கூடாது. முடிந்துவிடவில்லை. ஒப்பந்தம் அப்படியே இருக்கிறது.
மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று பரிசீலிப்பதுதான் நம்முடைய
ஸ்டாண்டு. பத்திரிகைக்காரர்களுக்காகச் சொல்லுகிறேன். 50 ஆண்டு
களுக்குப் பிறகு எவ்வளவு பாசனத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம்,
எவ்வளவு தண்ணீர் செலவாகிறது, எவ்வளவு மொத்தம் தண்ணீர் இருக்கிறது,
மேற்கொண்டு எந்தெந்த மாவட்டத்துக்கு அதிகமாகப் பாசனத்துக்கு
விடலாம், எவ்வளவு சிக்கனம் செய்யலாம், எந்த அணையைக் கட்டலாம்
என்று இப்படிப் பரிசீலனை செய்வதற்குத்தான் இருக்கிறது. ஏதோ

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 13

924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்துவிட்டது, புதிய ஒப்பந்தம் செய்ய 'வண்டும் என்ற தவறான செய்தி போடக் கூடாது. அப்படி ஒன்றும் கிடை ாது. காலாவதியாகி முடிந்துவிடவில்லை. ஒப்பந்தம் அப்படியே இருக்கும் ன்றே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இருந்தபோதிலும் நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், இது பெரிய விஷயம். பயப்படாமல் இருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருத்துச் சொன்னாலும், அங்கேயிருந்து நமக்குத் தண்ணீர் வரவேண்டிய வழிகளில் அணைகளை அவர்கள் கட்டுகின்றார்கள். அதில் ஹேமாவதி பெரிய அணை. அதில் தண்ணீர் தேக்குவதை மத்திய சர்க்கார் தற்காலிகமாகத் தடுத்திருக்கிறார்கள். அணையைக் கட்டிய பிறகு, தண்ணீர் தேக்க வேண்டாம் என்று சொன்னால், எப்படிப் பொறுத்துக்கொண்டிருப்பார்கள்? என்றைக்காவது தண்ணீர் தேக்கத்தான் போகிறார்கள். ஆகவே, அவர்கள் தண்ணீர் தேக்கவில்லை என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் குறைகூறவில்லை, காவேரி ஆற்றுப் பிரச்சினையில் மத்திய, சர்க்கார் நடவடிக்கை எடுத்து முடிவு செய்திருக்க வேண்டும். அந்த அளவில் மத்திய சர்க்கார் எடுக்கவில்லை என்பதற்காக மத்திய சர்க்காரைக் கண்டிக்கிறேன். காலத்தில் முடிவு செய்திருக்க வேண்டும். மைசூர்காரர்கள் ஒப்பந்தத்தைப்பற்றி முடிவு செய்வதற்குள், மேற்கொண்டு அணையைக் கட்டவிட்டதே மத்திய அரசின் பெரிய தவறு. சுப்ரீம் கோர்ட்டில் போட்டிருந்த தாவாவை வாபஸ் வாங்கியிருக்க வேண்டியதில்லை. எதிர்க் கட்சித் தலைவர்களைக் கூட்டிவைத்து முடிவு செய்துதான் வாபஸ் பெற்றோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அரசாங்கம் எது சரி என்று ஆலோசனை சொல்லுகிறார்களோ, முதலமைச்சர் வார்த்தை எப்படியிருக்கிறதோ, அதற்கு ஏற்றவாறு, அரசு இயந்திரம் தங்களிடம் இல்லாத காரணத்தால், ஆட்சியில் இருப்பவர்கள் கூறுகின்ற நிலைமையில் மத்திய அரசாங்கத்திடம் நம்பிக்கை வைத்துக் கூறியிருப்பார்கள். மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் தாவாவை வாபஸ் வாங்கினால் ஒத்துக்கொள்கிறேன் என்று சொன்னதாகச் சொல்லி, அதை வைத்துக்கொண்டு எதிர்க் கட்சித் தலைவர்கள் வாபஸ் வாங்கலாம் என்று சொல்லியிருப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படித்தான் எதிர்க்கட்சித் தலைவர் ஏமாந்தாரா என்று எதிர்க் கட்சித் தலைவர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, இதில் ஏமாறும் விஷயம் எதுவும் கிடையாது. இந்தியாவிலே ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் தகராறு. மத்திய சர்க்கார் பாராமுகமாக இருந்தார்கள். சரியாகக்



1974 மார்ச் 13] [திரு. கே. ராஜாராம்]

கவனிக்கவில்லை என்ற வருத்தத்தில் கோர்ட்டுக்குப் போனோம். பின்னால் சரியாகக் கவனிக்கிறோம், தீர்த்து வைக்கிறோம் என்ற உணர்ச்சியோடு வந்து ஒப்புக்கொண்டு, நம்முடைய சர்க்கார் நம்பும்படியாக ஒப்புக்கொண்டார்கள். அதனால் தீர்த்துவைக்கின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டதால், கோர்ட்டில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று எல்லோரும் சேர்ந்து முடிவு செய்தோம். வேறொன்றுமில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவரவர்களே, ஆகவே இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில்களைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். சில மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டம் என்று அறிவித்து, தொழிற்சாலைகளை அமைக்க முன்வருகின்றவர்களுக்கு சப்சிடி கொடுத்து. இன்கம்டாக்ஸில் நீக்கம் கொடுத்து, விற்பனை வரியில் விலக்குக் கொடுத்து, மின்சாரக் கட்டணத்தில் சலுகை கொடுத்து, தொழில்கள் அமைக்கப்படுகின்றன. தனிப்பட்ட பெரிய முதலாளிகள் கோடிக்கணக்கில் முதல்போட்டு தொழில் வைப்பது சம்பாதிப்பதற்கு. யாரும் தொழிலை நஷ்டத்துக்காக வைப்பதில்லை. ஆகவே, தொழில்களைப் பொறுத்த வரையிலும், எந்த மாவட்டத்தில் ஏற்படுத்தினாலும், அரசாங்கம் கடன் கொடுப்பதோடு நிறுத்திக்கொண்டு, மற்ற வேலைகளை தொழிலை வைத்து நடத்துகின்றவர்கள் செய்ய வேண்டுமென்று சொல்லலாம். அதே நேரத்தில் நசிந்து போன தொழில்கள், பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் என்ன என்று நிர்ணயம் செய்து அந்தத் தொழில்களுக்கு சப்சிடி கொடுக்கும் விதத்தில் பாலிசி நோட் தயார் செய்து, அந்த மாதிரிச் செய்யலாம். சில தாலுகாக்களுக்கு சப்சிடி, சில மாவட்டங்களுக்கு சப்சிடி 15 சத விகிதம், 50 கோடி ரூபாய் முதல் போட்டு தொழிற்சாலை அமைத்தால் 15 சதவிகிதம் சப்சிடி, என்று எவ்வளவு கோடி ரூபாய் சப்சிடியாகப் போகிறது, விற்பனை வரி விலக்கில் எவ்வளவு கோடி ரூபாய் போகிறது, வருமான வரி விலக்கில் எவ்வளவு கோடி போகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த மாதிரி சப்சிடி கொடுப்பதில் மத்திய சர்க்கார் வரையில் தொடர்பு இருக்கிறது. இந்த நிலைகள் இருப்பது சரியல்ல. எங்கெங்கு மூலப் பொருட்கள் (ரா மெடீரியல்) கிடைக்கிறதோ, அங்கு மாவட்ட அளவில் தொழில் இயற்கையாக இருக்க வேண்டும். எங்கோ கொண்டுபோய் கோவையைப் போல் ஆக்கிவிட வேண்டும் என்று, பல விதமான சலுகைகளைத் தருகின்றோம், ஓடி வாருங்கள் என்று சொல்லி, பெரிய முதலாளிகள் எல்லாம் அந்த மாவட்டத்தை நோக்கி ஓடுகின்ற நிலை, புதிய அற்புதங்களை ஏற்படுத்துவது மாதிரி, எங்கே பார்த்தாலும் தொழிற்சாலைமயமாக இருக்கவேண்டும் என்கின்றமாதிரிச் செய்கின்ற நிலை நல்லதல்ல

என்பதை முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். தொழிலமைச்சர் இங்கே இல்லாதது ஒரு நல்ல காலம். அவர் இருந்தால் சண்டைக்கு வருவார். அவர் இல்லாத நேரத்தில் இந்த அவை யிலே இதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சண்டைக்கு வருவார் என்று சொல்லக் கூடாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவ்வளவு சலுகைகள் அளித்த பிறகும்கூட, பின்தங்கிய மாவட்டங்களில் இதுபோன்ற சிறு தொழில்கள் ஆரம்பிக்க யாரும் முன்வராத சூழ்நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். அண்மை யிலே புதுக்கோட்டை மாவட்டம் உருவானபோது, அங்கே வர்த்தக சங்கத்தின் சார்பாக அளிக்கப்பட்ட வரவேற்பிலேகூட, இங்கே தொழில்கள் அதிகமாக வளர வேண்டும் என்று ஒரு முறையீட்டை என்னிடத்திலே சொன்னார்கள். நான் பேசும்போது குறிப்பிட்டேன். இவ்வளவு சலுகைகள் இங்கே அளிக்கப் பட்டு, தொழிலமைச்சர் இங்கே வந்து சென்ற ஆண்டு இவ்வளவு சலுகைகளைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்; இந்த ஓராண்டு காலத்தில் யாரும் இங்கே தொழில் ஆரம்பிக்க முன்வராதது, இவ்வளவு சலுகைகள் அளித்தும் யாரையும் இது ஊக்கப்படுத்தவில்லை என்பதைக் காட்டுகிறது என்றுதான் நான் அங்கே ரொம்ப வருத்தப்பட்டுக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, மிகவும் சலுகைகள் அளித்த காரணமாக எங்கே பார்த்தாலும் தொழில் மய மாகிவிட்டது என்று நாம் கற்பனை செய்துகொள்வது நல்லதல்ல என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சலுகைகள் இருந்தால்தான் இன்னும் தொழிலதிபர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு அந்த இடங்களிலே நிறையத் தொழில்கள் ஆரம்பிக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, அனுபவமிக்க மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் ஏதோ எதிர்த்துக் கூறவேண்டும் என்பதற்காக எதிர்த்துக் கூறுவது நல்லதல்ல.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தொழிலதிபர்கள் மிகுதியாகப் பணம் போடுவது கிடையாது. நிறையப் பணத்தை அரசாங்கம் தருகிறது. மத்திய அரசு வேறு நிறையத் தருகிறது. இன்னும் அதைப்பற்றி அதிகம் பேசினால் தனிப்பட்டவர்களை இம்சை செய்கிறாற்போல் இருக்குமாதலால், அதைக் குறிப்பாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலைமைகளை யோசிக்க வேண்டும். அவர்களுக்கு அதிகமான சப்சிடியைக் கொடுக்கிறோம் என்றால், பரிசீலிக்க வேண்டும். எந்த ஜில்லாவிலே மூலப்பொருள்கள் கிடைக்கின்ற னவோ, அந்த இடத்தில் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். தஞ்சாவூர் மாவட்டம் என்ன பாவம் செய்தது? முதலமைச்சர் அவர்கள் சட்டத்திற்கு





ஐந்து ஏக்கராவுக்குக் கொண்டு மேல் சட்டம் போட்டு, இன்னும் உச்சவரம்பை வரப் போகிறார் என்று நினைக்கிறேன். இப்படி வந்தால் அங்கே உள்ளவர் களுக்குக் குடிக்க கஞ்சிதான் மிச்சமிருக்கும். வேறு எந்தவித வசதியும் இருக்காது. தொழில் வைத்திருப்பவர்கள்தான் பெரிய சுகபோகங்களை அனுபவிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்களே தவிர, விவசாயத் துறையிலேயும், மற்றத் துறையிலேயும் ஈடுபட்டிருப்பவர்கள் நலிந்துவரக்கூடிய நிலையிலே யிருப்பதை அரசாங்கம் உற்று நோக்க வேண்டும். இப்படி நான் பேசுவதால், நிலப்பிரபுக்களை ஆதரிக்க வேண்டும் என்று கூறுவதாகத் தவறாக எண்ணக் கூடாது. ஐந்து ஏக்கரா, 10 ஏக்கரா நிலம் வைத்திருப்பவர்களைவிட, தொழி லதிபர்கள் நிறையச் செல்வத்தோடு இருக்கிறார்கள். அவர்களுக்கிடையே ஏற்றத் தாழ்வு அதிகம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே வைக்கோல் கிடைக்கிறது ....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்பாக வரப்போவதாகச் சொல்லி தஞ்சை மாவட்டத்திலே காங்கிரஸ் கட்சிக்கு வலுத்தேட முயற்சிக்க வேண்டாம். இப்போதைய உச்சவரம்பில் எந்த மாற்றமும் இல்லை என்பதை இந்த மன்றத்தின் மூலமாக தஞ்சை மாவட்ட மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தஞ்சை மாவட்டத்திற்கும் இந்த மாதிரிச் சலுகைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, பொது சுகாதாரம், மருத்துவம்பற்றிப் பேசுகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சுகாதாரம் பற்றிக் கொள்கைக் குறிப்பு வருகிறது. கல்விபற்றிக் கொள்கைக் குறிப்பு வருகிறது. அதிலே பேசிக் கொள்ளலாம்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நான் எலக்‌ஷனுக்குப் போகவேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எலக்‌ஷனுக்குப் போவதற்காக சபையை எட்டு மணிவரை நீடித்துக்கொண்டிருக்க முடியுமா? எலக்‌ஷனுக்காக ஐந்து நிமிடம் பேசுகிறீர்களா? சரியாக 5 மணிக்கு முடித்துவிடுங்கள். இரண்டு மூன்று ஆசிரியர்கள் எலக்‌ஷனுக்குப் போக இருக்கிறார்கள். அப்படியென்றால் நாளையிலேயிருந்து இரண்டு மணிக்கே ஆரம்பித்துவிடுகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மருத்துவத் துறையைப் பொறுத்த வரை யிலே, கிராமங்களுக்குப் போதுமான திட்டம் போடவில்லை என்று கூற விரும்பு கிறேன். இந்தத் துறைக்கு அதிகமாக பணத்தைச் செலவு செய்கிறோம். 38 கோடிக்குமேல் வைத்தியத் துறைக்குச் செலவு செய்தாலும், கிராமங்களுக்குக்

குறைவாகத்தான் கிடைக்கின்றது. இந்த மாநிலம் முழுதும் 353 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். ஆனால் சென்னை நகரத்திற்கு மட்டும் 417 கோடி ரூபாய் மருத்துவத் துறைக்கு ஆஸ்பத்திரிகளிலே செலவு செய்யக்கூடிய நிலையிலே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 417 கோடி ரூபாய் என்ற கணக்கை சுகாதாரத் துறை பெறவில்லை. அதனாலே உறுப்பினர் எதைச் சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** 417 லட்சம். 4 கோடியே 17 லட்சம். 353 லட்சம். கோடி என்று சொன்னது தவறு. லட்சம் என்று திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருத்துவப் பணியிலே பலவகை இருக்கிறது. மருத்துவப் பணியிலேயே மிக அதிகம் செலவாவது டாக்டர் பட்டம் பெறுவதற்காக மாணவர்கள் படிப்பதற்கான கல்லூரியையும், அதை இணைந்த மருத்துவ மனைகளையும் நடத்துவது. அதேபோல, டாக்டர் படிப்புக்கு மேல், மேற்பட்டப்படிப்பு படிப்பதற்காக செய்யப்படும் செலவு மிகுதியானது. அப்படிப்பட்ட மிகப் பெரிய கல்லூரி சென்னையிலேதான் இருக்கிறது. அதற்காகப் போய் திருத்துறைப்பூண்டியிலேயும், வேதாரண்யத்திலேயும் இந்தக் கல்லூரியை வைக்க முடியாது. இல்லையானால் இப்படிப்பட்ட படிப்பு தேவையில்லை என்று அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களேயானால், அதைப் பரிசிலனை செய்யலாம்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** சாரி, சார். மெடிகல் காலேஜ் செலவுக் கணக்கை சேர்க்காமல், நகரப்புறத்திலே இருக்கிற ஆஸ்பத்திரிகள் செலவு அதிகம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னையிலே இருக்கிற பெரும்பாலான மருத்துவ மனைகளும், இ.எஸ்.ஐ. மருத்துவமனை தவிர, மன நோய் மருத்துவ மனையும் நல்ல முறையில் நடைபெறுகின்றன. வேறு சில மருத்துவமனைகள் எல்லாம், மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்தவை. அதனாலேதான் செலவு ஆகிறதே தவிர, தனியாகச் செலவிட முடியாது. அந்தக் கல்லூரிகளை அகில இந்திய வைத்தியக் குழு—மெடிகல் கவுன்சில்—ஏற்றுக்கொள்ளவும் இந்த ஏற்பாடு தேவைப்படுகிறது. இல்லையானால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மொத்தத்தில் 1974–75-ல் மருத்துவ, மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்கு 48.34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே இந்த அளவுக்கு நான்கு லட்சம், ஐந்து லட்சம் என்று கூறுவது பொருத்தம் அல்ல. அதை விளக்கிச் சொன்னால் புரியும்.





**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நாம் ஆங்கில மருத்துவத்திற்கு செலவு செய்யக்கூடிய தொகை இரண்டு கோடியே 75 லட்சம் ரூபாய். ஆனால் நாட்டு மருத்துவத்திற்கு . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நகர மருத்துவத்திலேயிருந்து நாட்டு மருத்துவத்திற்கு வந்துவிட்டீர்களா?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நாட்டு மருத்துவத்திற்கு இந்த அரசாங்கம் அதிகத் தொகையை ஒதுக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் வந்ததற்குப் பிறகு நாட்டு மருத்துவத் துறைகள் சீராக முன்னேற்றம் அடைந்து வருகின்றன என்பதை நான் வரவேற்கிறேன். நாட்டு மருத்துவத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. பல திட்டங்கள் போடுகின்றீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் இது போதாது. இன்னும் அதில் அதிக முன்னேற்றம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 10,000 பேருக்குமேல் ஜனத்தொகை இருக்கும் இடங்களில் ஒரு மெட்டர்னிடி சென்டர் வைத்துக்கொள்வதுபோல், 25,000 பேருக்குமேல் இருக்கும் இடங்களில் பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்களே ஆஸ்பத்திரி வைத்துக்கொள்ளலாம் என்று செய்ய வேண்டும். இப்பொழுது இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் டாக்டர் படிப்பு படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். எவ்வளவோ ரூபாய் செலவழித்து படித்துவிட்டு, வேலையில்லாமல் இருப்பதால், அவர்கள் தனியாக ஆஸ்பத்திரி வைத்துக்கொண்டிருப்பது உபத்திரவமாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உபத்திரவத்தைப் போக்குவதற்குத்தான் ஆஸ்பத்திரி.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அவர்கள் பள்ளிக்கூடத்திலே படித்துவிட்டு வந்து தனியாக வைத்தியசாலை வைத்தால், யார் சாகப்போகிறார்களோ, யார் பிழைக்கப் போகிறார்களோ என்று தெரியவில்லை. எனவே 25,000 பேருக்கு மேல் உள்ள இடங்களில் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் ஆஸ்பத்திரிகளை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டால், "சர்ப்ளஸ் ஃபண்ட்ஸ்" உள்ள பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் அம்மாதிரி ஆஸ்பத்திரிகளை வைத்துக் கொள்ளக் கூடிய நிலை ஏற்படும்; அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்விக்கு நாம் 110 கோடி ரூபாய் செலவழிக்க இருக்கிறோம். அப்படிச் செலவழித்தும் பிள்ளை பிழைக்கவில்லை. அதற்கு பலவிதமான காரணங்கள் இருக்கின்றன.

தலைவர் கொடுத்த நேரம் இன்னும் ஐந்து நிமிடம் இருக்கிறது. நான் கடைசிக்கு வந்துவிடுகிறேன். இந்த சமுதாய வளர்ச்சித் திட்டத்திலே முதலமைச்சர் மனது வைத்தால் எங்கேயோ கொண்டு போகலாம்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 110 கோடி ரூபாய் செலவு செய்யும் கல்வி என்ற பிள்ளை பிழைக்கவில்லை என்கிறார்களே, அதற்குப் பொருளே தெரியவில்லை. அதைத் தெளிவாக்கினால் நான் அறிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** திருப்தி இல்லை என்று பொருள். வாத்தியாருக்கே விளங்கவில்லை என்றால், யாருக்குப் போய் விளக்க முடியும்?

(பிற்பகல் 5.00)

அடுத்தபடியாக, சமுதாய வளர்ச்சியில் நமது அமைச்சர் அவர்கள் பெரிய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்ட மானது மிக உயர்ந்த திட்டம். கிராம ராஜ்யம்—பஞ்சாயத்து ராஜ்யம்— இந்தத் திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே நிலையிலே கிராம ராஜ்யம் என்ற பஞ்சாயத்து ராஜ்யம்பற்றி இந்த அரசாங்கம் புறக்கணித்திருக் கிறது என்ற குற்றத்தைச் சாட்ட நினைக்கிறேன். சீரும் சிறப்புமாக வளர வேண்டிய ஒரு அமைப்பு, பஞ்சாயத்து ராஜ்யம் என்பது, இந்த அரசாங்கம் ஏற்பட்ட பிறகு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தேய்ந்து கொண்டே வருகின்றதைப் பார்க்கிறோம். பல இடங்களிலே இந்தப் பஞ்சா யத்துக் கூட்டு மன்றங்கள் சிறப்பாக நடந்து வந்தாலும், அது ஏதோ குற்றம் செய்துவிட்டதைப் போலவும், அதிலே உள்ள அதிகாரிகள்தான் மிகச் சிறப் பான முறையில் பணியாற்றுவதைப் போலவும் இந்த அரசாங்கம் கருதிக் கொண்டு நடத்துவது அவ்வளவு முறையானதல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கிராமச் சாலை மேம்பாட்டைப்பற்றிச் சொல்லப்போனால், இந்த ஆண்டு அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிக மிகக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். கிராமங்களிலுள்ள சாலைகள் கடந்த காலங்களிலே அதாவது கடந்த நான்கைந்து ஆண்டுகளிலே மேம்பாடு அடைந்து வருகின்றது என்று கருதினால், அது மிகமிகத் தவறு. இன்று மேம்பாடடைவது நகரப் புறங்கள்தானே தவிர, கிராமப்புறங்கள் இல்லை. கிராமச் சாலைகள் மேம் பாட்டிற்கு என்று மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நமது மாநிலத்திலுள்ள அவ்வளவு கிராமப்புறச் சாலைகளுக்குமாக ஒதுக்கப்பட்





டிருப்பது மூன்று கோடி ரூபாய்தான் என்றால், இது எப்படிப் போதும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். குறைந்தது ஏழெட்டு கோடியாவது இருந்திருக்க வேண்டும். அதுகூட போதாது. அரசாங்கம் மானியமாகக் கொடுக்கும் மூன்று கோடி ரூபாயை ஒவ்வொரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கும் பகிர்ந்து கொடுத்தால், ரூ. 29 ஆயிரம்தான் வருகின்றது. பஞ்சாயத்துக் கூட்டு மன்றம் செலவழிப்பதையும் சேர்த்தால், மொத்தத்திலே ரூ. 59 ஆயிரம் தான் வருகின்றது. இதிலே அந்தப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திலுள்ள கிராமங்களிலே உள்ள சாலைகள் முழுவதுக்கும் கப்பி போடுவது, செப்பனிடுவது என்பதற்கு எப்படிப் போதும் என்று தெரியவில்லை. எனவே இந்த மாதிரித் திட்டங்களுக்கு இன்னும் அதிகமான நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை முதலமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். முக்கியமாக பெரியதொரு குறைபாடு பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலே நடக்கிறது. பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தின், நகர பஞ்சாயத்தின், முனிசிபாலிடியின் கவுன்ஸிலுடைய ரெஸொல்யூஷனை இல்லாமல் பல இனங்களிலே கமிஷனர்கள் செலவு செய்கின் றார்கள். இதிலே இன்றுள்ள ஆடிட் டிப்பார்ட்மெண்டும் சரிவர இயங்கவில்லை. சேவை செய்யக் கூடிய நிலையில் இல்லை....

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** (மணி அடித்து) பேசிக்கொண்டே போனால்? டிஸிப்ளினே இல்லை சபையில். அடுத்து, திரு. சா. கணேசன்.

**திரு. சா. கணேசன்:** மாண்புமிகு தலைவரவர்களே, வரும் ஆண்டிற்குச் சமர்ப்பிக்கப்பெற்றிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தின் பெரும்பகுதியினை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையிலே காணப்படும் சில பகுதிகளை முழுக்க முழுக்க வரவேற்கின்றேன். மத்திய அரசு மாநில அரசினை மாற்றாந் தாய்க் கண்ணோடு நோக்குகிறது, செயல்படுகிறது என்பதைத் தெள்ளத் தெளிய பல சந்தர்ப்பங் களிலே நாம் நேரடியாகக் காண்கிறோம். அதை இவ்வளவு கண்ணியமாகவும் ஆனால் கடுமையாகவும் வற்புறுத்தக்கூடிய உரைக்கு நன்றி கூறி அதை நான் வரவேற்கின்றேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் பல விஷயங்களிலே நாம் நம்முடைய உரிமையை இழந்துகொண் டிருக்கிறோம் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். 'ஃபேமிலி ப்ளானிங்'-ல் நாம் முழு வெற்றி பெற்றதன் காரணமாக நமக்குக் கிடைத்திருக்கின்ற பரிசு,

நமக்கு மத்திய சட்ட சபையில் உள்ள பிரதிநிதித்துவம் குறைந்துவிட்டது தான். ஜனத்தொகை குறைவது அல்லது கூடுவது என்பதை அடிப்படையாக வைத்து, தொகுதியினை நிர்ணயம் செய்வது ஒழுங்கன்று என்பதை நமக்கெல் லாம் தாய்ப் பாராளுமன்றம் என்று சொல்லக்கூடிய இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற முறையிலே நாம் காணக்கூடும். அங்கே ஒரு தொகுதி என்பது மூன்றரை சதுர மைல் விஸ்தீரணத்திற்குட்பட்டு, 30 ஆயிரம் மக்கள் தொகை யைக் கொண்டதாகவும் இருக்கலாம். இன்னொரு தொகுதி 300 சதுர மைல் விஸ்தீரணத்திலே மூன்று லட்சம் மக்கள் தொகையினை உள்ளடக்கியதாகவும் இருக்கலாம். ஆனால் அன்றிலிருந்து இன்று வரையிலே அங்கே தொகுதிகள் ஏதும் மாற்றப்படவில்லை. அந்தமாதிரி முறை இங்கேயும் அமைய வேண்டும். ஒருபுறம் ஜனத் தொகையைக் குறைக்க வேண்டுமென்று பல்வேறு வகையான ஊக்கங்களையும் கொடுக்கின்ற அரசு, இன்னொரு மாநிலம் அந்த முயற்சியில் வெற்றி பெற்று ஜனத்தொகை வளர்ச்சியினைக் கணிசமான அளவிற்குக் கட்டுப் படுத்தியிருக்கின்றது என்று சொன்னால், அதற்கு உறுப்பினர்கள் தொகையில் இரண்டை அதிகமாகப் பரிசாகக் கொடுக்க வேண்டியிருக்க, உள்ள உறுப் பினர்கள் தொகையில் இரண்டு குறைந்ததைத் தான் பார்க்கிறோம். இந்த மாதிரியே நாம் போய்க்கொண்டிருப்போமானால், இந்த மாநிலம் உண்மையான நியாயம், கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் அல்லது உரிமைகளை இழந்துவிடக் கூடிய நிர்ப்பந்தம் ஏற்படும். அது மட்டுமின்றி, மத்திய ஆட்சியிலே விதிக்கப் படுகின்ற வரிகளின் தன்மையும், முறையும் அளவும் பல்வேறு வகையில் நம்மைப் பாதிக்கக்கூடியவையாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். இந்த நிலையில் இந்த அரசும் ஒரு அளவிற்கு வரி போட்டிருக்கின்றது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் மறைமுக வரிகளாலே சில அளவிற்கு பாதகம் ஏற்படக்கூடிய, அதாவது பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை காணப்படு கிறது. அது கிட்டத்தட்ட தவிர்க்க முடியாத நிலை என்று கூடச் சொல்ல லாம். ஆனால் ஆலோசனை என்ற முறையில் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். அனுவசியமாக அரசுடமையாக்குவதிலும் பல்வேறு முறைகளிலும் அரசுக்கு ஏற்படுகிற கணிசமான நஷ்டங்களைக் குறைத்துவிட்டால், இத்துணை நஷ்டங்கள் நமக்கு வராது என்று கருதுகிறேன். இன்றைக்கு பல்வேறு அரசுடமையாக்கப்பட்ட துறைகளிலும் இலாபம் காண்பது குதிரைக் கொம் பாகிவிட்ட நிலையைக் காண்கிறோம் நாம். ஆகவே இந்த மாதிரி அரசுடமை யாக்குவது மாநில ஆட்சிக்கு, மாநில மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்மை பயக்குமா என்பதைச் சற்று சீரிய முறையில் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வரி என்று சொன்னால், வசூலிக்கப்படும் வரி முழுவதையும் எந்தத் துறையிலிருந்து, எவரிடமிருந்து வசூலிக்கப்படுகிறதோ அந்தத் துறைக்கு, அவர்களுக்குக் காப்பு செய்வதாக அமைவதுதான் வரி.





தமிழிலே வரி என்ற சொல் காப்பு என்ற பொருளை அடிப்படையாகக் கொண் டுள்ளதை நாம் காண்போம். ஆங்கிலத்திலுள்ளதைப் போல 'டேக்ஸிங்' என்று சொன்னால் ஏதோ துன்புறுத்துவது என்ற பொருளே அங்கே idiotic ஆக அமையும். இங்கே வரி போட்டார்கள் என்று சொன்னால், காப்பு செய் தார்கள் என்றுதான் பொருள்படும். காப்பு செய்தான் என்ற பொருளிலேயே இந்த நாட்டிலே வரி என்ற சொல்லின் பொருள் பெருகிநிற்கின்றது. சார்ந்து நிற்கின்றது. அந்த முறையில், போடும் வரிகள் யாவும் அதைக் கொடுப்போர் கலங்காவண்ணம் அமைந்திருத்தல் அவசியம் என்றும், அரசுடமையாக்கு வதிலே வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம், எனவே அதைச் செய்திடுவோம் என்றில்லாமல் உண்மையான பலன், நன்மையான பலன் உண்டா இல்லையா என்று பார்த்து, இல்லையென்று தெரிந்தால், உடனே அதை உதறித்தள்ளிவிட அரசு முன்வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

இன்னும் அதிகமாகவும், நான் மிகவும் ஈடுபட்டுள்ள துறையைப் பற்றி மட்டும் சொல்லி அமர விரும்புகிறேன். கல்வித் துறை இப்போது தமிழ் நாட்டில் மிக மிகச் சீரழிந்துவரும் நிலையிலே இருக்கின்றது. மாணவர் களிடையிலே அமைதி இல்லை, ஆசிரியர்களுக்கும் நம்பிக்கை அற்றுப் போய் விட்டது. நிர்வாகஸ்தர்களுக்கு என்றுமே துன்பம். இந்த நிலைதான் நாம் காண்கின்ற பரவலான நிலை இன்றைக்கு. எண்ணிக்கையிலே கல்வி பெருகி யிருக்கின்றது என்பதை நான் மறுக்கவில்லை. எண்ணிக்கைப் பெருக்கத்தை மட்டும் கொண்டு உண்மையான கல்வியினை ஒரு நாடோ அல்லது ஒரு நாட்டின் பகுதியோ பெற்றதாகக் கருதிவிட முடியாது. உண்மையான கல்வி, நன்மை யான கல்வி எண்ணிக்கையில் இருக்க முடியாது. படிக்கும் மாணாக்கர் களிடையிலே தூய குணமும் நல்லொழுக்கமும் அவர்களுடன் வளர்ந்திருந்தால் தான், அவர்கள் உண்மையான, நன்மை பயக்கக்கூடிய கல்வியினைப் பெற்றுள்ள தாகக் கருத முடியும். ஆனால் இப்படி இருக்கின்றதா என்று பார்த்தால், காரைக்குடியிலே ஒரு சம்பவம், சொல்லவும் கஷ்டமாக இருக்கின்றது. மாண வர்கள் பலர் கூடி பல்வேறு குடிசைகளை நெருப்பு வைத்துக்கொளுத்தி அழித் தார்கள். என்னால் எண்ணவே முடியவில்லை. காரணம் என்ன? அதில் எல்லா ஜாதிக்காரர்களும் இருக்கின்றார்கள், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்களும் இருக்கின்றார்கள், தாழ்ந்த ஜாதிக்காரர்களும் இருக் கின்றார்கள். சிவராத்திரி அன்றையதினம், பல மாணவர்கள் குடித்துவிட்டு, ரெயில்வே தொழிலாளர்கள் நடத்திய நாடகம் நடக்கும் இடத்திலே போய் எண்ணமுடியாத, சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லி, ஈனத்தனமான செயல்களிலே ஈடுபட்டு அந்தப் பகுதி மக்களின் மகளையோ மகனையோ துன்பத் திற்குள்ளாக்கி யிருக்கின்றார்கள். இதை அறிந்த அப்பகுதி மக்கள் மறுநாள் சில மாணவர்களை அடையாளம் தெரிந்து இரண்டு மொத்து

மொத்தியிருக்கின்றார்கள். அது அதோடு நின்றுவிடவில்லை. அதன் காரணமாக மாணவர்கள் ஒரு ஐநூறு அறுநூறு பேர் மீண்டும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு மண்ணெண்ணெயில் துணிப் பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு வந்து அங்கிருந்த குடிசைகள் முழுவதையும் தீக்கிரையாக்கியிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட கல்விதான் இந்தத் தேசத்திற்கு வேண்டுமா? சிந்திக்க வேண்டும்.

**ஒரு மாண்புமிகு அமைச்சர் :** அது நம் சிலபஸில் இல்லை.

(பிற்பகல் 5.10)

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, சிலபஸில் இருப்பதைத் தவிர பாக்கியெல்லாம் நடக்கின்றது. மாணக்கர்கள் எதைக் கற்க வேண்டும் என்று பாடத் திட்டத்தில் காணப்படுகிறதோ, அவைகள் தான் கற்கப்படுவதில்லை. கற்பிக்கப்பட வேண்டியவை தவிர பிறவெல்லாம் கற்பிக்கப் படுகிறார்களோ அல்லது கற்றுக் கொள்கிறார்களோ எனக்குத் தெரியாது. அதைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது, மிக பயங்கரமான, அராஜகமான நிகழ்ச்சிகள் என்று தோன்றுகிறது. இவ்வளவு பெரிய அராஜகம் சமூகத்தில் நடைபெற்றிருக்கின்றபோது, நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல் துறை நடவடிக்கை எடுத்ததா? அப்படி எடுக்கப்பட்டிருந்தால், என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன். உறுப்பினர் அவர்கள் சொன்னதிலிருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது. அவர் அதுபற்றிய விவரம் கூற வேண்டும் என்று விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன் :** துணைத் தலைவர் அவர்களே, என்னிடமிருந்து அறிய முடியாது. நான் சட்டத்தின் நிலைமையைத்தான் சொல்ல முடியும். நான் எதையும் சொல்வதற்கு அரசாங்கத்தில் இல்லை. அரசு சார்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்ல வேண்டும். 'ஃபேக்ட்' மெய்மையை நான் புலப்படுத்துகிறேன். விளைவைக் கண்டு என்னால் சொல்ல முடியும். அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்றால், அது எனக்குத் தெரியாது. ஆனதினால் உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டிய முறைப்படி கேட்டு பதில் பெற்று அதன் மூலம் எனக்கும் புலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஆட்சிக் குழுவில் இருக்கிறேன். ஆனதினாலேதான் இந்த மாதிரியான கஷ்டங்களைப்பற்றி நான் பல முறை சொல்லியிருக்கிறேன். முன்னொரு காலத்தில் பேரவையிலும் சொல்லியிருக்கிறேன். என்னுடைய நிர்வாகத் துறையிலும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதிலே சம்பந்தப்பட்டவர்கள்



எல்லோரும் நான் சொன்னதை வேறு பொருள்படுத்தி விடாமல், நான் முழுக்கச் சொன்ன பிறகு பொருள் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளியூர் மாணக்கர்கள்தான் இவ்வளவும் பண்ணுவது, ஆகவே வெளியூர் மாணக்கர்கள் எல்லோரும் கெட்டவர்கள், உள்ளூர் மாணக்கர்கள் நல்லவர்கள் என்று சொல்வதாகக் கருதிவிடக் கூடாது. காரைக்குடி மாணக்கர்கள் சேலத்தில் போய் அங்கே இதைச் செய்வார்கள். காரைக்குடியையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமிருந்து வருகின்ற மாணக்கர்கள் அங்கேயே படித்தால் சிறிது அஞ்சுகிறார்கள். தங்களைச் சேர்ந்தவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் அல்லது அவர்களுடைய எஜமானர்கள் அல்லது வேலைக்காரர்கள் யாராவது சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் கண்டு விடுவார்கள், நமக்கு மான ஹீனம், தண்டனை வரும் என்ற அச்சம் இருக்கிறது. இந்தப் பகுதி மாணக்கர்கள் உயர்ந்தவர்கள், அந்தப் பகுதி மாணக்கர்கள் குறைந்தவர்கள் என்று நான் சொல்லவில்லை. அந்தப் பகுதியில் கட்டுப்படுத்தக்கூடிய பெற்றோர்களோ, சுற்றத்தார்களோ, மற்றவர்களோ இல்லாத நிலைமையில், முழுக்க முழுக்க கட்டுப்பாடற்ற நிலைமையில், வெகு தூரத்திலிருந்து வருகின்ற மாணக்கர்களால் பல்வேறான இடங்களில் இப்படிப்பட்ட துன்பம் வருகிறது. இப்பொழுது மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம் ஐந்து, ஆறு கல்லூரிகள் சில இடங்களில் எட்டு, ஒன்பது கல்லூரிகள் இருக்கின்றன. திருப்பத்தூர் தாலுக்காவில் மட்டும் மூன்று கல்லூரிகள் இருக்கின்றன. திருப்பத்தூரில் இருப்பதோடு பக்கத்தில் உள்ள பள்ளத்தூர், செட்டிநாடு போன்ற இடங்களிலும் இருக்கின்றன. ஆக, திருப்பத்தூர் தாலுக்காவில் மட்டும் இவ்வளவு இருக்கின்றன. இப்படி இருக்கின்றபோது காரைக்குடி மாணக்கர்கள் சேலத்திலும், சேலம் மாணக்கர்கள் காரைக்குடியிலும் சேர்க்கப்படுவது எதற்கு? ஏதோ ஸ்பெஷலைஸ்டு கோர்ஸஸ், ஜியாலஜி எம்.ஏ., போன்றவைகளுக்கு வேண்டுமானால் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஊர் விட்டு ஊர் போய்ப் படிப்பதால், உறுப்பினர் அவர்கள் சொன்னபடி தகராறுகள் அதிகம்தானே ஏற்படும்?

**திரு. சா. கணேசன் :** அது கூடாது என்றுதான் நான் சொல்கிறேன். அந்தந்த ஊர்களுக்குப் பக்கத்திலேயே கல்லூரிகள் இருக்கின்றபோது, அங்கேயே சேர்ப்பதுதான் நல்லது. ஏதோ ஸ்பெஷல் கோர்ஸஸ் வேண்டுமானால், அவை இருக்கக்கூடிய இடங்களுக்குச் செல்வது சரியானது. அந்தச் சந்தர்ப்பங்களில் காரைக்குடியிலிருந்து சென்னைக்குச் செல்வது பொருந்தும். பி.யு.சி., பி.ஏ. (எக்கனமிக்ஸ்), பி.காம்., பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி, பிஸிக்ஸ் போன்றவைகள் எல்லாம் எல்லாக் கல்லூரிகளிலும் இருக்கின்றபோது

அவற்றைப் படிப்பதற்காக வெளியூர்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. யுனிவர்ஸிட்டியில்கூட நான் இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதில் அரசு ஒரு கண்டிப்பு காட்ட வேண்டும். உள்ளூர் என்றால், அவர்களுடைய ஊரை மட்டும் சொல்லவில்லை. அந்த ஊரைச் சுற்றியுள்ள பிராந்தியம், அந்த ஏரியா, அந்த லொகாலிட்டி, எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்—அந்த அளவுக்குள்ள மாணுக்கர்களைத்தான் சேர்க்க வேண்டும். அவர்களுக்குப் போக, அதற்கு மேலே வெளியிடங்களிலிருந்து விண்ணப் பங்கள் வருமானால், அந்த மாணுக்கர்களைச் சேர்க்கலாம் என்று போடுவது பயனுடையதாகவும், இத்தகைய கொடுமைகள் நிகழாமல் மாணுக்கர்களைக் காப்பாற்றும்படியாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகை யினால் நாம் அதைச் செய்ய வேண்டும். அதற்கும் மேலே பச்சையாகவே சொல்கிறேன். என் மீது யாரும் கோபப்படத் தேவையில்லை. எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், எந்த அளவிலும் எந்த முறையிலும் மாணுக்கர்கள் சமூகத்தை எந்தக் காரணம் கொண்டும் அணுகுவதில்லை என்று இருக்க வேண்டும். அப்படி அணுகுவது சட்டப்படி குற்றம் என்று சட்டம் இயற்ற வேண்டும். நான் எந்த அரசியல் கட்சியையும் குற்றம் கூறவில்லை. எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஓரளவுக்கு நானும் அரசியல்வாதிதான். ஆகையினால் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், அந்த மாணுக்கர்களிடையே அவர்கள் பயிலுகின்ற வரையில் அரசியலில் ஈடுபாடு கொள்ளச் செய்யக்கூடாது. அப்படி எல்லோரும் சேர்ந்து ஒரு உடன்பாடு செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், சட்டப்படி குற்றம் என்று ஒரு சட்ட விதி செய்து வைக்க வேண்டுமென்று நான் மனப் பூர்வமாக, அழுத்தமாக மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். வருங்கால சமுதாயம் வளம் பெற்று நல்வாழ்வு பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் இதைச் செய்தாக வேண்டும். இப்பொழுது அவர்கள் கெடுகின்ற, தீமை அடைகின்ற கொடுமை பரவி வருகிறது. நான் 25, 30 ஆண்டுகால கல்லூரி அனுபவத்தின் காரணமாகத்தான் சொல்கிறேன். இந்த ஸ்காலர்ஷிப் கொடுப் பதால் பலவிதமான தீமைகள் ஏற்பட்டு வருகின்றன. நான் யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்ற முறையில் சொல்லவில்லை. எதையும் அபாண்ட மாகச் சொல்லவில்லை. ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டும். அதை வாங்கிக் கொள்கின்ற மாணவன், மாணவி எந்தவிதமான குற்றச்சாட்டுக்கும் ஆளா காமல் இருக்க வேண்டும். அப்படி ஏதாவது குற்றச்சாட்டுக்கு ஆளானால், அந்த நிமிஷமே ஸ்காலர்ஷிப் ரத்து செய்யப்பட வேண்டும் என்ற ஒரு நியதி யாவது வேண்டும். இன்று நல்ல முறையில் பாஸ் செய்கின்றவன் வாங்கிக் கொண்டிருக்கிறானு என்று பார்த்தால், எட்டு முறை கோட் அடித்து, திரும்பத் திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. இங்கே வரியில்





இருக்கின்றவர்கள் வரியாகக் கொடுப்பதையெல்லாம், இப்படி தண்டத்திற்குச் செலவழிப்பது என்றால், அதைப்பற்றி நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். அடுத்து, ஒன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

நானும் இந்த அரசு சென்ற நான்கு, ஐந்தாண்டு காலத்தில் செய்யும், செய்யும் என்று எதிர்பார்த்தேன். இந்தத் தொடர் கூட்டம் முடிவதோடு, இந்த அவையி லிருந்து இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலை பெறப்போகிறவன் என்ற முறையில் இறுதியாக அதை இப்பொழுது கூறுகிறேன். தமிழக வரலாறு உலகத்திலேயே மிக முக்கியமான வரலாறு. தமிழக வரலாற்றைப் போல் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய சான்றுகள் நிரம்பிய வரலாறுகள் இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்காலர்ஷிப் என்பது சமுதாயத்தில் அழுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட, அமுக்கப்பட்ட மாணவர்கள் கல்லூரியில் படிக்கிறார்கள். பணக்காரர்களுடைய மாணவர்கள், செல்வந்தர்களுடைய மாணவர்கள், தேவைக்கு மேல் பணத்தை வைத்திருக்கக்கூடியவர்கள், அதே கல்லூரிகளில் தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்கின்றார்கள். அவர்கள் தவறுகள் செய்தால், எந்தவித தண்டனையும் இல்லை. இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பது சம்பந்தமாக, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தவறு செய்தால், அவர்களுக்குத் தண்டனை கொடுத்து, அந்த ஸ்காலர்ஷிப்பை நிறுத்துவது என்பது எந்த விதத்தில் நியாயம்? தவறு செய்கின்றவர்கள் என்றால், எல்லோருக்கும் ஒரே விதமான தண்டனை தானே இருக்க வேண்டும். பொருளா தாரத்தைக் கொடுப்பதாலே, அதைப் பறிக்க வேண்டும் என்று கூறுவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சா. கணேசன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் சந்தேகங்களுக்கு எல்லாம் பதில் கூறிக்கொண்டிருக்க எனக்கு நேர மில்லை. நான் சொன்ன கருத்திற்கு உடன்பாடு இருந்தால், அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உடன்பாடு இல்லை என்றால், அதற்கும் நன்றி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கு வதாக இருந்தால், நான் நேரம் தருகிறேன்.

**திரு. சா. கணேசன்:** நான் இப்படி நண்பர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லிக்கொண்டே போனால், என்னுடைய பேச்சு தொடர் பற்றுப் போய்விடும். குறுக்கீடுகள் இல்லாமலிருந்தால், அவரவர்கள் தங்கள்,

[திரு. சா. கணேசன்] [1974 மார்ச் 13

தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லலாம். நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். உடன்பாடு இருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள், இல்லா விட்டால் விட்டு விடுங்கள்.

நான் நிச்சயமாக நம்புகிறேன். 25 வருஷ அனுபவத்திலிருந்து நிமை யைத்தான் தரும் என்பது என்னுடைய கருத்து, அழுத்தமான கருத்தும் ஆகும்.

இந்த வரலாற்றைப் பொறுத்த வரையில் தமிழகத்திற்கு உள்ள அளவுக்கு வேறு எந்த மாநிலத்திற்கும் தொடர்பு இல்லாமல், ரெகார்டட் எவிடன்ஸஸ் என்று சொல்லப்படுவது போல், பதிவு செய்யப்பட்ட சான்றுகள் அமைந்திருக் கின்றன. நான் இருபது வருஷங்களுக்கு முன்னால் பார்த்த கல்வெட்டுகள் இன்று மார்பிள் ஸ்டோன் மாதிரி ஆகிவிட்டன. இனி எழுதிவைக்கப்பட்ட வைகளைக் கொண்டுதான் செயல்பட வேண்டும். அற்புதமான கல்வெட்டுகள், மகேந்திர வர்மாவின் அற்புதமான கல்வெட்டுகள், பல்லவா டைனஸ்டி என்று சொல்லப்படுகின்ற காலத்திய கல்வெட்டுகள் எல்லாம் இன்று வழ வழப்பாகி விட்ட நிலைமையில் இருக்கின்றன. அவைகளிலே பள்ளமே கிடையாது. இனியும் அப்படியே விட்டுக்கொண்டு போனால், எந்தக் காலத்தில் இவற்றை யெல்லாம் படம் எடுத்துப் பரிசீலித்து தமிழகத்தின் வரலாற்றை எழுதுவது என்று புரியவில்லை. நல்ல அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத் திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். ஆனால் பயனற்ற வேலை. சமைக்கச் சொல்லி விறகு மட்டும் வாங்கிவிட்டால் பிரயோஜனமில்லை. அரிசி, உப்பு, பருப்பு எல்லாம் இருந்தால்தான், சமையல் செய்ய முடியும். விறகு, சட்டி, பானை இருந்தால் மட்டும் சமையல் செய்துவிட முடியாது. பல்வேறு கல்வெட்டுக்களையும் செப்புப் பட்டயங்களையும் எடுத்துப் பார்த்தாலும், பலருக்குப் பொருள் புரியாது என்று சொன்னார்கள். அந்தச் சொற்களுக் குள்ள உட்பொருள்களைக் கண்டுபிடித்து எல்லோருக்கும் புலப்படுத்த வேண்டியது கடமையாகும். முதலில் அதை நாம் செய்ய வேண்டும். நானும் இதை ஐந்து வருஷமாகக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். செய்கின்றார்கள் ஏதோ, ஆனால் அந்தத் துறை ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. சொல்லக் கூட வருத்தமாக இருக்கிறது. குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. அரசியல் ரீதியில் இதனால் நமக்கு எந்தப் பலனும் இல்லை. நலனும் இல்லை என்று இருந்துவிட முடியாது. அந்த நிலைமையில் எல்லா அரசியல் கட்சிகளும் மெத்தனமாக இருந்துகொண்டிருக்கலாம். அப்படி இருக்கக்கூடாது. இதைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 13] [திரு. சா. கணேசன்]

தேசத்தின் வளர்ச்சி, தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழ்த் துறையின் வளர்ச்சி இவை முக்கியம். இந்த சமயத்தில் ஒன்றைக் கூட சொல்ல ஆசைப் படுகிறேன். தேசிக விநாயகம் பிள்ளை அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவன். அவர் இறுதியிலே என்னிடத்திலே சொன்னார்கள். நீங்கள் என்னதான் இலக்கியங்களிலிருந்து, தொல்காப்பியம் இலக்கணங்களி

(பிற்பகல் 5.20)

லிருந்து, ஔவை நூல் வரையிலே கற்றாலும், அரையணாவிற்குப் பிரயோசன மில்லை. அவர் கல்வெட்டிலே கருத்தைச் செலுத்துங்கள், கல்வெட்டுத் தான் உண்மையான தமிழ், கல்வெட்டுத் தான் உண்மையான தமிழ் வசன நடை என்று சொன்னவர். அதற்குப் பிறகு தான் அந்தத் துறையில் ஏதோ அரைக் கால் இஞ்ச் அளவிற்கு ஈடுபாடு கொள்ளத் தொடங்கினேன். அந்த ஆர்வத்திலே தான், தமிழ் அன்பும், தமிழ் உணர்ச்சியும், தமிழ் முன்னேற வேண்டுமென்ற எண்ணப்பாடும் எனக்கு ஏற்பட்டது என்பதை ஆட்சிக் குழுவிற்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

சொல்ல கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கல்வெட்டுத் துறைக்கு ஒரே யொரு கார் தான் இருக்கிறது. நான் கார் வைத்திருந்தபோது, என் காரையும் எடுத்துக்கொண்டு பெரும்பாலும் பல இடங்களுக்குப் போய் படி எடுத்துக்கொண்டு வந்தோம். இப்போது அங்கே ஒரு கார் தான் இருக்கிறது. அது 10 பேர்கள் சேர்ந்து தள்ளினால் தான் போகும். ஒவ்வொரு தாலுகா விலும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களெல்லாம் புதுப் புதுக் கார்கள் வைத்துக் கொண்டிருக்கும்போது, தமிழ் நாட்டின் தலையாய டைரக்டரேட், ஆர்கிலாஜி டிபார்ட்மெண்டு, அதற்கிருக்கிற கார் 13 வருஷத்திற்கு முந்தின கார். அதைத் தள்ளவே முடியாது. அவ்வளவு கஷ்டம். நகர மாட்டேங்கறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதை அந்த இயக்குநரே சொல்லியிருக்கலாம். அதை மாண்புமிகு உறுப்பினர் மூலமாக அவர் சொல்லத் தேவையில்லை.

**திரு. சா. கணேசன்:** முதல்வரவர்கள் மன்னிக்க வேண்டும். நிச்சயமாக அவர் எனக்குச் சொல்லவேயில்லை. அவருக்காக நான் இங்கே சொல்லவும் இல்லை. தினப்படி அதோடு தொடர்பு கொண்டிருக்கிற நிலைமையில் நான் உணருவதை, எதைக் கண்டு மனம் புழுங்குகிறேனோ அதை இங்கே சொல் கிறேனே தவிர, இயக்குநர் சார்பாகச் சொல்லவில்லை. ஒரு துளி கூட இதில் அவருக்குச் சம்பந்தமில்லை என்பதை அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது சொல்லிய கருத்துக்களுக்கெல்லாம் யார் யாரோ காரணம் என்று சொல்லப்படாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் எதையும் திசை திருப்பவோ அல்லது காரணம் காட்டி குற்றஞ்சாட்டவோ சொல்லவில்லை. ஒரு இயக்குநருக்குக் கார் பயன்படாமல் இருக்கிறதென்று சொன்னால், அதை அரசுக்கோ சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கோ அவர் சொல்லாமலிருப்பது தவறு என்பதற்காகத் தான் சொன்னேன்.

**திரு. சா. கணேசன் :** அப்படியானால் நானும் சேர்ந்து கண்டிக்கிறேன். அவர் சொன்னாரா, சொல்லவில்லையா என்பது எனக்குத் தெரியாது. நான் சொன்னேன். காரண காரியங்கள் எனக்குத் தெரியாது. நான் 'ஃபாக்ட்ஸ்' என்று சொல்லப்படுகிற மெய்மையைத் தான் நான் புலப்படுத்த முடியுமே யன்றி என்ன காரணங்கள் என்று எனக்குத் தெரியாது.

இதுபோக, இதே மாதிரி சிற்பக் கல்லூரி இருக்கிறதே, அது குறித்து கிட்டத்தட்ட ஆர்டர் போட்டாகிவிட்டது என்று கேள்விப்பட்டேன். அவரைப் பார்த்து, 4, 5 மாதம் ஆகிறது. அது முறையாக டெக்னிகல் எஜுகேஷன் என்று சொல்கிறோமே, அந்தத் துறைக்குள்ளே வந்து செயல்படுவதற்கான நிலைமைகள் ஏற்பட வேண்டும். இன்னொன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆந்திரா சர்க்கார்கூட, "தி கவர்ன்மெண்ட் ஸ்தபதி" என்று சர்க்கார் என்ஜினியர்கள், சீப் எஞ்ஜினீயர்கள் இருக்கிற மாதிரி பண்டைகால ஆர்கிடெக்சருக்கு ஸ்தபதியை ஆந்திரா சர்க்கார் வைத்திருக்கிறது. சமீபத்தில் காளஹஸ்திக்குப் போனபோது, அந்த மாநில எண்டவுமெண்ட் மந்திரி, "எங்கள் கவர்ண்மெண்டில் ஸ்தபதியை வைத்திருக்கிறோம். உங்கள் சர்க்காரில் கிடையாது" என்றார். ரொம்ப நன்றி என்று சொன்னேன். இதற்கு மேலே நான் சொல்லவும் முடியாது, சொல்லவும் படாது. இந்த மாதிரி நிலை இருக்கும்போது, முழுக்க முழுக்க, தமிழ் நாட்டில் தமிழர்களாலேயே ஆக்கப்பட்ட கலை நூல்களை, தமிழர்களேயிருந்து செயல்படுகிற நோக்கில்—அதிலும் நமது முதல்வரவர்களுக்கு அந்தப் பள்ளியைப்பற்றி நன்றாகத் தெரியும். பூம்புகார் பணி முழுவதும் செம்மையாக, திறமையாக பண்டைய காலப் பாணியிலே முழுக்க முழுக்கச் செய்த அருமைப்பாட்டினை அவர்கள் நன்றாக நேரில் அறிவார்கள்—அந்த நிலையில் இதை விரைவிலே டெக்னிக்கல் எஜுகேஷனுக்குக் கீழே கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பழனி, பூம்புகார் போன்ற கல்லூரிகள் அமைக்கப்பட்ட நோக்கமென்ன. இப்போது நடைபெறுகிற நோக்கமென்ன என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். பழனி, பூம்புகார் கல்லூரிகள் முழுவதும் முழுக்க முழுக்க தனித் துறையாக ஆரம்பிக்கப்பட்டவை; நஷ்டமா, லாபமா என்று பார்க்கக்கூடாது. அதை விட்டு, பி.யு.சி., பி.ஏ., எல்லாம் ஆரம்பித்தால், பழனி கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதன்





நோக்கம் கெட்டுவிடுகிறது. பழனி கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது, 24 மாணாக்கர்கள் தான் சேர்ப்பது என்று ஸ்பெஷல் கோர்ஸ் மாதிரி வைக்கப்பட்டது. பி.யு.சி. கல்லூரி 2,000, பி.ஏ. கல்லூரி 200 இருக்கின்றன. இப்படிப்பட்ட தனித்தன்மை உள்ள கல்லூரிகளையும் இந்தத் துறையிலே தள்ளிவிட்டோமென்றால், தனித் துறை என்பதற்குப் பெயர் இல்லாமல் போய்விடும். அந்த மனத்தாங்கலில் தான் இதை நான் சொல்கிறேன். இந்த இரண்டு கல்லூரிகளையும் அந்தந்த கலைத் துறைகளுக்கே ஒதுக்கியாக வேண்டும். 100, 200 பேர்கள் என்று சேர்த்தால், அந்தத் துறை உருப்படியாகாது. 25 பேர்கள், அதிக பட்சம் 30 பேர்களுக்கு மேல் எடுக்கப்படாது. அப்படிச் செய்தால் தான் அந்தக் கல்லூரிகளை நிறுவியதனுடைய நோக்கம் என்னவோ அந்த அடிப்படை நோக்கத்தைப் பெற முடியும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு தலைவரவர்களே, பூம்புகார்ப் போலவைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் தத்துவ பண்பாட்டுத் துறை, முது கலைப்படிப்பு, ஆகம படிப்பு ஆகியவைகள் அறிமுகப்படுத்தப்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அங்கே மாணவர்களின் எண்ணிக்கை, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, குறைவாகத் தான் இருக்கிறது. வேறு ஒரு பகுதியில் கல்லூரி இருக்கிறது. அதற்கும் இதற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை, ஒரே துறையின் கீழ் இருப்பினும் தனிப்பட்ட முறையில் ஆகமம் முதற்கொண்டு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தத்துவப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** அந்த அளவிலே எனக்குத் திருப்தியிருந்தாலும், ஒரு முதல்வரவர்கள் அதையும், இதையும் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வது என்பது கலப்பை உண்டாக்கிவிட்டது என்று நான் கருதுகிறேன். தனிக் கல்லூரி இருக்கிறதே என்று சொல்வதால் பயன் தராது. நான் யார் பேரிலும் குற்றம் சொல்லவில்லை. என் கஜக்கோலைப் போட்டு அளக்கும்போது, பயன் தராது என்று சொல்கிறேன். இதை விரைவிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வருஷா வருஷம் நகராட்சிகளுக்கு வருகிற வருமானத்தில் 100-க்கு 80 சதவீதம் சம்பளமாகப் போய்விடுகிறது. இப்படியிருந்தால் தேசம் என்னத்திற்காகும்? அதனாலே இதற்கு ஒரு உச்ச வரம்பு வைக்க வேண்டும். எந்த ஸ்தாபனமாக இருந்தாலும், பஞ்சாயத்தாக இருந்தாலும், கார்ப்பரேஷனாக இருந்தாலும் சரி, மொத்த வரி வசூலில் இத்தனை சதவீதத்திற்கு மேலே உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளமாக போகக் கூடாது என்று வைக்க வேண்டும். அதிகமாகப் போனால் இங்கே பொருந்தாது. 40, 50 சதவீதம் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். 80, 90 சதவீதம் சம்பளத்திற்குப் போனால்,

வரி கொடுப்பவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்திப்பதற்காக இருக்கிறார்களாவென்று தெரியவில்லை. உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுக்க வீட்டை வைத்திருப்பவர்கள் வரி கொடுப்பதா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இறுதியாக, காரைக்குடி, தேவகோட்டை போன்ற பகுதிகளை புதுக் கோட்டை மாவட்டத்தோடு இணைத்து, அட்மினிஸ்ட்ரேடிவ் கன்வீனியன்ஸ் ஏற்படும்படியாக ஒரு மாவட்டமாக ஆக்க வேண்டும். இதை ஏற்கெனவே முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அன்று நீங்களும் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். இன்று மறுபடியும் இதைச் சொல்கிறேன். எங்கள் பகுதியான தேவகோட்டை, காரைக்குடி பகுதிகளை, அந்த வட்டங்களை புதுக்கோட்டையோடு சேர்த்தால் நிர்வாகத் துறை செம்மையாகவும் திறமையாகவும், எளிதாகவும் செயல்பட வாய்ப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிச் சேர்க்கக் கூடாது என்று காரைக்குடி நகராட்சி மன்றம் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இருக்கலாம். இப்படிச் சொன்னால், பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த நகராட்சி மன்றம் தி.மு.க. சேர்மனும், தி.மு.க. உறுப்பினர்களும் அதிகமாகக் கொண்ட மன்றம் என்று திருப்பியா நான் சொல்வது? ஆகவே, என் கருத்தையும் மக்கள் கருத்தையும் நான் சொல்கிறேன். அவர் அப்படிச் சொன்னால், நான் வேறு மாதிரிச் சொல்கிறேன், காரைக்குடி வர்த்தகர்களும், வர்த்தக சங்கங்களும், ரோட்டரி கிளப், லையன்ஸ் கிளப், ஜேசீஸ் அவ்வளவு பேர்களும் காரைக்குடி, தேவகோட்டை பகுதிகளைச் சேர்க்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, யார் கொடுத்தார்கள் என்பது கேள்வியல்ல. எது நன்மை, எது நியாயம், என்று கணித்துச் செயல்பட வேண்டும். அதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மிகச் சிறப்பான நல்ல திட்டங்களைக் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகச் சீர்திருத்தத்தைப் பற்றி மிக சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சீர்திருத்தம் கல்வித் துறைக்கு வந்தாக வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வேன். அடுத்து, கல்வித் துறையில் ஆசிரியர்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்காக ஊதிய உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை





முதலமைச்சரவர்கள் சிறப்புடன் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே மிகவும் கவனத்துடன் உடனடியாகச் செய்ய வேண்டியது இதுதான். பி.டி. ஆசிரியர்கள் அதுவும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு சில பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாண்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தேர்வு ஊதியத்தை, 10 ஆண்டு பணிக்கால தேர்வு நிலை ஊதியத்தை, அது அறிவிக்கப்பட்டவுடனேயே முடக்கியிருக்கிறார்கள். அந்த முடக்கத்தை ரத்து செய்தாக வேண்டும்.

அடுத்து, 1—4—70 முதல் 1—4—73 வரையிலே சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களை தேர்வுக் குழுவிற்கு முன்னால் தேர்ந்தெடுக்கிற ஒரு முறையைக் கொண்டு வந்தார்கள். பலரைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்களுடைய ஊதிய உயர்வை இழந்து விட்டார்கள். மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வை இழந்து விட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய இன்கிரிமெண்டைக் கொடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5.30)

அது தவிர, 1967–68 ஆம் ஆண்டில், அந்த நேரத்திலிருந்த முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் அவசரப்பட்டு வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு ஓராண்டுக்கு வர வேண்டிய ஊதிய உயர்வு வராமல் போய்விட்டது. அதையும் அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். நான் இந்த மன்றத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். முதலமைச்சரவர்களும், கல்வி அமைச்சரவர்களும் நிச்சயமாக, உறுதியோடு இந்த மன்றத்திலே பதிலளித்திருக்கிறார்கள். நம்முடைய இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கும் 10 ஆண்டுக் காலத்திலே தேர்வு நிலை ஊதியம் தரப்படுமென்று உறுதி அளித்திருக்கிறார்கள். அப்படித் தரப்படும் தேர்வு நிலை ஊதியம் 250 ரூபாயில் துவங்குகிறது. அது மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. அதை 300 ரூபாயில் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன், அதில் ஊதிய உயர்வு 10 ரூபாயாக வருகிறது. அதை 15 ரூபாயாக வளர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்வேன்.

நம்முடைய நாட்டிலே மருத்துவப் படி தருகிற முறையிலே, அது பாதிக்கப்படுபவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறதென்று இந்த மன்றத்தில் ஒரு வாதம் சொல்லப்பட்டது. நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்வேன், இந்த நாட்டில் வேலை பார்க்கும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மெடிகல் ரீஇம்பர்ஸ்மெண்ட் வாங்காத நிலையில் இருக்கிறார்கள். எனவே எல்லா ஊழியர்களுக்கும் 20 ரூபாய் அல்லது 15 ரூபாய் தருகிறோம் என்று ஒரு திட்டம் நா

[திரு. க. அறிவழகன்] [1974 மார்ச் 13

வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், அப்படி ஒரு திட்டம் இருக்கிறதென்று இந்த மன்றத்தில் சொன்னார்கள். அதை மிக விரைந்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் சிற்பக் கல்லூரிபற்றிப் பேசினார்கள். சென்னை நகரில் அரசு கலை, கைத்தொழில் கல்லூரி ஒன்று இருக்கிறது. அதிலே படித்து வெளிவருகிற நாற்றுக்கணக்கான மாணவர்கள் வேலையற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தர அரசு தக்க ஆணைகளைப் பிறப்பித்து, அவர்கள் ஓவியம், சிற்பம் ஆகியவைகளை பள்ளிகளில் சொல்லித் தரும் முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

இந்த நாட்டிலே 2.39 லட்சம் ஆசிரியர்கள் இருக்கிறார்களென்று பெருமையோடு கூறுகிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இருக்கும் விதம், 34 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சென்னை நகரில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ஆசிரியருக்கு 60 அல்லது 70 மாணவர்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறார்கள். எனவே சென்னை நகருக்கென்று ஒரு தனித் திட்டத்தைக் கொண்டு வந்து அந்தத் திட்டத்தின் மூலமாக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இருக்கிற விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

மற்றபடி நம்முடைய குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளிகளில் சத்துணவு கொடுக்கப்படுகிறது. அந்தத் திட்டத்தை மேலும் விஸ்தரித்து, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். காரணம் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் நேரத்தில் காலை உணவும் சாப்பிடாமல், மதிய உணவும் சாப்பிடாமல் இருக்கும் பிள்ளைகள் ஏராளமாகப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்களுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசு மிக வேகமாக முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மன்றத்தில் இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. மு. மாசிலாமணி:** மாண்புமிகு தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்ததை, யொட்டி நானும் சிலபல கருத்துக்களைப் பேசுவதற்கான வாய்ப்பு அளித்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட



974 மார்ச் 13] [திரு. மு. மாசிலாமணி]

த்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், இன்னும் இன்னலை அனுப வித்துக்கொண்டிருக்கும் ஏழை எளிய மக்களுக்கும் நன்மை அளிக்கின்ற புரட்சிகரமான அறிக்கையாக 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை இருப்பது கண்டு பெருமிதம் கொள்கிறேன். அதிலே மிக முக்கியத்துவம் வாய்ந்தது தமிழ் நாடு அரசு நிறுவியுள்ள கோழிப் பண்ணை வளர்ச்சிக் கழக மாகும். அதை விரிவுபடுத்தியதில் கிட்டத்தட்ட 500 படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மேலும் மொத்தமுள்ள 24,000 அரிசன குடியிருப்புகளில், சுமார் 23,000 குடியிருப்பு களுக்கு மின் விளக்கு வசதி தரப்பட்டிருப்பது கண்டு நான் பெருமிதம் கொள் கிறேன். மேலும் இந்த அரிசனக் குடியிருப்புகளில் எரிகின்ற விளக்குகளுக்கு ஆகும் மின் கட்டணத்தை அரசே ஏற்றிருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சியடை கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்கள் இந்த நாட்டிலே இன்னலை அனுப வித்துக்கொண்டிருந்த நேரத்திலே, இந்த நெசவாளர்கள் குடும்பத்திற்கு நிவாரணமாக, தலைக்கு 100 ரூபாய் அளிக்கப்பட்டது. அவ்விதம் அரசு கொடுத்த ஒரு கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, அவர்கள் வாழ்வை செய்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த அரசு இப்போதுதான் நன்மைகளைச் செய்கிறது என்பதல்ல. 1950-51 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் மிகவும் அல்லிப்பட் டார்கள். அந்த நேரத்தில் பல பக்கங்களிலிருந்தும் கைத்தறி நெசவாளர்கள் சென்னைக்கு வந்திருந்த நேரத்தில், சென்னை திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தின்படி, நெசவாளர்களின் நிலைமையைச் சரி செய்வதற்காக, இன்றைய தினம் இருக்கிற தலைவர்களெல்லாம், தமிழகத்திலே அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் பெருமக்களெல்லாம், அன்றைய தினம் தோளிலே துணியைச் சுமந்து சென்று, விற்று, கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் தீர்த்து வைத்தார்கள். அந்த அடிப்படை யில் தான், கழக அரசு, தமிழக அரசு கைத்தறி நெசவாளர்களுடைய துயரை இப்போது தீர்த்து வைத்திருக்கிறது.

தமது நாட்டிலே, இன்றைய தினம் ஆங்கில வைத்திய முறைதான் நடை முறையிலே இருந்து வருகிறது. இந்த நேரத்திலே நம்முடைய தமிழக அரசு வந்த பிறகு, சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவத்தை தமிழ் மக்கள் எல்லாம் பின்பற்றுகிற அளவுக்கு, அதைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். இன்று சென்னையில் இருக்கிற அண்ணா மருத்துவ மனையிலும், தலைமைச் செயலகத்தில்

உள்ள மருத்துவ மனையிலும் கிட்டத்தட்ட, ஒரு நாளில் 240 ஆண்களும், 200 பெண்களும் 6 அல்லது 7 குழந்தைகளும் மருத்துவ சிகிச்சை பெற்று வருவது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்த அளவுக்கு சித்த வைத்திய முறை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அண்ணு மருத்துவ மனையில் கடந்த கால வரலாற்றை எடுத்துப் பார்த்தால், குணமாகாத நோய்கள்—கை, கால் விழுந்து விட்டாலும்கூட, நல்ல முறையில் குணம் பெறும் அளவுக்கு மருத்துவ முறை இருக்கிறது. அந்த அளவுக்கு தமிழ் மருத்துவ முறை சிறப்புப் பெற்றிருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ஆங்கில மருத்துவ முறையில் சிகிச்சை பெற்றால், அந்தச் செலவை மெடிகல் ரீஇம்பர்ஸ்மெண்டாகப் பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனல் தமிழ் மருத்துவ முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தச் செலவினத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்று அன்று இருந்த இயக்குநர் எழுதி வைத்துவிட்டுப் போனதை, இன்றைய தினம் சொல்கிறர்கள். அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூம்புகார் பட்டினம், வீர பாண்டியன் நினைவுச் சின்னம் இந்த அளவிலே செயல்படுவது கண்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். மேலும், மாநில நிதியிலிருந்து 1973-74-ல் ஒரு கோடி ரூபாயும், 1974-75-ல் ஒரு கோடி ரூபாயும் கொடுத்து வீட்டு வசதிக் கழகத்தை அரசு தொடங்கியுள்ளது. இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்வேன். தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு இன்றையதினம் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஏராளமான வீடுகளைத் தமிழக அரசு கட்டிவைத்திருக்கிறது. 1970-71 ஆம் ஆண்டிலிருந்து, இன்றையதினம் வரையில் பல குடிசைப் பகுதிகளிலுள்ள குடிசைகளை அகற்றி, நல்ல வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறது. அதைப் போலவே, அடித்தளத்தில் வாழ்கின்ற முடி திருத்துவோர் சமுதாயத்தினரும், சலவையாளர் சமுதாயத்தினரும், இன்னும் மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தினரும்—உப்புரான் என்ற இனத்தினர் மிகவும் பின் தங்கியவர்கள்—வீடு இல்லாமல் பெரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறர்கள். ஆகவே முடி திருத்துவோருக்கும், சலவையாளருக்கும் குறைந்தபட்சம் 3 சதவிகிதம் அளவுக்கு, குடிசை மாற்று வாரியம் அல்லது வீட்டு வசதி வாரியம் கட்டும் வீடுகளை ஒதுக்கி, அவர்கள் குடிசைகளையெல்லாம் அகற்றி நல்ல வீடுகளில் வாழ்வதற்கான சூழ்நிலைகளை கழக அரசு வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் கிட்டத்தட்ட 11,000 சலூன்கள் இருக்கின்றன. இன்றையதினம் மாநகராட்சியினுடைய நிர்வாகத்தினர் சென்னையிலுள்ள கடைகளுக்கு டிரெயினேஜ் கட்ட வேண்டுமென்று தொல்லை கொடுத்து வருகிறர்கள் என்ற





விவரத்தை சங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறர்கள். கிட்டத்தட்ட 30 அல்லது 40 சதுர அடிக்குள்தான் கடைகள் இருக்கின்றன. இன்றைக்குக் கணக்கு எடுத்துப் பார்த்தால் சென்னை கார்ப்பரேஷனில், ஒவ்வொரு டிவிஷனிலும் 60 அல்லது 65 கடைகள் இருக்கின்றன. 30 அல்லது 35 ரூபாய் வாடகை கொடுக்கின்ற அளவில்தான் கடைகளை வைத்திருக்கிறர்கள். சந்துகளில், சின்னச் சின்ன இடங்களிலும் சலூன்களை வைத்திருக்கிறர்கள். அவர்கள் டிரெயினேஜ் கட்டக்கூடிய சூழ்நிலையில் இல்லாதிருப்பதால், மாநகராட்சி இதைக் கட்ட வேண்டாமென்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறர்கள். ஆதலால் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வேன். மவுண்ட் ரோடு, இன்னும் மற்ற பகுதிகளில் இருக்கின்ற பெரிய கடைகளாக இருந்தால், இத்தகைய டிரெயினேஜ் கட்ட வசதியிருக்கிறது. சிறிய கடைகளுக்கு டிரெயினேஜ் கட்ட முடியாத சூழ்நிலை இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அது மட்டுமல்ல, எங்களது புரசைத் தொகுதி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்ற தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே கிட்டத்தட்ட 32 ஆண்டுக் காலமாக சிவசண்முகபுரம் என்ற பகுதியிருக்கிறது. அங்கே 400 குடும்பங்கள் வாழ்ந்துகொண்டு வருகின்றன. அவர்களுக்கு நிலப் பட்டா வழங்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கின்றர்கள். கழகம் மாநகராட்சியைக் கைப்பற்றிய பிறகு, அந்தப் பகுதி மாநகராட்சி உறுப்பினரால் முயற்சி எடுக்கப்பட்டு, அவரே மேயராக வந்து அன்றைய தினம் இருந்த ஆட்சியாளர்களிடம் முறையிட்டபோது, அவர்கள் தலைக்கு 50 ரூபாய் கொடுத்தால் பட்டா வழங்கப்படும் என்று சொன்னர்கள். அப்படிச் சொல்லி பல ஆண்டுக் காலம் ஓடிவிட்டது. பின்னல் கழகம் மீண்டும் மாநகராட்சித் தேர்தலில் நின்று, மாநகராட்சி உறுப்பினர் மேயராக வந்தார். மேயர் அவர்கள் ஓபன் கவுன்சிலில் வைத்துக் கேட்டு விகிதாசாரம் 400 ரூபாயும், வீடு இருப்பதற்கு 40 ரூபாயும், ஆக 440 ரூபாய் இருந்தால் நாங்கள் இலவசப் பட்டா வழங்க ஏற்பாடு செய்வோம் என்றர்கள். பிறகு மேயராக வந்த திரு. மோசஸ் அவர்கள் ஓபன்

(பிற்பகல் 5.40)

கவுன்சிலில் வைத்து 400 ரூபாயைத் தள்ளுபடி செய்து, 40 ரூபாய் கொடுத்தால் போதும் என்றர்கள். இன்றைக்கு நிலைமை எப்படியிருக்கிறது? அந்த இடம் பெரும்பாலும் கார்ப்பொரேஷனுக்குச் சொந்தமான இடம். கார்ப்பொரேஷன் அதிகாரி, ஆணையர் கலெக்டருக்கு எழுதிக் கேட்கிறர். இந்த இடத்திற்கு 40 ரூபாய் கொடுத்தால் போதும் என்று விதிவிலக்கு அளியுங்கள் என்று கேட்கிறர். கலெக்டர், கேட்பதற்கு நீ யார் என்று கார்ப்பொரேஷன் கமிஷனருக்குச் சொல்லுகிறர். இந்த நிலையில் அங்கே இருக்கின்ற பெரும்பாலான

மக்கள், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்ற பிறகு புகார் கொடுத்தார்கள். பேராசிரியர் புகாரை உடனடியாக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இன்றைக்கு நடைமுறை யிலிருந்து வருகிறது. நானும் அங்கு குடியிருப்பதால், அந்த மக்களின் சார்பாக மீண்டும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த விஷயத்தைக் கவனப்படுத்துவதோடு, மீண்டும் முதலமைச்சரை அணுகி, அவர் களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. இந்த நாட்டில் அடித்தளத்தில் உள்ள சமுதாய மக்களுக்கு, கல்வி வசதி, வேலை வாய்ப்பு வசதி ஆகியவைபற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இப்போது எங்கே பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. தமிழ் நாட்டு ஜனத்தொகையில் 3 சதவிகிதத்தினராக இருக்கின்ற முடிதிருத்து வோர், சலவையாளர் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் வேலைக்கு மனுப் போட்டுச் சென்றால், அவர்கள் பெற்றுள்ள மார்க்கு அடிப்படையைப் பார்க்கின் றார்கள். வசதியற்ற அடித்தளத்தில் உள்ள சமுதாயத்தில் இருப்பவர்கள் ஆதலால், முடிதிருத்துவோர், சலவையாளர் சமுதாயப் பிள்ளைகள் மிக மிகக் குறைந்த மார்க்குகளே வாங்குகின்ற சூழ்நிலை இருக்கின்றது. பொருளாதார ஏற்றம் இல்லாத காரணத்தால், கல்வியில் மேம்பாடு அடைய வழியில்லாமல், வேலை வாய்ப்பை இழக்கின்றார்கள். அதைச் சற்று கவனித்து, பெருந்தன்மை வைத்து, முடிதிருத்துவோர், சலவையாளர்கள் பிள்ளைகள் வேலைக்கு வருகின்ற போது, மார்க்கு அடிப்படையில் குறைந்திருந்தாலும், சலுகை அளித்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

இந்த அரசு பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்துகொண்டு வருகிறது. நாளை மறுநாளோ, அடுத்த மாதமோ, திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கின்ற மகத்தான புரட்சியான காரியத்தின் பயனாக, மருத்துவ சமுதாயத்தினரும், சலவையாளர் சமூகத்தினரும், இன்னும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இந்த மேலவையில் இடம் பெறுகின் றார்கள். இது வரலாறு காணா ஒரு பெரிய காரியம். இன்றைய தினம் அடித்தளத்தில் வாழ்கின்ற குப்பையைக் கூட்டி சுத்தம் செய்கிற நகர சுத்தி தொழிலாளர் சமுதாயத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் மேலவையில் இடம் தந்திருக்கிறது. இந்தப் புதிய வரலாற்றை, புதிய அத்தியாயத்தை தமிழ் நாட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு படைத்திருப்பதை நகர சுத்தித் தொழிலாளர்கள் என்னிடத்தில் சொல்லி தங்கள் மகிழ்ச்சியினைத் தெரி வித்தார்கள். நான் இருக்கின்ற இடத்தில் நகரசுத்தித் தொழிலாளர்கள் 2,000 பேர் வாழ்கிறார்கள். பெரம்பூர் பகுதியிலும், புளியந்தோப்பு பகுதியிலும்,





வியாசர்பாடி பகுதியிலும், தட்டான்குளம் பகுதியிலும் 9,000 பேர் நகரசுத்தித் தொழிலாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு காலத்திலே ஒரு கட்சிக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தார்கள். கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். இப்போது அந்த மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். அவர்கள் சார்பில் நானும் அரசிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே இந்த நல்ல காரியங்களை எல்லாம் செய்து வருகின்ற இந்த அரசை நான் பாராட்டுவதோடு, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, தமிழ் நாடு முடிதிருத்துவோர் சங்க சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றி நவின்று, வணக்கம் செலுத்தி முடித்துக்கொள்கின்றேன்.

*** புலவர் ஓ. அறிவுடை நம்பி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையினை நம்முடைய மாண்புமிகு தமிழ கத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல நான் விழைகின்றேன். இலங்கையிலே ஒரு கவிஞன். அவர் பெயர் மகாகவி என்பது. அவர் பாடியிருக்கின்ற பாடல் ஒன்றின் சில வரிகளை நான் நினைவுபடுத்தினால் நல்லது என்று கருது கின்றேன்.

“இன்னவைதான் கவி எழுத ஏற்றபொருள் என்று பிறர் சொன்ன வற்றை நீ திருப்பிச் சொல்லாதீர் ! சோலை, கடல், மின்னல், முகில், தென்ற லினை மறவுங்கள் : மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழை உயர்வு என்பன வற்றைப் பாடுங்கள்”

என்று அவர் பாடியிருக்கிறார். டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே வழங்கி யிருக்கின்ற நிதி நிலை அறிக்கையினை நோக்குகின்றேன். இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு என்று அவர் பாடியிருக்கின்ற மகா காவியமாக இந்த நிதி நிலை அறிக்கை விளங்குகின்றது.

நடுவண் அரசு அண்மையில் தன்னுடைய நிதி நிலை அறிக்கையினை வைத் திருக்கிறது. அதில் பெரிய வணிக கம்பெனிகளுக்கும், வருமான வரி கட்டக் கூடிய தனியார் பலருக்கும் சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தேர்தல் நிதிக்காக திரட்டப்பட்ட தொகைக்கு ஆலை அதிபர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் நடுவண் அரசு காட்டியிருக்கின்ற நன்றிக் கடனாக அது விளங்குகிறது. ஆனால் 5,000 ரூபாயிலிருந்து இப்போது....

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, தேர்தல் நிதிக்காக கம்பெனிகளிடமிருந்து பணம் வாங்கக்கூடாது என்று சட்டமே செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தேர்தல் நிதிக்காக பணம் வாங்கியதற்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காக வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** தலைவரவர்களே, நான் அப்படித் தான் நினைக்கின்றேன். என்னுடைய நினைவினை இங்கே எடுத்துச் சொல்லுகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நினைப்பதெல்லாம் உண்மையாகாது.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** நினைப்பதெல்லாம் உண்மையாகாவிட்டாலும், என்னுடைய எண்ணத்தை எடுத்துச் சொல்வது கடமையாக இருப்பதால் எடுத்துச் சொல்ல வந்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கற்பனை உலகத்திலே சஞ்சரிக்கக் கூடாது.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** தலைவரவர்களே, நான் உணர்வு உலகத்தில் சஞ்சரித்து இதனை எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியத்திலே இருப்பதால், அதனை இங்கே எடுத்துச் சொன்னேன்.

(பிற்பகல் 6.10)

அடுத்து, 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரைக்கும் வருமானம் உடையவர்களுக்கு வருமான வரியை 10 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காட்டிற்கு உயர்த்தியிருக்கிற அநீதியை நடுவண் அரசினுடைய நிதி நிலை அறிக்கையிலே நாம் காண்கிறோம். அது மட்டுமல்ல. 212 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன. மண்ணெண்ணெய்க்கு; வெண்சுருட்டாம் சிகரெட்டுக்கு, துணிக்கு, பெட்ரோலுக்கு, டீசெலுக்கு, புகையூர்தி வண்டியின் சீட்டுக்கு, அஞ்சல் கட்டணங்களுக்கு, தொலைபேசி கட்டணங்களுக்கு, அத்தனைக்கும் வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் திரு. சவாண் அவர்கள் யாரையும் விடவில்லை.

**திரு. கே. ராஜாராம்:** இது டெல்லியிலே பேசவேண்டிய பேச்சு.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** ஏடு ஒன்று நிதியமைச்சர் திரு. சவாண் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை நான் நினைவுபடுத்தலாம் என்று கருதுகிறேன். திரு. சவாண் அவர்கள் யாரையும் விடவில்லை என்பதை அந்த ஏடு எழுதிக் காட்டுகிறபோது, அவ்வகையில் அவர் ஒரு சமதர்ம வாதியாக—சோஷலிஸ்ட்டாக—இருக்கிறார். ஏழைகளிலிருந்து பணக்காரர்கள் வரையில் வரிவிதித்திருக்கிறார் என்று எடுத்துக் காட்டியிருக்கிறது. நமது எதிர்க் கட்சித்

தலைவர் அவர்கள், இதனை நான் டெல்லிப் பாராளுமன்றத்திலே பேச வேண்டியது என்று சொல்கிறார்கள். நான் இதனை இங்கே எடுத்துச் சொல்வதற்குக் காரணம், தயைகூர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் இதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, வேறு அல்ல.

திரு. கே. ராஜாராம்: விரலுக்குத் தகுந்த வீக்கம் விரலுக்கு இருக்கிறது. உரலுக்குத் தகுந்த வீக்கம் உரலுக்கு இருக்கிறது. நமது அளவுக்கு எது இருக்கிறதோ நாம் செய்கிறோம், மத்திய சர்க்காரிலே பெருந் தொகைக்குத் தகுந்தமாதிரி அவர்கள் செய்கிறார்கள்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: விரல் வீங்கும், உரல் வீங்காது. வீக்கம் என்பது வளர்ந்துகொண்டே போவது. உரல் ஒரு அளவிலேதான் இருக்கும். அது வீங்குவது கிடையாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எண்ணெய்ச் செக்குச் சுற்றுகிறது. அதற்குக் கீழே இருப்பதுதான் உரல். அந்த மாதிரி உரலில் எண்ணெய் ஊறி ஊறி வீங்கும். அதைத்தான் சொல்கிறார்கள்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: தலைவர் அவர்களே, நடுவண் அரசினுடைய நிதிநிலை அறிக்கையை ஒப்பிட்டுப்பார்க்கையில், இங்கே 22.42 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. அந்தத் துண்டு விழுகின்ற தொகையை ஈடுகட்டுவதற்கு நாம் இங்கே வரி விதித்திருக்கிறோம் என்றாலும், ஏழைகளைப் பாதிக்கக்கூடிய விதத்திலே நாம் வரிவிதிக்கவில்லை. 1969-ஆம் ஆண்டிலிருந்து ஒரு கோரிக்கை இங்கே வைக்கப்பட்டு வந்திருக்கிறது, எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி வேண்டும் என்று. நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, 59 பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரியை விதித்திருக்கிறார்கள். ஆடம்பரப் பொருள்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அத்தியாவசியப் பொருள்களுக்கு 50 விழுக்காடு குறைத்திருக்கிறார்கள். இதன் மூலம் பற்றுக்குறையை நிவர்த்திக்கிற வழியை இங்கே செய்துகாட்டியிருக்கிறார்கள். அடுப்பெரிக்கின்ற விறகுக்கு வரியில்லை. மாட்டுத் தீவனத்திற்கு வரியில்லை. கண்ணாடி வளையல்களுக்கு வரியில்லை. இப்படி வரியில்லா பட்டியலும் பெருகிக்கொண்டே வருகின்றது. விறகுக்கு வரியில்லை என்று சொல்கிற அதே நேரத்தில் மண்ணெண்ணெய்க்கு ஏற்படக்கூடிய பற்றுக் குறையை அது ஈடுகட்டும் என்று நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன். நெசவாளர்களைப் பொறுத்தவரையிலேயும், அவர்களுடைய துயர் துடைப்பதற்காக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, அவர்

களுக்கு வழங்கப்பட்டிருக்கிற — ஒரு கோடி ரூபாய் கடன் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று நாம் பேசினால், "மார் தட்டிப் பேசுகிறீர்களே, மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி" என்று திரு. பலராமன் போன்றவர்கள் கேட்கிறார்கள். ஒன்றை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய மொத்த நூல் இந்தியாவினுடைய மொத்த உற்பத்தியில் ஐந்தில் ஒருபகுதி. ஆனால், நம்முடைய மாநில நெசவாளர்களுக்கு அந்த நூலை வழங்குகின்ற உரிமை, அதற்கான அதிகாரம், நமக்கு இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்பதை நம்முடைய திரு. பலராமன் போன்ற அத்தனை பேரும் ஒப்புக்கொள்வார்கள். எனவேதான், நாம் மாநில சுயாட்சி என்பதை வலியுறுத்திச் சொல்கிறோம். இன்னும் ஒன்றையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சந்தானம் அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையினை நாம் முழு மனதோடு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதில் தரப்பட்டிருக்கின்ற நான்கு கருத்துக்கள், மிக நல்ல கருத்துக்கள். தேவையான நூலை நியாய விலையில் ஆலைகளிடமிருந்து வாங்கி விநியோகிப்பது; கூட்டுறவுக்கு அப்பாற்பட்ட நெசவாளர்களை, நூல் வழங்குவதற்குக் கூட்டுறவுக்கே கொண்டு வருவது; கைத்தறிக்கு என்று வேட்டி, துண்டு, சேலை, துப்பட்டி போன்றவைகளைச் சட்டரீதியாக ஒதுக்குவது; அனுமதி இல்லாத விசைத்தறிகளை வளரவிடாது தடுப்பது போன்ற காரியங்களை சந்தானம் குழு எடுத்துக் காட்டியிருப்பதை நாம் அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல. கல்வியைப் பொறுத்தவரையில், 110 கோடியே 15 லட்ச ரூபாய் செலவழிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வியினுடைய குறிக்கோள் என்ன? "தனி மனிதனுடைய தேவைகளையும், நிலைமைகளையும் செம்மையாக்கக்கூடிய விதத்தில் வளர்ந்து அவனைச் சமூகத்திலே சிறந்த உறுப்பினனாகவும், பணியாளனாகவும் உயர்த்தவேண்டியது கல்வியின் கடன்". அந்தக் கடனைப் பூர்த்தி செய்வதற்கு, முழுமை செய்வதற்கு, நிறைவு செய்வதற்கு, 110 கோடியே 15 லட்ச ரூபாயை அரசு ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இந்த நேரத்தில் நான் நம்முடைய அரசுக்கு இதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கும் முழுநிலை தகுதிபெற்ற தமிழ் ஆசிரியர் பெருமக்களுக்கும் பத்து ஆண்டுக் காலத்திலே தேர்வுநிலை வழங்கப்பட்டிருக்கிறது, வரவேற்கக்கூடிய ஒன்று. அது பாராட்டக்கூடியது. ஆனால், இடைநிலையிலே இருக்கக் கூடிய இடைநிலை ஆசிரியர்கள் இன்னலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பத்தாண்டுக் காலத்திலே தேர்வுநிலை ஊதியம் இல்லை. சிறப்பாசிரியர் பெருமக்களுக்கு அந்தச் சிறப்பு செய்யப்படவில்லை. நான் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய திருவடியைத் தொட்டு வணங்கி வேண்டிக்





கேட்டுக்கொள்கிறேன். இடைநிலை ஆசிரியர்களுக்கும், அந்த நிலையிலே ஊதியம் தரவேண்டும், அவர்களுக்கும் பத்தாண்டுக் காலத்திற்குள் தேர்வுநிலை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் தமிழ் படித்தவன். தமிழாசிரியன். புலவர் கூட்டங்களில் இரண்டாம் நிலை தமிழாசிரியர் பதவி இனி இராது என்று சொல்லி நம்முடைய அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் இல்லை என்ற நிலை பிறக்குமேயானால், ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரைக்கும், இனி உயர் தொடக்கப் பள்ளிகளில் மொழிப்பயிற்சி தமிழாசிரியர் பெருமக்களைக்கொண்டு இராதோ என்று எண்ணுகிற ஐயம் தமிழாசிரியர் பெருமக்கள் மத்தியிலே வந்திருக்கிறது. அதை நீக்கிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் ஒன்றை நான் எடுத்துச் சொல்வேன். தமிழாசிரியர் பெருமக்களுக்கு நேரடியாக அலுவலகங்களிலே வேலையே கிடைக்க வேண்டும். காரணம், 9,000 தமிழாசிரியர்கள் இன்றைய தினம் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களில் 5,000 பேர்தான் தமிழ் பயிற்சி பெற்றவர்களாக, பண்டிட் பட்டம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே, 4,000 தமிழாசிரியர்களுக்குப் பயிற்சி இல்லாத நிலை இருப்பது வருந்தத்தக்கதொன்று. இந்த 9,000 தமிழாசிரியர் பெருமக்கள், தமிழாசிரியர்களாகத்தான் வேலையிலே செல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு இருபதாண்டுக் காலமாவது ஆகும். இருபதாண்டுக் காலத்தில் 9,000 பேருக்கும் வேலை கொடுப்பதென்று சொன்னால், என்ன நிலையாகும்? அதை எண்ணிப்பார்க்க வேண்டும். குறிப்பாக ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைய தமிழகத்தில் 10,200 ஆசிரியர்களுக்கு நடுவண் அரசின் நிதி உதவியுடன் தமிழக அரசு வேலை தந்தது. அதில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 15 புலவர்களுக்குத்தான் வேலை. தென்னாற்காடு மாவட்டத்தில் ஆசிரியர் பெருமக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். அங்கே 12 தமிழாசிரியர் பெருமக்களுக்குத்தான் வேலை. வட ஆர்க்காடு மாவட்டம், என்னை உயர்த்திவிட்ட மாவட்டம். அந்த மாவட்டத்தில் 15 அல்லது 16 தமிழாசிரியர் பெருமக்களுக்குத் தான் வேலை. இப்படி மாநிலம் முழுதும் கணக்கெடுத்தால், ஒரு 300 தமிழாசிரியர் பெருமக்களுக்குத்தான் இந்த 10,200 ஆசிரியர்கள் என்கிற திட்டத்தில் வேலை கிடைத்திருக்கிறது. இது களையப்பட வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. நமது பெருமதிப்புக்குரிய சுதந்தரக் கட்சியின் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் மாணவர்களைப்பற்றி தன்னுடைய வருத்தம் தோய்ந்த கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மாணவர்களின்

மனநிலை, உள்ளம் வளர வேண்டும், அந்த அளவுக்கு அவர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும் என்ற ரீதியிலே தம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பிலிப்பைன்ஸ் பல்கலைக் கழகத்தில் மாணவர் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்திருக்கிறார்களாம். 12 மாணவர்களைக் கொண்டது அந்தக் குழு. அந்தக் குழுவினுடைய பணி என்ன என்பதைப்பற்றிக் குறிப்பிடும் போது மாணவர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றித் திட்டமிடுவது ஒரு பணி. மற்றொரு பணி, பல்கலைக் கழகத்தினுடைய நடவடிக்கைகளைப்பற்றி, மாணவர்களுடைய கருத்துக்களை நிர்வாகத்திற்கு எடுத்துச் சொல்வது. இதற்காக 12 பேர் கொண்ட ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இந்தக் குழுவிற்கு எப்படிப்பட்டவர்கள் மாணவர் தலைவராக வரலாம் என்பதைப்பற்றி, ஒரு நான்கு விதிகள் வகுத்திருக்கிறார்கள். மாணவர்கள் படிப்பில் முன்னோடியாக இருக்க வேண்டும். சிறந்த கல்வியாளனாக, மிகக் கற்றுத் தேர்ந்த வல்லவனாக அந்த மாணவன் இருக்க வேண்டும். இது ஒன்று. பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுகள் படித்திருக்க வேண்டும்—இது இரண்டு. மூன்றாவது, அந்த மாணவன் மீது ஒழுங்கு நடவடிக்கையே எடுக்கப்பட்டிருக்கக்கூடாது, உத்தமமான மாணவனாக இருக்க வேண்டும். நான்காவதாக, பல்கலைக் கழகம் நடத்திய தேர்வுகளில் எல்லாம், அவர்கள் வெற்றிபெற்றிருக்க வேண்டும். இந்த நான்கு நிலையும் எந்த மாணவனுக்கு இருக்கிறதோ, அவன்தான் மாணவர் தலைவனாக வரலாம். நம்முடைய கல்லூரிகளிலே மாணவர்கள் தேர்தல் என்று நடைபெறுகின்றதை நாம் பார்க்கிறோம். அப்போது மிகப் பெரிய கலவரமே நடந்து முடிகின்றது. அலங்கரிக்கப்பட்ட யானையைக் கொண்டுவந்து நிறுத்தி அதன்மீது உட்கார்ந்து கொண்டு, ஓட்டுக் கேட்கின்றார்கள், வாக்குக் கேட்கின்றார்கள். பெரிய பெரிய பஸ்களை அங்கே கொண்டுபோய் நிறுத்தி, ஒட்டகத்தையும் குதிரையையும் கொண்டுவந்து நிறுத்தி, அவற்றின்மீது உட்கார்ந்து

(பிற்பகல் 6.00)

கொண்டு ஓட்டுக் கேட்கின்றார்கள். பெரும் கலவரமே நடந்துவிடுகிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வேண்டாத நிலைமைகளெல்லாம் அகற்றப்பட்டு, பிலிப்பைன்ஸ் நாட்டிலே உள்ளதைப் போல விதி முறைகளை இங்கே நடைபெறும் மாணவர்கள் தேர்தல்களுக்கு ஏன் நம்முடைய தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகம் புகுத்தக் கூடாது என்று, தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லப்போனால், இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையினை நம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அரசு ஊழியர்களுக்கு ஓய்வுகால ஊதியம் கொடுக்கப்படுகிறது, தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு





ஓய்வு ஊதியம் இருக்கின்றது, ஆனால் நாட்டு மக்களில் 93 விழுக்காடுடைய சாதாரண பாமர மக்களுக்கு ஓய்வு ஊதியம் உண்டா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பாமர மக்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் பயன் அளிக்கக்கூடிய ஒரு ஓய்வு ஊதியத் திட்டத்தை உருவாக்கியிருக்கும் பெருமை, நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். ஒரு கவிஞன் பாடினான், ஏழைகள் எப்படித் துன்பக் கண்ணீர் வடிக்கின்றார்கள் என்று; பொங்கல் திருநாள் வருகின்றது, அந்த நன்னாளிலே நிதிபடைத்த சீமான்களெல்லாம் நெய்ப்பொங்கல் உண்டு களிக்கின்றார்கள், ஆனால் இந்த ஏழையின் மனம் எந்த மாதிரியெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகின்றது என்பதை மிக அழகாக அக் கவிஞன் பாடியிருக்கின்றான்.

"பொங்கல் வருகிறது, நிதி படைத்த சீமான் நெய்ப்பொங்கல் உண்டு மகிழ்கின்றான், ஆனால் ஏழைகளின் கண் இரண்டும் பொங்கும் பொங்கல் எங்கள் கை பட்டு வாய்ப்பட்டதுண்டோ பொங்கல்! இல்லை—எங்கள் கண் பொங்குவதே பொங்கல்"—என்கிறான் கவிஞன்.

"தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்கு இல்லை
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்"

என்று ஒரு ஏழைக் குடிமகனின் மனத்தில் ஓடும் எண்ணத்தினை நன்கு படம் பிடித்துக் காண்பிக்கக்கூடிய முறையில் பாடலைப் பாடியிருக்கின்றான். ஆனால் இன்று டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த ஓய்வு ஊதியத் திட்டம் ஏழையருக்கும் தெய்வமும் திருநாளும் உண்டு என ஆக்குகிறது. இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பினை உண்டாக்கிய பெருமை கலைஞர் அவர்களையே சாரும். முப்பது வயதுடையோர் திங்கள் தோறும் பத்து ரூபாய் கட்டுவாரேல், 55 வயதினை அடையுங்கால், அவர் இல்லம் தேடி ரூபாய் நூறு ஓய்வு ஊதியமாக மாதாமாதம் வரும். இடைக் காலத்தில் அவர் இறந்து விடுவாரானால் அவர் வாரிசை நாடி வட்டியும் முதலும் சேர்ந்து வரும்! இதற்காக அவரை வாழ்த்துகிறோம், வணங்குகிறோம்.

அடுத்து, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ரூபாய் எட்டு கோடி என ஒதுக்கி மத்திய வகுப்பினருக்கு 72,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டமொன்றினைத் தீட்டி அதற்கென நிதியும் ஒதுக்கியிருப்பது பாராட்டுதற்குரிய ஒன்று என எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஆக எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுபத்திரண்டு மணித்துளிகளிலே படித்த இந்த நாட்டின் நிதி நிலை அறிக்கையில் 72 திட்டங்களுக்குக் குறையாமல் வழங்கியிருக்கின்றார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது பூரிப்பு அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

அதே நேரத்திலே எதிரே அமர்ந்துள்ள மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்களுக்கு ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒருமைப்பாடு உணர்வு வளர்க்கப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும் என்று நாட்டின் எல்லா மூலைகளிலும் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே இந்த ஒருமைப்பாட்டு உணர்விற்கு வித்திடப்படுகிறதா என்று பார்த்தால், மாறாக வேதனை தரக்கூடிய செய்திகள்தான் வருகின்றன. குறிப்பாக மராட்டிய மாநிலத்திலே, 'மராட்டியருக்கே வேலை வாய்ப்பு' என்று அங்கே உள்ள சட்டப் பேரவையிலேயே தீர்மானம் கொண்டு வருகின்றார்கள் என்று சொன்னால், அது ஒருமைப்பாட்டுணர்விற்கு வித்திடுவதாகுமா அல்லது குலைப்பதாகுமா என்று தயவுசெய்து எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்கள் தனியார் தீர்மானம் ஒன்று இந்த அவையில் கொண்டுவந்து, அவற்றையெல்லாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒருமைப்பாடு உணர்விற்கு உதவியாக அவர்கள் தங்களை இதில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். "தமிழுக்கு தொண்டு செய்வேன் சாவதில்லை" என்று புரட்சிக் கவிஞன் பாடினான் அன்று. இன்று அதை உணர்த்தும் வகையிலே தான் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. உலகுக்குப் பொது மறையினை வழங்கிய வள்ளுவப் பெருந்தகைக்கு ஆலயம் அமைக்கிறோம் நாம். ஆனால் இது ஏன் என்று சிலர் கேட்கின்றார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன், பாரதி பாடினான், "மனம் தேன், அறிவு தேன், உணர்வு அமுதம், உணர்வே அமுதம். உணர்வு தெய்வம்" என்று. உணர்வு உள்ளவர்களாக இருந்தால், ஏன் வள்ளுவனுக்கு ஆலயம் என்று கேட்க மாட்டார்கள்; அவர்கள் வாயில் இது வராது. ஆனால் உணர்வு அற்றவர்களாகச் சிலர் இருக்கின்றார்கள், அவர்கள் மறந்துவிடுகின்றார்கள், வள்ளுவன் தமிழனாகத்தான் பிறந்தான், தமிழிலேதான் குறளைப் படைத்தான். ஆனாலும் வள்ளுவன் கண்ட குறட்பாக்களில் தமிழகத்தைப் பற்றிய குறிப்பு இல்லை. தமிழ் என்ற சொல்லில்லை, தமிழர் என்ற குறிப்பும் இல்லை. உலகம் தழுவிய உள்ளம் உடையவராக அவர் திகழ்ந்திருக்கிறார். அது மட்டுமில்லை, அவர் அரசியலைப் பற்றி பல அதிகாரங்கள் பாடியுள்ளார். அரசு இலக்கணம் வகுத்துத் தந்திருக்கின்றார்கள் அந்தப் பொதுமறையிலே. ஆனாலும் அதில் சேரன் சோழன் பாண்டியன் என்ற மூவேந்தர் பற்றிய குறிப்போ அல்லது வில், புலி, கயல் கொடிகளைப் பற்றிய குறிப்போ அல்லது பனை, ஆத்தி, வேம்பு போன்ற மாலைகளைப் பற்றியோ எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. ஆனாலும் அரசியலைப் பற்றிப் பல அதிகாரங்கள் எழுதியிருக்கின்றார் என்பதை மீண்டும் நினைவு படுத்துகிறேன். நேரிடையாக மட்டுமின்றி உவமை வாயிலாகவும் சொல்லியிருக்





கின்றாரா என்று பார்த்தால், ஏதுமில்லை. இப்படி மிக முன்னேற்றம் கண்டுள்ள இருபதாம் நூற்றாண்டிலும் காண முடியாத அரசியல் பொதுமையை வள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே உணர்ந்திருந்தார். ஆனால் அவருக்கு ஆலயம் ஏன் என்று சர்வதேசியம் பேசுகின்றவர்கள் கேட்கின்றார்கள் என்றால், அது வேதனைக்குரியதன்றோ? இன்னும் ஒன்றை இங்கே எடுத்துக்காட்ட விழைகின்றேன், வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கோட்டை . . .

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, வள்ளுவனுக்கு ஆலயம் வேண்டாம் என்று யார் குறிப்பிட்டார்கள் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறினால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** அவையில் யாரும் அப்படிக் கூறவில்லை, வெளியே யாராவது பேசியிருக்கக் கூடும்.

**புலவர் ஓ. அறிவுடை நம்பி:** தலைவரவர்களே, நான் சொன்னேன். வீரபாண்டிய கட்டபொம்மனை நினைவு கூறத்தக்க வகையில் கோட்டையொன்று பூம்புகார் போக்குவரத்துக் கழகம், பூம்புகார் நகர மேம்பாடு இவற்றையெல்லாம் நாம் நோக்கும்போது பண்டைய தமிழகம் மீண்டும் மலர்கின்றது என்ற மகிழ்ச்சிக் கொப்பளிப்போடு நான் பேசிக்கொண்டிருக்கின்றேன். புகார் நகர் பற்றி பழங்காலத்து அறிஞர்களெல்லாம் எழுதிவைத்திருக்கின்றார்கள். புகார் நகர வணிகர்கள் மேற்கே மத்திய தரைக் கடற்கரையிலுள்ள நாடுகளுடனும், கிழக்கே சீனம் வரையிலும் வாணிகம் செய்தனர் என்று அந்தக் குறிப்புகள் இன்றும் எடுத்துரைக்கின்றன. அது மட்டுமல்ல. பாலி மொழியில் எழுதப்பட்ட மிலிந்த அரசரின் கேள்விகள் of King Milinda எனும் நூலில் இந்த நகர் கோலப்பட்டனம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு வரலாற்றுச் சிறப்புடன் கூடிய திருநகரம் காலப்போக்கிலே பொலிவிழந்து நின்றாலும், இன்றைக்கு மீண்டும் அதை மேம்பாடடையச் செய்யும் பணியில் தமிழக அரசு ஈடுபட்டிருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது, தமிழ் உணர்ச்சி மிக்க அரசு இது என்ற பாராட்டத்தான் வேண்டும். இந்த அரசின் கீழ் தமிழகம் கடந்த ஏழு ஆண்டுகளில் பெற்றிருக்கும் நன்மைகள் விரல் விட்டு எண்ண முடியாத அளவிற்கு எண்ணற்ற நன்மைகளைக் குவித்திருக்கும் பெருமை இந்தத் தமிழக அரசினைச் சாரும். இந்தத் தமிழுணர்ச்சி படைத்த அரசினை மாற்றி வேறொரு அரசு வருமோ என்று எண்ணிப் பார்க்கும்போது, தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக இந்தத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் சொல்வேன். ரம்ஜான் புனித காலம். அந்தத் திருநாளிலே அல்லா தமது பக்தர்களுக்கு இரக்கம் காட்டி வரங்கள் அளிக்கின்றார். சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படு

கின்றன. புனிதமான அந்த நல்ல நாளில் ஒரு மாலை நேரத்திலே, ஒரு தொம்பங்கூத்தாடி தன் பரிவாரங்களான குரங்கு, கழுதை, நாய் இவற்றோடு வெளியூரினை நோக்கிப் புறப்படுகின்றான். போகும் வழியில் இரவு வந்துவிடுகின்றது. ஒரு மண்டபத்தில் படுக்கின்றான். நடுநிசி. வான மண்டலத்திலே ஒளி மயமான காட்சிக்கிடையில் அல்லா தெரிகின்றார். இதைக் கழுதை கண்டது. வரம் கேட்க இதுவன்றோ வேளை என்று தன்னுடன் வந்த பரிவாரங்களையெல்லாம் எழுப்பிற்றாம். மூன்றும் வரங்களை வேண்டிப் பெற்றன. பின்னர் தம் எஜமானையும் எழுப்பின. அப்போது அந்தக் கூத்தாடி கேட்டான், நீங்கள் மூவரும் என்னென்ன வரங்களை வேண்டிப் பெற்றீர்கள் என்று. அதற்குக் கழுதை சொல்லிற்று, நான் ஒரு பேராசனாக, பாதுஷாவாக ஆகவேண்டும் என்று கேட்டேன். பின்னர் குரங்கினைப் பார்த்துக் கேட்டபோது, அது சொல்லிற்றாம், ‘ நான் தலை சிறந்ததொரு மதக்குருவாக வரவேண்டும் என்று கேட்டேன் ’ என்று. பிறகு நாயைப் பார்த்துக் கேட்டபோது அது சொல்லிற்றாம். ‘நான் ஒரு தலைமை அமைச்சராக வர வேண்டும் என்று’. உடனே அந்தத் தொம்பங்கூத்தாடி தன் கண்களைக் கையினால் மூடிக்கொண்டு வானை நோக்கி, ‘ இறைவா, என் கண்களைக் குருடாக்கிவிடு, இவர்கள் ஆட்சி புரியும் அரசினை என்னால் காண முடியாது ’ என்று கேட்டுக்கொண்டானாம்.

தலைவரவர்களே, அதுபோல் ஒரு சமயம் கவர்ச்சி அரசியல் இங்கே வளர்ந்து, ஆட்சிப் பொறுப்பு அதன் கையில் வருமேயானால், தமிழ் உணர்ச்சி படைத்த . .

(பிற்பகல் 6.10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நபிகள் சொர்க்கத்தைப் பற்றி என்ன சொன்னார்கள் என்று தெரியுமா ? என்னுடைய தாயின் பாதாரவிந்தங்கள் தான் சொர்க்கம் என்று சொன்னார்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி :** தலைவரவர்களே, அப்படி ஒருகால் கவர்ச்சி அரசியல் வளர்ந்து, ஆட்சிப் பொறுப்பு அதன் கைக்குப் போகுமேயானால், உங்கள் மூலமாகச் சொல்வேன், தமிழ் உணர்ச்சி படைத்த எங்களுடைய கண்களைக் குருடாக்கி விடுங்கள் ஆண்டவனே என்று சொல்லி, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, அதைத் தந்த திருத்தாள்களுக்கு வணக்கம் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** படிக்கின்ற வரையில் குருடாகாமல் விட்டு வைத்தானே, அதைப் பாருங்கள்.

அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.





## இணைப்பு.

[10 ஆம் பக்கத்தில் 185 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 16, 17 ஆம் நாளில், சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் நடத்திய முதல் மாநில மாநாட்டில், ஊர் நல உதவியாளர்கள் தொடர்பாக விடுத்துள்ள கோரிக்கைகளின் மீது இதுவரை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை கீழே பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன :

| தீர்மானங்கள் (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை (2) |
|---|---|
| **தீர்மானம்–4**<br>ஊர் நல ஊழியர்களை ஊராட்சித் துறையிலிருந்து பிரித்து வேளாண்மைத் துறைக்கு மாற்றப்போவதாக ஒரு கருத்து நிலவி வருகிறது. கிராம நல ஊழியர்கள் ஊராட்சி வளர்ச்சிப் பிரிவில் தான் பணிபுரிய வேண்டும். | இந்தக் கருத்துக்கு ஆதாரமில்லாததால் இதன் மீது நடவடிக்கைத் தேவையில்லை என்று கருதப்படுகிறது. |
| **தீர்மானம்–11**<br>இப்போதிருக்கின்ற இரண்டு தர ஊர் நல உதவியாளர்களை மூன்று தரமாகப் பிரித்து தேர்வு நிலை ஒன்று (வளர்ச்சி பிரிவு கணக்கர் நிலையில் உருவாக்கி) இரண்டாம்தரம், முதல் தரம் தேர்வு நிலை இப்பதவிகளின் விகிதம் 50 : 30 : 20 என்று வரையறுக்கப் பட வேண்டும். | கீழேயுள்ள தீர்மானம் 12–ன் மேல் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளை முன்னிட்டு, இத் தீர்மானத்தின் மீது, வேறு நடவடிக்கை தேவையில்லை என கருதப்படுகிறது. |
| **தீர்மானம்–12**<br>இரண்டாம் நிலை ஊர் நல ஊழியர்கள் பதவி உயர்வின்மையினைக் கருதி ஒவ்வொரு வட்டாரத்திலும், முதல் நிலை இரண்டாம் நிலை, ஊர் நல | ஊராட்சி ஒன்றியங்களில் முதல் இரண்டாம் நிலை ஊர் நல உதவியாளர்களின் விகிதம் 5 : 5 ஆக இருக்க வேண்டுமென்பதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு |

| தீர்மானங்கள் (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை (2) |
|---|---|
| உதவியாளர்கள் பதவிகள் 3 : 7 விகிதத்தில் இருப்பது 5 : 5 விகிதத்தில் மாற்றி அமைத்து ஆணையினைப் படிப்படியாக நிறைவேற்றாமல் ஒரே ஆண்டில் நிறைவேற்ற வேண்டும். முதல் நிலை ஊர் நல உதவியாளரும் பயன் காணும் வகையில் தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்த வேண்டும். | உள்ளது. இதனால் 870 முதல் நிலை ஊர் நல உதவியாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 9,81,000 அரசுக்கு அதிகப்படியான செலவு ஏற்படும் என கணக்கிடப்பட்டு தற்போதுள்ள நிதி நிலைமையினைக் கருதி, இதனை ஒரே ஆண்டில் நிறைவேற்ற இயலாது என்றும், படிப்படியாக ஐந்து வருட காலத்திற்குள் நிறைவேற்றலாம் என்ற கருத்தினை அரசு ஏற்றுக் கொண்டு, இதனை 1974–75ஆம் ஆண்டிலிருந்து அமுல் படுத்த முடிவெடுத்துள்ளது. |

**தீர்மானம்–19**

| | |
|---|---|
| இரண்டாம் நிலை ஊர் நல உதவியாளர்களுக்கு அவர்கள் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பெறும் பயிற்சியின் காலத்தைக் கருதி அடிப்படை ஊதிய விகிதத்தை மாற்றி அமைக்க வேண்டும். | முதல் நிலை ஊர் நல உதவியாளர்களின் ஊதிய விகிதம் ரூ. 250–10–300–15–450 என்றும், இரண்டாம் நிலை ஊர் நல உதவியாளர்களின் ஊதிய விகிதம் ரூ. 210–5–245–10–325 என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதை மேலும் மாற்றத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது. |

**தீர்மானம்–22**

| | |
|---|---|
| ஓராண்டு வேளாண்மைத் தீவிர பயிற்சி பெறும் ஊர் நல ஊழியர்களில், ஒவ்வொரு ஆண்டிலும் முதலிடம் பெறும் ஊர் நல உதவியாளர்களுக்கு இரு ஊதிய முன் உயர்வும், மற்ற அனைவருக்கும் ஒரு ஊதிய முன் உயர்வும் அளிக்க வேண்டும். | தற்பொழுது ஒவ்வொரு பயிற்சி தொடரிலும் முதலிடம் பெறும் ஊர் நல உதவியாளர்களுக்கு இரண்டு ஊதிய உயர்வும் மற்ற நான்கு இடங்களைப் பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஊதிய உயர்வும் அளிக்கப்பட்ட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு இக் கோரிக்கையினை நிறைவேற்ற அவசியமில்லை என முடிவு செய்யப்பட்டது. |



| தீர்மானங்கள் (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை (2) |
|---|---|

**தீர்மானம்–31**

| | |
|---|---|
| முதல் நிலை ஊர் நல உதவியாளர்கள் குடும்ப நலத்திட்டங்களுக்கு மிகுந்தப் பணி ஆற்றுவதால், ரூ. 350–15–500–20–600 எனும் ஊதிய விகிதத்தில் குடும்ப நல விரிவாக்க அலுவலர் பதவி ஒன்று ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்படுத்தப்படவேண்டும். | குடும்பக் கட்டுப்பாடுத் துறையின் செலவினங்கள் இந்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே இக் கோரிக்கையை மாநில அளவில் ஏற்றுக்கொள்ள முடியாது. |

**தீர்மானம்–51**

| | |
|---|---|
| முதல் நிலை ஊர் நல உதவியாளருக்கு ரூ. 30 இரண்டாம் நிலை ஊர் நல உதவியாளருக்கு ரூ. 25-ம் பயணப்படியாக வழங்க வேண்டும். | ஊர் நல உதவியாளருக்கு தற்பொழுது கொடுத்து வரும் நிரந்தர பயணப்படியை உயர்த்தி வழங்க செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

வியாழக்கிழமை, 1974 மார்ச் 14.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Drawing Masters*

*191 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representations have been received from Drawing Masters with Secondary Grade qualifications for fixation of scale of pay on a par with Physical Education Teachers with Secondary Grade qualifications; and

(*b*) if so, the action taken or proposed to be taken thereon?

### ஓவிய ஆசிரியர்கள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இடைநிலைத் தர ஆசிரியர் கல்வித் தகுதியுடைய ஓவிய ஆசிரியர்களிடமிருந்து, அதே (இடைநிலைத்தர ஆசிரியர்) கல்வித் தகுதியுடைய உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குச் சமமாகத் தங்கள் சம்பள வீதங்கள் வரையறுக்கப்பட வேண்டுமெனக் கோரி முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : There are no paintings, Sir.

## *Higher Grade Teachers*

*194 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to absorb the Higher Grade teachers working in the Secondary Grade posts after giving them training for a short duration, as recommended by the Kothari Commission; and

(b) if so, the details thereof?

## *உயர்நிலை ஆசிரியர்கள்*

*திரு. எம். சங்கரலிங்கம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—*

*(அ) கோத்தாரி குழு பரிவுரை செய்துள்ளவாறு, செகண்டரி கிரேடு பதவிகளில் பணியாற்றும் உயர்நிலை ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளித்த பின்னர் அப்பதவிகளில் சேர்த்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?*

*(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.*

*(இ) இக்கேள்விக்கு இடமில்லை.*

## *Refusal to comply with the Order of the Education Department*

* 195 Q.—THIRU M. ARUMUGASWAMI (on behalf of Thiru K.S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the managements of certain aided middle schools in Tiruchirappalli Educational District, refuse to comply with the order of the Education Department, in the matter of promoting Secondary Grade Assistants with B.T. qualifications, as Headmasters of their schools; and

(b) if so, the action proposed to be taken against such managements?



## *கல்வித் துறையின் ஆணைக்கு இணங்க மறுப்பு*

*திரு. எம். ஆறுமுகசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—*

*(அ) திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில் மானியம் பெறும் சில நடுத்தரப் பள்ளிகளின் நிர்வாகத்தினர், பி.டி. தகுதி பெற்ற இடைநிலைத்தர உதவி ஆசிரியர்களுக்கு தங்கள் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு அளிப்பது குறித்து கல்வித் துறையின் ஆணைக்கு இணங்க மறுக் கின்றனர் என்பது உண்மையா?*

*(இ) ஆமெனில், அந்த நிர்வாகத்தினர் மீது எடுக்கக் கருதியுள்ள நடவ டிக்கை யாது?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) படைக்கல உற்பத்தித் தொழிற்சாலை நடுத்தரப் பள்ளி, இராமகிருஷ்ண உதவி பெறும் நடுத்தரப்பள்ளி, புனித ரிடீமர்ஸ் ஆண்கள் நடுத்தரப்பள்ளி, திருச்சி ஆகிய மூன்று பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர் பணிக்காக மூன்று பி.டி. பட்டதாரி ஆசிரியர் பணியிடம் 1972-73 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டன. மேற் கூறப்பட்ட மூன்று பள்ளிகளுள் படைக்கல உற்பத்தித் தொழிற்சாலை நடுத்தரப் பள்ளி பி.டி. பட்டதாரி ஆசிரியரை பயன்படுத்திக் கொண்டது. புனித ரிடீமர்ஸ் நடுத்தரப் பள்ளியில் தற்போது உள்ள தலைமை ஆசிரியர் புதிய பட்டதாரி ஆசிரியரைவிட அனுபவம் படைத்தவராக உள்ளதால் அவருடைய பதவியைக் குறைத்துவிட்டு புதிய பி.டி. இடைநிலை ஆசிரியரை நியமிக்க விரும் பாததால் அப்பள்ளிக்கு அளிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர் பணியிடம் பயன் படுத்தப்படவில்லை. ஸ்ரீஇராமகிருஷ்ண நடுத்தரப்பள்ளி 1973-74-ம் ஆண்டில் பட்டதாரி தலைமை ஆசிரியர் பணியிடத்தைப் பயன்படுத்திக்கொள்ள சம்ம தித்தது. இதற்கென தனி ஆணை இல்லாததால் இப்பள்ளியும் பட்டதாரி தலைமை ஆசிரியர் பணியிடத்தை பயன்படுத்திக்கொள்ளவில்லை. தனியார் பள்ளி நிர்வாகம் தங்கள் விருப்பப்படி தகுதி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க உரிமையுடையவர்களாக இருப்பதால் அவர்களின்மேல் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது.*

## *Aliyar Central Workshop*

* 196 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THIRU KATTOOR GOPAL) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal with the Government to develop the Aliyar Central Workshop as a body building-servicing workshop for motor vehicles; and

(b) if so, the action taken thereon?

[1974 மார்ச் 14

### ஆளியாறு மத்திய பட்டறை

**புலவர் ஓ. அறிவுடை நம்பி (திரு. காட்டூர் கோபால் சார்பில்) :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆளியாறு மத்திய பட்டறையை மோட்டார் வாகனங்களின் பாடி கட்டுகிற, மற்றும் பழுது பார்க்கின்ற பட்டறையாகச் செயல்படுத்த செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

### *Farm Research Centre at Krishnagiri*

*198 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether (i) the Government and (ii) the Tamil Nadu Agricultural University at Coimbatore have started Farm Research Centres at Krishnagiri; and

(*b*) if so, the details thereof?

### கிருஷ்ணகிரியில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

**திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) மாநில அரசும் (2) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகமும் கிருஷ்ணகிரியில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களைத் தொடங்கியுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** மேலவை முன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

---

@ 251-253 ஆம் பக்கங்களில் இணைப்பு [redacted] ஆக அச்சிடப் பட்டுள்ளது.



1974 மார்ச் 14]

### *Arecanut Plantations*

*199 Q.— Thiru L. BALARAMAN (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware that the arecanut plantations in Kallar area in Coimbatore District were afflicted with unknown diseases during September 1973; and

(*b*) if so, the action taken thereon?

### பாக்குமாத் தோட்டங்கள்

**திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கல்லாறு பகுதியில் உள்ள பாக்குமாத் தோட்டங்கள் 1973 செப்டம்பரில் இனம் தெரியாத நோய்களினுல் பாதிக்கப் பட்டதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) & (இ) தலைவரவர்களே, பாக்கு மரத்தைத் தாக்கிய புதிய நோய் காளான் கொல்லி மூலம் கட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

### *Overhead Tanks in the Panchayat Unions of North Arcot District*

* 197 Q.—Thiru L. BALARAMAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the Union-wise particulars of the construction of overhead tanks in the Panchayat Unions of North Arcot District, started in 1969 but not completed till date?

### வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் 1969 ஆம் ஆண்டில் வேலை தொடங்கப்பெற்று, இன்று வரை முடிவு பெறுமல் உள்ள, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேலைகள் பற்றிய விவரங்கள் ஒன்றியம் வாரியாக யாவை ?

[1974 மார்ச் 14

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** விவர அறிக்கை@ ஒன்று சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகியும் இதுவரை முடிவு பெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன, முடித்த வேலைகளில் பாதை கூட முடிவு பெறாமலிருப்பதைப் பார்க்கும்போது அரசு மேலும் இதற்கான நடவடிக்கை எடுக்கவிடுக்கிறதா வென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, சிமெண்ட், இரும்பு போன்ற பொருள்களின் பற்றுக்குறை காரணமாகவும், ஒப்பந்தக்காரர் கள் குறித்த காலத்தில் முடித்துத்தர இயலாது என்று தெரிவித்ததன் காரண மாகவும், அவர்கள் சில பேர் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனைகள் வழங்கப்பட்ட காரணத்தினால், உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டு மென்று உத்தரவு போடப்பட்டு, வேலைத் திட்டங்கள் நிறைவேறி வருகிற நிலைமையில் இருக்கிறது. இந்த நிதியாண்டில் மார்ச் திங்களோடு முடித்துக் கொடுத்து விடுவோம் என்ற உறுதியின் பேரில் இந்த வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய பதில் ஓரளவிற்கு இருந்தாலும், இதற்கு ஒரு பகுதி காரணம் பொறியாளர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதுபோன்ற நிலைமை அனுபவ பூர்வமாக எங்கள் பஞ்சாயத்தில் இருப்பதை இந்த அவையின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, பொறியாளர்கள் ஒரு சிலர் தாமதம் செய்தார்கள் என்பதும், ஒப்பந்தக்காரர்கள் வரவில்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, விசாரணை செய்யப் பட்டு, அவைகளும் பரிசீலிக்கப்பட்ட பிறகு இன்றையதினம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எந்தத் தவறுவது அல்லது தாமதமாவது ஏற் பட்டால், உறுப்பினர் அவர்கள் என் கவனத்திற்குக் கொண்டுவந்தால், உடனடி யாக நிறைவேற்றித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று உறுதியளிக் கிறேன்.

---

@ 254256 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 14]

### *Calendars printed by the Temples*

*200—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU K. S. GANAPAHI): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether calendars are being printed for sale by some of the temples in Tamil Nadu;

(*b*) whether this scheme is followed to augment the revenues of the temples; and

(*c*) if so, the profit or loss sustained by the temples by the sale of calendars during 1972–73?

### *திருக்கோயில்கள் தயாரிக்கும் நாட்காட்டிகள்.*

**திரு. எம். ஆறுமுகசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்):** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

*(அ) தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்கள் சிலவற்றில் நாட்காட்டிகள் விற்பனைக்காகத் தயாரிக்கப்படுகின்றனவா?*

*(இ) இத்திட்டம் திருக்கோயில்களின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு கையாளப்படுகின்றதா?*

*(உ) ஆமெனில், 1972-73 ஆம் ஆண்டில் நாட்காட்டி விற்பனையின் மூலம் திருக்கோயில்களுக்கு ஏற்பட்ட லாபம் (அல்லது) நஷ்டம் எவ்வளவு?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) தமிழ்நாட்டிலுள்ள திருக் கோயில்கள் சிலவற்றில் நாட்காட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இரண்டு திருக்கோயில்களுக்கு உபயமாக நாட்காட்டிகள் சேவார்த்திகளால் தயாரித்துக் கொடுக்கப்படுகின்றன. ஐந்து திருக்கோயில்கள் தத்தம் செலவில் அச்சிட்டு வெளியிடுகின்றன. திருக்கோயிலில் நடைபெறும் ஒரு வருடத்திற்கான திருநாள் விவரங்கள் அடங்கிய நாட்காட்டிகள் இவை. விற்பனைக்காக மட்டிலும் தயாரிக்கப்படவில்லை.

(இ) இல்லை. ஆனால் பக்தர்கள் எண்ணிக்கை பெருகி அதனால் உண்டியல் மற்றும் இதர காணிக்கை வருமானம் உயர வழியுண்டு.

(உ) செலவிடப்பட்ட தொகையைவிடக் குறைவாகத்தான் இத்தலைப்பில் விற்பனை மூலம் வசூலாகிறது. இருந்தாலும் நஷ்டம் எனக் கொள்ள முடியாது. காரணம் பலநோக்குடன் இம்முயற்சி கையாளப்பட்டு வருகிறது. உபயதாரர்கள் முதலியோர்க்கு இலவசமாக வழங்கி எஞ்சியது மட்டிலும் விற்கப்படுகிறது.

[1974 மார்ச் 14

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]**

**2. கவன ஈர்ப்பு.**

**உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் விநியோகப் பிரிவை கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவதன் மூலம் ஊழியர்கள் பாதிக்கப்படுவது குறித்து**

**புலவர் ஓ. அறிவுடைநம்பி :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"1964 முதல் 1972 வரை உணவுப் பொருள் வழங்கு துறையில் பணியாற்றி, தற்போது உணவுப் பொருள் வழங்கு கழகத்தில் பணியாற்றி வரும் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதோடு, கழகத்தில் உள்ள விநியோகப் பிரிவை கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவதன் மூலம் ஊழியர்களில் 400 பேருக்கு மேல் பாதிக்கப்படுவதோடு, வேலை வாய்ப்பு இழப்பது குறித்து".

(4–10 பிற்பகல்)

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, உணவுப் பொருள் வழங்கு துறை 1964-ம் ஆண்டு நிறுவப்பட்டபோது, உணவு தானிய பங்கீட்டு முறை விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பலரை நியமிக்க வேண்டியதாயிற்று. இதனால் இத் துறை பணிவிதிகளுக்கு அப்பாற்பட்டவை எனவும் தமிழ் நாடு பொதுத் தேர்வுக் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களை நியமிப்பது அவசியமில்லை என்றும் அரசு முடிவு செய்தது. ஆகையினால் இத்துறையிலுள்ள பணிகளை சட்டபூர்வமான விதிகள் மூலம் வரையறுக்காமல் உணவுத் துறையின் 16—4—1947 நாளிட்ட 449 எண்ணுள்ள அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்ட நிர்வாகக் கட்டளைகளால் முறைப்படுத்தப்பட்டது. 1966-ம் ஆண்டு இத் துறையிலுள்ள சில பதவிகள் நிரந்தரமாக்கப்பட்டன. ஆயினும் பலர் உரிய வயதைக் கடந்தவர்களாகவும் பொதுக் கல்வித் தகுதி பெறாமலும் இருந்ததால் இத்துறைக்குரிய பணி விதிகளை நிறுவவும் பணியாளர்களை நிரந்தரமாக்கவும் சாத்தியமில்லாமல் போய்விட்டது. பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லையே தவிர அரசு



**உணவு பொருள் வழங்கு கழகத்தின் விநியோகப் பிரிவை கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவதன் மூலம் ஊழியர்கள் பாதிக்கப்படுவது குறித்து**

1974 மார்ச், 14] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

நிரந்தர பணியாளர்களுக்குக் கிடைக்கும் ஊதிய உயர்வு, விடுப்பு, ஓய்வு கால
ஊதியம் முதலிய சலுகைகள் இவர்களுக்குக் கிடைத்து வந்தன. 1970-ம்
ஆண்டு முதல் ஆண்டுதோறும் வேலைத் தகுதி இல்லாத இத் துறை ஊழியர்கள்
தமிழ் நாடு பொதுத் தேர்வுக் கழகம் நடத்தும் பரீட்சைகளை எழுதி மற்ற
அரசுத் துறைகளில் வேலை பெறுவதற்கு உரிய விதி விலக்குகள் அளிக்கப்பட்டு
வருகின்றன. மேலும் இத்துறையிலுள்ள பணியாளர்களின் பணிகளை
முறைப்படுத்துவதற்கான விதி முறைகளை வகுப்பது பற்றியும் அரசு கவனம்
செலுத்தி வருகிறது.

தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் ஜூலை 1972-ல் நிறுவப்பட்ட
போது உணவுப் பொருள் வழங்கு துறையில் பணியாற்றி வந்த தற்காலிகப்
பணியாளர்கள் கழகத்தில் அவர்கள் புதிதாகச் சேர்ந்தவர்களாகவே கருதப்
படுவர். முன்னர் உணவுப் பொருள் வழங்கு துறையில் வேலை செய்து வந்த
தற்காக எந்தவிதச் சலுகையும் காட்டப்பட மாட்டாது என்ற நிபந்தனையின்
பேரில் மாற்றப்பட்டனர். கழகத்தின் விதிகளின்படி எல்லா பணியாளர்களும்
இரண்டு ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்கு உட்பட்டு ஓர் ஆண்டு
தகுதி காண்பருவம் முற்றுப் பெற வேண்டும். மேற்சொன்ன விதி, முன்பு
உணவுப் பொருள் வழங்கு துறையில் பணியாற்றி பின்பு கழகத்துக்கு மாற்றப்
பட்ட பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்தும். ஆகவே, மேற்குறித்த
பணியாளர்களுக்கு தகுதி காண் பருவம் முற்றுப் பெற்றதற்கான ஆணைகள்
வெளியிடுவதற்குக் கழகம் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்றியமையாப் பொருள்களின் சில்லறை விற்பனை படிப்படியாகக் கூட்
டுறவுச் சங்கங்களிடம் ஒப்புவிக்கப்படலாமெனவும் அண்மையில் அரசு முடிவு
செய்துள்ளது. இம்முடிவினையொட்டி முதற்கட்டமாக உணவுப் பொருள்
வழங்கு கழகத்தால் சென்னையில் நடத்தப்பட்டு வரும் 28 சில்லறை விற்பனை
நிலையங்களை, டி.யு.சி.எஸ். மற்றும் இதர கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்புவிக்க
முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சில்லறை விற்பனை நிலையங்களைக் கூட்
டுறவுகளிடம் ஒப்புவிக்கும்போது, இச்சில்லறை விற்பனை நிலையங்களில் பணி
யாற்றிவரும் 266 கழக ஊழியர்களில் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 127
ஊழியர்கள் மட்டும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்படுவார்கள். உணவுப்
பொருள் வழங்கு துறையிலிருந்து உணவுப் பொருள் வழங்கு கழகத்துக்கு
மாற்றப்பட்ட ஊழியர்கள் அனைவரும் அதாவது மீதமுள்ள 139 பேர்கள் கழ
கத்திலேயே நிறுத்திக்கொள்ளப்படுவர். ஆயினும் சென்னையில் பணியாற்றி

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 மார்ச் 14

வரும் 43 கடைநிலை ஊழியர்கள் தேவைக்கு மிகுதியாக இருப்பார்கள் எனக் கணிக்கப்படுகிறது. இவர்கள் மாவட்டங்களில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்படுவார்கள்.

மாவட்டங்களில் உள்ள விற்பனை நிலையங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் நிலைமையைப் பற்றி அந்நிலையங்களைக் கூட்டுறவுகளிடம் ஒப்படைக்கும் போது முடிவு செய்யப்படும்.

மேற்சொன்னவற்றிலிருந்து உணவுப் பொருள் வழங்கு துறையிலிருந்து உணவுப் பொருள் வழங்கு கழகத்துக்கு மாற்றப்பட்ட ஊழியர்களின் பதவிகளை நிரந்தரமாக்கும் கருத்து கழகத்தின் பரிசீலனையில் உள்ளதென்பதும், சில்லறை விற்பனைக் கடைகளைக் கூட்டுறவுகளுக்கு மாற்றுவதால் சுமார் 400 பேர் வேலை இழப்பர் என்பது சரியல்ல என்பதும் விளங்கும்.

## 3. 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I rise rather belatedly to offer my remarks on the Budget for 1974–75. But, considering the fact that I could have got a little more time if I had spoken earlier, but to a lesser audience, I perhaps preferred to have lesser time and have a bigger and audience.

MR. CHAIRMAN : There are so many hon. Members who are to speak today.

THIRU A. R. DAMODARAN : I shall restrict my speech, Sir. If you allow me thirty minutes, I shall restrict myself to that.

Sir, the Budget has been framed under extraordinarily difficult circumstances both in the State as well as at the Centre. Therefore, especially after the note that was published a month ago that all the States in India were expected to levy taxes to the extent of Rs. 196 crores for 1974–75—some of us were rather nervous that the Budget of the Tamil Nadu Government would also contain certain additional levies, particularly on certain products which I shall not want to mention, since I do not wish to give any hint to the Chief Minister who may come with supplementary Budgets. But, nonetheless, we are, perhaps,



1974 மார்ச் 14] [Thiru A. R. Damodaran]

relieved to a considerable extent that in addition to the Central taxation of approximately Rs. 216 crores, the Tamil Nadu Government's Budget is relatively light and less burdensome than what was generally expected.

Sir, reference has been made in the Budget speech of the Hon. the Chief Minister as well as by the Finance Minister in the Central Government, to the extraordinary situation that prevails in our country today, especially in regard to the galloping increase in prices, to the inflationary trends that exist in our economy, to the fall in industrial production—which has averaged less than $1\frac{1}{2}$ per cent over the past five years, to the gross fall in agricultural output which has, in its turn, contributed to the rapidly spiralling prices of agricultural commodities and to a generally despondent situation in so far as the economic situation is concerned, and the Finance Minister of the Central Government has come forth with his usual dose of heavy taxation. Some hon. Members have questioned why it is necessary for us to refer to the taxation proposals of the Union Government when we are talking of the State Budget. They have even criticised that this is, perhaps, a move to divert attention from the problems that face our State and that it is intended to throw the responsibility for all the ills that face our nation on the Central Government and try to shield the State Government from legitimate criticism. While I do not deny that the State Government have a certain responsibility in the distribution of essential commodities, I do not think that any person with some degree of knowledge of public finance can deny the fact that the inflationary policies pursued by the Central Government are solely responsible for the distressing economic situation in our country. Last year, the Finance Minister mentioned, in his Budget documents, that the anticipated deficit budget for 1974–75 was estimated at a modest Rs. 650 crores, and even this figure, he said in an addendum, would be increased by Rs. 100 or Rs. 150 crores because the figure of Rs. 650 crores that he mentioned was computed up to the date 31st January, 1974.

Sir, in the extraordinary situation when there has been a general increase in the wholesale price index, in the cost of living index and when people all over the country are more worried about where they would get their essential commodities such as food-grains, pulses, edible oils and even clothes, attention is sought to

be diverted to such irrelevant issues as Diego Garcia and other issues with which the common people of our country are really most unconcerned. I make specific mention of this because there is a general impression in our country that foreign policy is a topic that should be reserved exclusively for the experts at the Centre and that we in the State have no degree of responsibility and that we should not try to utter views on these matters because we really have no knowledge of the greater national issues involved. I do not know, Sir, what particular importance Diego Garcia had so that it had to be mentioned in a remote village in Uttar Pradesh, excepting, as it is my impression, that it was deliberately intended to divert the people's attention from the more telling problems that faced them in States like Gujarat and Maharashtra and that it was a deliberate attempt to divert the people's attention from such pressing problems which it was not possible for the Central Government to solve. I mention this, Sir, because in these matters we in the States have very little to say and the expectation of foreign aid depends, to a very large extent, on the foreign policy of our country, and viewed from that context, I think it most undesirable that we have entered into an agreement just one month ago, whereby Rs. 1,640 crores of P. L. 480 Aid had been converted into a grant to be spent by the Government of India or to be adjusted in the budgets of the Central Government over a period of five years. It is rather unfortunate that we should endanger the friendships that have been created, by introducing new stresses and new tensions which are likely to spoil the very atmosphere which is likely to get more foreign aid for our country.

Sir, the oil situation has exacerbated the situation to such an extent that India's import bill is expected to rise by about Rs. 800 crores per annum. The outlay of our Fifth Five-Year Plan is Rs. 53,000 crores which, in itself, is a fanciful amount at the present moment because economists feel that with the rapidly increasing price spiral, even the Rs. 53,000 crores would have to be inflated to a much higher figure, if we are to have a plan in real terms and to the same extent to which we had planned with that amount of outlay. The fact remains that India is still heavily depending on foreign aid and it is, therefore, essential that, in future, our foreign policy should be framed in such a manner that it serves our national interest to a much greater extent and that



we should not cloud the issues referring, and side-tracking, to various unimportant issues which do not really affect the life of the common man in India.

(4-20 பிற்பகல்)

Sir, I referred in brief to the heavy taxation proposals of the Central Government. I do not wish to refer in detail to the various taxation proposals. May I in passing refer to another proposal, which seems to have passed the attention of many consumers, namely, the post-Budget declaration on the midnight of March 1st regarding heavy increase in the prices of petroleum products? I was under the impression, Sir, that the period of exchange of midnight epistles had ended with the year 1969 with the break in the then united Congress. But I find this sending of midnight epistles seems to continue even during the ordinary days. In fact, I was informed that the increase in the prices of petroleum products was announced to the Press at exactly 11-30 p.m. on the night of March 1st. Sir, although it is not a taxation measure and the rise in the prices of petroleum products was purely intended to equalise the increase in the cost of crude the people have not been told of the effect on the consumer as a result of this price increases that have been announced on petroleum products. Sir, I have calculated that the exact impact of the increase in prices of petroleum products for a full year is estimated to be of the value of Rs. 360 crores per year, or almost one and a half times the value of the excise taxation proposals which have been announced in the Union Budget for 1974-75. I do not think it requires any great imagination on our part to understand the implications of such an increase in prices of articles which are commodities which are not drunk by the common man and wasted away but which are used for such essential purposes as transport and by ordinary consumers of kerosene and its inflationary effect to the extent of Rs. 360 crores on the general economic situation in our country. I, therefore, wish to state that we cannot judge the Central Government's taxation proposals merely by their excise levies to the extent of Rs. 216 crores. But we should also take into account the terrible inflationary impact which the increase in prices of petroleum products is going to cause by putting up the cost of other essential commodities which are required by the common man. I am not in a position to assess the extent of its impact at this stage. But

[Thiru A. R. Damodaran] [1974 மார்ச் 14

I only wish to express that this continued exercise in deficit budgeting is contributing to inflationary spiral and that it is going to cause not only grave economic problems but problems of even graver political nature the like of which we have already witnessed in the States of Maharashtra and Gujarat.

Sir, reference has been made in the Budget to the Fifth Five-Year Plan. Sir, I may mention here that we expressed regret in 1967-68 that the Fourth Five-Year Plan did not take-off and that we were having annual plans which slowed down the tempo of Plan development. Now, Sir, I have a fear that the Fifth Five-Year Plan is as dead as a dodo at the present moment, considering the fact that our outlays for the year 1974-75 in real terms are 25 per cent less than the out-turn during the year 1972-73 and 1973-74. In fact, in this document, the Hon. the Chief Minister has mentioned that whereas the Tamil Nadu Plan expenditure for 1973-74 was Rs. 129 crores, we are expected to take-off into the Fifth Five-Year Plan with the magnificent investment of Rs. 109 crores to Rs. 118 crores, which, in real terms, taking into account the rise in prices of articles, will be less than Rs. 90 crores. I think this is extremely disappointing. While I agree that a certain amount of restraint is required, especially in development expenditure, I think, generally speaking, the expectation is that we would spend a larger amount on development plants, without which it is impossible for us to keep our people satisfied. I, therefore, join in the disappointment that has been expressed in the Budget document regarding the quantum of Plan aid for the first year of the Fifth Five-Year Plan.

Sir, reference has been made to the Sixth Finance Commission, the recommendations of which have caused some degree of disappointment not only to the Tamil Nadu Government but to seven or eight other State Governments which have felt that their needs have not been sufficiently well looked after. I will not commit the folly of ascribing any particular motive to the Members of the Sixth Finance Commission. They were all distinguished members and one of them is the most distinguished economist Dr. Minhas who has resigned his membership of the Planning Commission. I, therefore, do not ascribe any motive to their recommendations. But, I am certainly entitled to question some of the principles on which the Sixth Finance Commission has made its recommendations in



1974 மார்ச் 14] [Thiru A. R. Damodaran]

regard to the transfer of resources to States during the coming five years. Sir, as far as Excise, Income-tax and Estate Duty are concerned, I have no quarrel with the recommendation of the Sixth Finance Commission, because they have done it on certain well-defined principles. If at all a quarrel lies, it is probably because we have been more careful in keeping our population under check than the other States in the implementation of population programmes. But, in regard to the transfer of resources under the head of "Additional duties on Textiles, Tobacco and Sugar", I remember that in successive Budget documents, mention has been made of the fact that in 1957 or 1959, when the State Government gave up its right to levy a sales tax on these commodities and agreed to have a guaranteed sum in exchange for the levy of sales tax, the Central Government, at that time, fixed a certain amount which could be transferred to the States. Sir, according to the Budget figures for 1974-75, the amount that would be transferred under the head "Additional Duties on Textiles, Tobacco and Sugar" to the States all over India is only of the order of Rs. 171.74 crores. My quarrel is not with this transfer. But, my quarrel is that the basic duties on sugar, tobacco and textiles are of the order of Rs. 676 crores to the Centre, out of which only 20 per cent is transferred to the States. Sir, successive Finance Ministers at the Centre for the past ten years—if the Budgets of the Central Government are analysed—have brought about an incretse every year on rayon fibres, tobacco and textiles and our excise revenue which was only Rs. 180 crores in 1959 has gone well over Rs. 676 crores during the coming year. In these circumstances, no State Government, I repeat, no State Government, including the Tamil Nadu Government, will even feel satisfied that it is getting an adequate percentage of its share of the additional duties on textiles, tobacco and sugar. I hope that when the National Development Council meetings take place, the Hon. the Chief Minister will present the viewpoint of the Tamil Nadu Government and stress that in the sharing of the additional duties on textiles, tobacco and sugar, due consideration must be given to the fact that there is growth in excise returns on these three commodities and that it should be taken into consideration by any Finance Commission while fixing the guaranteed sum under this particular head. I think a graver injustice has been done in laying down a principle on which the Sixth Finance Commission recommended the transfer of resources under Article 275 (1)

[Thiru A. R. Damodaran] [1974 மார்ச் 14

of the Constitution of India. Various representations were made by the State Governments and an outstanding principle has been laid down by the Sixth Finance Commission. This has done grave injustice to the States which have been pressing for a large share of resources to cover their revenue deficit as well as their non-Plan deficit. Sir, a new principle has been adumbrated and a very strange phrase has been used in the recommendation of the Sixth Finance Commission. Actually I have never come across this word and I referred to the English Dictionary. "The upgradation of administrative standards", the phrase used by them, is, in my opinion, a very awkward phrase. 'Upgrading' I have heard of. Sir. 'Upgradation' sounds so ugly to us in the English language and it is rendered even uglier still by the recommendation they have made, which has resulted in . . .

MR. CHAIRMAN : Fortunately, Dr. Johnson was not aware of it.

THIRU A. R. DAMODARAN : Sir, the Sixth Finance Commission has taken into account the relative backwardness in administrative standards of various States and territories. Sir, this is not an exercise which, I think, the Sixth Finance Commission was called upon to do. As far as my reading of the Constitution goes, the specific recommendation in that particular Article relates only to the upgrading of the administrative standards in tribal areas to which of course, the Sixth Finance Commission could have given certain additional resources. They may be places like Mizoram and Nagaland where possibly the level of the administrative services has not come up in tune with the level of administrative services in other parts of the country. Perhaps, if the Sixth Finance Commission had recommended the transfer of Rs. 100 or Rs. 200 crores to those areas, we would not have any complaint, because we are also interested in a unified administration and in the integrity of the country. Our main quarrel certainly lies in the fact that over a period of five years, a fantastic sum of Rs. 2,500 crores is going to be distributed to 14 States leaving out the remaining seven States of which, unfortunately, Tamil Nadu is one and which seem to have claimed to have a progressive administration and which have failed to get even one crore of rupees out of the sum of Rs. 2,500 crores that has been transferred to the fourteen States that I have mentioned before.



1974 மார்ச் 14] [Thiru A. R. Damodaran]

As I said before, I do not accuse the Sixth Finance Commission of any partiality in this matter. But partiality can be exercised in a very clever way in following certain principles which, in my opinion, are highly questionable. I view, Sir, with grave concern the fact that our State has been deliberately neglected along with Madhya Pradesh and Maharashtra. These are some of the States which do not get even one rupee out of the sum of Rs. 2,500 crores that have been promised under this head. I think this has been referred to earlier and I hope this matter will also—I have no doubt whatsoever—be taken up in the discussion at the National Development Council meeting. Sir, I have referred to this matter even previously and I thought that I should make a reference to this aspect of this matter once again.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, 2,500 கோடி ரூபாயை மற்ற மாநிலங்களுக்கு இப்படித் தருகிறார்களே என்று வேதனைப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொல்கிறார்களே, I don't accuse the Central Government என்று அடிக்கடி சொல்வதை விட why not he accuse the Central Government. The hon. Member can deliberately say, 'I accuse the Central Government for not having given a single pie to the State Government'.

MR. CHAIRMAN : Thiru C. V. Rajagopal, it is a very gentle remark. He thinks like that. You should not think that he should deliberately accuse the Central Government.

THIRU A. R. DAMODARAN : I am least afraid, Sir, of deliberately accusing persons when they have to be accused, but the only distinction I sought to make was that in the course of reference to the Sixth Finance Commission, I was referring to the proposals of the Sixth Finance Commission and not actually to the Government of India. What happens behind the scenes, my friend Mr. C. V. Rajagopal may be aware of, but I am only going by the written record of things because the former Finance Secretary of the Tamil Nadu Government was himhelf Secretary to the Sixth Finance Commission. Sir, I think generosity to our own Services would require that we should not accuse them of undue partiality in making their recommendations. That was why I referred in generous terms to the principles and strongly attack the principles on which these recommendations were made, especially under Article 275 (1).

Sir, having referred to these points, may I now refer to certain very welcome features that have been brought in the State Budget? This Budget, Sir, can be called a Budget of rationalisation unlike former Budgets, when we had surcharge heaped over the ordinary taxes. This Budget seeks to rationalise the surcharges that we levied in the past. I am very happy to find, Sir, that the Hon. the Finance Minister has sought to rationalise Motor Vehicles Taxation, Entertainment Taxes and Commercial Taxes. As I said, Sir, he is very very, adept in coating bigger pills with a greater deal of sugar and when he quietly mentions in the Budget document that the State Government expect a revenue of only Rs. 10 crores by such sugar coating, all the friends are completely taken aback and they only point to the sugar coating without going into the bitter pill, in which, Sir, Rs. 10 crores is sought to be realised. While I said that I welcomed such rationalisation, may ask him, Sir, why this rationalisation could not have been carried one step further to the land revenue, irrigation cess and surcharges that are levied on the land revenue? I hope this exercise Will also be taken up by the Hon. the Chief Minister at least in next year's Budget. Then, Sir, as a sore point as far as I am concerned, sales tax of 5 per, then surcharge at 5 per cent, under 1970 Act and 5 per cent under 1971 Act have created a lot of confusion. When the Hon. the Finance Minister announced that 59 commodities would have single point levy as a very welcome concession as far as the trading community was concerned, I welcomed it, Sir, because, especially after the Lokanathan Committee Report, the rationalisation of sales tax collection has resulted in enormous revenue to the Government. I must express, Sir,. on behalf of the trading community although I have not studied the impact of various levies that he has announced—the general impression is, a conversion from multi-point to single point has given them a sign of relief. Chambers of Commerce have been requesting Government for that and I am very much thankful to the Government for having minimised the enormous hardship and difficulties felt by the trading community. They would feel extremely relieved, although some of them might feel it might be ¼ per cent more or ½ per cent more, in respect of one commodity or other. I hope the Hon. the Finance Minister will receive the representations from the trading community and the Chambers of Commerce and will



take due note of the representations before the Amending Bills are introduced in the Assembly. I would only plead that the principles of rationalisation may be extended further and the Hon. the Revenue Minister may be spared the trouble of introducing measures like surcharge on sales tax, etc, in the manner it was done in 1970, as a measure of additional revenue, and later on in 1971 for refugee relief or economic strain.

Sir, I welcome the proposals of rationalisation, although the motor vehicle operators would feel the burden, especially in view of the fact that tyres are not available in the local market. There is a pronounced shortage of high speed diesel oil to the extent of 25 per cent There is an increase in the price of spare parts The burden would undoubtedly fall to a very large extent on lorry and motor vehicle operators due to all those factors. Our State is going to lose something like Rs. 17 to 18 crores from excise revenues because of announced policy of gradual reintroduction of prohibition again in the State. This is something which I forgot to mention when I referred to the Sixth Finance Commission. The Sixth Finance Commission has taken excise growth revenue of 3 per cent every year in calculating the revenue gap, and that our State is going to lose 10 crores of rupees has not been borne in mind by the Sixth Finance Commission. I forgot to mention that, Sir. As I said, these gaps have to be made up and certainly, the taxation proposals that have been adumbrated by the Hon. the Chief Minister are not of such a nature as to warrant any undue criticism on our part.

(4-40 பிற்பகல்)

Sir, I would only like to refer to the last point that I had in mind. Because we will be discussing the detailed notes on Agriculture, Animal Husbandry, Fisheries, Education, etc. later, I shall not take up the time of this House in dealing with such matters. But, I would like to refer, particularly, to industrial development about which we are also anxious. There are many constraints on industrial development. One of the chief constraints is that with the nationalisation of almost all financial institutions such as banks, investment trusts, etc., the entire resources position is controlled by the Central Government or at least a substantial portion of the white-money in circulation is controlled by the

Central Government. Therefore, Sir, today, when private entrepreneurs or even State Governments want to start ventures of their own, they have to depend, to a very large extent, on Central financial institutions for loans, equity capital, etc. The other constraint is the recurring power shortages in our State. In this, I must express my note of warning—I am sorry I have to use that word, but it is a definite note of caution—that unless in Tamil Nadu we are able to impress and impress with great force on all the parties in our State the need to draw up a unified political programme, not only, will the existing industrial development in Tamil Nadu be affected, but the entire growth of future industrial projects in our State is in danger and is in danger of being diverted to other States. We have no coal. We have no petroleum oil. Our only source of raw material for thermal stations is lignite. The second mine-cut is absolutely essential for Tamil Nadu. There is no question of our making any political motivation in asking the Central Government for a second mine-cut. If the second mine-cut does not come, the existing industries in Tamil Nadu will have to freeze their existing capacity. There will be no expansion, no industrial growth and we will not have power to get new industries. We require the second mine-cut for expanding thermal power from 600 MW which itself is a fanciful figure which we have not been able to achieve at all. If we want to increase the capacity from 600 MW. to 1,000 MW., a second mine-cut at Neyveli is absolutely essential. There is no point in our Union Planning Minister being very courteous and telling the Hon. the Chief Minister and the Power Minister of Tamil Nadu when they meet him, " This will receive due consideration ". The time for " due consideration " has long since passed. It reqquires immediate consideration, because without that not only will the people of Tamil Nadu be affected, but what is far more important, the industrial development in Tamil Nadu will be affected and if industrial development in Tamil Nadu is affected, the entire industrial production, the production-index, in India will go down, because Tamil Nadu has industries which spread out its activities to the entire nation. I would, therefore, plead that this issue must be taken up with the greatest amount of force.

Sir, apart from the point of view of power, I would also like to refer to the fact that lignite is going to be the basic raw material for the production of many chemical industries, especially



in view of the high cost of petroleum products because of the increase in prices by the Arab nations. There are many processes which have been developed, particularly in Germany, whereby lignite is used as a raw material in the gasification process. The capital cost required is enormous, but this is a fruitful field of industrial development and considering the fact that our Development Corporations are doing such useful work in promoting industrial concerns, I would request the Hon. the Minister for Industries to devote his attention not only to the development of lignite for the purpose of power development, but also to the development of lignite for the organisation of a new stream of organic industries, because, to my mind, the petro-chemical complex has already been given up at Manali because of the new situation that has developed in the petroleum field.

Sir, I would also request that more attention be paid to the geological work in Tamil Nadu. We have not discovered enough metals and I think there must be and there should be ample scope for development in this field. Bihar has developed enormous resources in so far as mines and metals are concerned. Therefore, I would request that in the geological field, due attention may be paid and if we could find metals containing copper, zinc and tin, it would be like finding gold in our State. It would contribute considerably to the industrial prosperity of our State.

One more word, Sir, and I have done. Sir, reference has been made to the formation of District Development Corporations, to the need for harnessing rural savings and promoting investment opportunities in the various districts. I do not know the exact details of the schemes that the Hon. the Chief Minister has in mind, but I would like to make a suggestion. Especially, after 1968 or 1969 when Banks have been nationalised, we have not really realised the enormous impact it has had on the economic life, not only on private industry but also on the economic activities of State Governments. We are heavily dependent on banks, and I do not see any reason why in our own State, the State Government should not think of starting a State Investment Trust, whereby rural savings could be tapped to a considerable extent and the proceeds of such savings could be utilised for starting new industries, not necessarily in the State sector, but even for helping private industries, just as they have, in the Central Government, the Investment Trust, the Industrial Finance Corporation

[Thiru A. R. Damodaran] [1974 மார்ச் 14

and other financial concerns, where a lot of savings have been mobilised. I think in view of the fact that we have more than a dozen nationalised banks with many branches and considering the fact that about 75 per cent of the total resources available with the Banks are invested either in Government of India securities or Government of India concerns, I would certainly feel that a State Investment Trust would be a healthy development in our State, not with the intention of attracting criticism that Tamil Nadu is also thinking of starting an Investment Trust. There has been some criticism about the starting of corporations. I cannot understand why a State Government cannot start corporations. The Government of India have started 85 industrial corporations, because corporations are an essential source of industrial activity. No longer can we run industries as departmental undertakings. Here, in our State, even in transport, we have set up three or four corporations. Corporations are a national industrial activity and one need not find motives and say that just because we start a corporation, it is the intention of a State Government to express its different identity with the Central Government. Such unmeaningful criticism can harm the State more than people realise, and I would only wish that such criticism would not be politically motivated and that in these issues we can take a larger view which would help our people and our State.

Thank you.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* **திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவற்றைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் முழுமையாகக் குறிப்பிடவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, வேளாண்மைபற்றி இரண்டொரு வார்த்தைகள். வேளாண்மைக்காக இந்த நிதி ஆண்டிலே ரூ. 68.81 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே நீண்டகாலக் கடன் என்றும் குறுகிய காலக் கடன்கள் என்றும் வேளாண்மைக்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். நீண்டகாலக் கடன் தொகை ரூ. 17 கோடி என்றும் குறுகிய காலக் கடன் தொகை ரூ. 81 கோடி என்றும

சொல்லப்பட்டிருக்கின்றது. விவசாயிகளைப் பொறுத்த வரையில், குறுகிய காலக் கடன்களைத் திருப்பித் தருவதில் அதிக சிரமங்கள் இருக்கின்றன. வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தெரியும், ஒரு கடனை வாங்கி அதை விவசாயத்தில் ஈடுபடுத்தினால், அதன் முழுப் பலனும் கிடைப்பது என்பது ஒரு ஆண்டுக் காலத்தில் முடிவதில்லை. அப்படி இருக்கும்போது, குறுகிய காலக் கடன்களை ஒரு ஆண்டுக் காலத்தில் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, அவன் பல கஷ்டங்களுக்குள்ளாக நேர்கின்றது. எனவே நீண்ட காலக் கடன்களை இன்னும் அதிகமாகவும் குறுகிய காலக் கடன்களைக் குறைத்தும் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத் தவிர விவசாயிகள் இன்றைக்குத் தங்களுடைய விவசாயத்திற்கு உரிய சாமான்களைப் பெறுவதில் ரொம்பவும் சிரமப்படுகின்றார்கள். பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இயங்கும் விவசாய டெப்போக்களில் சென்று கேட்டால், உரம் கிடைப்பதில்லை. அதேமாதிரி பூச்சி மருந்தும் கிடைப்பதில்லை. அதே நேரத்தில் வெளி மார்க்கெட்டுகளில் சென்று கேட்டால், உடனே கிடைக்கிறது. அதிக விலை கொடுத்து வெளியே விவசாயிகள் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு டெப்போக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த டெப்

(4–50 பிற்பகல்)

போக்களில் விவசாயிகளுடைய தேவைகள் எந்த அளவுக்குப் பூர்த்தி செய்யப்படுகின்றன என்று பார்த்தால், ஓரளவுக்குக் கூட பூர்த்தி செய்யப்படவில்லை என்பதாகத்தான் என்னால் பார்க்க முடிகிறது. இன்றையதினம் உயர் விளைச்சல் பெறுவதற்காக உயர் ரக விதைகளை உற்பத்தி செய்து கொடுக்க ஏராளமாகச் செலவு செய்திருக்கிறது. நல்ல ரக விதைகள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் எங்களுடைய கீழ் பவானி பகுதியில் இந்த ஆண்டு ஐ.ஆர். 20 கொடுக்கப்பட்டது, ஆனால் அதிலே டி.கே. 6 கலந்திருந்தது. அதைப்பற்றிக் கேட்டால் 'நாங்கள் விவசாயிகளிடம் வாங்குகிறோம், ஏதோ அங்கு தவறு இருக்கிறது' என்று சொல்கிறார்கள். ஓராண்டில் ஒரு தடவைதான் விவசாயம் செய்ய முடியும். ஒரு குறிப்பிட்ட பொருளை விவசாயம் செய்யும்பொழுது, நஷ்டம் ஏற்பட்டு விட்டால், மீண்டும் அந்த நஷ்டத்தை ஈடு செய்வது விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டம். மறுபடியும் அடுத்த ஆண்டு விவசாயம் செய்யும்பொழுது லாபம் ஏற்பட்டால் தான், அந்த நஷ்டம் ஓரளவுக்கு ஈடாகும். நேற்றையதினம் நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசுகிறபோது நில உச்சவரம்பைப்பற்றிக் குறிப்பிட்டார்கள், அப்பொழுது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தஞ்சாவூரில்

பொறுத்த வரையில் தான் வாக்குறுதி கொடுக்க முடியும் என்று குறிப்பிட்டார்கள். இந்த ஸ்டேண்டர்ட் ஏக்கர் சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதியில் மூன்று ஏக்கர் ஒரு ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதே மாவட்டத்திலுள்ள கீழ் பவானி பகுதியில் உள்ள இடங்களுக்கு 1—60, 1—80 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஒரே மாவட்டத்தில் இரண்டு பகுதியில் இரண்டு விதமான முறையில் நிர்ணயம் செய்வது கூடாது. இப்படி ஏன் நிர்ணயம் செய்யப்பட்டது என்று எனக்குப் புரியவில்லை. அதைப்பற்றிக்கூட என்னுடைய மாவட்டத்திலுள்ள கோவை மாவட்ட விவசாயிகள் சங்கம் ஒரு மனுவை நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. அந்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி எங்களுக்கு இதுவரை எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. ஒரு மாவட்டத்தில் ஒரு பகுதிக்கு ஒரு மாதிரியும் இன்னொரு பகுதிக்கு இன்னொரு மாதிரியும் இருப்பது வேண்டாம், எல்லாவற்றையும் ஒரே மாதிரியாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்பு. இந்தக் கால்நடை வளர்ப்புக்காக இந்த ஆண்டில் 5.26 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு மருந்தகம் என்று இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளுக்கு மிக முக்கியமானது கால்நடை மருந்தகம். விவசாயம் செய்கின்றவர்கள் கால்நடை வைத்துத்தான் தீர வேண்டும். இன்றையதினம் உரங்கள் கிடைப்பதில் பற்றாக்குறை இருப்பதால், விவசாயிகள் பெருவாரியாகக் கால்நடைகளை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. கால்நடைகளை அதிகமாக வைத்துக்கொள்வதால் அவர்கள் அதிகமாக அவைகள் மூலம் உரம் பெற முடிகிறது. ஆகையினால் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கால்நடை மருந்தகம் என்று சொன்னால், அது நிச்சயமாகப் போதாது. கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள், அவைகளுக்கு வருகின்ற வியாதிகளுக்கு ஏற்றபடி போடவேண்டிய ஊசி வகைகள், சரியாக அந்த மருந்தகங்களில் கிடைப்பதில்லை. தயவுசெய்து அந்தக் கால்நடை மருந்தகங்களுக்குத் தேவையான மருந்து, ஊசி வகைகள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு கால்நடை மருந்தகம்தான் என்று கட்டுப்பாடு கிடையாது. இரண்டு கால்நடை மருந்தகங்கள் உள்ளவையும் இருக்கின்றன. மூன்று மருந்தகங்கள் உள்ளனவும் இருக்கின்றன. அதேபோல் நான்கு உள்ளவையும் இருக்கின்றன, ஆனால் இப்பொழுது நாம் என்ன விதிகளில், எப்படி





வைத்திருக்கிறோம் என்றால், முதல் மருத்துவ மனையைத் தொடங்குகின்ற
போது, அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு முழுச் செலவை
யும் செய்கின்றது. இரண்டாவது மருத்துவ மனை செயல்பட வேண்டுமானால்,
பாதி ரூபாய் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கொடுத்து, மற்றொரு பாதி
அரசாங்கத்திடமிருந்து பெற்று வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுக்கு அவருடைய பஞ்சாயத்து யூனியனுக்கு கால்நடை மருந்
தகம் அதிகம் வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், ஒரு பகுதி நிதியை பஞ்சா
யத்து யூனியன் நிதியிலிருந்து கொடுக்கச் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
இந்த ஆண்டு புதியதாக 25 கால்நடை மருந்தகங்கள் நிறுவ இருக்கிறோம்.
வேண்டுமானால் அவருடைய பஞ்சாயத்து யூனியனில் ஒன்று வைத்துக்
கொள்ளலாம்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. எங்களு
டைய யூனியனுக்குத் தேவை என்று விண்ணப்பித்துக்கொள்கிறோம் என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப்பற்றி இரண்டொரு வார்த்தை கூற விரும்பு
கிறேன். கல்விக்காக சுமார் 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
கல்வி என்று சொன்னால், ஆசிரியர்களுடைய சம்பளம் என்று தான் நாம்
கருதுகிறோம். சம்பளத்தை உயர்த்துவதிலேதான் பெரும் பகுதியான பணம்
செலவாகிவிடுகிறது. கிராமப்புறங்களில் உள்ள சாதாரண ஆரம்பப் பள்ளி
களானாலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளானாலும் சரி, கல்லூரிகளானாலும் சரி,
ஆசிரியர்களுடைய ஊதிய உயர்வைப்பற்றிய பிரச்சினைதான் இருந்து
வருகிறதே தவிர, கல்வியின் தரம் உயர்வதற்கான வழி எதுவும் காணப்பட
வில்லை. கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான சுற்றறிக்கை எதுவும் வருவ
தாகத் தெரியவில்லை. சம்பள உயர்வு பற்றிய சுற்றறிக்கைகள்தான் வந்து
கொண்டிருக்கின்றன. ஐந்து ஆண்டுகளாகக் கட்டிடங்கள் இல்லாத பள்ளிக்
கூடங்கள் அதே நிலைமையில்தான் இன்றும் இருந்துகொண்டிருக்கின்றன.
பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலும் தனியார் துறை பள்ளிகளிலும் அதே
நிலைமைதான் இருந்து வருகிறது. மாணவர்கள் மணி அடித்தால் பள்ளிக்குச்
சென்று, திரும்ப மணி அடித்தால் வீடுகளுக்குத் திரும்பும் நிலைமைதான்
இருந்து வருகிறது. கல்வியின் தரம் எந்த விதத்திலும் உயரவில்லை என்று
நிச்சயமாக என்னால் சொல்ல முடியும். அதோடு ஆசிரியர்கள் சம்பளம்
உயர்ந்துகொண்டு, நிர்வாகச் செலவும் கூடிக்கொண்டிருக்கிறது. நான் ஆசிரி
யர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை.

[திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்] [1974 மார்ச் 14

கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தனியார் கல்லூரிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு மான்யம் கொடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு பணியாளருக்கும் கிட்டத்தட்ட ரூபாய் 50 லிருந்து ரூபாய் 100 வரை அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. லெக்சரர், புரோபஸர், அஸிஸ்டெண்ட் புரோபஸர் அவர்களுக்கெல்லாம் சம்பளம் உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால் அந்தக் கல்லூரிகள் பெறும் மான்யம் அதே அளவில்தான் இருக்கிறது. அதன் காரணமாகத் தனியார் துறை கல்லூரிகள் மிகவும் சிரமப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும், சம்பளம் அல்லது அலவன்ஸ்கள் உயர்த்தப்படுகின்றபோது, அவர்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டிய நிலைமையில் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகையினால் தனியார் கல்லூரிகளுக்கு மான்யத்தை உயர்த்த வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பாலான பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லை. பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில் சொல்ல வேண்டுமானால், அவர்களுக்குக் கிடைக்கின்ற வரிக்கும் நிர்வாகச் செலவிற்கும் சரியாக இருக்கின்றதே தவிர, இதர சீரமைப்புப் பணிகள் எதையும் மேற்கொள்ள முடியவில்லை. ஏதாவது ஒரு ரோடு போடப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு வரி உயர்ந்துகொண்டே போகிறது. அந்த அளவுக்கு பணியாளர்களுக்கு ஊதியம் உயர்ந்துகொண்டே போகிறது. அந்த நிலைமைதான் இருந்து வருகிறது.

பஞ்சாயத்துக்களைப்பற்றி இந்த மன்றத்தில் ஒரு அறிக்கை வைக்கப்பட்டது. அந்த அறிக்கையை எப்படி அமுல் செய்வோம் என்பதுதான் தெரியவில்லை. 15,000 ஜனத்தொகை, 40,000 ரூபாய் வருமானம் உள்ள இடங்கள்தான் நகர பஞ்சாயத்துக்களாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றவையெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் எந்த கிராமப் பணிகள்தான் மேற்கொள்ளப்படும் என்று புரியவில்லை. குடிநீர்த் திட்டம், சாக்கடைத் திட்டம், ரோடு வசதித் திட்டம் இப்படிப்பட்டவை எவ்வாறுதான் நடைபெறும் என்று விளங்கவில்லை. நான் இவற்றையெல்லாம் கூறுவதற்குக் காரணம், கிராமப் பகுதிகளில் உள்ள குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதுதான்.

அடுத்ததாக, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு ஒரு திட்டம் நீண்ட நாளாக இருந்து வருகிறது. இப்பொழுதே கோவை மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் மாவட்ட



1974 மார்ச் 14] [திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்]

அதிகாரிகள் அலுவலகங்கள் பல வந்து விட்டன. சென்ற ஆண்டுகூட மாவட்ட மருத்துவ மனை ஈரோட்டிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. கோவை நகருக்கும் ஈரோடு நகரத்திற்கும் நீண்ட தூரம் இருக்கிறது. அதை அரசு உணர்ந்து, பல மாவட்ட அலுவலகங்களை இப்பொழுதே அங்கு அமைத்திருக்கிறது. விரைவில் அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, இரண்டு மாவட்டங்களாக அமைத்துத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

(5-00 பிற்பகல்)

அடுத்தபடியாக, கீழ்பவானி பாசனத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கீழ் பவானி பகுதியிலே கீழ் பவானி கசிவு நீரினால் நிறைய பேர்கள் பாசனம் செய்துகொண்டு வருகிறார்கள். வாய்க்கால் ஆழமாக உள்ள இடங்களிலேயெல்லாம் கசிவு நீர் அதிகமாக வருகிறது. ஒரு சில இடங்களில் அணை கட்டி, பாசனத்திற்கு விட்டிருக்கிறார்கள். அணை இல்லாத இடங்களில் கீழ்பவானி கசிவு நீரைக்கொண்டு பாசனம் செய்வது 15 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும். ஆனால் சென்ற ஆண்டில் கசிவு நீரை எடுத்துப் பாசனம் செய்தவர்களுக்கு அபராதத் தீர்வை விதிக்கப்பட்டது. இது தவறு என்று சொல்லவில்லை. பாசனம் செய்த அவர்களுக்கு கடந்த 15 ஆண்டு காலமாக அபராதத் தீர்வை விதிக்கப்படவில்லை. சென்ற ஆண்டு மட்டும் விதிக்கப்பட்டதன் காரணம் என்ன என்று அதிகாரிகளிடத்தில் கேட்டால், தக்க பதில் வருவதில்லை. இதை வருவாய்த் துறை அமைச்சரவர்களிடத்தில் சொன்னேன். இந்த நிலை அதிகாரிகளால் ஏற்படுகிறது. மேல் மட்டத்தில் உள்ளவர்களால் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. 15 ஆண்டுக் காலம் தண்ணீரைப் பாய்ச்சி விவசாயம் செய்தவர்களுக்கு இப்போது டெபுடி தாசில்தார் அவர்கள், அவருக்கு இஷ்டமான தொகை எதை வேண்டுமானாலும் தீர்வையாகப் போடும் நிலை ஏற்பட்டு வருகிறது. இதைப் போக்குவதற்கு வழி வகை செய்ய வேண்டும். இது ஏற்பட்ட காலத்திலிருந்து இது வரை மீண்டும் யிலும் நீரைப் பாய்ச்சி அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படவில்லை. மீண்டும் அபராதமே விதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்று அமைச்சரவர்களிடத்தில் சொன்னேன். இதைப் பரிசீலித்து இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற ஆண்டு பெய்த பெரு மழையினால் பவானி பகுதி நிரம்ப பாதிக்கப்பட்டது. அப்போது பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த, இன்றைய வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இதையெல்லாம் அரசாங்கம் கவனித்துச் செவ்வனே சீர்திருத்தம் செய்யுமென்று குறிப்பிட்டார்கள். ஆற்று வெள்ளம் பட்டு இன்னும் பல வேலைகள் செய்யப்படாமலிருக்கின்றன.

மல்ல, மிக அதிகமாகப் பெய்த மழையினுல் பல பகுதிகளில் ரோடுகள் மோசமான நிலைமை அடைந்து விட்டன. அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் ஒழுங்காக இவைகளைப் பழுது பார்க்க முடியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கேட்டால், நிதி வசதி இல்லையென்று சொல்கிருர்கள். என்ன காரணமோ ஏதோ, ரோடுகள் இன்னும் சரியாகச் சீரமைக்கப்பட வில்லை. மின்சாரம் குறிப்பிட்ட இடங்களுக்குக் கிடைப்பதில்லை. ஏற்கெனவே வாக்குறுதி அளிக்கப்பட்ட இடங்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. இதில் அரசு தனியாக கவனம் செலுத்திக்கொண்டு வந்தது என்பது உண்மை. அமைச்சரவர்கள் பார்வையிட்டார்கள். நானும் சென்றிருந்தேன். இதில் அவர் தனி அக்கறை எடுத்து உரிய பணியை ஏன் தொடர்ந்து செய்யாமல் விட்டு விட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை. முதலில் இருந்த ஆர்வம் மெல்ல மெல்ல குறைந்து போய்விட்டது. தயவுசெய்து அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு போக்குவரத்து வசதி, மின்சாரம் இவைகள் உடனடியாகக் கிடைப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்தில் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நகர்ப்புறங்களில் குடிசை மாற்று வாரியம் மாதிரி பல நிறுவனங்கள் ஏற்படுத்தி, நகர்ப்புறங்களில் வீடுகளைக் கட்டுகிருர்கள். ஆனல் இந்தத் திட்டம் கிராமப் புறங்களில் எள்ளளவு கூட கிடையாது. குறிப்பாக, அரிஜனங்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு—விவசாயத் தொழிலாளர்கள் என்று சொல்லும்போது எல்லா ஜாதியினரும் இருக்கி ருர்கள்—வீடு இல்லாத நிலைமை பல காலமாக இருக்கிறது. நகர்ப்புறத்தில் உள்ளவர்களுக்கு வசதி செய்யப்பட்டு, கிராமப் பகுதிகளை ஒதுக்கி வைக்க வேண்டுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். குறிப்பாக அரிஜனங் களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்ருல் குடிசை மாற்று வாரியம் என்பது நகர்ப்புறங்களில் செயல்பட வேண்டுமென்ற நிலை சொல்லப்பட்டிருக்கிறது. இதை மாற்றி கிராமப் பகுதி களிலே பின் தங்கியவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரை, மீண்டும் ஒரு வார்த்தை. தற்போது கல்லூரியைப் பொறுத்த வரையில், கோவையில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 'கொங்கு நாடு விஞ்ஞான கலைக் கல்லூரி' என்று பெயரிட்டு புதிய பாடத் திட்டத்தை வைத்திருக்கிருர்கள். இந்தப் பாடத் திட்டம் ஒரு நேரம் கல்வி, ஒரு நேரம் தொழில் என்ற ரீதியிலே வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்





லூரியினுடைய பணி நிறைவு விழாவிற்கு முதலமைச்சரவர்களும் வந்திருந் தார்கள். அந்தக் கல்வி முறை மிகச் சிறந்தது என்று பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களும் பாராட்டியிருக்கிருர்கள். நாங்களும்கூட ஒத்துக்கொள் கிருேம். எல்லாக் கல்லூரிகளிலுமே இதைப் பின்பற்ற வேண்டுமென்று ஆணை யிட வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டு நேரமும் கல்வி கற்பித்ததை விட ஒரு நேரம் கல்வி, ஒரு நேரம் தொழில் என்பதை நம் முதல்வரவர்கள், பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் பாராட்டியிருக்கி ருர்கள். இந்த நிலையை ஒவ்வொரு கல்லூரியிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையிலே, குறுகிய காலக் கடனை அதிகமாகக் கொடுப்பதை நிறுத்தி, நீண்ட காலக் கடனை அதிக மாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை தனியார் துறையில் விற்பது கண்காணிக்கப் பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் என்ன விலை சொன் ஞலும், விவசாயிகள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. தாராளமாக உரங்கள் கிடைப்பதில்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** மாண்புமிகு உறுப்பினர் ரொம்பவும் நல்ல கருத்தைச் சொன்னர்கள். கண்காணிப்பதை அதிகப்படுத்த வேண்டு மென்று சொன்னர்கள். உரத்தைப்பற்றி என்ன நிலைமை என்ருல், 9,300 பேர்களுக்கு நாம் டீலர் லைசென்ஸ் கொடுத்திருக்கிருேம். ஹோல்சேல் டீலர் லைசென்ஸ் ரிடைல் டீலர் லைசென்ஸ் என்று கொடுத்திருக்கிருேம். இந்த 9,300 பேர்கள் வடக்கே பொன்னேரியிலிருந்து தெற்கே கன்னியாகுமரிவரை இருக்கிருர்கள். இவர்களைக் கண்காணிப்பதற்கு அவசியமிருக்கிறது என்று சொல்லியிருக்கிருேம். இந்த பார்டிலைசர் கண்ட்ரோல் முழுவதும் மத்திய அரசின் கையில் இருக்கிற காரணத்தினல், கண்காணிப்பதற்கு அதிகப் பேர்கள் வேண்டுமென்று கேட்பதற்குக் கூட மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கவேண்டியிருக்கிறது. அப்படி எழுத உத்தேசித்திருக்கிருேம். விரைவிலே நடவடிக்கை எடுப்போம். முன்பு ஒரு முறை குறிப்பு எழுதி யிருக்கிருேம். நல்லவிதமான பதில் வருமானல், நடவடிக்கை எடுக்கப்படும். 9,300 பேர்களைக் கண்காணிப்பதற்கு 8 பேர் போதும் என்று எப்படித்தான் நினைக்கிருர்களோ தெரியவில்லை. இன்ஸ்பெக்ஷன் ஸ்டாஃபை அதிகப்படுத்த

வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். வேளாண்மைத் துறை பாலிசி நோட்டில் 19-ம் தேதி வரும்போது இன்னும் இதைப்பற்றிச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 19-ம் தேதி சபைக் கூட்டம் இல்லையே.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** போதிய அதிகாரிகள் இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள், கூட்டுறவுத் துறை சி.எஸ்.ஆர். போன்ற அதிகாரிகள் இதைக் கண்காணிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அதிகாரம் யாரிடத்தில் இருந்தாலும், நம்மிடம் இருக்கிறதோ இல்லையோ, கண்காணிப்பதற்கு அதிகாரம் வேண்டுமென்பதில்லை. தவறு நடந்தால், யாராக இருந்தாலும், விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் பூச்சி மருந்து, உரம் இவைகளை விற்பதைக் கண்காணிக்கலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் இப்படிப் போய் நடவடிக்கை எடுத்தார். ஆனால் அதிகாரம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு இப்போதில்லை என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்தை ஒத்துக்கொள்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. நான் தவறு என்று கண்டிக்கலாம் என்று சொன்னேன். ஆகவே இந்த முறையில் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை காலாகாலத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அவர்கள் வாங்கிக்கொள்ளலாம் என்ற நிலை இப்போது இல்லை. அவர்களுக்குத் தேவையானபோது கிடைக்கக்கூடிய அளவிற்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரப் பஞ்சாயத்துகள் எவ்விதமான கிராமப் பணிகளையும் செய்ய முடியாத நிலைமையில் சம்பளம், மின்சாரக் கட்டணம் ஆகிய செலவுகளைச் செய்துகொண்டு, கிராமப் பணிகளைத் தொடாமல் இருந்துகொண்டு வருகின்றன. இதைப் போக்க பஞ்சாயத்து சீர்திருத்தக் குழு அறிக்கையை உடனடியாக அமுல் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நான் சென்ற முறை ஆளுநர் உரையின் மீது பேசியபோது,





குறிப்பிட்ட சில கருத்துக்கள்பற்றி பதில் அளிக்கும்போது, என் மீது வழக்கமாக பரிவைக் காட்டிடும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். "அவர், நாட்டு மக்களிடத்திலே சோர்வும், சலிப்பும் அதனால் விரக்தியும் ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால் நாட்டு மக்களிடத்திலே இருக்கிறதோ இல்லையோ, அவருக்கு ஏற்பட்டிருக்கிறது" என்று என்னைப்பற்றி சொன்னார்கள். உண்மையிலே என்னிடமுள்ள ஓரளவிற்கு அது பிரதிபலிக்கிறது என்பது உண்மை. ஆனால் நடந்து முடிந்த தேர்தலிலே நான் கண்டது, நான் சொன்னது பெருமளவிற்கு உண்மை என்பது தெளிவாயிற்று. தேர்தலில் வெற்றி எப்படிப் பெற்றார்கள், யார் பெற்றார்கள் என்பதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. அந்தச் சலிப்பு, பொதுவாக ஆளும் வர்க்கத்தினர் மீது ஏற்பட்டிருக்கக்கூடிய சலிப்பு, கோபம் என்பதை எல்லா வகைகளிலும் இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றன. இந்த அவையில் கூட பல நண்பர்கள் பேசினார்கள். முதலமைச்சரவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே பல இடங்களில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலில் இந்த அறிக்கையே நீண்ட அறிக்கையென்று நினைக்கிறேன். எந்தச் சட்டமன்ற சரித்திரத்திலேயும் இதைவிட பெரிய நிதிநிலை அறிக்கையை யாரும் அளித்திருக்க முடியாது என்று கருதுகிறேன். அவ்வளவு தெளிவாக விளக்குவதற்குப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சின்னஞ்சிறு காரியங்களைக் கூட ஒதுக்கி விடாமல், இதை இந்த மன்றத்தில் சமர்ப்பித்ததன் வாயிலாக தமிழக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற கருத்தோடு சிரமம் எடுத்துக்கொண்டு, நீண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்.

(5-10 பிற்பகல்)

இந்த அறிக்கையிலே ஒன்றை அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே அனைத்திந்திய அளவில் இன்று பெரியதொரு பொருளாதார நெருக்கடி குமுறிக்கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய தலைப்பிலும் சரி, வேலையில்லாதோர் பிரச்சினையிலும் சரி, எல்லா இடங்களிலும் அந்தப் பொருளாதார நெருக்கடியைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்த அவையிலே பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்களும் அந்த நெருக்கடி இருப்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தேசத்திலே ஒரு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எப்படி இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற ஆராய்ச்சியை நாம் செய்ய வேண்டாம், அது யாருடைய நலனுக்காக இருந்தாலும் சரி. தேசம் இன்று பெரிய நெருக்கடியை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. வந்து

கொண்டிருக்கிற 5, 6 திங்களில் இந்த நிலைமை எப்படி உருவாகுமென்று நம்மால் சொல்ல முடியாது. எப்படிப்பட்ட பொருளாதார நிபுணர்களாலும் சொல்ல முடியவில்லை. நான் இரண்டு மாறுபட்ட கருத்துடைய பொருளாதார நிபுணர்களோடு பேசினேன். யாரும் திட்டவட்டமாக இந்த நெருக்கடியைச் சமாளிக்க வழி கூறவில்லை. அது தேசத்தைப் பொறுத்தது என்று கூறுகி றார்கள். இந்த தேசம் யுத்த கால நிலைமையை கருத்தில் கொண்டு செயல் பட்டாலொழிய, இந்த நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. இதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொள்கின்றன. வேண்டுமென்றால் இந்த நெருக்கடி நிலைமைக்கு யார் காரணமென்ற பரிசீலனையில் மாறுபடலாமே ஒழிய, இந்த நெருக்கடி இருக்கிறதென்பதை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழி என்ன? இன்றைக்கு தேசம் என்றைக்கும் இல்லாத அளவுக்கு ஒன்றுபட்ட ஒரு தேசியக் கட்டுப்பாட்டை தானே ஏற்படுத்திக்கொண்டாலொழிய, அதாவது சோஷியல் டிஸிப்ளின், ஒரு சமூகக் கட்டுப்பாட்டை நாம் நம்மீது ஏற்படுத்திக்கொண்டாலொழிய, இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியாது. இன்றையதினம் ஒரு பெரிய தொழில் நிபுணர்—அவர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கூட—ஒரு கருத்தைச் சொல்கிறார். மத்திய அரசு தன்னுடைய பொருளாதாரக் கொள்கைகளை மாற்றிக்கொள்வதற்காக நாம் வேலை நிறுத்தங்கள், தொழில் முடக்கங்கள் போன்ற கிளர்ச்சிகளைச் செய்வதற்குக்கூடத் தயங்கக்கூடாது என்று ஒரு தொழிலதிபர் சொல்கிறார். அவருடைய பெயர் திரு. பிரென் ஷா என்பது. அதைப் போல மற்ற தரப்பிலுள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இங்கே கூட முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய கருத்தைச் சொல்லும்போது அரசு இந்தப் பொருளாதாரக் கொள்கையிலிருந்து பின்னேற வேண்டுமென்று சொன்னார்கள். அரசு எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வது, எல்லாவற்றையும் 'நேஷனலைசேஷன்'—நாட்டுடைமையாக்குவது வேண்டாம்; அரசு தொழில்களை மேற்கொள்ள வேண்டாம் என்று சொல்லப்பட்டது. நான் சென்ற முறை பேசியதற்குப் பிறகு ஒரு செய்தியைப் படித்தேன். அரசு, நாட்டுடைமை ஆக்கியதற்குப் பிறகுதான் தொழில்களிலே சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், அரசு ஏற்றுக்கொண்ட தொழில்களின் கணக்கு நஷ்டக் கணக்கு என்றும் சொல்லப்பட்டது. 1974 ஆம் ஆண்டு, பிப்ரவரி 13-ம் தேதி, எகனாமிக்ஸ் டைம்ஸ் பத்திரிகையில், ஒரு ஆய்வு நடத்தி, ஒரு விவரம் வெளியிட்டிருந்தார்கள். 1971-72-லிருந்து 1972-73 வரை தனியார் துறையில் லாபம் குறைந்து வந்திருக்கிறது என்று புள்ளி விவரம் அதில் கொடுக்கப்பட்டிருக் கிறது. 201 பெரும் தொழில் நிறுவனங்களது வருவாய் மீது ஆய்வு நடத்திப்



பார்த்ததில், 1970-71 ஆம் ஆண்டு 11.4 சதவிகிதமாகவும்; 1971-72 ஆம் ஆண்டு 11.1 சதவிகிதமாகவும்; 1972-73 ஆம் ஆண்டு 10.5 சதவிகிதமாகவும் லாபம் குறைந்தது. ஆக தனியார் துறையைக் கட்டுப்படுத்துவதால், தேசத்தில் நெருக்கடி ஏற்பட்டு வருகிறதென்பது முற்றிலும் சரியான வாதமல்ல. ஆனால் அதே நேரத்தில் பொதுத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட் டிருக்கிறது. சர்க்கார் 'அண்டர்டேக்கிங்ஸ்'-ல், அரசு மேற்கொண்ட நிறு வனங்களில் 1972-73-ல் 9 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. 1971-72-ல் 14.4 கோடி ரூபாய் நஷ்டம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு தலைவரவர்களே, மூலதனம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** பத்திரிகையில் மூலதனம் பற்றிய விவரத்தைக் குறிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலதனம் 5,000 கோடி ரூபா யாகும்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தனியார் துறை மூலதனமும் தரப்படவில்லை.
அதுவும் இதற்குக் குறைவில்லாத மூலதனமாக இருக்கிறது. நான் எகனாமிக்
டைம்ஸ்-ல் வந்ததைச் சொல்கிறேன். இந்த விவரங்களைச் சேகரிக்க எனக்கு
வாய்ப்புமில்லை; நிறுவனமும் இல்லை. எக்கனாமிக்ஸ் டைம்ஸ் எல்லோரும்
படிக்கக்கூடிய பத்திரிகை. இது பிப்ரவரி 13-ம் தேதி பத்திரிகையில் வந்திருக்
கிறது. 1972-73 ஆம் ஆண்டில் 70 சதவிகிதம் கம்பெனிகள் ஒரு கோடி ரூபாய்
லாபம் அடைந்திருக்கின்றன. பல கம்பெனிகளுடைய நஷ்டம் கணிசமாகக்
குறைந்திருக்கிறது. 1971-72 ஆம் ஆண்டு 119 கோடி ரூபாய் பப்ளிக் செக்டார்
கம்பெனிகளில் நஷ்டம் இருந்தது. அது 1972-73 ஆம் ஆண்டில் 81 கோடி
ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ஆக நம்முடைய பொதுத் துறையில் லாபம்
கிடைத்திருக்கிறது. அதைப்போல அந்நிய நாட்டுக் கம்பெனிகளிலும் கணிச
மான லாபம் கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட கம்பெனிகள் நம்முடைய
ஊரில்கூட இருக்கின்றன, ஆனால் தனியார் துறையில் தான் நஷ்ட சதவிகிதம்
அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது.

THIRU C. V. RAJAGOPAL: Mr. Chairman, is it for our State or for India?

திரு. எம். ஆறுமுகசாமி: தேசத்திற்குத்தான். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், பொதுத் துறையில்தான் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லுவது அல்லது பொதுத் துறையை நீக்கி விட்டால் எல்லா விதமான ....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கொள்கை அளவில் பொதுத் துறைதான் வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வாதிடும்போது, தனியார் துறை நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கிறதென்ற கணக்கை விரிவுபடுத்திக் கொண்டு போனால், பிறகு தொழிலாளர்கள் டிமாண்ட் வைக்கிற நேரத்தில், இந்தக் கணக்கை அவர்கள் காட்ட ஆரம்பித்து விடுவார்கள். ஆகையால் கொஞ்சம் எச்சரிக்கையாக, இந்தக் கருத்துக்களைச் சொல்வது நல்லதென்று கருதுகிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: தனியார் துறைக்கு நஷ்டம் வர என்ன காரணமென்று ஆராய்ந்தால், அது எங்கெங்கோ போகும். அதனால், அதைச் சொல்ல வரவில்லை. அதில் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. நான் அங்கே போகவில்லை. ஒரு எடுத்துக்காட்டாகத்தான் சொல்கிறேன். பொதுத் துறை காரணமாக, தொழில்கள் தேசிய உடமையாக்கப்பட்டதன் காரணமாகத் தான் தேசத்தில் பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறது, நெருக்கடி ஏற்படுகிறது என்பது முற்றிலும் ஒத்துக்கொள்ளக்கூடிய வாதமல்ல என்பதற்காகத்தான். தேசத்தில் இன்றையதினம் என்றைக்கும் இல்லாத கட்டுப்பாடு, என்றைக்கும் இல்லாத ஒழுங்கு, என்றைக்கும் இல்லாத தேசீய உணர்வு, தேவைப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, I have also read that article which the hon. Member has referred to. But the point is that the Corporation Tax has risen from Rs. 608 crores to Rs. 627 crores and Rs. 661 crores and that fact indicates that the profits of Corporations must have increased. Otherwise, the tax revenue would have gone down for the Government of India. If a few industrial concerns have lost a certain amount of money, it may be due to large tax transfers to the Government of India also.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, பல கம்பெனிகள் உண்மையாகவே வரி செலுத்தியிருந்தால் இன்னும் கூடுதலாக நஷ்டம் காண்பித்திருக்கலாம். அந்த இடத்திற்குப் போகவில்லை. நான் எடுத்துக்காட்டாக எகனாமிக் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருந்ததை, ஒரு பிரைவேட் செக்டார் ஆடி

வெளியிட்டிருந்ததைச் சொன்னேன். சென்ற முறை இங்கே சில நண்பர்கள் எதிரான கருத்துக்களைச் சொன்னதன் காரணமாகக் கூறுகிறேன். தேசத்தில் இப்படிப்பட்ட நெருக்கடி இருப்பதால், ஒரு டிஸிப்ளின் தேவைப்படுகிறது. முதலமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வதைப்பற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்றால், அவர்கள் மிகவும் அடித்தட்டில் இருக்கிறவர்கள். இந்த தேசத்தில் யார் கிளர்ச்சி செய்தாலும் நியாயம்தான். 40 சதமானம் மக்கள் 'பாவர்ட்டி லைன்'-க்குக் கீழே இருப்பதனால், யார் வேலை நிறுத்தம் செய்தாலும் சரியானதே. ஆனால் யாருக்கு அவசர" அவசியம் என்று பார்க்க வேண்டும். 1,500 ரூபாய் வாங்குபவர்கள் வேலை நிறுத்தம் செய்தால், 50 ரூபாய் வாங்குபவர்கள் தாங்கள் போராட்டம் செய்வது நியாயமென்று கருதமாட்டார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்யக்கூடாதென்று சொல்லவில்லை. நான் சொன்னது, தனியார் துறையிலே தான் நஷ்டம் வருகிறதென்பதை, உங்களுடைய வாதமாக, ஆதாரமாகக் கொண்டு அதை விரித்துக்கொண்டு போனால், பிறகு தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைக்கிற நேரத்தில், தனியார் துறையில் நஷ்டம் வருகிறதென்று திரு. ஆறுமுகசாமி சொல்லியிருக்கிறார், நீங்கள் அதிக ஊதியம் கேட்கிறீர்களே என்று தனியார் துறை தப்பித்துக்கொள்ள வழி ஏற்படும். ஆகவே இதை அதிக நேரம் நீட்டிக்க வேண்டாமென்றுதான் சொன்னேன்.

(5–20 பிற்பகல்)

**திரு. எம். ஆறுமுகசாமி:** தனியார் துறையிலே நஷ்டம் வந்தால்கூட, சோஷல் ஜஸ்டிஸ் சமூக நியாயம் ஒன்று இருக்கிறதே. நஷ்டம் வருகிறது என்றால், சில தொழிலை மூடி விடலாமே ஒழிய அதற்காக தொழிலாளர்களைப் பட்டினி கிடந்து வேலை செய்யச் சொல்ல முடியாது. இந்த நியாயத்தை அவர்கள் இதற்கு எடுத்துக்கொள்ள முடியாது. நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், இன்றையதினம் மேல்தட்டில் இருப்பவர்கள் கூட சில தியாகங்களைச் செய்ய முன் வரவேண்டும். தொழிலாளர்களை மட்டும் தியாகம் செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போகக்கூடாது. தொழிலாளர்கள் இன்றைய நிலையில் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்று சொல்வது நியாயம். அத்யாவசியமான காரியங்களுக்கு வேலைநிறுத்தம் வரக்கூடாதுதான். என்னைப் பொறுத்த வரையில் தெளிவாகச் சொல்கிறேன். இதை வைத்துக்கொண்டு வெளியில் பிரசாரம் செய்யப்படுமேயானால் நான் கவலைப்படவில்லை. தொழிற் சங்க மேடையிலும் இதைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். வரும் 10 ஆண்டு

களுக்கு கண்ட கண்ட காரியங்களுக்கு, தும்முவது, இருமுவது போன்றவற்றிற்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்வது கூடாது. நேற்று ரயில்வே தொழிலாளர்கள் சிலர் வேலை நிறுத்தம் செய்தார்கள். எல்லா ரயில்களும் ரத்து செய்யப்பட்டன. நானும் அப்போது பிரயாணியாக இருந்து கஷ்டப்பட்டேன். எனக்கு கஷ்டம் ஏற்பட்டதால், அதைச் சொல்லவில்லை. சிறிய காரியத்திற்கு வேலைநிறுத்தம் செய்வது சமுதாயத்துக்கு எவ்வளவு பெரிய இடைஞ்சல்களை ஏற்படுத்துகிறது என்பதை நாம் நேராகப் பார்த்தால்தான் புரிகிறது. வெளியில் இருந்தால் நமக்குப் புரியாது. அவர்களுக்கு இருக்கின்ற கோரிக்கை மிகச் சாதாரண கோரிக்கை. அந்தக் கோரிக்கையை இலகுவாகத் தீர்த்துக்கொள்ளலாம். அதற்காக பெரிய போக்குவரத்து ஸ்தம்பிப்பை ஏற்படுத்துவதை நான் ஏற்றுக்கொள்ள இயலாது. லோகோமென் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். இங்கே இருக்கக்கூடிய ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட அதற்கு ஆதரவு காட்டுகிறார்கள் என்றால், அந்த வேலைநிறுத்தம் நமது அரசாங்கம் சம்பந்தப்பட்டதல்ல.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரோ ஆதரவு கொடுத்ததாகச் சொன்னார்கள். ஒருவேளை தொழிற் சங்கத்திலே இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அரசிற்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தத்தையும் யாரும் கூற முடியாது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, அமைச்சர் கூறிய விளக்கத்திற்கு நன்றி. அரசு என்று நான் சொல்லவில்லை. நானும் எச்சரிக்கையாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றுதான் சொன்னேன். அந்தப் பொருளில்தான் சொன்னேன். மொத்தமாக அரசைக் குற்றம் சாட்டவில்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மத்திய அரசு சம்பந்தமானதில் தானே அது நடக்கிறது, நடக்கட்டும் என்று நினைக்க, மத்திய அரசில் இருப்பவர்கள் மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனத்தில் நடந்தால், மாநில அரசில் தானே கிளர்ச்சி நடக்கிறது, நடக்கட்டும் என்று அவர்கள் நினைக்க, பொதுத் துறையில் வேலை நிறுத்தம் நடந்தால் பரவாயில்லை என்று தொழில் அதிபர் நமது பெரியவர் அவர்கள் நினைக்க, தனியார் துறையில் நடந்தால், அங்கே நடப்பது நல்லதுதானே என்று அரசில் இருக்கிறவர்கள் நினைக்க, இப்படிப் போனால் தேசம் என்ன கதியாகும் என்று நான் கேட்கின்றேன்.

எனவே இந்த விஷயத்தில் ஒரு டிசிப்ளின் வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதில் ஒரு கட்டுப்பாடு, ஒழுங்கு வேண்டும். அண்மையில் நடைபெற்ற பஞ்சாலை வேலை நிறுத்தத்தின்போது நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள்—அவர் இங்கேயிருக்கிறார்—எடுத்துக்கொண்ட



முயற்சியை நான் பாராட்டுகிறேன். வேலை நிறுத்தம் ஒரு மாதத்திற்கு மேல் நடந்தது. நான் பத்திரிகையில்தான் படித்தேன். நான் அதில் பங்கெடுத்துக் கொண்டவன் அல்ல. நான் இப்போது தொழிற் சங்கத்தில் எந்த நிர்வாகப் பொறுப்பிலும் இல்லாதவன், எந்தத் தொடர்பும் இல்லாதவன். இருப்பினும் அவற்றைக் கோர்வையாக நான் கவனித்துக்கொண்டு வந்தேன். உடல் நலமற்ற நிலையில் வீட்டிலிருந்து பத்திரிகைகளில் அதைப்பற்றிய செய்திகளைப் படித்தபோது, மெய்யாக எனக்குத் திருப்தி ஏற்பட்டது. அத்தகைய அக்கறை வேண்டும். எப்படியாவது உற்பத்தியில் சேதம் ஏற்படாமலிருக்க வேண்டும் என்ற நோக்கம் வரவேண்டும். அந்த நோக்கத்திற்கு, என்னைப் பொறுத்த வரையில் உறுதியாக நம்புகிறேன், தொழிலாளர்கள் தரப்பிலிருந்து நிச்சயமாக ஆதரவு கொடுப்பார்கள். ஆனால் அந்த மாதிரி ஆதரவு எல்லாத் தரப்பிலிருந்தும் வரவேண்டியிருக்கிறது.

எனவே இன்றைய தினம் இந்த நெருக்கடியைச் சமாளிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், சில கஷ்டங்களை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். ஓராண்டு, ஈராண்டில் இந்தக் கஷ்டங்கள் நீங்கிவிடும் என்ற மாயையை நாம் உண்டாக்குவது அவ்வளவு நல்லதல்ல. நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், மாநில அரசு இந்த நேரத்தில் இருக்கக்கூடிய துன்பங்களுக்கு, மாநிலத்தில் இருக்கக்கூடிய துன்பங்களுக்கு மத்திய அரசு தான் காரணம் என்று சொல்லிவிட்டுப் போய்விடுவது, அதற்கு உகந்த வழியல்ல; நல்ல செய்கையல்ல. அதற்குப் பதிலாக மத்திய அரசுக்கு உதவும்படியாக சில காரியங்களைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஒரு கிராமத்தில் 'டீகோ கார்சியா' தீவைப் பற்றிப் பேசினால் இந்தியாவுக்கு என்ன லாபம், யாரோ எக்ஸ்பெர்ட்ஸ் பேசிக் கொண்டிருக்க வேண்டிய விஷயம் என்று சொன்னார்கள். எக்ஸ்பெர்ட்ஸுக்குத் தான் அதைப்பற்றி உண்மை தெரியும். அதைப்பற்றிய உண்மை மற்றவர்களுக்கு அதிகமாகத் தெரியாது. இருப்பினும் தேசத்திற்கு என்ன ஆபத்து என்று முன்கூட்டியே தேச மக்களுக்குச் சொல்லி வைக்கப்பட வேண்டும். அந்த ஆபத்து தெரிந்தாலொழிய, தேச மக்களை நாம் இந்த தேசத்தின் உற்பத்தியைப் பெருக்கவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யவும் தயாரிக்க முடியாது. இன்றைய தினம் பாதுகாப்பு நடவடிக்கைகள் நம்முடைய தேச வருவாயில் கணிசமான தொகையை எடுத்துக் கொண்டிருக்கின்றன. நம்முடைய கடற்படை வலிவாக இருந்திராவிட்டால், நிச்சயமாக பாகிஸ்தானை யுத்தத்தில் வென்றிருக்க முடியாது என்று பாகிஸ்தான் கடற்படை தளபதியே கூறுகிறார். எனவே நமது கடற்படையை நாம் புதுப்பித்திருக்கிறோம் என்றுகிறது.

அதேபோல் நமக்கு 800 கிலோ மீட்டர் அருகில் இருக்கின்ற 'டீகோ கார்சியா' தீவிலே, 6,000 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்ற அமெரிக்கா, 300 லட்சம் டாலர் செலவு செய்து தன்னுடைய ராணுவ தளத்தை அமைத்தால், அது என்னவோ செய்துவிட்டுப் போகிறது என்று இந்திய மக்கள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது என்ன நியாயம்? இந்துமகாக் கடலில் இருக்கின்ற சிறிய தீவில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று சொல்லியிருந்தாலொழிய மக்களைத் தயாரிப்பது கஷ்டம். நிச்சயமாகச் சொல்லுகின்றேன்—நான் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி என்கின்ற கட்சிக் கண்ணோட்டத்தில் சொல்லவில்லை, முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனதிலே நன்றாகப் புரியும் என்று நினைக்கின்றேன்—இன்றைக்கு இருக்கக்கூடிய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டுமென்றால், இந்த உண்மைகள் இந்திய மக்களுக்குச் சொல்லப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஆபத்துக்கள் இருக்கின்றன; இப்படிப்பட்ட ஆபத்தான நிலையில் இன்றையதினம் அங்கே ராணுவ தளம் அமைப்பதை நமக்கு எதிர்க் கருத்துக் கொண்டிருக்கின்ற, எதிராக இருக்கின்ற பாகிஸ்தானும், சீனாவும் ஆதரிக்கின்றன என்ற அச்சத்தை நாம் நமது மக்களுக்குச் சொல்லி வைக்க வேண்டும். அப்படிச் சொல்லி வைக்கவில்லையென்றால், தேசிய உணர்வு அவர்களுக்கு உண்டாக்கப்படவில்லையென்றால், அந்த மக்களை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாகத் திருப்ப இயலாது போய்விடும். எனவே இந்த உண்மையை இந்த அரசு. . . .

THIRU A. R. DAMODARAN : Sir, my contention on the point was not about the reported mobilisation of an American base in Diego Garcia. We are all agreed that we should not allow any base to be put up. My only point is that in a village in Uttar Pradesh where an election is going on, it had no importance whatsoever. Secondly, did we take the same attitude when China occupied a base in South Vietnam in a place which was very much nearer to India?

**திரு. எம். ஆறுமுகசாமி :** அதையும் கூட நாம் கண்டிக்க வேண்டும். நாம் கண்டித்ததாகக் கருதுகிறேன். நமது எக்ஸ்டர்னல் அஃபேர்ஸ் அமைச்சர் அவர்கள் பேசியதை நான் டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டபோது, அதை அவர் மென்ஷன் செய்தது நினைவில் இருக்கிறது. மவ்லங்கர் ஆடிடோரியத்தில் பேசுகின்றபோது, மூன்று திங்களுக்கு முன் நானே கேட்டது நினைவுக்கு வருகிறது. உத்தரப் பிரதேசத்தில் உள்ள கிராமம் இந்தியாவில் இருக்கின்ற பகுதி. இந்தியாவில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்குச் சொல்லித்தான் ஆகவேண்டும்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சொல்லவேண்டிய முக்கியமான பிரச்சினையை உத்தரப் பிரதேசத்தில் உள்ள கிராமத்தில் சொல்லாமல், டில்லியில் சொல்லியிருக்கலாம் என்பதுதான் அவர் கூறியது. உத்தரப் பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் பேசிய பொதுக்கூட்டத்தில் போய் அதைச் சொல்வானேன்? டில்லியில் சொல்லியிருக்கலாம். திருபார்லிமெண்டத்தில் சொல்லியிருக்கலாம். இப்படி வேறு பலவகை இருக்கின்றபோது, தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சொல்வானேன் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் கேட்டார்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, அங்கத்தினர் கூறியதையும் நான் புரிந்துகொண்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதையும் நான் புரிந்துகொண்டேன். உத்தரப்பிரதேசத்தில் ஆனாலும், எங்கானாலும் சொல்லியாக வேண்டும் என்று நான் சொல்கிறேன். (ஒரு குரல் ஓட்டுக்காகவா?) அங்கே போகவில்லையானால், நான் வேறு இடத்திற்கு போக வேண்டி வரும். வேறு மாதிரிப் பேச நேரிட்டுவிடும். ஓட்டு அல்ல இங்கே பேச்சு. அந்தக் கருத்தில் பேசக்கூடாது. நான் அதை இங்கே இழுக்கவில்லை. நீங்கள் வாதத்தை அவ்வளவு கீழே கொண்டு போகாதீர்கள். தேச மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காக அங்கும் சொல்லப்பட வேண்டும் என்று சொல்கிறேன். உத்தரப் பிரதேசம் இந்தத் தேசத்தின் ஒரு பகுதி இல்லையா? உத்தரப் பிரதேச மக்களுக்குச் சொன்னால் என்ன? தேர்தல் காலம் என்றால் பேசவே கூடாதா?

**திரு. ம. பொ. சிவஞானம் :** மற்றவர்கள் கேட்டதன் ஆழப் பொருளைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உத்தரப் பிரதேசத்தில் ஜனநாயக ரீதியில் ஆளுங் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் போர்க்களமாக நடக்கிறது. அங்கே போய் யுத்த சம்பந்தமான, சர்வ தேச சம்பந்தமான பிரச்சினையை வைத்து, மக்களுடைய ஆதரவைப் பெறப் பார்ப்பது, மற்றவர்கள் எல்லாம் அதற்கு விரோதமாக இருக்கிறார்கள் என்றோ, எதிராக இருக்கிறார்கள் என்றோ சாதாரண பாமர மக்கள் தவறாக எண்ண, நாட்டைக் காப்பது ஆளுங்கட்சி ஒன்றுக்குத்தான் ஏகபோகம் போல எண்ண இடம் ஏற்படும்; அதைச் சொல்லி மயக்கினார்கள் என்பதுதான் இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட விஷயம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டும் மக்களை மயக்குவதில் குறைவானவர்கள் அல்ல. அவர்களும் இதே பிரச்சினையில் மக்களை மயக்க பல்வேறு விதத்தில் பேசினார்கள். அந்தத் தாப்பில் நடைபெற்ற பிரசாரத்தை இங்கே சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

எல்லோரும் தேர்தல் என்றால், பிரசாரம் செய்கிறார்கள். நான் அந்தக் கருத்தில் சொல்லவில்லை, தேச மக்களிடத்தில் இவையெல்லாம் பற்றிச் சொல்வது குற்றமில்லை. அதைத் தேர்தல் காலத்தில் சொன்னாலும் சரிதான், தேர்தலுக்குப் பின்னால் சொன்னாலும் சரிதான். தேர்தல் காலத்தில் கூட தேசத்தில் பொறுப்பில் இருப்பவர்கள் பேசுகிறபோது, நிச்சயமாக தேச மட்டத்தில் இருக்கின்ற கருத்துக்களைச் சொல்லியாக வேண்டும். மாநில அளவில் உள்ள தலைவர்களாக, பொறுப்பில் இருப்பவர்களாக இருந்தால், அந்த அளவில் மட்டும் பேசலாம். அகில இந்திய மட்டத்தில் இருக்கின்ற சில தலைவர்கள், அவர்கள் விரும்பிப் பேசாவிட்டாலும், பேசும்படியான அவசியம் பழக்கத்தின் காரணமாகவும், அவர்கள் வகிக்கும் பதவிப் பொறுப்பின் காரணமாகவும் வந்துவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

எனவே இந்த மாதிரி நோக்கில் தேசத்தில் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றபோது, மாநில அரசு தொட்டதற்கெல்லாம் மத்திய அரசு எங்களுக்கு அதைத் தரவில்லை, இதைத் தரவில்லை, ஆகவேதான் கேட்கின்றோம் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதைக் குறைக்க வேண்டும்.

(5–30 பிற்பகல்)

நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆளுங்கட்சித் தரப்பிலே உள்ளவர்கள் மாநில சுயாட்சி பற்றிய போராட்டத்தைப்பற்றிய கிளர்ச்சிகளைக்கூட, கொஞ்ச காலத்திற்கு இந்த நெருக்கடி தீருகிற வரையில், ஒத்திப் போடலாம். அதைப் பேச்சளவில் வைத்துக்கொண்டு, அதைத் தீவிரப்படுத்த வேண்டாம், அதை ஒத்திக்கூட போடலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** முன்பு அவர்கள் சொன்னது சரிதான். இந்த மாதிரிப் பிரச்சினையையெல்லாம் தள்ளிப் போடுவதற்கு இதற்கு அளவுக்கு மேல் முக்கியத்துவம் தருகிறார்கள் என்றுதான் சொல்லப்பட்டது.

**திரு. எம். ஆறுமுகசாமி:** நம் மாநிலத்திலே மாநில சுயாட்சி கேட்கிறோம் என்பது அல்ல. எல்லா மாநிலங்களிலும் மாநிலப் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. குஜராத்திலே அந்த மாநிலத்தினுடைய தேவையைவிட 12,000 டன்தான் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். ஆனால் அது அந்த மாநிலத்தில் எவ்வளவு பெரிய கலகத்தைக் கொண்டுவந்து நிறுத்தி விட்டது. அங்கே ஜனநாயகம் இன்றைக்கு ஊசலாடிக் கொண்டிருக்கிறது, இன்றைக்கு சாவதா, நாளைக்குச் சாவதா என்ற முறையிலே இருக்கிறது. இதெல்லாம், டிசிப்ளின் இல்லாததால், கட்டுப்பாட்டு உணர்வு இல்லாததால் வருகிற கோளாறு. சிவசேனா பற்றிச் சொன்னார்கள். அதனுடைய தலைவர் திருவாளர்





பால் தாக்கரே அவர்கள் சொல்லியதாக பத்திரிகையிலே இன்றையதினம் செய்தி படித்தேன். யார் பம்பாய்க்கு வந்தாலும் அவர்களை அந்த கேட்டிலேயே நிறுத்திவிடுவேன் என்று கேரளத்தின் தொண்டர் படைத் தலைவருக்கு ரிஜாயிண்டர் கொடுக்கிறபோது பேசியிருக்கிறார். இப்படிப் பேசுகிற அந்த பால் தாக்கரேயை இண்டர்னல் செக்யூரிடி ஆக்ட்டின்படி கைது செய்தால் என்ன? (குறுக்கீடு). செய்யலாம் என்று சொல்கிறேன். இது என்னுடைய கருத்து. அதிலே ஒன்றும் தவறு இல்லை. ஏனென்றால் தேசத்திலே மக்களிடத்திலே, மாநிலங்களுக்கு இடையிலே இருக்கிற மக்களிடத்திலே மோதலை உண்டாக்குவது இன்றைக்கு நல்லதல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய நெருக்கடியான நோக்கில், இதுமாதிரி சிவசேனை போன்ற ஸ்தாபனங்களைத் தடை செய்யலாம். அந்த ஸ்தாபனத்திலே உள்ளவர்களைக் கைது செய்யலாம். அதிலே தவறு கிடையாது. அதுபோன்ற உணர்வுகளை எழுப்பக் கூடாது என்பதற்காக இதைச் சொல்கிறேன். சிவசேனை போன்றவற்றை இதுமாதிரிச் செய்யவேண்டும். அதே நோக்கிலே நாமும் நம்மைப் பக்குவப் படுத்திக் கொண்டு அந்த உணர்வு தென்படாத அளவிலே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அறிவழகன்:** பால் தாக்கரே இந்திரா காங்கிரசை சமீப தேர்தலிலே ஆதரித்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** அதிகார பூர்வமாக ஆதரிக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆதரித்தார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது உலகமறிந்த ரகசியம். அதை இந்தச் சட்ட சபையிலே மறைப்பதாலே என்ன வந்துவிடும்? தவறை ஏற்றுக்கொண்டு, அந்தத் தவறு ஏற்படாது இனிமேல் என்று சொல்வதுதான் சரியே ஒழிய, அந்தத் தவறு ஏற்படக் கூடாது என்று அந்தக் கட்சிக்கு எச்சரிப்பதுதான் நல்லதே தவிர, என் கட்சியிலே எது நடந்தாலும், அது நியாயம் என்று பேசுவதாக நான் இருந்தால், நிச்சயமாக அந்தக் கட்சியை அழிக்க நானே குழி தோண்டுகிறேன் என்றுதான் பொருள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** பால் தாக்கரே ஒரு வேண்டாத உணர்வை கிளப்பிவிடுகிறார், அதற்காக அரஸ்ட் செய்யலாம் என்றார். அதுபோன்ற உணர்வை நாமும் தூண்டாமல் இருக்கலாம் என்று சொல்கிறார். நாம் எந்த மாநிலக்காரர்களை இங்கே வரக்கூடாது என்றோம்? அந்த உணர்ச்சிக்கு நாம் எங்கே [illegible] இருந்தோம்? எனவே அப்படிச் சொல்வதென்றால், எந்த அர்த்தத்திலே சொல்கிறார்?

**திரு. எம். ஆறுமுகசாமி :** மத்தியோடு மோதுவது போன்ற உணர்வை உண்டாக்குவது இருக்கிறதே, அதுவே இந்த மாநிலம் மத்திக்கு எதிராகவும், மற்ற மாநிலங்களுக்கு எதிராகவும் இருப்பது போன்ற உணர்வை மற்ற மாநில மக்களிடையே உண்டாக்குகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பால் தாக்கரே மத்திய சர்க்காரைத் தாக்கவில்லையே. இந்தப் பக்கத்திலேயிருந்து போகிற மக்களை அல்லவா தாக்குகிறார்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** அதுதான் தவறு. நான் அங்கேதான் சொல்ல வந்தேன். இறுதியில் அதுவும் அங்கேதான் கொண்டுபோய் விடும். இதனால் மத்தியின்மீது (குறுக்கீடு) எதிர்ப்பு உணர்ச்சி வளரும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது வரத்தான் செய்யும். அது வந்தால் என்ன பண்ணுவது? வந்தால் இப்படியா தாக்குவது? உணர்வு என்பது என்ன? அவர்களுக்கே சொந்தமா? மற்றவர்களுக்கு வரக் கூடாதா? அவர்களுக்கு அந்த உணர்வு வரும்போது அவர்களைப் பிடித்து உள்ளே போட்டால் இவர்களையும் பிடித்து உள்ளே போடலாம். It is common property.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது. உங்களுக்கு இருக்கிறது, எனக்கு இருக்கிறது. இங்கே நாமும் கூடத்தான் மலையாளிகளைப் பற்றிப் பேசுகிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் எல்லோருக்கும் அறிவுரை கூறிக்கொண்டு வருகிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். அநேகமாக இந்த மாமன்றத்தில் அவர்களுடைய பேச்சுக்கள் அனைத்தும் இதே பாணியில்தான் அமைகின்றன. அதையும் நான் வரவேற்கின்றேன். எந்தக் கட்சியானாலும் தொந்தரவு கொடுக்கக் கூடாது, நாட்டுக்கு, ஒருமித்த தேசிய உணர்வோடு நாட்டை முன்னேற்றுவதற்குப் பாடுபட வேண்டுமென்று சொன்னார்கள். சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். சிறிய விஷயந்தான். நமது தொழிலாளர் நல அமைச்சரைக்கூட அவர்கள் பாராட்டினார்கள். கோயம் புத்தூரிலே நடைபெற்ற தொழிலாளர்களுடைய கிளர்ச்சிபற்றிச் சொன் னார்கள். ஆனால் தொழிலாளர்கள் கிளர்ச்சிகளுக்குத் தலைமை ஏற்று நடத்திய தற்கு முழுப் பொறுப்பேற்று நடத்தியவர்கள் நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் மறந்திருக்க முடியாது. தேர்தலுக்கு 10, 15 நாட்களுக்கு முன்பே, முடிந்துவிட்ட





விவகாரம். ஆனால் போராட்டத்தை நிறுத்தாமல் தொடர்ந்து நீடித்துக் கொண்டே வந்தார்கள். பல பகல்கள், பல இரவுகள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கண்விழித்து, அவர்களோடு உரையாடி ஒரு முடிவுக்கு வந்தும்கூட, அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், தேர்தல் முடிகிற வரையிலே காத் திருந்து, 10 நாட்களுக்கு முன்பு முடிக்கப்பட்ட அதே விஷயங்களை தேர்தல் முடிந்த பிறகுதான் ஏற்றுக்கொண்டார்கள் என்றால், இந்தக் கிளர்ச்சி தேர்தலை முன்னிட்டு நடைபெற்றதா இல்லையா? அந்த நேரத்தில் நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் இங்கே இவ்வளவு பேசியதை பத்திரிகையில் ஒரு அறிக்கை மூலம் வெளிப்படுத்தி தம்முடைய கட்சியை அவர்கள் கண்டித் திருக்கக் கூடாதா?

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, அவர்களைக் கேட்டால் இது முற்றிலுமாக முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அதிலே மேலும் சில தகராறுகள் தீர்க்கப்படாமல் இருந்தன. அதனால், அந்த வேலை நிறுத்தம் தொடர்ந்ததாக அவர்கள் தரப்பிலே சொல்கிறார்கள். அவர்கள் சொல்கிற காரணம் எல்லாம் ஏதோ மற்றொரு பெரிய மில்லிலே, இன்னும் வேறு சில மில்களிலே உடன்பாடு ஏற்கப்படவில்லை. ஒட்டுமொத்தமாக இருந்தபோது தொடங்கப்பட்ட வேலை நிறுத்தம் அது. அதிலே பகுதி மில்கள் ஏற்றவுடன், அந்தப் பகுதி மில்களிலே திரும்பிச் செல்லக்கூடாது என்பதற்காக அது தொடர்ந்து நீடித்தது என்று சொல்கிறார்கள். இன்னும் இரண்டொரு காரணங்களையும் சொன்னார்கள். இந்த விவரங்களை நான் அவர்களிடம் கேட்டேன். ஏற்கெனவே ஒரு உடன்பாட்டிற்கு வந்ததற்குப் பிறகும் வேலை நிறுத்தம் தொடர்வதற்குக் காரணம் என்ன என்று நான் கேட்டேன். வேலை நிறுத்தம் தொடர்வதற்கான காரணங்கள் இருக்கின்றன. வேலை நிறுத்தம் எந்த நோக்கத்திற்காக, எந்தக் கோரிக்கைக்காகத் தொடங்கப் பட்டதோ, அது முற்றிலும் தீர்க்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித் தார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இந்தக் கோவை பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரையில், தொழிலா ளர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார்களோ, அத்தனை கோரிக்கை களையும் 15-ந் தேதி ஏற்றுக்கொண்டோம். ஆனால் 25-ந் தேதி வரையில் வேலை நிறுத்தம் நீடிக்கப்பட்டது என்ற தகவலை மட்டும் மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** நான் இதுபற்றி மீண்டும் என் நண்பர்களைக் கலந்தாலோசித்து இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். நான் இது பற்றி மேலும் அவர்களைக் கலக்காமல் ஒன்றும் சொல்ல முடியாது. எனவே

நான் அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலை எடுத்துக்கொண்டு, அவர்களிடத்திலே கலந்து பேசி, இந்த மன்றத்தின் கூட்டத்தொடர் முடிவதற்குள்ளாகவே என் கருத்தைத் தெரிவிக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி, அதுவும் படித்தவர்கள் மத்தியில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக ஏதோ ஆண்டுக்கு மூவாயிரம், நான்காயிரம் பேருக்கு வேலை கொடுப்பதைப்பற்றி கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாநிலத்தில் படித்தவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அரசு புள்ளிவிவரப்படியே பார்த்தால், நாடு முழுவதும், 1971 முடிவில் 10.94 லட்சமாக படித்த வேலையில்லாதோர் இருந்தார்கள். ஆனால் 1972-லே அந்த எண்ணிக்கை 14.53 லட்சமாக உயர்ந்திருக்கிறது. தமிழ் நாட்டிலே 3.57 லட்சமாக முதல் ஆண்டின் முடிவில் இருந்து, 1972 ஆம் ஆண்டின் முடிவில் 3.73 லட்சமாகக் கூடியிருக்கிறது. இப்படி படித்த வேலையில்லாதோர் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆனால் நாம் வேலை கொடுத்திருப்பதை எடுத்துக்கொண்டால்கூட, மத்திய அரசினுடைய கிரேஷ் புரோகிராம்-ரூரல் அன்னெம்ப்ளாய்மென்ட் புரோகிராம் என்றெல்லாம், மற்ற திட்டங்களையும் சேர்த்துக் கூட்டினால் கூட இருக்கிற நிலைமையில் அது சமுத்திரத்தில் காயம் கரைத்தாற்போல்தான் இருக்கும். எனவே இந்த நிலைமையை நீடிக்க விடுவது நல்லதல்ல. எனவே இந்த மாநில அரசு தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, படித்த வேலையில்லாதோர் சங்கடத்தைத் தீர்ப்பதற்குப் போதுமான அக்கறை காட்டியிருக்க வேண்டும். ஆனால் அப்படிக் காட்டவில்லை இந்த நிதிநிலை அறிக்கையில் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு நிலைமையில் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், சற்று உபரியாக இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால் இன்றைய தினம் பத்திரிகையிலே படித்தேன். நமக்கு அண்டையிலே இருக்கக்கூடிய நாடு, ஸ்ரீலங்கா, அங்கே உணவு நிலைமை மோசமாக இருக்கிறது. ஸ்ரீலங்காவில் உணவு நிலைமை மோசமாகிவிட்டதென்றால், தஞ்சாவூர் மாவட்ட நெல் கட்டிலே போட்டில் போக ஆரம்பிக்கும். மாண்புமிகு உணவு அமைச்சர், அந்த மாவட்டத்துக்காரர், அவர்களுக்கு விவரங்கள் தெரியும். ஸ்ரீலங்காவிலே இருக்கக்கூடிய உணவு நெருக்கடி, கேரளாவிலே இருக்கக்கூடிய உணவு நெருக்கடி, இதெல்லாம் சேர்ந்து நமது மாநிலத்திலே இருக்கக்கூடிய இந்த உணவு நிலைமையிலே நெருக்கடியை இன்னும் இரண்டு மூன்று மாதங்களில்





ஏற்படுத்தும். லீன் மன்த்ஸ் இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் இருக்கும். இந்த நெருக்கடியோடு அதைத் தொடர்ந்து வான்மழை பொய்த்து சங்கடங்கள் ஏற்பட்டால், உணவு நிலைமை மிகவும் மோசமாகிவிடும். இன்றைய இந்துப் பத்திரிகையில் 'ஆசிரியர்களுக்குக் கடிதம்' என்ற பகுதியில் கடிதம்

(5–40 பிற்பகல்)

ஒன்று வந்திருக்கின்றது. அதிலே மைசூர் இராஜ்யத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதியிருக்கின்றார், " தமிழ் நாட்டிலே 25 சதவிகிதம்தான் தானிய வியாபாரிகளிடமிருந்து 'லெவியாக' தானியத்தை வாங்குகின்றார்கள், ஆனால் எங்கள் மாநிலத்திலே இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் என்று இருந்தாலும் கூட வாங்குகின்றார்கள், ரொம்பவும் பற்றாக்குறையாக உள்ள எங்கள் மாநிலத்திலே இதனால் நிலச் சொந்தக்காரர்கள் கஷ்டப்படுகின்றார்கள், அகவிலையால் நிலச் சொந்தக்காரர்கள் துன்பப்படுகின்றார்கள், இந்த நிலையிலே இங்கே இப்படிக் கொள்முதல் செய்து துன்பம் கொடுக்கின்றார்கள், ஆனால் பக்கத்து மாநிலத்தில் அப்படி இல்லை" என்று சொல்லியிருக்கின்றார்கள். நான் கேட்கிறேன், இந்த நிலை அடுத்த ஆண்டு இப்படியே இருந்தால் சமாளிக்க முடியுமா என்று? மழை ஒரு புறம் பொய்த்து நாட்டைச் சுற்றிலுமுள்ள அண்டை நாடுகளிலே மாநிலங்களிலே உணவு நிலை மிக மோசமாக ஆகியிருக்கும்போது எப்படி சமாளிப்பது? இந்த நிலைமையிலே கொள்முதல் செய்வதில் இன்னும் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டாமா என்று நம்முடைய அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளுவேன். மேலும் உரம் சம்பந்தமாக ஒன்றை நாம் கவனிக்க வேண்டும், இன்று நாட்டிலே உர நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. மத்திய அரசு இன்னும் சற்று அதிக அளவில் ஒதுக்கீடு செய்தாலும் கூட போதாது என்ற நிலைதான் நமது மாநிலத்தில். நாம் நம்முடைய விவசாயிகளிடையில் உரம் போடும் மனோபாவத்தை பெருமளவில் வளர்த்துவிட்டு, இன்று அவர்களுக்குத் தேவையான உர வகைகளைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றோம். அது போன்றே இன்று வீரிய விதைகள் என்று அவற்றையும் விவசாயிகளிடையில் பரப்பியிருக்கிறோம். இந்த விதைப் பயிர்களுக்கு சற்று அதிகமாகவே உரம் போட வேண்டியிருக்கின்றது. இந்த நிலைமையில் விவசாயிகளிடம் சென்று திடீரென்று 'உரம் உபயோகிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னால், அது எப்படி சாத்தியமாகும் என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது நாம் விவசாயிகளுக்குக் கொடுக்கும் உரம், ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி 25 கிலோகிராம் கூட வருவதில்லை. இப்படிப் பருவ மழை தவறியன் காரணமாகவும், போதிய அளவிற்கு உரங்களைக் கொடுக்காத காரணத்தினாலும், இந்த ஆண்டு மகசூலில் எனக்கே மிக மிக மோசமான நிலை ஏற்பட்டது. வேறு சிலர் உரம் கிடைக்க

வில்லை என்றாலும், தவறான வழியில் அவற்றைப் பெற்று எப்படியோ சமாளித்துவிடுகின்றார்கள். ஆனால் பொதுவாக இன்று விவசாயிகள் உரங்கள் கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனவே இந்த நெருக்கடியான நேரத்தில் நாம் இன்னும் கொஞ்சம் கடுமையாக லெவி கொள்முதலில் கவனம் காட்டி அதிக அளவில் உணவு தானியத்தை சேமித்து வைப்பது அவசியம் அல்லவா என்று யோசிக்கவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். மேலும், உரவகைகள் கிடைக்காத இந்த நேரத்திலே வீரிய விதைகள் என்ற வகைகளை உபயோகித்து அதிக உரம் வேண்டும் என்று கேட்கும் நிலையை மாற்ற, குறைந்த அளவு உரம் போட்டாலேயே விளையக்கூடிய விதைகளைத் தயாரித்துக் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். உரவகைகளோடு, பூச்சி மருந்துகளின் நிலையும் இதேதான். ஃபாலிடால் போன்ற பூச்சி மருந்துகள் கிடைப்பதே இல்லை என்று சொல்லப்படுகிறது. நேற்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எல்லா ஊழியர்களுக்கும் சம்பளத்தின் ஒரு பகுதியை பண்டங்களாகக் கொடுக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். இந்த உணவு தானிய கொள்முதல் வியாபாரம் அனைத்தையும் அரசே மேற்கொள்ள வேண்டும் என்று நான் ரொம்ப நாட்களாகவே சொல்லி வருகிறேன். இப்போது சொல்லக்கூடும், ‘இப்போது மத்திய அரசே பின்வாங்கி விட்டது, பிறகு நாம் இங்கே என்ன செய்வது’ என்று. பின்வாங்குவதால் அந்தத் திட்டமே மோசம் என்று அர்த்தமில்லை. நாம்கூட இங்கே பின்வாங்கியிருக்கிறோம். கிராமப்புறங்களிலே வரி போட்டோம். நான்கூட கிராமப்புறங்களிலுள்ள பணக்காரர்களுக்குப் போடப்படும் வரி என்ற வகையில் அந்த வரியை இந்த அவையில் ஆதரித்தேன். இன்றைக்கு மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட அதுபற்றி ஒரு வார்த்தை கோடிட்டுக் குறிப்பிட்டார்கள். ‘டேக்ஸிங் தி ரூரல் ரிச்’ என்று. பின்னர் அந்த வரிக்கு எதிர்ப்பு வந்தது. நாமும் பின் வாங்கினோம். எதிர்ப்பு ஏற்பட்டதாலேயே அந்தத் திட்டத்தைக் கைவிடும் நிலை ஏற்பட்டது என்பதால் அதற்காக அந்தத் திட்டமே மோசம் என்று அர்த்தமில்லை. சில நேரங்களிலே நல்ல திட்டங்களுக்கும் இப்படி எதிர்ப்புகள் வந்து பின் வாங்கவேண்டி வருகின்றது. அதனால் மற்ற மாநிலங்களிலே பின் வாங்கிவிட்டார்கள் என்பதற்காகவே நாம் பின் வாங்கவேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, உணவு மொத்த வியாபாரத்தை மத்திய அரசு எதிர்ப்பின் காரணமாகப் பின் வாங்க நேரிட்டது என்று சொன்னீர்கள், எனக்கு விவரம் தெரியவில்லை, எதிர்ச்சியினால் பின்





வாங்கவில்லை, அந்தக் கொள்கை தோற்றுவிட்டது என்பதற்காகத்தான் கைவிட்டுவிட்டார்கள் அல்லது பின் வாங்கிவிட்டார்கள் என்று அறிகிறேன். இதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் சொன்னால் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** குஜராத்தில் பார்த்தீர்கள் எதிர்ப்பினை. அதை நான் சொல்ல வேண்டுமா என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதிர்ப்பினால் என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. நான் சொல்லுவது, இந்த எதிர்ப்பின் காரணமாக அந்தக் கொள்கையை ‘இம்ப்ளிமெண்ட்’ செய்யவில்லை என்று. என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் மத்திய சர்க்கார் எதிர்ப்புக்குப் பிறகு பின் வாங்கிவிட்டது என்பதுதான். அதை எதிர்ப்பின் காரணமாக இம்ப்ளிமெண்ட் செய்யவில்லை. பொருளாதார நிபுணர்கள் சொல்லுகின்றார்கள், அண்மையில் நான் பொருளாதார நிபுணர் குன்னார் மிர்தல் என்பவர் எழுதிய ஒரு நூலைப் படித்தேன். அதிலே அவர் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார், “நாம் நமது நாட்டு மக்களுடைய எண்ணங்களை மாற்ற வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களிலே எண்ணங்களை மாற்ற வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு இன்னும் சுதந்திரம் என்பதைப்பற்றித் தவறான கருத்துக்கள்தான் இருந்து வருகின்றன. அந்த எண்ணங்களை மாற்றாது நாம் மாற்றங்களைச் செய்ய முடியாது” என்று அவர் கூறியிருக்கிறார். எண்ணங்கள் மாறவேண்டும். நாம் கேள்விப்பட்டோம், பத்திரிகையில் பார்த்தோம். அரசு கொள்முதல் செய்யக் கூடாது, அப்படிச் செய்தாலும் தங்களிடம் உள்ள உணவு தானியத்தைத் தரமுடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர்களே சொல்லுகின்றார்கள், அவர்களே தங்களிடமுள்ள தானியத்தைத் தரத் தயாராயில்லை என்று உத்தரப் பிரதேசத்தின் தலைநகரிலேயே நாட்டின் ஜனாதிபதி சொன்னார்கள். அந்த மாநிலத்திலே குடியரசுத் தலைவராட்சி இருந்து, சட்ட மன்றம் தாற்காலிகமாக கலைக்கப்பட்டிருந்தபோது. இப்படிப்பட்ட எதிர்ப்புகள் இருந்தாலும் அரசு இப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்டு தயங்காமல் கொள்முதல், விநியோகம் இவற்றைச் செய்ய முயற்சிக்க வேண்டும். இன்றைய தினம் தான் ‘சோஷல் டிசிப்ளின்’ என்று சொல்லும்போது, ஒன்று என்னுடைய நினைவிற்கு வந்தது. இன்றைக்குத் தமிழகத்திலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பண்டங்கள் ஏதும் அதிகமாக விளைவிப்பதில்லை. பக்கத்திலுள்ள கேரளமும் மற்றும் மேற்கு வங்கமும் அந்நியச் செலாவணியை

நிறையப் பெற்றுத் தரும் மாநிலங்களாக இருந்தாலும், நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் அந்த நிலைமை இல்லை. ஆனால் இப்போது நாட்டிலுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, குறிப்பாக பெட்ரோலியம் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி காரணமாக, நாம் இன்னும் அதிக அளவிலே அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் அவசியத்தில் இருக்கும் போது, ஏன் நம் நெல்லைப் போட்டு அதையே அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் பண்டமாக மாற்றக்கூடாது, நமது தேவைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு, முறைப்படுத்திக்கொண்டு ஏன் இதையும் அந்நியச் செலாவணி பெற்றுத்தரும் பண்டமாக மாற்றக்கூடாது என்று கேட்க விழைகிறேன். அதுபோலக் காப்பிக்கொட்டை இருக்கிறது. இதற்கு வெளி மார்க்கெட்டுகளில் நிறைய கிராக்கியிருக்கின்றது. நமது தேசத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தேச பக்தியின் அடிப்படையிலே மக்களுடைய எண்ணங்களை நாம் தயார் செய்தால், காப்பிக்கொட்டையை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய முடியும். நாம் காப்பி குடிப்பதைக் குறைத்துக் கொள்ளலாம். அண்மையிலே நான் சோவியத் யூனியனுக்குப் போயிருந்தபோது அங்கேகூட டீ, காபி போன்ற பானங்களையெல்லாம் மிகவும் குறைத்துக்கொண்டதாகக் கூறினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வோட்கா அருந்துவார்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** வோட்கா என்பது அவர்களுடைய மது. அதற்கு ஈடாக நம் ஊரிலே கள் இருக்கின்றது. அதைப் போல ....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கள் இருக்கின்றது என்பதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். கள் இல்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, சட்டபூர்வமாக இல்லை என்றாலும்கூட வேறு வகையில் கிடைக்கின்றது சில இடங்களிலே. தவறான பாதையில் கிடைக்கின்றது. நீங்கள் சட்ட பூர்வமாக எடுத்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அப்படி இல்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட அமைச்சர் அவர்களே சொல்லுகின்றார்கள். எனவே திரும்பப் பெறுகின்றேன். காபியும் டீயும் நமக்கு அந்நியச் செலாவணியைச் சேமித்துக் கொடுப்பதால், அவற்றின் தேவைகளை நாம் குறைத்துக் கொண்டால் நல்லது. அதைத்தான் சோவியத் நாட்டிலே அவர்கள் சொன்னார்கள், 'எங்களுக்கு அந்நியச் செலாவணி அதிகம் தேவைப்படுகிறது'. ஆகவே காபி, டீ போன்றவற்றை அதிகமாகக் குடிப்பதில்லை என்ற அந்த தங்களது உணர்வினைக் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட உணர்வு நம் மக்களுக்கு உண்டாக்கப்படவில்லை. அங்கே இருக்கின்றது.



**திரு. சி. வி. ராஜகோபால் :** சார், on a point of clarification. வெளிநாட்டில், குறிப்பாக ரஷ்யாவில் காலாகாலமாக டீ அல்லது காப்பி அருந்துவதில்லை. அவர்களுக்கு முன்பெல்லாம் டீ அல்லது காப்பி போன்றவை தெரியவே தெரியாது. அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த வேண்டுமென்று அவர்கள் அதைக் குடிப்பதை நிறுத்திக்கொண்டு விட்டார்கள் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்றார்கள். காப்பிப் பழக்கமே இல்லாதவர்கள் அவர்கள். பல பகுதிகளிலே காப்பிப் பழக்கமே இல்லாதவர்கள் இருக்கின்றார்கள். இது எனக்கு நன்றாகத் தெரியும். காலாகாலமாக காப்பி குடித்தவர்கள் இல்லை அவர்கள். அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த வேண்டும் என்று அவற்றைக் குடிப்பதை நிறுத்திவிட்டார்கள் என்ற நிலைமை இல்லை அங்கே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்குப் பதிலாக வாழைப்பழம் சாப்பிடுகின்றார்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, அந்த விஷயத்தில் அந்த நாட்டின் பழக்க வழக்கங்கள் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. நான் அங்கே போனபோது, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் அவற்றைக் குறைத்துக் கொண்டோம் என்று சொன்னார்கள். அங்கேயுள்ள சாதாரணப் பிரஜைகளுக்குள்ள உணர்வினை எடுத்துக் காட்ட இதைக் குறிப்பிட்டேன். பிரேஜில், லேட்டின் அமெரிக்கா போன்ற நாடுகளில் அண்மையில் எப்படி காப்பிக்கொட்டை ஏற்றுமதியைப் பெருக்கிக் கொண்டு அந்நியச் செலாவணியை அதிகமாகப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கின்றார்களோ அதைப் போலவே நாமும் செய்ய இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

தமிழகத்திலே 600 மைல் நீளத்திற்குக் கடற்கரை இருக்கின்றது. இங்கே மீன் பிடித்தலை அதிகமாகத் தீவிரப்படுத்தினால் பெருமளவிற்கு மீன் பிடிக்கலாம். இப்போது இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது போதாது. மீன் பிடித்தலை அதிகப்படுத்தி அதை முக்கிய உணவாகச் சாப்பிடும் பழக்கத்தையும் மக்களிடையில் தீவிரப்படுத்தினால்—அது மிகச் சத்துள்ள உணவு என்ற முறையில்—அப் பழக்கத்தைத் தீவிரப்படுத்தினால், இப்போது நாம் உபயோகிக்கும் உணவுப் பண்டங்களின் அளவினைக் கணிசமாகக் குறைத்து, அதை ஏற்றுமதிக்குத் திருப்பலாம். இன்றைக்கு நம் மக்களிடையில் அத்தகைய உணர்வுகளை உண்டாக்க வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லுகின்றேன்.

அடுத்தபடியாக, தலைவரவர்களே, இந்த உரையின் மீது வேறு பல கருத்துக்களை அந்தந்த தலைப்புக்களின் மீது விவாதங்கள் வரும்போது பேசும் வாய்ப்பினை நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையினை இந்த அளவில் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

(5–50 பிற்பகல்)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

204 ஆம் பக்கத்தில் 198 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) தருமபுரியில் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான திட்டம், கிருஷ்ணகிரியில் தலைமையிடத்தைத் தாற்காலிகமாகக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் 17—3—1972-லிருந்து செயல்படத் தொடங்கியது. அதன் பின்னர், இந்தத் தலைமையிடம் 1—6—1973-லிருந்து தருமபுரிக்கு மாற்றப்பட்டது. தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், காவிரிப்பட்டினத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், வட்டார ஆராய்ச்சி நிலையம் ஒன்றை 23—5—1973 அன்று அமைத்தது.

(இ) கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக, தருமபுரியில் வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த அரசு கருதியது :—

(1) சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய வற்றில் தகுதியான வகையை வரையறுப்பதற்கான சோதனை நிலையமாகச் செயல்படுவது.

(2) அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற பயிர் விளைவிப்பது குறித்து ஆய்வு செய்வது.

(3) வரையறுக்கப்பட்ட பயிர்களுக்கு முனைப்புத் திட்டத்தை அமைப்பது.

இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் :—

| | |
|---|---|
| 1. பயிர் ஆராய்ச்சி வல்லுநர் | 1 |
| 2. பயிர் ஆராய்ச்சி உதவி வல்லுநர் | 1 |
| 3. உதவி வேளாண்மை இயலறிஞர் | 1 |
| 4. வேளாண்மைத் துணை அதிகாரிகள் | 4 |
| 5. வேளாண்மை உதவியாளர்கள் | 3 |
| 6. பதிவேட்டெழுத்தர் | 1 |
| 7. கண்காணிப்பாளர் | 1 |
| 8. உதவியாளர் | 1 |
| 9. பண்டகசாலைக் காப்பாளர் | 1 |
| 10. தட்டச்சர் | 1 |
| 11. கடைநிலை ஊழியர்கள் | 2 |

ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காகத் தருமபுரியில் நிலங்கள் கையகப் படுத்தப்படும்வரை கிருஷ்ணகிரியைத் தாற்காலிகமாக தலைமையிடமாகக் கொண்டு இத்திட்டம் 17—3—1972 லிருந்து செயல்படத் தொடங்கியது. நிலங்கள் கையகப்படுத்துவது சம்பந்தமாக வருவாய்த்துறை அதிகாரிகளையும் நிலச் சொந்தக்காரர்களையும் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட போதெல்லாம், தருமபுரிக்குச் சென்று வருவது பணியாளர்களுக்குக் கடினமாக இருந்தது. ஆராய்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்த நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காக, தலைமையிடம். தருமபுரியில் இருக்க வேண்டுமெனக் கருதப்பட்டது. எனவே தலைமையிடம் வேளாண்மைத்துறை இயக்குநரால் 1—6—1973 லிருந்து தருமபுரிக்கு மாற்றப்பட்டது. இதற்கிடையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வட்டார ஆராய்ச்சி நிலையம் ஒன்றைக் காவிரிப்பட்டினத்தில் அமைத்தது. இது துறையின் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சொற்ப வருவாயை உயரளவுப் பயன் அளிக்கத் தக்க வகையில் பயன்படுத்துவதற்காகவும், தருமபுரி மாவட்டத்தில் வளர்ச்சி பணிகளுக்கான ஆராய்ச்சி பணிகள் குறித்த முழுப் பொறுப்பையும் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ளும் பொருட்டும் இவ்வாராய்ச்சி நிலையத்தை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் விட்டு விட ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகிகளின் ஒப்பளிப்புடன் 23—5—1973 அன்று, கிருஷ்ணகிரி வட்டம், ஜனபரஹள்ளி கிராமம், பெய்யாற்றுக்கு அண்மையில் காவிரிப் பட்டினத்தில் வட்டார ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துள்ளது. அந்த ஆராய்ச்சி நிலையம் முதுநிலை அறிவியல் வல்லுநரின் (பயிர் பெருக்கம்) பொறுப்பின் கீழ் விடப்பட்டுள்ளது. அவருக்கு, தொழில் நுட்பப் பணியாளர்களும் அலுவலக உதவியாளர்களும் உதவி செய்வர்.

இந்த நிலையத்தில் பயிர் இனப் பெருக்கம், மண் வள நீர் பயன்பாடு வேளாண்மைப் பொறியியல் முதலியவற்றில் ஆராய்ச்சியை மேற்கொள்வதன் மூலம் மாவட்டத்திலுள்ள குடியானவர்களின் தேவைகள் முழுவதுமாக நிறைவு செய்யப்படும். குளிர் தாங்கக்கூடிய உணவு தானிய வகைகள், பயறு வகைகள், தருமபுரி மாவட்டத்தின் தட்பவெப்ப நிலைக்குத் தகுந்தவை முதலியவற்றை உருவாக்குவதற்கு மும்முர பயிர் பெருக்கத் திட்டம் மேற்கொள்ளப்படும். இந்த நிலையத்தில் பாசன நீர் கிடைப்பதற்கான வாய்ப்பு, நீரைச் சேமித்து வைத்தல், பாதுகாத்தல் குறித்த தொழில் நுட்ப உத்திகள், அம்மாவட்டத்தின் வேளாண்மை தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு நீர் பயன்பாடு ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்யப்படும். தொடக்கத்தில்



சுமார் 40 ஏக்கர் பரப்பளவு நிலம் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம் காவிரிப்பட்டினத்திற்கு தெற்கே 4 கிலோ மீட்டரிலும் தருமபுரி–கிருஷ்ணகிரிக்கு இடையேயுள்ள நெடுஞ்சாலையின்மீது கிருஷ்ணகிரி நீர்த்தேக்கக் கால்வாய்க்கு அண்மையிலும் உள்ளது. இந்த நிலம் உள்ள பகுதியில் கால்வாய்ப்பாசனம், இறவைப் பாசனம், மானவாரிப் பயிரிடுதல் ஆகியவற்றிற்கு ஏற்ற வசதிகள் உள்ளன.

முதலில் இந்த நிலையத்தில் தகுதியான பயிர் வகைகளை இனப் பெருக்கம் செய்தல், மண், நீர் பயன்பாடு ஆகியவை குறித்த ஆய்வு மட்டுமே முக்கியமாக மேற்கொள்ளப்படும். தேவைகளைப் பொறுத்து காலப் போக்கில் நிலையப் பணி வேறு வகை வேளாண்மை நடவடிக்கைகளுக்கும் நீட்டிக்கப்படும்.

## இணைப்பு II

(206 ஆம் பக்கத்தில் 197-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

| வரிசை எண்ணும், ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1969-ம் வருடம் முதல் துவக்கப்பட்ட மேல்நிலை நீர்த் தொட்டிகளின் எண்ணிக்கை. | 20-12-1973 முடிய முற்றுப் பெற்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை. | முற்றுப் பெறாமல் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை. | 1969-70 முதல் 1973-74 முடிய வரை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்காக அரசு அளித்த வருடாந்திர மானியத்தின் மொத்தத் தொகை. | 1969-70 முதல் 1973-74 முடிய வரை ஊராட்சி ஒன்றியங்களினால் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | ரூபாய் | ரூபாய் |
| 1 அரக்கோணம் .. .. | 10 | 3 | 7 | 1,39,596 | 1,36,862 |
| 2 நெமிலி .. .. | 20 | 8 | 12 | 1,30,726 | 1,29,841 |
| 3 காவேரிபபாக்கம் .. .. | 23 | 5 | 18 | 1,42,893 | 1,23,137 |
| 4 வாலாஜா .. .. | 8 | 1 | 7 | 1,00,8'3 | 87,948 |
| 5 சோளிங்கர் .. .. | 6 | 2 | 4 | 1,07,226 | 86,402 |
| 6 ஆர்க்காடு .. .. | 13 | 4 | 9 | 1,15,348 | 1,04,802 |
| 7 திமிரி .. .. | 2 | .. | 2 | 1,35,226 | 1,21,189 |
| 8 வே .. .. | 10 | 6 | 4 | 1,69,998 | 1,55,980 |
| 9 அணைக்கட்டு .. .. | 8 | 1 | 7 | 1,13,976 | 94,240 |
| 10 கணியம்பாடி .. .. | 10 | 5 | 5 | 1,06,489 | 1,31,786 |
| 11 மாடனூர் .. .. | 2 | .. | 2 | 1,01,189 | 80,693 |
| 12 திருப்பத்தூர் .. .. | 8 | 7 | 1 | 1,28,365 | 1,25,752 |
| 13 கந்திலி .. .. | 11 | 5 | 6 | 1,24,148 | 1,15,330 |
| 14 ஆலங்காயம் .. .. | 5 | 2 | 3 | 1,12,006 | 1,08,828 |
| 15 நந்தாம்பள்ளி .. .. | 11 | 5 | 6 | 1,03,851 | 91,217 |
| 16 குடியாத்தம் .. .. | 8 | 1 | 7 | 1,01,521 | 95,292 |
| 17 பேர்ணம்பேட் .. | 6 | 1 | 5 | 1,10,679 | 94,747 |
| 18 கா. வ. குப்பம் .. | 7 | 2 | 5 | 1,04,305 | 99,043 |
| 19 காட்பாடி .. .. | 8 | 6 | 2 | 1,08,667 | 1,01,679 |
| 20 ஆரணி .. .. | 6 | 4 | 2 | 90,408 | 71,431 |
| 21 மேற்கு ஆரணி .. | 7 | 2 | 5 | 1,02,726 | 83,428 |
| 22 செய்யார் .. .. | 1 | .. | 1 | 84,911 | 63,578 |
| 23 ஆனக்காவூர் .. | 8 | 4 | 4 | 1,00,726 | 84,888 |
| 24 வெம்பாக்கம் .. | 8 | 5 | 3 | 1,54,370 | 1,50,606 |
| 25 வந்தவாசி .. | 5 | 2 | 3 | 1,02,726 | 88,267 |
| 26 பெர்ணமல்லூர் .. | 5 | 2 | 3 | 1,03,726 | 97,167 |
| 27 தொள்ளார் .. | 6 | 2 | 4 | 1,05,726 | 1,02,460 |
| 28 திருவண்ணமலை .. | 7 | 3 | 4 | 1,02,726 | 88,171 |
| 29 துரிஞ்சாபுரம் .. | 6 | 2 | 4 | 1,02,726 | 97,048 |
| 30 கீழ்ப்பெண்ணாத்தூர் | 15 | 6 | 9 | 1,31,709 | 1,33,828 |

| வரிசை எண்ணும், ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | 1969-ம் வருடம் முதல் துவக்கப் பட்ட மேல் நிலை நீர்த்தொட்டி களின் எண்ணிக்கை. | 20-12-1973 முடிய முற்றுப் பெற்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை. | முற்றுப் பெறாமல் இருக்கும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி களின் எண்ணிக்கை. | 1969-70 முதல் 1973-74 முடிய பர் வரை மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்காக அரசு அளித்த வருடாந்திர மான்யத்தின் மொத்தத் தொகை. | 1969-70 முதல் 1973-74 முடிய பர் வரை ஊராட்சி ஒன்றியங் களிலும் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | ரூபாய் | ரூபாய் |
| 31 செங்கம் .. .. | 9 | 7 | 2 | 1,02,726 | 77,105 |
| 32 புதுப்பாளையம் .. | 14 | 7 | 7 | 1,02,726 | 86,323 |
| 33 தண்டராம்பேட்டை .. | 4 | 3 | 1 | 1,02,726 | 81,551 |
| 34 போளூர் .. .. | 18 | 7 | 11 | 1,11,926 | 98,824 |
| 35 கலசப்பாக்கம் .. | 17 | 2 | 15 | 1,68,726 | 1,74,455 |
| 36 சேத்துப்பட்டு .. | 6 | .. | 6 | 1,02,991 | 96,082 |
| மொத்தம் .. | 318 | 122 | 196 | 41,31,383 | 37,59,980 |

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

வெள்ளிக்கிழமை, 1974 மார்ச் 15

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

*Rice Bags seized at the Coimbatore-Kerala border*

*210 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether a large number of rice bags were seized by the Food Cell (CID) at the Coimbatore–Kerala border about the 9th January 1973; and

(*b*) if so, the action taken thereon?

**கோயம்புத்தூர்-கேரளா எல்லையில் கைப்பற்றப்பட்ட அரிசி மூட்டைகள்**

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 9—1—1973 ஆம் நாள் அளவில் கோயம்புத்தூர்-கேரளா எல்லையில், உணவுப்பிரிவால் (குற்றப்புலனாய்வுத்துறை) ஏராளமான அரிசி மூட்டைகள் கைப்பற்றப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட ஏழு நபர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, மூன்று நபர்கள் தண்டிக்கப்பட்டனர். ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். மூன்று நபர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் விசாரணையில் இருந்து வருகின்றன.

## Procedure of choosing teachers for Selection Grade

*201 Q.—Thiru S. C. SENGOTTUVELAPPA GOUNDER (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representations regarding the procedure of choosing teachers for Selection Grade; and

(b) if so, the action taken thereon?

### தேர்வுத்தர ஆசிரியர்களைத் தெரிந்தெடுப்பதற்கான முறை

திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுத்தர ஆசிரியர்களைத் தெரிந்தெடுப்பதற்கான முறை குறித்து முறையீடுகள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பட்டதாரி ஆசிரியர், முதல் நிலை தமிழ் ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை 10 ஆண்டு பணிக்காலத்தின் அடிப்படையில் 1—4—1973 முதல் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## Unqualified Hindi Pandits

*202 Q.—Thiru S. C. SENGOTTUVELAPPA GOUNDER (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to absorb unqualified Hindi Pandits who have been ousted from service earlier due to the implementation of the two-language formula by the Government; and

(b) if so, the nature of the proposals?



### கல்வித்தகுதி பெறாத இந்தி ஆசிரியர்கள்

திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசால், இருமொழித் திட்டம் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக வேலையிலிருந்து வெளியேற்றப்படவேண்டிய கல்வித் தகுதி பெறாத இந்தி ஆசிரியர்களை மீண்டும் வேலைக்கமர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அச்செயற் குறிப்புகளின் தன்மை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## Physical Training Instructors

*203 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiruvalargal K. S. GANAPATHI and D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether Selection Grade scales of salary for Physical Education Teachers, Grade I, have not yet been announced; and

(b) if so, the reasons therefor?

### உடற்பயிற்சி ஆசிரியர்கள்

திரு. எல். பலராமன் (திரு. கே. எஸ். கணபதி & திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தரம் 1 உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான தேர்வுத்தர சம்பள விகிதங்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்வது குறித்த கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்த உடற் பயிற்சி ஆசிரியர்களை, எலிமெண்டரி ஸ்கூல்களில் அதிகமாக நியமிப்பதால், வேலை யில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறையும் என்ற கருத்து அரசிடம் இருந்து வந்தது. அந்தக் கருத்தின் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேலை யில்லாத் திண்டாட்டம் போகும் என்பது உண்மைதான். ஆனால் நிதி வசதி தேவை என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்க வேண்டியதாக இருக்கிறது. வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதில் அரசும் கவனம் கொண்டிருக்கிறது. இப்பொழுதே நடுத்தரப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் அவர்களை அமர்த்துகின்ற அளவுக்குத் திட்டங்களை நாம் தீட்டி வருகிறோம்.

* 204 Q.—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that there is no Selection Grade for Grade I Physical Training Instructors who are working in High Schools;

(b) if so, the reason therefor; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு தேர்வு நிலைத் தரம் இல்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன?

(உ) இது சம்பந்தமாக அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலைப் பணியிடங்கள் அளிப்பது பற்றிய கருத்தரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



*Government employees, who contested election to the Senate of the University of Madras*

* 205 Q.—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the names of Government employees, who contested election to the Senate of the University of Madras during the year 1973;

(b) whether they have been granted prior permission for the same;

(c) whether such permission was refused to any; and

(d) if so, the reasons for approval or rejection in each of the cases?

**சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசுப் பணியாளர்கள்**

திரு. எஸ். ஸி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசுப் பணியாளர்களின் பெயர்கள் யாவை?

(இ) இதற்காக அவர்களுக்கு முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(உ) எவருக்கேனும் அனுமதி மறுக்கப்பட்டதா?

(எ) ஆமெனில், ஒவ்வொருவரது நேர்விலும் ஏற்பு அல்லது மறுப்புக் குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்து வந்துள்ள தகவலையொட்டி ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) & (எ) தமிழ்நாடு கல்வி நிறுவன இயக்குநரான திருமதி என். சண்முகசுந்தரம் அவர்களுக்கு, அவர் நிர்வாகப் பொறுப்பான பதவி வகிப்பதினால், தேர்தலில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

---

@ 339–346 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

## Non-admission of Girl students in Boys' High Schools in Ram Nagar area in Coimbatore City

*206 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARIMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answers given to Legislative Council Questions Nos. 100 and 180 answered on the floor of the Council on 26th February 1973 and 5th March 1973 respectively—

(a) whether the Government are aware of the appeal made in the "Letters to the Editor" columns of "The Hindu" dated 20th April, 1973 regarding the non-admission of girl students in Boys' High Schools in Ram Nagar area in Coimbatore City; and

(b) if so, the action proposed to be taken thereon?

## கோயம்புத்தூர் ராம்நகர் பகுதியிலுள்ள மாணவர் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவிகளைச் சேர்க்காதிருத்தல்

**திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற மேலவையில் 100-வது, 180-வது வினாக்களுக்கு முறையே 26—2—1973, 5—3—1973 ஆகிய நாட்களில் அளித்த விடைகளையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாநகர், ராம்நகர் பகுதியிலுள்ள மாணவர் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படாதது குறித்து 20—4—1973 நாளிட்ட "இந்து" நாளிதழில் "ஆசிரியருக்குக் கடிதங்கள்" பத்திகளில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இது தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் சேர்ந்து கல்வி பயில அனுமதி வழங்க கீழ்க்கண்ட வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன:—

(1) ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இயங்கும் மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் இடமின்மையின் பொருட்டு, அண்மையில் உள்ள ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் மகளிரையும் சேர்க்கலாம்;

(2) பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இல்லாத பகுதி 'ஏ'-ல் உள்ள மொழி பயில வேண்டி நேர்ந்தால். அன்றி, விருப்பப் பாடம் கற்க நேர்ந்தால் அன்றி பயிற்றுமொழி மாறாக இருப்பின், பெண்கள், ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கற்கலாம்;



(3) ஒரு மைல் எல்லைக்கப்பால், பெண்கள் உயர்நிலைப் பள்ளியிருப்பின் அன்றி போக்குவரத்து நெரிசல் மிக்க வீதிகள் வழியே, ஒரு மைலுக்கு மேலாகச் செல்ல நேர்ந்தால், பெண்கள், அண்மையிலுள்ள ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பயிலலாம், மற்றும்

(4) ஏனைய முக்கிய தகுந்த, தவிர்க்க இயலாத காரணங்களை முன்னிட்டு, மாவட்டக் கல்வி அலுவலர் அனுமதியின் பேரில் பெண்கள், ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலலாம்.

மேலே கூறிய வரையறைகள் வெளியிட்டதால் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரே ஊராட்சி எல்லையில் கூட்டுக் கல்வி உயர்நிலைப் பள்ளி இருந்து பின்னல், மகளிர் உயர்நிலைப் பள்ளி வந்திருந்தால், முன்பு இருந்த உயர்நிலைப் பள்ளிக்கு ஆடவர் உயர்நிலைப் பள்ளி என்றும், பின்வந்ததற்கு மகளிர் உயர்நிலைப்பள்ளி என்றும் பெயர் வைத்தால் சில சிக்கல்கள் தீர்க்கப்படும் என்று கருதுகிறேன். அதை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்பட்ட பின்னல், பெண்கள் அங்குதான் சேர்க்கப்பட வேண்டும் என்று வைத்திருக்கிறோம். கூட்டு உயர்நிலைப் பள்ளியாக இருந்து, ஒரு கணிசமான அளவுக்கு மகளிர் இருந்து, தனியாக ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி இயங்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது, மகளிர் பெண்கள் பள்ளிகளிலும், ஆடவர்கள் ஆடவர்கள் பள்ளியிலும் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. தவிர்க்க முடியாத சில காரணங்களால், நான் முன்பே குறிப்பிட்ட சில காரணங்களால், ஆடவர்கள் பள்ளிகளில் பெண்கள் சேர்க்கப்படலாம் என்று விதி இருக்கிறது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, ஏற்கெனவே கூட்டுக் கல்வி உயர்நிலைப் பள்ளி இருந்த இடத்தில்—ஒரே பஞ்சாயத்து எல்லையில், பின்னல் அங்கே தனியான மகளிர் உயர்நிலைப் பள்ளி வந்தது என்றால், முன்பிருந்த உயர்நிலைப் பள்ளிக்கு ஆடவர் உயர்நிலைப் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்தால், இரு பள்ளிகளும் தனித்தனி என்று அறிவதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பெயர் மாற்றத்தைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இது பற்றி யோசிக்கலாம். பாய்ஸ் ஹைஸ்கூல் (என்றும் கேர்ல்ஸ் ஹைஸ்கூல் என்றும் வைத்திருக்கிறோம். அந்தப் பெயர் மாற்றம் செய்வதில் கஷ்டம் ஒன்றுமில்லை என்று கருதுகிறேன்.

## Admission of Women Students in Men's Colleges

* 207 Q.—Thiru M. ARUMUGASWAMI (on behalf of Thiru K. S. GANAPATHI) Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that there is a specific rule prohibiting admission of women students in the colleges for men affiliated to the University of Madras; and

(b) whether it is a fact that an advertisement was made by the District Collector, Tiruchirappalli, to the effect that women students also will be admitted in the newly opened Navalar Nedunchezhian Government Arts College at Tiruverambur in Tiruchirappalli District; and

(c) if so, whether any girl students were admitted in that college?

### மாணவர் கல்லூரிகளில் மாணவிகளைச் சேர்த்தல்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள ஆண்கள் கல்லூரிகளில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதைத் தடை செய்யும் திட்ட வட்டமான விதியொன்று இருப்பது உண்மையா?

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூரில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள நாவலர் நெடுஞ்செழியன் கலைக் கல்லூரியில் மாணவிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் விளம்பரம் செய்தார் என்பது உண்மையா?

(உ) ஆமெனில், அக்கல்லூரியில் மாணவியர் எவரேனும் சேர்த்துக்கொள்ளப்பட்டனரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆண்களுக்கென நடக்கும் கல்லூரிகளில் பெண்களை அனுமதிக்கக் கூடாது என்ற பொதுத் தடை ஒன்றுமில்லை. ஆனால் புகுமுக வகுப்பைப் பொறுத்த வரையில் பெண்களை ஆண்களுக்கெனவிருக்கும் கல்லூரிகளில் சேர்க்க இயலாது என்ற நிபந்தனையைப் பல்கலைக் கழகம் விதித்துள்ளது.





(இ) & (உ) திருவெறும்பூர் டாக்டர் நாவலர் அரசினர் கலைக் கல்லூரியில் 1973-74-ம் ஆண்டு ஆறு பெண்மணிகளை சேர்த்துள்ளதாகத் தெரிகிறது. பிறகு பல்கலைக் கழகம் ஆண்களுக்கென்றே அக்கல்லூரியை ஒதுக்கீடு செய்ததால், அப்பெண்மணிகள் கட்டின கட்டணப் பணமும், சான்றிதழ்களும் திரும்பக் கொடுக்கப்பட்டன. அவர்கள் வேறு பெண்கள் கல்லூரியில் சேர்ந்திருப்பார்கள்.

Thiru S. NARAYANASWAMY: Sir, will the Government consider the desirability of issuing very clear notifications that the Government do not disapprove of co-education in affiliated colleges and that women are free to join Men's Colleges where admission is not available in nearby Women's College or where there is no Women's Colltge available at all?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், புகுமுக வகுப்புகளில் பெண்களைச் சேர்க்கக்கூடாது என்று விதி செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில், அதாவது தனிப்பட்ட சில ஊர்களில், ஒரு கல்லூரி தான் இருக்கிறது. அவ்விடங்களில் பெண்கள் சேர்க்கப்படாவிட்டால், கஷ்டம்தான். ஆனால் பட்டப் படிப்பு, பி.ஏ., பி.எஸ்.சி., வகுப்புகளில் சேர்த்து வருகிறார்கள். புகுமுக வகுப்புகளிலும சேர்க்கப்பட விதியைத் தளர்த்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். அதுபற்றி சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் தான் முடிவு செய்ய வேண்டும்.

## Resolutions passed at the Third State Conference of Non-Teaching Staff Association of Aided High Schools.

* 208 Q.—Thiru V. VENGA (on behalf of Thiru K. Arivazhagan): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the resolutions passed at the Third State Conference of Non-Teaching Staff Association of Aided High Schools on 28th May 1973 were submitted to the Government; and

(b) if so, the steps taken thereon by the Government?

**அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளிகளின் ஆசிரியரல்லாத அலுவலர் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்.**

திரு. வி. வெங்கா (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 28—5—1973 ஆம் நாள் அன்று நடைபெற்ற அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளிகளின் ஆசிரியரல்லாத அலுவலர் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாட்டுத் தீர்மானங்கள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரசின் ஆய்விலுள்ளது.

***Pupils studying Engineering Course in the Government (Board) Secondary Schools.***

*209 Q.—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the number of pupils on the rolls in 10th and 11th standards studying Engineering course in the Government (Board) Secondary Schools is very low; and

(b) if so, whether ways and means would be devised to utilise the services of the teachers of the Engineering course in such schools in a more profitable way?

**அரசாங்க (போர்டு) உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் கல்விப் பிரிவில் பயிலும் மாணவர்கள்.**

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க (போர்டு) உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் கல்விப் பிரிவில் 10, 11-ம் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அப்பள்ளிகளிலுள்ள பொறியியல் கல்விப் பிரிவு ஆசிரியர்கள் சேவையை கூடுதலாகப் பயன்படுத்த வழிமுறைகள் காணப்படுமா?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், பொறியியல் பிரிவு ஆசிரியர்கள் வேலை செய்யவேண்டிய பாட வேளையின் எண்ணிக்கை குறையாதாகையால் இவ்வாசிரியர்களின் போதனை நேரம் குறைய வழியில்லை. ஆகவே இவர்களின் சேவையை கூடுதலாகப் பயன்படுத்த வழியில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

**2. 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி**

* திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புக்குரிய தலைவரவர்களே, நமது முதல்வரவர்கள் 1974-75-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையை எனது கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். காரணம், பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் பாராட்டும் வகையிலே இருப்பது தான். 56 கோடி மக்களுக்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமது ஆட்சியின் 9-வது பட்ஜெட்டை தேசத்தின் முன் வைத்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பின் 4½ கோடி மக்களுக்காக தனது 8-வது பட்ஜெட்டை அவைமுன் வைத்திருக்கிறது. இரண்டு பட்ஜெட்டையும் ஒப்பு நோக்குகிற நியாய புத்தியுள்ள எவரும் மத்திய அரசின் வரி நிறைந்த பட்ஜெட்டின் மீது வருத்தப்படவும், வரி குறைந்து; பல வகைகளில் வரி விலக்களிக்கப்பட்ட மாநில பட்ஜெட்டைப் பார்த்து மகிழவும் செய்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேற்று இதற்கு முன் சமர்ப்பித்த பட்ஜெட்டுகளுக்கும் இந்த 8-வது பட்ஜெட்டிற்கும் உள்ள வேறுபட்டான வேதனைகரமான சுற்றச் சூழ்நிலைகளை சம நோக்கோடு ஆராய்கிறவர்களுக்கு எந்தத் தரப்பையும் வேதனைப்படுத்தாத நிதி நிலை அறிக்கையை டாக்டர் கலைஞர் அவர்களால் எப்படித் தயாரிக்க முடிந்தது என்ற வியப்புத்தான் மேலிடும். வரி நிறைந்த பட்ஜெட்டை மத்திய சர்க்கார் போட்டிருப்பதைப் பார்த்த அந்த நேரத்தில் வரி குறைந்த, எவரையும் வருந்த வைக்காத பட்ஜெட்டை கலைஞர் அவர்கள் கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம். இது அவருக்கு ஏழை எளிய சராசரி மக்களின் மீதுள்ள நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பைச் காட்டுகிறது. திண்டுக்கல், கோவை இவைகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களிலும், புதுவையிலே நடைபெற்ற முழுத் தேர்தலிலும்

[திரு. ஆர். சக்தி மோகன்]

கிடைத்த முடிவுகள் நாட்டின் விளக்கமற்ற ஒரு புதிய நிலையை உருவாக்கி இருக்கிறது என்பதையும், நடப்புகளை விட நடிப்பிற்கு நாட்டில் மவுசு அதிகப் பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கோவையில் தோல்வி. அதே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்த புதுவையிலும் தோல்வி. இந்த இரு கனமான தோல்விகளை நெஞ்சில் சுமப்பதென்பது யாருக்குமே கடினமாகத்தான் இருக்கும். டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தேசப் பற்றிலும், மக்கள் நல்வாழ்விலும் இருக்கிற அக்கறையைக் கொஞ்சம் குறைத்தாலும் சரி, தோல்வியை ஒரு பெரிதாக மதித்து, அதற்கு முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டுமென்று நினைத்திருந்தாலும் சரி, இந்த பட்ஜெட் தோல்விகளின் கனத்திற்கொப்பவே கடினமாகவும், கனமாகவும் தயாராகியிருக்கும். ஆனால் பசும்பொன் தேவர் அவர்கள் அடிக்கடி கூறுவது போல, வேதனையை வெல்லும் சக்தி வேட்கைக்குத்தான் உண்டு. தோல்வியைத் தாங்கும் சக்தி கடமையுணர்ச்சிக்குத்தான் உண்டு என்பதற்கொப்ப கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் தமது வேட்கையை நிரூபித்து விட்டார்கள்.

நார்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, என்.ஜி.ஓக்களுக்கு, ஆசிரியப் பெரு மக்களுக்கு, குறிப்பாக அதிர்ஷ்டத்தால் கைவிடப்பட்டு, வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து தவிக்கும் பிச்சைக்காரர்கள், நோயாளிகள், மற்றும் பிறருக்கும் இந்த அரசு மாதிரி நன்மை புரிந்த, புரிந்து கொண்டிருக்கிற அரசு இதற்கு முன் இருந்ததா? இனி இருக்குமா? இந்த இரண்டு கேள்விகளையும் வாக்குரிமை பெற்றும் பட்டினியால் நையும் இந்திய வாக்காளப் பெருமக்களின் சிந்தனைக்கு விட்டு விடுவோம். இத்தகைய நன்மைகளைச் செய்தும், இடைத் தேர்தலில் ஆட்சியினரை மகிழவைக்கும் வகையில் மக்கள் ஊக்கம் ஊட்டவில்லையென்று அவர் சிறிது சங்கடப்பட்டிருந்தால், இந்த பட்ஜெட் கடுமையாகவே அமைந்திருக்கும். மக்கள் அப்படித்தான் எதிர்பார்த்தார்கள். பொதுப் பேச்சும் அப்படித்தான் இருந்தது. மக்கள் திண்டுக்கல், கோவை, புதுவை தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கவில்லை. இது ஜனநாயகத் தீர்ப்பு என்றாலும், கலைஞர் அவர்களுக்கு வேதனை தராமல் விடாது. நல்லது செய்து வருகிற நடப்புகளை நடிப்பு மறைத்து வருகிற நிலையை ஆட்சியில் இருப்பவர்கள் தாங்கிக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அவ்வளவு பொருத்தமுமல்ல. அதிலும் எல்லாமே பதிலுக்குப் பதில், லஞ்சத்திற்கு லஞ்சம் என்றுள்ள இன்றைய நிலையில் அது சர்வ சாதாரணமாக நடைமுறையில் இருக்கிறபோது,





இவ்வளவு நலம்புரிந்தும் ஊக்கமளிக்காத மக்களுக்கு வரிச் சுமையின் மூலம் தம் வேதனையைக் காட்டுவோம் என்று அவர் செய்யவில்லை. இதற்கு முன்பிருந்தவர்கள் அப்படித்தான் செய்தார்கள். ஓட்டுப் போடாது போனால், போடாத பகுதி மக்களுக்குச் செய்கிற நலன்களைக் குறைப்பது, அவர்களைத் திரும்பிப் பார்க்காமல் விட்டு விடுவது, இப்படித் தான் நிலைமை இருந்தது. நான் உள்பட இந்த பட்ஜெட் கடுமையாகத் தான் இருக்கும், வரிகள் அதிகமாக இருக்கும் என்று தான் நினைத்தேன். ஆனால் டாக்டர் கலைஞர் அவர்கள் துடிப்பு மிக்கவராக, முன் கோபக்காரராக இருந்தாலும், தாம் ஏற்றுள்ள கடமைக்கு, பொறுப்புக்கு அதிக மதிப்பு அளித்துள்ளார் . . .

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் துடிப்பு மிக்கவர் என்று சொன்னார், அதுபற்றி ஆட்சேபணை இல்லை. முன் கோபக்காரர் என்று சொன்னார். அது எப்படி என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, முன்னெல்லாம் கோபக்காரர் என்ற அர்த்தத்தில் சொன்னார்கள்.

திரு. ஆர். சக்தி மோகன்: முன் கோபம் என்றாலும் கூட, எங்கே கோபம் அதிகமாக இருக்கிறதோ அங்கே குணம் இருக்கும் என்பார்கள். அந்த முன் கோபக்காரரிடத்தில் நாடு அதிகப் பலனை அடைந்திருக்கிறது—மேலும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஜி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, கோபம் இருப்பதில் என்ன தவறு?

திரு. ஆர். சக்தி மோகன்: மக்கள் தற்காலிக ரீதியில் காட்டிய மன மாற்றத்தைக் கண்டு மனம் உடைந்து விடவில்லை. ஜனநாயகக் கர்த்தா சாக்ரடீஸ் கூறிய மாதிரி ஜனநாயகத்தில் எவரும் மந்திரிகளாக வந்துவிடலாம். ஆனால் மந்திரிகளாக வந்தவுடன் வெறும் மந்திரிகளாக மட்டுமல்லாமல் மனிதாபிமானம் உள்ள மனிதர்களாகவும் விளங்க வேண்டுமென்று சாக்ரடீஸ் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சாக்ரடீஸ் இல்லை, பிளாட்டோ சொன்னான்.

[1974 மார்ச் 15

திரு. ஆர். சக்தி மோகன் : அவர் தமக்கு வக்கமும், ஏமாற்றமும் ஏற்பட்ட நிலையிலும் மந்திரியாக மட்டும் இல்லாமல் மனிதர்களை மதிக்கும் மனிதனாக வாக்களித்த, வாக்களிக்காத எல்லா மக்களின் நலனிலும் அக்கறை காட்டும் மனிதரில் மனிதராக நின்று இந்த நிதி நிலை அறிக்கையை ஆட்சிக்கு இலக்கணமான சாதுரியத்தோடு சமர்ப்பித்திருக்கிறார்கள். தமக்குள்ள பொருளாதாரத் திறமையைக் கொண்டு, இது பட்ஜெட் தானே என்று கூறி எவரும் ஒதுக்கி விடாத வகையில், அற்புதமானதொரு பொருளாதாரக் கட்டுரையாக இதனை ஆக்கிக் கொடுத்திருக்கிறார்கள். பலரும் பல முறை படிக்கும் விதத்தில் இது அமைந்திருக்கிறது. வரி விதிப்பு இருக்கிறது என்றாலும், வள்ளுவர் கூறிய மாதிரி வண்டு, தேன் எடுத்தாக வேண்டும். ஆனால் அந்த மலரும் வாடக் கூடாது என்ற முறையில் கலைஞர் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே வரியையும் போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த வரி கொடுக்கிறோம் என்ற உணர்வு மக்களிடத்தில் ஏற்படாத வகையில் இந்த பட்ஜெட் அமைந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

மத்திய சர்க்கார் பட்ஜெட் எடுத்த எடுப்பிலேயே சாதாரண மனிதனின் முடியை காலி செய்கிற நிலையில் இருக்கிறது. குறிப்பாக ஒன்றிரண்டை மட்டும் சொல்வோமானால், இரயிலில் பிளாட்பாரம் டிக்கட் எடுத்த எடுப்பிலேயே 25 காசாக இருந்தது, 50 காசாகிவிட்டது. சாதாரணமாக மனைவி, மக்களை ஊருக்கு அனுப்ப 4 பேர் சென்றால், முதலில் 2 ரூபாய் கொடுத்து பிளாட்பாரம் டிக்கட் வாங்கித் தான் உள்ளே செல்லவேண்டிய நிலை. இதை அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, நாடே எதிர்த்தது. பல அறிக்கைகளையும், அறிவிப்புகளையும் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அடுத்தது, பெட்ரோல். பெட்ரோல் விலை ஏறியிருக்கிற ஏற்றத்தைப் பார்க்கிற போது, ஐக்கிய நாட்டு சபையின் அறிவிப்புப்படி சவுதி அரேபியாவில் ஒரு லிட்டர் பெட்ரோல் 65 காசு என்று கூறப்படுகிறது. அந்த பெட்ரோலுக்கு நமது நாட்டில் 2 ரூபாய் 11 காசு வரி விதிக்கிறார்கள். ஒரு லிட்டர் 1.66-லிருந்து திடீரென்று 2 ரூபாய் 76 பைசாவுக்கு ஓங்கிவிட்டது. அதே மாதிரி ஒரு நாள் இரவு 3 ரூபாய் 6 காசு என்று உயர்ந்து விட்டது. பெட்ரோல் என்பது சாதாரணமாக இன்றைக்கு ஏழை, பணக்காரர் அத்தனை பேர்களுக்குமே தேவை. அரசாங்க அலுவலகங்கள் கிட்டத்தட்ட 8 மைல், 9 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. முனிசிபாலிடிகள் அதிக தூரத்திற்கு அப்பால் இருக்கிறபோது, சொந்தக் கார் வைத்திருக்கிறவர்கள் தங்கள் கார்களில் போகிறார்கள். சொந்தக் கார் இல்லாதவர்கள் பஸ்ஸில் சென்றாக வேண்டும். பெட்ரோல் பொதுத்தேவை. இந்த மாதிரி பெட்ரோல் தேவைகள்





அதிகப்படுத்தப்பட்டு, விநியோகத்தைக் குறைப்பதன் மூலம் மக்கள் எந்த அளவிற்குக் கஷ்டப்படுவார்கள் என்பதை நாட்டுப் பொறுப்பில் இருப்பவர்கள் கவனிப்பார்களா? 56 கோடி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக 56 கோடி மக்களில் மெஜாரிட்டியாக உள்ள ஏழை மக்களைத் துன்புறுத்துவது முறையா?

அடுத்து, நேற்று நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதி அறிக்கையின் இரண்டாவது பகுதியைப் படித்துக் காட்டினார்கள்.

"அனைத்திந்திய அளவில் இன்று பெரியதொரு பொருளாதார நெருக்கடி குமுறிக்கொண்டிருக்கிறது. உற்பத்திக் குறைவும், பற்றாக்குறையும், கட்டுக்கடங்காத விலையேற்றமும், தேசிய மட்டத்தில் புரையோடிக்கொண்டிருக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்கள் மட்டுமின்றி, தொழிலுக்கு அடிப்படைத் தேவைகளான மூலப்பொருள்கள், உலோகங்கள், எண்ணெய், உரம் போன்றவைகள் போதிய அளவிலும், தங்கு தடை

(பிற்பகல் 4.20)

யின்றியும் கிடைப்பதற்கு வழியில்லாத சூழ்நிலை நாட்டின் பொருளாதாரத்தை வாட்டிக்கொண்டிருக்கிறது. அதை எல்லோரும் அநேகமாக உணருகிறார்கள். நாட்டிலே இன்றைக்கு இருக்கிற பயங்கரமான பொருளாதார நெருக்கடி, நாளைக்கு எங்கே போய் முடியுமோ என்று நாமெல்லாம் உண்மையில் அஞ்சிக் கொண்டிருக்கிறோம். மக்களுடைய பீதியை கலைஞர் அவர்கள், தம்முடைய பட்ஜெட் உரையிலே பிரதிபலித்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு நாடெங்கும் பொருளாதார நெருக்கடி இருக்கிறது. நாட்டில் சண்டையில்லை. எங்கும் சமாதானம் நிலவிக்கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் நல்ல முறையில் உற்பத்தி இருக்கிறது. ஏராளமான அணைக்கட்டுகளை நாம் கட்டியிருக்கிறோம். இருந்தபோதிலும் நாட்டிலே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நேற்றைய தினம் திரு. ஆறுமுகசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல், அகில இந்திய மட்டத்தில் தேசிய ஒழுங்கு குறைந்து போய்விட்டது. அதுமட்டுமல்ல, தேசியக் கட்டுப்பாடும் குறைந்து போய்விட்டது. குறைந்து போய்விட்டதென்று சொல்வதைவிட, அநேகமாக இல்லாமலே போய்விட்டது என்றே சொல்லலாம். எங்கு பார்த்தாலும் கட்டுப்பாடு இல்லாமை இருப்பதன் காரணமாக, எதைச் சொன்னாலும் எதிர்ப்பு இருக்கிறது. எட்டும் இரண்டும் பத்து என்றால், உடனடியாக அதை ஒத்துக்கொள்வதில்லை. அதற்கு ஒரு புரட்சி செய்து, எட்டும் இரண்டும் பத்து என்று நிரூபிக்க வேண்டியிருக்கிறது.

நண்பர்கள் சொன்ன மாதிரி, தேசிய அளவிலே பிராந்திய உணர்வு நிறைந்து போய்விட்டது. இதற்கு காங்கிரஸ் ஆட்சிதான் காரணம். காரச்சித் தீர்மானத்தின்படி மொழி வழி மாநிலம் என்று சொன்னார்கள். அதிலிருந்துதான் பிராந்திய உணர்வு ஏற்பட்டது. அன்றைக்கு ஒரே இந்தியா என்ற அடிப்படையில் சுதந்திரத்தை வாங்க வேண்டுமென்ற நோக்கம் இருந்தது. ஆனால் சுதந்திரம் வந்துவிட்டால், அந்த சுதந்திரத்தை எப்படி வகிப்பது என்பதற்குத் திட்டமிட்டுக்கொள்ளாமல், அன்று பிராந்தியங்களில் இருந்த பெரியவர்கள் மக்களுடைய மனப்பான்மையை ஒட்டி, பிரதேச உணர்வை ஒப்புக்கொள்ளும் நிலையில் இருந்தார்கள். மொத்தத்தில் அந்நிய ஆட்சியை ஒழிக்க வேண்டும்; அதற்காக என்ன செய்ய வேண்டுமென்றாலும் செய்யலாம்; பிரதேச வாதம் பேசினாலும் சரி; எப்படியும் சுதந்திரம் வந்தால் போதுமென்ற ஒரே நோக்கத்தோடு, அவர்கள் சுதந்திர இயக்கத்தை முடுக்கி விட்டார்கள். சுதந்திரம் வந்துவிட்டது. அதற்குப் பிறகு ஒரே இந்தியா என்ற அடிப்படையில், தேசீய ஒருமைப்பாட்டுக்கு, ஒரே தலைமையில் இந்த நாட்டைக் கொண்டு வர வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்த சாத்தியமில்லாமல் போய் விட்டது. காரணம், அன்றைக்கு அரசியல் நிர்ணய சபை, திட்டங்களைத் தயாரிக்கும்போது அடிப்படையிலே ஒரே இந்தியா என்பதை அமுல் படுத்த வேண்டுமென்ற நோக்கம் தலைவர்களுக்கு இருந்திருந்தால், இன்றைக்கு மாநிலத்திற்கு ஒரு மந்திரி சபை என்ற நிலை ஏற்பட்டிருக்காது. ஒரே இந்தியா என்று சொல்கிறோம். ஆனால் மாநிலத்திற்கு ஒரு மந்திரி சபை, மாநிலத்திற்கு ஒரு சட்ட மன்றம், மாநிலத்திற்கு ஒரு மேலவை எல்லாம் இருக்கின்றன. காஷ்மீரத்தை எடுத்துக்கொண்டால், அதை 'இன்டிக்ரல் பார்ட் ஆப் இந்தியா' என்று சொல்கிறோம். இந்தியாவைச் சேர்ந்ததென்று சொல்கிறோம். ஆனால் அதற்குத் தனியாக அரசியல் நிர்ணயச் சட்டம் இருக்கிறது. அங்கிருக்கும் முதலமைச்சருக்கு பிரதம மந்திரி என்று பெயர். சுதந்திரம் வாங்கும் நேரத்தில், எதிர் காலத்தில் இந்தியா எப்படி இருக்க வேண்டுமென்று திட்டமிடாமல் இருந்ததால்தான், இப்போது காவிரி நீர்ப் பிரச்சினை வந்திருக்கிறது. ஆறு நம்முடையது. ஆனால் ஊற்று அவர்களுடையது. இதற்கு அவர்களிடம் பஞ்சாயத்துப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஒரு பிரதேச வாதம் மொழிவழி அடிப்படையில் இருப்பதால், அதை அனுமதித்து நீடித்ததன் காரணமாக, தேசீய ஒருமைப்பாடுபற்றி மக்களுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டிய நிலையில் சுதந்திரமடைந்து ஏறத்தாழ 30 வருடங்களாகியும் இருக்கிறோம் என்பதை வருத்தத்தோடு இந்த நேரத்தில், தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நமது எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு போன்றவர்கள் இங்கே இருக்கிறார்கள். தேசிய ஒருமைப்பாட்டுக்கு நாம் நம்மை எந்த அளவுக்கு ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டும்; அதற்கான பிரச்சாரங்கள் என்னவென்று உணர்ந்து, நாம் சுதந்திரம் வாங்கியதற்குப் பெற்றிருந்த தகுதியை, அதை வகிப்பதற்குப் பெறவில்லை என்பதை உணர்ந்து, அதைப் பெரும் தகுதிக்கு அனைவரையும் உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, விலையேற்றத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் இந்த அறிக்கையில் அழகாகக் கூறியிருக்கிறார்கள். விலையேற்றம் என்பதை உண்மையில் ஆராய்ந்தோமானால், விலை ஒன்றும் ஏறவில்லை. எல்லாச் சாமான்களின் விலைகளும் அந்தந்த இடத்தில்தான் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாணயத்தின் மதிப்புதான் குறைந்துவிட்டது. மூன்று அணா—அதாவது 17 பைசா கொடுத்து வாங்க வேண்டிய சாமான்களை ஒரு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு நாணயத்தின் மதிப்புதான் குறைந்து விட்டது. 3 அணா சாமான்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம். உற்பத்தி குறையவில்லை. எங்கு பார்த்தாலும் உற்பத்தி பெருகிக்கொண்டிருக்கிறது. நம் பிரஜா உற்பத்தி எந்த அளவுக்கு மேம்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு நமது உணவு உற்பத்தியும் மேம்பட்டு வருகிறது. எனினும் இந்த விலையேற்றம் எப்படி ஏற்பட்டது என்றால், ரூபாயின் மதிப்பு குறைந்து விட்டது என்பது தான் காரணம். ரூபாயின் மதிப்பு குறைந்துவிட்டதென்று சொல்ல கொஞ்சம் சங்கடப்படுகிறோம். ரூபாய்க்கு 17 பைசா என்று மதிப்பிட்டு, ஊதியங்களை உயர்த்த வேண்டும். இந்த பட்ஜெட்டில் கலைஞர் அவர்கள் என்.ஜி. ஓக்களுக்கு 10 ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அது கிட்டத்தட்ட ஒரு ரூபாய் 70 காசுதான். ரூபாய் தான் 10. இப்போது 100 ரூபாய் ஊதியம் என்பது கிட்டதட்ட 17 ரூபாய்தான். இந்த விகிதாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், 500 ரூபாய் ஊதியத்தை 4,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டும். அப்போதுதான் இன்றைக்கு இருக்கிற பண்டங்களுக்குச் சரியான விலை கொடுப்பதாகும். ஒரு காலத்தில் சைனாவைப்பற்றிக் குறிப்பிடும்போது சொல்வார்கள். பையிலே நோட்டுக்களை எடுத்துக் கொண்டு போனால், பையிலே காய்கறிகளை வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்ற நிலை இருந்தது. அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருந்தது. நம்முடைய கலைஞர் அவர்கள் 500 ரூபாய் ஊதியத்தை, 4,000 ரூபாயாக உயர்த்தினால், அது தவறாகாது. மேலும் அது பெருமையுங்கூட. அதைக் காட்டி, நாம் வெளி நாடுகளில்கூட பெருமையும் சேர்த்துக் கொள்ளலாம். நேதாஜி அவர்களுடன், சைனாவில் இரண்டு மணி நேரம் தங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சியாங்-கே-ஷேக்கின்

[திரு. ஆர். சக்தி மோகன்] [1974 மார்ச் 15

சுங்கிங் சர்க்கார், வான்சிங்வெய்யின் நான்கிங் சர்க்கார், கம்யூனிஸ்ட் சர்க்கார்—ஆக மூன்று சர்க்கார்கள் சைனாவில் நடந்துகொண்டிருந்தன. நான் அங்கு பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தேன். அங்கு நிறைய இந்தியப் போலீசார் இருந்தார்கள். அவர்களுடைய சட்டைகளெல்லாம் ஒட்டுப் போட்டதாக இருந்தது. எல்லோரும் அப்படி ஒட்டுப் போட்ட சட்டைதான் போட வேண்டுமென்பது நிபந்தனையோ எனச் சந்தேகித்து அங்கே இருந்த ஒரு போலீசாரை—அவர் தமிழ் நாட்டிலுள்ள தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்; அவர் பெயர் கூட ஏகாம்பரம் என்றார். அவரைக்—கூப்பிட்டு, எல்லோரும் ஒட்டுப்போட்ட சட்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்களே, அந்தச் சட்டைதான் போட வேண்டுமா என்று கேட்டேன். "அதெல்லாம் ஒன்றுமில்லீங்க, இவர்கள் கொடுக்கிற சம்பளத்திற்கு ஒட்டுப் போட்ட சட்டையைத் தவிர, வேறு எதைப் போடுவார்கள்?" என்று அவர் சொன்னார், உடனே உங்களுக்கு எவ்வளவு சம்பளம் என்று கேட்டேன், 10,000 ரூபாய் என்று சொன்னார். சீன நாணயத்தில் 10,000 ரூபாய். 10,000 ரூபாய் சம்பளம் வாங்கும்போது, ஒட்டுப் போட்ட சட்டை எதற்காகப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டேன். ஒரு அரிசி மூட்டை விலை 7,000 ரூபாய்; ஒரு கெஜம் துணி விலை 170 அல்லது 180 ரூபாய் என்று அவர் கணக்குச் சொன்னார். எனவே 10,000 ரூபாய் சம்பளம் என்பது சரிதான். அப்படிப்பட்ட ஒரு நிலை அங்கே இருந்தது. இந்தியாவில் பல அரசுகள் இல்லை, ஒரு அரசுதான் நடக்கிறது. என்றாலும்கூட, இங்கிருக்கிற விலையேற்றத்தைப் பார்த்தால், பயங்கரமாக இருக்கிறது. ஆகவே கலைஞர் அவர்கள், இந்தியாவுக்கு முன்னோடியாக இருக்கிற வகையில், சம்பள விகிதத்தை ரூபாயின் மதிப்புப்படி உயர்த்திக் கொடுத்து, எல்லா வழிகளிலும் முன்னோடியாக இருக்க வேண்டும். பொருள்களை அதிகமான விலைக்குக் கொள்முதல் செய்து, மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வழி செய்ய வேண்டும். டெல்லியில் பாசுமதி என்ற அரிசியை 4 ரூபாய்க்கு வாங்கி, காஷ்மீரில் 90 காசுக்கு விற்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுக்காகவும், மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் டெல்லி சர்க்கார் 4 ரூபாய்க்கு வாங்கி, 90 பைசாவுக்குக் கொடுக்கிறார்கள். அது மாதிரி தமிழ் நாடு சர்க்கார் பொருள்களை அதிக விலைக்குக் கொள்முதல் செய்து, குறைந்த விலைக்குக் கொடுத்து, மக்களிடம் நல்ல அரசு என்ற பெயர் எடுக்க வேண்டும். அதன் மூலம் ஏற்படுகிற இழப்பை, நஷ்டக் கணக்கில் எழுதி வைக்கலாம். அதில் தவறில்லை.



1974 மார்ச் 15] [திரு. ஆர். சக்தி மோகன்]

அதோடு அரசாங்கச் சிப்பந்திகளுக்கு இன்றைய நிலையில் பணமாகக் கொடுப்பதைவிட, அவர்களுடைய மாதாந்திரத் தேவைக்கான பட்டியலைப் பெற்றுக்கொண்டு, அரிசி, பருப்பு, மிளகாய் போன்ற பொருட்களாகக் கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன். நாம் அவர்களுக்குக்

(பிற்பகல் 4.30)

கொடுப்பது 300 ரூபாய், 400 ரூபாய், அல்லது 500 ரூபாய் சம்பளம். எல்.ஐ.சி. கடைநிலை ஊழியர் 690 ரூபாய், 700 ரூபாய் சம்பளம் பெறுகிறான் என்று பெருமையாகப் பேசுகின்றோம். அவனுக்கு இருக்கின்ற குடும்ப பாரத்தைப் பார்த்தால், 690 ரூபாய் போதவில்லை, மேற்கொண்டு கடன்பெற்றுதான் குடும்பத்தை நடத்துகின்றேன் என்று சொல்லுகின்றான். இதற்கெல்லாம் மாற்றாக, அரசாங்கமே தானியங்களைக் கொள்முதல் செய்து, சம்பளத்திற்குப் பதிலாக பண்டங்களையே தாற்காலிக முறையில் கொடுக்க ஏற்பாடு செய்தால் கூட நல்லது என்று கருதுகிறேன். அதை இந்த அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமான சில தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. சினிமாத் துறையும் தேசியமயமாக்கப்படும் என்று பெரும்பாலான மக்கள் எதிர்பார்த்தார்கள். அது ஏனோ விடப்பட்டிருக்கிறது. சினிமாத் துறையையும் அரசாங்கம் மேற்கொண்டு, அந்தத் துறையின் மூலம் தேச ஐக்கியத்தையும், தேசிய ஒழுக்கத்தையும் மேம்படுத்தும் வகையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். கருத்தடைத் திட்டம் அமுலில் இருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம் கொடுத்து வந்த ஊக்கத் தொகை 100 ரூபாய் இப்போது 60 ரூபாயாகக் குறைக்கப்பட்டுவிட்டதால், அதிலே இருக்கின்ற ஊக்கம் குறைந்துவிட்டது. உண்மையிலே கருத்தடை செய்து கொள்வது ஒரு தேசியக் கடமையாகும். ஒவ்வொருவருக்கும் அந்தக் கடமை இருக்கிறது. அதைச் செய்வதற்குக் கூட, அரசாங்கம் பணம் கொடுத்து ஊக்குவிக்க வேண்டிய துர்பாக்கிய நிலையிருப்பதைப் பார்த்தால், தேசியக் கடமை மக்களிடத்தில் அணுகவில்லை; அணுகக்கூடிய அளவுக்குப் பிரசாரம் செய்யப்படவில்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், கருத்தடை செய்துகொள்வது என்பதில் யாருக்கும் கருத்து மாறுபாடில்லை. ஆனால் அதற்கு உபயோகப்படுத்தப்படும் கருவிகள் இருக்

[திரு. ஆர். சக்தி மோகன்] [1974 மார்ச் 15

கின்றனவே—என்னென்னவோ பெயர் சொல்லுகிறார்கள்; நிரோத் என்றும், லூப் என்றும் சொல்லுகிறார்கள்—அவற்றிற்கு நம்முடைய மாநிலத்தைப் பொருத்த மட்டிலாவது தடை விதித்தால் நல்லது. ஏனென்றால், கருத்தடை என்பது திருமணம் செய்துகொண்டவர்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டியது. இதிலே சட்டத்தைக் கூட சற்றுக் கடுமையாக மாற்றலாம். திருமணம் செய்துகொள்கிறவர்கள், அவர்கள் வீட்டிலே செய்துகொண்டாலும், ரிஜிஸ்தர் செய்துகொள்ள வேண்டும் என்று சட்டத்தைப் போட்டு, திருமணப் பதிவு அலுவலகத்திலிருந்து எவ்வளவு பேர் திருமணம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கணக்கிட்டு, அவர்கள் அத்தனை பேருக்கும், 2 அல்லது 3 குழந்தைகளுக்கு மேல் பிறந்தால் தண்டனை தரப்படும் என்று சட்டத்தைக் கடுமையாக்கிவிடலாம் என்று கருதுகிறேன். இப்போது அந்தக் கருத்தடைக் கருவிகள் இருப்பதால் என்ன தவறு என்று கேட்டால், கல்யாணம் ஆகாதவர்கள் அதை உபயோகப்படுத்துகின்ற தவறான வழிக்குச் செல்கிறார்கள். இந்தப் போக்கு இப்படியே தொடர்ந்து போயிற்று என்றால், இன்னும் 5 அல்லது 10 வருடங்களில் நம்முடைய நாட்டிலே உத்தமிகளுக்கு, பத்தினிகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுகிறேன். இது மக்களுடைய அபிப்பிராயம் என்பதை நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற கூட்டத்தில் நான் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். விடுதலைப் போராட்ட வீரர்கள், குறிப்பாக ஐ.என்.ஏ. வீரர்கள், காலமாகிவிட்டால், அவர்களுடைய மனைவிமார்களுக்குப் பென்ஷன் தொகையை வழங்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொண்டதற்கு இணங்க, அவர்களும் பென்ஷன் மனு போடலாம் என்று நமது முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதற்காக விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்பில் நன்றி கூறிக்கொள்கின்றேன். மாபெரும் தேசிய வீரர் தேவர் அவர்களுடைய சமாதியை தேசியமயமாக்கி அரசாங்கப் பொறுப்பில் பராமரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து, இந்த அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அதற்காகவும் நன்றியைக் கூறி இம்மட்டுடன் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேரம் இருக்கின்றபோது பேச முன்வர மாட்டேன் என்கிறீர்கள். நாள் ஆக ஆகப் பெயரைக் கொடுக்கிறீர்கள். தினமும் அவைக் கூட்டம் 5½ மணிக்கு அல்லது 6 மணிக்கு முடிந்துவிடுகிறது. கேள்விகளும் 8 நிமிடங்களில் முடிந்துவிடுகின்றன. You are not prepared to divide the time among yourselves.



1974 மார்ச் 15]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** பேரன்புக்குரிய தலைவரவர்களே, நமது அருமை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, சிறந்ததொரு அறிக்கை. அதை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் முழுமனதுடன் நான் ஆதரிக்கிறேன். வணிகர்கள் நீண்டகாலமாக தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் விற்பனை வரி, ஒரு முனை வரியாக (சிங்கிள் பாயிண்டில்) வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, அவர்கள் திருப்திப்படும் அளவுக்கு ஒரு நல்ல அமைப்பாக இந்த அறிக்கையிலே கொண்டு வந்ததற்காக நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

சமீபத்தில், ஹைக்கோர்ட்டிலே கவர்ண்மெண்ட் பிளீடராக ஒரு முஸ்லீமை நியமித்திருக்கிறார்கள். அதற்காக இஸ்லாமிய சமுதாயத்தின் நன்றியை நான் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநிலம் நீண்டகாலமாக உணவு தான்யங்களில் பற்றாக்குறை மாநிலமாக இருந்து வந்தது. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்த மாநிலம் பற்றாக்குறை மாநிலம். திரு. காமராசர் 9 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார். அந்தக் காலத்திலும் இந்த மாநிலம் பற்றாக் குறை மாநிலம்தான். திரு. பக்தவத்சலம் அவர்கள் சுமார் 3 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார். அவர் காலத்திலும் இந்த மாநிலம் பற்றாக் குறை மாநிலம்தான். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இன்றைக்கு இந்த மாநிலம் உபரி மாநிலமாகக் காட்சியளிக்கிறது. நான் நிச்சயமாகச் சொல்வேன், காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்து இன்று வரைக்கும் தமிழகத்தில் ஆண்டுகொண்டிருந்திருந்தால், இன்றைக்கும் இந்த மாநிலம் பற்றாக்குறை மாநிலமாகத்தான் இருந்து கொண்டிருக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததும் ஏற்பட்டுள்ள சாதனை அவர்களுடைய பெருமையை எடுத்துக்காட்டுகிறது.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் இருந்திருக்கும் என்று சொல்லுகிறார். பிராஜெக்ட்கள் பூராவும் காங்கிரஸ்காரர்கள் போட்டவை. அதெல்லாம் ரிகார்டில் இருக்கிறது. மேலும் மக்களில் 100-க்கு 80 பேர் விவசாயிகள். அவர்கள் செய்த சாதனையை வைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு சாதித்தது என்று சொல்லக்கூடாது. மக்களுடைய உழைப்புதான் முதல் சாதனை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஏதோ ஒப்புக்குத் திட்டம் போட்டார்கள். ஒரு பலனும் அளிக்காத திட்டங்களாக இருந்தன. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று ஆர்வத்துடன் திட்டம் தீட்டி, இன்றைக்கு நாம் பெருமிதப்படக்கூடிய அளவுக்கு உபரி மாநிலமாக மாறியிருக்கிறது. அதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் சொல்லிக்கொள்வேன்.

சென்ற மாதம் 9-ஆம் தேதி அன்று என்று நினைக்கிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டியுடன் நான் டில்லி நகரத்திற்குப் போயிருந்தேன். நமது ஜனாதிபதி கிரி அவர்களை எஸ்டிமேட்ஸ் கமிட்டி உறுப்பினர்கள் எல்லோரும் சந்தித்தோம். அவரைச் சந்தித்துப் பேசும்போது அவர் ஒன்று சொன்னார். "நீங்கள் எல்லாம் அதிர்ஷ்டசாலிகள். தெற்குப் பகுதியில் உள்ளவர்கள், நிம்மதியாகச் சாப்பிட்டு, அமைதியாக இருக்கிறீர்கள்" என்று திரு. கிரி அவர்கள் சொன்னார்கள். யாரிடத்தில் சொன்னார்கள் என்றால், தமிழக எம்.எல்.ஏ., எம்.எல்.சி.க்களைப் பார்த்துச் சொன்னார்கள். 'தமிழகத்தில் உள்ளவர்கள் அதிர்ஷ்டசாலிகள், நீங்கள் நிம்மதியாகச் சாப்பிட்டு, அமைதியாக இருக்கிறீர்கள்" என்று அவர் சொல்லியிருக்க வேண்டும். அவர் சார்ந்த கட்சியின் காரணமாக, அவர் அப்படிச் சொல்வது பொருந்தாது என்றாலும், அவர்களுடைய உணர்ச்சியில் வார்த்தைகளை மறைத்துக்கொண்டு பேசினாலும் தம்மை அறியாமலேயே தங்களுடைய வாய்கூட தமிழகத்தின் தலைமையில் உட்கார்ந்திருப்பவரைப் பாராட்டக்கூடிய நிலைமையிருக்கிறது என்றால், இதைத் தேடித் தந்த பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசைத்தான் சாரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எஸ்டிமேட்ஸ் கமிட்டி பல மாநிலங்களுக்குச் சென்றது. ஒவ்வொரு மாநிலத்தின் மக்களுடைய நிலைமையைப் பார்த்தால், மிகப் பரிதாபப்படக் கூடிய நிலைதான் இருந்தது. என்னை மிகவும் கவர்ந்த மாநிலம் பஞ்சாப் மாநிலம். அங்கே தொழில் அபிவிருத்தி நம்மைவிட அதிகமாக இருக்கிறது. அங்குள்ள மக்கள் நிறைய உழைக்கிறார்கள். அவர்கள் மிகவும் செழிப்பாக இருப்பதைப் பார்த்தேன். அந்த ஒரு மாநிலத்தைத் தவிர, மற்ற எல்லா மாநிலங்களும் மிகவும் பிற்பட்ட நிலையில், அவல நிலையில் இருப்பதைப் பார்க்கின்றபோது, அதையும், தமது மாநிலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நீங்கள் நம்பமாட்டீர்கள். நான் சொல்வதை . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நம்புகிறேன்

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அது நரகம், இது சுவர்க்கம் என்று சொல்கிற அளவுக்கு நமது மாநிலம் சிறந்த அமைப்பாக அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : இதை சொர்க்கம் என்று சொல்லுங்கள். ஆனால், அதை நரகம் என்று சொல்லாதீர்கள்.

(பிற்பகல் 4.40)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மற்ற மாநிலங்களோடு இதை ஒப்பிட்டு
அப்படித்தான் சொல்ல வேண்டிய நிலையை நான் காண்கின்றேன். இப்படி
நல்ல நிர்வாகம் இருந்தும், மக்களுக்கு மற்ற மாநிலங்களில் செய்யாத நன்மை
களையெல்லாம் செய்தும் கூட, மற்றவர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய பல
நன்மைகளைச் செய்திருந்தும்கூட, திண்டுக்கல், கோயம்புத்தூர், பாண்டிச்சேரி
போன்ற இடங்களில் நாம் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். இதை
வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்து
விட்டது, உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சில அறிஞர்கள்
சொல்கின்றார்கள். எந்த அளவுக்கு அந்த வாதம் பொருந்தும் என்பதை
அவர்களே சிந்தித்தால் அவர்களும் புரிந்து கொள்ளலாம். சமீபத்தில்
மகாராஷ்டிரத்தில் தேர்தல் நடந்தது. ராஜஸ்தானில் தேர்தல் நடந்தது.
அங்கெல்லாம் நான்கைந்து இடங்களில் அம்மையாருடைய கட்சி தோல்வி
கண்டது. ஒரேயொரு இடத்தில், ராஜஸ்தானில் மட்டும், அவர்கள் வெற்றி
பெற்றிருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் யாரும் அந்த அம்மையாரை ராஜி
நாமா செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. தொடர்ந்து ஆறு தோல்வி,
ஒரேயொரு வெற்றி மட்டும் பெற்ற நிலையிலேயும் யாரும் அவரை ராஜிநாமா
செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், இங்கே இரண்டு மூன்று இடங்
களில் தோல்வி கண்டவுடனே ராஜிநாமா செய்யுங்கள் என்று சொல்வது எந்த
அளவுக்கு நியாயமாக அமையும்? நமக்குச் சொல்கிற வாய்கள் அவர்களுக்
குச் சொல்லிவிட்டு நமக்குச் சொல்லியிருந்தால், பொருத்தமாக இருக்கும்.
ஏதோ சில தோல்விகள் கண்டுவிட்டால், ஒரு பிரளயமே வந்துவிட்டது
போன்று நினைப்பது சரியல்ல. அந்த அம்மையார் உத்தரப் பிரதேசத்திலே
சில வெற்றிகள் பெற்றிருக்கிறார்கள். ஒரிசாவிலேயும் வெற்றி பெற்றிருக்கிறார்
கள். மகாராஷ்டிரத்திலே தோற்றவர்கள், ராஜஸ்தானத்திலே தோற்றவர்கள்,
மற்ற இடங்களிலே வெற்றி கண்டுதான் இருக்கிறார்கள். இங்கே நாம் வெற்றி
வாய்ப்பை இழந்ததற்குக் காரணம், மற்றவர்கள் சொல்கிறார்கள், சினிமா
செல்வாக்கு, சினிமாக் கவர்ச்சி, என்று. நான் இதை ஒப்புக்கொள்ள

மாட்டேன். உண்மையிலே அது அல்ல காரணம். நாம் வெற்றி வாய்ப்பை இழந்ததற்குக் காரணம் உண்மையிலேயே நான் உணர்வதைச் சொல்கிறேன். நாம் மதுவிலக்கை ரத்து செய்ததால் மக்களிடத்திலே ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. அந்த வெறுப்புணர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டார்கள். மற்றவர்கள். ஆனால், இன்றைக்குக் கள்ளுக் கடைகளை மூடிவிட்டோம். அதனால் திண்டுக்கல்லில் நாம் கண்ட நிலையைவிட கொஞ்சம் சிறந்த நிலையை இன்றைக்குக் காண்கிறோம். ஆகவே நாம் தோற்றுவிட்டோம் என்று மனத் தளர்ச்சி கொள்ள வேண்டியதில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் சில மாதங்களில் சாராயக் கடைகளையும் மூடிவிடுவோம். அதையும் மூடிவிட்ட பிறகு எல்லோரும் விரும்பத்தக்க அளவுக்கு மக்களிடையே மாற்றம் வரும் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு உண்டு. இப்பொழுது சாராயக் கடைகள் இருக்கின்றன. அதனால்தான் கோயம்புத்தூரிலே தோற்றிருக்கிறோம். கள்ளுக்கடைகளை மூடியதுபோல் சாராயக் கடைகளையும் மூடியிருந்தால், கோயம்புத்தூர் முடிவு வேறுமாதிரி இருந்திருக்கும். இந்த மாதிரி இருந்திருக்காது என்று நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு நேருஜி காலத்தில் இந்தியாவின் 'மேப்'பைப் பார்த்தால், இந்தியா முழுதும், எல்லா மாநிலங்களிலும் நேருஜி கட்சியின் ஆட்சி இருந்தது. ஆனால், ஒரேயொரு மாநிலத்தில், கேரளததில் மட்டும், திரு. நம்பூத்ரிபாட் அவர்களுடைய கட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி இருந்தது. அதை நேருஜி அவர்கள் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதை எப்படியும் தீர்த்துக் கட்ட வேண்டுமென்று திட்டம் தீட்டினார்கள். டெல்லியிலேயிருந்து திருவனந்தபுரம் வந்தால், அங்கேயுள்ள கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆட்சியை மாற்றவேண்டுமென்றால், அது முஸ்லீம் லீக் கட்சியினுடைய ஆதரவைப் பெற்றால்தான் முடியும் என்ற நிலையை உணர்ந்துகொண்டதால், கண்யத்துக்குரிய காய்தே மில்லத் அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களை அப்படிச் சந்தித்து உடன்பாடு செய்து கொண்டார்கள். அந்த உடன்பாட்டினுடைய பலன் என்னவென்றால், அங்கே நம்பூத்ரிபாட்டினுடைய ஆட்சி இறக்கப்பட்டு, அங்கேயும் நேருஜி அவர்களுடைய கட்சியின் ஆட்சி வரக்கூடிய நிலை ஏற்பட்டது. திரு. பட்டம்தாணு பிள்ளை அவர்கள் நேருஜி அவர்களுடைய ஆதரவு பெற்று அங்கே ஆட்சிக்கு வந்தார்கள். அந்த நிலை இன்றைக்கு தமிழகத்தில் அமைகிறது. இன்றைக்கு இந்தியாவின் 'மேப்'பைப் பார்த்தால், எல்லா மாநிலங்களிலும் அம்மையாருடைய ஆட்சிதான்; தமிழகத்தில் மட்டும் கிரகணம் போல் எதிர்க்கட்சி ஆட்சி, நமது அருமை





டாக்டர் அவர்களுடைய ஆட்சி, நடந்துகொண்டிருக்கிறது. அம்மையாருக்கு, இந்த ஆட்சியைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. 'மேப்'பைப் பார்க்கும் போதெல்லாம், தமிழகத்தில் மட்டும் வேறு நிறம் தோன்றுகிறது. ஆகவே, இந்த ஆட்சியை மாற்ற வேண்டுமென்று அம்மையார் அவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை, கிடைக்கப் போவதுமில்லை. நான் ஏன் அப்படிச் சொல் கிறேன் என்றால், இந்த 'மேப்'பில் உள்ள இந்த நிறத்தையும் மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், பல முயற்சிகளில் அம்மையார் அவர்கள் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, இன்றைக்கு இரண்டு காங்கிரசும் ஒன்றாகச் சேரக் கூடிய முயற்சி எடுக்கப்படுகிறது என்பதை நாம் உணரத்தான் செய்கின்றோம். அப்படி அவர்கள் செய்வது நியாயம். செய்ய வேண்டியதுதான். நான் அதை வரவேற்கிறேன். ஆனால், அப்படிச் செய்வதில் சில அநியாயமான முறைகளைக் கையாள்கிறார்களே, அந்த முறைகள் வன்மையாகக் கண்டிக்கக்கூடிய முறைகள். குறிப்பாக சில பெரிய திட்டங்களை தமிழகத்தில் அமுலாக்க முடியாமல் தடை செய்கின்றார்கள். அதற்கு முட்டுக்கட்டை போடுகின்றார்கள். சேலம் உருக்காலைத் திட்டம் ஒரு பெரிய திட்டம். அந்தத் திட்டத்தைப் போட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகியும். மத்திய அரசு தடையுத்தரவு போட்டு, ஏதேதோ காரணங்களைச் சொல்லி அமுல்படுத்த முடியாமல் செய்து, நம்மீது மக்களுக்கு அதிருப்தி வரக்கூடிய நிலையை மறைமுகமாக உருவாக்குகிறார்கள். அதேபோல நெய்வேலியிலே இரண்டாவது சுரங்கத்தைத் தோண்ட வேண்டுமென்று நீண்டகாலமாக வற்புறுத்தி வருகின்றோம். அவர்கள் நியாயப்படி அதைச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், ஏதேதோ காரணங்களைச் சொல்லி. அதிலேயிருந்து அவர்கள் பலன் பெறக்கூடிய முயற்சியை மறைமுகமாகச் செய்துகொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது புதிதாக சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு 15 கோடி ரூபாய்க்கு உதவி இந்த ஆண்டு செய்வதற்குப் பதிலாக இந்த ஆண்டு 3 கோடி ரூபாய்தான் கொடுப்போம் என்று சொல்லி, எல்லா வேலைகளும் கந்தர்வகோளமாகப் போகக்கூடிய மறைமுகமான சதித் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். இம்மாதிரி முறைகளை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மற்ற மாநிலங்களுக்கு உதவி செய்வதுபோல் நமது மாநிலத்திற்கும் சரியான முறையிலே, நியாயமான முறையிலே உதவியளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட முறைகேடான செயல்களால் நியாயம் மறைந்து விடாது. என்ன முயற்சி எடுத்தாலும், கடைசியிலே நியாயம் வெற்றிபெறும் என்ற அளவிலே இந்த ஆட்சி நீடித்து நிலைத்திருக்கப்போகின்றது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

பணவீக்கத்தைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். பணவீக்கத்தைப் பற்றி நம்மீது குறை சொல்வதில் அர்த்தமில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். 10 சதவிகிதம் தான் நம்முடைய பொறுப்பு, 90 சதவிகிதம் பணம் அச்சிடுபவர்களின் பொறுப்பு என்று. அப்படி கரன்சி கன்ட்ரோல் அவர்கள் கையில் இருக்கின்றது. தேவைக்கு வேண்டிய அளவு பணத்தை அச்சிட்டுக்கொண்டேபோனால், பண வீக்கம் வரும். எல்லாப் பொருளின் விலையும் ஏறும் என்பதை சிறு குழந்தைகூட புரிந்துகொள்ளும். அதைத் தெரிந்துகொண்டும், நம் மீது பாய்வது முறையான குற்றச்சாட்டு அல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முஸ்லிம்கள் பிற்பட்டவர்கள் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த அறிவிப்பு இன்னும் கெஜட்டில் வரவில்லை. வெகு வெகு விரைவிலே கல்வியாண்டு துவங்க இருக்கின்றது. அதனால் தயவுசெய்து உடனடியாக கெஜட்டில் 'அறிவிப்பு வருவதற்கு வகை செய்ய வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, நம்முடைய அன்புக்குரிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 'டீச்சர்ஸ் ட்ரெயினிங் ஸ்கூல்' என்று உருது பேசக்கூடிய முஸ்லிம்களுக்கு 3 பள்ளிக்கூடங்கள் இருந்தன. அந்த 3 ட்ரெயினிங் ஸ்கூல்களையும் இப்பொழுது மூடியிருக்கிறார்கள். இந்த மூன்றும் வரக்கூடிய ஆண்டிலிருந்து துவக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன். கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு

(பிற்பகல் 4.50)

மற்றொன்றையும் கொண்டு வர விரும்புகிறேன். கோஷா பெண்கள் பள்ளிகளுக்குச் செல்லும்போது, மாட்டு வண்டிகளில் செல்வார்கள். இதற்கு முனிசிபாலிட்டி செலவு செய்து வந்தது. இப்படி மாட்டு வண்டிகளில் சென்று வருவது நீண்டகாலமாக இருந்து வருகின்ற பழக்கம். இந்த ஆண்டு வாணியம்பாடி, ஆம்பூர், பேர்ணம்பட்டு போன்ற இடங்களில், இந்த முறைக்குத் தடை உத்தரவு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால், அதை நீக்கி, முன்பு இருந்ததுபோல், அந்த கோஷா பெண்கள் மாட்டு வண்டிகளில் போய் வருவதற்குரிய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை மீண்டும் ஆதரித்து, நான் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின்முன் முதலமைச்சரும் நிதியமைச்சருமான கலைஞர் அவர்கள் வைத்துள்ள 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆழ்ந்து படித்தபின், எனக்கு





ஏற்பட்ட சில உணர்வுகளை வெளியிட விரும்புகிறேன். அதன் மீது பேசியவர்களில் பெரும்பாலோர் அதுவும், அரசை ஆதரித்துப் பேசியவர்களில் பலர், மத்திய பட்ஜெட்டையும், இந்த மாநில பட்ஜெட்டையும் ஒப்பிட்டு, உவமை காட்டிப் பேசினார்கள். அது தவறானாலும், தருமம் ஆனாலும், அதையே நானும் செய்ய விரும்புகிறேன். முந்தைய ஆண்டுகளில் இந்த உணர்வு நமக்கு ஏற்பட்டதில்லை. இந்த ஆண்டிலேதான் இரண்டு பட்ஜெட்டுகளையும் ஒப்பிட்டு நோக்கக்கூடிய அளவுக்கு அவற்றிடையே வேற்றுமையும், இடைவெளியும், ஏற்றத் தாழ்வும் இருக்கின்ற காரணத்தால், அவை நம் எல்லோரையுமே கவர்ந்திருக்கின்றன. நானும் பார்க்கிறேன், வடக்கே டெல்லியிலிருந்து வெளியிட்ட பட்ஜெட்டையும், தெற்கே சென்னையிலிருந்து வெளியிட்ட பட்ஜெட்டையும், அப்படிப் பார்க்கின்றபோது, இயற்கை நியதிப்படி வடக்கிலிருந்து வருவது வாடை, தெற்கிலிருந்து வருவது தென்றல்-என்று பேசப்படுகிறதே, அது போன்ற நிலைமையில் பட்ஜெட்டுகளினுடைய நன்மை, தீமைகள் அமைந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

மத்திய அரசுக்கு மேல் தளத்தில் உள்ளவர்களுக்கு வரி விதிப்பதற்கும், கீழ் தளத்தில் உள்ள வசதியற்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அளவுக்கு அதனிடம் குவித்து வைத்திருக்கின்ற அதிகாரங்களும், சேர்த்து வைத்திருக்கின்ற நிதி வசதிகளும் இருக்கின்றன. ஆனால், தமிழக அரசுக்கு அப்படிப்பட்ட நிலை இல்லை. அப்படி இருந்தும்கூட, மத்திய அரசினுடைய பட்ஜெட்டானது சாமான்யர்களைப் பாதிக்கக்கூடிய வகையில், தவிர்க்க மனம் இல்லாமலோ அல்லது நினைப்பு இல்லாமலோ, அது புதிய வரிகளை விதித்திருக்கிறது. இதுகாறும் "விலைவாசி உயர்வதற்கு மத்திய அரசு காரணமா அல்லது மாநில அரசு காரணமா?" என்பது விவாதத்திற்குரியதாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு இரண்டு பட்ஜெட்டுகளையும் ஒப்பு நோக்கிப் பார்க்கின்றபோது, மத்திய அரசு விதித்துள்ள வரிகளால் விலைவாசிகள் எந்த அளவுக்கு, எந்தெந்தத் துறையில் உயர்ந்திருக்கின்றன என்பதனைக் கடந்த சில நாட்களில் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். தமிழக அரசு தனது பட்ஜெட்டில் போட்ட புதிய வரியால்-வரி உயர்வால் எந்தப் பொருளின் விலையும் உயரவில்லை என்பதை அனுபவத்தில் கண்டுதான் வருகிறோம். "மத்திய அரசு விதித்துள்ள வரிகளால் விலை உயர்ந்த பண்டங்கள் எவை? தமிழக அரசு விதித்துள்ள வரிகளால் விலை உயர்ந்துள்ள பண்டங்கள் எவை?" என்று கேட்க வேண்டியிருக்கிறது. விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்பதை சாமான்ய மனிதன் கூடப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இந்த ஆண்டில் இரண்டு பட்ஜெட்டுகளும் இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். தமிழக அரசு பத்து கோடி

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 மார்ச் 15

ரூபாய்க்கு வரி உயர்வு செய்திருந்தாலும், அதிலே கிடைக்கின்ற நிதி
வசதிகளை சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள பண்டங்களை விற்போர்
களாக இருந்தாலும், வாங்குவோர்களாக இருந்தாலும், அல்லது அரசாங்க
சிப்பந்திகளாக இருந்தாலும் எல்லோருக்கும், பிரித்துக் கொடுக்கத் திட்டம்
போடப்பட்டிருக்கிறது. அற்ப சொற்ப நிதிவசதியை வைத்துக்கொண்டு,
திறமை காரணமாகவும், சக அமைச்சர்களுடைய ஒத்துழைப்பின் காரணமாக
வும் பொதுமக்கள் காட்டுகின்ற கடமையுணர்ச்சி காரணமாகவும், சட்டப்
பேரவையிலும், இந்த மன்றத்திலும் உள்ளவர்கள் கொடுக்கின்ற ஒத்துழைப்
பின் காரணமாகவும், திறமையான ஒரு பட்ஜெட்டை நம்முடைய முதலமைச்
சர்—நிதியமைச்சர் தயாரித்து அளிக்க முடிந்திருக்கிறது. ஆனால் சமுதாயத்
திலுள்ள சாமான்ய மக்கள் இன்னும் சிறந்த பட்ஜெட்டை எதிர்பார்க்கின்றார்
கள். இன்னும் கூடுதலான வசதிகளை எதிர்பார்க்கின்றார்கள். பழைய வரி
களில் சிலவற்றைக் கைவிடவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.
அவற்றைச் செய்யாததற்காக முன்னுரையில் சில பக்கங்களைச் செலவழித்து
முதலமைச்சர் அவர்கள் காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே பேசிய
வர்கள், குறிப்பாக, எதிர்க் கட்சி உறுப்பினர்கள், முதல் நான்கு பக்கங்களுக்கு
மேல் இடையிடையேயும் மத்திய அரசைக் குறை கூறுகின்ற, குற்றம் சொல்
கின்ற வாக்கியங்கள், கருத்துக்கள், வாசகங்கள் இருக்கின்றன என்பதை
எடுத்துக் காட்டினார்கள். நான் சொல்கிறேன், குறை கூறுவது வேறு;
குற்றம் சொல்வது வேறு. முதலமைச்சர் நிதியமைச்சர் அவர்கள், மத்திய
அரசைக் குற்றம் சொல்கின்ற வகையில், நான் தமிழ் படித்து அறிந்த வகை
யில் அவர் தமிழில் கொடுத்துள்ள பட்ஜெட் பேச்சைப் படித்துப் பார்த்துச்
சொல்கிறேன் எந்தச் சொல்லும் கிடையாது.

'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக்
காய் கவர்ந் தற்று'

என்ற குறளை அவர் அறிவார். எதிர்க்கட்சியினர் சொல்கின்றபடி அவர் குறை
சொல்லியிருக்கிறார் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆனால்,
நான் சொல்வேன், அது குறை சொல்வது அல்ல, விமர்சித்திருக்கிறார்.
மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள பொருளாதார உறவை, அரசியல்
உறவை, நிர்வாக உறவை, நம்முடைய முதல்வர் விமர்சனம் செய்திருக்கிறார்
அவ்வளவுதான். மத்திய அரசை விமர்சனம் செய்யும் ஒவ்வொரு இடத்திலும்,
'மத்திய அரசு ஏற்குமென்று நம்புகிறோம்', 'நல்லதே நடக்கும் என்று நம்பு
கிறோம்; கேட்டிருக்கிறோம்; கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்' என்றுதான்
குறிப்பிட்டிருக்கிறார். அவர் மத்திய அரசை விமர்சித்திருக்கின்ற எந்த இடத்
திலும் பிரிவினை உணர்ச்சி வெளிப்படவில்லை. இரண்டு அரசுக்கும் உறவை

நல்லபடி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தையே காட்டியிருக்கிறார். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் போட்டு விமர்சித்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். இதைக் குறை கூறியவர்கள் தேசிய ஒருமைப்பாடு என்றால் தங்களுக்குத்தான் சொந்தம் என்பது போன்ற ஒரு தவறான உணர்ச்சியை அடைந்திருக்கிறார்கள். மாநில சுயாட்சி கேட்பதால் எங்களுடைய தமிழரசுக் கட்சியோ திராவிட முன்னேற்றக் கழகமோ அவற்றின் ஆதரவாளர்களோ பிரிவினைவாதிகள் என்று யாரும் கருதிவிட வேண்டாம். சுயாட்சிக் கோரிக்கையின் பெயராலேயும், அதை மறுப்பதன் பெயராலேயும், இரு வேறு ஜாதிகளைப் படைத்து விட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கழகங்கள் சுயாட்சி கோருவது இந்த மாநிலத்தில் உள்ள நான்கு கோடி தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் உள்ள 55 கோடி மக்களுடைய நன்மைக்காகவும் தான், அதனுடைய சாதக பாதகங்களை ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோமே ஒழிய, அதை தேவையற்ற பிரச்சினையாக திசை திருப்பப்பட்ட பிரச்சினையாக ஆக்கி விடக்கூடாது என்று நான் விரும்புகிறேன். இந்த மாநிலத்தினுடைய, இந்தியா முழுவதினுடைய பொருளாதார நிலைமை எப்படிச் சீரழிந்து கொண்டு வருகிறது என்பதை முதல்வரவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிலே பொறுப்பு இருக்கிறது. இந்தியாவினுடைய ஒரு வராந்தா அல்ல இந்தத் தமிழ் நாடு. மொழியால், வரலாற்றால், பண்பால், அரசியலால், பிறவற்றால் இது ஒரு தனி நாடு என்று சொல்லத்தக்க தனித்தன்மை இருக்கிறது. ஒவ்வொரு மாநிலமும், அதே போல்தான் இருக்கிறது. அதனால்தான் தவிர்க்க நினைத்தும், மறுக்க முயன்றும் முடியாமல், அடக்கு முறைகளைக் கொண்டும் கட்டுப்படுத்தப் பார்த்தும் முடியாமல் போனபின் மொழிவாரி மாநிலக் கோரிக்கையை ஒத்துக்கொண்டு அமுல் நடத்தியிருக்கிறார்கள். இந்தத் தமிழ் நாட்டின் மீது இங்கு உள்ள 4 கோடி மக்களுக்கு, இங்கே உள்ள முதலமைச்சருக்கு, அவர் தம் சக அமைச்சர்களுக்கு இல்லாத அக்கறை, நமக்கெல்லாம் இல்லாத அக்கறை டெல்லிக்கு இருக்கிறது என்பதை நம்புகிறோம் என்று சொல்வது வெறும் பாசாங்கு. அவர்களுக்கு அக்கறையே இல்லை என்று சொல்வது எவ்வளவு பொய்யோ அதே போன்று தம்மை விட இந்தத் தமிழ் நாட்டின் மீது டில்லியிலுள்ளவர்களுக்குக் கூடுதல் அக்கறை இருக்கிறது என்று சொல்வதும் பொய். அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. ஆகவே, டெல்லியில் இருக்கின்றவர்கள் கையாளுகின்ற ஊதாரித்தனத்தால், டெல்லியிலே இரட்டை இலாகா முறையை வைத்துக்கொண்டு செலவழிக்கின்ற ஊதாரிச் செலவால், டெல்லி அரசைச் சுற்றி இருப்பவர்கள் கொடுக்கும் நிர்ப்பந்தங்களுக்கு ஏற்ப அவர்கள் செய்கின்ற வரி உயர்வால், இந்தியா

முழுவதும் சீரழிவதோடு, தமிழ்நாடும் சீரழியத்தான் செய்கிறது. இதனை நாம் அனுபவத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மத்தியில் உள்ள நிதி அமைச்சரை விட இங்கேயுள்ள நிதியமைச்சர், தமிழ் மக்கள் அன்றாடம் படும் அல்லல்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இதன் விளைவாக ஆத்திரப் படுகின்ற தமிழ் மக்கள் அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்வதற்குக் கிடைக்கும் முதல் குற்றவாளி இந்த அரசாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்த அரசு சொற்ப நிதி வசதிகளை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகின்றபோது, மத்திய அரசினுடைய தவறுகள் என்னென்ன என்று எடுத்துக் காட்டி, அந்தத் தவறுகள் எப்படி ஒரு பயங்கரமான பொருளாதாரச் சீர்கேட்டை, புரட்சியை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நமது முதல்வர் மக்களுக்கு நினைவூட்டி வருவது அவர் தமது கடமையைச் சரியான முறையில் செய்து கொண்டிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. மாநில சுயாட்சிக் கோரிக்கையை மறுத்துப் பேசுவதாலோ, மத்திய ஆட்சியை நிர்தாட்சண்யமாக விமர்சிப்பது கூடத் தேசத்துரோகம் என்று கூறுவதாலோ நாட்டினுடைய ஒற்றுமையைக் காப்பாற்றி விடமுடியாது. சுயாட்சி கேட்பவர்கள்தான் பிரிவினைவாதிகள், பிரிவினைக்கு வழி வகுப்பவர்கள் என்று நினைக்க வேண்டாம். குஜராத்தில் அராஜகம் நடக்கிறதே அது கூட பிரிவினைக்கு வழி செய்வதுதான். நேற்று ஆந்திராவில் நடந்ததே, அது கூட அந்நியனுக்கு அழைப்பு விடுவதுதான். எந்தக் காரணத்தினாலும் சரி இந்தியாவிலே ஒற்றுமையை, சட்டத்தை, ஒழுங்கைக் குலைக்கின்ற அராஜகம் எங்கேயாவது நடந்தாலும் அது அந்நியனுக்கு அழைப்பு விடுத்து இந்தியாவின் ஐக்கியத்தைச் சிதைக்கக்கூடியதுதான். அங்கெல்லாம் அராஜகங்களைச் செய்கின்ற வட்டாரத்தார், அராஜகங்களை ஊக்குவிக்கின்ற வட்டாரத்தார், இங்கே சுயாட்சி கேட்கின்றவர்களைப் பார்த்து பிரிவினை வாதிகள் என்று சொல்லுகிறார்கள். இப்படி அடிக்கடி சொல்வதால் பிரிவினையைப்பற்றி இருக்கின்ற பயமே போய்விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. அந்தத் தவறைச்

(பிற்பகல் 5.00)

செய்ய வேண்டாமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், யாரும் இங்கே பிரிவினை கேட்கவில்லை. ஒரு மாநில அரசு மத்திய அரசை இந்த அளவிற்கு விமர்சனம் செய்வது உறவிற்கு ஊறு செய்யாதா என்று கேட்பவர்களை நானும் திருப்பிக்கேட்கிறேன். "மத்திய அமைச்சர்கள் இங்கே வரும் போதெல்லாம், இங்குள்ள மாநில அமைச்சரவை பற்றி விமர்சனம் செய்கின்றார்களே" என்று. 'ஆறு திங்களிலே தமிழகத்தில் ஒரு புரட்சியே நடக்கப் போகிறது, ஆட்சி கவிழப்போகிறது' என்று கூட மத்திய அமைச்சராக உள்ள





ஒருவரே பேசியதை கொஞ்சகாலத்திற்கு முன்பு கேட்டோம். இப்படி மத்திய அமைச்சர்கள் இங்கு வரும்போதெல்லாம் மாநில அரசு பற்றிக் குறை கூறுவதை 'இது மத்திய மாநில உறவினைக் காப்பதற்கு உதவாது' என்று மிக அன்போடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதை இப்போது நினைவுபடுத்துகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதல் நான்கு பக்கங்களிலே, விமர்சித்திருக்கிறார்கள். மத்திய அரசின் பேரிலே குறை சொல்லவில்லை. குற்றம் சொல்லவில்லை. புகார் கூடச் சொல்லவில்லை, என்னைக் கேட்டால் முதல்வர் இன்னும் கொஞ்சம் தீவிரமாக விமர்சிக்க வேண்டுமென்று சொல்லுவேன், ஊடல் வேறு, பகை வேறு, இலக்கியம் படித்த முதல்வருக்கு இது நன்ருகத் தெரியும். மத்திய அரசோடு பகை கொள்ள வேண்டாம், ஊடல் கொள்ளுங்கள். அதனிடம் உள்ள தவறுகளை எடுத்துச்சொல்லி, சிறிது இடித்துக்கூறுவதன் மூலம்தான் இந்த நாட்டிற்கு வேண்டிய வசதிகளைத் தேடிக்கொள்ள முடியும். ஒன்ரு இரண்டா, மத்திய அரசோடு மாநில அரசுக்கு உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லுவதற்கு? ஒவ்வொரு துறையிலும் இருக்கிறதே! இங்கே தி.மு.க. வைச் சார்ந்தவர் மத்திய அரசிடமுள்ள குறையை எடுத்துச்சொல்லுகின்றார் என்ற காரணத்தினால், கட்சி வேறுபாடு இருப்பதாலே அதிலே காழ்ப்புணர்ச்சி வந்து விடுகின்றது. பய உணர்ச்சி வந்துவிடுகின்றது காங்கிரஸ்காரர்களுக்கு! குஜராத்திலே என்ன நடந்தது? நேற்று வரையில் முதலமைச்சராக இருந்த சிமன்லால் படேல் சொன்னார், 'நான் கேட்டபடி சீக்கிரம் உணவு தானியம் அனுப்பப்படவில்லை என்றால், குஜராத்தே தீப்பற்றி எரிந்துவிடும்'. என்று. அராஜகம் இன்றுள்ள அள்விற்கு வளராத நேரத்திலேயே மத்திய அரசை அவர் எச்சரிக்கை செய்தார். 10 ஆயிரம் டன் உணவினைத்தான் கேட்டார். அப்போது அனுப்பப்படவில்லை. பிறகு அவர் என்ன அறிக்கை விட்டார்? 'என்னை வெளியேற்ற வேண்டும் என்பதற்கு காலத்தோடு உணவினை அனுப்பவில்லை. என்னை வெளியேற்றிய பிறகு மறுநாளே வந்து சேருகிறது. இதுதானு நியாயம். மத்திய ஆட்சி உதவுதன் லட்சணம் இதுதானு?" என்று கேட்டார். கோஷ்டிச் சண்டைக்கும் கட்சிப் பூசலுக்கும் ஒரு எல்லை வேண்டும், அளவு வேண்டும். மாநில மக்களுடைய பசி, பஞ்சம், பட்டினி இவற்றை வளர்த்துவிடப் பார்க்கும் அளவிற்கு மத்திய சர்க்கார் தன்னிடம் வைத்துக்கொண்டுள்ள உணவுத் துறையைப் பயன்படுத்துமானால், இதைவிட நாட்டின் ஐக்கியத்தைக் குலைப்பதற்கு வேறு என்ன இருக்க முடியும்? கட்சி வேறுபாடுடைய ஆட்சி நடக்கும் தமிழ் நாடு குஜராத்துக்கு அரிசியை அனுப்பி உதவியிருக்கிறது. ஆனால், மாநிலத்திலும் மத்தியிலும் ஒரே கட்சியின் ஆட்சியிருந்தும், கோஷ்டிப் பூசல் காரணமாக மத்திய ஆட்சி

குஜராத் மாநிலத்திற்குத் தேவைப்படும் உணவு தானியத்தை காலத்தோடு அனுப்பத் தவறிவிட்டது. 'இதுதான் இன்றைக்கு குஜராத்தில் நடக்கும் கலவரங்களுக்கெல்லாம் காரணம்' என்று குஜராத்தின் முன்னுள் முதலமைச்சர் அவர்கள் வெந்த உள்ளத்தோடு சொன்னார்கள். அப்படிச் சொன்னதன் விளைவு என்ன? அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். அவர் சொன்னது பிழை என்று பிரதமர் அவர்கள் மறுக்கவில்லை, மத்திய உணவுத் துறை அமைச்சர் மறுக்கவில்லை, 'சிமன் லால் பட்டேல் அநீதியாகக் குற்றம் சாட்டினார்' என்றோ அவர் சொன்னதே உண்மையில்லையென்றோ அவர்களிலே யாரும் மறுக்கவில்லை. படேலின் குற்றச் சாட்டுக்கு பிரதமர் அவர்கள் மௌனமாகக் கொடுத்த பதில், அவர் கட்சியிலிருந்து தூக்கி யெறியப்பட்டதாகும்.

மாநில, மத்திய உறவைக் காப்பதில் நான் எல்லோருடனும் உடன்பட்டிருக்கின்றவன். அதிலே முதலமைச்சர் அவர்களோடு சேர்ந்து உடன்படுகிறேன். ஆனால், இப்படி மத்திய அரசைப் புகழ்ந்து பேசுவதாலேயே அதற்கு மாநில அரசோடுள்ள உறவைக் காப்பாற்றிவிட முடியாது. மத்திய நிர்வாகத்திலேயே உள்ள குறைகளைச் சற்று அழுத்தமாக எடுத்துச் சொல்லி அதிலே இந்த ஆட்சிக்கு கை கொடுப்பதன் மூலமேதான் அந்த உறவைக் காப்பாற்ற முடியும் என்று நான் கருதுகிறேன். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் நேற்றுப் பேசியபோதுகூடச் சொன்னார்கள், "எங்கு பார்த்தாலும் மொழிவாரிக் கிளர்ச்சிகள், சண்டைகள்" என்று. அப்படி ஒன்றும் இங்கே கிடையாது. வடபுலத்தில் நடைபெறும் மதக் கலகங்களை நோக்கும்போது, அஸ்ஸாமிலே அஸ்ஸாமியருக்கும் வங்காளிகளுக்கும் ஏற்பட்ட மொழிச் சண்டையைப் பார்க்கும்போது தமிழ் நாட்டிலே அப்படி ஒன்றும் சண்டை இல்லை. அற்பசொற்ப நிகழ்ச்சியை பெரிதுபடுத்திச் சொல்லி அது பெரிதாவதற்கு நாம் இடம் கொடுத்துவிடக்கூடாது. தேசிய ஒற்றுமையில், ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவன் என்ற முறையில் நான் மீண்டும் அதை வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நேற்று முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே, மிகச் சிறப்பாக, அழகாக, வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, மொழிவழி சிறுபான்மையோருக்கு உறுதி கூறினார்கள். இந்த நாட்டிலே மொழி வழி சிறுபான்மையோர் என்றால் யார்? தமிழர்களோடு தமிழர்களாகக் கலந்துவிட்டவர்கள் வேறு. 'ஃப்ளோட்டிங் பாபுலேஷன்' என்பது வேறு. இந்த நாட்டிலே நிலைத்து தமிழரோடு தமிழராகக் கலந்து விட்ட இரு மொழியினருக்கு எல்லாவிதமான உரிமைகளும் உண்டு என்று முதல்வர் உறுதியாகச் சொன்னார். ஆனால் அதே நேரத்திலே





அவர் சொன்னார், 'தென்னிந்தியாவிலே ஒரே ஒரு கேரள இராஜ்யம் தான் இருக்க முடியும்' என்று. வார்த்தைகளைத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கு உள்ள எச்சரிக்கையை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன். நான் ஒன்றை இங்கு நினைப்பூட்டுகிறேன், திண்டுக்கல்லில் தேர்தல் முடிவு தெரிந்த மறுநாள் வெற்றியைக் கொண்டாட கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்தில் ஐம்பது கார்கள் ஊர்வலமாகப் போகின்றன. சென்னையிலுள்ள ஒரு காலைப் பத்திரிகை முதல் பக்கத்திலே கட்டம் கட்டி இந்தச் செய்தியைப் பிரசுரித்தது. திருவனந்தபுரத்தில் ஐம்பது கார்கள் கொண்ட ஊர்வலம் என்றால், அங்கே வாழ்ந்துவரும் தமிழர்களிடம் அவ்வளவு கார்கள் இல்லை ஊர்வலம் விடுவதற்கு. ஆக, திண்டுக்கல் தேர்தல் முடிவு தெரிந்தபோது ஐதராபாத்தில் வெற்றிவிழா கொண்டாடப்படவில்லை. அப்படி அங்கே கொண்டாடியிருந்தால், அரசியல் ரீதியாக எடுத்துக்கொள்ளலாம். பம்பாயில் கொண்டாடியிருந்தால், அதற்குக் கட்சி அரசியல் காரணம் என்று சொல்லலாம். வங்காளத்திலே, கல்கத்தாவிலே கொண்டாடியிருந்தால், அதற்கு அரசியல் காரணம் என்று சொல்லலாம். வேறு எந்த இராஜ்யத்திலும் கொண்டாடாமல் கேரள ராஜ்ஜியத்தில் திருவனந்தபுரத்தில் வெற்றி ஊர்வலம் விடப்படுகின்றது என்றால், தமிழர்கள் என்ன ஏமாந்த சோணகிரிகளா? இப்படிப்பட்ட செய்திகளைப் படிக்கும் போது அவர்களுக்கும் சூடு சொரணை வரத்தான் செய்யும். இதனை, சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்லுகின்றேன். இதைத்தான் முதலமைச்சர் அவர்கள் ரொம்பவும் அழகாகச் சொன்னார், 'தமி ர்களைக் குறைவானவர்களாக எண்ணிவிட வேண்டாம்' என்று.

கோவையில் அண்மையில் துணைத் தேர்தல் நடந்தபோது, ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்துவிட்டதாகப் பொய்ச் செய்தி ஒன்று கட்டிவிடப்பட்டது ஒரு கட்சித் தலைவரைப் பற்றி. அவ்வளவுதான். அன்றைக்கு இரவு நடந்த அமளியிருக்கிறதே, அது வருணிக்க இயலாதது. அந்த அமளியில் பங்கு கொண்ட மொழிவழிச் சிறுபான்மையினர் யார்? அன்று நான் கோவை நகரில் இருந்தேன். நடந்து முடிந்த அமளிகளைப்பற்றிக் கேள்விப்பட்டேன். இந்தப் போக்கை தமிழ் நாட்டிலே நீடிக்க விரும்புவார்களானால், பின்னால் என்ன நடக்கும் என்பது பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. காங்கிரஸ் காரர்கள் தேசியத்தின் பெயரால் இதற்கெல்லாம் உடந்தையாக இருக்கப் போகின்றார்களா? நடுநிலை பிறழ்ந்து, எங்களோடுகூட வரவேண்டாம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது நீங்கள் வெளிப்படையாக இவற்றையெல்லாம் கண்டிக்கும் வகையில் அறிக்கை விட்டிருந்தால், நிச்சய மாக அது ஒருமைப்பாட்டு உணர்விற்குப் பலமூட்டுவதாக இருந்திருக்கும்.

பெண்களுடைய வாக்குகளைக் கேட்கும் முறையில்--அதை இங்கே உவமையாகக் கூறுவதற்குக்கூட நா கூசுகிறது, தயக்கமாக இருக்கின்றது, ஒரு கட்சியின் தலைவர் சொன்னாராம், தமிழ் நாட்டிலுள்ள பெண்கள் ‘அவர்களுடைய கணவன்மார் சொன்னாலும் அதன்படி நடக்க மாட்டார்கள், நான் சொல்லுகிறபடி தான் போடுவார்கள் அவர்களுடைய ஓட்டுக்களை’ என்று. வேதனையாக இருக்கின்றது இத்தகைய அரசியல் தலைவர்களை நினைக்கும்போது. நான் கூட இல்லை, எதிர்க் கட்சித் தலைவாவர்களுக்கு வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன், கோவையிலே கூட்டத்திற்குக் கூட்டம் தலைவர் காமராஜர் அவர்களே இதைக் கண்டித்துப் பேசியிருக்கின்றார்கள். இந்தப் போக்கெல்லாம் தமிழ் நாட்டில் வேறு எதை உண்டாக்கும்? இனச் சண்டையை அல்லாமல் வேறு எதை வளர்க்கும் என்று நினைக்கின்றீர்கள்? இத்தகைய தவறுகளை இனியும் செய்ய வேண்டாமென்று அந்தத் தலைவரைக் கூடக் கேட்டுக் கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தையும், தமிழரசுக் கழகத்தையும்விட, காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சியும் முன் வந்து இது போன்ற இனவெறிகளைக் கண்டிக்க வேண்டும்.

மதுவிலக்கைப்பற்றி முஸ்லீம் லீகின் தலைவாவர்கள் குறிப்பிட்டார்கள், மதுவிலக்கு முழுமையாக அமுல் நடத்தப்படவில்லை. இந்த ஆண்டு அது முழுமை பெறப் போகிறது, அதில் இரண்டுவித அபிப்பிராயத்திற்கு இடமில்லை. அதைப்பற்றி ஒன்றும் சொல்லவும் அவசியமில்லை.

திரு. கே. ராஜாராம்: சென்ற கூட்டத்திலேயே சொல்லிவிட்டதால் இப்போது ஒன்றும் சொல்லவில்லை.

திரு. ம. பொ. சிவஞானம்: எதிர்க் கட்சித் தலைவாவர்களே, தமது வாயால் பிரம்ம ரிஷி என்று சொல்லிவிட்டதால், நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. கே. ராஜாராம்: நீங்கள் கேட்டதற்கு போன தடவையே பதில் சொல்லிவிட்டார். ஆகவே வேறு என்ன சொல்ல இருக்கின்றது?

திரு. ம. பொ. சிவஞானம்: அவரே ஆதரவாகச் சொல்லிவிட்டபோது நான் என்ன சொல்லுவது? ஆனால் திரு. வகாப் அவர்கள் சொன்னதற்காகச் சொல்லுகிறேன்; மதுவிலக்கை அமுல்படுத்துவது அல்லது கைவிடுவது என்பது தேர்தல் வெற்றி தோல்விக்காக அல்ல. இதை மறந்துவிடக்கூடாது. திண்டுக்கல் தேர்தலுக்கும் மதுவிலக்குக் கொள்கைக்கும் சம்பந்தப்படுத்துவது



நியாயமல்ல. திண்டுக்கல் தேர்தலில் தி.மு.க. தோல்வி அடைந்ததற்கோ கோவையில் தோல்வி அடைந்ததற்கோ மதுவிலக்கை விட்டதுதான் காரணம் என்று யாரும் போக வேண்டாம். அந்தப் பிரச்சினை ஒரு கட்சியின் வெற்றி தோல்விக்கு அப்பாற்பட்ட தேசியப் பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை. சமுதாயத்தில் உள்ள ஏழை எளியவர்களின் பிரச்சினை, குறிப்பாக நாட்டிலுள்ள பெண்களின் கண்ணீரைத் துடைக்கும் பிரச்சினை. இதிலே கட்சிக் கண்ணோட்டமில்லாமல், நாட்டிலே பரிபூர்ணமான மதுவிலக்கை இந்த ஆண்டிலேயே நமது அரசு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்கைக் கொண்டுவருவதற்கான முடிவினை எடுத்துக்கொண்டதற்காக நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டுகிறேன். போற்றுகிறேன்.

பட்ஜெட்டிலே ஒரு குறைபாடு; ஆம்; பாராட்டிக்கொண்டே இருக்கும் நேரத்திலே இடையில் ஒரு குறைபாட்டையும் சொல்ல வேண்டியிருக்கின்றது. எனக்கு என சில துறைகளை வைத்துக்கொண்டிருக்கிறேன். அந்தத் துறைகளைப் பற்றியும் நான் அரசின் மீது குற்றம் குறை சொல்வதற்கு இல்லை. ‘உந்துவது’ என்று சொல்லுவார்களே, அந்த முறையில் ஒரு சிலவற்றை அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இதைச் சொல்லுவதால் “ஆளும் கட்சியுடன் ஊடல் செய்கிறார் ம.பொ.சி.” என்று சிலர் எண்ணக்கூடும், ஆளும் கட்சிக்கும் எனது தமிழரசுக் கட்சிக்கும் ஊடல்கூடக் கிடையாது. இதுதான் சிலருக்கு வருத்தம். இதில் ஊடல்கூட இல்லை.

எல்லாவற்றுக்கும் நிதி ஒதுக்குகின்றீர்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கான குடியிருப்புக்கு என பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உண்மையிலேயே நாகம் போன்று காட்சியளித்து வரும் அந்தப் பகுதிகளை நகரப்பகுதிகளாக, நாகரீகமான குடியிருப்புகளாக மாற்றுவதற்காக தனிக் கார்ப்பொரேஷனை அமைத்திருப்பதானது, இந்தியாவிற்கே வழி காட்டத் தக்க வகையில் அமைந்திருக்கின்றது. உண்மையிலேயே காந்தியடிகள் இன்று இருந்திருந்தார்களானால், இந்த ஒரு காரியத்திற்காக அவர் மனம் நெகிழ்ந்து உங்களுக்கு வாழ்த்து அனுப்பியிருப்பார். பிற்பட்ட பகுதியினருடைய மேம்பாட்டிற்காகக் கூடுதலாக நிதி ஒதுக்கீட்டைச் செய்திருக்கின்றீர்கள். ஆனால் நமது தாய் மொழி பிற்பட்டிருக்கின்றது. ஏனோ தெரியவில்லை, எதிர்க் கட்சித் தலைவாவர்கள் உள்பட யாருமே தமிழ் மொழி பற்றிக் குறிப்பிடவில்லை. “அது எனக்கு என்றே விட்டு வைக்கப்பட்டுள்ள பெருமையோ” என்று எண்ணுகிறேன். எல்லாவற்றுக்கும் நிதி ஒதுக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இதற்குக் காணோம். நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் தமிழ்மொழி இன்னும் பிற்பட்டுத்தான் கிடக்கிறது. நாடு விடுதலை

அடைந்த பிறகு தமிழ் மொழியின் விடுதலைக்கு என ஒரு முழுத் திட்டம் வகுத்திருக்கவேண்டும். அந்தத் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்து வதற்காக . . .

**திரு. கே. ராஜாராம்:** தமிழ் வளர்ச்சிக்கு என பல பரிசுகள் வழங்க வேண்டுமென்று அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

**திரு. ம. பொ. சிவஞானம்:** ஏனோ தெரியவில்லை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை ஆதரிப்பதில் இன்று என்னோடு போட்டி போடுகின்றார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கின்றார்கள், பிற மொழிகளின் வளர்ச்சிக்கு என இங்கே நிதி ஒதுக்கவில்லை என்று நான் குறை சொல்ல இருக்கின்றேன். அதற்காகத்தான் முன்னோடியாக இப்போதே இதைச் சொல்லிவிடுகிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பிறமொழி யாளர் என்பது இப்போது தான் தெரிந்தது. நான் இந்த விஷயத்தில் அரசைக் குறை சொல்லவில்லை. எதிர்க் கட்சித் தலைவரவர்களே, அரசை ஆதரிக்குமளவிற்கு வந்தபிறகு நான் கொஞ்சம் கூடுதலாகக்கூட அரசைக் குறை சொல்லலாம் என்று எண்ணுகிறேன். தமிழ் வளர்ச்சித் திட்டத்தில் ஒரு முழுமை வேண்டும். நம் நாடு விடுதலை பெற்றபோது நம்மோடு சேர்ந்து விடுதலை பெற்ற இலங்கை, பர்மா, மலேசியா மற்றும் வடபுல மாநிலங்களிலே தத்தம் மொழிக்கென தனியாக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கி அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றார்கள். அவசியமானால், அதிகாரபூர்வமான குழு ஒன்றினை நியமித்து அந்த இடங்களுக்கெல்லாம் அனுப்பிப் பாருங்கள். நமது நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே அங்கேயும் ஆங்கிலத்தின் ஆதிக்கம் இருந்தது. அவர்கள் நம்மோடு சேர்ந்து விடுதலை பெற்றபிறகு ஆங்கில ஆதிக் கத்தைப் படிப்படியாக விலக்கி வந்திருக்கின்றார்கள். இது உண்மையா இல்லையா என்பதை அறிவதற்கு ஒரு அதிகாரியை அனுப்பிப் பாருங்கள். வேண்டுமானால் மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையே அனுப் புங்கள். அப்போது நான் சொல்லுவது சரி என்பதனை அவரே அறிந்து கொள்ளுவார். மலாய் மொழி வளர்ச்சிக்கென மலேசியாவில் பத்து கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அன்றைக்கு அந்த மொழியில் ஆறும் வகுப்புக்கான பாட நூல்கள்கூட இல்லை. ஆனால் இப்போது, உலக மொழிகளிலுள்ள இலக்கி யங்களையெல்லாம் மலாய் மொழியிலே மொழி பெயர்த்துக்கொண்டு தங்கள்



மொழியினை வளர்த்திருக்கின்றார்கள். அங்கே சென்றிருந்தபோது, நாவலர் அவர்கள்கூட அந்த அற்புதத்தைப் பார்த்தார்கள். இது போன்றே பக்கத்தி லுள்ள இலங்கையிலும் ஆங்கிலத்தை அகற்றுவதில் தீவிரம் காட்டுகின் றார்கள். ஆனால் தமிழ் மொழிக்கு உரிமை அளிக்க மறுத்து தவறிழைக்கின் றார்கள். அதனாற்றான், அங்கே தமிழுக்கும் சிங்களத்திற்கும் சண்டை. ஆம், தமிழுக்கு உரிய இடமளிக்கப்படவில்லை. எனவே, அங்கே போராட்டம். இதையெல்லாம் நினைவில் கொண்டு தமிழ் மொழி வளர்ச்சிக்கு எனத் தனியாகத் திட்டம் தீட்டி, அதற்கெனத் தனியாக நிதியினை ஒதுக்கி, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு என ஒரு வாரியத்தினை அமைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வாரியத்தில் எனக்கு ஒன்றும் மோகமில்லை. ஆனால், வாரியத்தின் மூலம்தான் காரியங்கள் சிறப்பாக நடக்கின்றன. இதனை

(பிற்பகல் 5.10)

இந்த மாநிலம் தான் பிற மாநிலங்களுக்குக் காட்டியிருக்கிறது. பிற மாகாணத் தவர் இங்கு வந்து குடிசை மாற்று வாரியத்தின் சாதனையைப் பார்த்து விட்டுப் போனார்கள். அதைப்போன்று அவர்களும் செய்ய விரும்புகிறார்கள். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு வாரியத்தை அமைக்கிறீர்கள். தண்ணீர் வாரியத்தை அமைத்திருக்கிறீர்கள். அதுபோல தமிழுக்கும் ஒரு வாரியம் அமைத்து, முழு அளவில் திட்டம் வகுக்க வேண்டும். தமிழ் வளர்ச்சிக் கழகம் இருக்கிறது. தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம் இருக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்புக் குழு இருக்கிறது. அவற்றிடையே ஒரு இணைப்பு இல்லை. அவற்றில் உள்ளவர்கள் துண்டு துண்டாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதிலே வேகம் இல்லை. அதிலே வேகமும் இணைப்பும் காட்டுவதற்கு முழுத் திட்டம் வகுத்து, அதை ஒரு வாரியத்தின் கையில் ஒப்புவித்தால், இன்னும் சிறப்பாக நடக்கும். விஞ்ஞான, அறிவியல் நூல்கள் தமிழில் இன்னும் நாம் பெருமைப்பட்டுக்கொள்ளக்கூடிய அளவிற்கு வந்துவிடவில்லை. இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மனுடைய நினைவுச் சின்னம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டிருப்பதாக முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அடிக்கல் நாட்டி விட்டும் வந்தார்கள். அங்கு எனக்கே நினைவுச் சின்னம் வைப்பது போன்று ஒரு மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன். அவலமாகச் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். மகிழ்ச்சியாகச் சொல் கிறேன். ஏன்? இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடிய அவனை கொள்ளைக்காரர் என்றே சரித்திர ஆசிரியர்களெல்லாம் சாதித்துவிட்டார்கள். அந்தப் பழியைத் துடைத்து, தூசி போக்கி, மாசு அகற்றி, அவன் மான

மருவற்ற பத்தரை மாற்றுத் தங்கமென்று உலகத்திற்குக் காட்டினேன். அதனால், இந்த அரசு இன்று நினைவுக் கோட்டை அமைக்க முயல்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நோத்திலே சில திட்டங்களை—முதலமைச்சரவர்கள் என்னைக் கேட்காவிட்டாலும்—நானாகச் சொல்கிறேன். அங்கு, கட்டபொம்மனுடைய தளபதியாக இருந்த வெள்ளையத் தேவனுக்கும் நினைவுச் சின்னம் வேண்டும். கட்டபொம்மனுக்காகப் பாடுபட்டு தன் தலையையே கொடுத்தான் தானாபதிப் பிள்ளை. தானாபதிப் பிள்ளையின் தலையை வெட்டி முச்சந்தியிலே நிறுத்தி உலகம் பூராவும் பார்க்கட்டும் என்று சொல்லி வெள்ளையர் கொடுமை செய்தார்கள். இவ்வளவு பெருங் கொடுமைக்கு கட்டபொம்மன் கூட இலக்கு ஆகவில்லை. அந்த தானாபதிப் பிள்ளைக்கும் அங்கே நினைவுச் சின்னம் வைக்க வேண்டும். அவர் ஊரே அந்தப் பக்கம்தான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, புதியதாகக் கட்டப்படுகிற அந்தக் கோட்டையில் நடுவில் ஒரு கொலு மண்டபம் அமைக்கப்பட்டு, அந்த கொலு மண்டபத்தில் கட்டபொம்மனும், மாண்புமிகு சிலம்புச் செல்வர் சொல்கிற அந்த வீரர்களுடைய திருவுருவங்களும் அமைக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** மிக்க மகிழ்ச்சி. இதையெல்லாம் முன்பே எனக்குச் சொல்லியிருந்தால் நான் கேட்டிருக்க மாட்டேன். கட்டபொம்மன் கோட்டை எழுப்பும் முயற்சி ஒரு ஜாதியின் வளர்ச்சியாக, புகழ்ச்சியாக ஆகிவிடாமல், பாஞ்சைப் புரட்சியில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் பெருமைபடுத்த வேண்டும். அவர்கள் நம்முடைய வீரர்கள் என்ற உணர்வு தென் பாண்டிப் பகுதியிலும், மற்ற தமிழ்ப் பகுதிகளிலும் உள்ளவர்களுக்கு ஏற்படுத்துவதற்குத்தான் கட்டபொம்மனுடன் சேர்ந்திருந்த வீரர்களுக்கும் நினைவுச் சின்னம் வைக்க வேண்டுமென்று சொன்னேன். அந்தக் கோட்டை மொகல் ஆர்கிடெக்ட்சர் முறையில் அமைக்கப்படுகிறது என்று ஒரு பத்திரிகையில் குறை கூறியிருந்ததைப் பார்த்தேன். அதில் என்னையும் சேர்த்துக் குறை கூறியிருந்தார்கள். அந்த ஆர்க்கிடெக்ட்சர் யோசனையை முதல்வரவர்களுக்கு நான்தான் சொன்னேன் என்று எழுதுகிறார்கள். முதல்வர் நல்லது செய்தால், அதனை நான் சொன்னேன் என்று எழுதுவதில்லை. இதை நான் சொல்லவில்லை. மொகல் ஆர்க்கிடெக்ட்சர் முறை அப்படி இருந்தால், அதை தமிழ் நாட்டு முறைப்படி மாற்றுங்கள். இதிலே தங்களுக்கே அக்கறை உண்டு. பூம்புகாரில் தமிழ் நாட்டுக் கட்டிடக் கலைப்படி செய்திருக்கிறீர்கள். அப்படியே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறந்த முறையில் அந்த நினைவுச் சின்னம் முதல்வர், கலைஞரின் பெருமைக்குச் சான்றாக நிற்கும்.

இஸ்லாமிய சாம்ராஜ்யம் போய்விட்டது, முகலாயச் சக்கரவர்த்திகள் எல்லாம் போய்விட்டார்கள். ஆனால், ஷாஜஹான் ஆக்ராவில் கட்டிய கலைக்கோயில் இன்னமும் அவனுடைய கலை உணர்வை உலகுக்கெல்லாம் அறிவித்துக்கொண்டிருக்கிறது. அதுபோல, முதல்வரவர்களுடைய, அவருடைய சக அமைச்சர்களுடைய, அவரது ஆட்சியினுடைய கலை உணர்வை, தமிழ் உணர்வை, கலாசார உணர்வை உலகுக்கு பூம்புகார் கலைக்கோயிலும், கட்டபொம்மன் ஞாபகார்த்தக் கோட்டையும் அறிவித்துக்கொண்டிருக்கும்.

சென்னையிலே வள்ளுவர் நினைவுக் கோயில் அமைக்கப்போவதாக நிதி நிலை அறிக்கையில் முதல்வரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1919-ம் ஆண்டில் பாரதி எழுதினார். "திருவள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போது இருக்கிறது. அது இப்போது மிகவும் ஏழை நிலையில் இருக்கிறது. அந்தக் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும்" என்று பாரதியார் எழுதியது 1919-ல். அதன் பிறகு,—எதிர்க் கட்சிக்காரர்கள் தவறாக எண்ணக் கூடாது, இடைக் காலத்தில் அந்தப் பாரதியினுடைய பாதையில் வந்தவர்கள் பாராண்டும் கூட, அவர்கள் இவ்வளவு நாட்கள் செய்யவில்லை—அந்த பாரதி கண்ட கனவை நினைவாக்க வள்ளுவர் நினைவுக் கோயில் எடுக்கும் அரசினுடைய திட்டத்தை இந்த நிதி நிலை அறிக்கையில் படித்தபோது, நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். பாரதியின் ஆன்மா அமைதிபெறும். பாரதியின் ஆன்மா உங்களை வாழ்த்தும். தமிழ்த் தாய் உங்களை வாழ்த்துவாள். தமிழ் இனம் உங்களை வாழ்த்துகிறது. தமிழ் மொழிக்கு, தமிழ் கலாசாரத்திற்கு, தமிழ் இனத்தின் தனி உரிமைகளுக்கு நீங்கள் காவலராக நிற்கின்றீர்கள். நீங்கள் செய்துள்ளவற்றை எல்லாம் உங்களுக்குப் பின்னால் எந்தக் காலத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், பின்பற்றும். இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், கடந்த காலத்தில் ஆட்சி புரிந்தவர்கள் செய்திருக்கிற குறைகளை எடுத்துச் சொல்வது பிழையல்ல. இனி நீங்கள் ஆட்சிக்கு வந்தால், —வருகிறேன் என்று சொல்கிறீர்களே,—ஒருவேளை திரும்பவும் பழைய தவறுகளைச் செய்து விடுவீர்களோ என்று திரு. அப்துல் வகாப் அவர்களுக்குப் பயம். இனிமேல் அப்படிச் செய்யாமல் இருப்பதற்காக அவர்கள் உங்கள் கட்சி செய்த தவறுகளைச் சொல்கிறார்கள். நீங்கள் வந்தால் பாஞ்சாலக் குறிச்சிக் கோட்டையை இடித்துவிட முடியுமா? பூம்புகார் கலைக் கோயிலை இடித்து விட முடியுமா? முடியாது. இன்னும் அதைச் செய், இதைச் செய் என்று கேட்பதற்கு நாங்களும் இங்கு இருப்போம். இவ்வளவு அருமையான பணியினைச் செய்கிற ஆட்சிக்கு என்னுடைய வாழ்த்தைக் கூறி, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே நான் குறை சொல்வதற்கு, கோபித்துக்கொள்வதற்கு

ஒன்றுமில்லை. திரும்பவும் சொல்கிறேன், தமிழுக்கெனத் தனித் திட்டம் வகுத்து, தனி வாரியம் அமைத்து, இந்த ஆண்டில் துணை பட்ஜெட் வரும் நேரத்திலேனும் அதில் தனியாக நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, வீரபாண்டிய கட்டபொம்மன் ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வந்ததாகக் கூறுகிறார்களே, அவர் தமிழரா, தெலுங்கரா? இந்த ஐயப்பாடு இருக்கிறது. இந்த ஐயப்பாட்டினை துணைத் தலைவரவர்கள் தீர்ப்பதற்கு விளக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: அவர் கேட்டது சரிதான். அந்தக் குப்பைகளைக் கிளறிக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தெளிவுப்படுத்தக் கோரியது நியாயம். நான் சொல்கிறேன். இந்த நாட்டின் மண்ணுக்கு, இந்த நாட்டின் உரிமைக்கு, தன்னுடைய தலையைக் கொடுத்து, ஆட்சியைக் கொடுத்து, தன் உயிரையும் கொடுத்த அவன் தமிழன் இல்லையென்றால் வேறு யார்? தமிழனே கிடையாது தமிழ் நாட்டில், என்றுதான் சொல்ல வேண்டும். ராஜராஜ சோழன் தமிழினத்திற்கு எப்படிப் பெருமை தேடினானோ, அவனுக்குப் பின்னே வந்த ராஜேந்திர சோழன் தமிழினத்திற்கு எப்படிப் பெருமை தேடினானோ, அதே பெருமை கட்டபொம்மனுக்கு உண்டு. கிழக்கிந்தியக் கம்பெனி இந்த நாட்டில் காலூன்றிய காலத்திலே விடுதலைப் போரை முதன்முதலிலே துவக்கியவன் அவன். ஒரு சான்று சொல்கிறேன். நாடு விடுதலை பெற்றபோது கூட, 600 சமஸ்தானங்கள் வடக்கே இருந்தன. கிழக்கிந்திய கம்பெனி இங்கு வந்தபோது, அதை எதிர்க்க வேண்டிய பொறுப்பும், பலமும் யாருக்கு இருந்ததென்றால், மன்னர்களுக்கும், மன்னர் படைகளுக்கும்தான். அப்போது தென்னாட்டில் இருந்ததெல்லாம் 5 சமஸ்தானங்கள்தான். வட நாட்டில் ஆயிரம் சமஸ்தானங்கள். அப்படியிருந்தும் அவைகளெல்லாம், பிரிட்டிஷாரை எதிர்க்கவில்லை. ஒரு 100 ஆண்டுக்காலம் கப்பம் கட்டி, ஆங்கிலேயர்களின் தோழமையைப் பெற்று, அவர்களுக்கு உதவி புரிந்து கொண்டிருந்தன. பின்னர் 1857-ல் தான் சிப்பாய்ப் புரட்சி நடந்தது. ஆனால் வீரபாண்டிய கட்டபொம்மன் அன்னியருக்கு வளைந்து கொடுக்க மறுத்தான். "அடையாள பூர்வமாக ஒரு முறை கப்பம் கொடுத்தால் போதும், பிறகு கொடுக்க வேண்டாம்" என்று அன்னியர் கேட்டபோது, "வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி" என்று கேட்டான். அவன் தமிழன். திரும்பச் சொல்கிறேன். முன்பே என் பேச்சில் சொன்னேன். நண்பர் திரு. ராஜகோபால் மறந்துவிட்டார். போலிருக்கிறது. பல நூற்றாண்டுக்கு முன்னே வந்து—எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தம் வீட்டில்



தெலுங்கு பேசுகிறாரே அதைப் போன்று—நம்மோடு இரண்டறக் கலந்துவிட்டவர்கள், மொழி வழிச் சிறுபான்மையினர் அல்லர். ஃப்லோட்டிங் பாபுலேஷனாக இருப்பவர்கள் தான் சிறுபான்மையினர், நம்மால் வளர்ந்து நமக்குத் துரோகம் செய்து தொல்லை கொடுப்பவர்கள் தமிழர்கள் அல்ல.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க மேலவைத் தலைவரவர்களே, அவை முன் முதல்வரவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையைப் பற்றி விமரிசனம் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். பொதுவாக, பிப்ரவரி மாதம் பிறந்தாலே மக்களுக்கு ஒரு திகில் ஏற்பட ஆரம்பிக்கிறது. மத்திய அரசாங்கமானாலும் சரி, மாநில அரசாங்கமானாலும் சரி, ஏதேனும் ஒன்றிரண்டு புதிய வரிகளைப் போடுவார்கள், இருக்கிற வரிகளை அதிகப்படுத்துவார்கள். எதைச் செய்யப் போகிறார்களோ, எத்தகைய வரிகளை அதிகப்படுத்தப் போகிறார்களோ என்று மக்கள் மத்தியில் கொஞ்ச காலமாக எண்ணம் வர ஆரம்பித்திருக்கிறது. நடப்பு ஆண்டில் கூட, கட்சி ரீதியாக ஏதோ மத்திய சர்க்காரில் ஒரு கட்சியினர் ஆட்சி நடத்துவதனால் அவர்கள் வரி போட்டுவிட்டார்கள் என்று மாற்றுக் கட்சியினர் குறை சொல்வதும், மாநில அரசாங்கம் புதிய வரிகளைப் போட்டுவிட்டார்கள், அல்லது வரிகளை அதிகப்படுத்தி விட்டார்கள் என்று இங்கே ஆட்சியில் இல்லாதவர்கள் குறை சொல்வதும் சரியல்ல. எப்படியானாலும் சரி, சொக்கனுக்கு சட்டியளவு. சாதாரண ஜனங்கள் மத்தியிலும் சரி, நடுத்தர மக்கள் மத்தியிலும் சரி, போடப்படும் வரிகள் அதிகமாக மக்களைப் பாதிக்காத முறையில் இருந்தால் போதும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் இந்த வரிகளில் எவையெவை மக்களை அதிகமாகப் பாதிக்கின்றன என்பதை நடுநிலைமையிலிருந்து பார்க்க வேண்டும். வரியைப் போட்ட அரசாங்க அமைச்சர்கள், நாங்கள் போடும் வரி, வரி செலுத்தக் கூடியவர்களுக்குத் தான் போட்டிருக்கிறோம், மற்றவர்களுக்குப் போடவில்லையென்று சொல்வது ஒரு சம்பிரதாயமாகவே போய்விட்டது, அது மத்திய அரசாங்கமானாலும் சரி, மாநிலமானாலும் சரி. இந்த வரிகளில் விற்பனை வரியை எடுத்துக்கொள்வோம். விற்பனை வரி 100-க்கு 80 சதவீதம் ஏழைகளிடமிருந்து தான் வசூலிக்கப்படுகிறது. விற்பனை வரியில் 10 கோடி ரூபாய் இந்த வருஷம் அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்சார்ஜை அதிகப்படுத்தியதிலும், ஒரு முனை வரியாக மாற்றியதன் மூலமும் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வரி இன்னும் சுமார் 10 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் சரியாக கூர்ந்து கவனித்தால், அது 15 கோடி ரூபாய்க்கு மேல் வரும் என்று எண்ணுகிறேன். இவ்வளவு ரூபாயையும் மக்கள் தான் செலுத்தப்போகிறார்களேயொழிய, [illegible]

யாரும் தங்கள் கையிலிருந்து செலுத்தப் போவதில்லை. விற்பனை வரி செலுத்துவதில் பெரும் பகுதியைச் சாதாரண ஏழை மக்கள் செலுத்துகிறார்கள். ஆகவே, இந்த வரியை பணக்காரர்கள் தான் செலுத்தப் போகிறார்கள், அல்லது வியாபாரிகள் தான் செலுத்தப் போகிறார்கள் என்று சொல்வது தவறு. முழுக்க முழுக்க நடுத்தர மக்களும், கீழேயிருக்கிற ஏழை மக்களும் செலுத்தப் போகிறார்களேயொழிய வேறு யாருமில்லை. அதுவும், இந்த நேரத்தில் அகவிலை ஏறி, ஒவ்வொரு பொருளும், ஒன்றுக்குப் பத்தாக விலை ஏறியிருக்கிறது.

(பிற்பகல் 5.20)

முதலமைச்சரவர்களுடைய உரையிலே அதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். தொழிலுக்கு அடிப்படைத் தேவையான மூலப் பொருள்கள், உலோகங்கள், எண்ணெய், உரம் போன்றவைகள் தங்குதடையின்றியும், போதிய அளவிலும் கிடைப்பதற்கு வழியில்லாத சூழ்நிலை நாட்டின் பொருளாதாரத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். விலைகள் வேறு ஏறிக்கொண்டிருக்கின்றன. தொழில்கள் திறம்பட நடப்பதற்கு ஒரு உற்சாகத்தை உண்டுபண்ணக்கூடிய அளவில் எதுவும் செய்ய அரசாங்கத்தால் இயலவில்லை. தாராளமாக மூலப் பொருள்கள் கிடைக்க வசதிகள் செய்து கொடுக்க முடியவில்லை. மின் சக்தியைக்கூட போதுமான அளவுக்கு தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வசதி ஏற்படவில்லை. இந்த நிலைமையில், இப்போது இந்த நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது முடிவு செய்யப்பட்டு, வெளியிடப்படுவதற்கு இடையில் பிளானுக்கு லீவ் கொடுக்க மாட்டோமென்று சொல்லி வந்தார்கள். ஆனால் கடைசியில் வரும் தகவல்களைப் பார்த்தால், 4-வது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறுவதற்கும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வருவதற்கும் இடையில் குறைந்த அளவு 6 மாதம் இடைவெளி ஏற்படுமென்று, டெல்லியிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இது மிகவும் வருந்தத்தக்க செய்தியாகும். மத்தியிலும் சரி, மாநிலங்களிலும் சரி, எல்லா அரசுகளும் இன்றுள்ள நிலைமையில் ஸ்டேபிளாக நடந்துகொண்டிருக்கின்றன. மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் எந்தவிதமான கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படி இருக்கும்போது, பிளானைத் தயார் பண்ணி, காலாகாலத்தில் வெளியிட்டு, நாட்டின் நிலைமை மேம்பாடு அடைய, நாட்டின் பொருளாதாரம் மேம்பாடு அடைய, தொழில்கள் மேம்பாடு அடைய வழி செய்ய வேண்டும். அந்த நிலைமை இல்லாமல், திட்டத்தை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவது வருந்தத்தக்கது என்று சொல்லி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.



நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்க, சென்னையிலே நமக்கென்று ஒரு திட்டக் குழு போட்டு, அவர்கள் மூலம் தயாரிப்பது, முன்பு இல்லாத ஒரு நல்ல பழக்கம். இதை நான் வரவேற்கிறேன். நல்ல யோசனைதான். ஆனால், இன்னும் கொஞ்சம் அதிகமாக இதை விரிவுபடுத்த வேண்டும். அந்தந்த மாவட்டத்திற்கு என்ன கிடைக்கும் என்பதைப் பார்த்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாகத் திட்டம் தீட்டி, அவற்றை ஒன்று சேர்த்து, மாநிலத் திட்டமாகச் செய்திருந்தால், நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். சில மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படவும், சில மாவட்டங்களில் தொழில்கள் நசிந்து கொண்டு போகவும், தொழிலே இல்லாமல் போகவும், வளர்ச்சி குன்றிப் போகவும் இடம் கொடுக்காமல், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரித்து, மாவட்டத் திட்டமாகத் தயாரித்து, அதை ஒருங்கு சேர்த்து, மாநிலத் திட்டமாக வந்தால், நன்றாக இருக்கும். இதை முதலமைச்சரவர்கள் கவனித்து, திட்டம் தயாரிக்கும் அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகளையிட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தக்க அளவு வளர்ச்சிகளைச் செய்ய, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு முதலில் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலையும், அதோடு கூடிய 1,000 மெகாவாட் அனல் மின்சாரம் தயாரிக்கும் திட்டமும், சேதுசமுத்திர வாய்க்கால் திட்டமும் இன்றியமையாதவையாகும். இதைப் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறோம். இதைப்பற்றி நான் இதற்கு முன்னால்கூட பேசியிருக்கிறேன். எப்படியாவது மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி, இந்த மூன்றையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பிக்க முயற்சிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அண்மையில் நிதி ஆணைக் குழுவிடம், கடன் தவணைகளை விரிவாக்கி, மாற்றியமைத்து, பல வருஷத் தவணையில் அந்தக் கடனைச் செலுத்துவதற்கு அனுமதி வேண்டுமென்று கோரினோம். சட்டசபையிலும், கட்சி வித்தியாசமின்றி, எல்லாக் கட்சிகளும் ஏகமனதாகக் கூறியிருந்தோம். இதை 6-வது நிதி ஆணைக் குழு சிபாரிசு செய்து, மத்திய அரசும் ஒத்துக்கொண்டார்கள் என்று கேள்விப்படுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இது மாநில அரசுக்கு நிதி ஆணைக் குழு செய்த அனுகூலமான ஏற்பாடாகும். இந்த அளவில் மத்திய அரசு ஒத்துக்கொண்டது நல்ல காரியமென்று எண்ணுகிறேன்.

நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், நாம் விவசாயத்தையே நம்பி வாழ்கிறோம். 10, 15 வருஷங்களாகத்தான் தொழில் துறையிலும் முன்னேறி வர ஆரம்பித்திருக்கிறோம். அகில இந்தியாவில் தொழில் துறையில் நமது மாநிலம் மூன்றாவது இடத்தை வகிக்கிறதென்று சொல்லப்படுகிறது. அதற்கு மகிழ்ச்சி. ஆனால், மிக மிக அடிப்படைத் தொழிலான வேளாண்மையில் எந்த விதமான குறையும் ஏற்படாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். அண்மையில் ஏற்பட்டு வரும் குறைகள் நமது வேளாண்மைத் துறையைப் பாதித்துவிடுமோ என்று பயப்படுகிறேன். இப்போது விவசாயத்தைப் பொறுத்த வரையில், உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில். நாம் 'சர்ப்ளஸ் ஸ்டேட்'—உபரி மாநிலம் என்ற அளவுக்குப் போய்க்கொண்டிருக்கும் போது, அந்த உபரியை இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கை எங்கே இல்லாமல் ஆக்கிவிடுமோ என்று பயப்படுகிறேன். கடந்த ஆண்டு விவசாயிகளுக்குப் பூச்சிக்கொல்லி மருந்து கிடைக்கவில்லை; உரம் கிடைக்கவில்லை. எனவே அரசாங்கம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். காரணம் எதைச் சொல்லியாவது தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் நமக்குக் காரியம் நடக்க வேண்டும். விவசாயத்திற்குப் போதுமான உரம் கிடைக்கவில்லை. அவர்களுடைய பயிரில் தெளிக்க மருந்து கிடைக்கவில்லை. எப்படி உபரி மாநிலம் என்பதைப் பாது காக்க முடியும்? இந்த நிலைமை நீடித்தால், இரண்டு ஆண்டுகளில் பற்றாக்குறை மாநிலமாகிவிடுமென்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். By hook or crook, you must get the manure and the pesticides எப்படியோ மருந்தையும், அந்த உரத்தையும் கொண்டுவந்து கொடுத்து, நமது அடிப்படைத் தொழிலாகிய விவசாயத்தைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். இதில் தவறக்கூடாதென்று மிகவும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில், பல புதிய திட்டங்கள் தீட்டப் பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் பெரியாறு நீர்ப்பாசன மேம் பாட்டிற்கு வைகை வாய்க்கால்களைத் திருத்தியமைக்க திட்டமிடப்பட்டிருக் கிறது. இதன் மூலம் 20,000 ஏக்கர்களுக்கு விவசாயம் செய்வதற்கு அதிக மாக நீர் கிடைக்குமென்று தெரியவருகிறது. வைகைத் திட்டம் நிறை வேற்றப்பட்டபோது, முழுக்க முழுக்க அந்தத் திட்டம், சி.டி. ஆக்டினால் பாதிக்கப்பட்டு, அண்மையில் விடுதலையான கள்ளர் சமுதாயத்திற்காகக் கொண்டுவரப்பட்டது. ஆனால் கடைசியில் அதைப் பாசனத்திற்கு அளிக்கும் போது, 20,000 ஏக்கர் என்று இருந்தது, நிமறென்று 10,000 ஏக்கருக்கான சொல்லி, அவர்களுக்குக் கொடுத்தார்கள். மீதி 10,000 ஏக்கருக்கான தண்ணீரை வேறு பக்கம் திருப்பிவிட்டார்கள். இப்போது வாய்க்காலைத் திருத்துவதால் மேலும் 20,000 ஏக்கருக்கு நீர் கிடைக்குமென்பதால், கள்ளர்





சமூகம் அதிகமாக உள்ள திருமங்கலம் வட்டத்திற்கு மேலும் 10,000 ஏக்கர் களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று பொதுப் பணித் துறை அமைச் சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி மின்வாரியத்தின் வேலைகளை அதிகமாகக் கவனிக்க வேண் டியது முக்கியமான பணியாக இப்போது இருந்துகொண்டிருக்கிறது. நான் முதலில் சொன்னபடி, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டி, புதியதோர் 1,000 மெகாவாட் அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துவதோடு கூட, மேட்டூரிலும், தூத்துக்குடியிலும் இரண்டு அனல் மின் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் பல ஆண்டுகளாக முயற்சித்து வருகிறோம். இந்தத் திட்டங்களை மேலும் தாமதமில்லாமல், வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். சேர்க்காமல் விட்டுவிடக்கூடாது என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அத்துடன், இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன், கர்நாடக மாநிலத்தின் அமைச்சர் ஒருவர் ஓகனேகல் நீர்மின் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் தமிழ் நாட்டுடன் ஒத்துழைத்து, இருவருமாகச் சேர்ந்து அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றோம் என்று சட்டமன்றத் திலும், வெளியிலும் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இதை நமது சர்க்கார் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுடன் பேசி, ஓகனேகல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். முழுக்க, முழுக்க மின்சாரத்தை நம்பி நாம் தொழில்களை ஆரம்பித்துவிட்டு, அவை நடத்தப்பட முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன. 2, 3 திங்களுக்குள்ளாக பல புதிய தொழில்களை ஆரம்பித்த வர்கள் என்னிடம் வந்து கேட்டார்கள். நாங்கள் புதிய தொழில்களை ஸ்தாபித்து விட்டோம்; எங்களுக்கு மின்சார கனெக்ஷன் கொடுக்க மறுக் கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களின் மனுக்களைத் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன். அவற்றைப்பற்றி இங்கே பேச வேண்டிய அவசிய மில்லை. அவற்றை அமைச்சரிடம் பிறகு கொடுத்துக்கொள்கிறேன். அவர் களுக்கு வேண்டிய மின்சார இணைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிய தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று அழைப்பு விட்டுவிட்டு, பின்னால் அவைகளைக் கைவிட்டு விடக்கூடாது. அவ்வாறு செய்தால், பெரிய நஷ்டம் உண்டாகும்.

சேதுசமுத்திரத் திட்டமும் அம்மாதிரித் தான். அதை நிறைவேற்றத் தவறினால், நம் மாநிலத்திற்கு மட்டுமல்ல, மத்திய சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படும். தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திற்கு கோடிக்கணக்காக,

கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் என்று செலவழிக்கப்படுகிறது. அந்தத் துறைமுகம் சரியாக செயல்பட வேண்டுமென்றால், சேதுக் கால்வாயை வெட்ட வேண்டும். அவ்வாறு வெட்டினாலொழிய தூத்துக்குடித் துறைமுகத்திற்கு அயல்நாடு செல்லும் கப்பல்கள் வராது. ஆதலால் சேதுசமுத்திரத் திட்டம் மிக அவசியம். தூத்துக்குடித் துறைமுகம் நன்றாகச் செயல்பட, இந்தச் சேதுசமுத்திரத் திட்டத்தையும் அமுல்படுத்த வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1970 ஆம் ஆண்டிலே நிலத்தின் கீழ் உள்ள நீர்வளத்தை ஆராய்ந்து அதை உபயோகப்படுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று ஒரு இலாக்காவையே நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். அவ்வாறு ஏற்படுத்தி வருடம் நான்கு ஆகிவிட்டது. அதன் பலன் என்ன, என்ன செய்திருக்கிறார்கள், எந்த அளவுக்கு பூமிக்கு அடியிலுள்ள நீரை நாம் உபயோகிக்கத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்கு வைக்கவும் இல்லை, நாம் தெரிந்துகொள்ளவும் முடியவில்லை. ஆகவே அந்த இலாக்கா என்ன செய்கிறது, நிலத்தின் கீழ் இருக்கும் தண்ணீரைப்பற்றி என்ன ஆராய்ச்சி செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

சிறிது காலமாக தொழில்களைத் தேசியமயமாக்குவதில், மாநில சர்க்கார்களை மட்டுமல்ல, மத்திய சர்க்காரைக் காட்டிலும் கூட நமது மாநிலம் முதலில் நிற்கிறது. பல தொழில்களை தேசியமயமாக்கிக் கொண்டிருக்கிறோம். தேசியமயமாக்குவது நல்லதுதான். ஆனால் அதற்கான என்ன பாதுகாப்புக்களைச் செய்திருக்கிறோம் என்று கேட்கின்றேன். தொழிலாளர்களுக்கும், மக்களுக்கும் தேசியமயமாக்குவதற்கு முன்னால் இருந்த நன்மையை விட, தேசியமயமாக்கியதற்குப் பின்னால் நன்மை அதிகம் என்று ஏதாவது ஒரு தொழிலைச் செய்து காட்ட முடிகிறதா? முன்பு இருந்ததைவிட இப்போது வேலை நிறுத்தங்கள் அதிகமாகியிருக்கின்றன. பொருள் திருட்டுப் போவது அதிகமாகியிருக்கிறது. இந்த மாதிரிக் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் பாதுகாப்பு ஏற்பட வேண்டும். என்னுடைய சிறிய யோசனை ஒன்றைச் சொல்லுகிறேன். அதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசியமயமாக்கப்பட்ட எந்தத் தொழிலிலும், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுத்து, அதில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். எந்தவிதமான காரணத்தை முன்னிட்டும் வேலை நிறுத்தங்கள் ஏற்படக் கூடாது. தேசியமயமாக்கப்பட்ட எந்தத் தொழிலிலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது என்று சட்டபூர்வமாகத் தடை செய்து, நிர்வாகத்தில்



தொழிலாளர்களுக்கு முழுப் பங்கு கொடுத்து, தொழிலை அவர்களையும் சேர்த்து நடத்தும் பட்சத்தில், வேலை நிறுத்தங்களுக்கு இடமே இல்லாமல் போய்விடும். பஸ்களை தேசியமயமாக்கியிருக்கிறோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில், புதிதாக ஐந்து பெரும் தொழில்களை கோடிக்கணக்கான முதலைப் போட்டு, மாநில சர்க்கார் தேசியமயமாக்கி இருப்பதை வரவேற்கிறேன். ஏற்கெனவே தேசியமயமாக்கப்பட்ட தொழில்களில் பாதுகாப்பு இல்லை. தேசியமயமாக்குவதற்கு முன்னால் இருந்த நிலைமை கூட இப்போது இல்லை. அங்கே குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. மாதந்தோறும் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அரசின் பொருள் விரயமாகிக்கொண்டிருக்கிறது என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தடை செய்ய வேண்டும். நான் சொல்லியிருப்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஏன் வேலை நிறுத்தம்? அவர்களே நிர்வாகத்தில் இருந்து பார்க்கட்டும். லாபம் கிடைத்தால் எடுத்துக் கொண்டுபோகட்டும். மூலதனத்துக்குக் கேடு வரும் நிலையில், தொழில் நசித்துக்கொண்டுபோனால், சோஷலிசத்துக்கு ஆபத்து. இப்போது போகிற போக்கைப் பார்த்தால், தேசியமயமாக்குகின்ற அடிப்படை எண்ணத்தையே கெடுத்துவிடுவார்கள் போலிருக்கிறது. ஆகவே இதை யோசிக்க வேண்டும்; இதற்கு ஏதாவது முடிவு செய்தாக வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லெவி முறை போட்டு, இப்போது மில்காரர்களிடமிருந்து நெல் வசூலிக்கப்படுகிறது. மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில், சர்பிளஸ் பகுதி பெரியாறு பாசனம், வைகைப் பாசனப் பகுதி. இந்தப் பகுதி தவிர, மற்ற இடங்களில் லெவி முறை போடுவதன் மூலம் கஷ்டம் ஏற்படுகிறது, விலை ஏறுகிறது. 100 ரூபாய் விற்றுக்கொண்டிருந்த பொதி இன்றைக்கு 150 ரூபாய், 160 ரூபாய் ஆகியிருக்கிறது. ஆகவே எங்கெங்கு சர்பிளஸ் எரியா இருக்கிறதோ அங்கு மட்டும் லெவி போட்டு வசூல் செய்ய வேண்டுமென்று யோசனை சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்தைப்பற்றி எடுத்த எடுப்பிலேயே சொன்னேன். இவ்வளவு தூரம் நம்முடைய விவசாயம் பெருகி வருவதற்கு முக்கியமான காரணம் கிராம சேவக்குகளின் உழைப்பு என்று சொன்னால், மிகையாகாது. அவர்கள இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெற்று நல்ல முறையில் வேலை செய்து பீல்டுமேனாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஊதியம், எஸ்.எஸ்.எல்.சி. படித்து, 2 ஆண்டுகள் பயிற்சி பெற்ற மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்தை விட மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குப் பிரமோஷனுக்கு வழி கிடையாது. ஆகவே அவர்களுடைய கோரிக்கையை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [1974 மார்ச் 15

மற்ருெரு குறை. இந்து கோவில்களை எச்.ஆர்.இ. போர்டு பரிபாலித்து வருகிறது. அதே மாதிரி முஸ்லீம்கள் பள்ளி வாசல்களை வக்ப் போர்டு பரிபாலித்து வருகிறது. இரண்டும் மத சம்பந்தமான சொத்துக்களைப் பரிபாலித்து வருகின்றன. வக்ப் போர்டு சம்பந்தமான சொத்துக்கள் யாராவது ஒருவர் கையிலிருந்தால், எவ்வளவு வருடங்களானாலும், அவரை வெளியேற்றிவிட்டு அந்தச் சொத்துக்களை எடுக்க சட்டத்தில் இடம் செய்யப் பட்டிருக்கிறது. அதே மாதிரி எச்.ஆர்.இ. போர்டு சம்பந்தப்பட்ட சொத்துக் களை யாராவது எடுத்துக்கொண்டு சொந்தத்துக்குப் பிரயோஜனப்படுத்தி வந்தால், 12 வருடம் ஆகிவிட்டால், அந்தச் சொத்தை எடுக்க முடியாது என்று சட்டத்தில் இருக்கிறது. ஒரு கண்ணுக்கு வெண்ணெய், மற்ருெரு கண்ணுக்கு சுண்ணும்பு வைத்துப் பார்ப்பது போல் இருக்கக்கூடாது. இதை அடிகளார் பேசும்போது சொல்வார்கள் என்று நினைத்தேன். சொல்லவில்லை. இரண் டையும் ஒரேமாதிரி ஆக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வக்ப் போர்டில் கூட சொத்தை மீட்பதற்கு லிமிடேஷன் இருக்கிறது. லிமிடேஷனை சிறிது எக்ஸ் டெண்டு செய்து கவர்மெண்ட் ஆப் இந்தியா முதலில் உத்தரவு போட்டது. நமது அரசாங்கமும் எக்ஸ்டெண்டு செய்தது. வக்ப் போர்டு சொத்துக்கும் லிமிடேஷன் இருக்கிறது. இன்டெபனெட்டாக சொத்துக்களை மீட்கலாம் என்று சட்டத்தில் இடம் இல்லை.

**திரு. கே. ராஜாராம் :** அந்தப்படியாவது இந்த தேவாலய சொத்துக் களுக்கு இடம் கொடுக்க வேண்டும், அதைத்தான் சொன்னேன். இரண்டு கண்களையும் ஒரே மாதிரியாகப் பாவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்துக்களுக்குப் போடப்பட்ட சட் டத்தின் படிதான், அதைப் பின்பற்றி முஸ்லீம்களுக்குப் போடப்பட்டிருக் கிறது. இந்துக்களுக்கு இல்லை என்று சொல்ல முடியாது. 1951 ஆம் ஆண்டுக்குப் பின்னலே, எந்த இந்து அறநிலையச் சொத்து வாங்கப்பட்டிருந் தாலும் சரியல்ல. ஆப் இனிஷியோ வாயிட். ஆகவே அந்த முறையில் சொத்தை மீட்கலாம்.

**திரு. கே. ராஜாராம் :** நான் அதைச் சொல்லவில்லை. தேவாலய சொத் துக்களை சில பேர் பராதீனம் செய்துகொண்டு, அபகரித்துக்கொண்டிருக்கி ரூர்கள். அம்மாதிரிச் சொத்துக்களை எடுத்துக்கொள்ள முடியவில்லை. பதி னைந்து இருபது ஆண்டுகளாக முயன்றும் முடியவில்லை. அனுபவ பாத்தியம் இருக்கிறது என்ற நிலை வருகிறது.



1974 மார்ச் 15]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது தவறு. ஏற்கெனவே இருக்கிற லிமிடேஷன் ஆக்டிலே சாதாரணமான சொத்துக்கு 12 வருஷம். இந்த சொத்துக்கு 1951-க்கு பின்னலே லிமிடேஷன் கிடையவே கிடையாது. அதை நிச்சயம் கைப்பற்றலாம். கைப்பற்றுவதிலே எங்கேயாவது கஷ்டம் இருக்கு மானல், சொன்னல் எடுக்கலாம். இங்கே என்ன பிரச்சினை இருக்கிறது என்ருல், அங்கே உழுகின்ற, இந்துக்களுடைய நிலத்தில் உழுகின்ற உழவனை வெளியேற்ற முடியாது.

**திரு. கே. ராஜாராம் :** எந்தெந்த இடங்கள், என்னென்ன கஷ்டம் என்று நான் எழுதி அனுப்புகிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** சாதாரணமாக அண்மையில் எனக்குக் கிடைத்த ஒரு அனுபவம். மடங்களின் சொத்தை ஒருவர் துர்விநியோகம் செய்திருந்தால், ஒரு புதிய மடாதிபதி வந்த பிறகு 12 வருஷத்திற்குள்ளாகவே அவர் சக்கசர் என்ற நிலை இல்லாது, அதற்குமேல் வந்து, வழக்காடினல் அது கிடையாது என்பதுபோல் ஒரு தீர்ப்பு இருப்பதாக வழக்குரைஞர்கள் சொன் ஞர்கள். நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது மடத்து சொத்து. அவர்கள் கேட்பது இந்து அறநிலையங்களினுடைய சொத்து. அது இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** அடுத்தபடியாக, தங்கள் வாழ்நாள் எல்லாம் அர சாங்கத்திற்காகவே உழைப்பையும், சக்தியையும் கொடுத்து, 35 ஆண்டுகள் 55 வயதுவரை உழைத்து, கடைசியில் ஓய்வு பெற்றவர்களுக்கு நாம் கொஞ்சம் தாராள மனப்பான்மை காண்பிக்க வேண்டுமென்று நான் அவர்கள் சார்பாக அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கின்றேன். அவர்களுடைய ஓய்வூதியம் ஒரு கடைநிலை ஊழியருடைய சம்பளத்தின் அளவாவது இருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு முனிசிபல் கமிஷனராக இருந்தவர், மாதம் அறுநூறு ரூபாய், எழுநூறு ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருந்தவர், இன்றைக்கு 50 ரூபாய்தான் பென்ஷன் வாங்கிக்கொண்டிருந்தால், அவர்களுடைய குடும்பம் என்ன ஆகும், அவர்களுடைய வாழ்க்கை என்ன ஆகும் என்பதை யோசிக்க வேண்டும். அவர்கள் நன்ருக இருந்த காலத்திலே 55 வயது வரை அரசாங்கத்திற்காக தங்களுடைய உடல், பொருள், ஆவி அத்தனையையும் செல விட்டிருக்கிருர்கள்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** பொருள் இருக்காது. உடல், ஆவி இரண்டு தான் இருக்கும்.

**திரு. கே. ராஜாராம்:** அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்திருக்கிற கடன் ஒரு கோடி ரூபாய் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. வேறு வழியில்லை. வசூல் செய்ய முடியாது. அவர்களை இம்சை செய்வதை விட ரத்து செய்வது மேல் என்றுதான் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதே நிலையில் இன்னும் ஒன்று இருக்கிறது. அதையும் இப்பொழுது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொற்கொல்லர்களில் பெரும் பாலோர் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் கடன் கொடுத்து கணக்கிலே எழுதி வைத்துக்கொண்டிருக்கிறோம். எனவே அதையும் ரத்து செய்வதற்கு ஒரு முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் இப்பொழுது ஸ்பெஷல் ஆபீசர் 'ரெட் சிக்னல்' கொடுத்து விட்டார். சென்னைக்கு தண்ணீர் சப்ளை செய்யும் சோழவரம் ஏரியும், பூண்டி ஏரியும் வறண்டுவிட்டன. வீராணம் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட 1967-68 லிருந்தே ஆரம்பிப்ப தற்கான வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆறு வருடங்கள் ஆகியும் அந்தத் திட்டம் எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. அந்தத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றி சென்னைக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய வேலையை துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றேன். ஸ்பெஷல் ஆபீசர் அவர்கள் இப்பொழுதே தண்ணீர் குறைத்து விடுவோம் என்று எச்சரிக்கை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே வீராணம் திட்டத்தை விரைவாக முடித்து, சென்னைக்குத் தண்ணீர் சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டோருக்காக, அரிஜனங்களுக்காக, வீட்டு வசதிக் கழகம் என்று புதிதாக ஒரு நிறுவனம் ஏற்படுத்தி, அதற்கு நடப்பு ஆண்டில் ஒரு கோடி ரூபாயும், வருகிற ஏப்ரல் மாதத்திலிருந்து, 1974-75-க்கு ஒரு கோடி ரூபாயும், ஆக இரண்டு கோடி ரூபாய் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிறது விஷயம் என்னவோ நல்ல விஷயம்தான். ஆனால் என்னுடைய முக்கியமான ஒரு கோரிக்கை என்னவென்றால், இந்தப் பணத்தை கிராமங்களிலே உள்ள அரிஜனங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். நகரங்களிலே உள்ள அரிஜனங்களை நான் வெறுத்துக் கூறுவதாக எண்ண வேண்டாம். நகரங்களில் உள்ள அரிஜனங்களுக்கு வேறொரு திட்டம் ஏற்கெனவே செயல் படுகிறது—ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு என்று சொல்லப்படுகிற குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நிறைய கட்டிடங்கள் கட்டி அவர்களுக்கு வசதி செய்து கொண்டிருக்கின்றோம். எனவே இந்த இரண்டு கோடி ரூபாயை முழுக்க





முழுக்க கிராமங்களிலே உள்ள அரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க பயன் படுத்த வேண்டும். கிராமங்களிலே உள்ள அரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே இந்தப் பணத்தை முழுவதுமே அவர்களுக்காக 'இயர் மார்க்' செய்து செலவு செய்யுங்கள். கிராமங்களிலே உள்ள அரிஜனங்களுக் கெல்லாம் வீட்டு வசதி செய்யப்பட்ட பிறகு, நகரங்களுக்கு இந்தத் திட்டத் தைச் செயல்படுத்தலாம். அவர்களுக்கு ஸ்லம் கிளயரன்ஸ் போர்டு என்று திட்டம் இருப்பதால், முக்கியமாக இதைக் கிராமங்களுக்குத் திருப்பிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியத் திட்டம் என்ற ஒரு திட்டத்தையும் இந்த நிதிநிலை அறிக்கை யில் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் என்னவோ நல்ல திட்டந்தான். ஆனால் இதை நிறைவேற்றுவதற்கான மற்ற விளக்கங்களையெல்லாம், டீடெய்ல்ஸையெல்லாம் பின்னால் ஒர்க்கவுட் செய்யப் போகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார்கள். அதிலே என்னுடைய ஒரு கோரிக்கையையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 30 வயதானவர்கள் மட்டும் அந்தத் திட்டத்தில் பணம் செலுத்தி சேர்ந்து கொள்ளலாம் என்று சொல்வது போதாது. நாற்பது, நாற்பத்தைந்து வயதானால்கூட, அவர்களும் அதில் சேர்ந்துகொள்ளும்படியான வாய்ப்பு அதில் இருக்க வேண்டும். அவர்களும் சேர்ந்துகொள்ளும் வசதியை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராம இணைப்பு சாலைகளுக்காக, 1,500 ஜனத்தொகைக்கு மேற் பட்ட கிராமங்களை நெடுஞ்சாலைகளுடன் இணைப்பதற்கு மூன்று கோடியும், ஊராட்சியின் உள்ளூர் சாலைகளுக்கு அதை நிறைவேற்றுவதற்காக இரண்டு கோடி 19 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையைப் பார்த் தால், என்னவோ அதிகமாக இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் ஊர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்போது, ஒரு ஊருக்கு 100 ரூபாய்கூட வராது. ஆகவே இதை ஒரு 'ஃபேச்ட் புரோகிராமாகப்' போட்டு, எந் தெந்த சாலைகளுக்கு இந்த வருஷம் கொடுப்பது, எந்தெந்த சாலைகளுக்கு அடுத்த வருஷம் கொடுப்பது என்று ஒதுக்கி, ஒரு கணிசமான தொகையை ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு வருந்தத்தக்க விஷயத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்கள் வாயினாலேயே சொல்லி நாம் தெரிந்துகொண்டிருக் கின்றோம். இன்னும் தமிழ் நாட்டில் 4,960 ஊர்களில் குடிதண்ணீர் வசதி

யில்லை. இதை நமது மாநில முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சொல்லிக் கேட்பது, நாம் அத்தனை பேரும் வெட்கப்பட வேண்டிய விஷயம். அது மட்டுமல்ல. 11,814 கிராமங்களில் போதிய குடிதண்ணீர் வசதி செய்யப்படவில்லை என்று சொல்லி, அதற்கு நிதியும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துகொடுக்க முடியும். நாம் ஏதேதோ செய்து விட்டோம் என்று சொல்கிறோம். ஆனால் இவ்வளவு குறைகள் இருக்கின்றன. இந்த வருஷத்துப் பட்ஜெட் பணம் முழுவதையும் இதற்குப் போட்டால்கூட, இதற்குக் காணாது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதிலிருந்தே அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும் உண்மை. இது ஒரு பத்து, பன்னிரெண்டு ஆண்டுக் காலத்திலே தான் முடியும் என்பது. கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்திலே முடியாத காரியத்தை இந்த ஆறாண்டுக் காலத்திலே முழுதும் நிறைவேற்றிவிட முடியாது. ஆண்டொன்றுக்கு 500 கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்ட காரணத்தாலே 7,000 கிராமங்கள் மட்டும் பாக்கியிருக்கின்றன.

(பிற்பகல் 5.50)

**திரு. கே. ராஜாராம் :** நான் இதைத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். எனவே முறையாகத் திட்டம் தீட்டி குடிநீர் வசதியே செய்யப்படாத ஊர்களிலே முதலில் ஒரு இரண்டு வருஷங்களுக்குள்ளாக அதைச் செய்து தர வேண்டும். அதை முடித்த பிறகு, போதுமான குடிநீர் வசதி இல்லை என்று சொல்லத்தக்க 11,816 கிராமங்களை அடுத்தபடியாகக் கவனித்து, வரும் ஐந்து ஆறு ஆண்டுகளிலே அதையும் செய்து முடிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வளவையும் ஒரு வருஷத்திலோ அல்லது இரண்டு வருஷத்திலோ செய்து முடிக்க முடியாது. நமக்குள்ள ஒரு ஆண்டு வருவாயான ரூ. 500 கோடியையும் செலவழித்தாலும்கூட, இது முடியாத காரியம். நீண்டகாலமாக இதைச் செய்யத் தவறி விட்டோம். காங்கிரஸ் ஆட்சியோ அல்லது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியோ அல்லது வெள்ளையர்கள் ஆட்சியோ எதுவாக இருந்தாலும், கிராமங்களுக்குக் குடிநீர் வசதியை இந்த அளவிற்குச் செய்யாமல் விட்டுவிட்டது பெருந் தவறுதான். எனவே இதைச் சீக்கிரம் முடித்து மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு முதலில் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, புதிதாக இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு திட்டம், மாவட்ட வளர்ச்சிக் கழகம் என்று ஒன்றை அமைத்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்ற ஒரு யோசனையை மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் சொல்லியிருப்பது. நாம் அந்த நாட்களிலே மாவட்டக் கழகங்களை ஒழித்ததே ஜனநாயக ரீதியிலே நிர்வாகம் பரவலாக ஆக வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில்தான். மாவட்டக் கழகங்களை எடுத்துவிட்டு அவற்றுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன்களை அமைத்திருக்கிறோம். ஒரு சில இடங்களிலே ஏதாவது தவறுதல்கள் நடந்திருந்தாலும், பொதுவாக அவை அவ்வளவும் திறம்பட வேலை செய்து வருகின்றன. எனவே பஞ்சாயத்து யூனியன்களுடைய திறமையைப்பற்றி அல்லது அந்தத் திட்டத்தைப்பற்றி யாரும் குறை சொல்ல முடியாது என்று இருக்கும்போது, மீண்டும் ஜில்லா போர்டுகளை . . .

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, மீண்டும் மாவட்டக் கழகங்களைக் கொண்டுவரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது, ‘டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன்’ என்பதுதான். இதன் முக்கிய பணி, ஊராட்சி மன்றங்களுக்குப் போதிய அளவிற்கு கூடிய வசதிகளைச் செய்து கொடுப்பது என்பதுதான். அதற்காகத்தான் அந்த வாரியம் அமைக்கப்படுகிறதேயன்றி, மாவட்டக் கழகங்கள் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் கூடிய வசதிகளைச் செய்து கொடுக்கும் ஒரு நிறுவனமாக அது அமையலாம். ஆனால் அது நிர்வாக அதிகாரங்களுடன் கூடியதொரு கழகமாக அமைவதானால், நான் வன்மையாகக் கண்டிக்கிறேன், எதிர்க்கிறேன், அது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

மற்றொரு இடத்தில் முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற வளர்ச்சிப் பணிகள்பற்றியும் அங்கெல்லாம் வேறு தொழில் வளர்ச்சிகள் பற்றியும் மிகவும் அக்கறையுடன் கூறியிருக்கின்றார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அவர்கள் கூறியிருக்கின்றார்கள், “கிராமப்புற வளர்ச்சி வேலைகளின் மூலமும் வேறு தொழில் வளர்ச்சிகளின் வாயிலாகவும்தான் நம்மால் வேலையின்மையைத் தவிர்க்க முடியும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்” என்று சொல்லியிருக்கின்றார்கள். நல்ல யோசனை, நல்ல கருத்து. ஆனால் இதற்காக இதுவரையில் நாம் என்ன செய்திருக்கிறோம், இந்த அரசு என்ன செய்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். கிராமங்களில் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கு நமது தொழில் துறை என்ன செய்திருக்கின்றது கிராமப்புறங்களிலே என்பதை அறியவும் விரும்புகிறேன். செயல்

என்னவோ மிக நல்ல செயல். மிக அழகான சொற்களில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. மிகவும் பாராட்டுக்குரியதுதான். ஆனால் நடைமுறையில் நாம் இந்த வகையில் போதிய கவனம் செலுத்தவில்லை, கிராமங்களிலே தொழில் வளர்ச்சிக்கு என போதிய ஏற்பாடுகளைச் செய்ய வில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிவிட்டு அதோடு அதை விட்டு விடுகிறேன்.

அடுத்து, கேளிக்கை வரியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இப்போது அது மூன்று விதமாக விதிக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்கள் இப்போது கேளிக்கை வரிகளை விதிக்கின்றன. இப்போது அரசாங்கம் அந்த முறைகளையெல்லாம் மாற்றி, கேளிக்கை வரிகளையெல்லாம் ஒருமுகப்படுத்தி, பஞ்சாயத்து யூனியன்கள் வரியை ரத்து செய்து தாங்களே வசூலித்துக் கொடுக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டுவருவதாக நிதி நிலை அறிக்கையில் இருக்கின்றது. இதைச் செய்யும்போது, பஞ்சாயத்து யூனியன்களுக்குக் குறை இல்லாத வகையில், அவர்களுடைய வருவாய குறைந்துவிடாத அளவிற்கு அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு தொழில் வளம் பெருக வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதே நேரத்தில் வேறு ஒரு விஷயத்தையும் அரசாங்கம் மறந்துவிடக் கூடாது. நமது மாநிலத்தில் பிறந்தவர்கள், இங்கே உள்ளவர்கள் இங்கேயே பிழைத்துக் கொள்ளுவதற்கான தொழில்களை இங்கேயே பார்த்துக்கொள்ளுவார்கள் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. பொதுவாக இந்த அரசானது அந்தமாதிரி மனப்போக்கில்தான் சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது என்பதை மிகுந்த வருத்தத்தோடு, வேதனையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். ஏனென்றால் பிற மாநிலங்களில் அங்கே உள்ளவர்கள் அங்கேயே வேலையை எதிர்பார்த்தால் முடியாது, இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் சென்று வேலை யைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற முறையில் அவர்களுக்குப் பல மொழி களையும் கற்றுக் கொள்ளத்தக்க வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள் அண்டையிலுள்ள கேரளாவிலும் கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் பார்த்தால் இந்தி மொழியைக் கற்றுக்கொடுக்கின்றார்கள், கட்டாயப்பாடமாக வைத்து அதைக் கற்றுக்கொண்டால், வட மாநிலங்களுக்கும் அவர்கள் போகக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் நமது மாநிலத்தில் இந்தி மொழியையே கற்றுக்கொள்ளக்கூடாது என்று. . .





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்தி மொழியை மலையாளிகள் கற்றுக்கொள்ளுவதால், அவர்களுக்கு வேலை கிடைக்கின்றது என்று சொல்லுவது தற்போதுள்ள நிலைமைக்கு மிகவும் முரண்பாடாக இருக்கின்றது.

**திரு. கே. ராஜாராம்:** அதைப் போய் அங்கே சமாளிக்க வேண்டுமே தவிர, ஏதோ ஒரு காரணத்திற்காகப் போகாமல் இருந்துவிட முடியாது. பம்பாய்க்கும் போக வேண்டும், கல்கத்தாவிற்கும் போக வேண்டும், இங்கிலாந்துக்கும் போக வேண்டும். எல்லா இடத்திற்கும் போகத்தான் வேண்டும். ஆனால் போக வேண்டுமானால், அதற்குத் தகுந்த முறையில் போக விரும்புகின்றவர்களைத் தயார் செய்துகொள்ளத்தக்க முறையில் பல் வேறு மொழிகளையும் அவர்கள் கற்றுக்கொள்ள வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். இந்தி பாட புஸ்தகத்தைப் போட்டு, நீ கட்டாயம் படிக்கத் தான் வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம். ஆனால் வெளி மாநிலங் களுக்குப் போய்ப் பிழைக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்களுக்கு அவர்கள் விரும்பும் மொழியைக் கற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பையும் வசதியையும் தமிழகத்தில் செய்து கொடுக்க வேண்டும். தமிழகத்தில் அதற்கு வசதி இல்லை என்று சொல்லும் நிலை இருக்கக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன். வேண்டுமானால் தனியாகப் பள்ளிக்கூடங்களை வைத்தோ அல்லது வேறு ஏற்பாட்டைச் செய்தோ, அவர்களுக்கு அந்த வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி இருந்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு அது ஒரு நல்ல வழி என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நண்பர் திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசும்போது, அவர்கள் சமூகத்தினைச் சேர்ந்த ஒருவர் அரசாங்க வக்கீலாக நியமிக்கப்பட்டார் என் பதற்காக அந்த சமூகத்தின் சார்பிலே நன்றி தெரிவிப்பதாகச் சொன்னார். இப்படிப் போய்க்கொண்டிருப்பது சரியில்லை. நான் நினைக்கிறேன், அவரது திறமைக்காகத்தான் நியமித்தார்களே தவிர, முஸ்லீம் என்பதற்காக இல்லை என்று. இதை அவர் விளக்க வேண்டும். ஏனென்றால் ஜாதிக்கு ஒருவரை நியமிப்பது என்று போனால் கடைசியில் எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதியினரை யும் திருப்திப் படுத்த முடியாது. ஆகவே ஒரு சமூகத்தை, ஜாதியைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டார் என்று அதற்காக நன்றியைப் பகிரங்கமாகத் தெரிவிப்பது, அதை முதலமைச்சர் அவர்களும் கேட்டுக்கொண்டு மௌனமாக இருப்பது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் அவருடைய திறமைக்காக. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முஸ்லீம் நியமிக்கப்பட்டார் என்பதல்ல, திறமையுள்ள முஸ்லீம் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

[1974 மார்ச் 15

**திரு. கே. ராஜாராம்:** பாராட்டுகிறேன். அந்த மாதிரி இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு அவர்கள் ஒரு தவறான விஷயத்தையும் சொன்னார்கள். கேரளத்திலே திரு. நம்பூதிரிபாட் அரசாங்கம் நடக்கிறதை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பொறுக்க முடியாமல் அந்த அரசாங்கத்தைக் கவிழ்த்தார், அழித்தார் என்று சொல்லுவது சரியில்லை. அங்கே சட்டம் ஒழுங்கு—லா அண்டு ஆர்டர், ஒரு இரண்டு வருஷமாக அடியோடு பாழாகப் போய், தினசரி போலீஸ் சுடுவது என்று தொல்லைகள் எல்லாம் வந்த பிறகுதான், முஸ்லீம் லீகும் சேர்ந்து அதைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும் என்று சொன்ன பிறகுதான், அந்த அரசைக் கலைக்க ஜனாதிபதி முடிவு செய்து, பிறகு ஜனாதிபதியுடைய ஆட்சி வந்தது. அதற்குப் பிறகு பட்டம் தாணுப் பிள்ளையுடைய ஆட்சி வந்தது என்பதை நினைவூட்டுகிறேன். ஆகவே ** அந்த ஆட்சியைக் கவிழ்த்தார் நேரு என்று சொல்லுவது சரியில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவரவர்களே, நேருஜி நம்பூதிரிபாட் அரசாங்கத்தை ** இறக்கினார் என்று நான் சொல்லவில்லை. அந்த ஆட்சியைக் கீழே இறக்குவதற்கு முன்பு, அதைக் கீழே இறக்க வேண்டும் என்று பல வகையான திட்டங்களைப் போட்டார்கள். பிறகு முஸ்லீம் லீகின் ஆதரவைப் பெறாத வரையில் அதைக் கீழே இறக்க முடியாது என்ற நிலை வந்தவுடன் whether the law allows it or not I will see to it that the Muslim League is crushed என்று பேசினார் நேருஜி. அப்படிப் பேசியவர் நேருஜி. அப்படியும் அதைப் புறக்கணித்துவிட்டு காயிதே மில்லத் அவர்களோடு திருவனந்தபுரத்திற்கு வந்து உடன்பாடு செய்துகொண்டு, அந்த உடன்பாட்டுக்குப் பிறகுதான் போராட்டம் என்று அதில் முஸ்லீம் லீகும் சேர்ந்துகொண்டு, பல முஸ்லீம் லீக் தலைவர்களுடைய மண்டையும் உடைபட்டு, பலர் ஜெயிலுக்கும் போகவேண்டிய நிலையெல்லாம் ஏற்பட்டது. அதைத்தான் சொன்னேன். திடீரென்று இறக்கிவிட்டார் என்று சொல்லவில்லை.

**திரு. கே. ராஜாராம்:** உறுப்பினர் அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார், முஸ்லீம் லீகும் சேர்ந்துதான் அந்த அரசாங்கத்தைக் கவிழ்த்தது என்று. ஆகவே மறைந்துபோன பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களைப்பற்றி இப்படித் தகாத வார்த்தைகளைப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ** என்று நேருஜியைப் பற்றிக் குறிப்பிட்டதற்காக அதைக் கண்டிக்கின்றேன் நான்.

** Expunged as ordered by the Chair.



1974 மார்ச் 15]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பத்திரிகைகளும் அதைப் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** இதோடு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 6.00)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், கட்சியின் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்திற்கே உரிய முறையில் எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டம் மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அச்சம் ஊட்டுகின்ற வகையில் வெளி வருகிறது, என்னென்ன வரிகள் வருமோ என்று பயப்படுகின்ற நிலைமையில் வெளி வருகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் வரிகள் சிலவற்றை விதித்திருக்கிறோம் என்று அறிவிப்பு தந்தாலும், அது எந்தப் பகுதி மக்களைப் பாதிக்கிறது என்பதை ஆழ்ந்து சிந்தித்தால், அதை ஒரு வரி விதிப்பு அல்லது மக்களை வாட்டுகின்ற நிலைமையில் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிடுவதற்கு இடமே இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் திரு. சக்தி மோகன் அவர்கள் இடைத் தேர்தலுக்குப் பிறகு வருகின்ற நிதி நிலை அறிக்கை என்கின்ற காரணத்தினால், வாக்கு அளிக்காதவர்களை எல்லாம் தண்டிக்கும் முறையில் அமையும் என்று சிலர் எதிர்பார்த்ததாகவும், அதற்கு நேர் மாறாக இந்த அறிக்கை மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு வெளி வந்திருப்பதாகவும் எடுத்துச் சொன்னார்கள். எந்த ஒரு கட்சியானாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, இடையிலே வருகின்ற இன்னல்களைப்பற்றிச் சிந்திக்காமல், இடையிலே வழங்கப்படுகின்ற தீர்ப்புகளைப்பற்றிக் கவலைப்படாமல், தங்களுடைய ஆட்சிக் காலத்தில் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பொறுப்பை இனிதே நிறைவேற்றுவதற்கும், கடமையைச் செம்மையாகச் செய்து முடிப்பதற்கும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையிலேதான் நிதி நிலை அறிக்கை

***Expunged as orded by the chair.

யினுடைய துவக்கத்திலேயே கடமையைச் செய்கின்ற அழகினைப்பற்றிப் புகழ்ந்து வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ள குறளை இணைத்து, இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்’

என்பதையும் இந்த அரசுப் பொறுப்பில் வீற்றிருக்கின்ற நாங்கள் யாரும் மறந்துவிடவில்லை. ஆகவே வாக்கு அளித்தவர்களைத் தண்டிப்பது என்பதில்லை. வாக்கு அளித்தவர்கள், வாக்கு அளிக்காதவர்கள் அனைவருக்கும் சேர்ந்துதான் ஒரு அரசு தன்னுடைய காரியங்களைச் செய்திடுமே அல்லாமல், அவர்களைப் பாகுபடுத்தி, வாக்கு அளித்தவர்களுக்கு நன்மை செய்தும், வாக்கு அளிக்காதவர்களுக்கு நன்மைகள் இல்லாதவாறு செய்வதும் மரபு அல்ல, ஜனநாயகமும் ஆகாது. அந்த உணர்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே வரவு-செலவுத் திட்டம் வெளியாகின்ற நேரத்தில் அது எந்தெந்த நிலைமைகளோடு தொடர்பு கொண்டு வெளியாகிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. நான் பேரவையில் பதிலளிக்கும் நேரத்தில் கூட, அதைக் குறிப்பிட்டேன். இங்கேயும் அதைச் சுட்டிக்காட்டுவது கடமை என்று கருதுகிறேன். வளர்ச்சி வேகத்தை மேலும் அதிகப்படுத்துவதற்கும், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் உரிய அத்தனைப் பிரச்சினைகளோடு ஒரு வரவு-செலவுத் திட்டம் இணைந்திருக்கிறது. நம்முடைய மாநில வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், விலைவாசிகளைக் குறைப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது என்கின்ற இந்தப் பணிகளை மாநில வரவு-செலவுத் திட்டம் என்கின்ற காரணத்தினால் நாம் முழுமையாகச் செய்து முடிக்க முடியுமா என்றால், இயலாது என்பதற்கு நூற்றுக்கணக்கான ஆதாரங்களை இந்த மாமன்றத்தில் பேசிய பல்வேறு உறுப்பினர்களும் மிகத் தெளிவாக, அழகாக, எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டம்தான் விலைவாசிகளுடைய ஏற்றத்திற்குக் காரணமாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமைந்துவிடுகின்ற சூழ்நிலையைத் தொடர்ந்து நாம் கண்டு வருகிறோம். மாநில அரசு ஒரு பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்குமானால், அதிலே துண்டு விழுகின்ற அந்தத் தொகையை ஈடுகட்டுவதற்குச் சில வரிகளைப் போடுகின்ற அதிகாரத்தைத்தான் பெற்றிருக்கிறது. ஆனால் மத்திய சர்க்காருடைய வரவு-செலவுத் திட்டம் ஒரு பற்றாக்குறைத் திட்டமாக உரு



வெடுத்து, அதிலே துண்டு விழுகின்ற தொகையை ஈடு கட்டுவதற்கு அவர்கள் வரி போட்டும் மாளாமல், தொடர்ந்து பண வீக்கத்தை அதிகப்படுத்த வேண்டிய நெருக்கடிக்கு அவர்கள் தள்ளப்படுகின்ற நேரத்தில், விலைவாசிகள் கட்டுக்கடங்காத அளவுக்கு உயர்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதைத் தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகின்ற சூழ்நிலையையும் நாம் கண்டிருக்கிறோம். நேற்றுகூட சிலர் பேசியது பத்திரிகையில் வந்திருந்தது. பேரவையில் பேசிய பேச்சுக்கள், அதுவும் எதிர்க் கட்சித் தலைவர் பேசிய பேச்சுக்கள் தவறான முறையில் பிரசுரிக்கப்பட்டதாக நான் அறிகிறேன். மாநில அரசு நோட்டு அடித்துக்கொள்ளலாம் என்ற முறையில் ஒரு பற்றாக் குறை பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறது என்ற அளவில் செய்திகள் போடப்பட்டன. நோட்டு அடிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மாநில அரசினுடைய வரையறுக்கப்பட்ட அதிகாரங்களும், மாநில அரசுக்கு இருக்கின்ற நிதி ஆதாரங்களும், எந்த அளவுக்கு ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளே அமைந்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்திடுகின்ற நேரத்தில், பணவீக்கத்தால் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரச் சிக்கலை நிவர்த்திப்பதற்கு, தேசிய அளவில் எழுந்திருக்கின்ற பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, மத்திய அரசு தேசிய மட்டத்தில் தெளிவாக ஓர் ஆலோசனை நடத்தியாக வேண்டும் என்பதையும், ஒரு மாநில முதலமைச்சர்களுடைய மாநாட்டைக் கூட்டி ஒரு முடிவினை எடுத்திட வேண்டும் என்பதையும் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் துவக்கத்திலேயே நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். மாநில முதலமைச்சர்கள் எல்லோரும் பொருளாதார நிபுணர்கள் என்கின்ற எண்ணத்தில் நான் சொல்லவில்லை. அவர்களையெல்லாம் அழைத்து மத்தியில் ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்பது நமது கருத்து. ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற முதலமைச்சர்கள் நல்ல, சிறந்த பொருளாதார நிபுணர்களுடைய கருத்துக்களைப் பெற்று வைத்திருப்பார்கள். அவர்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டு, அந்தக் கருத்துக்கள் ஒரு இடத்தில் ஆராயப்பட வேண்டும். அவைகளிலிருந்து கிடைக்கின்ற பல்வேறான கருத்துக்களின் சங்கமத்திலிருந்து ஒரு புதிய கருத்து உருவாக வேண்டும். அதன் காரணத்தால், இன்றையதினம் எழுந்திருக்கின்ற தேசிய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வழிவகைகள் கிடைக்குமா என்று பார்ப்பதற்காகவும் முதலமைச்சர்களுடைய மாநாட்டை மத்திய அரசு அவசரமாகக் கூட்டி, தேசிய நெருக்கடியிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று நான் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூறியிருக்கிறேன்.

இங்கே எதிர்க் கட்சித் தரப்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நாங்கள் வரிகளை அதிகமாகப் போட்டிருக்கிறோம், சாதாரண மக்களைப் பாதிக்கக் கூடிய வரிகளைப் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இந்த அரசு உருவான நேரத்திலிருந்து, அவர்களுடைய மறைவுக்குப் பிறகு அவர் வழி நடைபெறுகின்ற இந்த அரசினுடைய வரிக் கொள்கையைப் பொறுத்த வரையில், தாங்கக்கூடியவர்களுக்கு வரி விதித்தல், தாங்க முடியாதவர்களுக்கு புதிய வரி போடாதிருத்தல் என்பதாகும். இன்றைய தினம் விலைவாசி ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் வரி விதிப்பதையோ, வரி மாற்றங்களையோ ஏற்க வேண்டும் என்கின்ற கொள்கையை உடைய இந்த அரசு சில வரி மாற்றங்களை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்திருக்கிறது. குறிப்பாக, பத்து கோடி ரூபாய் துண்டு விழுகின்ற நிலையைச் சரிக்கட்டுவதற்காக, நாம் வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் என்று அறிவித்திருப்பதில், மோட்டார் வாகன வரியைச் செம்மைப்படுத்துவதன் மூலமாக, அந்த வரியைச் சீர்திருத்துவதன் மூலமாக, 6½ கோடி ரூபாய் என்ற அளவுக்கு நமக்குக் கிடைக்கும். பல ஆண்டுகளாக, வியாபாரிகளுடைய கோரிக்கை பல முனை வரியை ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்பதாகும். அந்த வகையில் 59 பொருள்களின் மீதுள்ள வரிகளை, பல முனை வரிகளை ஒரு முனை வரியாக மாற்றுவதன் காரணமாகவும், 50 ஆயிரம் ரூபாய் அளவில் வியாபாரம் செய்கின்ற சிறு வியாபாரிகளுக்குத் தொந்தரவு இல்லாத வகையில் விற்பனை வரிச் சலுகை அளித்து, பத்து இலட்சம் ரூபாய் அளவுக்கு வியாபாரம் செய்கின்றவர்களுக்கும், அதற்கு மேலே வியாபாரம் செய்கின்றவர்களுக்கும் 5 சதவீதம் என்கின்ற சர்சார்ஜை 10 சத விகிதம் என்று உயர்த்தி, அதன் விளைவாக 3½ கோடி ரூபாயும், ஆக மொத்தம் பத்து கோடி ரூபாய் இந்த வரிச் சீரமைப்பின் மூல

(பிற்பகல் 6.10)

மாக நாம் பெறுகிறோம். இந்த 59 பொருள்களின் மீது நாம் வரி மாற்றம் செய்திருப்பது விலைவாசி உயர்வுக்கு எந்த வகையிலும் காரணமாக இருக்குமா வென்றால் நிச்சயமாக இருக்காது. அகவிலைப் படியை இன்றைக்கு மத்திய அரசு எந்த அத்தியாவசியப் பொருள்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நிர்ணயிக்கிறது என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அக விலைப் படியை நிர்ணயிப்பதற்கு உதவுகின்ற பண்டங்களினுடைய பட்டியலில், அரிசி, கோதுமை, சர்க்கரை, பச்சைப் பயிறு, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு என்றெல்லாம் தொடங்கி ஒரு 100 பொருள்கள் இருக்கின்றன. அந்த 100





பொருள்களில் மண்ணெண்ணெய், வெற்றிலை, பாக்கு, மீன் வகை, கீரை என்கின்ற இந்தப் பொருள்களெல்லாம் அடங்கி, செருப்பு, குடை, பெட்டி, தலையணை உறை போன்ற பொருள்களெல்லாம் அதிலே இணைக்கப்பட்டு, முகப் பவுடர், வாசனை சோப்பு, பற்பொடி, தையற்கூலி என்கின்ற அளவிற்கு இடம் பெற்றிருக்கின்றன. இந்த 100 பொருள்களை அத்தியாவசியப் பொருள்கள் என்று எடுத்துக்கொண்டு, இவற்றின் விலையைக் கணக்கிட்டுத்தான் அகவிலைப் படி நிர்ணயிக்கப்படுகிறது. இன்றைக்கு நாம் வரி மாற்றம் செய்திருக்கிறோமே, நம்முடைய தமிழக அரசின் சார்பாக—இந்த வரி மாற்றம் இந்த 100 பொருள்களில் எதையாவது தொட்டிருக்கிறதாவென்றால் இல்லை. அகவிலைப் படி நிர்ணயிக்கிற அத்தியாவசியப் பொருள்கள் எதையும் தொடாமல் 59 பொருள்களின் மீது நாம் வரி மாற்றம் செய்திருக்கிறோம். இந்த 59 பொருள்களிலும் அன்றாடத் தேவைக்குள்ள பொருள்கள் என்று எண்ணப்படுகிற எண்ணெய் போன்ற பொருள்களில் இந்த ஒரு முனை வரி மாற்றம் நாம் எந்த அளவிற்குச் செய்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே பல முனை வரி என்பது முதல் கட்டத்தில் 3½ சதவீதத்திலே ஆரம்பமாகி இரண்டு கட்டங்கள், மூன்று கட்டங்கள் என்று விரிவடைகிற நேரத்தில் 7½ சதவீதம், 9 சதவீதம் என்றெல்லாம் இருந்த நிலைமையை மாற்றி, 3½ சதவீதம் என்று ஆரம்பமாகி, இரண்டு கட்டத்திற்குச் சென்றதை நிர்வாக வசதிக்காக 7 சதவீதம் என்று மாற்றியிருக்கிறோம். 3 கட்டங்களிலே விரிவானதை 9 சதவீதமாக மாற்றியிருக்கிறோம். ஆடம்பரப் பொருள்களுக்கு மாத்திரம்தான் இந்த வரி மாற்றச் சீரமைப்பில் நாம் வரி விகிதத்தை உயர்த்தியிருக்கிறோம். அப்படி எவை எவைகளுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்று பார்த்தால், இது ஏழைகளை பாதிக்கின்ற வரி என்று நம்முடைய தீக்ஷிதர் அவர்கள் சொன்னது போலவும், இது ஏழைகளை பாதிக்கின்ற வரி என்று நண்பர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்டது போலவும், இது ஏழைகளையெல்லாம் மறைமுகமாக பாதிக்கின்ற வரி என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போலவும், இது பாதிக்குமா, பாதிக்காதா என்பதற்கான பதில் கிடைக்கும். சீட்டுக் கட்டுகளுக்கு 9 சதவீதம் என்று உயர்த்தியிருக்கிறோம். இது 59 பொருள்களில் வருகிறது. செயற்கை ரப்பர் பொருள்களுக்கு 9 சதவீதம், ரப்பரால் செய்யப்பட்ட பொருள்களுக்கு 9 சதவீதம். தூய பட்டுத் துணிகளுக்கு, கைத்தறி நீங்கலாக உள்ளவைகளுக்கு 10 சதவீதம், எஃகினால் செய்யப்பட்ட மேஜை, நாற்காலி போன்ற தளவாடங்களுக்கு 10 சதவீதம், லினோலியம் 15 சதவீதம், சலவைக் கற்களுக்கு, சலவைக் கற்களால் ஆக்கப்பட்ட பொருள்களுக்கு 15 சதவீதம், நீளமான தரை விரிப்புகளுக்கு 15 சதவீதம், மொசாய்க் ஓடுகள் 15 சதவீதம், விசையேணி (லிஃப்ட்) 15 சதவீதம், மொலாசஸ் 25 சதவீதம், அரிஷ்டம் 30 சதவீதம், இந்தியன் மேட் ஃபாரின்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 15

ஸிக்கர் 25 சதவீதம் என்று இந்தப் பொருள்களுக்குத் தான் இந்த வரிச் சீர
மைப்பில் சதவீதம் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றனவேயல்லாமல் சாதாரண
மக்கள் பயன்படுத்தக்கூடிய, அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய
வைகளில் கூடுமான வரையில் வரி குறைப்புத்தான் செய்யப்பட்டிருக்கிறது.
இங்கே குறைத்து இன்னொரு இடத்தில் அதிகப்படுத்திய காரணத்தினால்தான்,
நான் குறிப்பிட்டுக் காட்டிய 3½ கோடி ரூபாய் இந்த விற்பனை வரி சீர்திருத்
தத்தின் மூலமாக இந்த அரசுக்குக் கிடைக்கிறது. ஆகவே இது ஏழை
மக்களைப் பாதிக்கக் கூடியதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்வேன்.

மொத்தத்தில் சொன்னால், 10 கோடி ரூபாய் வரி போட்டிருக்கிறார்கள்
என்று சொன்னால், அது பயங்கரமாகத் தோன்றலாம். 10 கோடி ரூபாய்க்கு
வரி போட்டுவிட்ட அரசு என்று மொத்தமாகச் சொல்லிவிடலாம். பொது
வாகச் சொல்லிவிடலாம். நம்முடைய அரசு விதித்திருக்கிற வரிகளோடு,
இதுவரையில் வந்திருக்கிற, இந்த ஆண்டுக்கு வந்திருக்கிற மற்ற மாநிலங்களு
டைய வரவு செலவுத் திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மராட்டிய
மாநிலத்தில் 31 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள், பற்றாக்குறை
பட்ஜெட் 35 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்தில் 24 கோடி ரூபாய்க்கு வரி
போட்டிருக்கிறார்கள், பற்றாக்குறை பட்ஜெட் அங்கே 19 கோடி ரூபாய்;
கர்நாடகத்தில் உபரி பட்ஜெட் 4 கோடி ரூபாய்க்குப் போட்டு விட்டு, 19
கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள், வருவாய்க் கணக்கில் உபரி
பட்ஜெட் 4 கோடி ரூபாய் என்று காட்டியிருக்கிறார்கள்; பஞ்சாப்பில் பற்றாக்
குறை 21 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டிருக்கிறது, 17 கோடி ரூபாய்க்கு
பஞ்சாப் மாநிலத்தில் வரி போடப்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டில் 10 கோடி
ரூபாய்க்குத்தான் வரி போட்டிருக்கிறோம். இதுவரை கிடைத்திருக்கிற மற்ற
மாநிலங்களின் வரவு-செலவுத் திட்டங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில், நாம் 10
கோடி ரூபாய்க்குத்தான் வரி போட்டிருக்கிறோம். அதுவும் ஏழை எளியவர்
களைப் பாதிக்காத அளவிற்குப் போட்டிருக்கிறோம். விஸ்கியைத்தைப் பயன்
படுத்துகிறவர்கள், மொலாசஸ் பயன்படுத்துகிறவர்கள், சலவைக் கற்களைப்
பயன்படுத்துகிறவர்கள், ஆடம்பரமாக சீட்டாடுகிறவர்கள், இப்படிப்பட்டவர்
களுக்குத்தான் சில சதவீதங்கள் உயர்த்தப்பட்டிருக்கிறதேயல்லாமல், ஏழை
களை எந்த வகையிலும் பாதிக்காத வரி மாற்றங்களைத்தான் நாம் செய்திருக்கி
றோம் என்பதை இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக, வரி விதிப்பு
அதிகமாக ஆகிவிட்டது என்று சொன்ன கூற்றுக்குப் பதில் கூறக் கடமைப்பட்
டிருக்கிறேன். இன்னொன்று. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள்
சொன்னார்கள். தமிழரசுக் கழகத் தலைவரவர்கள் இதற்கான விளக்கங்களை
யெல்லாம் அவருடைய உரையில் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய



1974 மார்ச் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசுகிற நேரத்தில் நேற்றையதினம்
குறிப்பிட்டார்கள். ஆக, மத்திய அரசை, மாநில அரசைப்பற்றி ஒவ்வொரு
வரும் ஒரு கோணத்தில் பேசியிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் திரு.
தாமோதரன் அவர்களும் நேற்றையதினம் பேசினார்கள். ஆக, மத்திய அர
சைப்பற்றியே இந்த பட்ஜெட்டிலே அதிகமாக இருக்கிறது என்று அங்க
லாய்த்துக்கொள்கிற எதிர்க் கட்சிக்காரர்களானாலும், அல்லது இதைப்பற்றி
விமர்சிக்கின்ற தோழமைக் கட்சிக்காரர்களானாலும், அல்லது ஆளும் கட்சிக்கு
ஆதரவாக சில கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களானாலும்
இந்த மாநில அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்தோடு மத்திய அரசினு
டைய வரவு-செலவுத் திட்டத்தை ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. நான்
நேற்றைக்கே மிகத் தெளிவாக சட்டப் பேரவையில் குறிப்பிட்டிருக்கிறேன்.
மத்திய அரசைக் குற்றம் சொல்வதற்கோ, குறை கூறுவதற்கோ, அரசியல்
ரீதியில் தர்க்கித்துக் கொள்வதற்கோ வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய
அரசைப்பற்றிய குறிப்புகள் வரவில்லையென்பதை அனைவரும் புரிந்துகொள்ள
வேண்டும். இன்றைக்கிருக்கிற நிதி ஆதாரங்களில் மத்திய அரசு இன்னும்
எந்த அளவிற்கு நம்பால் கருணை காட்டியிருக்கலாம் என்பதுதான் சுட்டிக்
காட்டப்பட்டிருக்கிறது. நான் கருணை என்று சொல்வது கூட அடக்க
உணர்வோடு சொல்கிற வார்த்தையே அல்லாமல், நாம் உரிமையோடு கேட்ப
தற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தக் காரணத்தினால் வேறு பல காரி
யங்களுக்கு வேறு பல தலைப்புகளில் வேறு சில மாநிலங்களுக்கு நிதியை வாரி
வாரி வழங்கியிருக்கின்ற மத்திய அரசினுடைய நிதிக் குழுவானாலும், திட்டக்
குழுவானாலும், ஏன் நம்முடைய மாநிலத்திற்கு, அல்லது நம்மைப் போன்ற
வேறு சில மாநிலங்களுக்கு இந்த நிதி ஆதாரங்களைத் தருவதிலே தயக்கம்
காட்டியது என்ற குறிப்புகளை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சுட்டிக்
காட்டாமலிருந்தால், கடமை தவறியவர்களாக ஆகிவிட்டோம் என்ற குற்றத்
திற்கு ஆளாவோம் என்பதற்காகவும், நம்முடைய மாநிலத்து மக்கள் ஏன்
இந்த நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் பயனுள்ள
விதத்திலும் தான் வரவு-செலவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதேயல்
லாமல், மத்திய அரசைக் குறை கூற வேண்டுமென்பதற்காக அல்ல. மத்திய
அரசைக் குறை கூற வேண்டுமானால், அதை வரவு-செலவுத் திட்ட அறிக்கை
யில் சொல்லவேண்டுமென்பதல்ல. மேடைகளிலே பேசலாம், ஏடுகளிலே
எழுதலாம், டில்லியிலே சென்று நிருபர்களிடத்திலே கூட பேசலாம், இங்கே
சென்னையில் மத்திய அரசைக் குறை கூறிவிட்டு, டில்லிக்குச் சென்றதும்
அங்கே போய் பாராட்டுகிற சூழ்நிலையெல்லாம் இன்றைக்கிருக்கிற இந்த
அரசுக்கு என்றைக்கும் கிடையாது என்பதை இந்த மன்றத்திலுள்ள
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். ஆகவே நாம்

எடுத்த நிலை துணிவான நிலை. அதே நேரத்திலே உறவு கெடாத நிலை. அதே நேரத்திலே நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் வராத நிலை. பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் முன்னிலையிலேயே தமிழக அரசினுடைய கொள்கையைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுப்போம், இது தான் திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நிலை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த அரசு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை இது தான். உறவுக்குக் கை கொடுப்பதும், உரிமைக்குக் குரல் கொடுப்பதும் தான் நம்முடைய நிலையாகும். நேற்றையதினம் நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள், மத்திய அரசைக் குறை கூறக்கூடாது, இந்தப் பிரச்சினையைப் பெரிதாக ஆக்கக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். இந்தியப் பாதுகாப்பு என்பது தனி விஷயம். இந்தியாவிற்கு ஒரு நெருக்கடி வருகிறது, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒன்று வருகிறதென்றால், எல்லாவற்றையும் மறந்துவிட்டு நாம் அந்தக் காரியத்தில் ஈடுபடுவதற்குத் தயாராக இருக்கிறோம். நான் இன்னும் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். இந்தியாவிற்குப் பாகிஸ்தானால் ஆபத்து வந்த நேரத்தில், இந்தியாவிலேயே யுத்த நிதிக்கு 6 கோடி ரூபாயைத் திரட்டிக் கொடுத்த ஒரேயொரு மாநிலம் நம் தமிழ் நாடு என்பதைத் தெரிவித்துக்கொள்வேன். (கை தட்டல்) இதை விடப் பெரிய மாநிலம், 82 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம், 11 கோடி மக்களைக் கொண்டிருக்கின்ற உத்தரப்பிரதேசம் கூட இந்த 6 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி செய்யவில்லை. இதற்கு முன்பு தமிழகத்தை ஆண்டு

(பிற்பகல் 6.20)

கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியினுடைய பரிபாலன காலத்திலே கூட, வந்த யுத்தங்களைத் தடுக்கின்ற அந்தக் காலத்தில்,—நான் அவர்களுடைய நாட்டுப் பற்றைக் குறை கூறுவதாகச் சொல்லக் கூடாது—இந்த அளவிற்கு யுத்த நிதி தந்ததாக வரலாறு கிடையாது. இதை எதிர்க் கட்சிக்காரர்கள் நிச்சயமாக ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு நாம் இந்தியாவின் பாதுகாப்பிலே பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொண்டிருக்கிறோம். சொல்லளவிலே அல்ல, செயலளவில் நடந்து காட்டியிருக்கிறோம். ஆகவே இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கு ஒரு ஊனம் வருமானால், ஒரு ஊறு வருமானால், அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினைகளை நாம் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. பிரச்சினைகளைப் பேசுவது, நாட்டு மக்களை வாழ வைக்க வேண்டுமென்பதற்காகத்தான். ஒவ்வொரு மாநிலமும் சேர்ந்ததுதான் நாடு. அந்த நாட்டு மக்கள் இந்த மாநிலத்திலேயும் இருக்



கிறார்கள். அந்த மாநிலத்திலே இருக்கின்ற மக்களை வாழ வைப்பது, நாட்டு மக்களை வாழ வைப்பதுதான். அவர்களை வாழ வைப்பதற்கு, இன்றைக்கு நமக்குள்ள அதிகாரங்களின் வாயிலாகத் திரட்டக்கூடிய நிதி ஆதாரங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே நீங்கள் போதுமான அளவுக்கு நிதி தாருங்கள் என்று கேட்கிறோம். ஏதோ, அவர்களுடைய கஜானாவிலிருந்து திறந்து அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. இங்கேயிருந்து எடுத்துச் செல்கிற வரிப் பணத்தை மீண்டும் மாநிலங்களுக்குப் பங்கிடும் நேரத்தில், அநீதி இழைக்கப்படாமலிருக்க வேண்டுமென்பதைத்தான் நாம் சுட்டிக் காட்டுகிறோம். 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திலும், 6-வது நிதிக் குழுவிலும் நம்முடைய மாநிலம் பெருமளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே மெத்த ஆதங்கத்துடன் எடுத்துக் காட்டியதுபோல், 5-வது ஐந்தாண்டுத் திட்டம் வருமா, வாராதா என்பது கேள்விக் குறியாக இன்று நின்று கொண்டிருக்கிறது. அது வராமல், இடையிலே விடுமுறை வந்தால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அவர்கள் சென்ற முறை இங்கே பேசும்போது—இப்போது வரவில்லை; தேர்தலில் ஈடுபட்டிருக்கிறார்கள்—திட்டத்திற்கு விடுமுறை விட வேண்டுமென்று சொன்னார்கள். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான், நான் வரவு-செலவுத் திட்டத்தை எழுதுகிற நேரத்தில் கூட, அந்த வார்த்தையைக் குறிப்பிட்டேன். மத்திய அரசுத் திட்டக் குழு போகிற போக்கைப் பார்த்தால், திட்ட விடுமுறை வந்துவிடுமோவென்று அஞ்சுகிறேன் என்று அதிலே மிக எச்சரிக்கையோடு ஒரு வாக்கியம் குறிப்பிடப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனித்திருக்க முடியுமென்று கருதுகிறேன். 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், முதல் ஆண்டில், ஏப்ரல் திங்களில் நாம் அடி எடுத்து வைக்க வேண்டும். ஆனால் என்ன செய்தி வருகிறது? இன்னும் மூன்று மாத காலம் அல்லது 6 மாத காலம் ஆகலாம், 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய இறுதி வடிவம் கிடைப்பதற்கு என்ற செய்தி வருகிறது. 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான திட்டக் குழுவில் இருந்த முக்கியமானவர், அதைப்பற்றிப் பேசுகிற கூட்டத்திற்கு முதலமைச்சர்களெல்லாம் செல்கிற நேரத்தில், முதல் நாளே பொறுப்பிலிருந்து விலகிவிடுகிறார். பத்திரிகையில் செய்தி வருகிறது. 55,000 கோடி ரூபாய்த் திட்டமென்பது அகலக் கால் வைப்பது, இந்தக் காரணத்தால் அவர் விலகி விட்டார் என்ற செய்தி வருகிறது. டெல்லியில் உள்ள முக்கியமான வட்டாரங்களில் விசாரித்தால், 55,000 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டால்தானே, கொஞ்சமாவது நாம் குறிக்கோளை அடைய முடியும் என்று, நானும் திரு. மாதவன் அவர்களும் சென்ற நேரத்தில், எங்களிடம் தெரிவிக்கிறார்கள். ஆக, போடும்போதே இந்த

அடைய மாட்டோம் என்ற எண்ணத்தோடு போட்டு, போட்டதற்கும் இன்னும் 6 மாத காலத்திற்கு இறுதி வடிவம் தர மாட்டோம் என்ற அளவுக்கு வந்தால், கதைகளிலே சொல்வார்கள், பஞ்சபாண்டவர்கள் எத்தனே பேர் என்று கேட்டு, 4 பேர் என்று மூன்று விரலேக் காட்டி, 2 என்று சொல்லுவது போல, இந்த 5-வது ஐந்தாண்டுத் திட்டமும் ஆகிவிடுமோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. ஆகவேதான் இந்த 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு 55,000 கோடி ரூபாயைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்ற நிலே வந்தாலும், அது முடிவான திட்டமென்பதை விரைவில் அறிவிப்பார்களானல், நாம் திட்டத்தோடு செயல்பட முடியும். திட்டமில்லாமல் ஒரு திட்டம்; அதைத்தான் நான் வரவு செலவுத் திட்டத்திலே சில இடங்களில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். மத்திய அரசை எப்படிக் குறை கூருமல் இருக்க முடியும்? 25,000 கோடி ரூபாய்க்கு 4-வது ஐந்தாண்டுத் திட்டம் போட்டதில், நடப்பு ஆண்டுக்கு 129 கோடி ரூபாய், நமக்கு திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது. ஆனல் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடி எடுத்து வைக்கிறபோது, முதல் ஆண்டில், 129 கோடி ரூபாய்கூட இல்லே; 108-லிருந்து 118 கோடி ரூபாய்க்குள் திட்டத்தை வைத்துக்கொள் என்று சொன்னல், 25,000 கோடி ரூபாயை 55,000 கோடி ரூபாய் ஆக்குவானேன்; தேவையில்லே. அதை இரண்டு மடங்குக்கு அதிகமாக்கிவிட்டு, 129 கோடி ரூபாயைக் குறைத்து 108 அல்லது 118 கோடி ரூபாயாக்கி, அதற்குள் வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறுவது பொருத்தமற்ற வாதம்; நமக்குப் போதுமானதல்ல என்று சுட்டிக் காட்டத்தான், மத்திய அரசை நாம் குறை கூற வேண்டியவர்களாக இருக்கிறேம், திட்டக் குழுவைக் குறை கூற வேண்டியவர்களாக இருக்கிறேமே யல்லாமல் வேறல்ல. இந்த 118 கோடி ரூபாய் அல்லது 108 கோடி ரூபாய் என்பது இறுதி வடிவமானதா என்றல் அதுவும் அல்ல; அதுவும் சந்தேகத்திற்குரிய விஷயம். 129 கோடி ரூபாயும் இல்லே; 108 கோடி ரூபாயா அல்லது 118 கோடி ரூபாயா என்றல், அதுவும் தெரியவில்லே; எப்போது முடிவாகும் என்றல் அதுவும் புரியவில்லே. இந்தச் சூழ்நிலேயில் நாம் குறை கூறுவதில் எந்தவிதமான தவறும் இல்லேயென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய தினம் நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இன்னென்றைச் சொன்னர்கள். நான் பேரவையில் கூட குறிப்பிட்டேன். "Upgradation grant" அந்த வார்த்தைகளேப் பற்றி அவர்கள் சொன்னர்கள். நான் அந்த அளவுக்கு அதிலே நுழைய விரும்பவில்லே. ஆனல் அந்த மானியம், நிர்வாகத்தைச் சீரமைத்து, மேம்படுத்தும் மானியம்—தமிழில் அப்படித்தான் மொழி பெயர்க்க வேண்டும்—ஒரு புதிய தலேப்பு. அது எதற்காகப் பயன்படுகிறதென்றல், கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகியவற்றில்





எந்த மாநிலம் இதுவரை அதிகம் செலவழிக்காமலிருக்கிறதோ அந்த மாநிலங்களுக்கு ஒரு புதிய தலேப்பில் மானியங்களே ஒதுக்குவதற்குச் செய்யப்பட்டிருக்கிற புதிய ஏற்பாடு. இந்த 6-வது நிதிக் குழு செய்திருக்கிற புதிய ஏற்பாடு. நாம் செய்த தவறு என்ன தெரியுமா? கல்விக்கும், மக்கள் நல்வாழ்வுக்கும் அதிகமாகச் செலவிட்டு விட்டோம். அந்தக் குற்றத்திற்குப் பெரிய தண்டனேயாக, நமக்கும், கேரளத்திற்கும், குஜராத்திற்கும், மராட்டியத்திற்கும் அந்த மானியம் கிடையாதென்று மறுக்கப்பட்டு விட்டது. யாருக்குப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? இத்தனே ஆண்டு கல்விக்கும், மக்கள் நல்வாழ்வுக்கும், அதிகம் செலவிடாமல் சோர்ந்து கிடந்த உத்தரப் பிரதேசத்திற்கு 290 கோடி ரூபாய். பீஹாருக்கு 166 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்திற்கு 72 கோடி ரூபாய்; ஒரிஸ்ஸாவிற்கு 57 கோடி ரூபாய்; ஆந்திராவிற்கு 52 கோடி ரூபாய்; மத்தியப் பிரதேசத்திற்கு 50 கோடி ரூபாய்; மைசூருக்கு 27 கோடி ரூபாய். அந்தப் புதுத் தலேப்பில், நிர்வாகத்தைச் சீர்திருத்தி மேம்படுத்தும் மானியம் என்ற தலேப்பில் இவ்வளவு தொகை அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு. கேரளா, குஜராத், மராட்டியம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன; இல்லேயென்று கை விரிக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் சுட்டிக் காட்டுவது தவறு என்று சொல்கிற நேரத்தில், எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை கூறுவதா என்று கேட்டுவிடுவோமானல், மத்திய அரசுக்கு மறைமுகமாக ஆதரவு தந்து, நீங்கள் கொடுக்காமல் இருந்தது நல்லதுதான், அதற்கு சபாஷ் போடுகிறேம் என்று கூறுவதுபோல் ஆகிவிடும். ஆகவே இது போன்ற விஷயங்களிலே எதிர்க் கட்சியினர் ஆளும் கட்சியோடு சேர்ந்து, மாநிலத்திற்கு நிறையத் தொகை பெற்று, நல்ல திட்டங்களே நிறைவேற்ற ஒத்துழைப்புத் தர வேண்டுமென்ற வேண்டுகோளே விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பல வரிகளில் பங்குத் தொகை பெற்று வருகிறேம். மத்திய அரசுக்கு எங்கிருந்து பணம் வரும்; அவர்கள் என்ன செய்வார்கள் என்றெல்லாம் மத்திய அரசுக்காகக் கவலேப்படுவதை விட்டுவிட்டு, எந்தெந்த வகையில் அவர்கள் பணம் ஒதுக்கலாம் என்பதுபற்றியும் நாம் சிந்தித்தாக வேண்டுமென்பதையும் நான் சுட்டிக்காட்டுவேன். நம்முடைய அரசு சார்பாக நீண்ட நாட்களாக, கடந்த 2, 3 ஆண்டுகளாக என்று சொல்லலாம், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும், திட்டக் குழுவிடம் பேசுகிற நேரத்திலும், நிதி ஆணேக் குழுவிடம் பேசுகிற நேரத்திலும், வலியுறுத்தி ஒன்றைச் சொல்லிவந்திருக்கிறேம். 'கார்ப்பரேஷன் டாக்ஸ்'—நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வரி—அந்த வரியும் வருமான வரிபோல மாநிலங்களுக்குப் பகிர்ந்து தரப்பட வேண்டுமென்ற ஒரு எண்ணத்தை நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேம். (குறுக்கீடு) கார்ப்பரேஷன் டாக்ஸ் என்பதைத் தவருகக் கருதிக்கொள்ளக் கூடாது.

மாநகராட்சி டாக்ஸ் என்று எடுத்துக்கொள்ளக் கூடாதென்றுதான், நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் வரி என்று சொன்னேன். 6-வது நிதிக் குழு அறிக்கையிலேகூட ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

"In reviewing the forecast of resources of Central Government, as presented to us by the Union Ministry of Finance, we cannot help observing that there are some areas in which, given the right policies and the requisitt determination, savings on a significant scale can be effected, thus liberating more resources for meeting the pressing needs of the States." இது இங்கு நாம் எடுத்துச் சொன்ன—சிலம்புச் செல்வர் அவர்கள் சொன்னாரே, இரட்டை இலாகா அங்கே இருக்கிறதென்று—அந்த இரட்டை இலாகா மூலம் ஏற்படுகிற சிக்கனச் சீரழிவு ஆகும். இதை 6-வது நிதிக் குழுவிடம் நாம் பல முறை எடுத்துச் சொன்னதை, அவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு வேளாண்மைத் துறைக்கு அங்கே ஒரு அமைச்சகம் இருக்கிறது; கல்வித் துறைக்கு ஒரு அமைச்சகம் இருக்கிறது; மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஒரு அமைச்சகம் இருக்கிறது. இவைகள் எல்லாம் டியூப்ளிகேஷன். இந்த இரட்டை இலாக்காக்கள் தேவையில்லை என்பதை இதே மாமன்றத்தில் முதலமைச்சராக வீற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பல முறை, பல்வேறு உதாரணங்களின் மூலமாக எடுத்துக்காட்டி, இரட்டை முறை தேவையில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த நிதி ஆணைக்குழுவும், நான் படித்துக் காட்டிய இந்த வாசகங்களை அந்த அறிக்கையிலே குறிப்பிட்டு, மத்திய அரசினுடைய சார்பில் அவர்கள் கொஞ்சம் சிக்கனப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கும் இந்த இரட்டை இலாக்காக்களுக்காகச் செலவழிப்பதைக் குறைத்துக்கொள்வார்களேயானால், மாநில அரசிற்கு அதிகமாக வழங்க முடியும் என்ற அந்தக் கருத்தை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் போலவே, நான் தொடக்கத்தில் சொன்ன கார்ப்பொரேஷன் டாக்ஸைப் பொறுத்த வரையிலும் கூட, நிதிக் குழுவினுடைய அறிக்கையிலே, சொல்லப்பட்டிருப்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, கார்ப்பரேஷன் டாக்ஸை மாநிலங்களுக்குத் தரலாம்; அதுபற்றி என்.டி.சி. கூட்டத்திலே விவாதிக்கலாம் என்கின்ற கருத்தையும், அவர்கள் அவர்களுடைய அறிக்கையிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆறாவது நிதிக் குழு நம்முடைய கருத்தை ஏற்றுக்கொண்டு, கார்ப்பொரேஷன் டாக்ஸை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதைப்பற்றி விவாதிக்கலாம் என்று சொல்லியிருக்கின்ற கருத்தை, வருகின்ற என்.டி.சி. கூட்டங்களில் ஆராயவேண்டும் என்று பிரதமருக்கும், திட்டக்குழு



அமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய தமிழக அரசின் சார்பில் கடிதம் மூலமாக, இன்றையதினம் கூட எழுதியிருக்கிறேன். ஆகவே ஒரு நல்ல சுமுகமான, நாமெல்லாம் விரும்புகின்ற முடிவினை மத்திய அரசும், அதனுடைய அமைச்சர், இந்தத் துறையினர், அனைவரும் ஏற்றுக்கொண்டு, மாநிலங்களுக்குக் கார்ப்பொரேஷன் டாக்ஸைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்வருவார்கள் என்றும் நான் நம்புகின்றேன்.

இப்படிப்பட்ட காரியங்களில் எதிர்க் கட்சியிலே உள்ள உறுப்பினர்கள், எதற்கெடுத்தாலும் மத்திய அரசிடம் எதிர்பார்ப்பது, மத்திய அரசிடம் கேட்பது என்கின்ற முறை இருக்கக்கூடாது, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்ற நேரத்தில் சற்றுச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சிந்திக்க வேண்டுமென்று சொல்வதால் கோபித்துக்கொள்ளக் கூடாது. சிந்தித்தாலும் கூட, ஆளுங்கட்சியை ஏதாவது குறைகூற வேண்டும் என்பதற்காக, ஏதாவது சொல்ல வேண்டுமென்கின்ற கருத்தில் சொல்லவும் கூடாது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். உரம் கிடைக்கவில்லை என்று தெரிகிறது, இருந்தாலும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள் என்று நான் எழுந்து கேட்டால், அவர்களே சொல்ல முடியாது. என்ன செய்ய முடியும்? இந்திய அரசைக் கேட்டால், உலகத்திலேயே உரப் பற்றாக்குறை என்று சொல்லுகிறார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, மக்களின் குறையை எடுத்து இங்கே சொல்வதற்குத்தான் நாங்கள் இருக்கின்றோம். அதற்கான ஒரு வழியை அரசாங்கத்தை நிர்வகிப்பவர்கள் கண்டுபிடித்து, முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். எங்கள் கடமையை நாங்கள் செய்துவிடுகின்றோம். உங்களுடைய கடமையை நீங்கள் செய்யுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குறையை மக்கள் சொல்லுகிறார்கள். அதற்கு வழி சொல்லவேண்டியது எதிர்க் கட்சியின் பொறுப்பு. குறைகளைச் சொல்ல மக்களே போதும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, கொடுத்த உரத்தை ஈக்விடபிளாக டிஸ்டிரிபியூட் செய்யவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. தீக்ஷிதர் அவர்கள் அடுத்த கட்டத்துக்குப் போய்விட்டார்கள். குறைகளை மக்கள் சொல்கிறார்கள். அதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்கிறார்கள். அந்தக் குறைகளை இங்கே வந்து சொல்வது மாத்திரமல்லாமல், அதற்கு இந்த வழி வகைகளைக்

கையாளலாம் என்று சொல்வதும் எதிர்க் கட்சிகளின் பொறுப்பாகும். சரி, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்கிறார்களே, இதற்கு என்ன வழிவகை என்று அவர்களைக் கேட்டால், நான் ஆளும் கட்சிக்கு வரும்போது சொல்கிறேன் என்று சிலபேர் சொல்கிறார்கள். நாங்கள் இதை அனுபவ ரீதியாக பேரவையில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வழிவகைகளைச் சொல்லாமல், சாமான்கள் சரியாக விநியோகிக்கப்படவில்லை என்றார்கள். திரு. சித்ரா நாராயணசாமி பேசும்போது—நான் அவையில் இல்லாவிட்டாலும், எல்லாப் பேச்சுக்களையும் நான் படித்துப் பார்த்தேன்—அதில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் உரம் வழங்கும்போது தவறு நடைபெறவில்லையா, தனியார் உரம் விநியோகம் செய்தால், அவர்கள் மாத்திரம் நம்பிக்கையற்றவர்களா என்கின்ற விஷயங்களை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்வி நியாயமான கேள்வி. ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறையின் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற உரத்தின் அளவு எவ்வளவு, தனியார் துறை மூலமாக விநியோகிக்கப்படுகின்ற உரத்தின் அளவு எவ்வளவு என்பதைத் தெட்டத் தெளிவாக, சென்ற முறை நான் விளக்கமாகக் கூறியிருக்கிறேன். மிகக் குறைந்த அளவு, கிட்டத்தட்ட 34 சதவிகிதம்தான் அரசின் மூலம், கூட்டுறவுத் துறையின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றது.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் போட்ட திட்டத்தின்படி தனியார் துறையிலே விநியோகிக்கட்டும். ஆனால் அந்தத் தனியார் துறைக்குக் கொடுக்கும் உரத்தைக்கூட, நமது மேற்பார்வையில் நாம் ஏன் விநியோகிக்கக்கூடாது? அதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் கேட்கின்றோம். தனியார் துறையிலே விநியோகிக்கட்டும். 66 சதவிகிதம் விநியோகிக்கிறார்கள். அதை அப்படியே கொடுத்துவிடுங்கள் என்பது ஒரு வாதம். அரசாங்கத்தினிடத்தில் கொடுத்துவிடுங்கள், மொத்த உர விநியோகத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்பது ஒரு வாதம். அதிலே, கூட்டுறவுத் துறையிலே தவறு நடக்கவில்லை என்று சொல்லமாட்டேன். ஒன்றிரண்டு இடங்களிலே நடக்கலாம். அப்படி நடக்கும்போது, அவர்களைக் கண்டிக்க, தண்டிக்க, அவர்கள் மீது அதிகாரம் செலுத்தி, எந்த நடவடிக்கையும் எடுக்க அரசிற்கு உரிமை இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது. ஆனால் தனியார் துறையிலே உரத்தைப் பெற்று, அதிக அளவு உரத்தைப் பெற்று, 66 சதவிகிதம் உரத்தைப் பெற்று, தவறு செய்கின்ற நேரத்தில், அதை அடக்குவதற்கோ,



அவர்களுடைய உரிமையை ரத்து செய்வதற்கோ அதிகாரம் மாநில அரசிற்குக் கிடையாது. அதைத்தான் மாநில அரசிற்குக் கொடுங்கள் என்று மத்திய அரசைக் கேட்கின்றோம். பல நாட்களாகக் கேட்கிறோம். பல திங்களாகக் கேட்கிறோம். சட்டசபையிலே அதைப்பற்றிப் பேசிக் கேட்டோம். நேரிலும் கேட்டோம். ஆனால் அந்த அதிகாரம் இன்று வரையிலே மாநில அரசிற்கு வழங்கப்படவில்லை. ஆகவேதான் உர விநியோகத்திலே ஏற்படுகின்ற, தனியார் துறை மூலமாக ஏற்படுகின்ற, தவறுகளில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அவர்களிடமிருந்து உரத்தைப் பெற்று வேறு ஒருவர் மூலமாக விநியோகித்து, விவசாயிகளுக்குப் போய்ச் சேரவும் ஆன சூழ்நிலையை நாம் ஏற்படுத்த முடியவில்லை. இவ்வளவு பெரிய விஷயத்தில் நிச்சயமாக பாமர மக்களுடைய, கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களுடைய, இதயத்தைத் தொடக்கூடிய, அவர்களுடைய காதுகளை எட்டக்கூடிய, அவர்கள் சிந்தித்துப் பார்க்கக்கூடிய அளவிற்கு இந்த விஷயம் எடுத்துச் சொல்லப்படுவது கிடையாது. ஏனென்றால் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கின்ற அரசு மாநில அரசுதான். ஆகவே அவர்கள் உடனடியாக மாநில அரசைக் தான் குற்றம் சாட்டுவார்கள். அவர்களிடத்தில் எல்லாம் நாம் எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதில் கட்சி பேதமில்லாமல் எடுத்துச் சொல்ல வேண்டும். இதில் என்ன அரசியல் நோக்கம் வந்துவிடும் என்றால், மாநில அரசு மீது இங்கே இருக்கின்ற மக்களுக்குக் காழ்ப்பு உணர்ச்சி ஏற்பட்டால், அவர்களை மாற்றிவிட்டு, நம்மை வந்து உட்கார வைத்துவிடுவார்கள் என்பது. அப்படி உட்கார ஆசைப்படுகின்ற எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்கின்றேன். எதற்குத் தெரியுமா? இந்தத் திட்டை நீங்கள் வாங்கிக்கொள்வதற்காகத் தான் அங்கே உட்காரப் போகிறீர்களே அல்லாமல், வேறல்ல. இதைத்தான் சொல்லப் போகிறார்கள். பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டியாக வேண்டும்.

இன்றைக்கு மத்திய மாநில உறவுகள் சீர்பட வேண்டும் என்பதிலும், மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதிலும் நாம் காட்டுகின்ற அக்கறை, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் எப்போதும் இருக்கப் போகிறது; ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு அந்த அதிகாரங்கள் வேண்டும் என்பதற்காக அல்ல. நாளைக்கு இந்த ஆட்சிபீடத்தில் வந்து உட்காரப் போகின்றவர்களுக்கும் சேர்த்துத் தான் நாம் கேட்கிறோம். அதை மறந்துவிடக் கூடாது. மாநில அரசுக்குத் தான் அதிகாரங்களை நாம் அதிகமாகக் கேட்கின்றோமே அல்லாமல் வேறல்ல என்பதையும் நான். . .

**திரு. கே. ராஜாராம் :** எல்லா மாநிலங்களுக்கும் வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் திருத்தத்தோடு ஆதரிக்கிறார்கள்.

**திரு. கே. ராஜாராம் :** எல்லா மாநிலங்களுக்கும் என்றால், நாங்கள் ஆதரிக்கின்றோம். தமிழ் நாட்டுக்கு மட்டும் கேட்டால், ஆதரிக்கமாட்டோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லா மாநிலத்திற்கும் சேர்த்துக் கேட்டால் ஆதரிக்கிறோம் என்கிறார்கள். எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத் தான் கேட்கிறோம். ஆனால் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் இங்கே ஆதரித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்களுக்கு மேலே இருப்பவர்கள், அதை ஆதரிக்கிறார்களா என்பதுதான் எனக்குத் தெரியாத புதிராக இருக்கிறது. அவர்களும், ஆதரிக்கும் அளவுக்கு நமது எதிர்க் கட்சித் தலைவரைப் போன்றவர்கள் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஒரு இயக்கத்தின் சார்பாகவே, ஆண்டு, அனுபவித்த கட்சியின் சார்பாக எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்கள் ஐந்தாண்டு கால நிர்வாகத்தில் மத்திய அரசால் ஏற்படுகின்ற சீர்கேடுகளை உணர்ந்து, அதை எதிரொலிக்கின்றோம். 20 ஆண்டுக்காலம் ஆட்சி செலுத்தியவர்கள், மத்திய அரசின் மூலமாக எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்து, உண்மைகளை உணர்ந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லப்படுகின்ற விஷயங்கள் உண்மை தான் என்கின்ற அளவுக்கு உதவிகரமாக எங்களுக்கு இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சில பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். அவைகளைப்பற்றியெல்லாம் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையென்று நான் கருதுகின்றேன். நமது சிலம்புச் செல்வர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், தமிழுக்கு, அதன் வளர்ச்சிக்கு, ஒரு தொகை ஒதுக்கப்படவில்லை என்பதை தம்முடைய மனக்குறையாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களே அதற்கு ஒரு சமாதானமும் சொல்லிக் கொண்டார்கள். கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பெரும் தொகையில் தமிழுக்கும் போய்ச் சேருகிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், தமிழுக்கு என்கின்ற தனித் தலைப்பிலே அந்தக் காரியம் நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். தமிழுக்காக, தமிழர்களுக்காக, தமிழ்ச் சமுதாயத்துக்காக, தமிழ் மரபு காக்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழர்களுடைய நாகரீகம், கலாசாரம், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக சிலம்புச் செல்வர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற



எந்தக் காரியமானாலும், அவைகளை இந்த அரசு தட்டிக் கழித்ததில்லை என்பதை நாடு நன்றாக அறியும். ஆகவே வெகு விரைவில் தமிழுக்கு ஒரு தனித் தொகை ஒதுக்குகின்ற அளவுக்கும், தமிழின் மேம்பாட்டுக்காக ஒரு தொகை பயன்படுகின்ற அளவுக்கும் நிச்சயமாக ஒரு தனித் தலைப்பில் தொகை ஒதுக்கப்படும் என்பதையும், அதுபற்றிப் பரிசீலித்து விரைவில் அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (கைதட்டல்).

(பிற்பகல் 6.40)

நம்முடைய அடிகளார் அவர்கள் பேசுகிற நேரத்தில் பாவாணர் அவர்களுடைய ' அகர முதல் ' என்ற அகராதியைத் தயாரிப்பதற்கு அரசு நல்ல முறையிலே உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அது குறித்து பாவாணர் அவர்களிடத்திலே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தொடர்புகொண்டபோது பல விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள். அதற்கு ஆகின்ற செலவு, இன்றைக்கு அதிகமாக திட்டமிட்டுக் காட்டப்படுகின்ற காரணத்தாலேதான், தயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அடிகளார் அவர்கள் மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஒரு குறிப்பிட்ட தொகைக்குள்ளாக இந்த அகராதியைத் தயாரித்துக் கொடுப்பதற்கு முன் வருவார்களானால்,—அந்த அகராதி, ' அகர முதல் ' என்பது, ஏதோ இன்னும் 10 ஆண்டு காலம், இருபதாண்டுக் காலம் என்ற அளவோடு முடிந்துவிடுகிற விஷயம் அல்ல, பல நூற்றாண்டுக் காலத்திற்கு, ஆயிரமாண்டு காலத்திற்குப் பிறகும் பயன்படுகின்ற ஒரு பெரிய முயற்சி என்கின்ற காரணத்தால் —அதற்கு இந்த அரசு உதவிட சித்தமாக இருக்கிறது என்கின்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ' அகர முதல் ' என்ற அகராதியைப் பொறுத்த அளவில், ஒரு பெரிய தொகையாகப் போட்டுக்காட்டப்பட்டிருக்கின்றது என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். அப்படி என்ன தொகை போட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது என்று அவர்கள் கூறுவார்களா ? இப்பொழுது என்ன திட்டத்தில் என்ன செலவு என்று போட்டுக்காட்டப்பட்டிருக்கிறது என்று அவர்கள் கூறுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதைக்கூறி, அதைப்பற்றி ஒரு விவாதம் இப்போது நடத்தவேண்டாம் என்று நான் விரும்புகின்றேன். அது பரிசீலனையில் இருக்கிறது. நல்ல விதமாக முடிவெடுக்கப்படும். ஆகவே அவைகளையெல்லாம் இப்பொழுது கிளறிக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவாதத்திற்காக நான் கேட்கவில்லை. தமிழை வளர்ப்பதற்காக எடுக்கக்கூடிய முயற்சிகளிலே பாவாணர் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு பெரிய முயற்சியிலே ஈடுபட்டு வெற்றிகண்டிருக்கிறார்கள். மொழிவளர்ச்சியிலே அக்கறை கொண்டிருக்கக் கூடிய அரசு அந்தச் செலவினத்தைப்பற்றிக் கவலைப்படாமல், அதுபற்றி மீண்டும் காலம் தாழ்த்தாமல், அந்தச் செலவினத்தை ஏற்றுக்கொண்டு உடனடியாகக் காரியமாற்ற இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவரம் கேட்பது விவாதத்திற்குக் கொண்டுபோய்விடக் கூடாது என்றுதான் அவர்கள் சொன்னார்கள். மறுபடியும் அதை இப்படித் திருப்பிக் கேட்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது நடைபெறும் என்று கூறிய பிறகு, அதைப்பற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும், அடிகளார் அவர்களும் பாவாணர் அவர்களோடு தொடர்புகொண்டு அதுபற்றி ஒரு நல்ல முடிவை விரைவிலே அறிவிப்பார்கள் என்பதை மாத்திரம் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை ரத்து செய்ததைச் சுட்டிக் காட்டி, எதிர்க் கட்சியிலே உள்ளவர்களும், ஆளுங்கட்சியிலே நம்முடைய திரு. வெங்கா போன்ற மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் விவசாயிகளுடைய கடனையும் ரத்து செய்ய வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். நெசவாளர்களுக்கு எந்த நிலையிலே கடன் கொடுக்கப்பட்டது என்பதையும், விவசாயிகளுக்கு எந்தச் சூழ்நிலையிலே கடன் கொடுக்கப்படுகிறது என்பதையும் எண்ணிப்பார்த்தால், இது இரண்டையும் ஒப்பிட்டு, அதைப் போலவே இதையும் ரத்து செய்யவேண்டும் என்கின்ற வாதத்தை அவர்கள் எழுப்ப மாட்டார்கள் என்று கருதுகின்றேன். நெசவாளர்களுக்கு திடீரென்று ஏற்பட்ட கஷ்டத்தின் காரணமாக, அவர்களுடைய வீடுகளில் வேதனை சூழ்கொண்டபோது, உடனடி நிவாரணமாக ஒரு கோடி ரூபாய்—தலைக்கு 100 ரூபாய் விதம்—அளிக்கப்பட்டது. அதை ரத்து செய்வதாக அறிவித்திருக்கிறோம். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன் அப்படி அல்ல. அவர்கள் பயிர் செய்து விளைவித்து பயன் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன். அந்தக் கடனையெல்லாம் ரத்துசெய்துவிடுவோமேயானால், பிறகு ஒவ்வொரு முறையும் விவசாயிகள் கடன் வாங்கும்போது, ரத்து செய்வார்கள் என்ற நினைப்போடு கடன் வாங்குவார்கள்; அவர்கள் கொடுக்க



மாட்டார்கள் என்ற எண்ணத்தோடு நாமும் கொடுக்காமல் இருந்துவிடுவோம். ஆகவே வேளாண்மைத் துறைக்கு அந்தக் கருத்து ஏற்றதல்ல என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், பொற்கொல்லர்களுக்குள்ள கடனை, நெசவாளர்களுக்கு ரத்து செய்ததைப்போல் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஏற்கெனவே சட்டப் பேரவையிலே இதுபற்றி ஒரு கேள்வி எழுந்தபோது நான் பதிலளித்திருக்கின்றேன். பொற்கொல்லர்களுக்கு உள்ள கடன் அனைத்தையும் ரத்து செய்வதற்கு மாநில அரசு தயாராக இருக்கின்றது. கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் கடன் தரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். பொற்கொல்லர் கடனே எந்தச் சட்டத்தால் வந்தது என்று எல்லோருக்கும் தெரியும். அவர் இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார். அந்தச் சட்டத்தின் காரணமாக வந்த கடன் அது. அதற்காக பொற்கொல்லர்களுக்கு தரப்பட்டது. நாம் அந்தக் கடனை ரத்து செய்கிற நேரத்தில் அந்தக் கடனில் மத்திய அரசும் பாதிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றோம். எப்படியும் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டோ, ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாமே முழுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டோ, பொற்கொல்லர்களுடைய கடன் ரத்து செய்யப்படும் என்ற உறுதியை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதை சட்டப் பேரவையிலேயே கேள்வி நேரத்திலே நான் சூசகமாக அறிவித்திருக்கின்றேன். ஏனென்றால் அவர்கள் அங்கே அறிவிக்காமல் இங்கே அறிவித்துவிட்டார் என்று குற்றம் கூறக்கூடும் என்பதற்காக நான் சொல்கிறேன். அதன் தொடர்ச்சியாகத்தான் இதை இங்கே குறிப்பிட்டேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, இந்த மாதிரி அடிக்கடி அதுதான் சட்டசபை, இது ஏதோ உபரியாக இருக்கிற மாதிரி பேசுவது தவறு. இரண்டு சபைகளுக்கும் ஈக்வல் ஸ்டேடஸ் உண்டு என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** நான்கூட எதிர்க் கட்சித் தலைவர் கருத்தை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கருத்தில் இருவரும் உடன்பட்டதற்காக மகிழ்கிறேன். காவிரிப் படுகையிலே எண்ணெய்வளக் கண்டுபிடிப்பு முயற்சி எந்த வகையிலே இருக்கிறது என்கின்ற ஒரு கேள்வியை

நம்முடைய நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள், அவர்களுடைய உரையிலே எழுப்பினார்கள். இந்த எண்ணெய் வளத்தைக் கண்டுபிடிப்பதற்காக இந்திய அரசின் எண்ணெய் இயற்கை வாயு ஆணைக் குழு ஒன்று கடந்த 1958ஆம் ஆண்டிலேயிருந்து நம்முடைய மாநிலத்தில், நாகை, திருப்பூண்டி, சிதம்பரம், சாலியமங்கலம், காட்டு மன்னார்கோயில் ஆகிய இடங்களில் துளையிடும் பணியை மேற்கொண்டு, இது வரையிலே 10 இடங்களில், அதுபோன்ற கிணறுகளைத் தோண்டியது. ஆனால் குறைந்த அளவிலேதான் எண்ணெய் கிடைத்தது, அதிக அளவிலே எண்ணெய் கிடைக்கவில்லை. தொடர்ந்து கடலோரப் பகுதிகளிலும் சோவியத் நாட்டினுடைய ஆய்வுக் கப்பல்கள் எண்ணெய் கிடைப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ச்சி நடத்தி, அந்த வாய்ப்புக்கூறுகள் ஓரளவிற்குத்தான் இருக்கின்றன, அதிக அளவிற்கு எண்ணெய் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பது தான் இதுவரையிலே வந்திருக்கின்றது. ஆயினும் தொடர்ந்து காரைக்கால், மாயூரம் பகுதிகளிலே இந்திய அரசின் எண்ணெய்க் குழுவினர் அந்தப் பணிகளை நடத்தி வருகின்றார்கள் என்ற விளக்கத்தை மாத்திரம் நண்பர் திரு. வசந்த பாய் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வேன்.

நமது நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது மாநிலத் திட்டக் குழு என்னென்ன வேலைகளைச் செய்திருக்கிறது என்ற விவர அறிக்கைகள் சபையிலே வைக்கப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். மாநிலத் திட்டக் குழுவினுடைய வரைவு அறிக்கையும், மாநிலத் திட்டக் குழுவிற்கு அளிக்கப்பட்ட துணைக் குழுக்களுடைய—டாஸ்க் ஃபோர்ஸ்—அறிக்கைகளும், இந்த மாமன்றத்திலேயுள்ள உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருப்பது நினைவிருக்கலாம் என்று கருதுகின்றேன். முழுமையான மாநிலத் திட்டக் குழு அறிக்கை விரைவிலே வைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மாவட்ட அளவிலும் திட்டம் போட வேண்டும் என்கின்ற கருத்தை ஏற்கெனவே இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கான வழிவகைகளையெல்லாம் ஆராய்ந்து, அந்தக் காரியங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட வளர்ச்சி வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, அந்த மாவட்ட அளவிலே தீட்டப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் அந்த வளர்ச்சி வாரியத்தின் துணையோடு நடைபெறுவதற்கு முதற் கட்டமாக நான்கு மாவட்டங்கள்—தருமபுரி, இராமநாதபுரம், தஞ்சை, கோவை ஆகிய நான்கு மாவட்டங்கள்—தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மாவட்ட அளவிலே இந்தத் திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேறுவதற்கு இயலும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.



நண்பர் திரு. பலராமன் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது 'சிப்காட்' நிறுவனம் அறிவிக்கப்பட்டதே, அது எங்கே இருக்கிறது, ஏதாவது நடக்கிறதா, அதில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டதா என்றெல்லாம் பெரிய சந்தேகத்தை எழுப்பினார்கள். இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் 46.82 கோடி ரூபாய் முதலீடுகளை ஊக்குவித்து, 9,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளை வழங்கியிருக்கிறது என்பதை மாத்திரம் நான் அவர்களுக்குப் பதிலாகத் தரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுவரை அந்த நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவிகள் பல திட்டங்களின் கீழ் செய்யப்பட்டிருக்கின்றன. வட ஆற்காட்டிலேயிருந்து அவர்கள் சென்னைக்கு வருகின்ற வழியிலே கொஞ்சம் இராணிப் பேட்டைப் பக்கம் திரும்பிப் பார்ப்பார்களேயானால், அங்கே இராணிப் பேட்டையிலே ஐந்து பெரிய தொழிற்சாலைகளும், பல நடுத்தரத் தொழிற்சாலைகளும், இந்த 'சிப்காட்' டின் உதவியின் காரணமாக அங்கே தொடங்குவதற்கான வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்க முடியும். ஆகவே 'சிப்காட்' என்ன ஆனது என்று கேட்டால் மறுநாள் பத்திரிகைகளிலே கொட்டை எழுத்துக்களிலே வந்துவிடுகிறது. அதை மாத்திரம் படிக்கின்றவர்கள், 'ஏதோ சிப்காட் என்று ஒன்று ஆரம்பித்தார்கள், அது உடனடியாக அழிந்து போயிற்று, தொலைந்து போயிற்று' என்கின்ற எண்ணத்தை அவர்களுடைய உள்ளத்திலே பதியவைத்துக்கொள்கின்றார்கள். ஆகவே விஷயங்களைப் பேசுகிற நேரத்தில் நாம் ஒரு முறைக்கு இரு முறை அதைப்பற்றி தீர்க்கமாக, தெளிவாகக் கேட்டறிந்து அதுபற்றிப் பேசுவது நல்லது என்பதற்காகச் சொல்கிறேனேயல்லாமல் வேறு அல்ல.

(பிற்பகல் 6.50)

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, நான் ஏதோ ஒன்றைச் சொல்லப் போக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத் திரித்துக்கூறுகின்றார்கள், திசை திருப்பப்பார்க்கின்றார்கள் என்று கருதுகிறேன். 'சிப்காட்' என்பது இராணிப்பேட்டையில் ஏற்பட்டாலும் அது அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதுதான் என் கோரிக்கை. 'வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். எனவே இதைப்பற்றி விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றுதான் நான் பேசினேன். அது எங்கே என்ற ஒரு கேள்வியை எழுப்பவில்லை. இப்படித் திசைத் திருப்புவது நல்லதில்லை என்பதைப் பணிவாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 'சிப்காட்' நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதே தவிர எந்தத் தொழில் முன்னேற்றமாவது ஏற்பட்டதா?' என்று அவர்கள் பேசும்போது குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

[1974 மார்ச் 15

திரு. கே. ராஜாராம் : 'என் மாவட்டத்தில் ஒன்றும் ஏற்படவில்லை' என்று பேசியிருப்பார்கள்.

திரு. எல். பலராமன் : இராணிப்பேட்டையில்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இராணிப்பேட்டை வட ஆற்காடு மாவட்டம்தானே ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எந்த அளவிற்கு இதன் மூலம் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லுகிறேன். தொழிலதிபர்களுக்கு தொழில்களைத் துவக்குவதற்காக பல்வேறு உதவிப் பணிகளைச் செய்திருக்கின்றது. அந்த முறையில் வட்டி இல்லா விற்பனை வரிக் கடன் (Interest-free Sales-Tax loan) ரூ. 136.92 லட்சம் என்று அளிக்கப்பட்டு அதனால் பயன் பெற்ற தொழிலதிபர்களின் எண்ணிக்கை எட்டாகும். வரையறுக்கப்பட்ட சொத்துக்களின் மேலே கொடுக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 132 லட்சமாகும். ஆனால் பலனடைந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை, பெரிய தொழில்களில் 9, நடுத்தரத் தொழில்களில் 11, மற்றும் சிறு தொழில்களில் 104, ஆக 124 தொழில்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன., நிபந்தனைக் கடன்கள் என்ற வகையில் ரூ. 220 லட்சம் அளிக்கப்பட்டு, அதனால் பலன் பெற்ற தொழில்களின் எண்ணிக்கை 25 ஆகும். ஆகவே இது தொழில் முன்னேற்றத்தைக் காட்டும் அடையாளம் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் அவரே சொன்னார், நான் அப்படிச் சொல்லவில்லை என்று. குற்றச்சாட்டுக்கள் என்ற முறையில் சொல்லவில்லை என்றார்.

இன்னொரு புகாரையும் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் அரிசன் மோட்டார் கூட்டுறவுச் சங்கம் என்று ஒன்றை ஏற்படுத்தி ஏழை அரிஜனங்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபாயை பங்குத் தொகையாக வசூலித்தார்கள். அந்தப் பணம் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள்.

கேட்டீர்களா, இல்லையா ?

திரு. எல். பலராமன் : ஆமாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதையாவது ஒப்புக்கொண்டீர்கள். அந்தப் பணம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். உடனே பத்திரிகைகள் ஒரு லட்சம் ரூபாய் என்னவாயிற்று என்ற கேள்வியை மட்டும் கொட்டை எழுத்துக்களில் போட்டுவிட்டு மற்ற விவரங்களைப்பற்றி முறையாக ஏதும் குறிப்பிடாமல் இருந்துவிடக்கூடும். அப்படிப் போடும் நேரத்திலே அந்தப

பணம் தவறான வழியில் போய்விட்டது என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்படுகிறது. அப்படி அரசின் மீது களங்கம் ஏற்பட வேண்டும் என்பது தான் எதிர்க்கட்சியுடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆனால் கொள்கை அளவில், காரியங்கள் அளவில், திட்டங்கள் அளவில் வேறுபட்ட கருத்துக்களைச் சொல்ல வேண்டுமேயன்றி இப்படி ஒரு களங்கம் ஏற்படும் அளவிற்குப் புகார் கூறப்படுவது நல்லதல்ல என்பதை மட்டும் கூறிக்கொள்ளுகிறேன்.

வசூலிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அது ஒரு லட்சமல்ல. ரூ. 66,973 தான் பங்குகள் மூலமாக வசூலிக்கப்பட்டது. அந்தத் தொகை வேலூர் மத்திய கூட்டுறவு வங்கியில் வைப்புநிதியாக வைக்கப்பட்டிருக்கின்றது. எங்கேயும் போய்விடவில்லை. இதற்கு இடையிலே அந்த மோட்டார் போக்குவரத்துச் சங்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது கேள்விக்குறியாகி, இடையிலே நாம் தேசியமயக் கொள்கையைப் பேருந்துகளில் கொண்டுவந்த பிறகு, அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று முதலில் கேட்டு, அதற்கு ஓரளவிற்குச் சம்மதமும் கிடைத்த பிறகு, ஏதும் தேவையில்லை, அவர்கள் அதை நடத்தப்போவதில்லை என்ற முடிவிற்கு வந்த பின்னர், அந்தப் பங்குதாரர்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று இப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆக அந்தப் பணம் எங்கேயும் போய்விடவில்லை என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும் பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அறிக்கையின் மீதான விவாதங்களின்போது எடுத்துச்சொல்லி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அவ்வளவிற்கும் பதில் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால், அவைகளெல்லாம் குறிப்பேடுகளில் எழுதப்பட்டுள்ளன, அவற்றையெல்லாம் கவனித்து அவற்றுக்கு நிச்சயம் ஆவன செய்யப்படும் என்று எடுத்துக்கூறி இந்த உரையின்மீதான விவாதங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து அமருகிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன்.

ஆசிரியர் பிரச்சினைபற்றி நீண்டநேரம் பேசினேன், 11-ம் தேதியன்று. அந்தத் தேதியில் பேசிய பேச்சுக்கள் அகில இந்திய வானொலியிலும் இடம் பெறாது போய்விட்டன. திரு. முத்துசாமி பேசினார் என்று கூடச் சொல்லப்

படவில்லை. முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சில், கல்விக்கென தனிப் பகுதியே இருந்தும், முதலமைச்சர் அவர்கள் இப்போது பேசிய பேச்சில் ஆசிரியர்கள் பிரச்சினை பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வானொலியில் உறுப்பினர் அவர்களுடைய பெயரோ பேச்சோ இடம் பெறவில்லை என்று அவர்கள் கவலைப்பட வேண்டாம். நான் சொல்லுகிறேன், 'ஆசிரியர்கள் பிரச்சினை குறித்து திரு. முத்துசாமி அவர்கள் பேசினார், பேசினார், பேசினார்' என்று சொல்லிவிடுகிறேன் இங்கே.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, நான் பேசியவை ஏற்கெனவே ரெகார்டுகளில் இருக்கின்றன. இப்போது முதலமைச்சர் அவர்கள் 'பேசினார், பேசினார், பேசினார்' என்று சொல்லியதும் ரெகார்டு ஆகப்போகிறது. அது அல்ல பிரச்சினை. ஆசிரியர்கள் பிரச்சினைபற்றி முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்ல இருக்கின்றார்கள்? கல்வி மானியம் வர இருக்கின்றது. இவ்வளவு பெரிய பிரச்சினைகளைச் சொன்னோம். பத்து ஆண்டுகால செலெக்ஷன் கிரேடு ....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் ஆசிரியர். அவர் மாணாக்கர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார், 'பொறுத்தார் பூமியாள்வார்' என்று. பொறுத்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.





3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

169. Notifications issued with G.O. Ms. No. 2684, Rural Development and Local Administration, dated the 3rd November 1973 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Coonoor Municipal Council of Nilgiris district with effect on and from the date of the next ordinary elections of the Coonoor Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

170. Notification issued with G.O. Ms. No. 91, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to exclusion of the (Nachimuthu Goundenpudur and Samathur villages) areas S.F. Nos. 187 to 191 and 393 to 400 from the limits of Dharapuram Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

171. Notifications issued with G.O. Ms. No. 2833, Rural Development and Local Administration, dated the 26th December 1973 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Rajapalayam Municipal Council of Ramanathapuram district with effect on and from the date of the next ordinary elections to the Rajapalayam Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

172. Notifications issued with G.O. Ms. 2670, Rural Development and Local Administration, dated the 29th November 1973 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Chingleput Municipal Council of Chingleput district with effect on and from the date of the next ordinary elections to the Chingleput Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

*A. Statutory Rules and Orders*—*cont.*

173. Notifications issued with G.O. Ms. No. 95, Rural Development and Local Administration, dated the 18th January 1974 relating to the reservation of seats and division of wards for Scheduled Castes and women in the Kuzhithurai Municipal Council of Kanyakumari district with effect on and from the date of the next ordinary elections to the Kuzhithurai Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

*B. Reports, Notifications and other papers.*

**Nil**



**இணைப்பு**

*[261 ஆம் பக்கத்தில் 205 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]*

| Serial number. | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. | Whether they have been granted prior permission for the same or not, etc. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | *Elections to the Senate by Registered Graduates*— | |
| 1. | Dr. P. M. Annamalai, M.Sc., Prof. of Biology, Coimbatore Medical College, Coimbatore. | Contested without permission. |
| 2. | Dr. N. Chinnasami, M.B.B.S., No. 26, Chinnathambi Mudali Street, Madras-1. | Do. |
| 3. | Dr. G. Chowdappa, Lecturer in Family Planning and Medical Officer, Stanley Hospital, Madras. | Permitted. |
| 4. | Thiru R. T. Gopalakrishnan, B.A., B.L., Lecturer, Law College, 44-A, Edward Elliots Road, Madras-4. | Contested without permission. |
| 5. | Dr. U. Muhammad, Additional Professor of Medicine, Stanley Medical College, Madras. | Permitted. |
| 6. | Dr. N. Padmanabhan, Director and Professor, Institute of Physiology and Experimental Medicine, Madras Medical College, Madras-3. | Do. |
| 7. | Thiru S. C. Purushothaman, Non-Medical Tutor in Anatomy, Madras Medical College, Madras. | Contested without permission. |

| Serial number. (1) | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. (2) | Whether they have been granted prior permission for the same or not, etc. (3) |
|---|---|---|
| 8. | Dr. K. Ramachandra, Prof. of Medicine, Madras Medical College, Madras. | Permitted. |
| 9. | Dr. T. Ramachandran, M.B.B.S., M.Sc., M.D., 11/10, Mc Nichols Road, Chetput, Madras-31. | Contested without permission. |
| 10. | Dr. V. Ramakrishnan, M.D., Honorary Medical Officer, Royapettah Hospital, 25, 8th Cross Street, West Shenoynagar, Madras-30. | Contested without permission. |
| 11. | Dr. A. Venugopal, M.S., F.A.C.S., F.I.C.S., F.A.M.S., "Kensington", 464, Poonamallee High Road, Madras-10. | Do. |

*Elections to the Senate by the Members of the Academic Council*—

| | | |
|---|---|---|
| 12. | Thiru V. Balasubrahmanyam, B.Sc., M.L., Professor, Madras Law College, Madras-1. | Permitted. |
| 13. | Thiru S. Govindan, B.A., B.T., Head Master, Government High School, Mariammankoil P.O., Thanjavur district. | No permission is necessary. |
| 14. | Thiru M. Govindarajan, M.A., B.Ed., Assistant Professor, Teachers' College, Saidapet, Madras. | Do. |



| Serial number. (1) | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. (2) | Whether they have been granted prior permission for the same or not, etc. 3 |
|---|---|---|
| 15. | Thiru T. R. Meenakshisundaram, M.A. (Tamil), M.A. (Econ.), B.T., Headmaster, Government High School, Modakkurichi Post, Erode Taluk. | Do. |
| 16. | Thiru Nulraj Joseph, B.E. (Hons.), M.Sc. Tech. (Manchester), M.I.I.E., Principal, Government College of Technology, Coimbatore-13. | Permitted. |
| 17. | Thiru N. K. Paul Raj, M.A., M.Ed., D.A., Assistant Professor, Teachers' College, Saidapet, Madras. | No permission is necessary. |
| 18. | Thiru S. Poonnusami, B.A., B.Ed., Headmaster, Government High School, Vennandur Post, Salem District. | Do. |
| 19. | Thiru G. Sangameswaran, M.Sc., Assistant Professor, Government Arts College, Coimbatore-18. | Do. |

*Elections to the Senate by the Headmasters of High Schools*—

| | | |
|---|---|---|
| 20. | Thiru P. Chinnaswami, B.A., B.T., Headmaster, Velliammal Government High School, Thillaiyadi, Thanjavur District. | No permission is necessary. |

| Serial number. | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. | Whether they have been granted prior permission for the same or not, etc. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 21. | Thiru S. Ganesan, B.A., B.T., Headmaster, Government High School, Kuttalam, Thanjavur District. | No permission is necessary. |
| 22. | Thiru A. Ramachandran, B.A., B.T., Headmaster, Government High School, Nachiarkovil, Thanjavur District. | Do. |
| 23. | Thiru R. Varadarajan, B.A., B.T., Headmaster, Government High School, Ammayappan, Thanjavur District. | Do. |
| 24. | Thiru P. Gopalakrishnan, B.A. ,B.T. Headmaster, Government (Board) High School, Thirugokarnam, Pudukottai-2, Tiruchirappalli District. | Do. |
| 25. | Thiru S. Krishnamoorthy, B.A., B.T., Headmaster, Government (Board) High School, Ayelapettai, Koppur P.O., Tiruchirappalli District. | Do. |
| 26. | Thiru S. S. Muthukrishnan, B.A., B.Sc., B.T., Headmaster, Government High School, Melasivapuri, Tiruchirappalli District. | Do. |



| Serial number. | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. | Whether they have been granted prior permission for the same or not, etc. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 27. | Thiru A. A. Samy, B.Sc., B.T., Headmaster, Government High School, Perambalur, Tiruchirappalli District. | No permission is necessary. |
| 28. | Thiru V. Satyamurthy, B.A., B.T., Headmaster, Government High School, Vangal P.O., Tiruchirappalli District. | Do. |
| 29. | Thiru M. S. Sebastian, B.A., B.T., Headmaster, Government (Board) High School, Andakulam Post, Kulathur Taluk, Tiruchirappalli District. | Do. |
| 30. | Thiru A. Palanivelu, M.A., B.O.L., B.T., Headmaster, Government High School, Sandavasal Post, North Arcot District. | Do. |
| 31. | Thiru R. Narasimhan, B.A., B.Ed., Headmaster, Vallalar Government High School, Kandamangalam, South Arcot District. | Do. |
| 32. | Thiru D. Ramachandran, M.A., B.T., Headmaster, Government High School, Alampoondi, Gingee Taluk, South Arcot District. | Do. |

| Serial number. | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. | Whether they have been granted prior permission for the same or not, etc. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 33. | Thiru P. Sivanesan, B.A., B.T., Headmaster, Government High School, Pudupet, Cuddalore Taluk, South Arcot District, | No permission is necessary. |
| 34. | Thiru K. Srinivasan, B.A., B.T., Headmaster, Government High School, Velandai, Thapovanam Post, South Arcot District. | Do. |
| 35. | Thiru S. Arumugham, B.A., B.T.. Headmaster, Government High School, Thondamuthur, Coimbatore Taluk and District. | Do. |
| 36 | Thiru R. S. Chintamani, M.A., B.T., Vidwan, Headmaster, Government High School, Mettupalayam, Coimbatore District. | Do. |
| 37 | Thiru T. R. Meenakshi Sundaram, M.A. (Econ.), M.A. (Tamil), B.T., Headmaster, Government High School, Modakkurichi, Erode Taluk. Coimbatore District. | Do. |



| Serial number. | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. | Whether they have been granted prior permission for the same or not, etc. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 38. | Thiru S. Narayanan, B.A., B.T., Headmaster, Government High School, Dharapuram, Coimbatore District. | No permission is necessary. |
| 39. | Thiru S. Vilvanathan, B.A., B.T., Headmaster, Government (Board) High School, Sembakkam (via) Chingleput. | Do. |
| 40. | Thiru K. Ameer Khan, M.A., B.T., Headmaster, Government High School, Muthugapatty Post, Salem District. | Do. |
| 41. | Thiru M. A. Natarajan, B.A., B.T., Headmaster, Government Boys High School, Harur, Dharmapuri District. | Do. |
| 42. | Thiru S. Ponnusamy, B.A., B.Ed., Headmaster, Government High School, Vennandur Post, Salem District. | Do. |
| 43. | Thiru M. Rathnam, M.A., B.T., Headmaster, Government High School, Pudupatty, Rasipuram Taluk, Salem District. | Do. |

1974 மார்ச் 15]

| Serial number. | Names of Government employees who contested elections to the Senate of the University of Madras during the year 1973. | Whether they have been granted prior permission for the same or not etc. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 44. | Thiru R. Shanmugam, M.A., B.T., Headmaster, Government High School, Mallasamudram, Tiruchengode Taluk, Salem District. | No permission is necessary. |
| *Election to the Senate by the Principals of Approved Colleges*— | | |
| 45. | Thiru K. Varadan, B.Sc. (Hons.), Principal, Sri Subramaniaswamy Government Arts College, Tiruttani, Chingleput District. | No permission is necessary. |

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

**சனிக்கிழமை, 1974 மார்ச் 16.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Demand for " Separate Tamil Nadu "*

*@ 166 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the demand for a separate Tamil Nadu was raised in Tamil Nadu; and

(*b*) if so, the action taken by the Government in this regard?

### தனித் தமிழ் நாடு கோரிக்கை

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனித் தமிழ் நாடு வேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ் நாட்டில் எழுப்பப்பட்டனவா ?

(இ) ஆமெனில், இது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) தனித் தமிழ்நாடு அமைப்பதற்காகக் கிளர்ச்சி செய்யும் அரசியல் கட்சிகள் பரந்த அளவில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

---

@ 12—3—1974-ம் நாள் வினாப்பட்டியிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1974 மார்ச் 16

*@ 167 Q.—Thiru L. BALARAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state the action taken against the political party which propagates and holds conferences in Tamil Nadu on the demand for 'Separate Tamil Nadu'?

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தனித் தமிழ்நாடு கோரிக்கையை தமிழ் நாட்டில் பிரசாரம் செய்து மாநாடுகளும் போடும் அரசியல் கட்சியின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனித் தமிழ்நாடு அமைப்பதற்காகக் கிளர்ச்சி செய்யும் அரசியல் கட்சிகள் பாந்த அளவில் இல்லையாதலால் அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பது என்ற வினா எழவில்லை.

**திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு தலைவரவர்களே, அடிக்கடி இம் மாதிரியான சுவரொட்டிகள் கோவையிலும், மதுரையிலும் ஒட்டப்படுகின்றன, ஏதாவது அரசியல் கட்சிகள் இதில் ஈடுபட்டிருக்கின்றனவா, எந்தக் கட்சியின் சார்பிலாவது ஒட்டப்படுகிறதா என்று அரசால் அறிய முடிந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அரசியல் கட்சிகளின் சார்பில் இப்படிப்பட்ட சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படவில்லை, சில சமுதாய சீர்திருத்தக் கட்சிகள், அரசியல் சட்டத்தில் சமுதாய சீர்திருத்தத்திற்கான மாற்றங்களைக் காண்பது தேவை என்பதை நிபந்தனையாக வைத்து அவ்வாறு சில துண்டுப் பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் வெளியிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இந்தத் தனித் தமிழ்நாடு கொள்கையை ஒட்டி ஆளுங்கட்சியின் கொள்கை என்ன? அதை ஆதரிக்கிறதா அல்லது புறக்கணிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏராளமான விளக்கங்களுக்குப் பிறகு, இந்தக் கேள்வி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எழத் தேவை இல்லை. ஆளுங்கட்சியைப் பொறுத்த வரையில், அதாவது

@ 12—3—1974-ம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.



1974 மார்ச் 16]

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், தனித் தமிழ் நாடு, அல்லது தனித் திராவிட நாடு என்கின்ற கொள்கையை ஏற்கெனவே கைவிட்டு விட்டது என்பதை பகிரங்கமாக அறிவித்திருக்கிறோம். இன்றைக்கு ஆளுங்கட்சி என்கின்ற நிலையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற நிலையிலும் சொல்வது மாநில சுயாட்சிதான். மாநில சுயாட்சி என்பது பிரிவினை ஆகாது. தனித் தமிழ் நாடும் ஆகாது.

**திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாதிரிப் பிரிவினை எண்ணங்கள் இன்னும் இருப்பதற்கே காரணம், அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டு, மாநிலங்களின் தேவைகள் நிறைவு செய்யப்படாம லிருப்பதுதான். அதனால்தான் இந்த மாதிரியான இயக்கங்கள் தோன்றுகின்றன என்பதை மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, விரைவில் அதிகாரங்களைப் பரவலாக்கக் கேட்டுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அடுத்து வருகின்ற ஒரு கேள்வி கூட, இதற்குத் தொடர்புடைய கேள்விதான் என்று கருதுகிறேன். ராஜமன்னார் குழுவின் அறிக்கையைப்பற்றி விரைவில் பேரவையில் விவாதித்து, அதன் தொடர்பாக அவையின் மூலம் மத்திய சர்க்காரிடம் நம்முடைய எண்ணங்களை எடுத்துச் சொல்லி மாநிலங்கள் மேலும் உரிமைகள் பெறுவதற்கு மத்திய சர்க்காருக்கு விளக்குவதற்கு அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாமென்று கருதுகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, சமுதாய சீர்திருத்தக் கட்சிகள் சில தனித் தமிழ்நாடு பிரிவினை கோரின என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த இயக்கங்கள் தொடர்ந்து அதை வற்புறுத்தி வருகின்றனவா, தற்போது என்ன கூறி வருகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சூசகமாகக் கேட்டு, அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை யாரும் மறந்து விட்டதாகக் கருதத் தேவையில்லை. பெரியார் அவர்கள், தனித் தமிழ் நாடு கோரிக்கையை மிக வேகமாக வலியுறுத்தி வந்தார்கள். அப்படி வலியுறுத்திய நேரத்தில் கூட அவர்கள் நிபந்தனையாக வைத்ததற்கு எடுத்துக் காட்டாக, அர்ச்சகர் நியமனத்திற்கு எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் அர்ச்சனை செய்வதற்குரிய தகுதியைப் பெறுகின்ற நிலைமையில் அதற்கான தேர்வை வைத்து வெற்றி பெற்றால், அவர்களை அர்ச்சகர்

களாக நியமிக்கலாம் என்கின்ற அந்தச் சட்டத்தைக் கூட உச்ச நீதி மன்றத்திற்கு இழுத்துச் சென்று தடுத்து நிறுத்தத் தக்க ஒரு நிலையை உண்டாக்கி விட்டார்கள். அதன் தொடர்பாக அந்தச் சட்டம் இயங்குவதற்கு ஏற்ற வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்று பெரியார் அவர்கள் எடுத்துக் கூறி, இன்றைக்கு திராவிடக் கழகமும் எடுத்துக் கூறி வருகிறது. அன்றையதினம் பெரியார் அவர்கள் அதைச் செய்யாவிட்டால், தனித் தமிழ் நாடு கோரிக்கையைத் தவிர வேறு எதுவுமில்லை என்று குறிப்பிட்டார்கள். பெரியார் அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, இப்பொழுது திராவிடத் கழகத்தினர் கூடி, அவர்களுடைய செயற்குழு, பொதுக் குழுவில் தீர்மானம் போட்டு, அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையைத்தான் இப்பொழுது முன் வைத்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஆர். கோலப்பா :** தலைவரவர்களே, தனித் தமிழ் நாடு கேட்பது சம்பந்தமாக மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

### *Report of the Rajamannar Committee*

*@ 168 Q.—THIRU V. VENGA (on behalf of Thiru ERA SAMBASIVAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the views of the Central Government on the report of the Rajamannar Committee have been communicated to the State Government; and

(b) if so, the details thereof?

### ராஜமன்னார் குழு அறிக்கை

**திரு. வி. வெங்கா (திரு. இரா. சாம்பசிவம் சார்பில்) :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ராஜமன்னார். குழு அறிக்கையின் மீது மைய அமைச்சரவையின் கருத்து மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதனுடைய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

---

@ 12—3—1974-ம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.



**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, ராஜமன்னார் குழு அறிக்கையை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த அறிக்கையை மத்திய அரசாங்கம் நிராகரித்ததா அல்லது ஒரு பகுதியை மட்டும் நிராகரித்ததா என்று தகவல் கொடுக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை 15—6—1971, இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு 22—6—1971 அன்று பிரதமரிடமிருந்து எனக்கு பதில் வந்தது. அந்த பதிலில் மாநில அரசு அந்த அறிக்கையை விரைவில் ஆய்வு செய்து அதுபற்றிய கருத்துக்களை மத்திய அரசுக்கு அனுப்பலாம், அதனை இந்திய அரசு கருத்தில் கொள்ளும் என்று அறிவித்ததோடு, அதுபற்றி முடிவெடுக்க மாநில முதலமைச்சர்கள் அனைவரையும் கலந்து செய்யலாம் என்று எனக்கு அனுப்பிய பதிலில் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு வேறு நடவடிக்கை ஏதுமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. கோலப்பா கேட்பது, யாராவது சாப்பாட்டுக்கு வருகிறார்களா என்று கேட்டால், சமையல்காரன் உத்தரவு உண்டா என்று கேட்பது போல் இருக்கிறது.

Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974.

### (2) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN: I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974 (L.A. Bill No. 9 of 1974), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

### 3. கவன ஈர்ப்பு.

**1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாளன்று வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் நகரில் ஏற்பட்ட கொடிய தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி, குடியிருப்பு வசதி, தொழில் வசதி முதலியன அளிப்பது குறித்து.**

(பிற்பகல் 4–10)

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, 42-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"10—3—1974 அன்று வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் நகரில் ஏற்பட்ட கொடிய தீ விபத்தினால் சுமார் 750 வீடுகளும், 4,000 தறிகளும் உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் மிகுந்த அளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிதியுதவி, குடியிருப்பு வசதி, தொழில் வசதி முதலியன அளிப்பது குறித்தும், திடீர் திடீரென்று ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுப்பது குறித்தும்".

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தத்தில் 10—3—1974 அன்று மாலை 3 மணி அளவில், 12-வது வார்டிலே உள்ள ஒரு குடிசையில் வைக்கப்பட்டிருந்த வைக்கோலில் எதிர்பாராதவிதமாக தீப்பற்றிக்கொண்டது. பலமான காற்று வீச அது நகரத்தில் 3, 8, 9, 10, 11 ஆகிய வார்டுகளிலே பரவி விட்டது. தலத்தின் தீயணைப்புப் படையினர், விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று தீயினை அணைக்க ஏற்பாடு செய்தனர். தீ மிகவும் விரைவாகப் பரவியதால் வேலூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, சென்னை ஆகிய இடங்களிலிருந்தும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று 19 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். மொத்தத்தில் 18 தெருக்களிலுள்ள 482 குடிசைகளும், ஓட்டு வீடுகளும் நாசமடைந்தன. 784 குடும்பங்கள் (சுமார் 4,500 பேர்) பாதிக்கப்பட்டனர். 10 வயதுடைய இரு சிறுவர்கள், 25 வயது, 70 வயதுடைய இரு ஆடவர், 45 வயதுடைய ஒரு பெண் ஆகியோர் கருகி இறந்தனர். 18 ஆண்களும், 6 பெண்களும், 2 குழந்தைகளும் குடியாத்தம் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 ஆண்களும் 4 பெண்களும் பலத்த தீயினால் பெருத்த காயங்களுக்குள்ளாயினர். 27 பேர்கள் சிறு காய முற்றதால் அதற்குரிய சிகிச்சை பெற்றனர். வீடுகளை இழந்தவர்கள் தலத்தின் உயர்தர பள்ளிக் கூடங்களில் இடவசதி அளிக்கப்பட்டனர். பொதுமக்களின் உதவியினால் திரட்டிய பொருள் மூலம் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.



பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் ஏழை நெசவாளர்கள், அவர்களுக்கு சேமிப்போ, அல்லது வேறு வழியில் ஊதியமோ ஏதும் இல்லை. அவர்களது உடமைகள் முழுவதையும் தீ விபத்தில் இழந்து விட்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு குறிப்பாக எவ்வளவு என்பதனை மாவட்ட ஆட்சியாளர் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறார். மாவட்ட ஆட்சியாளர் ஒரு இலட்சம் ரூபாய் முன் பணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்க ஒப்பளிப்பு அளித்திருக்கிறார். 500 மின் இணைப்புகள் பாதிக்கப்பட்டன. மின்சார வாரியத்திற்கு மட்டும் ஏற்பட்ட நஷ்டத் தொகை சுமார் ரூபாய் 1 இலட்சத்திற்கு மேல் இருக்கும். விபத்தினால் நாசமடைந்த மின் கம்பிகளைத் திரும்ப இணைக்கவும், மின் வசதி வழங்கவும் வேலூர் மின்சார மேற்பார்வை பொறியாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். காவல் துறை கண்காணிப்பாளரும் தேவையான பாதுகாப்பைத் தொடர்ந்து அளித்து வருகிறார்.

தற்பொழுதுள்ள ஆணைகளின்படி, தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் கீழ்க்கண்ட உதவிகளுக்குத் தகுதியானவர்கள்: உதவித் தொகையாக 60 ரூபாய், துணிகள் வாங்குவதற்காக 20 ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாவட்ட ஆட்சியாளரால் வழங்கப்படும். இது தவிர இழந்த வீடுகளைத் திரும்பக் கட்டுவதற்கு முன்பணமாக தக்காவிக் கடன் விதியின் படி ரூபாய் 1,000 பெறுவதற்குத் தீயினால் பாதிக்கப்பட்டவர்கள் தகுதியுடையவர்கள். பாதிக்கப்பட்டவர்கள் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் ரூபாய் 300 முன்பணமாக வழங்கப்படும். இந்த முன்பணத்தை எளிதான தவணை முறையில் வட்டியின்றி அவர்கள் திரும்ப வழங்கலாம்.

இந்த தீ விபத்துச் செய்தி தெரிந்தவுடன் உடனடியாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது 11—3—1974 அன்று நிவாரணத் தொகையாக வழங்க மாவட்ட ஆட்சியாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொகைக்கு மேலும் வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டால் விரிவான பிரபோசல்களை வருவாய் வாரியத்தின் மூலம் அரசுக்கு அனுப்பும்படி, மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மாவட்ட ஆட்சியாளரின் அறிக்கை வந்தவுடன் அரசு அதைப் பரிசீலித்து ஆவன செய்யும்.

தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறு வாழ்வு வசதிக்காக பொருள் நிவாரணம் அளிக்க பிரதம அமைச்சருக்கு ஒரு தந்தி அரசின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விபத்தைப் பற்றி மத்திய அரசின் [illegible]

நாட்டு இலாகாவுக்கு ஒரு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியாளர் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தொடர்ந்து நிவாரணம் அளித்து வருகிறார்.

11—3—1974 அன்று பொதுப் பணித்துறை அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர் இருவரும், மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர், சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற அலுவலர்களுடன் குடியாத்தம் நகரில் தீ விபத்து ஏற்பட்ட இடங்களைப் பார்வையிட்டு அதன் விவரங்களை அவ்விடத்திலேயே அறிந்துகொண்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் குடியாத்தம் அரசு மருத்துவ மனைக்குச் சென்று அங்கு மருத்துவச் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த 26 பேர்களை நேரில் பார்த்து அவர்களது உடல்நிலைகளைப் பற்றி விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியுள்ளனர்.

மாண்புமிகு அமைச்சர்கள், தலத்தின் சட்ட மன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் அவ்வூரின் முக்கியத் தலைவர்கள் ஆகியோர் தலத்தின் உயர்தரப் பள்ளிக் கூடம் ஒன்றில் ஒரு கூட்டம் கூட்டி அதில் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் துன்பம் நீக்க எடுத்துக் கொள்ளப்படவேண்டிய நிவாரண வேலைகள் பற்றி விவாதித்திருக்கிறார்கள். அவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் மறு வாழ்வுக்கு வசதி வழங்கவும், நிவாரணம் அளிக்கவும் பெருமளவில் பொருளுதவி செய்யுமாறு பொது மக்களையும் அரசையும் கேட்டுக் கொண்டனர்.

மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகக் கொண்டு ஒரு நிவாரணக் குழு அமைக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூர் துணை ஆட்சியர் இக்குழுவின் செயலாளராகவும், பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவில் சட்டமன்ற உறுப்பினர், நகராட்சித் தலைவர், நகரின் முக்கிய தலைவர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். வட ஆற்காடு பொது நல குடும்ப நலத்துறை அலுவலர் சார்பில் ரூ. 1,001 முதல்வரிடம் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் பணித்துறை அமைச்சர் தனியாக ரூ. 500 நிவாரணக் குழுவிற்கு வழங்கியுள்ளார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணப் பணிகளுக்காக ரூபாய் 10,000 நன்கொடையை நேற்று அரசாங்கத்தின் மூலம் வழங்கியுள்ளது. பொதுமக்களிடமிருந்து நிவாரணத்திற்காகப் பொருள் சேகரிப்பதற்காக நிவாரணக்குழு பணியாற்றுகிறது.



அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட நிவாரணங்கள் அறிவிக்கப்பட்டன :—

(1) பாதிக்கப்பட்டவர்களுக்கு 17—3—1974 வரை இலவச உணவு அளித்தல் ; (2) முக்கியமாகத் தேவையான பொருட்களை எளிய விலைகளில் விற்கவும், தேவைப்பட்ட துணிகள் வழங்கவும் ஒரு சிறிய அங்காடி திறத்தல்; (3) விபத்தில் உயிரிழந்தோர்களின் குடும்பத்திற்கு தனிப்பட்ட பொருளுதவி வழங்குதல். இந்தக் காரியங்களோடு நாசமடைந்த பொருட்களைப் பாதுகாக்கவும் சமூக விரோதிகளினால் மற்ற இடங்களில் ஏற்படும் இன்னல்களைத் தடுக்கவும் காவல் துறையினரால் பாதுகாப்பு அளிக்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு மேலும் தொடர்ந்து என்னென்ன செய்யவேண்டுமென்பதை கவனிப்பதற்கு நானும் அந்த இடத்திற்கு நாளைய தினம் காலையில் செல்லவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, கடந்த 6 நாட்களில் அந்த நகரத்திலே, மற்றும் சுற்றுப்புறங்களிலே 22 தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது. அந்த மாவட்டத்தில் இந்தத் தீ விபத்தினால் மிகப் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருவாரியாக அந்தப் பகுதியிலே நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நெசவுத் தொழிலுக்கு ஆதாரமான தறிகளைச் செய்வதற்குக் கூட ஆள் இல்லை. அவைகள் எல்லாம் அழிந்து போயிருக்கின்றன. அவைகளைச் செய்வதற்கு தச்சர்கள் கூட கிடையாது. இது பெரிய குறை. அந்தப் பகுதி மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருப்பதைப் பார்க்கும்போது, மிகவும் வேதனையாக, வருத்தமாக இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, ஆக்க பூர்வமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளை கட்டித் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், நீண்ட காலக் கடனுக அது இருக்க வேண்டுமென்று நான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தப் பெரிய தீ விபத்திற்குப் பிறகு தொடர்ந்து ஆங்காங்கு 4, 5 இடங்களில் தீ விபத்து ஏற்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இது இயற்கையாக ஏற்பட்ட தீ விபத்தல்ல, இது ஏதோ சதியின் காரணமாக நடைபெறுகிறது என்ற உணர்வில் இது

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 16

வரையில் 30-க்கு மேற்பட்டவர்கள் தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து காவல் துறையினர் இதைக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக நெசவாளர்களுக்கு உதவி செய்வதுபற்றி நண்பர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுக்கான தறிகளையெல்லாம் மீண்டும் புதிதாகவே செய்து கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் அந்தப் பகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் இன்று காலை என்னிடத்தில் பேசினார்கள். சைதாப்பேட்டையில் 500 தறிகளுக்கான ஆர்டர் கொடுக்கப்பட்டு அந்த வேலைகள் நடக்கின்றன என்றும், இன்னும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள்ளாக முடிந்துவிடும் என்றும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னென்ன வகையில் உதவி செய்ய முடியுமோ அந்த வகைகளிலேயெல்லாம் அரசு உதவி செய்யும் என்று மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். பலராமன்:** அங்கே இந்தத் தீ விபத்து பெரிதாக ஆனதற்குக் காரணம், அங்குள்ள மக்களிடையே பரவலாகப் பேசப்படுவது, குடியாத்தம் நகரில் இருந்த இரண்டு தீயணைப்பு இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்த நிலையில் இருந்தது தான். இதைத் தவிர்த்து மாவட்டத்தில் பரவலாக, திமிரி, கணியம்பாடி போன்ற மாவட்டத்தில் உள்ள பகுதிகளில் தீயணைப்பு நடவடிக்கைகளுக்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.20)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தீயணைப்பு இயந்திரம் பழுதுபட்டது தீ ஏற்பட்டதற்குக் காரணம் ஆகாது. இதனால் தீ அணைப்பதற்குக் கால தாமதம் ஆகியிருக்கலாம். இதைப்பற்றியும் விசாரிக்க வேண்டும். அப்படி தீயணைப்பு இயந்திரம் பழுதடைந்திருந்தால், அதை அதிகாரிகள் தெரிவிக்காமல் இருந்திருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூட அரசு தயங்காது. உடனடியாக பக்கத்தில் இருந்த எல்லா தீயணைப்பு இயந்திரங்களும் முடுக்கிவிடப்பட்டன. தீ பெரிய அளவில் இருந்த காரணத்தினால், அதைத் தடுக்க முடியவில்லை என்பதுதான் அரசுக்கு வந்த தகவல்.



1974 மார்ச் 16]

### 4. அரசின் சட்ட முன்வடிவு

**தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/74.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பாக 2 அறிவிப்புகளையும் இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு தற்போது அகவிலைப்படி 15 ரூபாய் என்று இருப்பது 1—4—1974 முதல் 20 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு தற்பொழுது அக்கவுண்டண்ட்-ஜெனரலின் உத்தரவு கிடைத்த பிறகுதான் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் காலதாமதம் அதிகமாக ஏற்படுகிறது. ஓய்வு பெறும் அரசு அலுவலர்களுக்கு அந்தந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரியே 80 சதவிகிதம்வரை தற்காலிகமாக (Provisional) ஓய்வூதியம் வழங்கலாம் என்று முடிவு செய்து இரண்டு ஆண்டுகளாக அவ்விதம் செயல்பட்டு வருகிறது. இந்தச் சலுகையை ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கல்வி அதிகாரியே ஆசிரியர்களுக்கு 80 சதவிகிதம் வரை தற்காலிகமாக ஓய்வூதியம் கொடுக்கலாம் என முடிவெடுத்துள்ளதை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன்.

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, I thank you for the opportunity given to me. Let me thank the Hon. the Chief Minister for having announced the first of the many concessions to the pensioners, which I hope the Government will make in the future.

Sir, I have one important submission to make and that is why I requested your leave for speaking today. We have the Appropriation (Vote on Account) Bill in respect of a part of the

@ 381-384 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

financial year 1974–75 in which moneys have been asked for under the head "Administration of Justice". In that connection, I wish to make one representation to the Hon. the Chief Minister. On 13th September 1969 at 4-30 p.m. I called the attention of the Hon. the Minister for Industries and Law to the failure of the Government to take action on the proposals pending with the Public Works Department for the construction of Law Chambers in the High Court compound for Advocates and waiting hall for the litigants and consequent hardship caused to the High Court Advocates. In reply to that call-attention notice, the Hon. Minister was pleased to observe thus:—

"For some time past, it has been found difficult to have proper accommodation for the offices of the High Court in view of the large number of institution of cases and large volume of records being produced into Court. Provision had to be made for keeping in safe custody the records received in connection with election cases, namely, ballot papers, etc. Consequent on the increase in the number of Judges, additional court halls had to be provided for the Judges and the Master and additional chambers for the Judges had also to be provided. This resulted in resumption of chambers which had been allotted to Law Officers of the Government. As a result, the Law Officers of the Government had to be provided with alternative accommodation. The Law Officers also had been requesting for additional accommodation for their offices. There was also increase in the number of Law Officers and accommodation had to be provided for them too. Hence the chamber accommodation provided in the main High Court building, which had been temporarily allotted to senior Advocates had to be resumed. With a view to providing alternative accommodation to Senior Advocates who had been given accommodation in the High Court building some Law chambers in the Advocates block had to be resumed from some advocates. The High Court has provided alternative accommodation as far as possible and it is also considering proposals for the construction of Law Chambers."

Sir, may I request the Hon. the Chief Minister to take into account the fact that this Government had, on 11th July 1973, provided chambers and many young members of the Bar had



moved into the new building having 60 chambers which had been provided for the purpose? Sir, the Law Chambers in the High Court building were available for senior Advocates at Rs. 45 per month and the young members of the Bar were asked to occupy the new Law Chambers. This was the position in July 1973. I am just bringing to the notice of the Hon. the Chief Minister that, mainly taking into consideration the view expressed by the Hon. the Minister for Law, the young advocates were allotted the smaller chambers in the new buildings. Now the Public Works Department has called upon these occupants to pay Rs. 189 per month for each Chamber retrospectively from July 1973. I would like to tell the Government that I am not at all for allowing the advocates who make much money to go scotfree. Senior Advocates are in the old chambers, paying at Rs. 45 to Rs. 75 per month. They are not affected and only those members of the Bar who are young and who have just come to the Bar are occupying the new chambers and they were asked to pay only a sum of Rs. 93 per month in the first instance. Now they have been asked to pay Rs. 189 per month retrospectively from July 1973. I think this is a great hardship caused to them especially when we, the legislators are occupying rooms in the new Hostel paying Rs. 60 per month with the facilities of telephone and attached bath. The new chambers are having only an area of 175 square feet, whereas the old ones have an area of 190 square feet. I think there should be no discrimination in the rate of rent collected from the advocates occupying the old and new chambers. I hope the Government would withdraw the orders of the Public Works Department in this respect.

THE HON. THIRU P. U. SHANMUGAM: It will be examined by the Government.

THIRU G. VASANTHA PAI: I will be much thankful to the Government if such an assurance is given, because the Government have been faithful in the implementation of the assurances given.

THE HON. THIRU P. U. SHANMUGAM: I am afraid the hon. Member has misconstrued what I have said. I give an assurance that it will be examined by the Government.

THIRU G. VASANTHA PAI: I only request the Government to consider the case and see that the order of the Public Works Department is withdrawn. If the Department is fixing the rent on the basis of the valuation of the building, I want to mention that there are only 60 rooms which are occupied by the lawyers and there are three big halls which are left for the use of the litigants and for holding conferences and those halls are not used by any lawyer. For the purpose of getting back the cost of the building within a certain period, say 10 years, the advocates occupying the chambers should not be asked to pay an unreasonably heavy rent and bear the capital cost of the building not under their occupation. It was the Hon. the Minister for Industries that sponsored the scheme at my request on the basis of the assurance given on the floor of this House by the Hon. the Minister for Industries on 13th September 1969. I hope the Government will consider this matter and see that justice is done to the young lawyers occupying the new chambers and no discrimination practised. Thank you, Sir.

* THIRU S. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I am speaking on a very specific issue in dealing with this Appropriation Bill which I welcome. There is a reference to Capital Outlay on Industrial Research and Development, Capital Outlay on Village and Small Industries, Capital Outlay on Consumer Industries and Capital Outlay on Mining and Metallurgical Industries. All these are bracketed together and even a man like me who is trained in reading financial documents is not able to understand what amount each item is supposed to spend, because there is a bracket and the figure mentioned is Rs. 2,38,05,200. I wonder whether it will be possible for the Hon. Minister to mention the details about that figure. I know it may not be possible to give all details immediately. I want to know this detail, because I am very anxious to know about the Capital Outlay on Mining and Metallurgical Industries. One particular metal we are interested in here is aluminium. The other States have let us down very badly in regard to many industries. I, therefore, want to know what exactly the amount is that is going to be spent on capital outlay under each head.





I think it is permissible to refer to two or three other matters now. Since I had an occasion to speak on the Budget here, as President of the Chamber of Commerce, I have received a large number of representations about the increase in the burden of sales tax on the trader, because of rise in the rate of surcharge from 5 per cent to 10 per cent. The traders feel that this will be a very heavy burden on them. I would, therefore, like to appeal to the Hon. the Chief Minister to see if this could not be reduced to, say, 7½ per cent, because 100 per cent increase in the total burden of tax payable by the trader will be very heavy because he cannot recover it from the consumers. It is in the nature of a surcharge on turnover. I think the Hon. the Chief Minister wants to say something.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முழு விவரங்கள் தேவையானால், பட்ஜெட் மெமோராண்டம் 208, 209-வது பக்கங்களில் இருக்கின்றன. அதைப் பார்த்தால் சந்தேகங்கள் தீரும்.

(பிற்பகல் 4.30)

* THIRU S. NARAYANASWAMY: Sir, I am very grateful to the Hon. the Chief Minister for drawing my attention to the Memorandum giving details about the Budget figures. I shall get the details from that document. I am particularly concerned to point out that quite a large number of traders have expressed to me the hardship that would be caused to them by the increase in the rate of surcharge. There has been a rationalisation of the structure of sales tax and it is a very welcome thing. The Hon. the Chief Minister was not here when I welcomed it during my speech on the Budget. I want him to know that trade is very thankful and the traders are not ungrateful to the Government. But I think I am bound to refer to the fact that the tax payable by the trader on his turnover has been doubled this year. I know it is purely a measure of revenue and I know the Government want some revenue under this head. I would like to appeal to the Hon. the Chief Minister to see if this cannot be reduced to at least 7½ per cent. I am not expecting any snap reply from the Hon. the Chief Minister. I think their hardship is very real because they have no liquid funds to pay the same. I request the Hon. the Chief Minister to consider this

because I have received scores of representations from traders in my capacity as President of the Chamber of Commerce since I spoke here on the Budget.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, since this will be the last day of this session and we will be adjourning for ten days, I think it necessary to speak on two or three matters which are rather urgent and which would not warrant any delay, especially in view of the fact that they pertain to the needs of the common man and I think our Government should be warned in advance of the possible consequences of the shortages that are likely to develop. I refer, Sir, to the petroleum products, particularly kerosene and High Speed Diesel Oil. I have tabled certain questions in respect of which I am still awaiting information. But, I should like to inform this House that we are in for a very serious situation in so far as the supply of kerosene and High Speed Diesel Oil is concerned. I make this statement with all responsibility at my command, although Mr. Shah Nawaz Khan and Mr. Barooah have tried to gloss over the issue and have stated in rather hesitant terms that High Speed Diesel Oil supply is adequate. I know it for a fact that there has been a 25 per cent cut in the supply of High Speed Diesel Oil all over India—it is not only in Tamil Nadu—and this is going to have disatrous effects especially in Tamil Nadu where a power-cut is already in existence.

THIRU S. NARAYANASWAMY: Coal is not available.

THIRU A. R. DAMODARAN: Coal is not available; that form of fuel is not also available. High Speed Diesel Oil is used by the agricultural pumpsets; it is used by tractors, it is used by the commercial transport—the movement of essential commodities depends on the supply of this commodity. In fact, only one week ago, situations in Punjab had developed to such an extent that when tank-lorry of High Speed Diesel Oil was being delivered to a dealer at Bhatinda in Punjab, a crowd of 300 angry Punjab farmers surrounded the tank-truck, refused to allow the oil to be discharged into the underground tank and insisted that the tank-truck should be given to them as they are waiting in the queue. The position developed to such an extent that a riotous situation developed. The Police had to open fire; one person was killed and eight



persons were admitted to hospital. This is something unimaginable; it has never before happened in our trade. We faced a very critical situation in March–April, 1973 and I had to send telegrams to the Superintendents of Police of various Districts to give us Police bandobust to distribute High Speed Diesel Oil. I wish to point out—especially when the Hon. the Chief Minister is here—that we are going to have a very critical situation during the next four months. I know that diversionary attempts would be made to imply that trade is responsible for the shortage. I wish to make it quite clear that, with 25 per cent cut in distribution, it will be impossible for any trade, however efficient it may be, however moral it may be in attitude and in business, to do anything like equitable distribution of High Speed Diesel Oil. In so far as High Speed Diesel Oil is concerned, it is a very welcome news that the Arab oil-nations are lifting their embargo and it may result in increased supply for India. I would like this Government to stress on the Government of India that whatever they may do in regard to petrol, which they may consider to be a commodity used by affluent sections of our society, in so far as High Speed Diesel Oil is concerned, we cannot afford to take risks.

Sir, the other commodity is kerosene. Generally, when there is a shortage of kerosene, the Hon. the Minister for Civil Supplies will generally listen to the most vocal sections of our population and the most vocal sections of our population are residing in the urban areas of Madras, Madurai, Tiruchirappalli, Salem and a few district headquarters. The plight of the rural people has been completely ignored and I know as a matter of fact—which will be vouched for by all the Members present in this House if they have taken care to study kerosene distribution—that in the rural areas today, even the $1\frac{1}{2}$ litres of kerosene which is required by a rural family is not being supplied, because we are out of stock for fifteen days in a month. I am bringing this problem to the notice of the Hon. Minister; I am not aware of what is going to happen. But, I would like to forewarn that a situation is developing. When we are now having long queues standing for sugar, standing for wheat, standing for all the articles distributed by Civil Supplies, I do not want long queues standing for kerosene and at our High Speed Diesel Oil pumps also.

Sir, the other point is the one to which my hon. Friend Thiru Narayanaswamy referred. During the Budget discussions yesterday, I did not have time to refer to that because much bigger issues were involved during that debate. This is with reference to the surcharge that has been put on the collection of sales tax by traders and the exhortation that was given in 1970 when that surcharge was introduced that this expenditure would not be passed on to the consumer. This exhortation is highly fanciful. I would like to stress that the State Government have very limited powers in ensuring that this surcharge is not passed on to the consumer. I am sure the Hon. the Chief Minister will be interested to know this, because he is sincere in his thinking that this should not be passed on to the consumer. Let me give an illustration. Under the 1970 Surcharge Act, every trader is expected to pay 5 per cent of the sales tax that he pays to the Government, as a surcharge at the end of the year. Now, the State Government have powers of price-control over a very limited range of commodities, and it is impossible for a State Government legally, for example, to say that a vehicle factory has to pay 5 per cent surcharge. For example, in a vehicle factory or a chemical goods factory or an engineering industry, over which no price-control exists, the businessmen who have to pay five per cent surcharge, automatically increase the price of the commodity and that increase will not be shown as a surcharge on sales tax but will be shown as a flat increase in the price of the commodity. In fact, when this was done in the oil companies, and when they were told that they would have to pass the surcharge on to their own profit and not to the consumer, what happened was that a general revision of one paisa was effected on various peroleum commodities and this could not be legally prevented by the Tamil Nadu Government. I only wish to state that if the State feels that a revenue is required, then it is better to levy a straight toward tax, which everybody understands. Otherwise, there is a danger there, in the businessman or the trader or the manufacturer trying to pass on this burden to the consumer. He adds on definitely a certain cushion which will give him a substantial or not so substantial margin of profit while adding on this cushion. I would like to bring this to the notice of the Tamil Nadu Government. As I said, there are only a few commodities on which they can exercise control. They have



(பிற்பகல் 4-50)

absolutely no legal powers to prevent various other industries from raising the prices because they are all controlled by the Central Ministry and in many cases even the Central Ministry does not have the powers to restrict the sales because thosae article do not come under the Essential Commodities Act or various price control orders. Secondly, Sir, a danger has arisen now with the raising of the urcharge from 5 per cent to 10 per cent and I am on a firmer ground on this issue. May I request the Tamil Nadu Government to kindly have it investigated by the Law Department—whether this is a legal levy that could be made by a State Government? I am aware of the fact that a few traders did go to the Madras High Court and that the decision was in favour of the Government of Tamil Nadu to the effect that this surcharge could be imposed. But my impression is that an appeal was not filed in the Supreme Court because some compromise was effected whereby these people were told that they could increase the prices quietly and no further appeal need be filed on this account. I wish to mention that this will not happen when the increase in surcharge is from 5 per cent to 10 per cent because the burden will become so heavy that the process of litigation is likely to occur. I request the Hon. the Chief Minister, before he brings the Bill—and that is the only reason why I speak today, because generally these Bills will be passed in the Assembly and when they come to the Council, knowing the powers of the council, we are powerless to do anything in connection with that Bill—to kindly have this examined again by the Law Department, because this is also a danger that faces the Government. Thank you, Sir.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே விவாதத்தில் மறுபடியும் கலந்துகொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் நிதிநிலை அறிக்கையின்மீது பேசும் போது விலைவாசிப் பிரச்சினையைப்பற்றிப் பேச வாய்ப்பு இல்லை. விலைவாசி ஏறிக்கொண்டு போவதைப் பார்த்தால், ஏழை மக்களுக்கு அரைவயிற்றுக் கஞ்சிகூட கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. சாமான்கள் விலை ஒரு பக்கம் ஏறிக்கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் சாமான்கள் கிடைப்பதும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக சாமான்கள் தட்டுப்பாடு என்று தெரிந்தவுடனேயே, வசதிபடைத்தவர்கள் எல்லாம் அந்த சாமான்களை

அதிகமாக வாங்கி வைத்துவிடுகிறார்கள். இப்பொழுது சீமை எண்ணெய் தட்டுப்பாடு என்று வைத்துக்கொள்வோம். உடனே வசதி படைத்தவர்கள் எல்லாம் அதை டின் கணக்கிலே வாங்கி வீட்டிலே வைத்துவிடுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மண்ணெண்ணெய் என்று சொல்லுங்கள். சீமை எண்ணெய் அல்ல.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** சீமையிலிருந்து வந்ததாலே சீமை எண்ணெய் என்று சொல்வார்கள். அது பழைய காலத்துச் சொல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்பு ராமா ஆயில், கிருஷ்ணா ஆயில் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சீமை எண்ணெய் என்று சொல்கிறார்கள்.

**திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** கிருஷ்ணா ஆயில் என்று சொன்னால், கொஞ்சமாவது புண்ணியம் வந்துவிடுகிறதே என்று, அந்தப் பெயரையும் மாற்றிவிட்டார்கள். அரசியல் கட்சிக்காரர்கள் பொய் தவிர வேறு பேசுவதில்லை. இப்படி பொய் பேசிக்கொண்டேயிருந்தால், மழை பெய்வதுகூட நின்றுவிடும். இந்த மாதிரித் தட்டுப்பாடு, கோதுமை, சர்க்கரை, விவசாயிகளுக்கு உரம் போன்ற பொருள்களுக்கும் ஏற்படுகிறது. பண்டங்கள் குறைந்திருக்கின்றன என்று தெரிந்தவுடனே, நிறைய அப்பண்டங்களை வாங்கி வீட்டிற்குள் வைத்துக்கொள்ளும் மனப்பான்மை வந்துவிடுகிறது. எப்படித்தான் அவர்களுக்கு அந்தப் பண்டங்கள் கிடைக்கின்றனவோ? கியூவிலே நிறைய மக்கள் நிற்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைக்காமல், கள்ளச் சந்தைக்குப் போய்விடுகிறது. இன்றைக்குத் தெருவிலே மண்ணெண்ணெய்க்கு இரவு ஒன்பது மணி, பத்துமணி வரையிலும் கியூவில் நிற்கிறார்கள். அந்தக் கியூ கலைந்தவுடனேயே அதே வியாபாரியிடமிருந்து, ஒரு பத்து லிட்டர் அல்லது இருபது லிட்டர் அளவு கூட வாங்கிப்போகிற நபர்களும் நிறைய இருக்கிறார்கள். மக்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவில் மிச்சம் பிடித்து அப்படிக் கொடுக்கின்றார்களோ என்னவோ தெரியவில்லை. வாங்காத கார்டுகளை அவர்கள் நிறைய வைத்திருக்கிறார்களோ என்னவோ எப்படி மிச்சம் பிடிக்கின்றார்கள் என்றே புரியவில்லை. மேலும் இந்தக் கார்டுகள் வழங்குவதிலேயும் குறை இருக்கிறது. என்னுடைய கார்டில் எனக்கு மாதச் சம்பளம் ரூபாய் 250 என்று போட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய பியூனுடைய கார்டில் மாதச் சம்பளம் ரூபாய் 750 என்று போட்டிருக்கிறது. அதற்கான பொருள்களை அவன் வாங்கிக்கொண்டு வருகிறான். 'போகஸ் கார்டுகள்' ஆயிரக்கணக்கில் இருக்கின்றன.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உங்கள் வேலைக்காரன் உங்களுக்கு சர்க்கரை வியாதி என்று சொல்லியிருப்பான். அதனாலேதான் அப்படிக் குறைத்திருப்பார்கள்.

**திரு. ஒய் வெங்கடேஸ்வா தீக்ஷிதர் :** தலைவர் அவர்கள் இப்படி ஆஸ்யமாக இருந்தால்தான் நல்லது. அப்படி ஆஸ்யமாக இருக்கத்தான் வேண்டும். நமது சபையே ஆஸ்யமாகத்தான் இருக்கிறது. அப்படி போலிக் கார்டுகள் இருப்பதாலே, அவற்றுக்குக் கொடுக்க வேண்டியதை மிச்சப்படுத்தி கள்ளச் சந்தையில் விற்கிறார்கள். அதே மாதிரி, சிமெண்ட், கோதுமை போன்ற பொருள்களும் தட்டுப்பாடாக இருக்கின்றன. கோதுமை, சர்க்கரை வியாதிக் காரர்களுக்குக்கூட கிடைக்கவே இல்லை. 'பேக்கரி' என்று போர்டு போட்டுக் கொண்டு, கோதுமையை நிறைய கோட்டாவில் வாங்கி வெளியில் விற்றுவிடுகி றார்கள். பேக்கரி என்று ரெஜிஸ்டரிலேதான் இருக்கிறது. ஆனால் ரொட்டியில் கோதுமை மாவு போடுவதில்லை. முக்கால்வாசி கோதுமை தவிடுதான் போடு கிறார்கள். இதுமாதிரி செய்வதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்குக் கொடுத்த கடனைத் தள்ளிவிட்டதற்காக நாங்கள் மகிழ்ச்சிகொள்கிறோம். அப்படி ஒரு கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால் நாட்டிலே லட்சக்கணக்கான நெசவாளர்கள் இருக்கிறார்கள். இப்படி ஒரு கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தால், அதனால் ஒரு பத்தாயிரம் பேருக்குத்தான் நன்மை கிடைக்கும். ஒரு லட்சம் பேருக் காவது உதவி கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கடன் வாங்கியவர்களுக்குத்தான் ரத்து செய்ய முடியும். கடனே வாங்காதவர்களுக்குக் கடனை எப்படி ரத்து செய்வது என்று தெரியவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வா தீக்ஷிதர் :** இனிமேல் கடன் கொடுப்பார்கள் என்றால், அத்தனை பேரும் வந்துவிடுவார்கள். நெசவாளர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. அதைப் போல, விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை, அவர்கள் அதனால் பயிர் விளைவித்து ஏராளமான லாபம் அடைந்திருப்பதால், தள்ளுபடி செய்ய வேண்டியதில்லை என்று சொன்னார் கள். கடன் எதற்காக விவசாயிகள் வாங்குகிறார்கள்? கடன் வாங்கி கிணறு வெட்டுகிறார்கள். ஆனால் அந்தக் கிணறுகளில் தண்ணீர் வாராமல், பாழாகிப் போகின்றன. அது போலவே பயிர் வளர்ச்சிக்கு குறுகிய காலக் கடன்

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 மார்ச் 16

வாங்கிய பல பேருக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அநேகம் பேர் சாகுபடி பண்ணிய செலவுகூடக் கிடைக்காமல் தவிக்கிறார்கள். தெய்வாதீனமாய அப்படி ஏற்படுகிறது. விவசாயத்தில் 'நேச்சரும்' ஒத்துழைத்தால்தான் பயிர் வளரும். * * *

எனக்கு விவசாயம் தவிர வேறு தொழில் தெரியாது.

இன்றைக்கு ஏன் இவ்வளவு பேர் இந்த நாட்டிலே விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், வேறு தொழில் இல்லை. படிப்பும் இல்லை. வேறு தொழில் செய்யத் தெரியாது. எனவே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். என் போன்றவர்களுக்குப் படிப்பும் இல்லை. சொற்ப நிலத்தை வைத்துக்கொண்டு அதில் பாடுபடவேண்டியிருக்கிறது. விவசாயம் எனக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அமைச்சர் சொல்லுகிறபடி இல்லை. விவசாயம் தான் எனக்கு முதல். மற்றதெல்லாம் செகண்டரி. எனவேதான் ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு ஆயகட்டு இருக்கின்றது, எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது, அதில் எவ்வளவு மகசூல் இல்லாது போய்விட்டது, எவ்வளவு கிணறுகளை வெட்டினார்கள், எவ்வளவு தண்ணீர் வாராமல் பாழாகப் போய் விட்டது என்று கணக்கெடுத்து, அந்தக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டம். இன்று நூற்றுச் சொச்சம் கோடி ரூபாய்க்கு வரவு-செலவுத் திட்டம் போட்டு, சொற்ப அளவில்தான், அதாவது ஆயிரக்கணக்கில்தான், வேலைகொடுக்கிறோம் என்று இருக்கிறது. இப்போதுள்ள பட்ஜெட்டில் 500 கோடி ரூபாய்க்கு மொத்தம் இருக்கின்றது. ஆனாலும் புதிதாக பல லட்சம் பேருக்குக்கூட வேலை வாய்ப்புகளைத் தேடித்தர முடியவில்லை. பல படித்த பட்டதாரிகளுக்கு, எஞ்சினியர்களுக்கு வேலையில்லை. எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் ஏராளமானவர்கள் வேலையில்லாது இருக்கின்றார்கள். இப்போது நாட்டிலே 30 சதவிகிதம் பேர்தான் இருக்கின்றார்கள் படித்தவர்கள். அவர்களே வேலைக்குப் போய் இவ்வளவு லட்சம் பேர் படித்தவர்களுக்கு வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்று புள்ளிவிவரங்கள் கொடுக்கின்றார்கள். காலையில் எழுந்து பார்த்தால் எல்லோரும் பேப்பருக்குத்தான் ஓடுகின்றார்கள், 'சிசுவேஷன் வேகண்ட்' என்ற தலைப்பில், வேலை காலியிருக்கின்றதா என்று பார்க்கத்தான் ஓடுகின்றார்கள். இப்படி விளம்பரம் வருவதால்தான் பேப்பர்கள் இவ்வளவு வேகமாக ஓடுகின்றன என்று புரிகிறது.

* Expunged as ordered by the Chair.



1974 மார்ச் 16]

திரு. ஏ. ஆர். தாமோதரன்: தலைவரவர்களே, பேப்பரில் மேட்ரிமோனியல் அலையன்ஸஸ்-க்கும் விளம்பரம் வருகிறது. அதையும் பார்க்கிறார்கள்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நல்ல பணக்காரர்களாகவும் இருந்து சரீர வன்மை உடையவர்களாகவும் இருந்தால், அதையெல்லாம் பார்க்கலாம். வேலையைத் தேடி அலைகின்றார்கள். வயது 24, 25 என்று ஆகிவிடும்போது, வேலை ஒன்றும் கிடைக்காமல், எப்படியாவது உயிரையே மாய்த்துக்கொள்ளலாமா என்றுகூட யோசனை பண்ணுகின்றார்கள். கையிலுள்ள பணத்தையெல்லாம் போட்டு வேலைக்காக அலைந்தாகிவிட்டது. எங்கள் ஊரிலே ஒரு ஸ்தாபனத்தைப் போட்டார்கள். இரண்டு டிஜிட்டில்தான் ஆட்கள் வேண்டும் வேலைக்கு. ஆனால் 10 ஆயிரம் பேருக்கு மேலே அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். ஆளுக்கு ஒரு ரூபாய் என்று அந்த நிறுவனத்துக்கு 10 ஆயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது. ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். சொத்து சுதந்திரம் என்று ஏதாவது இருந்தால், பிழைக்க முடியும். சொத்து சுதந்திரம் என்று ஒன்றுமில்லை யென்றால் என்ன பண்ண முடியும்? எனவே இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, சற்று முன்னர் புதிதாக சர்சார்ஜ் ஐந்து சதவிகிதம் அதிகப்படுத்தியது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இது வியாபாரிகள் கையிலிருந்து கொடுக்க வேண்டியிருக்கிறது என்றும் கூறினார்கள். ஆனால் நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் அப்படியில்லை, எப்படியும் பொருள்களின் பேரிலே விலையை ஏற்றிவைத்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். நான் பகிரங்கமாகவே பார்த்தேன், விற்பனை செய்யும் பில்லிலேயே சர்சார்ஜ் என்று போட்டு அதை வசூலிக்கின்றார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, that may be under the 1971 Surcharge Act which did not prevent the trader from passing it on to the consumer. That is under the 1971 Act.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. கே. ராஜாராம்: சர்சார்ஜ் என்றால், அதை யாரும் கையிலிருந்து கொடுக்கப்போவதில்லை. மக்கள்தான் அதைக் கொடுக்கப்போகின்றார்கள். ஆகவே இந்த பத்து சதவிகிதத்தை தங்களுடைய லாபத்திலிருந்து வியாபாரிகள் கொடுத்துவிடுவார்கள், என்று நினைப்பது தவறாகும். எப்படியும் மக்கள்

தான் இதையெல்லாம் கொடுக்கும்படி நேருகிறது. இதெல்லாம் சரக்கை வாங்குகின்றவர்கள்மீதுதான் தள்ளப்பட்டு விடுகிறது. ஆகவே மக்கள்தான் இதையெல்லாம் கொடுக்கின்றார்கள்.

அடுத்து, நேற்று பல உறுப்பினர்களும் உர வினியோகம் பற்றியும் அதிலுள்ள குறைகள்பற்றியும் கண்டித்துப் பேசினார்கள். இன்றைக்கு ரெகார்டு பூர்வமாக அச்சடித்து ஒரு சிறு குறிப்பே கிடைத்திருக்கிறது. இதிலே வெறும் வேலங்காட்டை நஞ்சை என்று சொல்லி, தவறான தகவல்களைக் கொடுத்து, உர மூட்டைகளை அமோனியம் ஸல்பேட், யூரியா போன்றவற்றை வாங்கிக்கொள்ளுகின்றார்கள். பிறகு அது வேறுவிதமாக விற்கப்படுகிறது என்றெல்லாம் சொல்லுகின்றார்கள், திருநெல்வேலி ஜில்லாவில். இதெல்லாம் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் இருக்கின்றது. இதன் பிரதி ஒன்றை ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கின்றார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது காயாமொழி என்ற கிராமத்தில் போடப்பட்ட துண்டு விளம்பரம். இதுபற்றி சட்டப் பேரவையில் எடுத்துச்சொல்லப்பட்டு, உடனே அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவர்கள் கொடுத்த விவரங்களை அறிந்து சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அந்தக் கிராமத்திலே 240 ஏக்கருக்கு மேலே நஞ்சை நிலங்கள் இருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** நமக்கு ஒதுக்கப்படுவதே 36 சதவிகிதம்தான் தேவையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது. எனவே இப்படித் தவறான முறையில் போகாமல் உண்மையிலேயே தேவையுள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன்; வேறு ஒன்றுமில்லை. தெரியாமல் தவறுகள் ஏற்பட்டால், நாம் என்ன செய்ய முடியும்? கூடுமானவரையில் இவற்றைத் தடுக்க வேண்டும். இதோடு ஒரு சிறு யோசனையையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் சில வசதியோடு இருக்கின்றன. அப்படிப்பட்ட யூனியன்கள் ஒவ்வொன்றும் ஒரு டிராக்டரை வாங்கி வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதை ஒவ்வொரு யூனியனிலும் வாங்கி வைத்துக்கொள்ளலாம். இது ஒரு நல்ல யோசனை. பஞ்சாயத்து யூனியன்கள் இவற்றை அக்ரோ



இண்டஸ்ட்ரீஸ் கார்ப்போரேஷன் மூலமாக கடனை வாங்கிக்கொள்ளுகின்றார்கள். தவணைமூலமாக அவர்கள் பணத்தைக் கட்டி விடுகின்றார்கள். நான் சொல்லுவது, ஒவ்வொரு யூனியனிலும் இரண்டு டிராக்டர்கள் இருக்க வேண்டும். ஏனென்றால் நில உச்ச வரம்பு வந்த பிறகு, தனிப்பட்ட விவசாயிகள் பத்து பதினைந்து ஏக்கருக்கு மேலே வைத்துக்கொள்ள முடியாத நிலையில் டிராக்டரை வாங்கி வைத்துக்கொள்ளுவதும் முடியாத காரியம். அப்படி யாராவது ஒருவர் இருவர் வாங்கிவைத்திருந்தாலும், அவர்கள் மிகவும் அதிகமான லாபத்திற்குத்தான் வாடகைக்கு விடுகின்றார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் வாங்கிவைத்துக்கொண்டிருந்தால், குறைந்த வாடகைக்கு விட்டு விவசாயிகளுக்கு இந்த முறையில் உதவலாம். எனவே ஒவ்வொரு யூனியனிலும் 2, 3 டிராக்டர்களை வாங்கிவைத்துக்கொள்ளுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நீர்வழிப் போக்குவரத்து என்ற பகுதியிலே பக்கிங்காம் கால்வாயில் நாம் அதிக அக்கறை காட்ட வேண்டும். வேதாரணியத்திலிருந்து வடக்கே ஆந்திரம் வரையில் இந்தக் கால்வாய் இருக்கின்றது. பல இடங்களிலே அது தூர்ந்து போயிருக்கின்றது. எனவே இதில் இப்போது போக்குவரத்துக்கு வசதியில்லாது போய்விட்டது. இதை நமது தமிழ் நாட்டு ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொண்டு இதைச் செப்பனிட்டால், போக்குவரத்துக்கு ரொம்பவும் உதவியாக இருக்கும். இதை அவசியம் கவனிக்க வேண்டும். இதனால் போக்குவரத்து நெரிசல் குறையும். என்ன செலவானாலும் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நேற்று நான் வெகுவாக சிபாரிசு செய்து இப்போது ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்குச் குறைந்த பட்சம் 4-ம் தர அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் எவ்வளவோ அந்த அளவிற்காவது, பென்ஷனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். முழு அளவில் அதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும்கூட, ஓரளவிற்கு அதை ஒப்புக்கொண்டு அதிகப்படுத்துகிறேன் என்று சபையில் அறிவித்ததற்காக அவர்கள் சார்பாக அரசாங்கத்திற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5–00)

1970-லிருந்து நமது மாநிலத்தில் நிலத்தின் கீழ் உள்ள தண்ணீரை வெளிப்படுத்த ஒரு திட்டம் தயாரித்து, அதில் தனி நிபுணர்கள் செயல்பட்டுவருகின்றார்கள். அது எந்த அளவுக்கு வேலை செய்து வருகிறது என்பதை அறிய விரும்பு

கிறேன். என்ன ஆராய்ச்சி செய்து, என்ன முடிவு செய்திருக்கிறார்கள், எந்தெந்த இடங்களில் பூமிக்குக் கீழ் நீர் வசதி இருக்கிறது என்பதைத் தெரிந்து சொன்னார்களா? அப்படித் தெரிந்து சொன்னால், அது விவசாயிகளுக்கு வெகுவாகப் பயன்படும். அது மாதிரி அறிக்கை எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. அப்படி வந்திருந்தால், உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டில் இவ்வளவு நீண்ட விவாதம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் இந்த விவாதம் இல்லாவிட்டால், வெகு நேரத்திற்கு முன்பே, இன்றைய மன்றம் கலைந்திருக்கக் கூடும். இருந்தாலும் இந்த நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்து கொண்டு பேசியவர்கள் நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றி பாராட்டுகிறேன். நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு பத்து சதவீதம் என்று விதிக்கப்படுகின்ற—சர்சார்ஜ் அல்ல, அதற்கான திருத்தம் தரப்பட இருக்கிறது அடிஷனல் சேல்ஸ் டேக்ஸ் என்று—அந்தத் தொகை வாங்குகின்றவர்களுடைய தலையில் விழக்கூடும் என்ற கருத்தைச் சொன்னார்கள். திரு. நாராயணசாமி அவர்கள் அதற்கு வேறுபட்ட கருத்தைச் சொன்னார்கள். இரண்டையும் இணைத்து ஒரு கருத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். உயர்நீதி மன்றத்தில் சர்க்கார் தரப்பில் வெற்றி கிடைத்தாலும், அது உச்ச நீதி மன்றத்திற்குப் போயிருந்தால், வெற்றி கிடைத்திருக்காது என்று நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொள்கிறோம். அந்த வரி விதிப்பு மசோதா இங்கு வருவதற்கு முன்பு இதுபற்றி யோசிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒருவேளை உச்ச நீதி மன்றத்திற்குப் போனாலும், அடிபடாத அளவுக்கு எந்தெந்த அளவுக்கு அதைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு நண்பர் திரு. தாமோதரன் அவர்களுடைய எச்சரிக்கை பயன்படும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கின்றவர்களுடைய கணக்கை நாம் எடுத்துப் பார்த்தால், நாலாயிரம் பேர் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆனால் இப்பொழுது 50,000 ரூபாய் அளவுக்கு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விதிவிலக்கு அளித்திருப்பதன் மூலம் 40,000 முதல் 50,000 பேர் வரையில் இன்றைக்கு விடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றையதினம் மகிழ்ச்சியில் ஆழ்ந்து, பாராட்டுதல்களை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாலாயிரம் பேர்வது, பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் இருபது



லட்சம், முப்பது லட்சம் ரூபாய்க்கு ஆண்டுதோறும் வியாபாரம் செய்கின்றவர்கள் இந்த அரசினுடைய சுமையை ஓரளவுக்குத் தாங்களும் தாங்கிக் கொள்வதற்கு முன்வரவேண்டும் என்ற அளவில் தான் இந்த அடிஷனல் சேல்ஸ் டேக்ஸ் போடப்பட்டிருக்கிறதே அல்லாமல், வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இந்த வரிக்கான மசோதா வருகின்ற நேரத்தில் நல்ல பல கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். குறிப்பாக, நாம் ஒரு எடுத்துக் காட்டுக்கு வைத்துக்கொண்டால், ஒரு பெரிய வியாபாரி, 20 லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு வியாபாரம் செய்வார் என்று வைத்துக்கொண்டால், விற்பனை வரி ரூபாய் 70,000 கொடுப்பார், கூடுதல் விற்பனை வரியாக அவர் ரூபாய் 3,500 கட்ட வேண்டியிருந்தது, அதிகப்படி விற்பனை வரியாக 1974-75 பட்ஜெட்படி மேலும் ஒரு ரூபாய் 3,500 ஆகி, ஆக மொத்தம் ரூபாய் 7,000 அவர் கட்ட வேண்டியிருக்கிறது. அதை ஒரு பெரிய தொகையாகக் கருதாமல், அரசாங்கத்தினுடைய நிதி ஆதாரங்களைக் கருதி, நீங்கள் அதை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்தோடு ஒத்துழைப்பது நலம் என்று அதற்குரிய யோசனையை நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் போன்றவர்கள், திரு. நாராயணசாமி போன்றவர்கள், எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்கள் அவர்களுக்கு வழங்குவதுதான் நல்லதே, அல்லாமல் வேறல்ல. சர்சார்ஜை வேண்டுமானால் வாங்குவோர் தலையில் வைக்கலாம். அடிஷனல் சேல்ஸ் டாக்ஸை வாங்குவோர் தலையில் வைக்க இயலாது. ஆனால் இன்று நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியது போல், அதை அப்படி வைக்கலாம், தந்திரமாக விலையை உயர்த்தி விடக்கூடும். நாலாயிரம் பேர் என்ற அளவிலே இந்தக் காரியம் நடைபெறுகின்ற காரணத்தால், அரசாங்கம் அதிலே கண்காணிப்பாக இருப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ள முடியுமோ அவைகளை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

கியூ நிற்பதைப்பற்றி நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். கியூ சர்க்கரைக்கும் மற்ற சாமான்கள் வாங்குவதற்கும் அல்ல. குடும்பக் கார்டுகள் இப்பொழுது வழங்கப்படுகின்றன. அந்தக் குடும்பக் கார்டுகளைப் பெற்று, அதை அடுத்துப் பயன்படுத்துவதற்கு முதலிலேயே வாங்கி வைத்துக்கொள்வதற்காக இருக்கின்ற கியூவே அல்லாமல் வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், மண்ணெண்ணெயைப் பற்றி இங்கே பேசப்பட்டது. மாதம் ஒன்றுக்கு 30,000 கிலோ லிட்டர்

நம்முடைய மாநிலத்திற்குத் தருவதாக ஏற்கெனவே மத்திய அரசு உறுதி அளித்திருந்தது. ஆனால் கடந்த நான்கு திங்களாக, நான்கு மாதங்களாக ஒவ்வொரு மாதமும் 30,000 கிலோ லிட்டர் என்பதற்குப் பதிலாக, 24,000 கிலோ லிட்டர்தான் தந்தார்கள். பிப்ரவரி மாதத்தில் அந்த 24,000 கிலோ லிட்டரையும் 21,000 கிலோ லிட்டராக திடீரென்று குறைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு நான் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியும், தந்தி, தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ளுதல் ஆகிய இவ்வளவு முயற்சிகளில் ஈடுபட்ட பிறகு, மேலும் 1,500 கிலோ லிட்டர் இப்பொழுது அதிகரித்திருக்கிறார்கள். வருகின்ற மாதங்களில் நிலைமை சீராகிவிடும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. தீக்ஷிதர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இன்னும் உணவுக் கஷ்டம் எல்லாம் வரப்போகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், நாம் விளைவில் உபரியாக இருந்து இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்கு உணவு தானியம் வழங்குகிற அளவுக்கு வளமோடு இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு திடீர், திடீரென்று எடுக்கின்ற முடிவுகளால் நாம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகின்றன. உதாரணத்திற்குச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஏற்கெனவே மக்கள் சோளம், கம்பு, கேழ்வரகு, கேப்பை என்று சொல்லப்படுகின்ற சிறு தான்யங்களை,—அரிசியைக் குறைந்த அளவுக்கு வைத்துக்கொண்டு,—பெருமளவுக்கு உபயோகப்படுத்துகின்ற மாவட்டங்கள் தமிழ் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. இது வரையில் இருந்துவந்த நிலைமைப்படி, ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு இந்த தான்யங்களைக் கொண்டு செல்வதற்கு கண்ட்ரோல், கட்டுப்பாடு இருந்தது. ஆனால் நம்முடைய மாநிலத்தைக் கலந்து கொள்ளாமலேயே, திடீரென்று மத்திய அரசு ஒரு அறிவிப்பின் மூலமாக ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு இந்த தான்யங்கள் போவதற்குத் தடை கிடையாது என்கின்ற அளவுக்கு வாயில் கதவுகளை இன்றையதினம் திறந்துவிட்டு விட்டார்கள். இப்பொழுது டெல்லியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உணவு அமைச்சர்களுடைய மாநாட்டில் நம்முடைய தமிழகத்தின் சார்பில் அதற்கான எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர் அந்தக் கருத்தை அங்கே சொல்வார் என்று கருதுகிறேன். ஆனால் எந்த அளவுக்கு மத்திய அரசு அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளப் போகிறது



என்பது எனக்குப் புரியவில்லை. மற்ற மாநிலங்களுடைய கதவுகள் திறக்கப்பட்டு, எல்லா மாநிலங்களுக்கும் இங்கேயிருந்து தானியங்கள் செல்லலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, சோளம், கம்பு, கேழ்வரகு போன்றவற்றைப் பயன்படுத்திக்கொண்டிருந்த கிராமப்புற மக்கள், அவை அதிக விலைக்கு மற்ற மாநிலங்களில் விற்பனையாகின்றன என்பது தெரிந்து, அவற்றை வெளி மாநிலங்களுக்கு அனுப்புகின்ற முயற்சியில் ஈடுபடவும், கள்ளச் சந்தைகள் பெருகவும், இடமளித்துவிட்டது. அதன் காரணமாக, அரிசிக்குப் பதிலாக சோளத்தை, கம்பை, கேழ்வரகைப் பயன்படுத்திக்கொண்டிருந்தவர்கள், இது வரையில் அரிசியை மிச்சப்படுத்தி அது எல்லா இடங்களிலும் தாராளமாகவும், விலை மலிவாகவும் கிடைக்கச் செய்ததற்குப் பதிலாக, சோளம் மற்ற மாநிலங்களுக்குப் போய், சோளம், கம்பு, கேழ்வரகைப் பெருமளவுக்குப் பயன்படுத்தியவர்கள் அந்த இடத்தில் அரிசியை வைத்து நிரப்புகிற நேரத்தில், அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் நமக்கெல்லாம் ஏற்படுகிறது. இதற்காக அந்தச் சிறு தான்யங்களுக்கு பெருமளவுக்கு லெவியாவது வியாபாரிகளிடம் போட வேண்டும் என்று நாம் நம்முடைய அரசு சார்பாக மத்திய அரசிடம் கேட்கிறோம், அல்லது மற்றொரு யோசனையை மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டுமென்று உணவு அமைச்சருக்குக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தான்யங்களை எல்லாம், அவர்கள் எவ்வளவு வேண்டுமென்று கருதுகிறார்களோ அவ்வளவை சென்ட்ரல் பூலுக்குக் கொடுத்து விடு என்று வாங்கி வைத்துக்கொண்டு, அந்த தான்யங்கள் தேவை என்று சொல்கின்ற மாநிலங்களுக்கு அனுப்புகின்ற அளவுக்கு ஒரு சென்ட்ரல் பூல், மத்திய தொகுப்பு ஏற்படுத்தும் அளவுக்காவது மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளில், லெவி முறையை அதிக அளவுக்கு, அதிக சதவீதம் விதிக்க வேண்டும் என்பதையாவது அல்லது மத்தியத் தொகுப்புத் திட்டத்தையாவது ஏற்றுக் கொள்ள வேண்டும். எதையும் ஏற்றுக் கொள்ளாமல், மாநிலத்திற்கு மாநிலம் திறந்து விட்டது விட்டதுதான் என்று மத்திய சர்க்கார் சொல்லிவிடுமேயானால், நாம் புதியதொரு உணவு நெருக்கடியை, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், எதிர்பார்க்கும் நிலைமை வரும் என்பதையும் இப்பொழுதே மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 16

[பிற்பகல் 5-10]

வேறு பல கருத்துக்களெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு நாம் அகவிலைப் படி உயர்வு தந்ததைப் பாராட்டினார்கள். நேற்றையதினம் பொற் கொல்லர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை வசூல் செய்வதை ரத்து செய்வதற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. கூடுமான வரையில் நிதி ஆதாரங்களைக் கொண்டு எந்த அளவிற்கு நல்ல காரியங்களைச் செய்ய முடியுமோ, சலுகைகளை அளிக்க முடியுமோ அவைகளையெல்லாம் இந்த அரசு அளித்து வருகிறது என்பதை எடுத்துக் கூறி, இந்த நிதி ஒதுக்கீட்டினை அனைவரும் ஏற்று ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கம் தேவை. நமது மாநில வரவு-செலவு திட்டம் மார்ச் மாதம் 4-ம் தேதி சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் 20—2—1974-ல் கையினால் செய்யும் சோப்புகளுக்கு, அது வரை வரியில்லாமல் இருந்த அந்த சோப்புகளுக்கு, புதிதாக 2 சதவீத பல முனை வரி போட்டு உத்தரவு வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. எப்படியும் நிதி மசோதாவின் மூலம் பிரேரணை ஒன்று வரவேண்டியிருக்கிறது. கையினால் செய்யும் சோப்பு, உணவிற்கு ஆகாத எண்ணெய், இலுப்ப எண்ணெய், வேப்ப எண்ணெய் ஆகியவைகளால் செய்யக் கூடிய சோப்பு. இதை நாசூக்காக உள்ளவர்கள் உபயோகிக்க மாட்டார்கள். பரம ஏழைகள் தான் கையினால் செய்யும் சோப்புகளை உபயோகிப்பார்கள். அதற்கு இது வரை வரி கிடையாது. 25 வருஷங்களாகவே வரி கிடையாது. புதிதாக வரி போடுவதன் மூலம் அந்தத் தொழிலும் பாதிக்கப்பட்டு நசிந்து விடும். அரசாங்கத்தால் மசோதா கொண்டுவருவதற்கு முன்னாலேயே சொல்லிவிட வேண்டுமென்று இதைச் சொல்கிறேன். இதைக் கைவிட்டுவிடும்படியாக அந்தத் தொழிலின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சந்திரிகா சோப்பு கம்பெனி மூலமாக ஏராளமான லாபத்திற்கு விற்கப்படுகிறது என்பதை மனதில் வைத்து இந்த வரி போடப்பட்டதாகத் தகவல் தரப்பட்டது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியதை ஆராய்ந்து பார்த்து, உண்மையிலேயே கையினால் செய்யப்படுகிற சோப்பு அதிக அளவிற்கு விற்பனையாகி, ஏழை எளிய மக்களைப் பாதிக்கிறது என்று தெரியுமானால், நிச்சயமாக இது பரிசீலிக்கப் படும்.

1974 மார்ச் 16]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(பரிந்துரை ஏதும் இல்லை.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/74) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/74) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

(பிற்பகல் 5-12)

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் முடிவுற்றன. அவை மீண்டும் 26—3—1974 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

*A. Statutory Rules and Orders.*

174. Notification issued with G.O. Ms. No. 851, Labour and Employment, dated the 27th December 1973 in regard to amendment to paragraph 3 of Part VI of Schedule IV of Rule 7 of the Tamil Nadu Weights and Measures (Enforcemen)t Rules, 1967. [Laid on the table of the House under section 43 (4) of the Tamil Nadu Weights and Measures (Enforcement) Act, 1958 (Tamil Nadu Act XX of 1958).]

175. Notification issued with G.O. Ms. No. 2416, Agriculture, dated the 12th December 1973 relating to declaration of notified market area for Kivalur market in respect of paddy in Thanjavur district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

176. Notification issued with G.O. Ms. No. 2174, Rural Development and Local Administration, dated the 1st October 1973 relating to declaration of Manaparai as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

177. Notification issued with G.O. Ms. No. 2345, Rural Development and Local Administration, dated the 30th October 1973 relating to declaration of Ootacamund as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

178. Notification issued with G.O. Ms. No. 2344, Rural Development and Local Administration, dated the 30th October 1973 relating to declaration of Arni as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act,



1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

179. Notification issued with G.O. Ms. No. 2163, Rural Development and Local Administration, dated the 1st October 1973 relating to declaration of Kotagiri as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

180. Notification issued with G.O. Ms. No. 2511, Rural Development and Local Administration, dated the 22nd November 1973 relating to declaration of Padmanabhapuram as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under scetion 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

181. Notification issued with G.O. Ms. No. 2053, Rural Development and Local Administration, dated the 20th September 1973 relating to declaration of Puliangudi as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*B. Reports, Notifications and other Papers.*

* 35. Lok Sabha Debate on the Constitution (Thiry-third Amendment) Bill, 1973.

* 36. Rajya Sabha Debate on the Constitution (Thirty-Second Amendment) Bill, 1973.

37. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1974 (L.A. Bill No. 9 of 1974) as passed by the Assembly.

38. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on 31st March 1973 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969 :—

1. Thiru V. Thangapandian.
2. Thiru P. Thirugnanasambandam.
3. Thiru G. No. Raju.
4. Thiru A. P. Janardhanam.
5. Thiru T. V. Muthukrishnan.

---

* Circulated to all M.L.Cs. on 14th March 1974.



## இணைப்பு

[357 ஆம் பக்கத்தில் இனம் 4க்கான அடிக்குறிப்பைக் காண்க]

**(L.A. Bill No. 9 of 1974***

(As passed by the Assembly.)

*A Bill to provide for the withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for the service of a part of the Financial Year commencing on the 1st April* 1974.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1974.

2. *Withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for a part of the Financial Year commencing on the 1st April* 1974.—The State Government may withdraw from and out of the Consolidated Fund of the State sums not exceeding one hundred and ninety-two crores fifty-five lakhs twenty-five thousand and seven hundred rupees, being moneys required to meet—

(*a*) the grants made in advance by the Tamil Nadu Legislative Assembly for a part of the Financial Year commencing on the 1st April 1974, as setforth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for the same part of the same Financial Year, as setforth in column (4) of the Schedule.

3. *Appropriation.*—The sums authorized to be withdrawn from and out of the Consolidated Fund by this Act shall be appropriated for the services and purposes expressed in the Schedule in relation to the said year.

THE SCHEDULE.

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department | 89,00,000 | .. | 89,00,000 |
| 2 | State Excise Department. | 24,00,000 | .. | 24,00,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration. | 19,00,000 | .. | 19,00,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration. | 89,00,000 | 300 | 89,00,300 |
| 5 | Stamps Administration .. | 10,00,000 | .. | 10,00,000 |
| 6 | Registration .. .. | 39,00,000 | 100 | 39,00,100 |
| | *Debt Charges* .. .. | .. | 13,01,00,000 | 13,01,00,000 |
| 7 | State Legislature .. .. | 10,00,000 | 17,000 | 10,17,000 |
| 8 | Elections .. .. .. | 5,00,000 | .. | 5,00,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff. | 2,84,00,000 | 9,00,000 | 2,93,00,000 |
| 10 | Milk Supply Schemes .. | 75,00,000 | .. | 75,00,000 |
| 11 | District Administration .. | 3,25,00,000 | 5,000 | 3,25,05,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. | 28,00,000 | 300 | 28,00,300 |
| 13 | Administration of Justice. | 91,00,000 | 14,00,000 | 1,05,00,000 |
| 14 | Jails .. .. .. | 88,00,000 | .. | 88,00,000 |
| 15 | Police .. .. .. | 6,11,00,000 | 100 | 6,11,00,100 |
| 16 | Fire Services .. .. | 42,00,000 | .. | 42,00,000 |
| 17 | Education .. .. | 28,00,00,000 | .. | 28,00,00,000 |
| 18 | Medical .. .. .. | 7,10,00,000 | .. | 7,10,00,000 |
| 19 | Public Health .. .. | 3,95,00,000 | .. | 3,95,00,000 |
| 20 | Agriculture .. .. | 6,86,00,000 | 100 | 6,86,00,100 |
| 21 | Fisheries .. .. .. | 44,00,000 | .. | 44,00,000 |
| 22 | Animal Husbandry .. | 1,15,00,000 | 100 | 1,15,00,100 |
| 23 | Co-operation .. .. | 1,10,00,000 | .. | 1,10,00,000 |
| 24 | Industries .. .. .. | 1,26,00,000 | .. | 1,26,00,000 |
| 25 | Cinchona .. .. .. | 18,00,000 | .. | 18,00,000 |
| 26 | Handlooms and Textiles .. | 49,00,000 | .. | 49,00,000 |
| 27 | Khadi .. .. .. | 15,00,000 | .. | 15,00,000 |
| 28 | Community Development Projects, etc. | 7,22,00,000 | .. | 7,22,00,000 |
| 29 | Labour including Factories. | 92,00,000 | 100 | 92,00,100 |
| 30 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 2,25,00,000 | 100 | 2,25,00,100 |
| 31 | Welfare of the Backward Classes, etc. | 1,52,00,000 | 100 | 1,52,00,100 |
| 32 | Housing .. .. .. | 98,00,000 | .. | 98,00,000 |
| 33 | Urban Development .. | 1,08,00,000 | .. | 1,08,00,000 |
| 34 | Civil Supplies .. .. | 55,00,000 | .. | 55,00,000 |
| 35 | Irrigation .. .. .. | 3,97,00,000 | .. | 3,97,00,000 |
| 36 | Public Works—Buildings. | 59,00,000 | 51,000 | 59,51,000 |
| 37 | Public Works—Establishment and Tools and Plant. | 1,03,00,000 | .. | 1,03,00,000 |
| 38 | Roads and Bridges .. | 4,97,00,000 | .. | 4,97,00,000 |
| 39 | Road Transport Schemes. | 2,75,00,000 | 42,000 | 2,75,42,000 |
| 40 | Relief on account of Natural Calamities. | 39,00,000 | 38,00,000 | 77,00,000 |
| 41 | Pensions and other Retirement Benefits. | 2,05,00,000 | 6,00,000 | 2,11,00,000 |

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | RS. | |
| 42 | Miscellaneous .. .. | 6,12,00,000 | 4,00,000 | 6,16,00,000 |
| 43 | Stationery and Printing .. | 1,27,00,000 | 38,000 | 1,27,38,000 |
| 44 | Forest Department .. | 76,00,000 | 100 | 76,00,100 |
| 45 | Compensation and Assignments. | 2,61,00,000 | 5,70,000 | 2,66,70,000 |
| 46 | Compensation to Zamindars. | 44,00,000 | .. | 44,00,000 |
| 47 | Capital Outlay on Public Health, Sanitation and Water-Supply. | 43,00,000 | .. | 43,00,000 |
| 48 | Capital Outlay on Agriculture. | 7,93,00,000 | 100 | 7,93,00,100 |
| 49 | Capital Outlay on Industrial Development. | 60,00,000 | 100 | 60,00,100 |
| 50 | Capital Outlay on Irrigation. | 3,74,00,000 | .. | 3,74,00,000 |
| 51 | Capital Outlay on Public Works—Buildings. | 2,51,00,000 | .. | 2,51,00,000 |
| 52 | Capital Outlay on Roads and Bridges. | 1,17,00,000 | .. | 1,17,00,000 |
| 53 | Capital Outlay on Road Transport Schemes. | 79,00,000 | 100 | 79,00,100 |
| 54 | Capital Outlay on Forest.. | 65,00,000 | .. | 65,00,000 |
| 55 | Miscellaneous Capital Outlay. | 2,60,00,000 | 1,000 | 2,60,01,000 |
| 56 | Loans and Advances by the State Government. | 8,99,00,000 | .. | 8,99,00,000 |
| | *Public Debt—Repayment.* | .. | 38,91,00,000 | 38,91,00,000 |
| | Grand total .. | 1,39,85,00,000 | 52,70,25,700 | 1,92,55,25,700 |

I certify that this is a Money Bill.

FORT ST. GEORGE,
MADRAS-9,
*16th March* 1974

K. GOVINDAN,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*

# Index to Tamil Nadu Legislative Council Debates

FORTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

11th to 16th March 1974.

Volume CXVII—Nos. 1 to 6.

A

PAGES.

ABDUL WAHAB, THIRU K. S.—
Budget for 1974-75, general discussion on .. .. 277–282, 312

ADITANAR, THE HON. THIRU SI. PA.—
Budget for 1974-75, general discussion on .. .. 95, 224–225, 229–230, 311

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—
Declaration of notified market area for Kivalur market in respect of paddy in Thanjavur district, notification laid on the table .. .. .. 378

AGRICULTURE—
Question re Farm Research Centre at Krishnagiri, opening of .. .. .. .. 204

ALIYAR CENTRAL WORKSHOP—
Question re development of—as Body building-servicing workshop for motor vehicles .. 203–204

ALL-INDIA LABOUR PROGRESSIVE FEDERATION—
Question re recognition of .. .. .. 16

PAGES.

ANBAZHAGAN, THE HON. THIRU K.—
Budget for 1974-75, general discussion on .. 31, 32, 35, 38-39, 40, 41, 42, 43, 91, 92, 93, 100, 104, 164, 236, 308

APPROPRIATION (VOTE ON ACCOUNT) BILL, 1974—
*See* Bills.

ARECANUT PLANTATIONS—
*See* Plantations.

ARIVAZHAGAN, THIRU K.—
Budget for 1974-75, general discussion on .. 178-180, 241

ARIVUDAINAMBI, PULAVAR O.—
Budget for 1974-75, general discussion on .. 185-194
Civil Supplies Corporation, calling Minister's attention to non-confirmation of staff of—and hardship due to transfer of distribution wing to Co-operation Department .. .. .. .. 208

ARUMUGASWAMI, THIRU M.—
Budget for 1974-75, general discussion on .. 230-250

AYYANAN AMBALAM, THIRU A.—
Budget for 1974-75, general discussion on .. 107-114

*B*

BALARAMAN, THIRU L.—
Budget for 1974-75, general discussion on .. 269, 333, 334
Fire accident in Gudiyatham, North Arcot district, calling Minister's attention to loss of men and materials due to—and need for relief measures .. 352, 355, 356



PAGES.

BILLS—
Appropriation (Vote on Account) Bill, 1974—
Considered and returned to Assembly .. 357-377
Message from the Assembly *re* .. .. 351
Message from the Governor *re* .. .. .. 351
Constitution (Thirty-third) Amendment Bill, 1973—
Lok Sabha Debate on—, laid on the table .. 379
Constitution (Thirty-third) Amendment Bill, 1973—
Lok Sabha Debate on—, laid on the table .. 379

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—
Appropriation (Vote on Account) Bill, 1974 .. 379

BOOKS AND PUBLICATIONS—
Question *re* temples in various districts, bringing out books about—by Hindu Religious and Charitable Endowments (Administration) Department .. 147

BUDGET FOR 1974-75—
General discussion on .. .. .. .. 23-60, 82-131, 148-194, 210-250, 267-336

C

CALDWELL—
Question *re* re-installation of statue of on Beach Road .. .. .. .. .. 134-136

CHAIRMAN, MR.—
Announcement *re*—
Message from the Assembly *re* Appropriation (Vote on Account) Bill, 1974 .. .. .. .. 351
Message from the Governor *re* Appropriation (Vote on Account) Bill, 1974 .. .. 351

C—cont.

PAGES.

CHAIRMAN, MR.—*cont.*

Bill—Appropriation (Vote on Account) Bill, 1974 .. .. .. .. 366, 367

Budget for 1974–75, general discussion on .. 85, 90, 93, 97, 98, 113, 115, 155, 162, 163, 165, 167, 173, 186, 187, 194, 210, 216, 217, 230, 242, 248, 249

CIVIL SUPPLIES CORPORATION—

Non-confirmation of staff of—and hardship due to transfer of distribution wing to Co-operation Department, Minister's attention called to .. 208–210

COLLECTION OF STATISTICS RULES, 1966—

Amendments to—, notification laid on the table .. 61

COLLEGE(S)—

Question *re*—

Rajah Serfoji College, Thanjavur, relaxation of probation granted to Professors, extension of concession to Assistant Professors and others .. 136–137

Teachers' Training College, sufferings of Tamil Graduates Branch XII-B due to non-availability of seats in .. .. .. .. 137–138

COMMERCIAL INSTRUCTORS—

*See* Teachers

COMMISSIONER FOR GOVERNMENT EXAMINATIONS—

Question *re*. decentralisation of office of .. .. 63

COMMITTEES—

Question *re* Rajamannar Committee Report, Central Government's views on .. .. 350–351



D

PAGES

DAMODARAN, THIRU A. R.—

Bill—Appropriation (Vote on Account) Bill, 1974 .. .. .. .. .... 362–365, 369

Budget for 1974–75, general discussion on .. .. 210–222, 234, 238

DEPUTY CHAIRMAN—

Budget for 1974–75, general discussion on .. 43, 44, 48, 171

DHARMALINGAM, THE HON. THIRU A. P.—

Budget for 1974–75, general discussion on... ... 309

DISTRICT JUDGES—

Question *re* appointment of Personal Assistants to .. 70–71

DISTRICT MUNICIPALITIES ACT, 1920—

Exclusion of Nachimuthu Goundenpudur and Samathur villages—Area S.F. Nos. 187 to 191 and 393 to 400 from Dharapuram Municipality, notification lity, notification laid on the table ... ... 337

Reservation of seats and division of wards for Scheduled Castes and Women in Chingleput Municipality, notification laid on the table .. .. 337

Reservation of seats and division of wards for Scheduled Castes and Women in Coonoor Municipality, notification laid on the table .. .. 337

Reservation of seats and division of wards for Scheduled Castes and Women in Kuzhithurai Municipality, notification laid on the table .. .. 338

Reservation of seats and division of wards for Scheduled Castes and Women in Rajapalayam Municipality, notification laid on the table .. .. 337

DRAWING MASTERS—

*See* Teachers

## E

PAGES.

EDUCATION BOARD—

Question *re* constitution of—for elementary schools, Memorandum of Federation of Tamil Nadu Elementary School Teachers .. .. 1–3

EDUCATION DEPARTMENT—

Question *re* temporary appointees continuing for more than six months in offices of—, number of .. 11–13

EXAMINATIONS—

Question *re* S.S.L.C.—in March 1972 and 1973, number of candidates for .. .. 4–11

EXPENSIVE LOCALITY ALLOWANCE(S)—

Question *re* disparity in rate of—to Teachers of Panchayat Union and Government High Schools in Rameswaram Island .. .. .. 139–141

## F

FARM RESEARCH CENTRE—

*See* Agriculture.

FIRE ACCIDENT(S)—

Loss of men and materials due to—in Gudiyatham, North Arcot district, Minister's attention called to —and need for relief measures .. .. 352–356

FOOD—

Question *re* rice bags, seizure by Food Cell (C.I.D.) at Coimbatore—Kerala border about 9th January 1973 .. .. .. .. 257

FOREST(S)—

Question *re* sandalwood, extraction of oil and other by-products from—in North Arcot district .. 77



## G

PAGES.

GANAPATHI, THIRU K. S.—

Budget for 1974-75, general discussion on .. 44

GANESAN, THIRU SAW.—

Budget for 1974–75, general discussion on .. .. 167–168

GOLD BOND(S)—

Question *re* irregularity in transaction of jewels given for—on behalf of Thirunagari temple, Sirkali taluk .. .. .. .. .. 147–148

GRAMASEVAKS—

Question *re* action on demands of—a meeting of Federation of Tamil Nadu Government Rural Development Workers on 17th December 1972 .. 141–142

GROUNDNUT OIL—

Question *re* quantity of—manufactured in the State sent to foreign countries and North India during 1971 and 1972 .. .. .. .. 71–76

## H

HARIJANS—

Question *re* assignment of wet lands to—in M. Pudur village, Ramanathapuram district .. .. 81

HIGHER GRADE TEACHERS—

*See* Teachers.

HINDI PANDITS—

*See* Teachers.

HOGANEKAL—

Question *re* Power House at—across Cauveri, setting up of .. .. .. .. .. 78

## M.

PAGES.

MADHAVAN, THE HON. THIRU S.—
Budget for 1974–75, general discussion on .. .. 304, 305

MASILAMANI, THIRU M.—
Budget for 1974–75, general discussion on .. .. 180–185

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Civil Supplies Corporation, calling attention to non-confirmation of staff of—and hardship due to transfer of distribution wing to Co-operation Department .. .. .. .. .. 208–210
Fire accident in Gudiyatham, North Arcot district, calling attention to loss of men and materials due to—and need for relief measures .. .. 352–356

MEMBERS OF LEGISLATURE—
Return of Assets of certain Members of Legislative Council as on 31st March 1973, laid on the table .. 380

MESSAGES FROM THE ASSEMBLY—
*See* Bills

MESSAGES FROM THE GOVERNOR—
*See* Bills

MUTHUSWAMY, THIRU S.—
Budget for 1974–75, general discussion on .. .. 23–49, 100, 166, 170, 173, 329, 330, 335–336

## N.

NARAYANASAMI, THE HON. THIRU MANNAI P.—
Budget for 1974–75, general discussion on .. .. 151, 152, 248
Civil Supplies Corporation, statement *re* non-confirmation of staff of and hardship due to transfer of distribution wing to Co-operation Department .. .. .. .. 208–210



*N*—cont.

PAGES.

NARAYANASAMI, THIRU D. V.—
Budget for 1974–75, general discussion on .. .. 46–60

NARAYANASAMI, THIRU S.—
Bill—Appropriation (Vote on Account) Bill, 1974 .. 360–362

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—
Budget for 1974–75, general discussion on .. .. 45–46

## P

PADDY—
Question *re*
crops affected in Kanyakumari district due to scarcity of water .. .. .. .. .. 19

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—
Agricultural Produce Markets Act, 1959, declaration of notified market area for Kivalur market in respect of paddy in Thanjavur district (G.O. Ms. No. 2416, Agriculture, dated 12th December 1973). 378
Bills—
Constiution (Thirty-second) Amendment Bill, 1973, Lok Sabha Debate on .. .. .. 379
Constitution (Thirty-third) Amendment Bill, 1973, Lok Sabha Debate on .. .. .. .. 379
Bills, as passed by the Assembly—Appropriation (Vote on Account) Bill, 1974 .. .. 379
Collection of Statistics Rules, 1966, amendments to—(G.O. Ms. No. 1410, Agriculture, dated 12th June 1973) ... ... ... ... 61
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Chingleput Municipality (G.O. Ms. No. 2670, Rural Development and Local Administration, dated 29th November 1974) .. .. .. .. 337
Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Coonoor Municipality (G.O. Ms. No. 2684, Rural Development and Local Administration, dated 3rd November 1973) .. .. .. .. .. 337

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.* PAGES.

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Kuzhithurai Municipality (G.O. Ms. No. 95, Rural Development and Local Administration, dated 18th January 1974) .. .. .. .. .. .. 338

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Rajapalayam Municipality (G.O. Ms. No. 2833, Rural Development and Local Administration, dated 26th December 1973) .. .. .. .. .. 337

District Municipalities Act, 1920—

Exclusion of (Nachimuthu Goundenpudur and Samathur villages) areas S.F. Nos. 187 to 191 and 393 to 400 from Dharapuram Municipality (G.O. Ms. No. 91, Rural Development and Local Administration, dated 18th January 1974) .. 337

Indian Stamp Act, 1899, remission of stamp duty on sale deed executed by Alathambadi Village Industries Co-operative Society in favour of Chief Executive Officer, Tamil Nadu Khadi and Village Industries Board, Madras (G.O. Ms. No. 7214, Revenue, dated 3rd December 1973) .. .. 131

Indian Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962, amendment to—(G.O. Ms. No. 3532, Revenue, dated 30th December 1972) .. .. 131

Questions (Unstarred) Nos. 8 to 10, answers to .. 61

Return of Assets of certain Members of Legislative Council as on 31st March 1973 .. .. 380

Tamil Nadu Warehousing Corporation, Madras Balance sheet and Profit and Loss account of— for 1971-72 .. .. .. .. .. 131

Town and Country Planning Act, 1971—

Declaration of Arni as Local Planning Area under —(G.O. Ms. No. 2344, Rural Development and Local Administration, dated 30th October 1973).. 378-379

Declaration of Courtallam as Local Planning Area under (G.O. Ms. No. 2061, Rural Development and Local Administration, dated 20th September 1973) .. .. .. 61

PAGES.

*P*—cont.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Declaration of Gudiyatham as Local Planning Area under (G.O. Ms. No. 2054, Rural Development and Local Administration, dated 20th September 1973) .. .. .. .. .. .. 60

Declaration of Kotagiri as Local Planning Area under—(G.O. Ms. No. 2163, Rural Development and Local Ariministration, dated 1st October 1973) .. .. .. .. .. 379

Declaration of Manaparai as Local Planning Area under—(G.O. Ms. No. 2174, Rural Development and Local Administration, dated 1st October 1973) .. .. .. .. .. .. 378

Declaration of Ootacamund as Local Planning Area under—(G.O. Ms. No. 2345, Rural Development and Local Administration, dated 30th October 1973) .. .. .. .. .. .. 378

Declaration of Padmanabhapuram as Local Planning Area under—(G.O. Ms. No. 2511, Rural Development and Local Administration, dated 22nd November 1973) .. .. .. .. 379

Declaration of Puliangudi as Local Planning Area under—(G.O. Ms. No. 2053, Rural Development and Local Administration, dated 20th September 1973) .. .. .. .. .. .. 379

Weights and Measures (Enforcement) Rules, 1967, amendment to—(G.O. Ms. No. 851, Labour and Employment, dated 27th December 1973) .. 378

PATTANAMKAL SCHEME—

Question *re* area of wet land benefited by—in Kanyakumari district .. .. .. .. .. 79–80

PLANTATIONS—

Question *re* arecanut plantations in Kallar area in Coimbatore district, affliction with unknown diseases during September 1973 .. .. .. .. 205

POLICE—

Question *re* special squards for bandobust in Hindu Temples during festivals, formation of .. .. 146–147

POPE, G. U.—

Question *re* reinstallation of statue of—on Beach Road. 134–136

PORTS— PAGES.

Question re Leepuram Port in Kanyakumari district, development of .. .. .. .. .. 80–81

PRE-HISTORICAL PAINTINGS—

Question re—

Jain mutts having—at Thirumalai village, Sivagangai taluk, Ramanathapuram district .. 200–202

Q

QUESTIONS AND ANSWERS—

Arivazhagan, Thiru K.—

Question re—

Cholamandal near Thiruvanmiyur, promotion as a Tourist Centre .. .. .. .. 13–14

Non-teaching Staff Association of Aided High Schools, Resolutions at Third State Conference of .. .. .. .. .. .. 265–266

Balaraman, Thiru L.—

Question re—

Overhead tanks in Panchayat Unions of North Arcot district, construction of .. .. 205–206

Power House at Hoganekal across Cauveri, setting up of .. .. .. .. .. .. 78

Sandalwood, extraction of oil and other by—products from—in North Arcot district .. 77

'Separate Tamil Nadu' demand, action taken against political party propagating .. .. 348–350

Separate Tamil Nadu, demand for ... ... 347

Veterinary Hospital at Pennathur, North Arcot district, opening of .. .. .. 76–77



PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont.*

Ganapathi, Thiru K. S.—

Question re—

B.T. Teachers with 11 years service promoted to Selection Grade on 1st January 1971, freezing of pay of .. .. .. .. .. .. 67–68

Graduate Secondary Grade Teachers, grant of B.T. scale of pay to .. .. .. .. .. 138–139

Physical Education Teachers, Grade I, sanction of Selection Grade scales of pay to .. .. .. 259–260

Secondary Grade Assistants with B.T. qualifications for promotion as Headmasters, refusal of managements of Aided and Middle Schools in Tiruchirappalli district to comply with Education Department's order .. .. .. .. 202–203

Secondary Grade Teachers completing 10 years of service, grant of Selection Grade to .. .. 66–67

Secretarial Assistants and Commercial Instructors serving in High Schools, sanction of Selection Grade posts to .. .. .. .. .. 200

Temples, printing of calendars by .. .. .. 207

Women students, admission of women in Navalar Nedunchezhian Arts College, Tiruverambur, Tiruchirappalli ... ... ... ... 264–265

Isvarmurti, Thiru V.—

Question re—

Arecanut plantations in Kallar area in Coimbatore district, affiction with unknown diseases during September 1973 .. .. .. .. .. .. 205

Arulmigu Tiruporoor Murugan Temple in Chingleput district, apprehension by Police of

B.T. Teachers in various schools, basis for award of Selection Grade to .. .. .. .. 64–65

Commissioner for Government Examinations, decentralisation of office of .. .. .. 63

Girl students, non-admission in Boys' High Schools in Ram Nagar, Coimbatore ... ... 262–263

Model School for Girls in Madras, opening of .. 19

PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont*.

Isvarmurti, Thiru V.—*cont*.

Question *re*—

S.S.L.C. Examinations in March 1972 and 1973, number of candidates for .. .. .. 4–11

Temples in various districts, bringing out books about—by Hindu Religious and Charitable Endowments (Administration) Department .. 147

Kattoor Gopal, THIRU—

Question *re*—

Aliyar Central Workshop, development as body building—servicing workshop for motor vehicles. 203–204

All-India Labour Progressive Federation, recognition of .. .. .. .. .. .. 16

Single Trade Union for one Industry and leadership from among labourers, implementation of proposal .. .. .. .. .. .. 143–146

Trade Unions, payment of wages to representatives for days on which they attend Conciliation Proceedings ... ... ... 15–16

Kuudrakkudi Adigalar, Thavathiru—

Question *re*—

Assignment of wet lands to Harijans in M. Pudur village, Ramanathapuram district .. .. 81

Education Department, number of temporary appointees continuing for more than six months in office of .. .. .. .. .. 11–13

Gramasevaks, action on demands of—att meeting of Federation of Tamil Nadu Government Rural Development Workers on 17th December 1972 .. 141–142

Teachers' Training College, sufferings of Tamil Graduate Branch XII-B due to non-availability of seats in .. .. .. .. .. 137–138

Temples, formation of Special Police Squads for bandobust in Hindu—during festivals ... 146–147



PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont*.

Muthuswamy, Thiru S.—

Question *re*—

Education Board for elementary schools Memorandum of Federation of Tamil Nadu Elementary School Teachers for constitution of .. 1–3

Expensive locality allowance to teachers of Panchayat Union and Government High Schools in Rameswaram Island, disparity in rate of .. 139–141

Higher Grade Teachers working in Secondary Grade posts, absorption of .. .. 202

Teachers, number of Selection Grade posts sanctioned and cost incurred .. .. .. 65–66

Sakthi Mohan, Thiru R.—

Question *re* Vivekananda Rock, Kanyakumari, erection of statue of King Bhaskara Sethupathi in .. .. 133–134

Sambasivam, Thiru Era.

Question *re* Rajamannar Committee Report, Central Government's view on .. .. .. 350–351

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Leepuram Port in Kanyakumari district, development of ... ... ... ... ... 80–81

Paddy crops affected in Kanyakumari district due to scarcity of water .. .. .. 19

Pattanamkal Scheme in Kanyakumari district, area of wet land benefited by .. .. .. 79–80

Protected water-supply scheme for Theroor, Kanyakumari district, implementation of .. 69–70

Teachers of Padmanabha Elementary School, Tenkasi circle, Tirunelveli district, complaint *re* non-disbursement of salaries to .. .. .. 3–4

PAGES.

QUESTIONS AND ANSWERS—cont.

Santosham, Thiru D.—

Question re—

District Judges, appointment of Gazetted Personal Assistants to .. .. .. .. 70–71

Engineering Course in Government (Board) Secondary Schools, strength of students in X and XI Standards .. .. .. .. 266–267

Physical Education Teachers, Grade I, sanction of Selection Grade scales of pay to .. .. 259

Secretarial Assistants and Commercial Instructors in High Schools, sanction of Selection Grade posts to .. .. .. .. 200

Statue of G.U. Pope and Caldwell on Beach Road, re-installation of ... ... ... 134–136

Swaminathan, Thiru G.—

Question re—

Drawing Masters with Secondary Grade qualifications, fixation of scale of pay on a par with Physical Education Teachers with secondary grade qualifications .. .. .. 199

Hindi Pandits, absorption of unqualified—ousted due to implementation of Two-language Formula .. .. .. .. .. 258–259

Hindu Temple Protection Conference at Pattukkottai in June 1973, resolution re appointment of trustees and exemption of temple and Mutt lands from Cultivating Tenants (Right to purchase Landowners' Rights) Act, 1973 .. 17–18

Hospitals and Dispensaries in State, report on working of Civil .. .. .. 68–69

Physical Education Teachers, Grade I, sanction of Selection Grade scales of pay to .. .. 260

Rajah Serfoji College, Thanjavur, relaxation of probation granted to Professors, extension of concession to Assistant Professors and others .. 136–137

Selection Grade, representation re procedure for choice of teachers for .. .. .. 258



PAGES.

QUESTIONS AND ANSWERS—cont.

Swaminathan, Thiru G.—cont.

Question re—cont.

Senate of Madras University, contesting of election to—by Government employees during 1973 .. .. .. .. 261

Thanjavur District Chemists and Druggists Association, representation regarding inability to open establishments on all week days .. 142–143

Thirunagari Temple, Sirkali taluk, irregularity in transaction of jewels given for gold bond on behalf of .. .. .. .. 147–148

Thirugnanasambandam, Thiru P.—

Question re—

Jain mutts having pre-historical paintings, at Thirumalai village Sivagangai taluk, Ramanathapuram district .. .. .. .. 200–202

Strike by administrative staff of Government Hospital, Madurai, on 2nd December 1972 ... 1.

Vellapandian, Thiru S.—

Question re—

Farm Research Centres at Krishnagiri, opening of .. .. .. .. 204

Groundnut oil, quantity manufactured in the State, sent to foreign countries and North India during 1971 and 1972 .. .. .. .. 71–76

Quinine Salt, export of .. .. .. 19

Rice bags, seizure by Food Cell (C.I.D.) at Coimbatore–Kerala border about 9th January 1973 .. .. .. .. 257

Questions (unstarred) 8 to 10, answers to—laid on the table ... ... ... ... ... 61

QUININE SALT—

Question re export of .. .. .. 19

R

PAGES.


RAJA SERFOJI COLLEGE, THANJAVUR—
See Colleges

RAJAGOPAL, THIRU C. V.—
Budget for 1974-75, general discussion on .. 25, 47, 99–107, 217, 233, 269, 296, 305

RAJAMANNAR COMMITTEE—
See Committees

RAJARAM, THE HON. THIRU K.—
Budget for 1974-75, general discussion on .. 243

RAJARAM, THIRU K.—
Bill—Appropriation (Vote on Account) Bill, 1974 .. 369–372, 376
Budget for 1974-75, general discussion on .. 98, 160–161, 186, 187, 193, 279, 290, 292, 297–313, 325–326, 328, 331, 334
Statement under rule 82 re talks on River Water Dispute between Kerala and Tamil Nadu, clarification .. .. .. .. .. 23

RAMAN, THE HON. THIRU O. P.—
Statement under rule 82 re talks on River Water Dispute between Kerala and Tamil Nadu ... 20–23

RIVER WATER DISPUTE—
Statement under rule 82 re talks on—between Kerala and Tamil Nadu .. .. .. .. 20–23


S


SADIQ PASHA, THE HON. THIRU S. J.—
Budget for 1974-75, general discussion on .. 230, 233, 304

SAKTHI MOHAN, THIRU R.—
Budget for 1974–75, general discussion on .. 267–276




S—cont.

PAGES.


SCHOOLS—
Question re—
Engineering Course in Government (Board) Secondary School, strength of students in X and XI Standards .. .. .. 266–267
Girl Students, non-admission in Boys' High Schools in Ram Nagar, Coimbatore .. .. .. 262–263
Model School for Girls in Madras, opening of a .. 19
Secondary Grade Assistants with B.T. qualifications for promotion as Headmasters, refusal of managements of aided and middle schools in Tiruchirappalli district to comply with Education Department's Order .. .. .. 202–203
Non-teaching Staff Association of Aided High Schools, Resolutions at Third State Conference of .. .. .. .. .. 265–266

SECRETARIAL ASSISTANTS—
See Teachers

SENGOTTU VELAPPA GOUNDER, THIRU S. C.—
Budget for 1974-75, general discussion on .. 222–230

SEPARATE TAMIL NADU DEMAND—
See State Autonomy

SHANMUGAM, THE HON. THIRU P. U.—
Bill—Appropriation (Vote on Account) Bill, 1974 .. 359, 369
Budget for 1974-75, general discussion on .. 82, 86, 88, 89, 90, 91, 96, 97, 98, 159–160, 239, 246–247

SIVAGNANAM, THIRU M. P.—
Budget for 1974-75, general discussion on .. 239, 240

STATE AUTONOMY—
Question re—
'Separate Tamil Nadu' Demand, action taken against political party propagating .. 348–350
Separate Tamil Nadu, demand for .. .. 347

*S*—cont.

PAGES.

STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *re*—

Talks on River Water Dispute between Kerala and Tamil Nadu .. .. .. .. 20-23

STATUE(S)—

Question *re*—

Erection of—of King Bhaskara Sethupathi in Vivekananda Rock, Kanyakumari .. .. 133-134

Re-installation of—of G. U. Pope and Caldwell on Beach Road .. .. .. 134-136

STRIKE—

Question *re* staging of—by administrative staff of Government Hospital, Madurai, on 2nd December 1972 .. .. .. .. .. 14

SUNDARESA THEVAR, THIRU N.—

Budget for 1974-75, general discussion on .. 148-167

T

TAMIL NADU WAREHOUSING CORPORATION, MADRAS—

Balance sheet and Profit and Loss Account of—, laid on the table .. .. .. .. 131

TANKS—

Question *re* overhead tanks in Panchayat Unions of North Arcot district, construction of .. 205-206

TEACHERS—

Question *re*—

B.T. teachers in various Schools, basis for award of Selection grade to .. .. .. 64-65

B.T. teachers with 11 years' service promoted to Selection Grade on 1st January 1971, freezing of pay of .. .. .. .. 67-68

Complaint *re* non-disbursement of salaries to—of Padmanabha Elementary School, Tenkasi Circle, Tirunelveli District .. .. .. 3-4

Drawing Masters with secondary grade qualifications, fixation of scale of pay on a par with Physical Education Teachers with secondary grade qualifications .. .. .. .. 199



PAGES.

*T*—cont.

TEACHERS—*cont.*

Question *re*—*cont.*

Expensive locality allowance to—of Panchayat Union and Government High Schools in Rameswaram Island, disparity in rate of ... 139-141

Graduate Secondary Grade—, grant of B.T. scale of pay to .. .. .. .. .. 138-139

Higher grade—working in Secondary Grade posts, absorption of .. .. .. .. .. 202

Hindi Pandits, absorption of unqualified—ousted due to implementation of Two Language Formula. ... ... ... ... ... 258-259

Number of Selection Grade posts sanctioned and cost incurred .. .. .. .. 65-66

Secondary Grade—completing 10 years of service, grant of Selection Grade to .. .. .. 66-67

Physical Education Teachers, Grade I, sanction of Selection Grade scale of pay to ... ... 259-260

Procedure for choice of—for Selection Grade, representation *re* ... ... ... ... 256

Secondary Grade Assistants with B.T. qualifications for promotion as Headmasters, refusal of managements of aided and middle schools in Tiruchirappalli district to comply with Education Department's Order .. .. .. .. .. 202-203

Secretarial Assistants and Commercial Instructors in High Schools, sanction of Selection Grade posts to .. .. .. .. .. 200

TEACHERS' TRAINING COLLEGES—

*See* Colleges

TEMPLE(S)—

Question *re*—

Arulmigu Tiruporoor Murugan Temple in Chingleput district, apprehension by Police of trustee .. .. .. .. .. 17

Bringing out books about—in various districts by Hindu Religious and Charitable Endowments (Administration) Department .. .. 147

PAGES.

T—cont.

TEMPLES (S)—*cont.*

Question *re*—*cont.*

Hindu Temple Protection Conference at Pattukottai in June 1973, resolution *re* appointment of Trustees and exemption of temple and mutt land from Cultivating Tenants (Right to purchase Landowners Rights) Act, 1973 .. .. 17-18

Printing of Calendars by .. .. .. 207

Thirunagari temple, Sirkali taluk, irregularity in transaction of jewels given for gold bond on behalf of .. .. .. .. .. 147-148

THANJAVUR DISTRICT CHEMISTS AND DRUGGISTS ASSOCIATION—

Question *re*—

Representation regarding inability to open establishments on all week days ... ... ... 142-143

TOURISM—

Question *re*—

Cholamandal near Thiruvanmiyur, promotion as a Tourist Centre ... ... ... ... 13-14

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Declaration of Arni as Local Planning Area under—, notification laid on the table .. .. .. 378-379

Declaration of Courtallam as Local Planning Area under—notification laid on the table ... ... 61

Declaration of Gudiyatham as Local Planning Area under—notification laid on the table ... ... 60

Declaration of Kotagiri as Local Planning Area under—, notification laid on the table .. .. 379

Declaration of Manaparai as Local Planning Area under—, notification laid on the table .. .. 378

Declaration of Ootacamund as Local Planning Area under—, notification laid on the table .. .. 378



PAGES.

T—*cont.*

Declaration of Padmanabhapuram as Local Planning Area under—, notification laid on the table .. 379

Declaration of Puliangudi as Local Planning Area under—, notification laid on the table .. .. 379

I—cont.

TRADE UNION(S)—

Question *re*—

Payment of wages to representatives of—for days on which they attend conciliation proceedings ... 15-16

Single—for one Industry and Leadership from among labourers, implementation of proposal .. 143-146

*U*

UNIVERSITIES—

Question *re*—

Senate of Madras University, contesting of election to—by Government employees during 1973 .. .. .. .. 261

*V*

VASANTHA PAI, THIRU G.—

Bill—Appropriation (Vote on Account) Bill, 1974. 357-360

Statement under rule 82 *re* talks on River Water Dispute between Kerala and Tamil Nadu, clarification .. .. .. .. .. .. 23

VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.—

Bill—Appropriation (Vote on Account) Bill, 1974. 365-36[illegible]

Budget for 1974-75, general discussion on .. .. 45, 82-98, 101, 104, 277, 325

VETERINARY HOSPITAL—

*See* Hospitals and Dispensaries

VICE-CHAIRMAN (Thiru K. S. Ganapathi)—

Budget for 1974-75, general discussion on .. 102

VIVEKANANDA ROCK, KANYAKUMARI—

Question *re*—

Erection of State of King Bhaskara Sethupathi in ... ... ... ... ... ... 133-134

PAGES

W

WATER-SUPPLY SCHEME, THEROOR, KANYAKUMARI DISTRICT—

Question *re*—

Implementation of protected ... ... ... 69-70

WEIGHTS AND MEASURES (ENFORCEMENT) RULES, 1967.

Amendment to—, notification laid on the table .. 378

VR11.32 N74

N74.11752

63120

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

---

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

## IN MUFASSAL OF TAMIL NADU

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 19, Thana Muna Buildings Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL